Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தமிழ்ச் சிறுகதைகளில் காந்தியத் தாக்கம்



ந. சாந்தா ஆப்தே

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Samaj Foundation Chenn

தமிழ்ச் சிறுகதைகளில் காந்தியத் தாக்கம் - டாக்டர் ம. சாந்தா ஆப்தே

omain. Gurukul Kangri C

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

गुरुकुल कांगड़ी विश्वविद्यालय, हरिद्वार
कृपया पुस्तक के ऊपर कोई निशान आदि
न लगायें ।

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri D6849

पुस्तकालय

गुरुकुल काँगड़ी विश्वविद्यालय, हरिद्वार

वर्ग संख्या......—.....—...आगत संख्या...............

पुस्तक-वितरण की तिथि नीचे अंकित है। इस तिथि सहित २० वें दिन तक यह पुस्तक पुस्तकालय में वापिस आ जानी चाहिए। अन्यथा १० पैसे के हिसाब से विलम्ब-दण्ड लगेगा।

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தமிழ்ச் சிறுகதைகளில் காந்தியத் தாக்கம்

6849

Forwarded Free of cost, and
with the compliments of the
Department of Education,
Government of India, New Delhi.

DONATION

पुस्तकालय
गुरुकुल कांगड़ी विश्वविद्यालय

டாக்டர் ரு. சாந்தா ஆப்தே

சேந்தில் முருகன் வெளியீடு
மதுரை
1988

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தமிழ்ச் சிறுகதைகளில் காந்தியத்தாக்கம் (திறனாய்வு)
© டாக்டர் ந. சாந்தா ஆப்தே M.A.,B.T., Ph.D., Dip. in G.T., Cert. in Ling.

முதற் பதிப்பு	:	டிசம்பர் 1988
உரிமை	:	ஆசிரியர்க்கு
அட்டை அமைப்பு	:	பா. செந்தில் முருகன் பி.எஸ்சி., பி.டெக்.
அச்சாக்கம்	:	வைகை அச்சகம், மதுரை
வெளியீடு	:	செந்தில் முருகன் வெளியீடு 561, கே. கே. நகர், மதுரை-20
எண்ணிக்கை	:	1000
பக்கம்	:	24 + 360 = 384
அளவு	:	டெமி 1/8
பைண்டிங்	:	மென்தகடு பொருத்தப்பட்ட அட்டை
விலை	:	ரூ. 40-00

Tamil Siru Kathaigalil Gandhiya Thakkam (Thesis)
© Dr. N. Shantha Apte M.A.,B.T., Ph.D., Dip. in G.T., Cert. in Ling.

First Edition	:	December, 1988
Cover Design	:	P. Senthil Murugan B.Sc., B Tech.
Printer	:	Vaigai Achagam, Madurai
Publisher	:	Senthil Murugan Veliyeedu 561. K.K. Nagar, Madurai - 20
Copies	:	1000
Pages	:	XXIV+360 = 384
Size	:	Demy 1/8
Binding	:	Card Board with Lamination
Price	:	Rs. 40-00

Thesis submitted to Madurai Kamaraj University. The author was declared qualified for the award of Ph D. Degree in April 1986 Published with the Permission of the Madurai Kamaraj University.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பொருளடக்கம்

வாழ்த்துரை — டாக்டர் K. சுவாமிநாதன் 5

ஆசிரியர் உரை 7

முன்னுரை 9—23

1. 1. காந்தியம் 1

2. காந்திவழிக் கதைகளில் காந்தியடிகளின் அடிப்படைக் கொள்கைகள்
   1. காந்திவழிக் கதைகளில் சத்தியம் 18
   2. காந்திவழிக் கதைகளில் அகிம்சை 59

3. காந்திவழிக் கதைகளில் காந்தியடிகள் சுட்டும் தனிமனித ஒழுக்க நெறிகள்
   1. காந்திவழிக் கதைகளில் மதுவிலக்கு 93
   2. காந்திவழிக் கதைகளில் புலனடக்கம் 120
   3. காந்திவழிக் கதைகளில் வழிபாடு 135

4. காந்திவழிக் கதைகளில் காந்தியச் சமுதாய நெறிகள்
   1. காந்திவழிக் கதைகளில் தீண்டாமை விலக்கு 149
   2. காந்திவழிக் கதைகளில் பெண்டிர் நலன் 181
   3. காந்திவழிக் கதைகளில் ஒற்றுமை 200

5. காந்திவழிக் கதைகளில் காந்தியப் பொருளாதாரக் கோட்பாடுகள்
   1. காந்திவழிக் கதைகளில் கிராம முன்னேற்றம் 222
   2. காந்திவழிக் கதைகளில் கதர், சுதேசியம், உடலுழைப்பு 247

6. 1. காந்திவழிக் கதைகளில் அரசியல் போராட்டங்கள் 268

7. 1. காந்தியம் — உண்மையும் போலியும் 284

8. 1. காந்திவழிக் கதைகளில் காந்தியத் தாக்கம் — ஒரு கணிப்பு 301

பின்னிணைப்புகள்

   1. ஆய்வு மேற்கொள்ளக் கிடைக்கப்பெற்ற பிற கதைகளின் பட்டியல் 338
   2. துணைநூற்பட்டியல் 348

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சுருக்க விளக்கம்

தொ. ஆ.	—	தொகுப்பாசிரியர்
ப. ஆ.	—	பதிப்பாசிரியர்
பொ. ப. ஆ.	—	பொது பதிப்பாசிரியர்
மொ. பெ. ஆ.	—	மொழி பெயர்ப்பாசிரியர்
மு. கு.	—	முற்கூறிய குறிப்பு
மு. நூ.	—	முற்கூறிய நூல்
வி. உ.	—	விற்பனை உரிமையாளர்
dt.	—	Dated
ed.	—	Editor
Tra.	—	Translator

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

K. SWAMINATHAN
CHIEF EDITOR
The Collected Works of Mahatma Gandhi

Dharmalayam
246, T.T.K. Road
Teynampet
MADRAS-600018

Dear Dr. Shanta,

It was a rare pleasure and privilege for me to go through your admirable and readable research thesis on the influence of Gandhiji on the Tamil people as reflected in numerous short stories. Your thorough analysis and balanced views serve to confirm and clarify the impression I have formed from the documents in **The Collected Works** and from the facts narrated in A. Ramaswami's book, **Tamil-nattil Gandhi**. Your thesis proves that we Tamils have the gift of transforming history and mythology alike, by allowing in our daily conversation a free interplay of fact and fiction. In other words, Gandhi's Life, which was a poem composed of deeds not words, has begun to permeate our culture, as the old poems have been doing down the centuries.

You have drawn clearly the line between the immense good done by genuine Gandhism and occasional harm (of hypocrisy and arrogance) caused by pseudo-Gandhism.

Your brief but adequate summaries of the stories succeed in making the thesis self-explanatory and self-sustaining without much reliance on a jungle of footnotes.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

You have shown how life lived and books read can "feed" each other and should be allowed thus to enrich our actual being and becoming by accepting the world perceived and the worlds conceived as our own to sport in and learn from.

You and I would like to fancy that "re-birth" is a useful fiction, for it permits us to believe for the moment that Gandhi was a Tamil in a former Janma and we shall all be Gandhis in our own good time.

Congratulations and best wishes.

Yours sincerely

K. Swaminathan

(K. SWAMINATHAN)

Dr. Shanta Apte,
Madurai Kamaraj University,
MADURAI - 625 021.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஆசிரியர் உரை

என் சிறு வயதில் தமிழ் நாட்டிற்கு வருகை தந்த இந்தியத் தந்தை காந்தியடிகளை மதுரையில் காணும் பேறு எனக்குக் கிட்டியது. மேலாடை தவிர்த்த மெல்லிய உருவம். கண்களில் கவர்ச்சிகரமான ஒளிச் சிதறல். அவரைக் காணவந்த மக்கள் இருகரம் குவித்து வரவேற்க, இதழ்களில் தவழும் புன்னகை ஒன்றால் எல்லோரையும் கவர்ந்த பாங்கு என்னிடத்தில் ஓர் ஈடுபாட்டைத் தோற்றுவித்தது. 1948-இல் அடிகள் சுடப்பட்டார் என வானொலிச் செய்தி வெளியானபோது அச்செய்தி பொய்யாகிடவேண்டும் என்று வேண்டியவர்களுள் நானும் ஒருத்தி. பிறகு காந்தியடிகளின் வாழ்க்கை வரலாற்று நூல் அவரை மாந்தருள் ஒரு தெய்வமாக ஏற்க என்னைத் தூண்டியது.

காந்தியத்தில் முழு நம்பிக்கை கொண்ட பல காந்தியத் தொண்டர்களின் காந்திய விளக்கங்களில் சங்கமம் ஆனமை, காந்தியம் மனிதனை மனிதனாக வாழச் செய்ய உதவும் என்ற எண்ணத்தை வேரூன்றச் செய்தது. காந்தியடிகளின் இலக்கியக் கண்ணோட்டம்பற்றிக் குறிப்பிடும் டாக்டர் மா.பா. குருசாமி, ''இலக்கியம்பற்றியும் காந்தியம் தெளிவான கண்ணோட்டம் கொண்டிருக்கின்றது. எளிய நடையில் சாதாரண மக்களும் புரிந்துகொள்ளும் வகையில் பயனுள்ள கருத்துகளைக் கலையழகோடு தருவதுதான் நல்ல இலக்கியமாகும்'' என்கிறார். அவ்வகையில் இந்த நூற்றாண்டில் அமையும் இலக்கிய வகைகளுள் ஒன்றான சிறுகதை இலக்கியத்தின்வழிக் காந்தியடிகளின் கோட்பாடுகளைத் தெளிவுறுத்த இயலும் என்ற நம்பிக்கையே இந்த ஆய்வை மேற்கொள்ளவும், இந்நூலை உருவாக்கவும் வழிவகுத்தது.

தமிழுக்குத் தம் வாழ்வு என்ற சிந்தனையில், தமிழ் ஆய்வாளர்க்குப் பல்வேறு நிலைகளில் வழிகாட்டியாக அமைபவர் மதுரை காமராசர் பல்கலைக் கழகத் தமிழியல் துறைத் தலைவர் டாக்டர் இராம. பெரியகருப்பன் அவர்கள். 'அசைவிலா ஊக்கம் உடைய' அவர், என் ஆய்வு மேற்பார்வையாளராக இருந்து உதவியமைக்கு என் இதயம் கனிந்த நன்றி என்றும் உரித்தாகுக.

ஆய்வுக்கு உதவுமாறு கருத்து விளக்கங்கள் வழங்கிய காந்தியப் பணியாளர்களான திருவாளர்கள் ஆர்.ஆர். திவாகர்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

க.ரா. கந்தசாமி, எஸ். ஆர். சுப்பிரமணியம், ஏ. என். இராசன், டி. டி. திருமலை ஆகியோர்க்கு மனமார்ந்த என் நன்றி.

கிடைத்தற்கரிய நூல்களைத் தந்துதவிய சென்னை ஈசுவரி நூலக உரிமையாளர் திரு. பழனி அவர்கள் என்றும் நினைவு கூரத்தக்கவர்.

தமிழ் வளர்ச்சிக்கான சிறந்த நூல்களை வெளியிட நிதியுதவி வழங்கும் தமிழ்நாடு அரசின் திட்டத்தின் கீழ் இந்நூல் நிதியுதவி பெற்றுள்ளது. அவ்வகையில் தமிழ் வளர்ச்சி இயக்ககத் திற்கு நன்றியுடையேன்.

வாழ்த்துமடல் வழங்கியருளிய பெரும் பேராசிரியரும் மகாத்மா காந்தியடிகளின் படைப்புத் தொகுப்பு நூல்களின் தலைமைப் பதிப்பாசிரியருமான டாக்டர் K. சுவாமிநாதன் அவர்களுக்கு என் உளமார்ந்த நன்றி.

இந்நூல் அச்சேறுவதற்குப் பல வழிகளிலும் உறுதுணை யாக இருந்த திரு. க.ரா. கந்தசாமி, திரு. இரா. சீனிவாசன் ஆகியோர்க்கும் நூலை அழகிய முறையில் அச்சிட்டுத் தந்த வைகை அச்சகத்தினர்க்கும் என் அன்பு கலந்த நன்றி உரியதாகுக.

இவ்வாய்வை நூலாக வெளியிட அனுமதியளித்த மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தினர்க்கு என்றும் என் நன்றி.

ஆய்வின் போது அல்லும் பகலும் எனக்காக உழைத்து, நான் முன்னேற்றம் அடையப் பாடுபட்ட என் ஆருயிர்ப் பெற்றோர்க்கு, என் சிறு அன்புப் படையல் இந்நூல்.

ந. சாந்தா ஆப்தே

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

முன்னுரை

காந்தியடிகள் கி.பி. 1915-இல் தென்னாப்பிரிக்காவிலிருந்து இந்தியாவிற்குத் திரும்பியபோது இந்தியாவில் மாபெரும் தலைவர்கள் அந்நிய ஆட்சியை எதிர்த்துப் போர்க்கொடியை உயர்த்திக் கொண்டிருந்தார்கள். மேல் தட்டில் நின்றவர்களுக்கு உரியதாக விளங்கிய அந்த இயக்கத்திற்குத் தலைமைப் பொறுப்பேற்ற காந்தியடிகள், அதனை மக்கள் இயக்கமாக மாற்றினார். சத்தியத்தையும் அகிம்சையையும் அடிப்படையாகக் கொண்டு அந்த இயக்கத்தின்வழி அந்நிய ஆட்சியை எதிர்த்து விடுதலையைப் பெறவும், நிருமாணப் பணித் திட்டங்களின்வழி மக்கள் வாழ் வாங்கு வாழ்வதற்கேற்ற சமுதாயத்தைப் படைக்கவும் அவர் முற்பட்டார்.

காந்தியடிகளின் வாழ்வும் செய்தியும் சமுதாயத்தில் ஆண்-பெண், முதியோர்-இளைஞர், கற்றோர்-மற்றோர், செல்வர்-வறியர் அனைவரின் வாழ்விலும் தாக்கத்தை ஏற்படுத்தின. அத்தாக்கம், இந்திய மண்ணில் எல்லாத் துறையினரையும் தூண்டியதைப்போல் பல்வேறுமொழிகளைச் சார்ந்த இலக்கியப் படைப்பாளர்களையும் தூண்டியது. காந்தியடிகளின் காலத்திலும் அவர் காலத்திற்குப் பின்னும் கவிதை, கட்டுரை, நாடகம், நாவல், சிறுகதை ஆகிய இலக்கிய வகைகளுள் சில இலக்கியங்கள் காந்தியத் தாக்கத்திற்கு ஆட்பட்டன. அவைகளுள், தமிழ்ச் சிறுகதை இலக்கியத்தில் ஏற்பட்ட காந்தியத் தாக்கம் இவண் ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

ஆய்வின் நோக்கம்

இந்திய விடுதலை வேள்வியில் காந்தியடிகள் தம்மைப் புடமிட்டுக் கொண்டவர் என்பது மட்டுமன்றிக் கொள்கைப் பிடிப்பாலும், ஆன்ம பலத்தாலும், ஆற்றல் வளத்தாலும், தூய சிந்தனையாலும், தொண்டு உள்ளத்தாலும் ஓர் உயரிய இடத்தை வகித்தவர். அவர்தம் ஆளுமைச் சக்தியினின்றும் உருவான காந்தியம் இன்றும் சமுதாய வாழ்க்கை நெறியாக இருப்பது கண்கூடு. இருபதாம் நூற்றாண்டில் உருவாகிப் பல்லோரையும் ஈர்த்த காந்தியத்தில் கொண்ட ஈடுபாடு இவ்வாய்வை எடுத்தமைக்குக் காரணமாகிறது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பிறமொழி இலக்கியங்களில் காந்தியடிகளின் பல்வேறு கோட்பாட்டுத் தூண்டல்களைக் குறித்து எழுதப் பெற்ற ஆய்வுகள் வெளிவந்துள்ளன.[1] தமிழ் இலக்கியத்தில் நாவல் வகையைத் தவிர எந்தவொரு இலக்கிய வகையிலும் பிஎச்.டி. பட்டத்திற்குக் காந்தியத் தாக்கம்பற்றி முழுமையாக ஆய்வு மேற்கொள்ளப் பெறவில்லை.[2]

தமிழ்ச் சிறுகதைகளில் குறிப்பிட்ட ஆசிரியர்தம் படைப்பு களில் திறனாய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. எம். ஃபில் பட்டத்திற்கு மேற்கொள்ளப்பட்ட, 'சி.சு. செல்லப்பாவின் சிறு கதைகளில் கிராமப்புற வாழ்க்கைச் சித்திரிப்பு'[3] என்ற தலைப் பினையுடைய ஆய்வில் காந்தியத் தாக்கம்பற்றி ஒரு பகுதி அமைந்துள்ளது. 'விடுதலைக்கு முன் புதிய தமிழ்ச் சிறுகதைகள் ஓர் ஆராய்ச்சி'[4] என்ற தலைப்பில் பிஎச்.டி. பட்டத்திற்கு அளிக்கப்பட்ட ஆய்வேட்டில் காந்தியச் சிந்தனைகள் என்ற பகுதியில் சிறுகதைகளில் காந்தியத் தாக்கம் அமைந்தமை சுட்டப்பட்டுள்ளது.

இவை தவிரச் சிறுகதைகளில் காந்தியத் தாக்கம்பற்றிய ''காந்திவழிக் கதைகளில் சத்தியம்''[5] என்ற கட்டுரையானது காந்தியடிகளின் சத்தியக் கொள்கையை மட்டும் ஆய்வதாக உள்ளது. தமிழ்ச் சிறுகதைகளில் காந்தியத் தாக்கம் எவ்வாறு அமைந்துள்ளது என்பதுபற்றி அறியக் காந்திவழிக் கதைகளைப் பகுத்து நோக்கிக் காந்தியக் கொள்கைகளில் பெரும்பாலான வற்றின் செல்வாக்கை முழுமையாக ஆராய்வது இவ்வாய்வின் அடிப்படை நோக்கமாகும்.

1. தமிழ்ச் சிறுகதைகளில் காந்தியக் கொள்கைகளின் செல்வாக் கை எவ்வெவ்வாறு ஆசிரியர்கள் உணர்த்துகிறார்கள் எனப்பகுத்து ஆய்வதும்,

2. குறிப்பிட்ட காந்தியக் கொள்கையை விளக்கமுறச் செய்யும் கதைகளினால் அறியப்படுவன யாவை என உணர்த்துவதும்,

3. காந்தியத் தாக்கமுள்ள சிறுகதைகளில் அந்தந்த ஆசிரியர்கள் எந்த நோக்கத்திற்காகக் காந்தியக் கருத்துகளைப் பயன்படுத்தி யுள்ளனர் என்பதை அறிவதும்,

4. கதைகளில் குறிப்பிடப்படும் கொள்கைகளைத் தவிரக் காந்தியக் கோட்பாடுகளுள் சிறப்பானவை எவை விடுபட்டன என ஆய்வதும்,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

5. காந்தியத் தாக்கம் சில மாந்தரிடம் தன் செல்வாக்கை எந்த அளவிற்கு நிறுவுகிறது என நோக்குவதும் இவை போன்ற பிறவற்றை ஆராய்ந்து மதிப்பீடு செய்வதும் இவ்வாய்வின் நோக்கங்களாக உள்ளன.

ஆய்வுப் பொருள்

காந்தியக் கொள்கைகளின் செல்வாக்கால் விளைந்த தமிழ்ச் சிறுகதைகளில் ஐம்பது சிறுகதைகளைத் தேர்ந்தெடுத்து, ஒரு தொகுப்பு நூலாகத் தமிழ் நாடு காந்தி நினைவு நிதியினர் 'காந்திவழிக் கதைகள்' என்ற தலைப்பில் 1969-இல் வெளியிட்டுள்ளார்கள். காந்தியடிகள் வாழ்ந்த காலத்தும், அதற்குப் பின்பும் அவர்தம் கொள்கைகளை அடிப்படையாக வைத்து எழுந்தவை அக்கதைகள். ஐம்பது எழுத்தாளர்களின் அவ்வைம்பது சிறுகதைகளும் இங்கு ஆய்வுக்கு முதன்மையாக எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

இவை தவிர, இத்தொகுப்பு நூலில் இடம்பெறும் கதைகளைப் படைத்துள்ள எழுத்தாளர்களின் பிற சிறுகதைப் படைப்புகளில், காந்தியத்தாக்கம் எவ்வாறு அமைந்துள்ளது என்பதை அறிய மேற்கொண்ட முயற்சியில், முப்பது எழுத்தாளர்கள் படைத்த ஆயிரத்து ஐநூற்று ஐம்பத்தெட்டுக் (1558) கதைகள் சேகரிக்கப்பட்டுள்ளன.[6] அவற்றுள் இருபது எழுத்தாளர்களின், காந்தியச் செல்வாக்கைப் பெற்றுள்ள எழுபத்தேழு (77) சிறுகதைகளும் இங்கு ஆய்வுக்குச் சேர்க்கப்பட்டுள்ளன. அவையாவன :

ஆசிரியர்களும் கதைகளும்	நூல்கள்
ராஜாஜி	
'ஜகதீச சாஸ்திரிகள் கனவு'	ராஜாஜி கதைகள்
'அறியாக் குழந்தை'	,,
'நடேசய்யரின் குற்றம்'	பாற்கடல்
'தேவ தரிசனம்'	ராஜாஜி கதைகள்
'மந்திரி சீதாராமய்யர்'	பாற்கடல்
கல்கி	
'எஜமான விசுவாசம்'	வீணை பவானி
'பொங்குமாங்கடல்'	அமர வாழ்வு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஆசிரியர்களும் கதைகளும்	நூல்கள்
கல்கி	
'சின்னத்தம்பியும் திருடர்களும்'	பாங்கர் விநாயகராவ்
'விதூஷகன் சின்னு முதலி'	,,
'கவர்னர் வண்டி'	,,
'விஷமந்திரம்'	சாரதையின் தந்திரம்
'சுபத்திரையின் சகோதரன்'	,,
'கமலாவின் கல்யாணம்'	,,
'ஸ்ரீகாந்தன் புனர்ஜன்மம்'	கணையாழியின் கனவு
'ஒன்பது குழி நிலம்'	சாரதையின் தந்திரம்
'பவானி, பி.ஏ.,பி.எல்.'	கணையாழியின் கனவு
'சிரஞ்சீவிக் கதை'	,,
'கணையாழியின் கனவு'	,,
சி. சு. செல்லப்பா	
'மூன்றாம் முனை'	செல்லப்பா சிறுகதைகள் தொகுதி 7
'மருதநாயகம்'	செல்லப்பா சிறுகதைகள் தொகுதி 4
'கேள்விக்கு பதில்'	சத்யாக்ரகி
'சரித்திர தினம்'	,,
'அவள் மேல் ஜாதியாம்'	நீர்க்குமிழி
'அப்பாவின் ராட்டை'	செல்லப்பா சிறுகதைகள் தொகுதி 6
'வந்தே மாதரம்'	சத்யாக்ரகி
'சட்டத்துக்கு மிஞ்சி'	,,
'கனவு'	,,
'அன்றைய பொங்கல்'	,,
'கந்தசாமி'	,,
'சத்யாக்ரகி'	,,
'சிப்பாய் இதயம்'	,,
'முத்துவின் கோயில்'	செல்லப்பா சிறுகதைகள் தொகுதி 7

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஆசிரியர்களும் கதைகளும்	நூல்கள்
பி. எஸ். ராமையா	
'நக்ஷத்திரக் குழந்தைகள்'	புதுமைக் கோயில்
'தரிசனம்'	ஞானோதயம்
'புதுமைக் கோயில்'	புதுமைக் கோயில்
'அமிஞ்சிக்கரை சோமு'	பாக்கியத்தின் பாக்யம்
அகிலன்	
'நெல்லூர் அரிசி'	நெல்லூர் அரிசி
'மந்தையில் ஒரு மனிதன்'	எரிமலை
'சிசுவின் குரல்'	சக்திவேல்
'ஏழைப் பங்காளர்'	சத்திய ஆவேசம்
'சாதி'	பசியும் ருசியும்
'யார் தியாகி?'	சகோதரர் அன்றோ?
'கூட்டுக் குடும்பம்'	சத்திய ஆவேசம்
'இன்பத் தீ'	ஆண்-பெண்
'காந்தி வந்தார்'	எரிமலை
பெ. தூரன்	
'இரவு ஒரு மணி'	மாவிளக்கு
'மதி மது மயக்கம்'	தங்கச் சங்கிலி
'குப்பன்'	,,
'பால் பொங்கிற்றா?'	காளிங்கராயன்கொடை
'கடையின் கவர்ச்சி'	பிள்ளைவரம்
'கூலிக்கார வீரப்பன்'	,,
நா. பார்த்தசாரதி	
'ஊற்றுக்கண்'	கங்கை இன்னும் வற்றிவிடவில்லை
'புதிய பாலம்'	புதிய பாலம்
'ஒரு கிராமவாசி சுதந்தர தினத்தன்று சிறைப்படுகிறான்'	பிரதிபிம்பம்
'அநுதாபக் கூட்டம்'	,,
'காந்தி நூற்றாண்டுவிழா'	,,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஆசிரியர்களும் கதைகளும்	நூல்கள்
மாயாவி	
'இந்தச் சமூகம்'	அகதி
கோவி. மணிசேகரன்	
'தாயும் சேயும்'	தாயும் சேயும்
'மக்களுக்கு உணர்ச்சி தேவை'	கோவியின் கதைகள்
'அன்னையின் குரல்'	,,
கே. ஜயலக்ஷ்மி	
'அவனா இவன்?'	பாதம் கொப்புளித்தது
'அன்பை அலட்சியப்படுத்தக் கூடாது'	சான்றோர் சென்றவழி
'வாழ்க்கை ஒரு வானவில்'	அருள்
'கற்றுக்கொள் கவிக்குயிலிடம்'	சான்றோர் சென்றவழி
பூவை. எஸ். ஆறுமுகம்	
'திருமதி சிற்றம்பலம்'	திருமதி சிற்றம்பலம்
'தீபாவளிக் கடவுள்'	பூவையின் கதைகள்
எல்லார்வி	
'அன்பின் எல்லை'	காஞ்சனையின்கண்கள்
'ஆதரவு'	மணி ஓசை
ஆர். சூடாமணி	
'தாயகம்-தாரகம்'	அந்த நேரம்
'ஓர் இந்தியன் இறக்கிறான்'	ஓர் இந்தியன் இறக்கிறான்
ஸரோஜா ராமமூர்த்தி	
'நினைவிலே நடந்து...'	நினைவிலே நடந்து...
எஸ். ரங்கநாயகி	
'இதய கீதம்'	இதயகீதம்
து. ராமமூர்த்தி	
'துர்க்கையின் சாபம்'	கதைக்கோவை II

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஆசிரியர்களும் கதைகளும்	நூல்கள்
விந்தன்	
'ஒரே உரிமை'	விந்தன் சிறுகதைகள்
மஹரி	
'சமானன்'	ஜாலக்கடல்
சிதம்பர ரகுநாதன்	
'புத்துயிர்'	கதைக்கோவை IV
வி. எஸ். சுப்பையா	
'சரளாவின் கலியாணம்'	பேரும் புகழும்

ஆய்வுக்குரிய 'காந்திவழிக் கதைகள்' என்ற தொகுப்பு நூலில் உள்ள கதைகளைப் படைத்துள்ள ஆசிரியருள் மேற்குறிப்பிட்ட இருபது ஆசிரியர்களின் இப்பிற கதைகளைத் தவிர, இந்நூலில் இடம்பெறாத தமிழ்ச் சிறுகதை ஆசிரியர்தம் சிறுகதைகள் இவ்வாய்வில்எடுத்துக் கொள்ளப்படவில்லை.

பிற கதைகளின் தேர்வு

'காந்திவழிக் கதைகள்' என்ற தொகுப்பு நூலில் உள்ள கதைகளைத் தவிரச் சேகரிக்கப்பட்ட பிற சிறுகதைகள் (1558), கிடைத்தவரை தேர்ந்தெடுப்பு (Random Sampling) என்ற முறையில் சேகரிக்கப்பட்டுள்ளன.

அவ்வாறு சேகரித்தபிறகு அக்கதைகளில் காந்தியடிகளின் பெயர், படம், இயக்கம், காலப் பின்னணி, அவர்தம் செயல், அவர் அளித்த சிறப்பான விளக்கம், சிக்கல் தீர்வு, அகிம்சை வழிப் போராட்டச் செயல், அவர்தம் வாழ்க்கைச் சாயல் நிகழ்ச்சி, அவருடன் தொடர்புடைய சேவா கிராமம், கதர், சத்தியாக்கிரகம் போன்றவை இடம் பெறுகின்றனவா என நன்கு சிந்திக்கப் பட்டது. அவற்றுள் தெளிவாகக் காந்தியத் தாக்கம் அமைந்துள்ள எழுபத்தேழு கதைகள் இங்கே தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஆய்வு முயற்சி

ஆய்வுத் தொடர்பாக நூல்களைப் பயன்படுத்துவதற்குச் சென்று வந்த நூலகங்கள் பதினாறு ஆகும்.[7] காந்தியம்பற்றிய தெளிவு பெறுவதற்காகக் காந்தியடிகளுடன் நெருங்கிய தொடர்பு கொண்ட ஆர்.ஆர். திவாகர், ஆர்.கே. யார்டே போன்ற காந்தியத் தலைவர்கள் நேரில் பேட்டி காணப்பட்டனர்[8]. மேலும், காந்தியப் பணிபுரியும் பல்வேறு பெரியவர்களையும் அணுகி[9], அவர்கள்தம் விடுதலை இயக்க அனுபவம்பற்றி அறிந்து, காந்தியம்பற்றிய தெளிவு பெறப்பட்டது.

'காந்திவழிக் கதைகள்' என்ற தொகுப்பு நூலில் இடம் பெறும் ஆசிரியருள் பதினாறு பேர்களுடன் நேரிடைப் பேட்டி நடத்தப்பட்டது.[10] ஆசிரியர் பலருக்கு வினாப்பட்டி அனுப்பியதில் இருபத்திரண்டு ஆசிரியர்களிடமிருந்து விடைகள் பெறப்பட்டன.[11] ஆய்வுத் தொடர்பாக நூலகங்களில் பெற்ற பல்வேறு நூல்களைப் பயன்படுத்தியதுடன் கதைகளைப் படைத்துள்ள சில ஆசிரியரின் சிறுகதைகள் பற்றிய பொதுத் திறனாய்வுகளும் பயன்படுத்தப் பட்டன.[12]

காந்தியக் கொள்கைகளைப் பற்றிய விளக்கம் பெறும் முயற்சியில் ஆய்வாளர் மதுரை, காந்தி சிந்தனைக் கல்லூரியில் பயின்று காந்தியச் சிந்தனையில் உயர்சான்றிதழ் (Diploma) பெற்றுள்ளார்.

ஆய்வு முறை

காந்தியச் செல்வாக்கானது சிறுகதைகளில் எவ்வாறு இடம்பெறுள்ளது என்பதை ஆய்வு செய்யும் முறையில், காந்தியக் கொள்கைகளை விளக்கிக் காட்டுவதற்கான முயற்சியில், 'விளக்க முறை'யும், எந்தெந்தக் கதைகளில் என்னென்ன கொள்கைகள் எவ்வெவ்வாறு விளக்கமுறுகின்றன என்பதைக் காணும் பகுதியில், கதைகளின் உள்ளடக்கம் (Content), திறன் (Technique) இவற்றைப் பகுத்துப் பார்க்குமாறு பகுப்பாய்வு முறையும் மதிப்பீட்டு முறையும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 'காந்தியத் தாக்கம் பெற்ற கதைகளினால் அறியப்படுவன' என்ற பகுதியி லும், 'காந்தியத் தாக்கம்-ஒரு கணிப்பு என்ற இயலிலும் மதிப் பீட்டு முறையும், திறனாய்வு முறையும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'காந்திவழிக் கதைக'ளில் கதைமாந்தர்தம் பெயர்களும் சில சொல்லாட்சிகளும் எங்ஙனம் எடுத்தாளப்பெற்றுள்ளனவோ அங்ஙனமே பெரும்பகுதி அவை இவ்வாய்விலும் எடுத்தாளப் படுகின்றன.

சில இடங்களில் குறிப்பிட்ட சில செய்திகள் கருத்து விளக்கத்திற்காகத் தவிர்க்க முடியாத நிலையில் திரும்பவும் எடுத்தாளப்பெற்றுள்ளன.

ஆய்வுப் பாகுபாடு

'காந்தியம்' என்னும் முதல் இயலில் காந்தியம் பற்றிய விளக்கமும் காந்தியக் கொள்கைகள் எவை என்பன பற்றிய விளக்கங்களும் இடம் பெறுகின்றன.

'காந்திவழிக் கதைகளில் காந்தியடிகளின் அடிப்படைக் கொள்கைகள்' என்னும் இரண்டாம் இயலில் 'சத்தியம்', 'அகிம்சை' என்னும் இரு பகுதிகள் அமைந்துள்ளன. அப்பகுதி களில் அந்தந்தக் கொள்கை பற்றிய விளக்கங்களும் காந்திவழிக் கதைகளில் எவ்வாறு அவை அமைந்துள்ளன என்பனவும் ஆராயப்படுகின்றன.

'காந்திவழிக் கதைகளில் காந்தியடிகள் சுட்டும் தனிமனித ஒழுக்க நெறிகள்' என்னும் மூன்றாம் இயலில் 'மதுவிலக்கு', 'புலனடக்கம்', 'வழிபாடு' என்ற மூன்று பகுதிகள் உள. அக்கொள்கைகளின் விளக்கங்களுடன் அவை எவ்வாறு அக்கதை களில் தம் செல்வாக்கை நிறுவுகின்றன என்பதும் அவற்றிற்குரிய பகுதிகளில் விளக்கப்படுகின்றன.

'காந்திவழிக் கதைகளில் காந்தியச் சமுதாய நெறிகள்' என்னும் நான்காம் இயலில் 'தீண்டாமை விலக்கு', 'பெண்டிர் நலன்', 'ஒற்றுமை' என்ற மூன்று துறைகளில், அக்கொள்கைகள் பெற்றிருக்கும் இடம் மதிப்பிடப்படுகிறது.

'காந்திவழிக் கதைகளில் காந்தியப் பொருளாதாரக் கோட்பாடுகள்' என்னும் ஐந்தாம் இயலில் 'கிராம முன்னேற்றம்' என்ற முதல் பகுதியும் 'கதர், சுதேசியம், உடலுழைப்பு' என்ற இரண்டாம் பகுதியும் அமைந்துள்ளன. அக்கொள்கைகள் அக்கதைகளில் எவ்வாறு விளக்கமுறுகின்றன என்பதை அப்பகுதி கள் எடுத்துரைக்கின்றன.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'காந்திவழிக் கதைகளில் அரசியல் போராட்டங்கள்' என்னும் ஆறாம் இயல் காந்திவழிக் கதைகளில் உள்ள அரசியல் போராட்டம்பற்றிய ஒரு கதையை நீக்கிவிட்டு (காரணம் அப் பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ளது) ஆசிரியர்தம் பிற கதைகளில் காந்திய அரசியல் போராட்டம் பெறும் இடத்தைத் திறனாய்வு செய்கிறது.

'காந்தியம் — உண்மையும் போலியும்' என்னும் ஏழாம் இயல், கதைகளில் காந்தியம் என்ற பெயரில் பொய்ம்மை உழலுவதை ஆராய்கிறது.

'காந்திவழிக் கதைகளில் காந்தியத் தாக்கம்-ஒரு கணிப்பு' என்னும் எட்டாம் இயலில் கதைகளில் காந்தியத் தாக்கம்பற்றிய ஒரு மதிப்பீடு இடம்பெறுகிறது.

அடுத்துப் பின்னிணைப்புகள் உள்ளன. முதற்பின்னிணைப் பில், ஆய்வு மேற்கொள்ளக் கிடைத்த பிற கதை நூல்களின் பட்டியல் இடம்பெறுகிறது. பின்னிணைப்பு-2 இல் துணைநூற்பட்டியல் அமைகிறது.

இயலில் இடம்பெறும் பகுதிகளின் அமைப்பு

குறிப்பிட்ட காந்தியக் கொள்கையை ஆய்வு செய்யும் ஒவ் வொரு பகுதியிலும், முதற்கண் கொள்கை விளக்கம், அக்கொள் கைக்குக் காந்தியடிகள் அளிக்கும் சிறப்பு விளக்கம், அக்கொள்கை பற்றிய அவருடைய பிற கருத்து விளக்கங்கள், அவர்தம் வாழ்க்கையில் அக்கொள்கையை அவர் பின்பற்றிய தன்மை- இவை போல்வன இடம்பெற்றுள்ளன.

அடுத்துக் கொள்கையை விளக்க வந்த ஆசிரியர்தம் பெயர் களும், கதைகளின் பெயர்களும் சுட்டப்படுகின்றன. அவற்றிற்குப் பிறகு கதைச் சுருக்கம் இடம்பெறுவதுடன் கொள்கையைப் புலப் படுத்தும் கருவும் குறிக்கப்பெறுகிறது. கதைப்பின்னலில் கொள் கையைப் புலப்படுத்த உதவும் நிகழ்ச்சிகளும் அவற்றின் விளைவும் அடுத்துச் சுட்டப்பட்டுள்ளன.

அடுத்த நிலையில், கொள்கையை விளக்க உதவும் பாத்திரப் படைப்பும் (அட்டவணையுடன்) பாத்திரப் படைப்புப்பற்றிய மதிப்பீடும் அமைகின்றன. அதற்குப் பிறகு அமையும் படைப்புத் திறன் என்பது, கொள்கையை விளக்க உதவும் உத்திகள்,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கதைகளில் காந்தியத் தாக்கத்தைப் புலப்படுத்தும் பிற உத்திகள் என்ற இரு வகைகளில் விளக்கப்படுகின்றது.

கொள்கையை விளக்க உதவும் உத்திகளாகக் கொள்கையை விளக்கும் உரை, கொள்கையை விளக்க மேற்கொள்ளும் அணுகுமுறை (நேர்முக அல்லது எதிர்மறை), கொள்கையை விளக்க உதவும் தலைப்பு ஆகியன அமையும்.

கதைகளில் காந்தியத் தாக்கத்தைப் புலப்படுத்தும் பிற உத்திகளாகக் காந்தியப் பின்னணி இடம்பெறல், காந்தியடிகளின் வருகை அமைதல், காந்தியடிகளின் கொள்கைகள் சுட்டப்படல், அவரது கருத்தை மேற்கோளாகக் காட்டுதல், அவர்தம் வாக்கு, வாக்கின் சாரம் அமைதல், அவரது கருத்தை நினைவுறுத்தல், அவர்தம் கருத்தைச் செயற்படுத்தல், காந்தியடிகளின் பொன்மொழிகள் இடம்பெறல், அவர்தம் வாழ்க்கைக் குறிப்பு, வாழ்க்கைச் சாயல் இடம்பெறல், அவர்தம் புகழ் போற்றப்படல், உருவப் படம் இடம்பெறல், காந்தியடிகளை நினைவுறுத்துமாறு அவருடன் தொடர்புடையவை அமைதல், அவர்தம் பெயரில் அமைவன இடம்பெறல், காந்தியடிகளின் தொண்டு சுட்டப்படல், அவருடன் தொடர்புடைய சமகாலத்தவர் சுட்டப்படல், காந்தியடிகளுடனும் அவர்தம் சமகாலத்தவர்களுடனும் தொடர்புடைய பாடல்கள் இடம்பெறல் ஆகிய இவைபோல்வன அமைந்துள்ளன.

இறுதியாக, குறிப்பிட்ட கொள்கையை விளக்க உதவும் பிற கதைகளில் காந்தியத் தாக்கம் எப்படி அமைந்துள்ளது என்ற திறனாய்வு இடம்பெறுகிறது. இப்பகுதியில், அக்கொள்கையை விளக்க அமைந்துள்ள கதைகளால் அறியப்படும் முடிவுகளும் மதிப்பீடு செய்யப்படுகின்றன.

இவ்வாய்வினால் பெறப்பட்ட சில பொது முடிபுகளை இங்கே தருவது பொருத்தமாகும்.

1. காந்தியச் செல்வாக்கைத் தம் சிறுகதைகளில் உணர்த்த முயன்ற ஆசிரியர்கள், காந்தியடிகளின் கொள்கைகளைப் பல்வேறு கோணங்களில் விளக்கவும், காந்தியடிகளின் வாழ்க்கையின் இன்றியமையா நிகழ்ச்சிகளைச் சுட்டவும், அவர்தம் தலைமையில் நடைபெற்ற இயக்க நிகழ்ச்சிகளைச் சித்திரிக்கவும் முயன்றுள்ளனர்.

2. காந்தியத் தாக்கத்தின் விளைவாக, நாட்டுப்பற்றுக்கு முதன்மை தரும் சிறுகதைகள் தோன்றியுள்ளன.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

3. காந்தியக் கொள்கைகளை நீதியுரைகளாக மட்டும் சுட்டாமல் நடைமுறை வாழ்வில் வாழ்ந்து காட்டிய, காட்டுகின்ற காட்டக்கூடிய கதைமாந்தர்வழி விளக்கும் முயற்சியில் பெரும் பாலான கதைகள் அமைந்துள்ளன.

4. காந்தியத்தை உள்ளார்ந்து உணர்த்தும் நோக்கில், அதன் சிறப்பிற்கும், தம் நோக்கிற்கும் முதலிடம் நல்க எண்ணிய சில ஆசிரியர்கள், சிறுகதைகளின் உருவம்பற்றி ஆர்வம் காட்டா மல், உள்ளடக்கத்திற்கு இன்றியமையாத இடம் அளித்துள்ளனர்.

5. காந்தியத்தை உணர்த்தும் நோக்கத்துடன் சிலர் கதை எழுதவில்லை. ஆயினும், அவர்களும் தம்மையறியாமலே காந்தியக் கருத்தினையோ, காந்தியடிகள் தம் பெயரினையோ தம் கதைகளில் சுட்டிச் செல்கின்றனர். இங்ஙனம் அவரிடத்தும் காந்தியுகம் தன் செல்வாக்கை ஏற்படுத்தியமை தெளிவாகிறது.

6. கதைகளில் நடக்கும் அல்லது நடைபெறக்கூடிய நிகழ்ச்சிகளைப் படைக்க முற்படும் ஆசிரியரினும் நடந்த வரலாற்று நிகழ்ச்சியைச் சித்திரிக்கும் ஆசிரியர்களின் திறன் வேறுபடுவதை உணரமுடிகிறது. காந்திய வரலாற்றுப் பின்னணியில் உருவாகும் கதைகள் கற்பனையுடன் அமையினும், மொழி நடையாலும், நிகழ்ச்சி வருணனையாலும், இயைந்த சூழல் அமைப்பாலும் பிற கதைகளினும் வேறுபட்டுத் தனி வளர்ச்சி கண்டுள்ளமையை உணரமுடிகிறது.

அறநெறிக் கருத்துகளுடன் இணைந்தே வளர்ந்த தமிழிலக்கியப் பாரம்பரியத்தில், காந்தியத் தாக்கமுள்ள இலக்கிய வகையும் தனிக்கிளையாக வளர்ந்தோங்கியுள்ளமை தமிழிலக் கியத்தின் சீர்மையையும் நீர்மையையும் புத்தம் புதுமையுடைய தாக்குகிறது எனில் மிகையாகாது.

குறிப்புகள்:

1. 1. Wagaonkar, M.S., 'Impact of Gandhian Thought on Modern Marathi Literature', Ph.D., Nagpur, 1958

2. Gupta, G.S., Balarama, The Artist as Humanist - A Study of Mulk Raj Anand's Fiction, Thesis submitted to Karnataka University, Dharwad, 1969.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

3. Joshi (Arvind), Gandhi Vichar dhara Ka Hindi Sahitya par Prabhav - Ph.D., University of Gujarat, 1969.

2. அருணாசலம், சபா., 'தமிழ் நாவல்களில் காந்தியத்தாக்கம்' [கா.சீ. வேங்கடரமணி, கல்கி, அகிலன், நா. பார்த்தசாரதி, ராஜம்கிருஷ்ணன், ர.சு. நல்லபெருமாள் ஆகியோர் படைப்புகளின் வாயிலாக] பிஎச்.டி. பட்டத்திற்காக அளிக்கப்பட்ட ஆய்வேடு, மதுரை காமராசர் பல்கலைக்கழகம், 1979.

3. பாலசுப்பிரமணியம், இரா., 'சி.சு. செல்லப்பாவின் சிறுகதைகளில் கிராமப்புற வாழ்க்கைச் சித்திரிப்பு', எம்.ஃபில் பட்டத்திற்காக அளிக்கப்பட்ட ஆய்வேடு, மதுரைப் பல்கலைக்கழகம், 1978.

4. இராமலிங்கம், மா., 'விடுதலைக்கு முன் புதிய தமிழ்ச் சிறுகதைகள் ஓர் ஆராய்ச்சி', பிஎச்.டி., பட்டத்திற்காக அளிக்கப்பட்ட ஆய்வேடு, சென்னைப் பல்கலைக்கழகம், 1974.

5. மீனாட்சி முருகரத்தனம், 'காந்திவழிக் கதைகளில் சத்தியம்', இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்ற ஐந்தாவது கருத்தரங்கு ஆய்வுக்கோவை, 1973, பக். 372-378.

6. பின்னிணைப்பு-1இல் இடம்பெறுகிறது.

7. நூலகங்கள்
   1. ஆவணக் காப்பக நூலகம், சென்னை.
   2. ஈஸ்வரி லெண்டிங் நூலகம், சென்னை.
   3. கன்னிமாரா நூலகம், சென்னை.
   4. காந்தி அமைதி நிலைய நூலகம், சென்னை.
   5. காந்தி அமைதி நிறுவன நூலகம், மதுரை.
   6. காந்தி சிந்தனைக் கல்லூரி நூலகம், மதுரை,
   7. காந்தி நினைவு நிதி நூலகம், மதுரை.
   8. காந்தி நினைவு நிலைய நூலகம், மதுரை.
   9. சென்னை சர்வோதய மண்டல் நூலகம், சென்னை.
   10. சென்னை நகரப் பெண்கள் விடுதி நூலகம், சென்னை.
   11. சென்னைப் பல்கலைக்கழக நூலகம், சென்னை.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

12. மதுரை காமராசர் பல்கலைக்கழக நூலகம், மதுரை.
13. மதுரை காமராசர் பல்கலைக்கழக அஞ்சல்வழிக் கல்வி நூலகம், மதுரை.
14. மதுரை காமராசர் பல்கலைக் கழகத் தமிழ்த்துறை நூலகம், மதுரை.
15. மறைமலையடிகள் நூலகம், சென்னை.
16. மாவட்ட மைய நூலகம், மதுரை.

8\. 1. ஆர். ஆர். திவாகருடன் [அனைத்திந்திய காந்தி அமைதி நிறுவனத் தலைவர்] 15-5-1979 அன்று பேட்டி நடைபெற்றது.

2\. ஆர். கே. யார்டேயுடன் [அரிசன சேவகசங்கத் தலைவர்] 10-3-1980 அன்று பேட்டி நடைபெற்றது.

9\. 1. அருணாசலம், க., அனைத்திந்திய காந்தி நினைவு நிதித் தலைவர்.

2\. இராஜன், ஏ.என்., செயலர், அறக்காவலர் கோட் பாட்டு நிறுவனம், சென்னை.

3\. குருசாமி, இரா., தலைவர், காந்திநிகேதன் ஆசிரமம், டி. கல்லுப்பட்டி.

4\. சுப்பிரமணியம், எஸ். ஆர்., தலைவர், தமிழ்நாடு சர்வோதயமண்டல் & ஆசிரியர், சுப்பிரமணிய பாரதி கவிதா மண்டலம், சென்னை.

5\. திருமலை, டி.டி., ஆசிரியர், உலக இதய ஒலி, & செயலர், காந்தி அமைதி நிறுவனம், சென்னை.

6\. மீனாட்சி சுந்தரனார், தெ. பொ., மதுரைப் பல்கலைக் கழக முன்னாள் துணைவேந்தர்.

10\. அகிலன், நாரணதுரைக்கண்ணன், மாயாவி, அநுத்தமா, ரா. பாலகிருஷ்ணன், பி. எஸ். ராமையா, ஆர். சூடாமணி, கோவி. மணிசேகரன், பெ. தூரன், கே. ஜயலக்ஷ்மி, கு. ப. சேது அம்மாள், டி. என். சுகி சுப்பிரமணியம், ஜ. ரா. சுந்தரேசன், கோமதி சுப்பிரமணியம், மஹி, வி. பார்த்திபன் ஆகியோருடன் பேட்டி நடைபெற்றது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

11. அகிலன், கி. ராஜேந்திரன் (கல்கி அவர்களுக்காக), கமலா விருத்தாசலம் (புதுமைப்பித்தனுக்காக), மஹி, கோமதி சுப்பிரமணியம், கோவி. மணிசேகரன், ஜ. ரா. சுந்தரேசன், டி. என். சுகிசுப்பிரமணியம், ஆர். சூடாமணி, சி. சு. செல்லப்பா, சி. ஆர். நரசிம்மன் (இராஜாஜி அவர்களுக்காக), நா. பார்த்தசாரதி, ரா. பாலகிருஷ்ணன், பெ. தூரன், பூவை. எஸ். ஆறுமுகம், மாயாவி, ஈ. முத்துராமலிங்கம், பி. எஸ். ராமையா, தி. சா. ராஜு, வல்லிக்கண்ணன், கே. ஜயலக்ஷ்மி, ஸரோஜா ராமமூர்த்தி ஆகியோர் ஆய்வாளரின் வினாப்பட்டிக்கு விடைகள் அனுப்பியுள்ளனர்.

12. துணை நூற்பட்டியலில் இடம்பெறுகின்றன.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

1. காந்தியம்

'காந்திவழிக் கதைகள்' என்ற தொகுப்பில், காந்தியத்தின் பல்வேறு கோணங்களையும் காட்டுகின்ற சிறுகதைகள் உள்ளன. அத்தொகுப்புப்பற்றிய ஆய்வில் ஈடுபடுமுன்னதாகக் காந்திய விளக்கமும் அதன் பல கூறுகளும்பற்றிக் காணவேண்டியுள்ளது. இவ்வியல் அவற்றை ஆராய்கின்றது.

இந்தியத் தாயின் அடிமை விலங்கை அறவழியில் முறிக்க முற்பட்ட காந்தியடிகளின் உள்ளம் இருமுனைகளில் போராட்டங்களை எதிர்கொண்டது. நாட்டு விடுதலை மட்டும் அவர் குறிக்கோளன்று; வறுமை மிஞ்சிப் பாழ்பட்டு நின்ற பாரதத்தின் மக்களை உயர்த்திப் பெறப்போகும் விடுதலை வாழ்வைப் பேணி நுகரும் சமுதாயத்தை உருவாக்குவதும் அவரது திட்டமாகும். அதன் விளைவே அறவழிப் போராட்டங்களும், நிருமாணத் திட்டங்களும் ஆகும்.

'காந்தியம்' என்ற சொல்லை முதன்முதலாகக் காந்தியடிகளும் கராச்சியில் நடந்த ஒரு பொதுக்கூட்டத்தில் குறிப்பிட்டுள்ளார். அவர், "காந்தி இறந்து விடலாம். ஆனால், காந்தியம் ஒருபோதும் இறவாது என்றார்."[1] அவர் காந்தியம் என்று குறிப்பிட்டது சத்தியமும் அகிம்சையும் பொதிந்த தம் தத்துவ நெறியையே ஆம்.

தமக்குப் பின்னால் காந்தியம் என்ற ஒன்றை நிறுவிச் செல்லவேண்டும் எனத் தாம் விரும்பியதில்லை என்று 1936-இல் 'காந்தி சேவா சங்க' உறுப்பினரிடைப் பேசும்போது காந்தியடிகள் கூறினார். அதனை உலகிற்கு வழங்க வேண்டும் என்று திட்டமிட்டு அவர் செயற்படவுமில்லை. என்றாலும், அவர்தம் எண்ணங்கள் அவற்றினோடு இயைந்த செயல்திட்டங்கள், எண்ணத்திற்கும் செயலுக்கும் ஏற்ப ஒழுகிய ஒழுகலாறுகள் அனைத்தும் காலப்போக்கில் உலகிற்கு வழிகாட்டும் ஒரு தத்துவமாக உருவாயின.

அவருடைய வாழ்வு, பண்பு நலன்கள், செயல்கள், வெற்றிகள், அறவுரைகள் ஆகியவை ஒன்று சேர்ந்து உருவாக்கிய ஒரு தத்துவமே காந்தியம் எனலாம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அரசியல், பொருளாதாரம், சமூக இயல், சமயம் ஆகியவற்றை ஒன்றுடன் ஒன்றாய் இயைபுபடுத்தி மனித வாழ்க்கையை முழுமையாகக் கண்டவர் காந்தியடிகள். தம் வாழ்வைச் சமுதாய இயக்கத்தோடு ஒன்றுமாறு செய்தவர் அவர். அவர்தம் கொள்கைகளையும் விளக்கங்களையும் மனத்தில் கொண்டு, பலர் காந்தியம் என்பதற்கு விளக்கங்கள் தர முற்பட்டனர்.

காந்தியம் – பொருள் விளக்கம்

காந்தியம் என்பது ஒரு தத்துவம். அத்தத்துவத்தின் அடிப்படையாக அமைவன சத்தியமும் அகிம்சையும் ஆகும். ''சத்தியம், அகிம்சை ஆகியன காந்தியடிகளின் வாழ்க்கை மற்றும் தத்துவத்தின் மந்திரமாக மையப்பொருளாக விளங்கின''[2] எனக் குறிப்பிடுகிறார் திவாகர். இவரது கருத்தை ஒட்டிக் ''காந்தியம் என்பது பொதுவாக அகிம்சை, சத்தியம் ஆகியவற்றின் கூறுகளைப் பற்றியது. அது சத்தியத்திற்கு முழு மதிப்பளிப்பதாகும். மேலும் அதே அளவில் அகிம்சையையும் வற்புறுத்துவது ஆகும்''[3] என்று பிரியரஞ்சன் சென் கருத்து அமைகிறது. ''தன்னாட்சியைச் சத்தியம், அகிம்சை ஆகிய வழிகளில் வெற்றி கொள்வதே காந்தியம்''[4] என்ற கருத்து, சத்தியம், அகிம்சை ஆகியவற்றின் செயற்பாடுதான் காந்தியம் என்பதைத் தெளிவாக்கும்.

காந்தியம் என்பது காந்தியடிகளின் பண்புகள். இக்கருத்திற்குத் துணையாகக் ''காந்தியம் என்பது காந்தியடிகளின் பண்பு நலன்களின் சாரமே. அது சில ஒழுக்க ஆன்மீகத் தன்மைகளைக் கொண்டுள்ளது; வாழ்வு குறித்த சில இயல்புகளைக் கொண்டது. சுருக்கமாகக் கூறினால் அது மகாத்மா காந்தியினிடம் பொதிந்துள்ள பொதுவான தன்மைகள் ஆகும்''[5] என்று பிரியரஞ்சன் சென் விளக்கம் அமைகிறது. மனித வாழ்வின் தத்துவங்களைப்பற்றிக் குறிப்பிடும் இராஜாஜி, தன்னலமற்ற அன்பு, தியாகம் இவற்றின் அடிப்படையில் தக்க முயற்சி மேற்கொள்ளப்படின் மனிதன், தீமை, நியாயமின்மை இவற்றிலிருந்து நன்மைக்கும், சரியான நடத்தைக்கும் மாற்றப்படுவான் என்ற தத்துவத்தைப் பிரதிபலித்தவர் காந்தியடிகள் என்கிறார்.[6]

தொண்டு வாழ்வில் ஈடுபாடு, உறுதியான ஒழுக்கமும் நோக்கமும் அமைதல், தன்னை அடக்கல், கட்டுப்பாடு ஆகியவை கொண்டிருத்தல், கீழ்த்தரவாழ்வில் இன்பத்தை நாடுவதில் வெறுப்பு, உயர்ந்த எளிமை, ஏழ்மை, பெருந்துன்பம் தாங்குதல்,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

உடலுழைப்பிற்கு ஆயத்தமாயிருத்தல் ஆகியனவற்றைக் காந்தியடிகளின் அடிப்படைக் கொள்கைகளாக மசுருவாலா குறிப்பிடுகிறார்.[7]

தீங்கு செய்யாதிருத்தல், துன்பத்தைப் பொறுத்தல், பகைவரிடம் அன்பாய் இருத்தல், தீச்செயல்களில் வெறுப்புக் காட்டுதல், அத்தீச் செயல்களைப் புரியும் மனிதரிடத்தில் வெறுப்புக்காட்டாது இருத்தல், இயற்கையோடு இயைந்து வாழ்தல் போன்ற கொள்கைகளைக் காந்தியம் என உரைக்கிறார் திரு. வி. கலியாணசுந்தரனார்.[8] ''காந்தியடிகள் குறிக்கோள்களாகக் கொண்ட தூய்மை, தொண்டு, முற்போக்கு உணர்வு ஆகிய பண்புகளினின்று நாம் காந்தியக் கொள்கையை அறியலாம்''[9] என்று விளக்கமளிக்கிறார் மு. வரதராசனார்.

காந்தியடிகள் வாழ்ந்த வாழ்க்கையே காந்தியம். இக்கருத்தை வலியுறுத்தும் வகையில், ''காந்தியக் கொள்கைகள் என எவற்றையும் தொகுத்துக் காந்தியடிகள் விட்டுச் சென்றாரில்லை. ஆயின் அவர் வாழ்க்கை அவர் தத்துவத்தை எடுத்துக் காட்டுகிறது. அது ஒவ்வொரு மனித இதயத்தையும் தொடுமளவிற்கு அடிப்படையாய் அமைகிறது''[10] என்று மொரார்ஜி தேசாயின் விளக்கம் அமைகிறது. ''காந்தியம் என்பது மதக் கொள்கைகள், மறுக்கக் கூடாத கொள்கைகள், விதிமுறைகள், கட்டளை அல்லது அடக்குமுறை இவற்றின் தொகுதியன்று. ஆனால் அது ஒரு வாழ்க்கை முறை. இன்றைய சிக்கல்களுக்குப் பழமைத் தீர்வுகளை அளிப்பது''[11] என்ற பட்டாபி சீதாராமையாவின் விளக்கமும் அக்கருத்திற்குத் துணையாக அமைகிறது.

காந்தியம் என்பது காந்தியடிகளின் செயற்பாடுகள் ஆகும். சமூக முன்னேற்றத்திற்காக மேற்கொள்ளப்பட்ட அச்செயற்பாடுகள் மனிதத்துவ அடிப்படையில் அமைந்ததுடன், அதற்கு முரண் எனக் கருதப்படும் தெய்வீகத்தன்மையையும் உள்ளடக்கின என்ற கருத்தை வழங்கும் வி. வி. கிரி, ''இதுவே காந்தியத்தின் சாரம்''[12] என்கிறார். காந்தியம் ஆன்மீக வாழ்க்கையை உலகியல் வாழ்க்கையுடன் ஒருமைப் படுத்தியமை இதனால் தெளிவாகும். ஆன்மீகமும், அறிவியலும் ஒன்று கூடும் வழியே காந்தியமாகும் என்ற வினோபாவின் கருத்தும்,[13] அதனை உறுதிப்படுத்தும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

காந்தியம் இந்தியாவின் அரசியல், சமுதாய, ஆன்மீகப் பொருளாதாரச் சிக்கல்கள் அனைத்தையும் அளாவி நிற்கிற பெரும் தத்துவம்.[14]

இவ்வாறாகக் காந்தியம் என்பது ஒரு தத்துவமாகவும், காந்தியடிகளின் பண்பாகவும், வாழ்க்கை முறையாகவும், செயற்பாடுகளாகவும் கொள்ளத்தக்க ஒன்றாயிருக்கின்றது.

பல்வேறு துறைகளில் காந்தியம்

காந்தியடிகள் வாழ்ந்த வாழ்வே அவர் உலகிற்களித்த செய்தியாக இருந்தது. அவரது அத்தகு வாழ்க்கை முழுவதும் சத்திய சோதனைக்குட்பட்டதாகவே இருந்தது. அவர் வாழ்க்கையில் சமயம், பொருளாதாரம், அரசியல், சமுதாயம் ஆகிய அனைத்தும் பின்னிப் பிணைக்கப்பட்டு இருந்தன.

காந்தியடிகள் அடிப்படையில் சமயம் சார்ந்த மனிதர். ஆன்மீகப் பயிற்சி, உண்ணாநோன்பு, வழிபாடு ஆகியவை மூலம் அச்சமற்ற, பேராசையற்ற, வெறுப்பற்ற புதிய மனித இனத்தை உருவாக்குவதைக் குறிக்கோளாகக் கொண்டிருந்தவர்.[15] அவர்தம் மதக்கோட்பாடு ஆன்மநேய ஒருமைப்பாடாக அமைந்தது. ''சமய வாழ்வின் முழுத்தன்மை ஒருவனுக்குச் சாது நிலை கூட்டும் ...... அடிகள் ஓயாது, கைம்மாறு கருதாது பிறர்க்கு உழைத்து வந்தனர். இந்நிலை சாதுவினுடையது''[16] என்ற கருத்து காந்தியடிகளின் சமய வாழ்க்கையின் தன்மையைச் சுட்டும். அவர், மனித இனத்திற்குத் தொண்டு செய்வதே சமயப் பணி எனக்கருதினார். அதுவே சத்தியமாகிய கடவுளைக் காண உதவும் என நம்பினார். அகிம்சைவழியில் சத்தியமாகிய இலட்சியத்தை அடையக் கருதினார். அவர் சமயத்தைத் தம் வாழ்வில் ஓர் இன்றியமையாத பகுதியாக்க முயன்றார். தாம் கண்ட பல சிக்கல்களைத் தீர்க்க அதைப் பயன்படுத்தினார்.

காந்தியப் பொருளாதாரச் சிந்தனைப் போக்கிற்கு வித்திட்டது, ரஸ்கின் எழுதிய 'கடையனுக்கும் கடைத்தேற்றம்' என்ற நூல். காந்தியப் பொருளாதாரக் கூறுகளாகச் சுதேசியம், உழைத்து உண்ணல், உடைமையின்மை, அறக்காவலர் கோட்பாடு, சுரண்டாமை, சமத்துவம் ஆகியவற்றைக் குறிப்பிடுவர்.[17] சேதி என்பவர் அக்கூறுகளாகச் சத்தியம், அகிம்சை, சத்தியாக்கிரகம், சுதேசியம், சமத்துவம், உழைத்து உண்ணல் ஆகியவற்றைச் சுட்டுகிறார்.[18] காந்தியடிகளின் பொருளியல் அறம்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சார்ந்த பொருளியல். அது எளிய வாழ்க்கை, பரவல் முறை, தன்னிறைவு, கூட்டுறவு முதலிய கோட்பாடுகளையுடையது.

காந்திய அரசியல் என்பது மக்கள் அரசியல். அது கட்சிச் சார்பற்றது. ஒரே மனதாக முடிவெடுக்கும் ஆட்சி முறை; அதிகாரம் எல்லா மக்களிடமும் பரந்து நிற்பதேயன்றிக் குறிப்பிட்டவர் கரங்களில் மட்டும் குவிந்துவிடாமல் இருப்பது; மேல் மட்டங்களில் இருக்கும் அமைப்புகளுக்கு மறைமுகத் தேர்தல் மூலம் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பது; இராணுவக் காவல் துறைகளுக்கு மாற்றாக அமைதிப்படை [சாந்தி சேனை] யினைக் கொண்டிலங்குவது; கடையவன் உட்பட அனைத்து மக்களின் நலனிலும் அக்கறை கொண்டு இயங்குவது ஆகும்.

காந்தியச் சமுதாயம் என்பது சர்வோதய சமுதாயம். அது அனைவரின் நலனை உள்ளடக்கும். ஏற்றத்தாழ்வில்லாமல் தனி மனிதர் ஒவ்வொருவரும் எல்லாத் துறைகளிலும் நலன் பெறுவதை அது குறிக்கும். அச்சர்வோதயம் வளரும் ஒரு தத்துவம்; அது வாழ்க்கைத் தத்துவம். 'பிறர் வாழ நீ வாழ்' என்பது சர்வோதயத்தின் உயிர்நாடி. சர்வோதய சமுதாயம் ஏற்றத்தாழ்வற்ற நிலையதாய் ஆன்மீக அடிப்படையில் வாழ உதவுவது. அது கிராமிய நாகரிகத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளது.[19]

இச்சமுதாயத்தில் வாழும் தனிமனிதன் பின்பற்ற வேண்டிய கோட்பாடுகளைப் பதினொரு விரதங்களாகக் காந்தியடிகள் தொகுத்தார்.[20] அவற்றுள் சத்தியம், அகிம்சை, திருடாமை, நாவடக்கம், அஞ்சாமை, உடைமையின்மை, புலனடக்கம் ஆகிய ஏழு விரதங்களும் ஆன்மீக வளர்ச்சிக்கும், உடலுழைப்பு, தீண்டாமை விலக்கு, சமய ஒற்றுமை, சுதேசி ஆகிய நான்கும் சமுதாய முன்னேற்றத்திற்கும் இன்றியமையாதவை.

தனிமனிதனை உருவாக்க இவ்விரதங்களை அமைத்தது போல் சமுதாயத்தை உருவாக்கப் பதினெட்டு நிருமாணத் திட்டங்களை அளித்தார்.[21] இவற்றில் சமுதாய ஒற்றுமை, தீண்டாமை விலக்கு, மதுவிலக்கு, தனி மனிதத்துப்புரவு, ஆதாரக் கல்வி, சமுதாயக் கல்வி, பொதுச் சுகாதாரம், பெண்டிர் நலன், ஆதிவாசிகள் நலன், தொழுநோய் துடைப்பு, மாணவர் நலன் ஆகியன சமுதாய முன்னேற்றத்திற்கு உதவுவன. கதர், கிராமத் தொழில்கள், பொருளாதாரச் சமத்துவம், விவசாயிகள் நலன், தொழிலாளிகள் நலன் ஆகியன பொருளாதார முன்னேற்றத்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

திற்கு உதவுவன. தாய்மொழி, நாட்டுப் பொதுமொழி ஆகியன அரசியல் வளர்ச்சிக்குத் துணை செய்யும்.

காந்தியடிகளின் சர்வோதய சமுதாயத்திற்கு ஏற்ற புதிய கல்விமுறை வாழ்க்கைக்காகக் கல்வி, வாழ்க்கை மூலம் கல்வி, வாழ்க்கை முழுவதும் கல்வி என்று குறிப்பிடப்பெறும்.

காந்தியக் கொள்கைகளில் பெரும்பங்கு வகிப்பன

தனிமனித வாழ்வில் ஒவ்வொருவரும் முழுவளர்ச்சியடைவதை விழைந்தவர் காந்தியடிகள். அவர், ஒவ்வொருவரும் சிறந்த மனிதராக, இலட்சிய மனிதராக உருவாகவேண்டும் என விரும்பினார். அவருடைய இலட்சிய மனிதன் ஒரு சத்தியாக்கிரகி. அச் சத்தியாக்கிரகி கீதையில் கூறியபடி தன்னை உணர்பவன் (ஸ்திதப்பிரக்ஞன்) ஆவான். அவர் விரும்பும் இலட்சிய மனிதனிடம்காணப்படும் உயர்தன்மைகளைக் கீழ்க்காணுமாறு வரிசைப்படுத்துகிறார் மார்னிடாடா ராம்ஜி.[22]

1) அஞ்சாமை, 2) உண்மை, 3) அகிம்சை-உலகளாவிய அன்பு, 4) தன்னலமற்ற சமுதாயப்பணி, 5) முழுமையான தற்கட்டுப்பாடு-தூய்மை, 6) உடைமை விலக்கல், 7) பற்றற்றிருத்தல், 8) அறிவு சார்ந்த உற்பத்தியில் ஈடுபடும் உடலுழைப்பு, 9) அடக்கம், 10) எளிமை, 11) கூட்டுறவு, 12) துப்புரவு, 13) அமைதி, 14) மகிழ்ச்சி, 15) சமயங்களை மதித்தல், 16) நாவடக்கம்.

இவற்றுள் முழுமையான தற்கட்டுப்பாடு — தூய்மை, அகிம்சை, தன்னலமற்ற சமுதாயத்தொண்டு, அஞ்சாமை ஆகியன பெரும் பங்கு வகிப்பன.

மேலும் அவர் இலட்சிய மனிதனாகக் கருதப்படும் சத்தியாக்கிரகியின் பண்புகளைக் காந்தியடிகளின் நோக்கில் கீழ்க்காணுமாறு குறிக்கின்றார்;

பொது நிலையில்: உண்மையைக் காணும் உறுதியோடு தொடர்ந்து உண்மையை நாடல்.

உணர்வு எண்ண நிலையில்: 1) உண்மையை விடாது பற்றி நிற்றல், 2) கடவுள் நம்பிக்கை, 3) உலகளாவிய அன்பு, 4) உண்மை, அகிம்சையில் நம்பிக்கை, 5) மனிதன் அடிப்படையில் நல்லவன் என்பதில் நம்பிக்கை, 6) உள்ளொளி உணர்தல்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நடத்தையில் அல்லது செயற்பாட்டில்: 1) கிராமங்களுக்கும், கிராம மக்களுக்கும் பணி செய்தல், 2) தன்னல மற்றிருத்தல், 3) எளிமை, 4) இந்தியராயின் நூற்றல், கதர் உடுத்தல், (5) அடக்கம், 6) இன்றியமையாத அடிப்படைத் தேவைகளுக்கு மட்டும் எடுத்துக்கொண்டு எஞ்சியதைப் பிறர்க்காக அறக்காவலர் கோட்பாட்டு நிலையில் வைத்திருத்தல், 7) அநீதி, கொடுமை, சுரண்டல், அடக்கியாளுதல் ஆகியவற்றை எதிர்த்தல், 8) அகிம்சை காத்தல்—இன்னா செய்யாமை, 9) ஆன்மபலம்—அன்பு பலத்தின் மூலம் தீமையை எதிர்த்தல், 10) தற்கட்டுப்பாடு, 11) அஞ்சாமை, 12) வெறுப்பின்மை, 13) அண்டையிலுள்ளோர்க்குத் தன்னலமற்ற பணி, 14) தன்னையே துயருக்குட்படுத்திக்கொண்டு எதிர்த்தரப்பினரின் மனச்சாட்சியை, அறிவினைத் தூண்டுதல், 15) சிறந்த இலட்சியத்திற்காகத் துணிவுடன் முகத்தில் புன்னகையுடன் யார் மீதும் வெறுப்பில்லாது உயிர் துறக்கத் தயாராயிருத்தல், 16) கட்டுப்பாடான ஒழுக்கம், 17) நலமுள்ள உடலும் மனமும், 18) தீமை செய்பவரின் தீய செயல்களுடன் ஒத்துழையாமை, 19) தீமை செய்வோரிடம் காணும் நல்லனவற்றுடன் ஒத்துழைத்தல், 20) எதிர்த்தரப்பாரின் மீது அன்பு கொண்டு கடமையில் உயர் நாட்டம் கொண்டு பொருத்தமான காரணத்திற்காக உண்ணாநோன்பு மேற்கொள்ளுதல், 21) கடவுளிடமிருந்து சக்தியைப் பெறவும் தன்னைத் தூய்மைப் படுத்திக் கொள்ளவும் உண்ணா நோன்பு மேற்கொள்ளல், 22) இழிவுபடுத்தும் சட்டங்களை எதிர்த்து அகிம்சை வழியில் மக்கள் நடத்தும் எதிர்ப்பியக்கமான சட்ட மறுப்பு இயக்கங்களில் பங்குகொள்ளல்.

காந்தியத்தின் சிறப்பு

காந்தியத்தின் அடிப்படையான சத்தியம், அகிம்சை இரண்டும் தொன்றுதொட்டு மனித சமுதாயத்தால் மேற்கொள்ளப் பட்டவை எனினும், நாடு அளாவிய நிலையில் விடுதலை பெறவும், சமூகம் முன்னேற்றம் காணவும் அவற்றைக் கருவியாகப் பயன்படுத்தியவர் காந்தியடிகள்.

''உண்மையும் அகிம்சையும் காந்தியடிகள் சொன்னது போல மலைகளைப் போன்று பழமையானவையே. எனினும், அவர் வாழ்க்கைக்கும் வாழ்க்கைச் சிக்கல்களுக்கும் [அவற்றைப்] பயன்படுத்தினார் ...... அத்தகு உண்மையைக் காண, பெற,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நிலைக்கச் செய்ய விரும்பினார்''[23] என்ற திவாகர் விளக்கம் அக்கருத்தை வலியுறுத்த உதவும்.

திவாகரின் இவ்விளக்கத்திற்கு உறுதுணையாக, ''அன்பு, சத்தியம், தீண்டாமை விலக்கு, தன்தூய்மை, இறைபக்தி, உண்ணாநோன்பு, இறைவழிபாடு இவையெல்லாம் பழைய வாசகங்கள். இவற்றையெல்லாம் நடைமுறை வாழ்வில் ஒன்று படுத்த முயலும் போக்கே காந்தியம்''[24] என்னும் பிரியரஞ்சன் சென் கருத்து அமைகிறது.

இக்கருத்திற்கு இயைந்தவாறு ''வீரர்களின் கருவியான அகிம்சை அயல்நாட்டின் கொடுங்கோன்மையையும் உள்நாட்டின் அநீதியையும் அரசியல் சமுதாயப் பொருளாதார அநீதிகளையும் எதிர்த்துப் போராடப் பயன்பட்டிருக்கின்றது''[25] எனக் காந்தி யடிகளும் குறிப்பிடுகிறார்.

காந்தியடிகள் நமக்கு ஒரு புதுவகைப் போராட்ட முறையை யும், அரசியல்போர் முறையையும், புதுவகை அரசியல் தந்திரத் தையும் அளித்ததுடன் அரசியலில் சத்தியமும் நல்லெண்ணமும் அகிம்சையும் பலன் அளிக்கும் என்பதை நிலைநாட்டிக் காண்பித் தார்[26] என்று குறிப்பிடும் நேரு, ''அவர் சொன்னதன் சாரம் புதிதல்ல. பெரிய மனிதர்கள் ஏற்கெனவே அதைக் கூறியிருக் கிறார்கள். ஆனால், அதைக் காந்திஜி மக்களுடைய அரசியல் போராட்டத்தில் பயன்படுத்தினார் என்பதுதான் வேறுபாடு. தனிப்பட்ட வாழ்க்கையில் ஒருவர் செய்ய வேண்டுமென்று கூறியபோதனை திடீரென்று மக்கள் போராட்டத்தில் இடம் பெற்றது''[27] என்கிறார்.

காந்தியக் கருத்துகளுக்கு எதிர்ப்பு

காந்தியடிகள் தம் நூல், கொள்கைகள், செயல்கள் ஆகிய வற்றை எதிர்த்த தலைவர்களுக்கு அவ்வப்போது விளக்கம் தந்தார். அவர் அளித்த விளக்கங்கள் அவர்தம் கொள்கைத்தெளி விற்கு உதவும் வண்ணம் அமைந்துள்ளமை அறியத்தக்கது.

'இந்திய சுயராஜ்யம்' குறித்துக் கோகலேயின் மதிப்பீடு

1909-இல் இலண்டனிலிருந்து தென்னாப்பிரிக்காவிற்குத் திரும்பிச் செல்லும்போது காந்தியடிகள் எழுதிய நூல் 'இந்திய சுயராஜ்யம்'. வன்முறைக்கு மாறாக அன்பு நெறியைப் புகட்டு வது, ஆன்ம சக்தியின் உயர்வை வலியுறுத்துவது என்று காந்தியடி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கள் அந்நூலைக் குறித்துச் சுட்டினார். 1912-இல் கோகலே அந்நூலைக் கண்ணுற்று அதனைப் பக்குவமற்றது என்று குறிப்பிட்டதுடன் இந்தியாவில் ஓர் ஆண்டு கழித்துக் காந்தியடிகளே அதைக் கிழித்தெறிவார் என்றும் கூறினார். ஆயின், காந்தியடிகள் பத்து ஆண்டுகளுக்குப் பிறகு இந்நூலைப்பற்றி எழுதுகையில் அதில் ஒரு பெண் நண்பருக்காக ஒரு சொல்லைத் தவிர வேறு எதனையும் மாற்றவில்லை என்றும், அதில் கூறப்பட்ட கருத்துகளில் மேன்மேலும் நம்பிக்கை வலுவடைந்தது என்றும் கூறினார்.[28] இந்நூலை இன்றும் காந்தியடிகளின் கொள்கை அறிக்கையாக அறிஞர் ஏற்றுள்ளனர்.[29]

'ஒத்துழையாமை' குறித்துத் தாகூரின் எதிர்ப்பு

காந்தியடிகளால் மேற்கொள்ளப்பட்ட ஒத்துழையாமையிலும் அந்நியத்துணி விலக்கிலும், அறிவு எதேச்சாதிகாரம் ஏற்பட்டுவிடக் கூடிய தீயவிளைவு இருப்பதாகக் கவி ரவீந்திரநாத தாகூர் தொடக்கத்தில் கருதினார்.[30] அதற்கு விளக்கம் தரும் காந்தியடிகள், ''இந்தியாவிற்கும் மேற்கத்திய நாடுகளுக்கும் இடையே வியக்கத்தக்க சுவரை எழுப்பவேண்டும் என்பதே ஒத்துழையாமையின் நோக்கம் என்று கவி அஞ்சத்தேவையில்லை; அதற்கு மாறாக ஒருவர்க்கொருவர் நம்பிக்கையினையும் மதிப்பினையும் அடிப்படையாகக் கொண்டு உண்மையான, தன்மதிப்புள்ள, தன்னிச்சையான ஒத்துழைப்பிற்கு வழி செய்வதே அதன் நோக்கமாகும்''[31] என்று குறிப்பிட்டுள்ளார்.

மாணவர்களுக்குக் கல்விச் சாலைகளை ஏற்படுத்துமுன் அரசுக்கல்விக் கூடங்களை விட்டுவிடுமாறு மாணவர்களைத் தாம் கேட்டிருக்கக்கூடாது என்று தாகூர் கருதியதைக் குறிப்பிடும் காந்தியடிகள் இது குறித்துத் தம் கருத்து மாறானது என்றார். இலக்கியப் பயிற்சிக்கும் ஒழுக்கத்தை உருவாக்குவதற்கும் தொடர்பு இல்லை என்பது தம் அனுபவம் ஆகும் என்றும், அரசுக் கல்விச் சாலைகள் மக்களை ஆண்மையற்ற, ஆதரவற்ற நாத்திகராகச் செய்திருக்கின்றன என்பது தம் உறுதியான எண்ணம் என்றும் விளக்கினார்.[32]

கதர் குறித்துத் தாகூர், ஜார்ஜ் ஜோஸப் ஆகியோரின் எதிர்ப்பு

நூல்நூற்கவும் நெய்யவும் வேண்டும் என்ற காந்தியடிகளின் கருத்தினை எதிர்த்தார் தாகூர். எதையும் உருவாக்கும் இக்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

காலத்திற்கு இது வேதவாக்கன்று என்று குறிப்பிட்ட அவர் மேற்கத்திய நாடுகளுக்கு இது பெரிய தீமையாகும் எனச் சுட்டினார்.[33] அவர்க்கு விளக்கம் தரும்நிலையில், பசி என்ற ஒரே வாதம் தான் இந்தியாவை நூற்கும் இராட்டைக்கு ஓடும்படி செய்தது;[34] அந்நியத் துணி விருப்பமே இராட்டையை அதன் மதிப்பிலிருந்து விரட்டிவிட்டது; ஒரு நாட்டை மற்றொரு நாடு சுரண்டுவதற்கு இடந்தரும் பொருளாதாரமும் ஒழுக்கக் கேடானதே என்றெல்லாம் குறிப்பிட்டார் காந்தியடிகள்.[35]

மேலும் மரணத்தைப் போன்ற மாறுதலற்ற ஒரே தன்மையை உண்டாக்கவே இராட்டை கொணரப்படுகிறது என நினைத்துத் தாகூர் அதனினின்றும் ஒதுங்கிவிட நினைப்பதாகச் சுட்டும் காந்தியடிகள், எண்ணற்ற இந்திய மக்களின் வாழ்வை ஒன்றுபடுத்தும் நோக்கில் இராட்டை கொண்டுவரப்படுகிறது என்றார்.[36] கோடிக் கணக்கான உழவர்க்குக் குடிசைத் தொழிலைக் கொடுக்க இயலாத போது கைகளைப் பயன்படுத்துவதற்கு மாறாக, எந்திர சக்தியால் இயங்கும் நூற்கும் கதிர்களைப் புகுத்துவது கொடுமையான குற்றம் எனவும் கருத்துத் தெரிவித்தார்.[37]

கதர் உற்பத்தி செய்வதும் வாங்குவதும் மிகுந்த செலவிற்குட்பட்டன என்றும், நாள்தோறும் பத்துமணி நேரம் உழைத்து மூன்றணா கூலி கிடைக்கச் செய்யும் இத்தொழில் வெற்றியடையாமல், காந்தியடிகளுக்குப் பிறகு உயிருடன் இராது என்றும் ஜார்ஜ் ஜோஸப் கூற அவருக்கு மறுமொழி அளித்தார் காந்தியடிகள். கோடிக்கணக்கான மக்கள் துய்ப்பதற்குரிய கதர் அந்நியத் துணியினும் மிகுந்த விலையுள்ளதன்று, கதரைப் பயன்படுத்தியாகவேண்டும் என்பதற்குக் காரணம் அக்கோடிக்கணக்கான மக்களே அதன் உற்பத்தியாளராகவும், துய்ப்பவராகவும் இருத்தல் வேண்டும் என்பதுதான். ஓய்வு நேரங்களில்மட்டும் மேற்கொள்ளப்படும் இத்தொழிலால் பெறுவது அன்றாடத் தொழில்களினின்றும் பெறும் வருவாய்க்கு மேலும் கூடுதலான நல்ல வருவாயேயன்றி நாட்கூலி அன்று; இந்நிறுவனச் செலவினும் பிற நிறுவனச் செலவு குறைவானதாக இல்லை; பலர்தம் தன்னலமற்ற தியாக உழைப்பைப் பெற்றிருக்கும் ஒரு நிறுவனம் ஒருவருக்குப்பின் மடிந்துவிடும் என ஜோஸப் கூறுவது அவர் தம் நாட்டு மக்களை மிக அற்பமாக நினைப்பதையே சுட்டும் என் அவர் விளக்கமளித்தார்.[38]

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கிராம முன்னேற்றம், சீரமைப்பு ஆகியவை குறித்துத் தமக்கும் நேருவுக்கும் கருத்து வேறுபாடுகள் இருப்பதைக் குறிப்பிட்டார் காந்தியடிகள். கிராம முன்னேற்ற இயக்கத்தை நேரு எதிர்க்கவில்லை எனினும், எந்திரத் தொழில் பெருக்கத்தில் அவருக்கு என்றும் நம்பிக்கையிருக்கத் தமக்கோ அத்தொழில் இந்தியாவுக்கு நன்மை அளிக்குமா என்பதில் ஐயம் இருப்பதாகச் சுட்டினார். வருக்கப்போராட்டம் இறுதியில் ஏற்பட்டே தீரும் என நேரு நினைக்கத் தாமோ நிலக்கிழாரையும், முதலாளி இனத்தினரையும் அகிம்சை வழியில் மாற்றலாம் என எதிர்பார்ப்பதாகவும் கூறினார்.[39] எந்திரத்தொழிலை நாட்டுடைமையாக்கின் முதலாளித்துவத்தின் தீமைகள் அதில் இரா என்று நேரு கருதத் தாமோ அவ்வாறு செய்யினும் அத்தொழிலில் இயல்பாக உள்ள அத்தீமைகளைப் போக்கிவிட முடியாது என்று கருதுவதாகவும் உரைத்தார்.[40]

சமநிலைச் சமுதாயம் பற்றி நேருவிடம் கருத்து மாறுபாடு

தமக்கும் நேருவுக்கும் சமநிலைச் சமுதாயம் பற்றிக் கருத்து வேறுபாடு உண்டு என ஒப்புக் கொள்ளும் காந்தியடிகள், பலன் தான் முக்கியம் எனக் கருதும் நேருவுக்கு அகிம்சையில் நம்பிக்கையிருப்பினும் அகிம்சையின் மூலம் சமநிலைச் சமுதாயம் ஏற்பட முடியாத நிலையில் வேறுவழிகளிலும் அதைப்பெறலாம் என்பதிலும் நம்பிக்கை உண்டு எனக் குறிப்பிட்டார். முறைகளின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் தாம், அகிம்சையை வற்புறுத்துவது கொள்கைபற்றியதாகும் என்று கூறிய அவர், அதனால் வன்முறையின்வழி விடுதலைவரினும் தாம்மறுத்து விடுவதாகவும் குறிப்பிட்டார்.[41]

காந்திய அகிம்சைபற்றி நேருவின் எண்ணம்

"அகிம்சைத் தத்துவத்தை நான் பூர்ணமாகவோ, நிரந்தரமாகவோ ஏற்றுக்கொள்ளவில்லை. ஆயினும் அது என்னை மேலும் மேலும் கவர்ந்தது. இந்தியாவில் நாமிருக்கும் சூழ்நிலையில் நம்முடைய பின்னணியையும், பரம்பரையையும் எண்ணும் போது இதுதான் சரியான கொள்கை என்ற நம்பிக்கை எனக்கு ஏற்பட்டது. குறுகிய சமயக் கண்ணோட்டத்துடன் அல்லாமல்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அரசியலை ஆன்மீக மயமாக்குவது ஒரு நல்ல கருத்தாகவே எனக்குப்பட்டது''[42] என்று காந்தியடிகளின் அகிம்சைக் கொள்கையை ஏற்றார் நேரு.

தீண்டாமை தொடர்பாக அம்பேத்காருடன் கருத்து வேறுபாடு

தீண்டாமைக்கு ஆதாரமாக வேத நூல்களை இந்துக்கள் கொண்டிருப்பதை அம்பேத்கார் எடுத்துக் காட்டக் காந்தியடிகள், ''டாக்டர் அம்பேத்கார் மேற்கோள் காட்டியுள்ள பலநூல்களும் நம்பத்தகுந்தவை என்று ஒப்புக்கொள்ள முடியாது''[43] என்று மறுத்தார்.

அரிசனங்களை மதமாற்றத்திற்குத் தூண்டிய அம்பேத்காரின் செயலுக்கு உடன்படாத காந்தியடிகள், அம்பேத்கார் போன்ற தலைவர்கள் இந்துமதத்தினின்றும் பிரியின், அரிசனங்களின் தற்காப்பு முயற்சிகள் சக்தியை இழந்துவிடும் என்றார்.[44] மேலும், ''டாக்டர் அம்பேத்காரின் திட்டம் ... சகோதரர்களைக் கொலை செய்வதாகும். அதன்படி அரிசனங்களே இருபோட்டிப் பிரிவுகளாகப் பிளக்கப்பட்டு விடுவார்கள். இருபிரிவினரும் அரிசனங்கள் என்றே குறிப்பிடப்படுவார்களாயின் அவர்களது நிலை இன்றுள்ளதைக் காட்டிலும் இழிநிலையதாகிவிடும்''[45] என்று தெரிவித்தார்.

''தீண்டாதாரிடமுள்ள குறைபாடுகளையெல்லாம் இந்து சமயத்திற்குள் அவர்களை ஓர் அங்கமாக வைத்துக் களைந்துவிட வேண்டும் என்று காந்திஜி விரும்பினார். அம்பேத்காரோ அவர்களைத் தனிச் சமூக அமைப்பாக ஏற்றுப் பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்று விரும்பினார். இது காந்திஜிக்குத் தார்மீக முறையில் தவறாகவும் அரசியல் முறையில் அபாயகரமானதாகவும் தோன்றிற்று''[46] என்ற கூற்றுத் தீண்டாதார்க்குத் தனி அமைப்பானது, தீமைக்கு இடமளிக்கும் என்ற காந்தியடிகளின் கருத்தைத் தெளிவுறுத்தும்.

இவ்வாறாகத் தம் கொள்கைகளையும் செயல்களையும் எதிர்த்தவர்களுக்குக் காந்தியடிகள் அளித்த விளக்கங்கள், அவர்களைத் தெளிவித்ததோடு காந்தியம் பற்றிய மதிப்பீட்டை உணர்த்தவும் உதவி நிற்கின்றன.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தொகுப்புரை

காந்தியம் என்ற ஒன்றைக் காந்தியடிகள் நிறுவ விரும்பவில்லை. எனினும், அவருடைய எண்ணங்கள், பண்புகள், செயற்பாடுகள், ஒழுகலாறுகள் ஆகியவை உருவாக்கிய ஒன்று காந்தியமாகும். காந்தியம் என்பது ஒரு தத்துவம். அதன் அடிப்படைக் கூறுகள் சத்தியமும் அகிம்சையும் ஆம். அத்தத்துவம் அவர்தம் ஒழுக்க ஆன்மீகத்துடன் கூடிய தன்னலமற்ற அன்பு, தியாகம், எளிமை, கட்டுப்பாடு இவற்றுடன் பிறர் துன்பந்தாங்கல், பகைவரிடம் அன்பு பாராட்டல் போன்ற பண்புநலன்களால் அமைந்தது, அப்பண்புகளுடன் வாழ்ந்த வாழ்க்கை முறையையும் அது சுட்டும்.

காந்தியடிகளின் செயற்பாடுகளால் விளைந்த காந்தியம் ஆன்மீகத்தையும் அறிவியலையும் இணைப்பது; ஆன்மீக வாழ்வை உலகியலோடு ஒருமைப்படுத்துவது. சமயம், பொருளாதாரம், அரசியல், சமுதாயம் அனைத்தையும் காந்தியம் ஒருங்கிணைக்கிறது. சமயநோக்கில் காந்தியம் ஆன்மநேய ஒருமைப்பாட்டை மதக்கோட்பாடாக ஏற்கிறது. அதன் சமயப் பணி, தொண்டின் வழிச் சத்தியக் கடவுளைக் காணலாகும்.

காந்தியப் பொருளாதாரத்தில் சமத்துவம், உடல் உழைப்பு, செல்வமனைத்தையும் சமுதாய நன்மைக்காக நிருவகிக்கும் அறக்காவலர் கோட்பாடு, அண்டையிலிருப்போர் நலம்பேணும் சுதேசியம், பரவல்முறை, தன்னிறைவு, கூட்டுறவு போன்றவை சிறப்புக் கூறுகளாகும். காந்திய அரசியல், கடைப்பட்ட தனிமனித நலனையும் பேணுவதாகும். காந்தியச் சமுதாயம் அனைவரின் நலனை அளாவிய கிராமிய நாகரிகம் கொண்ட சர்வோதய சமுதாயமாகும். அச்சமுதாயத்தில் சத்தியம், அகிம்சை, புலனடக்கம், அஞ்சாமை போன்ற தனிமனித நோன்புகளும், சமுதாய ஒற்றுமை, தீண்டாமை விலக்கு, மதுவிலக்கு, பெண்களின் நலன், கதர், கிராமத் தொழில்கள் போன்ற சமுதாய நிருமாணத் திட்டங்களும் மனித இனம் உய்வடைய உதவுவன. காந்தியம் வாழ்க்கைக்கேற்ற கல்வியைத் தேர்ந்தெடுக்கும்.

இலட்சிய மனிதனாம் சத்தியாக்கிரகியை உருவாக்கும் காந்தியத்தில் முழுமையான தற்கட்டுப்பாடு, தூய்மை, தன்னலமற்ற சமுதாயத்தொண்டு, அஞ்சாமை, இறைநம்பிக்கை,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

உடலுழைப்புப் போன்றவையும் கிராமப்பணி புரிதல், நூற்றல், கதர் உடுத்தல், அறக்காவலர் கோட்பாட்டின்படி செல்வத்தைப் பயன்படுத்துதல், ஆன்மபலத்தால் தீமையை எதிர்த்தல் போன்ற செயற்பாடுகளும் மேலோங்கி நிற்பனவாகும்.

சத்தியமும் அகிம்சையும் தொன்மைச் சிறப்புடையன எனினும், அவை சமுதாயம் அளாவிய அரசியல் சார்பினாலும் ஆன்மீக விடுதலை பெறக் கருவியாக அமைந்த வகையினாலும் அவற்றின் மதிப்பீட்டைக் காந்தியம் உயர்த்துகிறது. மேலும் அன்பு, சத்தியம், இறைமை, தூய்மை, தீண்டாமை விலக்கு ஆகியவற்றை நடைமுறை வாழ்வில் ஒன்றுபடுத்த முயன்றமை அதன் சிறப்பை உணர்த்தும்.

காந்தியடிகள் தம் கருத்துகளை எதிர்த்தோர்க்கு அளித்த விளக்கங்களால் அவை மேலும் விளக்கமுறுகின்றன. வன்முறைக்கு மாறான அன்புநெறியைப் புகட்டும் காந்தியடிகளின் 'இந்திய சுயராஜ்யம்' என்ற நூல், கோகலேயின் நம்பிக்கைக்கு உட்படாததாயினும், காந்தியடிகள் கூறியபடி நம்பிக்கைக்குரியதாக இன்றும் அறிஞரால் ஏற்கப்பட்டுள்ளது. தாகூர் மறுத்துரைத்தாராயினும், ஒத்துழையாமை தீயவிளைவிற்கு இட்டுச்செல்லாமல் உண்மையான, தன்னிச்சையான ஒத்துழைப்பிற்கு வழிசெய்வதே என்பதைக் காந்தியடிகள் நிறுவினார்.

இரவீந்திரநாத தாகூர் நினைப்பதுபோல் நூற்றல், நெய்தல் ஆகியன மேற்கத்திய நாடுகளுக்குத் தீமைதரக்கூடியன அல்ல; கோடிக்கணக்கான இந்திய விவசாயிகளுக்கு வாழ்வை ஒன்றுபடுத்தக்கூடிய குடிசைத்தொழில் இராட்டை என்பதை உணராமல் அந்நியத்துணி விருப்பத்தால் அனுமதிக்கும் பொருளாதாரச் சுரண்டல் ஒழுக்கக் கேடானது என அவருக்கு விளக்கம் கொடுத்தார். கதர் அந்நியத் துணியினும் மிகுந்த விலையுடையதன்று; தன்னலமற்ற தியாக உழைப்பின் சின்னமான கதர் என்றும் நிலைத்திருக்கும் என ஜார்ஜ் ஜோஸப் என்பவருக்குக் கருத்துத் தெளிவித்தார்.

அகிம்சையில் முழுமையான நம்பிக்கையற்றிருந்த நேருவிடம், முதலாளித்துவத்தின் தீமைகள் என்றும் இருந்தே தீரும் எந்திரத் தொழிலால் பலன் இராது என்றும், வருக்கப் போராட்டம் மறையவும் சமநிலைச் சமுதாயம் பெறவும் அகிம்சையே உதவும் என்றும் விளக்கமளித்தார். காந்திய அகிம்சையைத் தாம்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

முழுமையாக ஏற்காவிடினும், அது தம்மை மேன்மேலும் கவர்ந்தது என நேருவும் குறிப்பிட்டார்.

தீண்டாமை விலக்குக் கொள்கையில் தம்மோடு மாறுபட்ட அம்பேத்காரிடம் தீண்டாமைக்கு வேத நூல்களில் ஆதாரம் இல்லை எனவும், தீண்டாதாரை இந்து சமயத்தில் இருத்தியே அவர்களின் இழிநிலைகளைப் போக்க வேண்டும் எனவும், தனித் தொகுதியானது தீண்டாதாருக்குத் தீமை விளைவிக்கும் எனவும் காந்தியடிகள் கருத்து விளக்கம் அளித்தார்.

காந்தியடிகளின் கருத்துரைகளாலும் பிறர்தம் விளக்கங் களினாலும் சுட்டப்படும் காந்தியக் கோட்பாடுகள் படித்தும், வாழ்வில் பின்பற்றியும் நன்னெறியில் உய்வடைய வழிகாட்டியாக அமையும் என்ற நோக்கில் சிறுகதை ஆசிரியர்கள் அவற்றைத் தம் கதைகளின்வழி மேலும் தெளிவுறுத்துகின்றனர்.

1. Pattabhi Sitaramayya, B., *Gandhi and Gandhism (A Study) Volume 1,* P. 37.
2. Diwakar, R.R., 'Truth and Non-violence: New Dimensions', *Mahatma Gandhi 100 Years*, Radhakrishnan, S., (ed.), P.77.
3. Priyaranjan Sen. *Gandhism,* P.1.
4. Sen, N. B., ed., *Wit and Wisdom of Mahatma Gandhi,* P. 106.
5. Priyaranjan Sen, Op. Cit., P.P. 2-3.
6. Rajagopalachari, *Gandhiji's Teachings and Philosophy,* P. 14.
7. Pattabhi Sitaramayya, B., Op. Cit., P. 38.
8. கலியாணசுந்தரனார், திரு. வி., **தமிழ்த்தென்றல்** ப. 282
9. வரதராசன், மு., **காந்தி அண்ணல்,** ப. 49
10. Morarji Desai, 'Gandhi and the Destiny of Man', *Mahatma Gandhi 100 Years,* Radhakrishnan, S., (ed.), P. 67.
11. Pattabhi Sitaramayya, B., Op. Cit., P. 35
12. Giri, V. V., 'Enlightened Path-Finder', *Mahatma Gandhi 100 Years,* Radhakrishnan, S., (ed.), P. 94.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

13. வினோபா, 'சமுதாயப் புரட்சி', உலக இதய ஒலி, டிச. *1970*, ப. *37*.
14. பார்த்தசாரதி, நா., 'காந்தியம் என்னும் பாரம்பரியம்', **உலக இதய ஒலி**, ஜூலை, *1981*, ப. *28*.
15. Radhakrishnan, S., 'Introduction', *Mahatma Gandhi 100 Years,* Radhakrishnan, S., (ed.), P. 3.
16. கலியாணசுந்தரனார், திரு. வி., **மனித வாழ்க்கையும் காந்தியடிகளும்**, ப. *465*.
17. Romesh Diwan Sushila Gidwani 'Elements in Gandhian Economics', *Gandhi Marg,* Aug. 1979, Diwakar, R. R. (ed.). P. 250.
18. Sethi, J. D., *Gandhi Today,* P. 33.
19. குருசாமி, மா. பா., **சர்வோதயம்**, ப. *13*.
20. சத்தியம் அகிம்சை திருடாமை
 நாவடக்கம் சமய சமரசம்
 நித்தியம் உடலுழைப்பு அஞ்சாமை
 நிலையாப் பொருள் சேமியாமை
 எத்தாலும் கீழ்மேல் எண்ணாமை
 புலனடக்கம் சுதேசி என்னும்
 பத்தினொடு சீலம் ஒன்றாம்
 திரிகரணம் பற்றி வாழ்வோம்.
 — **மகாவிரதங்கள்**
21. Communal Unity, Removal of Untouchability, Prohibition, Khadi, Other Village Industries, Village Sanitation, New or Basic Education, Adult Education, Women, Education in Health and Hygiene, Provincial Languages, National Language, Economic Equality, Kisans, Labour, Adivasis, Lepers, Students.
 — Gandhi, M. K., *Constructive Programme-Its Meaning and Place,* Contents.
22. Marni Tata Ramji, *The Concept of Personality in the Educational Thought of Mahatma Gandhi,* P. 122.
23. Diwakar, R. R., 'Truth and Non-violence : New, Dimensions', *Mahatma Gandhi 100 years,* Radhakrishnan, S, (ed.), PP. 77-78.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

24. Priyaranjan Sen, *Gandhism*, P. 4.
25. ராவ், வி.கே.ஆர்.வி., மேற்கத்திய சமதர்மத்திற்கு காந்திய மாற்றுமுறை, குருசாமி, மா.பா.,(மொ.பெ.ஆ.), ப. 53.
26. ஜவகர்லால் நேரு, அச்சம் தவிர்த்த அண்ணல், இராமசாமி, அ ,(மொ. பெ. ஆ), ப 44.
27. மேலது, ப. 78.
28. வேங்கடராஜுலு, ரா., (ப. ஆ.)மகாத்மாகாந்தி நூல்கள், தொகுதி 1, (மொ. பெ. ஆ. பெயர் குறிப்பிடப்படவில்லை) பக். 730-731.
29. Chandran D.S. Devanesan, *The Making of the Mahatma*, P. 372.
30. வேங்கடராஜுலு, ரா., (ப. ஆ), மகாத்மா காந்தி நூல்கள், தொகுதி 5, வேங்கடராஜுலு, ரா,, & திரவியம், கா., (மொ. பெ. ஆ,). ப. 60.
31. Gandhi, M. K., *Young India*, dt. 1-6-1921.
32. Ibid.
33. வேங்கடராஜுலு, ரா., (ப.ஆ.), மகாத்மா காந்தி நூல்கள், தொகுதி 5, வேங்கடராஜுலு, ரா , & திரவியம், கா., (மொ. பெ. ஆ), ப. 60.
34. மேலது, ப. 63.
35. மேலது, ப. 64.
36. மேலது, ப. 174.
37. மேலது, ப. 176.
38. Gandhi, M. K., *Young India*, dt. 19-12-1929.
39. Gandhi, M. K., *Harijan*, dt. 5-12-1936.
40. Ibid., dt. 29-9-1940-
41. Gandhi, M. K., *Harijan*, dt. 13-2-1937.
42. ஜவகர்லால் நேரு, மு. நூ., பக். 15-16.
43. Gandhi, M. K., *Harijan*, dt. 18-7-1936.
44. Ibid, dt. 26-10-1935,
45. Ibid, dt. 22-8-1936.
46. பிரான்ஸிஸ் வாட்சன் & மாரிஸ் பிரௌன், காந்திஜி ஒரு சொற்சித்திரம். ஜானகி, பி. வி., (மொ. பெ. ஆ.), ப. 14.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

1. காந்திவழிக் கதைகளில் சத்தியம்

ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளும் 'காந்திவழிக் கதைகள்' என்ற தொகுப்பு நூலில் உள்ள கதைகளில் காந்தியடிகளின் அடிப்படைக் கொள்கைகளில் ஒன்றான சத்தியம் பற்றிய ஆய்வு முதற்கண் அமைகிறது.

சத்தியம்-வழிவழிப் போற்றப்பட்டமை

பொதுவாகச் சத்தியம் என்பது உண்மை பேசுதல் [அல்லது பொய் பேசாதிருத்தல்] ஆகும். ஆழ்ந்து நோக்கின் உண்மை, வாய்மை, மெய்ம்மை ஆகிய மூன்றுமே சத்தியத்துள் அடங்கும் என்பது புலப்படும்.

சத்தியம் என்பது எல்லாச் சமயங்களும் போற்றிய ஒன்றாகும். அது மலைகளைப்போல் பழமையானது.[1] உள்ளத்தில் உண்மையின் ஒளி வீசுமானால் நடத்தை சிறப்புறும்.[2] நற்பண்புகள் அனைத்திற்கும் அடிப்படையாக அமைகின்ற உண்மையும் நேர்மையும் தனிமனித சமுதாய வாழ்விற்கு ஒரே வகையில் பொருந்தும்.[3]

யூத சமயப் பத்துக் கட்டளைகளில் ஒன்று பொய்ச்சான்று கூறுவதை விலக்குவது.[4] வாழ்க்கையில் உண்மையைக் கடைப்பிடிப்பதும், உண்மை என உணர்வதை வெளியிடுவதில் தயக்கம் கொள்ளாதிருப்பதும் சீரிய தன்மையன.[5] உண்மையே நன்மையைத் தேடுதற்குள்ள அழியாத-அழிக்க முடியாத உயிர்ச்சக்தி எனப் பௌத்தம் இயம்பும்.[6] பொய்யாமை சமண மாவிரதங்களில் ஒன்றாகும்.[7]

சத்தியமே அனைத்திலும் உயர்ந்ததாகவும் சிறப்புடையதாகவும் போற்றப்படுகிறது.[8] தலையாய அறம் என மதிக்கப்படும் சத்தியம், வானுலகை அமைப்பதான பெருமையுடையது.[9]

தமிழ் இலக்கியங்களும் சத்தியத்தின் இயல்பை மாண்புறச் செப்பும். ''வாழ்தல் வேண்டிப் பொய் கூறேன் மெய் கூறுவல்''[10] என்பது சங்கப்புலவர் வாக்கு. வாய்மைக்குத் தனி அதிகாரம்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வகுக்கும் வள்ளுவம், ''பொய்யாமை அன்ன புகழ் இல்லை''[11] எனப்போற்றும். வாய்மையுடைமை வனப்பாகும்''[12] என்பதை ஏற்கிறது திரிகடுகம். ''பொய்ம்மை இகழ்''[13] என அறிவுரை பகர்கிறார் பாரதியார். ''உண்மை வளர்ந்திடாமல் ..... உண்டோ சுதந்திரமோ''[14] என்ற நாமக்கல் கவிஞரின் முழக்கம் உண்மையின் ஆற்றலைப் புலப்படுத்தும்.

சான்றோர்களால் சிறப்பிக்கப்பட்ட சத்தியத்தைப் பெரிதும் மதித்தவர் காந்தியடிகள். ''... சத்தியமே தலையாய தருமம்; அதில் மற்றும் பல தருமங்களும் அடங்கியிருக்கின்றன என்று நான் கருதுகிறேன்''[15] என்று சத்தியத்தின் மீது அவர் கொண்ட ஆழ்ந்த நம்பிக்கையைப் புலப்படுத்துகிறார். மேன்மேலும் அவர் மேற்கொண்ட சத்திய ஆய்வுகள் இந்நம்பிக்கையை உறுதிப் படுத்தின.[16]

சத்தியத்தைத் தம் வாழ்க்கைத் தத்துவமாகக் கொண்ட அவர் கீதையின் அறவுரைகளிலேயே சத்தியத்தின் உண்மைப் பொருளைக் கண்டார்.[17]

சத்தியம்-காந்தியடிகளின் சிறப்பு விளக்கம்

அ. ''சத்தியம் என்பது உண்மை பேசுவதை மட்டுமன்றி, உள்ளத்தில் உண்மையோடு இருப்பது என்பதையும் குறிக்கும். அத்துடன் நமக்குத் தோன்றும் சத்தியத்தை மட்டுமன்றிக் கலப் பற்ற சத்தியமும் நிலைபேறுடையதுமான கடவுளையும் அது குறிக்கும்''[18] என்பது காந்தியடிகளின் கருத்து.

'கடவுள் சத்தியமாவார்' என்று கூறப்படும் கருத்திற்குப் புதிய ஒளி காட்டும் வகையில், 'சத்தியமே கடவுள்' என்று கூறுவது அதிக உண்மையும் பொருத்தமுமாகும். 'சத்' என்பதிலிருந்து வந்த சத்தியம் என்ற சொல்லுக்கு 'இருப்பது' என்பது பொருளாகும். உண்மையைத் தவிர வேறு எதுவும் இருப்பதில்லை.[19] இவ்வாறு சத்தியமே கடவுள் என்று புதிய நோக்கில் கூறுவது அவரது தனித்துவத்தைக் காட்டுகிறது. இவ்விளக்கத்திற்கு உரியவர் அவரே என்பது, ''மற்றவர்கள் கடவுள் சத்தியமாயிருக்கிறார் (God is Truth) என்று குறிப்பிடுகிறார்கள். ஆனால், நான் சத்தியமே கடவுள் (Truth is God) என்று கூறுகிறேன். உண்மைக்கு மறு பெயரே கடவுள்''[20] என்ற அவரது கூற்றால் உணரப்படும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஆ. மேலும், சத்தியம் என்பதற்குப் பொருள் காணும் நிலையிலும் அவரது சிறப்பு அமைகிறது.

''நான் கருதும் சத்தியமோ எது வந்தாலும் வரட்டும் என்று இந்தச் சத்திய விதியைக்கொண்டே நம் வாழ்க்கையை நடத்த வேண்டும் என்பதாகும்''[21] என்ற அவரது விளக்கம் சத்தியம் என்பது, ''கொள்கையில் உறுதியாய் நிற்றல்'' என்பதை உணர்த்தும். இவ்வுறுதியை ''ஆக்கிரக'' என்ற சொல்லால் குறிப்பிட்டுச் சத்தியத்தில் உறுதியாய் நிற்றலையும், சத்தியத்தின் வழி நடத்திய போராட்டங்களையும் சத்தியாக் கிரகம் என்ற சொல்லாலேயே குறிப்பிடுகிறார்.

இ. ''என் வாழ்க்கையிலும் இந்தச் (சத்திய) சோதனை களைத் தவிர வேறு எதுவுமே இல்லை''[22] என்று கூறுமள விற்குத் தம் தனி வாழ்க்கையையும் பொது அரசியல் வாழ்க்கையை யும் அவர் அமைத்துக் கொண்டவர். தம் வாழ்க்கை வரலாற்று நூலுக்குச் ''சத்திய சோதனை'' (My Experiments With Truth) என்றே பெயரிட்டுள்ளார்.

சத்தியக் கொள்கையை இயேசு, புத்தர் போன்ற சான்றோர்கள் தனி மனித அளவில்கடைப்பிடிக்கக்காந்தியடிகளோ தனி வாழ்வில் மட்டுமன்றிப்பொது வாழ்விலும் மேற்கொண்டமை அவரது சிறப்பைத் தெளிவாக்குகிறது.

நாட்டு விடுதலையைக் காட்டிலும் சத்திய நெறிக்கே முதன்மை தரும் அரசியல்வாதியாக விளங்கிய தன்மையே அவரது தனிச்சிறப்பாகும் என்று ரொமெய்ன் ரோலந்து குறிப்பிடுவதும் நினைத்தற்குரியது.[23]

ஈ. நாட்டின் அரசியல் வாழ்க்கை ஊழலற்றதாகி உண்மை யான நலன்கள் வளர்ச்சியடைய வேண்டுமானால் நேர்மை, நியாயம், அறம் முதலியவற்றை உறுதியாக மேற்கொள்ள வேண்டும் என்ற அவரது கருத்து,[24] அரசியல் வாழ்வில் சத்தியத் தின் மதிப்பீட்டை உயர்த்துகிறது. அரசியலில் ஈடுபடுகின்றவர் கள் பின்பற்றவேண்டிய அறநெறிகளை, காந்தியடிகளுக்கு முன்னால் யாரும் வகுத்துக் கொடுக்கவில்லை.[25] அரசியல்வாதி களுக்குச் சத்தியநெறியை அறக் கொள்கையாக வகுத்துக் கொடுத்தமை அவரது தனிச் சிறப்பு.

உ. சத்தியத்தை நாடும் முறையிலும் பிறரினும் வேறுபடு கிறார் காந்தியடிகள். அவர் உண்மையைக் காணுவதற்குமட்டும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

முயலாமல் அதனை அதன் எல்லாவித எதிர்ப்புகளுக்கும் இடையே நிறுவ முயன்றவர். பிறரெல்லாம் துன்புறுவோர்க்காக உண்மையை அறிவதிலும் இரக்கம் கொள்வதிலும் நிறைவடைய அவரோ அப்போராட்டத்தில் இறங்கி அந்த எதிர்ப்புச் சக்தி களுக்கு முடிவு காண முற்படுவார் என்று திவாகர் குறிப்பிடு கிறார்.[26] இவ்வாறு உண்மையை நிலை நிறுத்துவதில் அவரது தனித்துவம் புலப்படுகிறது.

6849

சத்தியத்தின் ஆற்றல்

சத்தியமே வாழ்க்கையின் உயிர்நாடி என்பதைக் கண்டவர் காந்தியடிகள். ''நமது செயல்களெல்லாம் சத்தியத்தை மைய மாகக் கொண்டவையாக இருக்க வேண்டும்... சத்தியம் இல்லாமல் வாழ்க்கையில் எந்த விதியையும் நாம் பின்பற்ற முடியாது.[27] என்றுரைக்கும் காந்தியடிகள் உயிரினும் மேலாகச் சத்தியத்தைக் கருதக் காரணம், எங்கே சத்தியம் இருக்கிறதோ அங்கேதான் உண்மையான அறிவும், அறிவு இருக்குமிடத்தில்தான் ஆனந்த மும் இருக்கும் என்பதைத் தெளிவாக உணர்ந்தமையே.[28]

சத்தியத்தின் தன்மையை அவர் நுட்பமாக ஆராய்ந்தறிந் தவர். ''மிக உறுதியானதால் ஆனதே சத்தியம். உயிரோ உயிர் களோ எவ்வளவுதான் உயர்வானவையாக இருந்தாலும் அவற் றையும்விட உயர்வானதாகவே சத்தியத்தைக் கொள்ள வேண்டும்[29] என்பது அவரது முடிவு.

சமய வாழ்க்கைக்கும் சத்தியத்திற்கும் நெருங்கிய தொடர்பு உண்டு என அறிந்து, சமயத்தின் அடிப்படையே சத்தியந்தான்; சத்தியமே கடவுள் என்றால் அசத்தியத்திற்குச் சமயத்தில் இடமே இல்லை என்கிறார்.[30] சத்தியமின்றிச் சமயம் இல்லை என்பதை விளக்கும் நிலையில் ''சத்தியத்தை நாடுவதுதான் உண்மையான பக்தியாகும். அந்தவழிதான் கடவுளிடம் கொண்டு போய்ச் சேர்க்கக்கூடியது[31] என்ற அவரது கருத்து அமைகிறது.

இம்சை முதலிய சூழல்களிலிருந்து சமுதாயம் உய்வடைய அடிப்படையான அருமருந்து சத்தியம் என்பது அவர் தெளிந்த உண்மை. ''சத்தியத்தில் உறுதியாக நின்றால் மாத்திரமே அகிம்சை முறையில் வாழ முடியும். எனவே, சத்தியத்திலிருந்து தான் அகிம்சையை அடைய முடியும்[32] என்று குறிப்பிடுவது அக் கருத்தை வலியுறுத்த உதவும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மனிதனை ஆற்றல் மிக்கவனாக ஆக்கவல்லது சத்தியமே. ''ஒரு காலத்திலும் தவறாத சத்தியத்தைக் கையாளக் கற்றுக் சொண்டால் எது, செய்வதற்கும் பார்ப்பதற்கும் படிப்பதற்கும் தகுதி வாய்ந்தது என்பதையெல்லாம் நாம் உடனே கண்டு கொள்ளும் ஆற்றல் வாய்ந்தவர்களாக இருப்போம்''[33] என விளக்குகிறார்.

மனித வாழ்வின் வெற்றிக்கு அடிப்படையாக இருப்பது சத்தியம் என்ற உண்மையைக் கண்ட அவர், ''எங்கே சத்தியம் இருக்கிறதோ...... அங்கே மாத்திரம் வெற்றியும் உண்டு''[34] என்று குறிப்பிடுகிறார்.

சத்தியத்தை அடைவதற்கான வழிகளாகக் காந்தியடிகள் கூறுவன

சத்தியத்தை நாடச் சிலரால்தான் முடியும் என்பதைக் காந்தியடிகள் ஏற்றுக் கொள்ளவில்லை. ஒவ்வொருவரும் அவரவருடைய அறிவுக்கு ஏற்பச் சத்தியத்தைப் பின்பற்றுவதில் தவறு எதுவும் இல்லை. உண்மையில் அவ்வாறு செய்வது அவரது கடமையாகும்.[35]

சத்தியத்தை அடைவதற்கு உயர்ந்த மனப்பக்குவம் தேவை என்பது அவரது எண்ணம். ''சத்தியத்தை நாட வேண்டுமானால் அதற்குத் தவம் செய்ய அதாவது துன்பங்களைத் தானே ஏற்று அனுபவிக்கவேண்டும். சில சமயம் மரணம்கூட நேரும் அளவுக்கு நாம் துன்பங்களை ஏற்க நேரிடலாம். கடுகளவு தன்னலத்திற்குக் கூட இதில் இடமில்லை''[36] என்ற அவர்தம் கூற்று அக்கருத்தை உறுதிப்படுத்தும். அம்மனப்பக்குவத்தைப் பெறுவதற்தான வழி இறைவனை வழிபடுதல் ஆகும்.[37]

சத்தியத்தை அடைய விரும்புபவர் உள்ளத்தூய்மை, உண்மையில் உறுதி,[38] பணிவு,[39] அச்சமின்மை[40] ஆகிய சில பண்புகளைக் கொண்டிருக்க வேண்டும். சத்தியத்தைக் கடைப்பிடிப்போர் 'நான், எனது என்பவற்றை நீக்கியவராக இருக்க வேண்டும் என்பன அவர்தம் கருத்துகள். ''மனைவி, மகன், நண்பன், உடைமைகள் சத்தியத்தின் ஆதிக்கத்திற்கு உட்பட்டவையாகவே இருக்க வேண்டும். சத்தியத்தை நாடும் முயற்சியில் இவற்றை அடியோடு தியாகம் செய்யத்தயாராக இருக்க வேண்டும்''[41] என்றும், சத்தியத்தில் மாத்திரமே மனத்தைச்

CC-0, In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

செலுத்துவதாலும் வாழ்க்கையில் வேறு எதிலும் பற்றுதல் வைக்காமல் இருப்பதாலும் இந்தச் சத்தியத்தை அறிந்து கொள்ள லாம் என்றும் குறிப்பிடுகின்றார்.[42]

எந்த வழியிலும் சத்தியத்தை அடைந்து விடலாம் என வழிமுறையைப்பற்றிப் பொருட்படுத்தாமல் இருப்பது தவறு என்பதை மனத்திற்கொண்டு "அகிம்சையின் மூலம்தான் சத்தியத் தைப் பார்க்கவும், அடையவும் முடியும்"[43] எனத் தெளிவுறுத்து கிறார். இலட்சியத்தைப் போல் வழிமுறையும் சிறந்ததாக இருக்க வேண்டும் என்பது அவரது வாழ்வின் அடிப்படைக் கருத்து.

காந்தியடிகளின் வாழ்க்கையில் சத்தியம்

காந்தியடிகள் சத்தியத்தைத் தம் வாழ்வின் இலட்சியமாகக் கொண்டவர். எமிலி ஹாப் ஹவுஸ் என்பவர், "சத்தியத்திற் காக என்றாவது ஒரு நாள் நீங்கள் தூக்கு மேடைக்குப் போக நேர்ந்தால் நான் ஆச்சரியப்படமாட்டேன்"[44] என்று காந்தியடி களுக்கு எழுதியது, அவரது வாழ்க்கையில் பிணைந்த சத்தியத்தின் தீவிரத்தைத் தெளிவாக்கும்.

காந்தியடிகளின் வாழ்க்கையில் உயர்தரப் பள்ளியில் படிக்கும் காலத்தே சத்திய வேட்கையின் உணர்வு உள்ளத்தில் வேரூன்றியிருந்தது. கல்வித்துறை ஆய்வாளர் வந்தபோது அவர் கெட்டில் (Kettle) என்ற சொல்லைத் தவறாக எழுதிவிட, ஆசிரியர் பக்கத்துப் பையனைப் பார்த்து எழுதுமாறு குறிப்புக் காட்டியும் மறுத்துவிட்டார். உண்மை பேசும் பண்பு அவரிடம் சிறு வயதிலேயே இருந்ததைச் சுட்டும் அவர் தமக்கையார், சிறுவர்கள் கோயில் சிலையைத் திருடியபோது மோகன் [காந்தியடிகள்] மட்டும் சிறிதும் அஞ்சாமல் உண்மையை அப்படியே கூறிவிட்டதைக் குறிப்பிடுகிறார்.[45]

மேலும் சிறுவராக இருந்தபோதே அரிச்சந்திரன் நாடகம் பார்த்த அவர், என்ன துன்பம் வந்தாலும் சத்திய வாழ்க்கையே வாழ்வது என உறுதி பூண்டார். "அரிச்சந்திரனைப் போல எல்லோரும் ஏன் சத்திய சீலர்கள் ஆகக் கூடாது? என்று அல்லும் பகலும் என்னை நானே கேட்டுக் கொள்ளுவேன்[46] என்கிறார்.

ஒருமுறை காந்தியடிகள் பள்ளிக்குக் காலதாமதமானதற் குரிய உண்மையை எடுத்துக் கூறியும் நம்பாத தலைமையாசிரியர்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தண்டனை அளிக்க, தண்டனைக்காக வருந்தாத அவர் பொய் கூறியதாக அத்தலைமையாசிரியர் எண்ணியமைக்கு வருந்தினார். இந்நிகழ்ச்சிகள் சிறுவயதிலேயே அவருக்கிருந்த சத்தியப் பற்றை உணர்த்தும்.

தென்னாப்பிரிக்காவில் மாரிட்ஸ்பர்க் என்ற இடத்தில் நிற வெறி காரணமாக இரயிலிலிருந்து தூக்கி எறியப்பட்ட அநீதியை அகிம்சை முறையில் எதிர்க்க முற்பட்டார். வாழ்க்கையில் சத்தியாக்கிரக நெறியில் என்றும் நிற்க இந்நிகழ்ச்சி அடிப்படையாக இருந்தது. தென்னாப்பிரிக்காவில் வழக்கறிஞராக இருந்தபோது பொய் வழக்கை ஏற்றதும் இல்லை. பொய்ச்சாட்சிக்குக் கட்சிக்காரர்களை உருவாக்கியதும் இல்லை என்பதைத் தம் சுயசரிதையில் குறிப்பிட்டுள்ளார்.[47]

தென்னாப்பிரிக்காவில் இருந்தபோது மருத்துவத்தை மேற்கொள்ளும் நிலையில் உப்பையும், பருப்பையும் தவிர்க்கக் கஸ்தூரிபா மறுக்கக் காந்தியடிகளோ தாமே, ஓர் ஆண்டு அவற்றைத் தவிர்க்க உறுதிகொண்டு அதன்படியே செயற்பட்டார். இந்தச் சம்பவத்தைச் சத்தியாக்கிரகத்திற்கு ஓர் உதாரணமாகவே கொள்ள விரும்புவேன்''[48] என்கிறார்.

சத்தியாக்கிரக நெறியைத் தம் வாழ்வில் தம் மனைவி கற்றுக் கொடுத்ததாயும் அவர் கூறுகிறார். ''அவள் [கஸ்தூரிபா] என் விருப்பம் போல் நடக்க இசைய மாட்டாள். அதே சமயம் அதற்காக நான் இழைக்கும் துன்பத்தை எதுவும் பேசாமல் ஏற்றுக் கொள்வாள். இவ்வாறு அகிம்சா தர்மம் போதிக்கும் ஆசிரியை ஆனாள். அவள் கையாண்ட முறையையே சத்தியாக்கிரகம் என்றும் பெயர் கொடுத்து நான் தென்னாப்பிரிக்காவில் கையாண்டேன்''[49] என்கிறார்.

சத்தியத்தின் அடிப்படையில் தென்னாப்பிரிக்காவிலும் இந்தியாவிலும் போராட்டங்கள் பல நடத்தினார்.[50] சத்தியத்தை நாடிச் சத்தியத்தையே மேற்கொள்ளும் ஆசிரமம் அமைத்தார். அவருடைய விரதங்களில் சத்தியத்தை முதலில் சுட்டுகிறார்.

இவ்வாறு வாழ்க்கையின் ஒவ்வொரு செயலிலும் சத்தியத்தை அடிப்படையாகக் கொண்டவர் அவர், அதனால்தான், ''காந்திஜியைப் போன்று சத்தியத்துடன் இணைந்தவர் வேறு யாரையும் நான் பார்த்ததில்லை''[51] என்று நேரு கூறினார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அடுத்து, இந்த ஆய்வுக்கு எடுத்துக்கொண்ட 'காந்திவழிக் கதைகள்' என்ற தொகுப்பு நூலில் உள்ள கதைகளில் சத்தியக் கோட்பாடு பற்றிய ஆய்வு இடம்பெறுகிறது.

சத்தியக் கோட்பாடு அமைந்த கதைகள்

ஆய்வுக்கு எடுத்துக் கொண்ட தொகுப்பு நூலில், சத்தியக் கொள்கையை விளக்க வந்த கதைகள் ஒன்பது. அவை எம். எஸ். கல்யாண சுந்தரத்தின் 'சிறை ஸத் ஸங்கம்', அநுத்தமாவின் 'அண்ணல் காட்டிய வழி', கே. எஸ். ஜம்புநாதனின் 'நெருப்பு', பி. எஸ். ராமையாவின் 'பதச் சோறு', விந்தனின் 'யாருக்குவிரோதி?', பூவை எஸ். ஆறுமுகத்தின் 'சத்தியதரிசனம்', கோவி மணிசேகரனின் 'துணி வெளுக்க மண்ணுண்டு', சோமுவின் 'ஸத்யமேவ ஜயதே', வல்லிக்கண்ணனின் 'சத்திய சோதனை' என்பன.

''சிறுகதைப் படைப்பில் நிலைத்த உணர்வுக்குரிய அடிப்படை கருப்பொருளே''[52] என்பர் அறிஞர் கெம்ப்டன். காந்தியடிகளின் கொள்கைகளால் ஈர்க்கப்பட்ட இக்கதை ஆசிரியர்கள் அவற்றை மக்கள் மனத்தில் நிலைக்கச் செய்யும் அடிப்படையில் கருப்பொருள்களாகக் கொண்டு இக்கதைகளைப் படைத்துள்ளனர்.

சத்தியம் என்பதற்குக் காந்தியடிகள் கண்ட பொருள்களாவன: உண்மை பேசல், உண்மையில் உறுதியாய் நிற்றல், கடவுள் நம்பிக்கை. இவற்றுடன், (சத்தியவாழ்வில் உறுதியாயிருப்போர்) தீமையுடன் ஒத்துழையாதிருத்தல் என்பதும் இக் கதைகளில் விளக்கமுறுகின்றது.

சத்தியம் என்பது உண்மை பேசல் என்ற அடிப்படையில் உண்மையின் சிறப்பை விளக்க வந்த கதைகள் 'நெருப்பு', 'ஸத்யமேவ ஜயதே' என்பன. இக்கட்டான நிலையிலும் உண்மையில் உறுதியாக இருந்து நேர்மைமிகு வாழ்வை மேற்கொள்ளுவதை விளக்குவன 'சிறை ஸத் ஸங்கம்', 'அண்ணல் காட்டிய வழி', 'சத்திய தரிசனம்', 'துணி வெளுக்க மண்ணுண்டு' ஆகியனவாகும்.

தம் குடும்பத்தார் செய்யும் சமூகத் தீமைகளுக்கு ஒத்துழைப்பு நல்காததை விளக்கும் கதைகள், 'பதச் சோறு', 'யாருக்கு விரோதி?', 'சத்திய சோதனை' ஆகியனவாகும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'சத்தியமே கடவுள்' என்ற கருத்து, 'சத்திய தரிசனம்' 'சத்திய சோதனை' ஆகிய இரண்டு கதைகளில் நிகழ்ச்சிப் பின்னலில் மேற்கோளாகச் சுட்டப்படுகிறது.

கதைச் சுருக்கமும் கருவும்

'நெருப்பு' என்ற கதையில் நண்பர்களைத் திரைப்படத்திற்கு அழைத்துச் செல்ல வேண்டும் என்ற உண்மையை அப்படியே கூறியதால் நஞ்சுண்டராவ் என்பவர் ஊதியமில்லாத விடுப்புப் பெறுகிறார். மீண்டும் அதே உண்மையைக் கூறித் திரைப்படச் செலவிற்கு ஐந்து ரூபாய் பெற்றுச் செல்லும் இவரது சத்தியப் போக்கிற்கு இரங்குகிறார் கதை கூறுபவர். 'உண்மை' பலனை எதிர்பார்ப்பதில்லை' என்ற கருவை விளக்குகிறது இக்கதை.

'ஸத்யமேவ ஜயதே' என்ற கதையில் நெய்ச் சாடியைத் தன் தாய் உடைத்ததைத் தந்தையிடம் கூறுவதில்லை என அவளிடம் பொய்ச் சத்தியம் செய்ததற்கு மனம் தவிக்கிறாள் குழந்தை சரோஜா. மறுநாள் தந்தையிடம் தாய் நடந்ததைக் கூறத் தொடங்கியதும் சரோஜா அழுது கொண்டே உண்மையைக் கூறி மனத் தவிப்பு நீங்கப் பெறுகிறாள். பெரியவர்கள் கூறும் பொய் சிறுவர்களைப் பாதிக்கும் என்பதை விளக்கும் இக்கதையின் கரு 'வாய்மையே வெல்லும்' என்பதாகும்.

'சிறை ஸத் ஸங்கம்' என்ற கதையில், 1931-32-இல் வேலூர் சிறையிலிருந்த விடுதலைப் போராட்டக் கைதிகள் மடல் போக்குவரத்து, பேட்டி காணல் முதலிய சலுகைகளைத் தியாகம் செய்ய உடன்படுகின்றனர். அவர்களுள் கொள்கைப்பிடிப்பிலுள்ள வழக்கறிஞர் ஒருவர் தம் மனைவியின் மூன்று மடல்களுக்கும் மறுமொழி அனுப்பாததுடன், அவள் நேரில் வரும்போது பேசவும் மறுக்கிறார். 'சத்தியாக்கிரகி தற்கட்டுத் திட்டத்தில் உறுதியுடன் இருப்பார்'[53] என்ற காந்தியடிகளின் கருத்து இங்குக் கருவாக உள்ளது.

'அண்ணல் காட்டிய வழி'யில் கதையின் தலைவர், தம் நண்பனால் குறித்து வைக்கப்படாத அவனது சீட்டு எண்ணைத் தாம் மட்டும் தெரிந்த நிலையில் அதற்குப் பரிசு விழுந்ததை அறிகிறார். இறக்கும் தறுவாயிலிருக்கும் தம் மகனை மருத்துவரிடம் காட்ட முடியாத ஏழ்மையில், அவர் மனைவி நண்பனுக்குப் பரிசைத்தெரிவிக்க வேண்டாம் எனக் கெஞ்சியபோது,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தமக்கேற்பட்ட சபலத்தையும் வென்று நேர்மையுடன் நண்பனுக்குத் தந்தியடித்து வரவழைக்கிறார். 'உயிரினும் உயர்வுடையது சத்தியம்' என்ற காந்தியடிகளின் கருத்தே இக்கதைக் கருவாகும்.

'சத்திய தரிசன'த்தில் முதலாளி வேணுகோபாலின் பணத்தை வேலையாள் ஞானப்பிரகாசம் கவர நினைத்தபோது, தன் தாய் அதற்காகத் தண்டனை பெறுவதாகக் கனவில் கண்டு மனம் மாறுகிறான். இதற்கிடையில் சத்தியப் பற்றுள்ள அவன் தாய் அப்பணத்தை முதலாளியிடம் கொடுக்கச் சத்தியவாதியான அவளை அவர் பாராட்டி அவனையும் பொறுத்தருளுகிறார். ஞானப்பிரகாசம் தவற்றுக்கு வருந்துகிறான். 'நேர்மையானவன் சலனத்திற்கு ஆளாகினும் மீண்டும் மனம் மாறுவான்' என்பது இக்கதையின் கரு.

குறியிடக்கொணர்ந்த சட்டையிலுள்ள பணத்தை எடுக்கக் கருதிய ஏகாலி ராசாகண்ணு, உடையவரிடம் சேர்க்கச் சொல்லும் மனைவி பொக்கிலையின் நேர்மைப் பண்பால் மனம் மாறி அதனைச் சலவைக் கடைக்காரனிடம் சேர்ப்பிக்கிறான். அவனோ அதனைக் கேளிக்கையில் செலவழித்து நண்பர்களுடன் களிப்பில் ஆழ்ந்தபோது, அப்பணத்திற்குரியவருடைய சேலையைத் தீய்த்து விடுகிறான். சேலைக்குத் தண்டத்தொகை கட்டிய சலவைக் கடைக்காரன் ஏகாலியைப் பாராட்டி அவனுக்கு அச்சேலையைப் பரிசாக அளிக்கிறான். 'துணி வெளுக்க மண்ணுண்டு' என்ற இக்கதையில் 'ஏழ்மை நிலையிலும் சத்திய வழியில் நடப்பதே சிறப்பானது' என்பது கதைக் கருவாகும்.

'பதச் சோறு' என்ற கதையில் 1934-இல் அரிசன நிதி திரட்டத் தமிழகம் வந்த காந்தியடிகளிடம், திருமணத்தின்போதும் நகை அணிவதில்லை எனச் சிறுமி குமுதம் வாக்களிக்கிறாள். திருமணத்தின்போது அவ்வுறுதிக்கு ஒத்துக்கொண்ட அவள் கணவன் பிறகு கள்ளக்கடத்தலில் ஈட்டிய பொருளை நகைகளாக அணியுமாறு வற்புறுத்த, அவளோ அத்தீமைக்கு உடன்படாமல் வாழாவெட்டியாகிறாள். அவள் கணவன் குழந்தையைத் தன்னிடம் தருமாறு வழக்கு மன்ற நடவடிக்கை எடுத்தும் அவள் உறுதியில் தளரவில்லை. இறுதியில் அவளுக்கு ஏற்பத் தீர்ப்பும் அமைகிறது. கணவனும் மனம்மாறி வரக் குடும்பம் இணைகிறது. 'சத்தியத்தில் உறுதியுடையவர் தீமையுடன் ஒத்துழைக்காத நிலையில் தம் வாழ்வையே இழக்கத் துணிவர்' என்பதே இதன் கருப்பொருள்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'யாருக்கு விரோதி?' யில் இளைஞன் நக்கீரன் தன் தந்தை மதுவிலக்கிற்கு எதிராகக் கள்ளச் சாராயம் காய்ச்சி விற்பதை எதிர்க்கிறான். தந்தையிடம் அடிவாங்கிய பின்னும் அவருக்கு அறிவுரை கூறுகிறான். இறுதியில் தீமைக்கு உடந்தையாக இருக்க முடியாத அவன், அவரைச் சட்டத்தின் கரத்தில் ஒப்படைக்கிறான். 'சத்தியப் பற்றுடையவர் தம் குடும்பத்தாரே தவறு செய்தாலும் உடன்படார்' என்பது இதன் கதைக் கருவாகும்.

'சத்திய சோதனை'யில் சதானந்தம், சத்தியப்பற்றால் இல்லத்திற்குரியவர் வரிக்காக வாடகையைக் குறைத்துக் கூறக் கேட்டபோது மறுக்கிறார். அதனால் வீட்டைக் காலி செய்யவும் உடன்படுகிறார். மகள் வாழ்விழப்பாளே என அறிந்தும் கள்ளச் சாராயம் காய்ச்சி விற்கும் அவள் கணவனைச் சட்டத்தின் கையில் ஒப்படைக்கிறார். 'சத்தியத்தில் உறுதியுடையவர் மகள் வாழ்வு பாழடைந்தாலும் தீமையை எதிர்ப்பதற்குத் தயங்கார்' என்பது இக்கதையின் கருவாகும்.

படைப்பு உத்திகள்

சிறுகதைகளில் அவற்றின் கூறுகளாகக் கருப்பொருள் (Theme), கதைப்பின்னல் (Plot), பாத்திரப்படைப்பு (Characterization) முதலியனவும் பிற உத்திகள் (Techniques) போன்றவையும் அமையும். கதைக் கரு கதையினுடைய மையக் கருத்தின் சுருக்கமான ஆனால் முழுமையான கூற்றே ஆகும்.[54] காந்தியக் கொள்கையைக் கருவில் கொண்ட கதைகளில் கருவை வெளிப்படுத்தக் கதைப்பின்னல், பாத்திரப்படைப்பு, பிற திறன்கள் ஆகியன உறுதுணையாக அமைகின்றன.

ஒரு குறுப்பிட்ட கொள்கையை விளக்குவதற்கு இன்றியமையாததாக இருப்பனவற்றுள் கதைப்பின்னலும் ஒன்றாகும். கதைப்பின்னல் என்பது கதை நிகழ்ச்சிகளிடையே விளங்கும் காரண காரியத் தொடர்பைக் குறிக்கும்.[55] கதைப்பின்னலில் அமையும் சிறப்புக்கூறு, போராட்டம் (Conflict) ஆகும்.[56] இப்போராட்டங்கள் அல்லது முரண்கள் மனித உறவினை அடிப்படையாகக் கொண்டு விளங்குகின்றன.

போராட்டங்கள் புறப்போராட்டம், அகப்போராட்டம் என இருவகைப்படும். புறப்போராட்டம் மனிதனுக்கும் மனிதனுக்கும் இடையேயும், மனிதனுக்கும் இயற்கைக்கும் இடையேயும்,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மனிதனுக்கும் சமுதாயத்திற்கும் இடையேயும் நிகழ்வதாக அமையும். அகப்போராட்டம் என்பது கதைப்பாத்திரத்தின் உள்ளத்தில் நிகழும். புறப்போராட்டமானது மனித உறவில் காணப்படும் மோதல்களை மட்டுமன்றி நன்மைக்கும் தீமைக்கும், நல்லுணர்விற்கும் தீயவுணர்விற்கும் இடையே ஏற்படும் மோதல்களையும் சுட்டும்.

சிறு கதைகளில் மிகவும் சிறப்பான கூறு பாத்திரப்படைப்பு ஆகும்.[57] பாத்திரப்படைப்புத்திறன் ஒரு கதையைச் சிறப்பானதாக எடுத்துக்காட்டும் எனலாம். காந்தியக் கொள்கையை விளக்குவதற்குத் துணையாகக் கதை மாந்தர்தம் படைப்பு அமைகிறது. குறிப்பிட்ட கதை மாந்தரின் பண்பு, கூற்று, செயல் ஆகியன காந்திய நெறியில் அம்மாந்தர் அமைகின்ற தன்மையை விளக்கும். ஆசிரியர் கூற்றாலோ பிறமாந்தர்தம் கூற்றாலோ அம்மாந்தரின் தன்மை வெளிப்படுத்தப்படுவதும் உண்டு. கொள்கையை எதிர்ப்பதாகச் சித்திரிக்கப்படும் எதிர்நிலை மாந்தர்கள், ஒரு சில வழிகளில் கொள்கையை உறுதிப்படுத்துவதற்கு உதவுபவர்களாக அமைவதையும் இக்கதைகளில் காணமுடியும்.

சிறுகதைகளில் குறிப்பிட்ட கொள்கையை விளக்குவதற்காக அமையும் பிறஉத்திகளாகக் கொள்கையை விளக்கும் உரை, அணுகுமுறை, தலைப்பு ஆகியன அமைகின்றன.

கொள்கையை விளக்கும் உரைகள் என்பன அறவுரை, பிரசாரம், சிந்தனைக் கிளர்ச்சியுரை ஆகியனவாகும். அணுகுமுறைகளாக நேர்முக முறை (Positive approach) அல்லது எதிர்மறை முறை (Negative approach) ஆகியன உள்ளன. கொள்கை மேற்கொள்ளப்படுவதால் நன்மைகள் விளைவனவாகச் சித்திரிக்கப்படுவது நேர்முக முறை; கொள்கை மேற்கொள்ளப்படாததால் தீமைகள் விளைவனவாகச் சித்திரிக்கப்படுவது எதிர்மறை முறையாகும்.

காந்தியக் கொள்கையை விளக்க உதவும் இத்தகைய உத்திகளைத்தவிரக் கதைகளில் ஆங்காங்கே காந்தியத் தாக்கத்தைப் புலப்படுத்தும் பிற உத்திகளும் இடம்பெறும். அவையாவன: காந்தியடிகளின் கருத்து, கருத்தின்சாரம் அமைதல், அவரது கருத்துச் செயற்படுவதாக அமைதல், அவரது கருத்தை நினைவுபடுத்துமாறு சில நிகழ்ச்சிகளோ கருத்துகளோ அமைதல், அவரது வாழ்க்கை நிகழ்ச்சி இடம் பெறல், காந்தியப் பின்னணி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இடம் பெறல், அவர்தம் புகழ் அல்லது பெருமை போற்றப்படல், அவர்தம் படம் இடம் பெறல், அவருடன் தொடர்புடைய பொருள்களும் போராட்டங்களும் இடம் பெறல், அவருடன் தொடர்பு கொண்ட சமகாலத்தவர்களைக் குறிப்பிடல், காந்தியடிகளைப் பற்றிய நூல்களைக் குறிப்பிடல், அவருடைய பெயரில் அமையும் நிறுவனங்கள் சுட்டப்படல் ஆகிய இன்னோரன்ன உத்திகள் ஆகும்.

கதைப்பின்னலில் கொள்கையைப் புலப்படுத்துதல்

கதை மாந்தர்களிடையே போராட்டம் அல்லது கதை மாந்தர் ஒருவரின் அகமனப் போராட்டம் எனச் சத்தியத்திற்கான போராட்டங்களைச் சித்திரிப்பதே இக்கதைகளில் காணப்படும் கதைப் பின்னல்களுக்கான அடிப்படையாகும். இறுதியில் சத்தியம் வெல்வதாகவே இவை முடிகின்றன.

பாத்திரப்படைப்பு

கற்பவரிடம் உணர்வுகளைத் தூண்டுவதற்கு அடிப்படையாய் இருப்பது பாத்திரப் படைப்பே என்பர் அறிஞர் எல்வுட்[58]. அவரது கூற்றிற்கேற்பக் 'காந்திவழிக் கதைகள்' என்ற நூலில் அமையும் கதைகளில் காந்தியக் கொள்கையைச் சித்திரித்துக் காட்டுமாறு அமைந்துள்ள பாத்திரப்படைப்பு, கற்பவர் காந்தியம் பற்றி அறியவும், அதைப் பற்றிய உணர்வுகளை அவர்பால் தூண்டவும் உதவுகிறது.

கதைகளில் கதைமாந்தரின் பண்பு நலன்களை, அவர்களுடைய சிந்தனை, சொல், செயல் ஆகியவற்றால் அறியக்கூடிய நாடகமுறையும், ஆசிரியர் கூற்றால் அறியக் கூடிய நேரடி முறையும் இடம் பெறும்.[59] நாடக முறையில் குறிப்பிட்ட பாத்திரங்களின் பண்பை அறியப் பிற பாத்திரங்களும் உதவக்கூடும். இக்கதைகளில் இரு முறைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

'நெருப்பு' என்றகதையில் நஞ்சுண்டராவ் தம்மைப்பொறுத்தவரை உண்மையைத்தான் பேசமுடியும் என வாதாடுகிறார். பலனைக் கருதாத அவரது சத்தியப்பண்பு, "என் சம்பந்தப்பட்ட மட்டிலே நான் என்ன ஸார்பண்ணுவது? இல்லாவிட்டால் மூணு நாளைக்குச் சம்பளமில்லாமல் லீவு எடுத்திருப்பேனா?" என்ற அவர் கூற்றின் வழியே உணர்த்தப்படுகிறது.[60] இதே கதையின் கிளைக் கதையில் வரும் காந்திசேட் காப்பிக் கடைக்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

காரரிடம் பெற்ற அதிகத் தொகையைத் திருப்பித் தருவதும், வெற்றிலைக் கடைக்காரன் இழிவுபடுத்தியபோதும் உண்மையை நிலைநாட்டிச் செல்வதும் அவரது சத்தியப்பண்பை உணர்த்தும்.

நஞ்சுண்டராவின் நண்பர், "சத்தியம் பேசவேண்டும். ஆனால், இடமறிந்து பேச வேண்டும்"[61] என்று கூறுவது சத்தியத்தைப்பற்றி முழுமையாக அறியாதவர் அவர் என்பதை எண்ண வைக்கிறது. காரணம், எத்தகைய இடமானாலும் சத்தியமே கைக்கொள்ளக் கூறியவர் காந்தியடிகள். ஆயினும், நஞ்சுண்டராவின் சத்தியப் பிடிப்பைத் தகர்க்க முடியாத நிலையில் கொள்கைப் பிடிப்பை உறுதிப்படுத்தவே இந்நண்பரின் படைப்பு உதவுகிறது.

'ஸத்யமேவ ஜயதே' என்பதில் "கடவுளுக்குப் பொய்னாப் பிடிக்காதுன்னு வாத்தியார் சொல்லியிருக்கிறாரே...... அப்படின்னா கடவுளுக்கு என்னைப் பிடிக்காதா?"[62] என்ற சரோஜாவின் கூற்றுச் சத்தியத்திற்கு மாறான பொய்ம்மையால் அவள் தவிப்பதை உணர்த்தும். தன் தந்தை அம்மாவைச் சினந்தால் தன்னைத் தண்டிக்கும்படி சொல்லிவிட முடிவெடுத்து இறுதியில் உண்மையைக் கூறுவது, காந்திய நெறிக்கு உட்பட்டவளாக அவளைக் காணச் செய்கிறது.

சரோஜாவின் அம்மா "நான் ஒண்ணும் கொட்டலை...... பூனை அதுதான் கொட்டியது"[63] எனச் சாதாரண நிகழ்ச்சிக்குப் பொய் கூறுகிறாள். காந்திய நெறியில் அமையாத இப்பாத்திரப் படைப்பு, சரோஜாவின் மனத்தில் தவிப்பை உண்டாக்கி இறுதியில் அவளை உண்மையில் நிலை நிறுத்தும் வகையில் சத்தியக் கொள்கையை வலியுறுத்த உதவுகிறது எனலாம். இறுதியில் அத்தாயிடமும் மனமாற்றம் ஏற்படுகிறது.

'ஸத்யமேவ ஜயதே' என்ற வாசகத்தை மேன்மையாகக் கருதிய அவள் தாத்தா, சத்தியத்தை மதிக்கும் தந்தை ஆகியோர் படைப்பும் சத்திய உணர்வுள்ள சரோஜாவின் இயல்புக்குப் பரம்பரை வழிகாட்டியாக அமையும் நிலையில் கதைக்குப் பொருத்தமாயுள்ளது.

'சிறை ஸத் ஸங்கம்' என்ற கதையில், சிறையில் சலுகைகளுக்கு இடமளிக்கக் கூடாது என்ற விதியை ஏற்றுக் கொண்ட பிறகு அக்கொள்கைப் பிடிப்பிலிருந்து தவறாதவரான வழக்கறிஞர் "...ஒரு முடிவுக்கு வந்த பின் கசப்போ இனிப்போ அந்த

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

முடிவுப்படிதான் நாம் நடக்க வேண்டும் '' என்று கூறுவது அவரது சத்திய உறுதியைத் தெளிவாக்கும்.

'அண்ணல் காட்டிய வழி' என்பதில் கதைத்தலைவர் ''நான் மட்டும்......அந்தக்கதராடை இளைஞரின் வாக்குப்படி இன்றுவரை எளிய வாழ்க்கையும்நேர்மையுமாக-கண்ணியமாகவாழ்கிறேன்''[65] என்று கூறுவதும் நண்பனுக்கு அவனது பரிசுபற்றித் தெரிவிக்க வேண்டா என மனைவி இரங்கிக் கேட்டும், தந்தி அடித்த பிறகு, ''இதெல்லாம் யோசிக்க நமக்கு நேரமில்லை.குழந்தை உயிருக்கே மன்றாடுகிறான். நாம் அங்குச் சென்றிருந்து ஆண்டவன் பெயரையாவது உச்சரிப்போம்''[66] என்று கூறுவதும் அவரது சத்தியக் கொள்கையின் ஆழத்தைக் காட்டும்.

அவருடைய மனைவி ''இந்தப் பணத்தைப் பெறுவது நமக்கும் பாவமாகாது. குழந்தை பிழைப்பான்''[67] என்று துன்பத்தின் உச்சியினின்று கூறுகிறாள். காந்திய நெறிக்குப் புறம்பான அவளது படைப்பு அவரை மேலும் சத்திய உறுதியில் நிற்கவே துணை செய்கிறது.

'சத்திய தரிசன'த்தில் ஞானப்பிரகாசம் தொடக்கத்தில் நேர்மையுள்ளவனாக இருந்து இடையில் சலனத்திற்கு ஆளாகிப் பிறகு மீண்டும் நல்லவனாகச் சித்திரிக்கப்படுகிறான். செங்கல்பட்டு வியாபாரி சில்லறைப் பணத்தை மறந்தபோது ஓடிப்போய் அழைத்து வந்த அவன், முதலாளியின் பணத்தைக் கண்டபோது நேர்மையிலிருந்து பிறழ்ந்து மீண்டும் நன்னெறிக்கு வருகிறான். ''சத்தியம் என்கிற தெய்வம் எனக்குத் தண்டனை வழங்கிடுச்சு''[68] என்று அவன் கூறுவது சத்தியத்தைத் தெய்வமாக ஏற்ற அவனது மனமாற்றத்தை உணர்த்தும்.

இக்கதையில் வேணுகோபாலின் சத்திய ஈடுபாட்டை, ''எங்க முதலாளி ஐயாவுக்குச் சத்தியந்தான் கடவுள். அந்தச் சத்தியத்தை நம்பி மதிச்சு வழிபட வேணும்னு எங்களுக்கெல்லாம் சதா சொல்லிக் கொடுத்து வராங்க''[69] என்ற அவர் கடைத் தொழிலாளர்தம் கூற்று உணர்த்தும். சத்தியத்தை மதிக்கும் அவரது பண்பு ஞானப்பிரகாசத்தின் மனத்தில் அன்பினால் சத்திய உணர்வை நிலை நிறுத்த உதவுகிறது. ''சத்தியம் தவறாது நடந்தால் நமக்குப் படிஅளக்கத் தவறவேமாட்டானப்பா நம்மைப் படைச்ச ஆண்டவன்''[70] என்ற ஞானப்பிரகாசத்தின்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தாயின் கூற்று அவளது சத்தியப் பற்றைத் தெளிவாக்கும். மகனது நேர்மைக்கு வழிகாட்டியாய் அவளது படைப்பு அமைகிறது.

'துணி வெளுக்க மண்ணுண்டு' என்ற கதையில் எளிய வறுமைச் சூழலிலும் சத்திய வாழ்க்கையே வாழ்பவள் பொக்கிலை. அடுத்தவர் பணத்தை விரும்பும் கணவனிடம் ''...உடையவர் கிட்டே சேர்க்கச் சொல்லுங்க, உங்க மேலே சத்தியமா இந்தப் பணத்தை நான் தொட மாட்டேன்''[71] என்ற அவள் கூற்றால் அதனை அறியலாம். ''இந்தக் காலத்திலே பச்சாத்தாபம், பாவம் இதுகளையெல்லாம் மூட்டை கட்டி வச்சிப்பிட்டாத்தான் பொழைக்க முடியும்''[72] என்று ஆரம்பத்தில் கூறிய ராசாகண்ணு, இறுதியில் மனமாற்றம் அடைவதை, ''நேர்மையின் உருவத்தை அவனுடைய நெஞ்சம் புரிந்து கொண்டதால் நெடுமரம் போல் நிற்கலானான்''[73] என்ற ஆசிரியர் கூற்று உறுதிப்படுத்தும். சலவைக் கடைக்காரன் நேர்மையற்றவனாக அப்பணத்தைச் செலவழித்துத் தண்டனைக்கு ஆளாகி இறுதியில் ராசாகண்ணுவின் நேர்மையை வியந்து தானும் நல்லவனாக மாறுகிறான். அவனது மனமாற்றம் சத்தியத்தின் ஆற்றலை உணர உதவும்.

'பதச் சோறு' என்ற கதையில் நகையணியா விரதத்திற்கு மாறாகக் கள்ளப்பணத்தில் நகை செய்து அணியுமாறு கணவன் வற்புறுத்தும் போது குமுதம், தன்கொள்கைப் பிடிப்பிலிருந்து மாறாமை ''என்ன நேர்ந்தாலும் காந்திக்குக் கொடுத்த வாக்கைக் கைவிடுவதில்லையென்ற உறுதி மாத்திரம்அதிகபலமடைந்தது''[74] என்ற ஆசிரியர் கூற்றால் உணரப்படும். ''குழந்தைக்கு நான் செய்யக் கூடியதை யெல்லாம் நிலமாகச் சீதனம் எழுதி வைக்கப் போகிறேன்''[75] என்ற அவள் தந்தையின் கூற்று, மகள் குமுதத்தின் சத்திய உறுதிக்கு உறுதுணையாக அவரது படைப்பு அமைவதை உணர்த்தும்.

இக்கதையில் காந்தியடிகளையும் ஒரு பாத்திரமாக நடமாடவிடுகிறார் ஆசிரியர். தம்மிடம் நகையைக் குமுதம் அளிக்கும் போது, ''...நீ வீட்டுக்குப் போய் வேறு நகைகள் போட்டுக் கொள்ளக் கூடாது. அதற்குச் சம்மதித்தால்தான் இவற்றை என்னிடம் கொடுக்கலாம்'' [76] என்கிறார். குமுதத்தைக் கொள்கையில் வேரூன்றச்செய்வதற்குக் காரணமானவர் என்ற நிலையில் காந்தியடிகளின் படைப்பை இயல்பாகக் கதையில் இணைத்துள்ளார் ஆசிரியர்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

குமுதம் காந்தியடிகளுக்குக்கொடுத்த வாக்கைக்காப்பாற்றத் தடையாகத் தான் இருப்பதில்லை என்று முதலில் கூறிவிட்டுப் பிறகு வாக்கினின்று தவறும் அவள் கணவன், காந்திய நெறிக்கு எதிரானவனாக அமைகிறான். "...பின்னால் சமயோசிதம் போல நான் அதைப் பணமாக மாற்றிக் கணக்குக்குக்கொண்டு வர வழி செய்து கொள்ளுவேன்"[77] என்ற விளக்கம் அவனது கள்ளத்தனத்தைச் சுட்டும். இறுதியில் மனமாற்றம் அடைந்தாலும் இடையில் காந்தியத்திற்கு முரணான அவன் படைப்பு, குமுதத்தின் கொள்கைப் பிடிப்பை வலியுறுத்த உதவுகிறது எனத் தெளியலாம்.

'யாருக்கு விரோதி?' என்பதில் நக்கீரன், கள்ளச்சாராயம் காய்ச்சும் தன் தந்தையிடம், "இந்த அக்கிரமத்தை நீங்கள் நிறுத்தாதவரை என் உயிரே போவதாயிருந்தாலும் சரி நான் இங்கிருந்து நகர மாட்டேன்"[78] என்று கூறுவது சத்தியத்தில் உறுதியாக நிற்க முயலும் அவனது போக்கை உணர்த்தும்.

நக்கீரனின் தந்தை, "...கள்ளுக்கடையை எடுத்திருக்கிற இந்த நாளிலேதான் நாலு காசு சம்பாதிக்கணும்னு நான் இருக்கேன். அதுக்கு இடைஞ்சலா நீ இருந்தியோ . ... உன்னை என்ன வேணுமானாலும் செய்துப்பிடுவேன் "[79] என்கிறார். இறுதிவரை தீமைக்கு ஆட்பட்டு மனம் மாற்றமடையாத இந்த எதிர்நிலைப் பாத்திரத்தின் படைப்பு, அவரைச் சிறைக்குத் தள்ளவும் தயங்காத அளவிற்கு மகனது கொள்கை உறுதியை உயர்த்த வாய்ப்பளிக்கிறது. சத்திய நெறிக்குப் புறம்பான நக்கீரனின் தந்தை இறுதியில் தண்டனைக்கு ஆளாவதாகக் காட்டும் நிலையில் சத்தியத்தின் மேன்மை உணர்த்தப்படுகிறது.

'சத்திய சோதனை'யில் வரும் சதானந்தம் சிறு வயதிலேயே சத்திய உணர்வு கொண்டவர் என்பது "... சத்தியத்தின் மீது அவன் மிகுந்த பற்றுதல் கொண்டான்"[80] என்ற ஆசிரியர் கூற்றால் புலனாகும். மருமகன் கள்ளச்சாராயம் காய்ச்சும் தீமையை அவர் எதிர்க்க முற்படுகிறார். "வீணனைச் சட்டத்தின் கைகளில் அகப்பட வைத்து...... உரிய முறைகளின்படி ஆவன செய்துவிட்டு அமைதியாக இருந்தார் அவர்"[81] என்ற ஆசிரியர் கூற்று அவரது சத்தியப் பிடிப்பை விளக்கும்.

சதானந்தத்தின் தாய் லட்சுமி அம்மாள் சத்திய வேட்கை உடையவள் என்பது, "பொய் சொல்லக்கூடாது, எப்பொழுதும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சத்தியத்தையே கடைப்பிடிக்க வேண்டும் என்று அவள் தன் மகனுக்கு வற்புறுத்தி வந்தாள்''[32] என்ற ஆசிரியர் கூற்றால் தெளிவுறும். சதானந்தத்தினிடம் சத்திய விதையைஇளமையிலேயே ஊன்றியவள் என்ற வகையில் இப்பாத்திரப்படைப்பு, சிறப்பாக அமைந்துள்ளது.

இக்கதையில் சிறந்த எதிர்நிலைப் பாத்திரமாகச் சதானந்தத்தின் மருமகன் அமைகிறான். கள்ளச்சாராயம் காய்ச்சி விற்க முற்படும் அவன், உடல் உழைப்பின்றிக் குதிரைப் பந்தயம், சூதாட்டம் ஆகிய தீய நடவடிக்கைகளில் ஈடுபட்டவனாகக் காணப்படுகிறான். இறுதிவரை மனமாற்றம் அடையாத இப்பாத்திரப் படைப்பு, சத்தியம் தவறியவர் மேன்மையடைவதில்லை என்பதை உணர்த்துவதற்கும், சதானந்தத்தின் கொள்கையுறுதியை நிலைநிறுத்துவதற்கும் உறுதுணையாக அமைகிறது.

பாத்திரப் படைப்பு-ஒரு மதிப்பீடு

சத்தியத்தை விளக்க வந்த இக்கதைகளுள் சிறந்த பாத்திரப் படைப்புகளாக அருந்தமாவின் கதைத் தலைவர், குமுதம், சதானந்தம் ஆகியோர் அமைகின்றனர்.

'அண்ணல் காட்டிய வழி' யில் வார்தாவில் கல்விபயின்றமையும், கதராடை மனிதர் பயிற்றுவித்தமையும் கதைத் தலைவரின் நேர்மைக்கு வழிவகுக்கின்றன. அந்த நேர்மையால், தாமாக வகுத்துக்கொண்டு வாழும் சத்தியநெறிக்குக் கடுமையான சோதனை ஏற்படும்போது, எவரையும் தடுமாறச் செய்யும் சூழலில் தம் மனப்போராட்டத்தைத் தாமாக வென்று சத்தியத்தின் செம்மையை நிலைநாட்டுகிற அவரது படைப்பு மனத்தைத் தொடுவதாக உள்ளது.

'பதச் சோறு' கதைத் தலைவியின் படைப்பு, தன்னலத்திற்காக வாய்மை தவறும்படி கணவன் வற்புறுத்திய போது, சட்டப்படி வாழ்க்கையுடன் குழந்தையையும் இழக்க நேரிடினும் சத்திய உறுதியினின்று விலக மறுக்கும் பெண்மையின் ஆற்றலை உணர்த்துமாறு உன்னதமானதாக அமைகிறது.

மேற்குறிப்பிடும் இருகதைகளிலும் சத்திய சோதனைகள் இறுதியில் வெற்றியைத் தருவனவாக உள்ளன. ஆயின், 'சத்திய சோதனை' சதானந்தத்திற்குச் சாதாரண வாழ்வில் ஏற்படும் எல்லாச் சோதனைகளிலும் பெரும்பாலும் இழப்பேயெனினும்,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

உள்ளம் தளராமல் மிக இயல்பான அவரது வாழ்வு நெறியாகச் சத்தியம் அமைகிறது. கர்மயோக அடிப்படையில் காந்திய சத்திய நெறியை ஆழமாகவும் நுட்பமாகவும் உணர்த்துகிறது இப்பாத்திரம்.

சத்தியம் என்ற கொள்கையை விளக்கவந்த கதைகளில் பெரும்பாலானோர் சத்திய நெறியில் அமையும் பாத்திரங்களாகப் படைக்கப்பட்டுள்ளார்கள். அக்கொள்கைக்கு எதிராக அமைக்கப் பட்டுள்ளவர்களும் இறுதியில் மனமாற்றமே அடையும் பாத்திரங் களாகவும் சித்திரிக்கப்பட்டுள்ளனர். சத்திய நெறிக்குப் புறம் பானவர்களின் மனமாற்றம் சத்தியக் கொள்கையின் வெற்றியை உணர்த்தும். அவர்களது மனமாற்றத்திற்குப் பயன்படுத்தப்படும் வழி அகிம்சை வழி என்பதும் நோக்கத்தக்கது. அதற்கேற்ப இக் கதைகளில் ஞானப்பிரகாசம், ராசாகண்ணு, சலவைக்கடைக் காரன், குமுதத்தின் கணவன் ஆகியோர் எத்தகைய வன்முறை களோ, பலவந்தங்களோ பயன்படுத்தப்படாத சூழலில் மனம் மாறுகிறார்கள்.

சத்திய நெறியில் மனமாற்றமடையாக் கதைமாந்தர், தீமை யான முடிவுகளை அடைபவர் போல் சித்திரிக்கப்பட்டு மறைமுக மாகக் கொள்கையை விளக்க உதவுகிறார்கள். மனமாற்றம் அடையாத பாத்திரங்களுள் சிலருக்கு எத்தகு முடிவும் சுட்டப் படாத வகையில் அவர்கள் படிப்பவர் மனத்தில் ஆழமாகப் பதியா வண்ணம், கதைகளைப் படித்தபின் அவர்களைப்பற்றிச் சிந்திக்கா வண்ணம் இருக்குமாறு ஓர் அமைப்பைக் காணமுடிகிறது. இத் தகையோர் எங்கேயோ ஒரு சிலர் இருப்பதைப் பொருட்படுத்த வேண்டா என எண்ணுமாறு அவர்களையும் அப்படியே கதைகளில் உலவவிட்டார்கள் என எண்ண இடமுண்டு.

உத்திகள்

கொள்கையை விளக்கும் உரை

'ஸத்யமேவ ஜயதே'வில் ''என்ன கஷ்டம் வந்தாலும் நாம் பொய் சொல்லாமல் இருக்க வேண்டும். நன்மை வரும்போது உண்மை பேசுவது பெரிதில்லையே, கெடுதியே வரும் என்று தெரிந்தாலும் கூட உண்மையே சொல்வதுதான் சிறப்பு''[83] என்பது அறவுரையாக அமைகிறது.

'சத்திய தரிசன'த்தில், ''சத்தியம் தவறாது நடந்தால் நமக்குப் படி அளக்கத் தவறவே மாட்டானப்பா நம்மைப் படைச்ச

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அட்டவணை 1

சத்தியக்கொள்கை-கதைமாந்தர்

எண்.	கதைகள்	சத்திய நெறியில் அமைபவர்	சத்திய நெறியில் அமையாதவர்	தொடக்கத்தில் சத்திய நெறியில் அமையாது இறுதியில் மனமாற்றம் அடைபவர்	தொடக்கத்தில் சத்திய நெறியில் அமைந்து இடையில் பிறழ்ந்து இறுதியில் மனமாறுபவர்
1	'நெருப்பு'	நஞ்சுண்டராவ், காந்தி சேட்ஜி	—	—	—
2	'ஸத்யமேவ ஜயதே'	சரோஜா	—	சரோஜாவின் அம்மா	—
3	'சிறை ஸத் ஸங்கம்'	வழக்கறிஞர்	—	—	—
4	'அண்ணல் காட்டிய வழி'	கதைத்தலைவர், தபஸ்வி	கதைத் தலைவரின் மனைவி	—	—
5	'சத்திய தரிசனம்'	வேணுகோபால், கோசலை அம்மாள்	—	—	ஞானப்பிரகாசம்
6	'துணி வெளுக்க மண்ணுண்டு'	பொக்கிலை	—	ராசாகண்ணு, சலவைக்கடைக்காரன்	—
7	'பதச் சோறு'	குமுதம், தந்தை சிவசங்கரர்	—	ஷண்முகசுந்தரம்	—
8	'யாருக்கு விரோதி?'	நக்கீரன்	நக்கீரனின் தந்தை, கபர்தார் கண்ணாயிரம்	—	—
9	'சத்திய சோதனை'	சதானந்தம், தாயார் லட்சுமி அம்மாள்	மருமகன் முத்துசாமி	—	—

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஆண்டவன்''[84], ''......தப்பு செய்யுறது இயல்பாக இருக்கலாம். ஆனால் மறுபடியும் தப்பு செய்யாமல் (சத்தியம் தவறாமல்) இருக்கப் பழகிக்க''[85] என்பன அறவுரைகளாக உள்ளன.

அணுகுமுறை

உண்மையை மறைத்ததால் நிம்மதியிழந்த சரோஜாவின் உள்ளம், உண்மையைக் கூற மகிழ்ச்சியுறுகிறது ('ஸத்யமேவ ஜயதே'). சத்தியநெறி தவறும்போது துன்புறும் ஞானப்பிரகாசம் அந்நெறியில் நிலைத்திருக்க உறுதி எடுக்கும்போது, அவனிடம் புதிய ஒளி படர்கிறது ('சத்திய தரிசனம்'). நேர்மையில்லாத தம் மருமகன் தண்டனைக்கு ஆளாகச் சதானந்தம் 'சத்திய சோதனை'யில் வெற்றி பெற்றதற்கு, ஆத்ம நிறைவடைகிறார் ('சத்திய சோதனை'). சலவைக் கடைக்காரனின் நேர்மையின்மை அவனது பண இழப்பிற்குக் காரணமாக, ராசாகண்ணு — பொக்கிலை ஆகியோரின் நேர்மை அவர்களுக்கு மனநிறைவை அளிக்கிறது ('துணி வெளுக்க மண்ணுண்டு'). இந்நான்கு கதைகளிலும் எதிர்மறை, நேர்முக முறைகள் இரண்டும் மேற்கொள்ளப்படுகின்றன.

அநுத்தமாவின் கதைத் தலைவருக்குக் கொள்கையுறுதி இதயத்தில் அமைதியையும் ஒளியையும் ஏற்படச் செய்கிறது ('அண்ணல் காட்டிய வழி'). சத்திய உறுதி குமுதத்தின் குழப்பமான மனத்தில் நம்பிக்கை இழை வேரூன்றக் காரணமாகிறது ('பதச் சோறு'). இக்கதைகளில் நேர்முக அணுகுமுறை கையாளப்படுகிறது.

நக்கீரனுக்குத் தந்தை, நேர்மையின்மையால் சிறைத் தண்டனைக்கு ஆளாகிறார் ('யாருக்கு விரோதி?'). இக்கதையில் எதிர்மறை முறை அமைகிறது.

இவ்வாறு சத்தியம் தவறுவதால் விளையும் தீமைகளை விளக்கிக் காட்டியும், சத்திய நெறியில் நிலைத்து நிற்பதால் ஏற்படும் நன்மைகளைச் சித்திரித்தும் கொள்கையின் சிறப்பு உணர்த்தப்படுகிறது.

கொள்கையை விளக்க உதவும் தலைப்பு

ஒரு கதைக்கு ஒரே ஒரு பொருத்தமான தலைப்புத்தான் இருக்க முடியும் என்பர்.[86] அந்தப் பொருத்தமான தலைப்பை அமைப்பதில் கதை ஆசிரியரின் கலைத்திறன் விளங்குகிறது

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

எனலாம். காந்தியக் கொள்கையை வலியுறுத்தும் கதைகளில், கொள்கையை விளக்கும் அடிப்படையில் ஆசிரியர்கள் பொருத்த மான தலைப்புகளை அமைத்துக் காந்தியத் தாக்கத்தை உணர்த்து கின்றனர்.

'ஸத்யமேவ ஜயதே' என்ற தலைப்புக் கருப்பொருளாகிய சத்தியத்தின் உயர்வைச் சிறப்பிக்கும் உபநிடத வாசகம். சத்திய உறுதிக்கு வழிவகுக்கும் ஆன்மீகச் சிந்தனையில் ஈடுபடும் சிறை யிலுள்ளோர்தம் சங்கம் என்ற பொருளில் 'சிறை ஸத் ஸங்கம்' என்ற தலைப்பு அமைகிறது. 'அண்ணல் காட்டிய வழி' என்ற தலைப்பு, அண்ணல் காந்தியடிகள் காட்டிய வழியாம் சத்திய வழியில் இறுதிவரை நிற்கும் கதை மாந்தரின் கொள்கைப் பிடிப்பை உணர்த்துமாறு அமைகிறது. 'துணி வெளுக்க மண்ணுண்டு' என்ற தலைப்பு, பாரதியின் வாசகம். துணியை மண்ணால் தோய்த்துத் தூய்மைப்படுத்தும் சமூகம், தன் மனத்தைத் தூய்மைப்படுத்தக் கருவி இல்லாது இருக்கின்றது. இக்கருத்தை உள்ளடக்கும் அவ்வாசகத்தின் முழுப்பகுதி ''துணி வெளுக்க மண்ணுண்டு, மனம் வெளுக்கச் சாணையில்லையே'' என்பதாகும். அதன் முன்பகுதியைத் தலைப்பாக வைத்துப் பின் பகுதியை உய்த்துணருமாறு செய்துள்ளார் ஆசிரியர்.

'சத்திய தரிசன'த்தில் வேணுகோபால் சத்தியக் காட்சியாக அமையும் காந்தியடிகளின் உருவை நாள்தோறும் கண்டு அவர் வழியில் நடப்பதையும், அச்சத்திய உருவைத் தவறான நோக் குடன் பார்த்து மனம் பாழ்பட்டு ஞானப்பிரகாசம் வருந்துவதையும் நினைவுபடுத்தும் வகையில் அத்தலைப்பு அமைகிறது. கொள்கை யுறுதியின் சாதனையைப் பெண்களும் மேற்கொண்டு வெற்றி யடையலாம் என்பதை உணர்த்தும் குமுதம், சமூகத்தின் பத நிலையை அறிய ஒரு பருக்கையாக அமைகிறாள் என்ற பொருளில் 'பதச் சோறு' உருவகத் தலைப்பாக உள்ளது.

'யாருக்கு விரோதி?' என்ற தலைப்பு, சத்திய வழி தவறுபவர் சமூகத்திற்கும், நீதிக்கும், நேர்மைக்கும் விரோதி என்ற விளக்கத்தை உணர்த்துமாறு வினா வடிவில் அமைகிறது. 'சத்திய சோதனை' என்பது, காந்தியடிகள்தம் வாழ்க்கையின் ஒவ்வோர் அனுபவமும் சத்திய சோதனைக்கு ஆளானது போல் இக்கதைத் தலைவர் சதானந்தத்தின் வாழ்க்கையில் ஏற்பட்ட அனுபவங்கள் ஒவ்வொன்றும் சத்திய சோதனைக்கு ஆளானதைக் குறிக்கிறது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

காந்தியத் தாக்கத்தைப் புலப்படுத்தும் பிற உத்திகள்
வாழ்க்கைச் சாயல் இடம்பெறல்

'சத்திய சோதனை'யில், ''அவருக்கு நல்லாசானாகவும், சிறந்த வழிகாட்டியாகவும், பக்க பலமாகவும் இருந்து வந்தாள்...... பொய் சொல்லக்கூடாது, எப்பொழுதும் சத்தியத்தையே கடைப் பிடிக்க வேண்டும் என்று அவள் தன் மகனுக்கு வற்புறுத்தி வந்தாள்''[97] என்று தாயினால் சதானந்தத்தின் உள்ளம் நன்கு பண்பட்டு வந்ததை ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார். இது காந்தி யடிகளின் தூய்மைக்கு அவர் தாய் காரணமாக அமைந்த சாயலில் உள்ளது. ''என்னிடம் ஏதாவது தூய்மையை நீங்கள் கண்டீர் களாயின் அது என் தாயாரிடமிருந்து எனக்குக் கிடைத்ததே ..''[88] என்ற காந்தியடிகளின் கூற்று நினைத்தற்குரியது. இவ்வாறு காந்தியடிகள் வாழ்க்கைச் சாயலில் கதை நிகழ்ச்சி அமைவதன் வழிக் காந்தியத் தாக்கம் இடம் பெறுகிறது.

காந்தியப் பின்னணி

'நெருப்பு' என்ற கதையின் துணைக் கதையில் வரும் காந்தி சேட், காந்தியடிகள் மேற்கொண்ட சத்தியாக்கிரகத்தால் ஈர்க்கப்பட்டமை சுட்டப்படுகிறது.

'சிறை ஸத் ஸங்கம்' என்ற கதையில் 1931-32 விடுதலைப் போராட்டம் பின்னணியாக அமைகிறது. காந்திய வழியில் விடுதலை கோரும் சிறைக்கைதிகளுள் பலர் பட்டதாரிகள். ஒழுங்கிற்குக் கட்டுப்பட்ட அவர்களது சிறை வாழ்க்கை விளக்கப் படுவதன் வாயிலாக அக்காலக் கட்டத்தில் எப்படிக்காந்தியடிகளின் ஆன்மீகச் செல்வாக்கின் பாதிப்பு, படித்தவர்களிடையே இருந்தது என்பது உணர்த்தப்படுகிறது. இவ்வாறு காந்தியப் பின்னணி இடம்பெறல்வழிக் காந்தியத் தாக்கம் அமைகிறது.

காந்தியடிகளின் வருகை அமைதல்

சில கதைகளில் காந்தியடிகளின் வருகையைச் சுட்டியும், காந்தியடிகளே பாத்திரங்களுடன் உரையாடுவது போல் விவரித்தும் காந்தியத் தாக்கம் உணர்த்தப்படுகிறது.

'சத்திய தரிசன'த்தில் வேணுகோபால் தமிழ் நாட்டுக்கு வருகை தந்த மகாத்மாவைத் திருச்சியில் தரிசித்து வந்தபின் அவர் மனத்தில் காந்தியடிகள் கடவுளுக்கு இணையாக மதிப்பிடத்தக்கவராக அமைகிறார் என்பது, ''வேணுகோபால்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

முதலியார் முருகனையும் காந்திஜியையும் நம்பி, காந்திஜியின் பேரால் சென்னை கொத்தவால் சாவடியில் ஆரம்பித்த மளிகைக்கடை''[89] என்ற செய்தியால் புலனாகும். காந்தியடிகளின் தரிசனம் வேணுகோபாலிடம் ஒரு தாக்கத்தை ஏற்படுத்துகிறது என்பதை அறியலாம்.

'பதச் சோறு' என்பதில் 1934-இல் காந்தியடிகள் தமிழ் நாட்டிற்கு வந்தபோது சிறுமி குமுதத்திடம் உரையாடி நகையணியா விரதத்தை அவளது மனத்தில் பதித்ததைக் குறிப்பிடு கிறார் ஆசிரியர். காந்தியடிகளின் ஆளுமைத்தன்மை எந்த அளவு சிறுவர்களையும் ஈர்த்தது என்பதைக் காட்டி அதன்வழிக் காந்தியத் தாக்கத்தைப் புலப்படுத்துகிறார் ஆசிரியர்.

காந்தியடிகளின் கருத்துகள் மேற்கோளாக அமைதல்

'சத்திய தரிசன'த்தில், ''சத்தியம் என்பது வாய்மை மட்டுமல்ல, உள்ளத்தின் உண்மை ஒளியையும் அது குறிக்கும். சத்தியப் பொருளும் நித்திய தத்துவமுமான இறைவனையும் அது குறிப்பிடும்''[90]; ''சத்தியம் என் தெய்வம், அன்பு எதையும் கொடுக்கவே செய்யும்''[91] என்ற காந்தியத் தத்துவங்களை உள்ளத்தில் நிறுத்தியதாக வேணுகோபால் குறிப்பிடுகிறார்.

'சத்திய சோதனை'யில், ''பொருளாதார நோக்கிலும் மதுக்குடி மனிதரை நன்கு வாழ விடுவதில்லை. அது தனிநபர் வாழ்வையும் குடும்பவாழ்வையும் சிதைத்துச் சீரழித்து விடுகிறது என்று கருதிய காந்திஜியின் சிந்தனை உயர்வைச் சதானந்தம் அனுபவப் பூர்வமாக உணர்ந்து போற்றினார்''[92]; ''கடவுள் சத்தியமயம் (God is truth) என்று எழுதி வந்த காந்திஜி, சத்தியத்தின் மாண்பையும், சக்தியையும் உணர்ந்துகொண்டபிறகு 'சத்தியமே கடவுள்' (Truth is God)என்று எழுத முற்பட்டார்''[93] என்ற பகுதிகளில் காந்தியடிகளின் மேற்கோள்கள் இடம் பெறு வதன் வாயிலாகக் காந்தியத் தாக்கம் புலப்படுகிறது.

காந்தியடிகளின் புகழ் போற்றப்படல்

காந்தியடிகளின் பெருமைகளைப் புகழ்ந்து பேசுவதன் மூலம் காந்தியத்தாக்கத்தைப் புலப்படுத்துவதும் கதைகளில் காணும் மற்றோர் உத்தியாகும்.

'சத்திய தரிசன'த்தில், ''தெய்வம் மனிதனாக வந்து காந்தியாக வாழ்ந்து, 'மானுடம் வென்றது' என்ற உயர்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தத்துவத்தின் சத்திய தரிசனமாக அன்பின் வடிவமாகத் தோற்றம் தந்து கொண்டிருந்த அண்ணலுக்கு அஞ்சலி செலுத்தினார்''[94] என்று குறிப்பிடுவதன் வாயிலாகக் காந்தியடிகளின் ஆளுமையைப் புகழ்கிறார் ஆசிரியர்.

'பதச்சோறு' என்பதில் குமுதம், ''உலகம் முழுவதையும் உய்விக்க வந்த காந்தி......''[95] என்றும், காந்திய சக்தியைக் ''கால வேகம் என்ற மகாசக்தி... , ஆறாயிரம் மைல்களுக்கப் பாலிருக்கிற ஒரு அன்னிய ஜாதியாரின் அடிமைகள் என்று விதிக்கப்பட்டிருந்த நாற்பது கோடி மக்கள் தலையெழுத்தை ஒரே நொடியில் அழித்து அவ்வளவு பேர்களும் சுதந்திரர்கள் என்று எழுதிய சக்தி அது''[96] என்றும் கூறிக் காந்தியடிகளின் ஆளுமைச் சக்தியை உணர்த்துகிறாள்.

'யாருக்கு விரோதி?'யில் நல்லமுத்து, ''......நியாயமாப் பார்க்கப்போனா அந்தக் காந்தி ராசா பேச்சைக் கேட்டு நாமே கள் குடிப்பதை நிறுத்தியிருக்கணும்''[97] எனக்கூறுகிறான். காந்தியடிகளின் மதுவிலக்குப் பிரசாரம் நடுத்தர மக்களை எவ்வாறு மனம் மாறச் செய்தது என்பதை விளக்குவதன் மூலம் காந்தியத் தாக்கத்தை உணர்த்துகிறார் ஆசிரியர்.

காந்தியடிகளின் படம் இடம் பெறல்

'சத்திய தரிசன'த்தில், காந்தியடிகளின் படத்தை வேணுகோபால் கண்டு மனம் நெகிழ்ந்து உருகுவது சித்திரிக்கப் படுகிறது. ''அன்பையும் சத்தியத்தையும் உலகமாகக் கண்டு உணர்ந்து, வாழ்ந்து அமரத்துவம் எய்திய காந்தியடிகள் [படத்தில்] உருவத்தை இமைக்காமல் பார்த்தார். அவர் கண்கள் கசிந்தன''[98] என்ற பகுதி, அன்பையும் சத்தியத்தையும் வாழ்வு நெறியாகக் கொண்ட காந்திய சக்தி அப்படத்தின்வழி அவரிடம் தாக்கத்தை ஏற்படுத்தியதை உணர்த்தும். காந்தியடிகளின் படம் ஞானப்பிரகாசத்தின் மனத்தில் சத்தியத்தை நிலை நிறுத்தும் என நம்பிய வேணுகோபால், மகாத்மாவின் படத்தில் பார்வையைச் செலுத்திவிட்டு, பூச்சரத்தைச் சரிசெய்து விட்டுப் போகுமாறு சொல்லுகிறார். உள்ளன்போடு பார்ப்போரிடம் சத்தியத்தை நிலைநிறுத்தக் காந்தியடிகளின் படம் உறுதுணையாக அமையும் என்பதை அவர் உணர்த்துகிறார்.

இவ்வாறு காந்தியடிகளின் படம் இடம் பெறுவதன் வாயிலாகக் காந்தியத் தாக்கம் அமைகிறது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

காந்தியடிகளுடன் தொடர்புள்ள பொருள்களும் ஊர்களும் இடம் பெறல்

சில ஆசிரியர்கள் காந்தியடிகளுடன் தொடர்புடைய கதர், உபநிடதம், கீதை முதலியவற்றைக் குறிப்பிட்டும் அவர் மேற்கொண்ட நூற்பு, தியானம், இராம நாமம் ஆகியவற்றைச் சுட்டியும், அவருடன் உறவுடைய சில ஊர்களின் பெயர்களைக் கையாண்டும் தம் கதைகளில் காந்தியத் தாக்கத்தைப் புலப்படுத்தியுள்ளனர்.

'நெருப்பு' என்பதில், ''கதர்வேறே போட்டுக்கிட்டாங்க''[99] என்கிறான் கடைக்காரன். சத்தியத்தின் சின்னமாகக் காந்தியடிகள் கருதிய கதரை அணிந்தவர் உண்மையே பேச வேண்டும் என்பதைச் சாதாரணக் கடைக்காரரும் உணர்ந்த நிலை இதனால் தெளிவாகிறது. 'அண்ணல் காட்டிய வழி'யில், ''...அந்தக் கதராடை இளைஞரின் வாக்குப்படி இன்று வரை எளிய வாழ்க்கையும் நேர்மையுமாகக் கண்ணியமாக வாழ்கிறேன்''[100] என்ற பகுதி ஒருவருடைய எளிமை, நேர்மை ஆகியவற்றின் பிரதிபலிப்பாகக் கதர் அமைகிறது என்பதை உணர்த்தும். 'சத்திய தரிசன'த்தில் இடம்பெறுகின்ற ''நெற்றியில் நீறு மணத்தது, உடலில் கதருடைகள் மணத்தன''[101] என்ற தொடர் தெய்வீகத் தன்மைக்கு இணையாகக் கதரைக் குறிப்பிடுவதைச் சுட்டும்.

தம்மிடம் சத்தியப் பற்று ஏற்பட வேத, உபநிடத, கீதை வாக்குகள் துணையாக இருந்தன எனக் காந்தியடிகள் கூறியுள்ளார்.[102] காந்தியடிகளின் உயிர் மூச்சான சத்தியத்தின் ஆற்றலை உணர்த்தும் 'ஸத்யமேவ ஜயதே' என்ற வாசகத்தையுடைய உபநிடதச் சுவடி அக்கதையில் சுட்டப்படுகிறது. 'அண்ணல் காட்டிய வழி'யில் கதைத்தலைவர் தம் மகன் உயிருடன் போராடும் போது கீதையைப் பிரித்து அவனுக்குக் காது கேட்கும்படி படிக்க முற்பட்டதைக் குறிப்பிடுகிறார். இடுக்கண் ஏற்படும் போது துன்பம் தீர்ந்து ஆறுதல் பெறக் கீதை உதவுகிறது[103] என்ற காந்தியடிகளின் கூற்று நினைத்தற்குரியது.

மேலும் நண்பனின் பரிசுச் சீட்டால் மனத்தில் தவிப்பு ஏற்பட்டபோது தவற்றிற்கு ஈடுசெய்ய இராமநாமத்தை உச்சரிக்கிறார் கதைத்தலைவர். தாம் இறக்கும்வரை இராமநாமத்தை உச்சரித்தவர் காந்தியடிகள்.

'சிறை ஸத் ஸங்கம்' என்பதில், கீதை, குரான், உபநிடதம், பைபிள், குறள் முதலியவற்றைச் சத்தியாக்கிரகிகள் சிறையில்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இருக்கும்போது படிப்பதாகவும், பஜனைகள், நூற்பு போன்ற வற்றை மேற்கொள்ளுவதாகவும் சுட்டப்படுகின்றனர். இது, அவர்கள் காந்திய நெறியில் நிற்பவர்கள் என்பதை உணர்த்தும்.

'பதச்சோறு' என்பதில் "..அதற்கு [நகையணியா விரதத்திற்கு] வேண்டிய மனோபலத்தை இந்தக் கீதை ஒன்று தான் உனக்குக் கொடுக்கவல்லது" என்று எழுதி அதன் கீழே 'எம். கே. காந்தி' எனக் கையெழுத்திட்டு அவளிடம் கொடுத்தார்"[104] என்பது சத்திய உறுதியில் நிலைநிறுத்த உதவு வது கீதை என்ற காந்தியடிகளின் நம்பிக்கையை உணர்த்தும்.

காந்தியடிகள் உருவாக்கிய புதுக் கல்வித்திட்டத்தைச் செயற்படுத்தும் பயிற்சிப் பள்ளி வார்தாவில் உள்ளது. 'அண்ணல் காட்டிய வழி'யில் வார்தாவிற்குக் கல்விப் பயிற்சிபெறச் சென்றமையே கதைத்தலைவர் சத்திய நெறியில் நிலைத்திருக்கக் காரணமாயிற்று.

ஒருங்குடன் முடித்தல் என்ற உத்தி பயன்படல்

சத்தியம், அகிம்சை ஆகியவை காந்தியடிகளின் அடிப்படைக் கொள்கைகள் என்றாலும், மனித சமுதாயத்தின் முழுமையான முன்னேற்றத்திற்காகப் பல திட்டங்களையும் செயல்களையும் வகுத்தவர் அவர். ஒரு குறிப்பிட்ட கொள்கையை மட்டும் வலியுறுத்தாமல் பல கொள்கைகளை ஒன்றுடன் ஒன்று இயைபு படுத்திச் செயற்படுத்தியவர் அவர். அதனை உணர்ந்த சில ஆசிரியர்கள், ஒரு குறிப்பிட்ட கொள்கைக் கதையில் வேறு சில கொள்கைகளையும் கதைப் பின்னலில் ஒருங்கே சேர்த்து இயைபு படுத்திக் கதையை அமைத்துள்ளார்கள்.

சத்தியக் கொள்கையை விளக்கவந்த கதைகளில் 'யாருக்கு விரோதி?', 'சத்திய சோதனை' ஆகிய இரண்டிலும் 'மதுவிலக்கு'க் கொள்கையும் இடம்பெறுகிறது. 'யாருக்கு விரோதி?'யில் கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்களுக்குக் காந்திய உணர்வுடையவர்கள் எதிர்ப்பாக இருப்பதும் சுட்டப்படுகிறது. 'சத்திய சோதனை'யில் "குடி மனிதனை எவ்வளவு கேவலமாக ஆக்கிவிடுகிறது ...அதனா லேயே காந்திஜியும் மதுவிலக்கைத் தீவிரமாக ஆதரித்தார்"[105] என்ற பகுதி காந்தியடிகள் மதுவிலக்கைத் தீவிரமாகக் குறிப்பிட்ட தன் காரணத்தை விளக்குகிறது. இவ்வாறு காந்தியடிகளின் பிற கொள்கைகளையும் ஒருங்கே விளக்குவதும் காந்தியத்தை வலியுறுத்தும் உத்திகளில் ஒன்றாக உள்ளது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

காந்தியடிகள் பெயரால் அமைந்தவை இடம்பெறல்

காந்திசேட் ('நெருப்பு'), காந்தி மாளிகை ('சத்திய தரிசனம்'), மோகன் பாபு ('பதச்சோறு') எனக் காந்தியடிகளின் பெயரைத் தொடர்பு படுத்தும் நிலையிலும் காந்தியத் தாக்கம் அமைகிறது.

அடுத்து, ஆய்வுக்குரிய தொகுப்பு நூலில் உள்ள கதைகளின் ஆசிரியர்களால் எழுதப்பட்ட பிறகதைகளில் காணப்படும் சத்தியக் கொள்கை பற்றிய ஆய்வு இடம் பெறுகிறது.

சத்தியக் கொள்கை அமைந்துள்ள பிற கதைகள்

அகிலனின் 'நெல்லூர் அரிசி', 'மந்தையில் ஒரு மனிதன்', சி.சு. செல்லப்பாவின் 'மூன்றாம் முனை', பி. எஸ். ராமையாவின் 'நக்ஷத்திரக் குழந்தைகள்' ஆகியவற்றில் சத்தியக் கொள்கை கருவாக அமைந்துள்ளது. கல்கியின் 'எஜமான விசுவாசம்,' பெ. தூரனின் 'இரவு ஒரு மணி', அகிலனின் 'சிசுவின் குரல்', சி.சு. செல்லப்பாவின் 'மருதநாயகம்', கே. ஜயலக்ஷ்மியின் 'அவனா இவன்?' ஆகியவற்றில் சத்தியக் கொள்கையின் சிறப்புப் பாத்திரங்களின்வழி விளக்கப்படுகிறது. நா. பார்த்தசாரதியின் 'ஊற்றுக்கண்' என்பதில் நிகழ்ச்சிப் பின்னலில் கொள்கை புலனாகிறது. எல்லார்வியின் 'அன்பின் எல்லை' என்ற கதையில் சத்தியக் கருத்துக் குறிப்பில் உணர்த்தப்படுகிறது. 'நெல்லூர் அரிசி'யில் பங்கீட்டுக் கடைக்காரர் செல்லையா, நெல்லூர் அரிசியைக் கள்ளத் தனமாக இலாபத்திற்கு விற்றுவிட்டு வாடிக்கையாளர்களுக்குக் கல்லும் மண்ணும் கலந்த அரிசியை விற்பதை அறப்பாதுகாப்பு அவைச் செயலாளர் கந்தசாமி அறிகிறார். சத்தியத்திற்கு எதிரான தீமையைச் சத்திய சோதனை மூலம் எதிர்க்க வேண்டுகின்ற அவர், அக்கடையில் ஒரு வாரமாவது அரிசி வாங்குவதை நிறுத்தி விடவும் கள்ளத்தனமாக அக்கடையில் வாங்கியவர்கள் மற்றவர்களுக்கு அதைப் பகிர்ந்தளிக்கவும் காந்தியடிகளின் பிறந்த நாளன்று கேட்டதற்கு ஏற்ப எல்லோரும் ஒத்துழைக்க முன் வருகின்றனர்.

'சமுதாயத் தீமையை எதிர்க்கச் சரியான வழி சத்தியப் போராட்டமேயாகும்' என்பது இக்கதையின் கரு. கடைக்காரரின் கள்ளத்தனத்தை உறுதிப்படுத்த முயன்றபின் முடிவுக்கு வரல், போராட்டதின் அறவழியைப் பிறர்க்குக் கூறல், பொதுமக்களின்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

எண்ணத்தை ஒரு சேரத் திரட்டிப் போராடத் தயாராகுதல் ஆகிய அகிம்சைப்போராட்டத்தின் படிநிலைகள்வழிச் சத்தியப் போராட்டம் தொடங்கப்படுவது நோக்கற்குரியது.

'மந்தையில் ஒரு மனிதன்' என்பதில் தேர்வுத்தாளில் மதிப்பெண் போடத்தூண்டும் நாணயமற்ற போக்கு, திரைப்படம், பத்திரிகை, அரசியல், சமயம் ஆகியவற்றில் காணப்படும் இழிநிலைகள் இவற்றிற்காக வருந்துகிறார் கல்லூரி ஆசிரியர் தில்லைநாதன். சுயம்பிரகாசத்தின் மகனுக்குத் தகாதவழியில் மதிப்பெண் போட விரும்பாத அவரது உறுதிப்பாடு வேலையைத் துறக்கவும், மனிதனை உருவாக்கும் கல்வி நிலையத்தைத் திறக்கவும் முற்படுகிறது.

'சத்தியக் கொள்கைப் பிடிப்பில் நின்று மாணவர் அறிவை நன்னெறிப்படுத்துவது சிறப்பானது' என்பது இக்கதைக் கருவாகும். காந்தியடிகளின் ஆளுமைச் சக்தி, வள்ளுவர் வழியில் செம்மைப்பட்டிருந்த தில்லைநாதனின் உள்ளத்தைச் செயற்பட வைக்கும் வகையில் காந்தியடிகளின் படம் இக்கதையில் இடம் பெறுகிறது.

'மூன்றாம் முனை'யில் கட்சி வலுவால் தேர்தலில் வெற்றி பெற்று மக்களை ஏமாற்றிவந்த துரைசாமி நாயக்கர், வீராசாமி நாயக்கர் இருவரையும் எதிர்க்கும் சத்தியாக்கிரகி சத்யநாதன், அவர்களைப்போல் பணத்தையல்லாமல் காந்தியடிகளின் படத்தைக்காட்டித் தேர்தலில் வெற்றி பெறுகிறார். 'அரசியல் பணியானது சத்திய வலிமையால் ஏற்கப்பட்டு மக்கள் நலனுக்காக மேற்கொள்ளப்படுவது' என்பது கதைக்கரு.

" சத்தியம்—அதுதான் இந்தத் தேர்தல்லே செயிச்சிருக்கு ......ஒரே முனைதான் உண்டு. அதுதான் சத்தியம்..."[106] என்று சொல்லிக் கொண்டு காந்தியடிகளின் படத்துடன் தேசக் கொடியைப் பிடித்துக்கொண்டு புறப்படுகிறார் சத்யநாதன். சத்திய முனைப்புடன் மேற்கொள்ளத்தக்கது அரசியல் தொண்டு என்பதை அவர் உணர்த்துகிறார்.

'நக்ஷத்திரக் குழந்தைகள்' என்ற கதையில் விண்மீன்கள் எப்படித் தோன்றுகின்றன என்று வினவும் குழந்தை ரோஹிணியிடம் ஒவ்வொரு தடவையும் சத்தியத்தைப் பேசுவதால் ஒரு விண்மீன் பிறக்கிறது என்கிறார் தந்தை சோமசுந்தரம். ஒரு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நாள் ஒரு விண்மீன் கீழே விழ, அசத்தியம் நிகழ்ந்ததே எனக் குழந்தை வருந்துகிறது. 'உண்மை வேரூன்றுவதற்கான முதலிடம் இளமை உள்ளம்' என்பது இக்கதைக் கரு.

எல்லோரும் உண்மை பேசினால் அதிக அளவு விண்மீன்கள் பிறக்குமே என வியக்கும் அக்குழந்தையின் உள்ளத்தில் எல்லோரும் உண்மை பேசுபவர்களாக ஆகிவிடக் கூடாதா என்ற உணர்வின் ஏக்கமிருப்பதை உணர்கிறோம். ''அரிச்சந்திரனைப் போல எல்லோரும் ஏன் சத்திய சீலர்களாகக் கூடாது?[107] எனக் காந்தியடிகளின் இளமைப்பருவத்தே அவருக்கு ஏற்பட்ட ஏக்கத்தை இந்நிகழ்ச்சி நினைவுபடுத்துகிறது.

'எஜமான விசுவாசம்' என்ற கதையில் மோகன் என்பவர் நடத்தும் பங்குச் சந்தை தீப்பற்றி எரிய, காவல்காரர் வீராசாமி [வேலையிலிருந்து நீக்கப்பட்ட நிலையிலும்] உண்மையோடு முதலாளிக்கு உதவ எண்ணித் தீயணைக்க உதவுகிறான். இக்கதையில், காந்தியடிகள் வாழ்ந்த காலத்தில் சத்திய உணர்வுள்ள ஒரு சாதாரணக் குடிமகனின் நேர்மையைச் சித்திரிக்கிறார் ஆசிரியர். ''எசமான் நம்மை மறந்தாலும் நாம் மறக்கக் கூடாதுன்னு ... உடனே போலீஸ் ஸ்டேஷனுக்கு ஓடினேனுங்க''[108] என்ற வீராசாமியின் கூற்று அவனது நேர்மையை விளக்க உதவும்.

'இரவு ஒரு மணி' என்பதில், புரட்சி இயக்கத்தில் சேராத சீனிவாச நாயுடுவை அதனைச் சார்ந்தவர் எனத் துன்புறுத்தும் வட்டாரக் காவல்துறை அதிகாரி, அவருடைய சில மடல்களை வைத்துக்கொண்டு பணம் கேட்க, அதற்குப் பணிய மறுத்து அவர் சிறைக்குச் செல்லவும் முற்படுகிறார்.

காந்தியடிகளின் அகிம்சைத் தத்துவமே சுயராஜ்யம் அடையும் வழி என்ற கொள்கையை ஏற்றவர் சீனிவாச நாயுடு என்று குறிப்பிடுவது அவரது காந்தியப்பற்றைக் காட்டும். ''பத்தாயிரம் ரூபாய் என் தந்தையால் கொடுக்க முடியும். ஆனால், அவர் இப்படி அநியாயமாக ஒரு காசு கொடுக்கவும் மறுக்கிறார். வழக்கில் சம்பந்தப்படுத்தினால் சிறைக்குப் போகத் தயார் என்று பிடிவாதமாகக் கூறிக்கொண்டிருக்கிறார்''[109] என்று அவருடைய மகள் கூறுவது காந்தியவாதியான அவரது கொள்கைப் பிடிப்பை விளக்குகிறது.

''சத்தியத்தை நாடும் முயற்சியில் குடும்பத்தை அடியோடு தியாகம் செய்யத் தயாராக இருக்க வேண்டும்'' என்ற காந்தி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

யடிகளின் கருத்துக்கு[110] ஏற்பச் 'சிசுவின் குரல்' என்பதில் கருவுற்ற மனைவியையும் நீங்கிச் சிறையில் சித்திரவதைக்கு ஆளாகிறார் ஒரு சத்தியாக்கிரகி.

''.. அவர் இந்த நாட்டை விடுவிக்க வெள்ளைக்காரனை எதிர்த்து உண்மையைச் சொன்னதற்காகச் சிறைக்குப் போனார்''[111] என்று அவர் மனைவி கூறுவது சத்தியத்தைக் காக்க மனைவி மக்களைப் பொருட்டாகக் கருதாத அவரது மனநிலையைக் காட்டும்.

'மருதநாயகம்' என்பதில் ஆத்ம சக்தி [சத்தியத்தின் சக்தி] யின் நம்பிக்கையில் காந்தியடிகளின் கட்டளைப்படி சிறைக்கு வந்த மருதநாயகம், அங்கு 'சி' வகுப்பிலிருந்து 'ஏ' வகுப்பிற்கு மாற்றப்பட்டதற்கு வருந்துகிறார். ''.. உண்மையான ஆனந்தத்திற்குச் சிறந்த வழி ஒருவருடைய நாட்டிற்காக ... சிறைக்குச் சென்று அங்கே துன்பங்களையும் துயரங்களையும் அனுபவிப்பது தான்''[112] என்ற காந்தியடிகளின் கருத்தின்வழி, சிறைத் துன்பங்களை ஏற்பதற்கு வந்த தமக்குத் தம் ஊரார் உயர்தர வகுப்பிற்கு முயற்சி செய்ததை அவர் விரும்பவில்லை. ''தம் ஜீவித லட்சியத்திலேயே ஒரு நிரந்தரக் கறைபடிந்து விட்டதாக அவர் உள்ளம் நொந்ததை முக அவஸ்தையிலிருந்து சுளுவாக அறிய முடிந்தது''[113] என்ற கூற்று, சத்தியத்திற்கு ஏற்பட்ட களங்கத்திற்காகத் தவித்த அவரது மனத்துடிப்பை உணர்த்தும்.

'அவனா இவன்?' என்ற கதையில் ரவி என்ற சிறுவன் காந்திக் கதைகள் படித்ததன் விளைவாக நேர்மையைக் கடைப்பிடிப்பவனாகச் சித்திரிக்கப்படுகிறான். தான் நேர்மையுடன் இருப்பதுமட்டுமன்றி நேர்மையற்ற தன் சகோதரன் விசுவும் நல்லவனாக மாறவேண்டும் என்ற உணர்வில் அந்நூலை அவனுக்கு அளிக்கிறான். காந்தியடிகளைப் பற்றிய நூல் சிறுவர்களை நன்னெறியில் நிறுத்த உதவும் என்பதை உணர்த்த 'ரவி' என்ற பாத்திரம் உதவுகிறது.

'ஊற்றுக்கண்' என்ற கதையில் அமையும் ஒரு நிகழ்ச்சி காந்தியடிகளின் வாழ்க்கை நிகழ்ச்சியை ஒத்திருக்கிறது. சிறு வயதில் 'கெட்டில்' என்ற சொல்லைத் தவறாக எழுதியதைக் கண்ட ஆசிரியர் அடுத்தவனைப் பார்த்து எழுதக் கூறியும் உடன் படாத காந்தியடிகளைப்போல், இக்கதையில், கல்லூரி வெண்பாப் போட்டியில் கலந்து கொண்ட கந்தசாமியைத் தம் வீட்டிற்கு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வந்து 'சீரை' மாற்றி எழுதினால் பரிசு கிடைக்கும் என்று ஆசிரியர் கூறியும் அவன் மறுத்துவிடுகிறான். இந்நிகழ்ச்சி அவனது சத்திய உணர்வைப் புலப்படுத்தும்.

'அன்பின் எல்லை' என்ற கதையில் இடம்பெறும் காந்தி மகான் உயர்நிலைப்பள்ளி, சத்தியத்தைக் குறிப்பால் உணர்த்த உதவுகிறது.

இக்கதைகளால் அறியப்படுவன

சத்தியக் கொள்கையை விளக்க வந்த இக்கதைகளால் சில உண்மைகள் அறியப்படுகின்றன.

1 சத்திய உணர்வு மனித குலத்திற்கு இயல்பாக இருப்பது.

இயல்பாகவே மனிதன் நல்லவன் என்பதில் காந்தியடிகள் நம்பிக்கை கொண்டவர்.[114] அவரது நம்பிக்கைக்கு ஏற்ப உண்மையை உயர்வாக மதித்து என்றும் உண்மையே மொழிதல், உண்மையுடன் வாழ்தல் என்பன தொன்றுதொட்டு மனிதர்களிடம் காணக் கூடியவை, சத்தியக் கொள்கையை விளக்க அமைந்த கதைகளுள், 'நெருப்பு', 'துணி வெளுக்க மண்ணுண்டு', 'சத்திய தரிசனம்' ஆகியவற்றில் சத்திய உணர்வு, மனிதரிடம் இயல்பாக அமைந்தமை சித்திரிக்கப்பட்டுள்ளது.

2. மக்களிடம் அவ்வுணர்வு தூண்டப்படக் காந்தியச் செல்வாக்கு உதவுகிறது.

சத்தியக் கொள்கையை விளக்க அமைந்த பெரும்பாலான கதைகளில் கதை மாந்தர் சத்தியத்தில் வேரூன்றுவதற்கான மனவளம் பெறவும், கொள்கைப் பிடிப்பில் மேலும் உறுதியான மனநிலை அடையவும் காந்தியச் செல்வாக்கே காரணம் என்பதை ஆசிரியர்கள் புலப்படுத்தியுள்ளனர்.

காந்தியடிகளின் செல்வாக்கு, கதைமாந்தரிடையே பல்வேறு வகைகளில் ஏற்பட்டமை தெளிவாகிறது. காந்தியடிகளைப் பார்த்த மாத்திரத்திலேயே பலர் அவர்பால் ஈர்க்கப்பட்டனர். அவருடன் உரையாடி உறுதிமொழி அளித்தவர் சிலர். அவருடைய சிறப்பையும் அறவுரைகளையும் பிறர்வாயிலாகக் கேட்டு அவர்வழி நிற்கத் தொடங்கியவர் சிலர். மேலும் சிலர், அவருடைய நிருமாணத் திட்டத்தாலும், அவர்தம் வாழ்க்கை முறையாலும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கவரப்பட்டனர். சிலர் காந்தியடிகளின் நிறுவனங்களில் பெற்ற கல்விப் பயிற்சியால் உருவாயினர். சிலர் காந்தியடிகளைப்பற்றிய நூலைப் படிப்பதாலும் சத்தியத்தில் தவறாது நிற்கின்றனர். அவர் மேற்கொண்ட விடுதலைப் போராட்டங்கள் போன்ற செயல் திட்டங்களால் ஈர்க்கப்பட்டவர் பலர்.

காந்தியடிகளின் வருகையின்போது அவரைப் பார்த்தபின் சத்தியத்தை மதித்து வாழ முற்படுகிறார் வேணுகோபால் ('சத்திய தரிசனம்'). காந்தியடிகளின் நேரிடையான உரையாடலின்போது, அவரிடம் வாக்களித்தநற்கேற்பக் கொள்கையுறுதி கொள்ளுகிறாள் குமுதம் ('பதச்சோறு'). தமது சத்தியப் பண்பைத் தாயின் அறவுரையால் உணர்ந்த சதானந்தம் கொள்கைப் பிடிப்பில் வாழ்வு நடத்துகிறார் ('சத்திய சோதனை'). காந்தியடிகளின் சத்திய விளக்கத்தை முதலாளி எடுத்துரைக்க ஞானப்பிரகாசம் சத்திய உறுதியெடுக்கிறான் ('சத்திய தரிசனம்').

''காந்தி ராசா புண்ணியத்தால்தான் மதுவிலக்குச் சட்டம் அமுலுக்கு வந்து விட்டதே''[115] என்று காந்தியடிகளின் திட்டத்தால் ஈர்க்கப்பட்ட நக்கீரன் நேர்மைப் பண்பிற்குச் சிறப்பிடம் நல்குகிறான் ('யாருக்கு விரோதி?'). காந்தியடிகளின் வாழ்க்கை முறையால் தூண்டப்பட்டு ஆசிரமம் அமைத்து அவரது நிருமாணத் திட்டத்தைச் செயற்படுத்தும் சத்யநாதன் சத்தியத்தில் தளராத நம்பிக்கை கொள்கிறார் ('மூன்றாம் முனை'). வார்தாவில் காந்தி நிறுவனத்தில் பயிற்சி பெற்ற அநுத்தமாவின் கதைத் தலைவர், கொள்கை ஆழமுடையவராகத் திகழ்கிறார் ('அண்ணல் காட்டிய வழி'). காந்திக் கதைகள் என்ற நூல் ரவி என்ற சிறுவன் நேர்மையுடன் வாழக் காரணமாகிறது ('அவனா இவன்?').

இவர்களைத்தவிரக் காந்தியடிகளின் விடுதலைப் போராட்டத்தால் கவரப்பட்டு அதில் ஈடுபட்ட காந்திசேட், ''...காந்தி பக்தர். அவர் பொய் பேசமாட்டார்''[116] என்ற முத்திரை பதிக்கப்பெறுகிறார். மேலும் அப்போராட்டங்களில் ஈடுபட்டவர்கள், என்றும் சத்தியத்தில் நிலைநின்று தம் உடல், பொருள், ஆவி அனைத்தையும் துறக்கவும் முற்படுகின்றனர். அவ்வகையில் சிறைத்துன்பங்களைச் சத்தியாக்கிரகிகள் நேர்மையுடன் ஏற்கின்றார்கள் ('சிறை ஸத் ஸங்கம்', 'மருதநாயகம்'). உண்மையை நிலைநாட்டச் சிறைத் துன்பத்தை ஏற்பதில் உறுதியாய் இருக்கின்றார் ஓர் ஏழை ஆசிரியர் ('சிசுவின் குரல்').

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இவ்வாறு பல்வேறு வகைப்பட்ட மக்களும் சத்திய வாழ்வு வாழ உதவியது காந்தியச் செல்வாக்கு.

3. சத்தியக் கொள்கையைத் தனிமனித சமுதாய நிலைகளில் நடைமுறைப்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

காந்தியடிகள் இலட்சியங்களை வாயளவில் பேசுபவர் அல்லர். தம் கொள்கைகளை நடைமுறை வாழ்வில் கடைப் பிடித்தவர்.[117] அதுபோல் இக்கதைகளில் சத்தியக்கொள்கையை வெறும் இலட்சிய அறவுரைகளாகமட்டும் சுட்டாமல், சமுதாய வாழ்வில் சாதாரண மக்களால் நடைமுறையில் கடைப்பிடிக்க இயலும் என்பதை ஆசிரியர்கள் உணர்த்தியுள்ளனர்.

தந்நல நோக்குடன் ஆடம்பர வாழ்வில் மூழ்கித் திளைக்கப் பலர் விரும்பும் இன்றையச் சூழலில் மகன் உயிர் ஊசலாடும் நேரத்திலும் ஒருவர் ('அண்ணல் காட்டியவழி') உண்மைப் பிடிப்பிலிருந்து பிறழ விரும்பாது வாழ்ந்து காட்டுகிறார். சத்தியமே கடவுள் என மதித்து நாணயத்துடன் மளிகைக் கடை நடத்தி வருகிறார் வேணுகோபால் ('சத்திய தரிசனம்'). வாழ்வையே இழக்க நேர்ந்தாலும் காந்திய வழியில் சத்தியத்தில் உறுதியாக இருந்து வாழ்ந்து காட்டுகிறாள் குமுதம் ('பதச் சோறு'). காந்தியத்தில் தோய்ந்த மனிதர் ஒருவர் ('இரவு ஒரு மணி') மேலலுவலர் தமக்குத் தண்டனையே தருவதாக இருந்தாலும் உண்மைப்பிடியில் நிலைத்து நிற்கிறார். காந்தியப் பணிகளை மூச்சாகக் கொண்ட சத்யநாதன், தந்நலவாதிகளை எதிர்த்துச் சத்திய வலுவில் தேர்தலில் வெற்றி பெறுகிறார் ('மூன்றாம் முனை').

நடைமுறை வாழ்வில் செயற்படுத்தப்படுவதற்குரிய சத்தியக் கொள்கை, இவ்வாறு தனிமனித அளவில் மட்டும் நின்றுவிடாமல் சமூகத் தீமைகளை எதிர்க்கவும் உதவுவதாய் உள்ளது. அந்நிலையில் தீமை செய்யும் தம் குடும்பத்தினரையும் எதிர்த்துக் காந்தியடிகளின் செல்வாக்கால் தம் உள்ளங்களில் பதிந்த சத்தியம் ஒளிர வாழும் ('யாருக்கு விரோதி?', 'பதச் சோறு', 'சத்திய சோதனை') மக்களையும் இக்கதைகளில் காணமுடிகிறது. அதுமட்டுமன்றிக் காந்தியத் தாக்கம் பெற்ற மாந்தர்கள் சமுதாய வாழ்வில் பிறர்செய்யும் தீமைகளைக் காந்தி வழியில் எதிர்க்க

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

முற்பட்டுச் செயற்படுகின்றனர் ('நெல்லூர் அரிசி', 'மந்தையில் ஒரு மனிதன்').

4. காந்தியத்தை இளம் உள்ளங்களில் பதிப்பது சத்தியம் வேரூன்ற உதவும்.

இக்கதைகளை ஆழ்ந்து நோக்கும்போது, சட்டம் போடுவதாலேயோ வன்முறைகளைப் பயன்படுத்துவதாலேயோ சத்தியக் கொள்கையைத் தனிமனிதனிடம் வேரூன்றச் செய்திட முடியாது என்பதையும், இளமையிலேயே பிஞ்சு உள்ளங்களில் பசுமரத்தாணி போல் சத்திய உணர்வைப் பதிக்கச் செய்திட முடியும் என்பதையும் அறியலாம். அந்த இளம் உள்ளங்கள் காந்தியடிகளின் சத்திய வாழ்க்கை நிகழ்ச்சிகளாலோ காந்தியடிகளின் பிற செல்வாக்கின் தாக்கத்தாலோ சத்தியக் கொள்கையின் இன்றியமையாமையைப் பதித்துக்கொள்ளுகின்றன. ''நான்...வார்தாவுக்குப் போனேன்... பயிற்சி பெற்றேன்'';[118] ''...மிகமிக விரைவில், காந்தியைச் சந்தித்த பின் உள்ளூர வளர்ந்து ஒரு பக்குவ நிலையை ஏற்றி...'';[119] ''காந்தி மகாத்மா என்னைக் காப்பாற்றிடுவாருங்க'';[120] ''...அவள் காந்திஜியை அடிக்கடி உதாரணமாகக் காட்டி வந்தாள்''.[121]

இவை அனைத்தும் மனிதனின் இளமைப் பருவத்தே சத்தியம் வேரூன்றக் காந்தியச் செல்வாக்குக் காரணமாக அமைவதைத் தெளிவாகக் காட்டி நிற்கின்றன.

குறிப்புகள் :

1 Gandhi, M.K., *Harijan*, dt. 28-3-1936.
2 ஸ்ரீகிருஷ்ணதத்தபட், (தொ. ஆ.), **சீனசமயங்கள்**, *ப. 3.*
3 மேலது, ப.55.
4 ஸ்ரீகிருஷ்ணதத்தபட், (தொ.ஆ), **யூதசமயம்**, *ப.23.*
5 ஸ்ரீகிருஷ்ணதத்தபட், (தொ.ஆ.), **கிறிஸ்துவம்**, *ப.15.*
6 திருகூடசுந்தரம், பொ., **பாபுஜி காட்டும் பாதை**, *ப.44.*
7 வேங்கடசாமி, மயிலை. சீனி., **சமணமும் தமிழும், முதற்பகுதி**, *ப.18.*
8 ஸ்ரீகிருஷ்ணதத்தபட், (தொ.ஆ.), **பார்ஸி சமயம்**, *ப.48.*

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

9 ஸ்ரீகிருஷ்ண தத்தபட், (தொ.ஆ.), **இந்துமதம் : புராணங்கள்**, ப.*23*

10 **புறநானூறு**, *139*.

11 **திருக்குறள்**, *30.6*.

12 **திரிகடுகம்**, *78*.

13 திருநாவுக்கரசு, ஏ., (ப.ஆ.), **பாரதியார் கவிதைகள்** புதிய ஆத்திசூடி, *73*.

14 தணிகை உலகநாதன், (தொ.ஆ.), **நாமக்கல் கவிஞர் பாடல்கள்**, *186*.

15 மகாத்மா காந்தி, **சத்திய சோதனை**, வேங்கடராஜுலு, ரா., (மொ. பெ. ஆ), முன்னுரை, ப. VIII.

16 வேங்கடராஜுலு ரா., (ப.ஆ,), **மகாத்மா காந்தி நூல்கள், தொகுதி 10.** ஜெயமணி சுப்பிரமணியம், (மொ.பெ.ஆ.), ப. *303*.

17 Gandhi, M.K., Young India, dt. 12-2-1925.

18 Gandhi, M.K., *An Autobiography*, Mahadev Desai, (Tra.): Introduction, P. XI.

19 Gandhi, M.K., *From Yeravda Mandir*, Valji Govindji Desai, (Tra.), P.1.

20 Prabhu, R. K. and Rao, U.R., (ed.), *The Mind of Mahatma Gandhi*, P.51.

21 வேங்கடராஜுலு, ரா., (ப.ஆ.), **மகாத்மா காந்தி நூல்கள், தொகுதி 8**, வேங்கடராஜுலு, ரா., ஜெயமணி சுப்பிரமணியம், (மொ.பெ.ஆ), ப. *119*.

22 மகாத்மா காந்தி, **சத்திய சோதனை**, வேங்கடராஜுலு ரா.. (மொ.பெ.ஆ.), ப. முன்னுரை, VI.

23 ரொமெய்ன் ரோலந்து, **வாழ்விக்க வந்த காந்தி**, ஜெயகாந்தன், (மொ.பெ.ஆ.), ப. *34*.

24 Gandhi, M.K., *Young India*, dt. 14-1-1920.

25 குருசாமி, மா. பா., **காந்தியடிகளும், கார்ல் மார்க்சும்** ப.*35*.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

26 Diwakar, R. R., 'Truth and Non-violence' New Dimensions' *Mahatma Gandhi 100 Years*, Radhakrishnan, S., (ed) P. 80.

27 மகாத்மா காந்தி, சத்தியமும் கடவுளும், பிரிஜ் கிருஷ்ண சாந்திவாலா, (தொ.ஆ.), ப.11.

28 Gandhi, M.K., *From Yeravda Mandir*, Valji Govindji Desai, (Tra) P. 1.

29 Gandhi, M.K., *Harijan*, dt. 18-3-1933.

30 Ibid.

31 Gandhi, M.K., *From Yeravda Mandir*, Valji Govindji Desai, (Tra.), P. 3.

32 Gandhi, M.K., *Harijan*, dt. 27-11-1949.

33 Gandhi, M.K., *From Yeravda Mandir*, Valji Govindji Desai, (Tra.), P. 2.

34 வேங்கடராஜுலு, ரா., (ப.ஆ), மகாத்மா காந்தி நூல்கள், தொகுதி 1, அவினாசிலிங்கம், தி.சு., சுப்பராமன், நா.ம.ரா, & ராஜம்மாள் தேவதாஸ், (மொ.பெ.ஆ.), ப. 574.

35 Gandhi, M.K., *From Yeravda Mandir*, Valji Govindji Desai, (Tra.), P. 2.

36 மகாத்மா காந்தி, சத்தியமும் கடவுளும், பிரிஜ் கிருஷ்ண சாந்திவாலா, (தொ.ஆ.), ப.13.

37 Gandhi, M.K., *Harijan*, dt. 28-7-1946.

38 Ibid., dt. 27-11-1949.

39 மகாத்மா காந்தி, சத்திய சோதனை, மு கு., ப. IX.

40 Gandhi, M.K., *From Yeravda Mandir*, Valji Govindji Desai (Tra.), P. 20.

41 Gandhi, M.K., *Harijan*, dt. 27-11-1949.

42 வேங்கடராஜுலு, ரா., (ப.ஆ.), மகாத்மா காந்தி நூல்கள், தொகுதி10, ஜெயமணி சுப்பிரமணியம், (மொ.பெ.ஆ.), ப. 299.

43 Gandhi, M.K., *Young India*, dt. 20-2-1930.

44 மகாத்மா காந்தி, சத்திய சோதனை, வேங்கடராஜுலு, ரா., (மொ.பெ.ஆ.), ப. 356.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

45 வேங்கடராஜுலு, ரா., (ப.ஆ.), மகாத்மா காந்தி நூல்கள், தொகுதி3, வேங்கடராஜுலு, ரா.,(மொ.பெ.ஆ), பக். 25—26.

46 மேலது, ப. 18.

47 மேலது, ப.471.

48 மேலது, ப. 428.

49 திருகூடசுந்தரம், பொ., பாபுஜி காட்டும் பாதை, ப.20.

50 பின்னிணைப்பில் (1) காணலாம்.

51 ஜவகர்லால் நேரு, அச்சம் தவிர்த்த அண்ணல், இராமசாமி, அ., (மொ.பெ.ஆ.), ப.39.

52 Kempton, K.P., *The short story*, P. 238.

53 Gandhi, M. K., *Young India*, dt. 8—8—1929.

54 Rocco Fumento, *Introduction to the Short Story*, P. 285.

55 Forster, E. M., *Aspects of the Novel*, P. 93.

56 Dietrich, R. F. & Roger H. Sundell, (ed.), *The Art of Fiction*, P. 48.

57 Douglas, A., Hughes, (ed.), *Studies in Short Fiction*, P. 595.

58 Elwood, M., *Characters Make Your Story*, P.3.

59 Douglas, A., Op.Cit., P. 596.

60 ஜம்புநாதன், கே.எஸ்., 'நெருப்பு', காந்திவழிக் கதைகள், கல்யாணராமன், கே. ஆர், (தொ.ஆ.), ப. 121.

61 மேலது.

62 சோமு, 'ஸத்ய மேவ ஜயதே', காந்திவழிக் கதைகள், கல்யாணராமன், கே.ஆர்., (தொ.ஆ.), ப. 363.

63 மேலது, ப. 361.

64 கல்யாணசுந்தரம், எம். எஸ்., 'சிறை ஸத் ஸங்கம்', காந்தி வழிக் கதைகள், கல்யாணராமன், கே. ஆர்., (தொ.ஆ.), ப. 55.

65 அருந்ததமா, 'அண்ணல் காட்டிய வழி', காந்திவழிக் கதைகள், கல்யாணராமன், கே.ஆர்., (தொ.ஆ.), ப. 94.

66 மேலது, ப. 96.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

67 மேலது.

68 ஆறுமுகம், பூவை. எஸ், 'சத்திய தரிசனம்', காந்திவழிக் கதைகள், கல்யாணராமன், கே.ஆர்., (தொ.ஆ.), ப.265.

69 மேலது, ப. 258.

70 மேலது, ப. 264.

71 கோவி. மணிசேகரன், 'துணி வெளுக்க மண்ணுண்டு', காந்திவழிக் கதைகள், கல்யாணராமன், கே. ஆர்., (தொ.ஆ.), ப.283.

72 மேலது.

73 மேலது, ப. 286.

74 ராமையா, பி.எஸ், 'பதச் சோறு', காந்திவழிக் கதைகள், கல்யாணராமன், கே.ஆர்., (தொ.ஆ.), ப. 154.

75 மேலது, ப. 151.

76 மேலது, ப. 149.

77 மேலது, ப. 154.

78 விந்தன், 'யாருக்கு விரோதி?', காந்திவழிக் கதைகள், கல்யாணராமன், கே.ஆர்., (தொ.ஆ.), ப. 201.

79 மேலது, பக். 201-202.

80 வல்லிக்கண்ணன், 'சத்திய சோதனை', காந்திவழிக் கதைகள், கல்யாணராமன், கே.ஆர்., (தொ. ஆ.), ப. 384.

81 மேலது, ப. 391.

82 மேலது, ப. 382.

83 சோமு., 'ஸத்ய மேவ ஜயதே', மு.நூ., ப. 364.

84 ஆறுமுகம், பூவை. எஸ், 'சத்திய தரிசனம்', மு.நூ., ப. 264.

85 மேலது, ப. 267.

86 தண்டாயுதம், இரா., தமிழ்ச் சிறுகதை முன்னோடிகள், ப. 90.

87 வல்லிக்கண்ணன், 'சத்தியசோதனை', மு.நூ., ப. 382.

88 வேங்கடராஜுலு, ரா., (ப. ஆ.), மகாத்மா காந்தி நூல்கள், தொகுதி 3, வேங்கடராஜுலு, ரா., (மொ.பெ.ஆ.), ப. 12.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

89 ஆறுமுகம், பூவை. எஸ்., 'சத்திய தரிசனம்', மு.நூ., ப.260.

90 மேலது, ப. 262.

91 மேலது, ப. 266.

92 வல்லிக்கண்ணன், 'சத்திய சோதனை', மு.நூ., ப. 386.

93 மேலது, ப. 389.

94 ஆறுமுகம், பூவை. எஸ்., 'சத்திய தரிசனம்' மு.நூ., ப.259.

95 ராமையா, பி.எஸ்., 'பதச்சோறு', மு.நூ., ப. 145.

96 மேலது, ப. 146.

97 விந்தன், 'யாருக்கு விரோதி?', மு.நூ., ப. 191.

98 ஆறுமுகம், பூவை. எஸ்., 'சத்திய தரிசனம்', மு.நூ., ப.259.

99 ஜம்புநாதன், கே.எஸ், 'நெருப்பு', மு.நூ., ப. 120.

100 அநுத்தமா, 'அண்ணல் காட்டிய வழி', மு.நூ., ப.94.

101 ஆறுமுகம், பூவை. எஸ்., 'சத்திய தரிசனம்', மு.நூ., ப 258.

102 Gandhi, M. K., *Harijan*, dt. 3-10-1936.

103 Gandhi, M. K., *Young India*, dt. 20-11-1930.

104 ராமையா, பி.எஸ்., 'பதச்சோறு', மு.நூ., ப. 150.

105 வல்லிக்கண்ணன், சத்திய சோதனை', மு.நூ., ப.386.

106 செல்லப்பா, சி.சு., 'மூன்றாம் முனை', செல்லப்பா சிறுகதைகள், தொகுதி 7, ப. 29.

107 Gandhi, M. K., *An Autobiography*, Mahadev Desai, (Tra.), P. 4.

108 கல்கி, 'எஜமான விசுவாசம்', வீணை பவானி, ப. 74.

109 தூரன், பெ., 'இரவு ஒரு மணி', கதைக்கொடி, (தொ. ஆ. பெயர் குறிப்பிடப்படவில்லை), ப. 108.

110 Gandhi, M. K., *Harijan*, dt. 27-11-1949.

111 அகிலன், 'சிசுவின் குரல்', சக்திவேல், ப. 97.

112 வேங்கடராஜுலு, ரா., (ப.ஆ.), மகாத்மா காந்தி நூல்கள், தொகுதி 8, வேங்கடராஜுலு, ரா., & ஜெயமணி சுப்பிரமணியம், (மொ. பெ. ஆ.), ப. 45.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

113 செல்லப்பா, சி.சு , 'மருதநாயகம்', செல்லப்பா சிறு கதைகள், தொகுதி 4, ப. 92.

114 Bhabani Bhattacharya, *Gandhi the Writer,* P. 166.

115 விந்தன், 'யாருக்கு விரோதி?', மு.நூ., ப. 189.

116 ஜம்புநாதன், கே.எஸ்., 'நெருப்பு' மு.நூ., ப. 117.

117 Dhebar, U.N., *Gandhiji A Practical Idealist,* P. 8.

118 அநுத்தமா, 'அண்ணல் காட்டிய வழி', மு.நூ., ப. 94.

119 ராமையா, பி.எஸ்., 'பதச் சோறு', மு.நூ., ப. 151.

120 ஆறுமுகம், பூவை.எஸ்., 'சத்திய தரிசனம்', மு.நூ., ப. 267.

121 வல்லிக்கண்ணன், 'சத்திய சோதனை', மு நூ., ப. 382.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

II. காந்திவழிக் கதைகளில் அகிம்சை

ஆய்வுக்குரிய 'காந்திவழிக் கதைகள்' என்ற தொகுப்பு நூலில் உள்ள கதைகளில் காந்தியடிகளின் அடிப்படைக் கொள்கைகளில் மற்றொன்றான அகிம்சைக்கோட்பாடு பற்றிய ஆய்வு இரண்டாம் இயலின் இப்பகுதியில் இடம்பெறுகிறது.

அகிம்சை-விளக்கம்

அகிம்சை என்பதற்குப் பிற உயிர்க்குத் துன்பம் செய்யாதிருத்தல் என்பது பொருள். எவ்வுயிரையும் மனத்தாலும் சொல்லாலும் துன்புறுத்தாமையையும் அது குறிக்கும். பிற உயிர்களிடம் அன்பு செலுத்துவதையும் அது உணர்த்தும்.

அகிம்சையைப் பல சமயங்களும் போற்றுகின்றன. எல்லா உயிர்களிடமும் அன்பு செலுத்துமாறும்[1], பகைவனுக்கும் உதவி செய்யுமாறும்[2] பணிக்கிறது யூத சமயம். பகைவன் இம்சை செய்திடினும் அன்பு பாராட்ட வேண்டுகிறது கிறித்தவம்.[3] செயலாலும், சொல்லாலும், எண்ணத்தாலும் கொல்லாமையை வற்புறுத்துகிறது பௌத்தம்.[4] சமண சமயத்தின் சிறந்த நோன்புகளில் ஒன்று அகிம்சை.[5] பகைவனையும் நண்பனாக்கிக்கொள்ளுமாறு பார்ஸி சமயம் இயம்பும்.[6] பாகவதத்தில் அறக்கோட்பாடுகளுள்ளும் முதன்மையானதாக அகிம்சையே போற்றப்படுகிறது.[7]

சமயங்களைப் போன்றே தமிழ் இலக்கியங்களும் அகிம்சையின் இலக்கணத்தை நலமுறக் கூறும். பிற உயிர்க்குத் தீங்கு செய்யாமை தவம்;[8] துன்பம் செய்தாரை ஒறுத்தல் அவர் வெட்குற நன்மை செய்வதாகும்[9] என வள்ளுவமும், பிறருக்குத் துன்பம் செய்யாமை சிறப்பு எனச் சிறுபஞ்சமூலமும்[10] இயம்பும். "பகைவனுக்கு அருள்வாய் நன்னெஞ்சே"[11] என வேண்டுகிறார் பாரதியார். "புண்படுத்தல் எதற்கெனினும் தீதே"[12] என்று குறிப்பிடுகிறார் நாமக்கல் கவிஞர்.

இவ்வாறு காலம் காலமாகப் போற்றப்பட்டு வரும் அகிம்சைக்குக் காந்தியடிகள் பல பொருள்களைக் காணுகின்றார். "சரியாகச் சொன்னால் கொல்லாமையே அகிம்சை. எனக்கோ

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அது எத்தனையோ பொருள்களைக் கூறுவதாகிறது''[13] என்றுரைக்கும் அவர், ''அகிம்சை என்பது வாழ்வில் ஏற்படும் தவிர்க்க முடியாத இம்சைச் செயல்களைப் போக்க முயலும் முயற்சியேயாகும்''[14] என விளக்குகிறார். ''எதிர்மறையாக மெய்யாலும் மனத்தாலும் எந்த உயிருக்கும் தீமை செய்வதில்லை என்பதே அதன் [அகிம்சையின்] பொருளாகிறது''[15]; ''எல்லா உயிரிடத்தும் நல்லெண்ணத்தோடு நடக்கும் நடவடிக்கையே அகிம்சையாகும்''[16]; ''செடிகளைப் பறித்து எறிவது கூடத் தீச் செயலாகும்... எனவே துன்பமிழைத்தல் யாவும் அகிம்சைக் கொள்கைக்கு முரணானதே''[17] என்ற இடங்கள் அகிம்சை, எவ்வுயிர்க்கும் சிறிது தீமை புரிவதையும் ஏற்காது என்பதைத் தெளிவுறுத்தும்.

''...நமக்கு எதிரி என்று எண்ணிக் கொள்பவர் மீதுங்கூட கெட்ட எண்ணத்தை மனத்தில் வைத்துக் கொள்ளக் கூடாது என்பதே அகிம்சை என்பதற்கு உண்மையான பொருள்''[18]; தீமை செய்பவரின் உடலுக்கும் எந்தத் துன்பத்தையும் அகிம்சை உண்டாக்காது''[19], ''நேரான வகையில் அகிம்சை என்பதற்கு மிகுந்த அன்பு, அதிக அளவு தயை என்பதே பொருள். நான் அகிம்சையைப் பின்பற்றுகிறவனாக இருப்பின் என்னுடைய பகைவனிடத்திலும் நான் அன்போடு இருக்க வேண்டும்''.[20] இவ்விளக்கங்கள் பகைவனையும் அன்புடன் ஏற்பது அகிம்சை என்பதைக் குறிக்கும்.

பிறருக்காக நாம் துன்பங்களை ஏற்றுக் கொண்டு அவர்களுக்கு நன்மை செய்தல் அகிம்சையின்பாற்படும் என்பதை, ''நமது சக்திக்கும் மீறிய இன்னல்களைத் தாங்கிக் கொண்டு மிகுந்த நன்மைகளைப் பிறர்க்குச் செய்வதே [அகிம்சை]''[21] என்று சுட்டுகிறார். ''அறிந்தே துன்பங்களை அனுபவிப்பது என்பதே தீவிரமான நிலையில் அகிம்சையின் பொருள். தீமையைச் செய்கிறவனுக்குப் பேசாமல் பணிந்து விடுவது என்பதன்று. ஆனால், கொடியவனின் உறுதிக்கு எதிராகத் தனது முழு ஆன்மாவையும் நிறுத்துவதாகும்''[22]; ''...ஆன்ம எதிர்ப்பு அவனை அச் செயலினின்றும் விலக்கும்......மேன்மைப்படுத்தும்''[23] என்பன அகிம்சையானது ஆன்ம சக்தியில் அமைவதை உணர்த்தும்.

இவ்வாறு அகிம்சைக்கு அவர் தரும் பொருள்கள் (1) எவ்வுயிர்க்கும் தீமை செய்யாதிருத்தல் (2) எல்லா உயிர்களிடமும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அன்பு பாராட்டல் (3) தீமையை ஆன்ம சக்தியால் எதிர்த்துப் போக்குதல் என்பன ஆகும்.

காந்திய அகிம்சையின் சிறப்பு

காந்தியடிகளுக்கு முன் பலர் அகிம்சைக் கொள்கையை விளக்கியும் அதனைப் பின்பற்றியும் இருப்பினும், காந்தியடிகள் அக்கொள்கையை விளக்கிய வகையும் பின்பற்றிய பாங்கும் தனிச்சிறப்புடையன.

(1) பகைமையை அன்பால் வெல்ல வேண்டும் என ஏசு,[24] புத்தர்[25] ஆகியோர் கூறியிருக்கக் காந்தியடிகள் அன்பால் வெல்லும் அவ்வழியைத் தெளிவாகக் காட்டுகிறார். அவ்வழி பகைமையின் தீய சக்திக்குப் பணியாமல் தீமையை ஆன்ம பலத்தால் எதிர்ப்பதும், அதன் வழி அவர்களை நன்னெறியில் நிறுத்துவதும் ஆகும். தீமை செய்வார்க்குச் செய்யும் நன்மை அவரை அற நெறியில் நிறுத்துவதே என்பது காந்தியடிகள் கூறும் புதிய விளக்கமாகும் என்பர்.[26]

(2) "என் வரைக்கும் இந்து தருமத்தின் பெருமை அகிம்சையில்தான் உளது. ஆனால் அது துறவிக்கு மட்டுமே ஏற்றது என்று நம் மக்கள் சொல்லி விடுகின்றனர், அக்கருத்தை நான் ஏற்றுக் கொள்ள முடியாது. வாழ்விற்கு வழியே அது தான்"[27] என்கிறார் காந்தியடிகள். அக்கூற்றின்படி துறவிகளுக்கு மட்டுமன்றி அனைவர்க்கும் ஏற்றது அகிம்சை நெறியே என்ற விளக்கம், அவர் தம் கருத்துச் சிறப்பைக் காட்டும்.

(3) பொதுவாகத் தனிமனித வாழ்வு நெறியாகப் பயன் படுத்தப்பட்ட அகிம்சையைக் காந்தியடிகள் சமூக, அரசியல், பொருளாதாரச் சீரமைப்புகளுக்குப் பயன்படுத்தியுள்ளார். இது அவரது தனித்துவத்தைக் காட்டுகிறது.

அ. அகிம்சையும், சமுதாய சீரமைப்பும்

ஏசு, சாக்ரடிஸ், அப்பர் போன்றோர் துன்பங்களை ஏற்ற போது அகிம்சையைப் பின்பற்றினர். சமயத்துறை அளவில், கிறித்தவ, பௌத்த, சமண, இந்து சமயங்கள் அகிம்சையை வலியுறுத்துகின்றன. ஆயின், சமுதாய மாற்றத்திற்கு அகிம்சையைக் கருவியாகப் பயன்படுத்தியவர் காந்தியடிகள் ஆவர். இதனை வலியுறுத்துமாறு "... அகிம்சையைப் பயன்படுத்துவது

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தனிமனித அளவிலேயே... தனிப்பட்ட சமயத்துறை அளவிலேயே இருந்துள்ளது...அதனை மக்களின் கருவியாகக் கருதிய, பின் பற்றிய பெருமை காந்தியடிகளையே சேரும்''[28] என்ற கருத்தும் உள்ளது.

சமுதாய ஒற்றுமைக்கு உதவும் கருவியாக அகிம்சையைக் கைக்கொண்டவர் காந்தியடிகள். ''இந்தியாவில் அகிம்சையைப் புரிந்து கொண்டால் வகுப்புப் போராட்டம் கட்டாயம் நடக்காதென்பது மட்டுமல்ல, தவிர்க்கக் கூடியதாகவும் இருக்கும்''[29] என்பது அவர்தம் கூற்றாகும்.

சமுதாயத்தை அகிம்சை அடிப்படையில் அமைப்பதற்கேற்ற வழி முறைகளையும் எண்ணிப் பார்த்தவர் அவர். சமுதாயச் சிக்கல்களைத் தீர்க்கக் கூடிய அகிம்சை வழியைக் காணுவதற்குக் கிராம மக்களுள் மிகத் தாழ்ந்தவர்கள் என்று கருதப்படுவோருடன் நெருங்கி வாழ வேண்டும் என்பது அவரது எண்ணம்.[30]

அகிம்சையும், அரசியல் சீரமைப்பும்

இந்திய அரசியல் போராட்டத்தில் அகிம்சை வழியைப் பின்பற்றியவர் காந்தியடிகள். அகிம்சையை அரசியலில் புகுத்தி அதன் பெருமையை உலகறியச் செய்தவர் அவர்.[31] இந்தியாவில் ரௌலட் சட்டத்தை எதிர்க்கும் நிலையில் வரக்கூடிய வன்முறைப் புரட்சியை அகிம்சைப் பாதையில் திருப்பி விடுவதில் கருத்தாக அவர் இருந்தார்.[32] அதுமுதல் பிற நேரங்களிலும் அவர் அகிம்சையைப் பின்பற்றியமை, ''காந்தியடிகள் அரசியலில் அகிம்சையை உள்ளடக்கிய சத்தியாக்கிரக வழிமுறையை உலகம் வியக்கின்ற வகையில் பின்பற்றினார்...... வன்முறையின் உருவமாக இருந்த ஆங்கில அரசை ஆன்மீக ஆற்றலான அகிம்சையைப் பயன்படுத்தி எதிர்த்தார்'' என்ற உரையால் தெளிவாகும்.[33]

தனிமனித ஆன்மீக நெறியாகப் பயன்படுத்தப்பட்ட அகிம்சையை அரசியலில் ஊடுருவச் செய்து அதன் ஆக்க சக்தியை வலுவாக்கியவர் காந்தியடிகள். இக்கருத்தை வலியுறுத்தும் நிலையில், ''புத்த பகவானும், மகாவீரரும், சான்றோர் பலரும் இதையேதான் போதித்தனர். ஆனால் காந்தியின் சொல்லாக இது வெளி வந்தபோது புரட்சியைத் தோற்றுவிக்கும் ஆற்றலோடு வெளி வந்தது. அதற்குக் காரணம் புரட்சிக்கான வரலாற்று நிலைக்களன் ஒன்று உருவாகி இருந்தமையே''[34] என்ற வினோபாவின் கூற்று அமைகிறது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

''நாட்டின் ஆன்மீக உணர்வை அரசியல் போராட்டம் அழித்து விடாமல் காப்பாற்றவும் செய்தார்''[35] என்ற கூற்றும் நோக்கத்தக்கது. அரசியலில் ஆன்மீகத்தை இணைத்தமை காந்தியடிகளின் தனிச் சிறப்பாகும்.

அகிம்சையும், பொருளாதாரச் சீரமைப்பும்

''அகிம்சைத் தன்மையிலான சுதந்தரத்துக்குள்ள சிறந்த வழி பொருளாதாரச்சமத்துவம்தான்''[36] என்றுகாந்தியப் பொருளாதாரம் குறிப்பிடும். ''தொழிற்சாலை நாகரிகத்தை அடிப்படையாக வைத்து நீங்கள் அகிம்சை என்னும் மாளிகையை உருவாக்க முடியாது. எனது மனக்கண்ணில் நான் கற்பனை செய்துள்ள கிராமியப் பொருளாதாரத்தில் சுரண்டல் என்பதற்கே இடமில்லை. சுரண்டலே இம்சையின் சாரமாகும்''[37] என்ற காந்தியடிகளின் விளக்கம் காந்தியப் பொருளாதாரத்தைப் படம் பிடிக்கும்.

''அன்பு வழி மனமாற்றத்தின் மூலம் பொருளாதாரப் புரட்சியைச் செயற்படுத்த இயலும் என்று காந்தியடிகள் நம்புகிறார். அவரது அறக்காவலர் கோட்பாடு (Trusteeship Theory) என்பது இந்த நம்பிக்கையில் உருவான தத்துவமாகும்''[38] என்ற கருத்து நினைத்தற்குரியது.

அகிம்சையும், சமயமும்

''மோட்சத்திற்கு வழி அகிம்சை''[39]; ''சத்தியம் நமது குறிக்கோள்...அகிம்சை வழியில் செல்லாமல் நாம் சத்தியத்தை உணரவும் அடையவும் இயலாது''[40] என்று சமய நிலையில் அகிம்சையின் பங்குபற்றிக் காந்தியடிகள் குறிப்பிடுகிறார்.

இவ்வாறாக அகிம்சையைச் சமுதாயம், அரசியல், பொருளாதாரம், சமயம் ஆகிய எல்லாத் துறைகளிலும் மேற்கொண்டவர் காந்தியடிகள். வாழ்க்கையின் சிக்கல்களைத் தீர்ப்பதில் தாம் கையாளும் வழிமுறை தனித்துவம் வாய்ந்தது என்பதை, ''...சோஷலிஸ்டுகளின் முன்புள்ள அதே சிக்கல்களைத் தீர்க்கத்தான் நான் முயற்சி செய்து கொண்டிருக்கிறேன். ஆயினும், இச்சிக்கல்களை நான் தீர்க்கும் முறை இன்றும் என்றும் கலப்பற்ற அகிம்சையை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது என்பது உண்மை''[41] என்ற அவர் தம் கூற்றும் உறுதிப்படுத்தும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அகிம்சையின் சிறப்பும், அகிம்சைவாதியின் பண்பு நலன்களும்

அகிம்சையை இணையில்லாத சக்தி வாய்ந்த ஆயுதம், வாழ்க்கையின் கதி மோட்சம், வீரர்களின் சின்னம், கோழைக்கு எட்டாதது என்றெல்லாம் போற்றுகிறார் காந்தியடிகள். அவர் அகிம்சையை உயர்வான அறமாகக் கொள்ளுகின்றார். அதற்குக் காரணம் அது உயிர் உள்ளதும், உயிர் அளிப்பதுமான சக்தியாகவும் ஆன்மாவின் விசேடச் சின்னமாகவும் விளங்குவதே என்பது அவரது கருத்தாகும்.[42] வன்முறையை விட அகிம்சை மிகவும் உயர்வானது என்பதை வலியுறுத்தத் 'தண்டிப்பதை விட மன்னிப்பதே ஆண்மை மிக்கது'[43] என்று கூறுகிறார்.

அகிம்சை வழி மேற்கொள்பவர்கள் சில பண்பு நலன்களைக் கொண்டிருக்க வேண்டும் என்கிறார் காந்தியடிகள். அகிம்சையின் முதற்படி நம் அன்றாட வாழ்க்கையில் நமக்குள் உண்மையோடிருப்பதும், அடக்கம், பொறுமை, அன்பு ஆகியவற்றை நாம் வளர்த்துக் கொள்வதுமேயாகும் என்று விளக்குகிறார் அவர்.[44] தம்மைத் தாமே தூய்மைப்படுத்திக் கொள்ளாமல் அகிம்சா தருமத்தை மேற்கொள்வோம் என்பது வெறும் கனவாகவே முடியும் என்று மனத்தூய்மையின் இன்றியமையாமையைச் சுட்டுகிறார்.[45] அகிம்சையை மேற்கொள்பவனுக்கு விடாமுயற்சி தேவை என்கிறார். சத்திய நெறியைப் போல அகிம்சை வழி நேரானதுதான். ஆனால் மிகவும் ஒடுக்கமானது. அதாவது துன்பங்கள் நிறைந்தது. விடாமல் முயற்சி செய்வதன் மூலமாகவே ஒருவன் சத்தியத்தையும் அகிம்சையையும் உணர முடியும் என்று அறுதியிட்டுக் கூறுகிறார்.[46]

அளவிறந்து மன்னிப்பது என்பதே அகிம்சையாகும். மன்னிப்பது வீரத்திற்கு அடையாளம். ஆகவே அகிம்சையைக் கடைப்பிடிப்பதற்கு அச்சமின்மை இன்றியமையாதது என்பதையும் வலியுறுத்துகிறார்.[47] எளிய கிராம வாழ்வில்தான் சத்தியத்தையும், அகிம்சையையும் காண முடியும் என்று நினைக்கும் அவர், அந்த எளிமையை மிகச் சிறந்த முறையில் இராட்டையில் காணலாம் என்கிறார்.[48]

காந்தியடிகளின் அகிம்சைக்கோட்பாடு பற்றிப் பிறர் கருத்து

காந்தியடிகளையும் அவர் கைக்கொண்ட அகிம்சையின் ஆற்றலையும் பல்வேறு அறிஞர்கள் பாராட்டியுள்ளனர்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அவருடன் பிணைந்த அகிம்சையை, "...அன்பு எக்காலத்திலும் தோல்வியுறுவதில்லை. அப்படிப்பட்ட அன்பு இன்று எங்கே இருக்கிறது? அது மகாத்மா காந்தியின் வாழ்க்கையில் ஊடுருவி யிருக்கிறது. ஆனால், இன்னும் அது நம் வாழ்க்கையில் ஊடுருவ வில்லை"[49] என்கின்றார் தீனபந்து ஆண்ட்ரூஸ்.

பேராசிரியர் ரூபஸ் ஜோன்ஸ், காந்தியடிகளின் அகிம்சை, சக்தி வாய்ந்த டைனமோ; மின்சாரத்தினும் அதிக ஆற்றலுடையது என வியக்கிறார்.[50] அகிம்சையின் உருவமான காந்தியடிகளால் அகிம்சைத் தன்மையிலான சமூக அமைப்பின் மங்கலான தொடக்க நிலை வரைபடம் மனித இனத்துக்கு அளிக்கப்பட்டுள்ளது எனக் கணிக்கிறார் வினோபா.[51] காந்தியடிகள் அகிம்சையைக் கற்பித்தது தீமைக்குப் பணிய அன்று; நாடுகளிடையேயுள்ள வேறுபாடுகளை அமைதியாகத் தீர்க்கப் பயன்படுத்துவதற்கே என்கிறார் நேரு.[52]

காந்தியடிகள் வாழ்க்கையில் மலர்ந்த அகிம்சை அவரளவில் நின்றதில்லை. அஃது உலகுக்குப் பயன்படுவதாயிற்று என்பது அறிஞரின் கருத்து.[53]

"அன்பால்தான் திருத்த முடியும் என்று இன்னாசெய்யா மையை [அகிம்சையை] வாழ்க்கைக் குறிக்கோளாகக் கொண்ட காந்தியடிகள் நாவாலும் இன்னா செய்யாதவாறு காத்துக் கொண்டார்"[54] என்கிறார் மு. வரதராசன்.

காந்தியடிகள் வாழ்க்கையில் அகிம்சை

காந்தியடிகள், தம் பதினைந்தாவது வயதில் தங்கக் காப்பினைத் திருடிய உண்மையைத் தம் தந்தையிடம் தாளில் எழுதிக் காட்டிய போது, தந்தையிடமிருந்து வழிந்த கண்ணீர் தம் உள்ளத்தைத் தூய்மைப்படுத்தியதாகக் கூறுகிறார். அவர், "அகிம்சா தருமத்தை அறிவதற்கு இது எனக்குச் சரியானதோர் பாடமாயிற்று. இதில் தந்தையின் அன்பைத் தவிர வேறு எதையும் நான் அப்பொழுது காணவில்லை. ஆனால் இன்றோ அதுதான் சுத்தமான அகிம்சை என்று அறிகிறேன்,..."[55] என்கிறார்.

இந்நிகழ்ச்சிக்கு முன்பாகவே அவர் இயல்பாக அகிம்சை வழியில் இருந்தமை சில நிகழ்ச்சிகளால் தெளிவுறும். குழந்தை மோனியாவை (காந்தியடிகளின் பெயர்) எவராவது சகோதரர் அடிப்பின், அவன் தாயிடம் முறையிடுவானாம். திரும்ப அடிக்க

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வேண்டியதுதானே என்று தாய் ஒருமுறை கூறியபோது, "'பிறரை அடிக்கும்படி நீங்கள் எனக்குச் சொல்லித் தருவதா?... திருப்பி அடிக்கும்படி அடிபட்டவனிடம் கூறுவதற்குப் பதிலாக அடிக்கவேண்டா என்று அடித்தவனிடம் நீங்கள் சொல்லக் கூடாதா?''[56] என்று கூறியுள்ளது அவரது அன்புள்ளத்தைக் காட்டும். மேலும் சிறுவயதில் ஒரு சிறுவன் வயதில் மூத்தவனான மோகன் பாயை (காந்தியடிகளின் பெயர்) அறைய, அவனோ திருப்பி அடியாது தந்தையிடம் அழைத்துச் செல்ல, அவர் அவனை எச்சரித்து அனுப்பிவிட்டார். இந்நிகழ்ச்சிகள், வன்முறையில் காந்தியடிகளுக்குச் சிறுவயதிலேயே இருந்தவெறுப்பைத் தெளிவாக்கும்.

தென்னாப்பிரிக்கா மாரிட்ஸ்பர்க் இரயில் நிலையத்தில் நிறவெறி காரணமாகப் புகைவண்டியினின்றும் தள்ளப்பட்ட போது, 'பிறந்தநாடு செல்வதா? அடிமைத் தளையை உடைக்க முயல்வதா'? என்று மனம் ஊசலாடிட, "அப்பொழுது எனது வாழ்வில் படிந்து கிடந்த அகிம்சை செயலில் மலர்ந்தது''[57] என்கிறார். அந்நிகழ்ச்சிக்குக் காரணமானவர் மீதும், மற்றொரு முறை தம் குடும்பத்தையே தாக்கியவர்கள் மீதும் வழக்குத் தொடுக்கப் பிறர் தூண்டியும் மறுத்துவிட்டார். இவ்வாறு எதிர் காலத்தில் ஒரு மகாத்மா ஆகும் தகுதி அவர் பெற்றிருந்தமையை இந்நிகழ்ச்சிகள் உணர்த்துகின்றன.[58] மேலும் பிரிடோரியாவில் அமைச்சரின் தெரு வழியே சென்றபோது செருப்புக் காலால் உதைத்த காவல்காரனையும், தம்மை அடித்து வீழ்த்திய மீர் ஆலத்தையும் பழிக்குப் பழி வாங்கப் பிறர் தூண்டியும் மறுத்து விட்டார். இந்தியாவில் ஜெனரல் டயர், ஜாலியன் வாலாபாக்கில் மக்களைச் சுட்டபோதும் "தவறுசெய்யும் இயல்புடையவர்களாயினும் நாம் மன்னிக்கப்படுவதையே விரும்புவோம்... ஜெனரல் டயரிடத்தில் கூட நமக்கு வெறுப்பு இருக்கக் கூடாது''[59] என்று கூறியுள்ளார். தென்னாப்பிரிக்காவில் ஜெனரல் ஸ்மட்ஸ் கொடுமைகள் பல புரிந்தாலும், காந்தியடிகள் தம் கையால் செய்த செருப்புகளை அவருக்குப் பரிசாகக் கொடுத்தார். பகைவரிடத்தும் அருள் பொழியும் உள்ளம் அவர் உள்ளம்.

தென்னாப்பிரிக்க நிறவெறி போக்குதல் முதல் இந்திய விடுதலை வரை வழிமுறையாக அகிம்சையை நடைமுறைப் படுத்திய அவர், "பலாத்கார வழிகளின் மூலம் என் நாட்டுக்குச்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சுதந்திரம் பெற முயல்வதை விட அதற்காக நான் தனிப்பட்ட முறையில் அவசியமானால் யுகக்கணக்கில் காத்திருப்பேன்''[60] என்கிறார். இந்தியாவில் பல அகிம்சை வழிப் போராட்டங்களை நடத்திய[61] அவர், சம்பாரண் சத்தியாக்கிரகத்தில் முன்பின் தெரியாத ஆயிரக்கணக்கான விவசாயிகள் தம்மை அன்புடன் வரவேற்றதைக் குறித்து, ''இந்த அன்பு, அகிம்சையில் நான் கொண்டிருக்கும் அசைக்க முடியாத உறுதியின் வெளித்தோற்ற மேயன்றி வேறு அன்று''[62] என்கிறார். அகமதாபாத் தொழிலாளர் போராட்டத்தின்போது தொழிலாளருக்குக் கூறிய நிபந்தனை களில் முதலாவது ''எந்த நிலைமையிலும் பலாத்காரத்தில் இறங்கிவிடவே கூடாது''[63] என்பது ஆகும்.

அஃறிணை உயிர்களிடத்தும் இம்சையைத் தவிர்த்தவர் அவர். ஆசிரமத்தில் ஒரு முறை முதுகிலுள்ள போர்வை மீது பாம்பு ஊர்ந்தபோது, தம்மை அது தீண்டியிருந்தால் குறைந்தது அதனையாவது கொல்ல வேண்டா எனச் சொல்ல அப்போது எண்ணம் உதித்ததைக் குறிப்பிட்டுள்ளார்.[64] தவிர்க்க முடியாத நிலையிலும் இம்சையைக் கைக்கொள்ளாத அவரது உள்ளத்தை இது காட்டும். ஆசிரமத்தில் மரங்களிலிருந்து இலைகள் பறிப் பதையும் இம்சை எனக் கூறியுள்ளார்.[65] முதல்நாள் தம்மீது குண்டு எறிந்த மதன்லால் என்ற இளைஞனைத் துன்புறுத்த வேண்டா என்று அரசு அலுவலரிடம் கூறியிருந்ததை 1948 சனவரி 21-இல் வழிபாட்டுக் கூட்டத்தில் குறிப்பிட்டமை அவரது அருட்டன்மையை உணர்த்தும்.

இவ்வாறு, காந்தியடிகள் அகிம்சைக் கொள்கையைத் தம் உயிர் மூச்சாய்க் கொண்டு எண்ணம், சொல், செயல் ஆகிய வற்றின்வழி அதனை விளக்கமுறச் செய்தார்.

இனி ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளும் 'காந்திவழிக் கதைகள்' என்ற நூலில் உள்ள கதைகளில் அகிம்சைக் கொள்கைபற்றிய ஆய்வு அமைகிறது.

அகிம்சைக் கோட்பாடு அமைந்த கதைகள்

'காந்தி வழிக்கதைகள்' என்ற தொகுப்பு நூலில் அகிம்சைக் கொள்கையை விளக்க வந்த கதைகள் ஐந்து. அவை த. நா. குமாரஸ்வாமியின் 'நரநாராயணன்', நாரணதுரைக்கண்ணனின் 'இராவணாகாரம்', நா. பார்த்தசாரதியின் 'கங்கை இன்னும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வற்றிவிடவில்லை', டி.என். சுகி சுப்பிரமணியத்தின் 'சிலையும் சிந்தனையும்', வி. பார்த்திபனின் 'அண்ணலே உன் வழி' ஆகியன வாகும்.

கதைச் சுருக்கமும் கருவும்

'நரநாராயணன்' என்ற கதை ஓர் உருவகக் கதை. உலக அன்னை படைத்த மனிதரிடையே சாதி சமயப் பூசல்கள் கூத்தாடு கின்றன. அவருள் தீய சக்தியின் உருவகமான வல்லான் ஒருவனைச் சாத்வீக வீரன் பணிய வைக்கிறான். ஆயின் வகுப்பு வாதத்தால் மும்முறை சுடப்பட்ட சாத்வீக வீரன் விழ, அன்பு நெறியில் சென்ற அவனிடம் தாமே சிக்கியதாகக் கடவுளின் குரல் ஒலிக்கிறது. காந்தியடிகளின் படிவமாகச் சாத்வீக வீரன் அமைகிறான். தீமைகளின் படிவமாக வல்லான் அமைகிறான். 'அன்பு வழியில் செல்பவன் கடவுளையும் காணலாம்' என்ற கருவை விளக்க வந்த கதை இது. ''சத்தியமே கடவுள்... சத்தியத்தை அடைவதற்குக் குறுக்கு வழி அன்பு [அகிம்சை] தான்''[66] என்ற காந்தியடிகளின் கருத்து இக்கதைக்கு அடிப்படை யாக அமைந்துள்ளது.

'இராவணாகாரம்' என்பதில் விடுதலைப் போராட்ட வீரர் களைப்பின்பற்றி நடக்கும் கள்ளுக்கடை மறியலில், சத்தியாக்கிரகி பத்மநாபனைச் சுடவருகிறார் கள்ளுக்கடைச் சின்ன முதலாளி தம்பியப்பா. மகிழ்ச்சியுடன் உயிரை இழக்க முன்வந்த அவனது செயலைக் கண்டு வியந்த காவல்துறை அலுவலர் அனந்தன், தம்பியப்பாவைத் திடீரெனக் கட்டிக் காவல் ஊர்தியில் ஏற்று கிறார். இக்கதை 'அகிம்சை வழியில் போராடுபவர் பிறர்தம் இரக்கத்திற்கு உரியவராவர்' என்ற கருவை விளக்குகிறது. ''சத்தியாக்கிரகத் தொண்டர்கள் நேர்மையான [அகிம்சை] முறையில் போராடிக் கொண்டு இருக்கும் வரையில்...பொது மக்களின் ஆதரவுக்கும் இரக்கத்திற்கும் உரியவர்களாவர்''[67] என்ற காந்தியடிகளின் கூற்று நோக்கத்தக்கது.

'கங்கை இன்னும் வற்றிவிடவில்லை' என்ற கதையில் தம் இந்திய நாட்டில் கருணை [அகிம்சை] வெள்ளம் ஓடும் கங்கையைக் காணத் தாய்லாந்திலிருந்து வரும் கதைத் தலைவர், வெளிநாட்டார் இந்தியாவைக் குறைவுபடப் பேசியபோது கங்கை வற்றியதோ எனக் கலங்குகிறார். இந்தியாவிற்கு வந்த

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தும் அங்கே காணப்படும் குழப்பங்களைக் கண்டு அவர் இதயத்திலிருந்த கங்கை வறண்டுகொண்டிருக்கிறது. விஜயவாடா இரயில் நிலையத்தில் முன்பின் தெரியாத தெலுங்கர், பிள்ளைத்தாய்ச்சி ஒருத்திக்கு, இடிபாடுகளுக்கு இடையே சோற்றுப் பொட்டலம் வாங்கிக் கொடுத்து அதன் விளைவாக இறக்க நேரிடும்போது, அக்கருணையை வியந்து கங்கை வற்றவே வற்றாது என்கிறார். இக்கதை முன்பின் தெரியாதவரிடமும் அன்பு பாராட்டும் காந்தியக் கருத்தைக்[68] கருவாகக் கொண்டுள்ளது.

'சிலையும் சிந்தனையும்' என்ற கதையில் நகராட்சி மன்ற உறுப்பினர் இராமாமிர்தம், தமக்கு மீண்டும் கிடைக்கப் பெறாத அறங்காவலர் பதவியை மான்முண்டியாப்பிள்ளை பெற்றுவிட்டதால் அவர் ஒழிய வேண்டும் என இறைவனை வேண்டுகிறார். 'காந்தி மார்க்கெட்'டில் நன்னோக்கத்தோடு தம்மால் நிறுவப்பட்ட காந்திசிலை இன்று வாழைக்காய் திருடும் சிறுவர்க்குக் காசு வைக்கும் இடமாகப் பயன்படுவது கண்டு வருந்துகிறார். 'நோக்கங்கள் மீது குறையில்லை. அந்நோக்கத்திற்கு உரிய காரண காரியங்களை அறியவில்லை இம்மக்கள்' என அறிந்த அவர் உள்ளம், நல்ல நோக்கத்திற்காகப் பிரதிட்டை செய்யப்பட்ட கோவிலுக்கு மான்முண்டியே அறங்காவலராக இருக்கட்டும் என ஏற்கிறது. 'பகைவனாகக் கருதுபவரிடமும் அன்பு பாராட்ட வேண்டும்' என்பது கரு. பகைவனிடமும் அன்பு காட்டுவது காந்தியம்.[69]

'அண்ணலே உன் வழி' என்பதில் ஒன்றுமறியாத தன் தந்தையைக் கொலைக் குற்றத்திற்கு ஆளாக்கிய நாகலிங்கம் தொழுநோயாளியாகத் தன்னிடம் மருத்துவத்திற்கு வரும்போது ஆனந்தனிடம் காழ்ப்புணர்வு மேலிடுகிறது. காந்தியடிகளைப் பற்றிய நூலில், பகைவரை மன்னிக்கும் அவரது பண்பைப் படித்தறிந்து மனம் மாறிய அவன், நாகலிங்கத்திற்கு மருந்தைச் செய்ய முற்படுகிறான். 'பகைவனிடமும் அன்பு பாராட்டுவது சிறப்பு' என்பதே இதன் கருவுமாகும்.

கதைப்பின்னலில் கொள்கையைப் புலப்படுத்தல்

கதைப்பின்னலின் அடிப்படைகள் தனிமனிதனின் அகப்புறப் போராட்டங்களாகவும், நன்மை தீமையிடையே நிகழும் போராட்டங்களாவும் அமைகின்றன. இறுதியில் நன்மை வெல்வதாக உணர்த்தப்படுகிறது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'நரநாராயணன்' என்பதில் வல்லான், தன்னை ஒடுக்கி ஆளப்போவதாய் அச்சுறுத்தும்போது, சாத்வீகவீரன் அச்சமில்லை, அச்சமில்லை என்கிறான். சத்திய விரதத்தை எந்த உருவத்திலும் முறையிலும் மேற்கொள்ள விரும்பினாலும் அதற்கு இன்றியமையாதது அஞ்சாமையாகும்[70] என்கிற காந்தியடிகளின் கருத்திற்கேற்ப அஞ்சாத வீரனாக அவன் சித்திரிக்கப்படுகிறான். ''அவன் வேய்ங்குழல் அகிம்சை ராகத்தை ஊதியது''[71] என்ற ஆசிரியரது கூற்றும் சாத்வீக வீரனின் அகிம்சை உணர்வை அறியச் செய்யும். இக்கதையில் அகிம்சை வழியில் அமையாத வல்லானின் சர்வாதிகாரக் கொடுமையை, ''சரி இவர்கள் உயிரை வதைப்பதோடு உணர்வையும் ஒடுக்கி ஆளப்போகிறேன் பார்''[72] என்ற அவனது கூற்றுத் தெளிவாக்கும். இவனது படைப்பு, சாத்வீக வீரன் மேற்கொண்ட அகிம்சையின் வலிமையை வெளிப்படுத்த உதவுகிறது.

'இராவணாகாரம்' என்பதில் பத்மநாபன், ''...காந்தி மகாத்மா கட்டளைப்படி தேச சேவை செய்ய வந்திருக்கும் எங்களுக்கு இந்தக்குண்டு பரிசு கிடைத்தால் அளவில்லா மகிழ்ச்சியுடன் அதை ஏற்றுக் கொள்வோம்''[73] என்று கூறுவது அகிம்சை வழிப் போராட்டத்தில் உயிரையும் இழக்கத் தயாராக இருக்க வேண்டும் என்ற காந்தியடிகளின் கூற்றை நினைவுறுத்தும்.[74] அகிம்சைக்கு முரணான வழியில் கள்ளுக்கடைக் கணக்கரும் தம்பியப்பாவும் சித்திரிக்கப்படுகின்றனர். கணக்கர், ''...சண்டித்தனம் செய்யும் இந்தக் காந்திப் பசங்களை இழுத்துக்கொண்டு போய் வெளியே தள்ளுங்கடா...''[75] என்று அலறுவது அவரது இம்சை மனப்போக்கைக் காட்டும். தம்பியப்பாவின் இம்சைப் போக்கினை ''...இவ்விடத்தைவிட்டு நீ போகவில்லையானால் உங்களெல்லோரையும் சுட்டுப் பொசுக்கி விட்டு மறுவேலை பார்ப்பேன்...''[76] என்ற அவரது கூற்று உறுதிப்படுத்தும். தம்பியப்பா, கணக்கர் இருவரின் இம்சைச் செயல்வழி, பத்மநாபனின் அகிம்சைப் போராட்டத்தின் சிறப்பை அறிய வைக்கிறார் ஆசிரியர்.

'கங்கை இன்னும் வற்றிவிடவில்லை' என்ற கதையின் கதைத் தலைவர் அன்பு நெறிப்பட்டவராகவும் காந்திய அகிம்சையின் சிறப்பை உணர்ந்தவராகவும் அமைந்திருப்பது, ''கங்கை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

என் உடம்பை நனைக்கும்போதெல்லாம் என்னுள்ளிருக்கும் சத்தியமும், தர்மமும், கருணையும் கிளர்ந்திருக்கின்றன''[77] என்ற அவரது உரையால் புலனாகும்.

இக்கதையில் அகிம்சை வழியில் அமையும் மற்றொருவர் தெலுங்கர். அவர் அரிதாகப் பெற்ற உணவினைக் கருவுற்ற வளுக்கு அளித்தபின் இம்சைச் சூழலில் பலியாகிறார். தம்மை யும் அறியாமலேயே எல்லா மனிதர்களும் இயற்கையாகவே அந்த [அகிம்சை] இலட்சியத்தை நாடிப் போய்க் கொண்டு இருக்கின்றனர் என்ற காந்தியடிகளின் கருத்திற்கேற்பத்[78] தெலுங்கரின் பாத்திரப் படைப்பு அமைகிறது. அகிம்சை வழியில் அமையாத நிலையில், இரயில் பயணம் செய்யும் பாராளுமன்ற உறுப்பினர், 'கௌபாய் சூட் பையன்' ஆகியோர் மேல்நாட்டு நாகரிகமுடையவர்களாயும், தந்நலம் மிக்கவர்களாயும் உள்ளனர். இவர்களது படைப்பு, தெலுங்கரின் அகிம்சைப் பண்பை வேறு படுத்தி உயர்த்திக் காட்ட உதவுகிறது.

'சிலையும் சிந்தனையும்' என்பதில் ''அன்று வெள்ளையன் காலால் அடிபட்டபோது எத்தனை ஆனந்தமாக அகிம்சைவாதி யாகப் பட்டுக்கொண்டு உடலையும் உள்ளத்தையும் ஒடுக்கி னாரோ, அதுபோல அவர் இப்போது ஒடுங்கவில்லை. உள்ளம் உடல் இரண்டும் விசுவரூபம் எடுக்கின்றன''[79] என்ற பகுதி காந்திய வழியில் சென்ற இராமாமிர்தம் இடைக்காலத்தில் தீய வராக மாறியதைச் சுட்டும். அந்நிலையில் மான்முண்டி ஒழிந் தால் தாமே அறங்காவலராகலாம் என எண்ணுகிறார். இறுதி யில் அறங்காவலராக மான்முண்டியே இருக்கட்டும் என எண்ணு வது மீண்டும் அவர் நல்லுள்ளம் பெற்றமையை உணர்த்தும்.

'அண்ணலே உன்வழி' என்பதில் பழி வாங்கத் துடிக்கும் ஆனந்தன், தீமை செய்தவனைக் காந்தியடிகள் மன்னித்த பாங் கினை உணர்ந்து பகைவனுக்கு மருந்தளிக்க முற்படுகிறான். இம்சை, சினம், படுபகை போன்ற இருள் எல்லாம் அகிம்சைச் சூரியன் முன்பு மாய்ந்து விடுகின்றன என்ற காந்தியடிகளின் கருத்திற்கேற்ப இவன் செயல் அமைகிறது.[80] தாமே நெய்த கதர்த் துண்டினையும், காந்தியடிகளைப்பற்றிய நூல்களையும் ஆனந்தனுக்குப் பரிசாகக் கொடுத்து ''இந்தக் கதர்தான் உண்மையின், அன்பின், பக்தியின் சின்னம் என்று நான் கருது

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கிறேன்...''[81] என்று கதராடைத் தொண்டர் கூறுவது அகிம்சையின் பாற்பட்டவர் அவர் என்பதை உணர்த்தும். ஆனந்தனின் மனத்தை அகிம்சை வழியில் திருப்ப உதவுகிறது இப்பாத்திரம்.

அகிம்சைக்கு எதிரானவனாக அமையும் நாகலிங்கம், தான் செய்த கொலைக்காக ஒன்றும் அறியாத சங்கரமூர்த்திக்குத் தண்டனையும் வாங்கிக் கொடுக்கிறான். இன்று தொழுநோயாளியான அவனது இதயம் அவனைக் குத்திக்காட்டுகிறது. இறுதியில் அவன் மனக்கண்கள் திறக்கின்றன.

பாத்திரப் படைப்பு-ஒரு மதிப்பீடு

இக்கதைகளில் அகிம்சை வழியில் அமையும் கதைமாந்தரை இருவகையினராகப் பகுக்கலாம். அச்சம் சிறிதுமின்றி அகிம்சை வழியில் நடப்பதன்வழி, உயிரையும் இழக்க முன்வருபவர் ஒரு வகையினர். அகிம்சையின் சிறப்பை மதித்து வாழ்பவர் மற்றொரு வகையினர்.

அகிம்சை வழியில் நடப்பவர் எதற்கும் அஞ்சாமல் செயற்படுபவராக இருக்க வேண்டும் என்ற காந்தியடிகளின் கருத்திற்கேற்பச் சாத்வீக வீரன், பத்மநாபன் ஆகியோர் அமைகின்றனர். தீமையாளர் எதிர்க்கும்போது சாத்வீக வீரன், பத்மநாபன் ஆகியோர் அஞ்சாமல் தம் உயிரையும் இழக்க முன் வருகின்றனர். இவர்கள் ஆன்ம சக்தியால் தீமை செய்பவர்களை நிலைகுலையச் செய்வதன்வழி அகிம்சையின் ஆற்றலை உணர்த்துகின்றனர். இம்சைச் சூழற்கிடையே தமக்குப் பழக்கமில்லாத பெண்ணுக்கு உதவி செய்த தெலுங்கர், அன்பின் திறனை உணரச்செய்கிறார்.

அகிம்சையின் சிறப்பை மதிப்பவர்களாகச் சித்திரிக்கப்பட்டவருள் 'கங்கை இன்னும் வற்றிவிடவில்லை' என்ற கதையின் தலைவர், இந்திய நாட்டில் அகிம்சை என்றும் வற்றாத கங்கையாக ஓடுகிறது என்பதை உணர்த்துபவராக அமைகிறார். மற்றொருவரான கதராடைத் தொண்டர் அகிம்சையின் சின்னம் கதர் என்பதைச் சுட்டுபவராகப் படைக்கப்பட்டுள்ளார்.

அகிம்சை வழியில் அமையாத வல்லான், தம்பியப்பா ஆகியோர்தம் படைப்பில், இம்சையின் போக்கானது அகிம்சைச் செயற்பாட்டிற்குமுன் வீழ்வதாகக் காட்டப்படுவதன் வாயிலாக அகிம்சையின் இணையற்ற சக்தி உணர்த்தப்படுகிறது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இறுதியில் அகிம்சை வழிக்கு மாறும் பாத்திரங்களாக இராமாமிர்தம், நாகலிங்கம், ஆனந்தன் ஆகியோர் சித்திரிக்கப் பட்டுள்ளனர். அவர்களுள், முன்னாளில் அகிம்சைப் போராட்டத் தில் பக்குவப்பட்ட இராமாமிர்தம், இடைக்காலத்தில் போட்டி, பொறாமைகளுக்கு ஆளாகி, இறுதியில் அன்பு வழிப்பட்டவராக அமைகிறார். நாகலிங்கம் இம்சை வழியில் ஆனந்தனின் தந்தைக்குத் தண்டனை வாங்கிக்கொடுத்தபின் அணுஅணுவாகத் துன்பம் அனுபவிப்பதாகக் காட்டப்படுகிறான். பழிக்குப்பழி என்ற உணர்வு குடிகொள்ளும் போது, ஆனந்தனிடம் மனத்தடுமாற்ற மும், தவிப்பும் ஏற்படுகின்றன. அன்பால் அவன் உள்ளம் நிறைந்து பகையுணர்வு மறையும்போது, அவன் மனிதாபிமானம் சிறப்படைகிறது. ''வன்முறையைவிட அகிம்சையே உயர் வானது தண்டிப்பதை விட மன்னித்து விடுவதே ஆண்மை மிக்கது''[82] என்ற காந்தியடிகளின் வாக்கினை இவர்கள் படைப்புச் சிறப்பிக்கிறது.

இக்கதைகளில் அகிம்சை வழியில் அமைபவர், அவ்வழிக்கு எதிரானோர், அவ்வழிக்கு மனம் மாறுபவர் ஆகிய முத்திறத் தினரைப் படைத்து, அவர்களின் மூலம் அகிம்சையின் ஆற்றலை ஆசிரியர்கள் விளக்கியுள்ளனர்.

உத்திகள்

கொள்கையை விளக்கும் உரை

'கங்கை இன்னும் வற்றிவிடவில்லை'யில் ''கங்கை [அகிம்சை] என்பது ஒவ்வோர் இந்தியனின் இரத்தத்திலும் ஓடுகிற கருணை யாக இருக்கும்வரை அது வற்றவே வற்றாது''[83] என்ற பிரசாரம் போன்ற உரை, அகிம்சையின் குறைவற்ற தன்மையைச் சுட்டுகிறது.

'அண்ணலே உன் வழி'யில், ''அன்பனே, குற்றம் செய் வோரைத் தண்டிக்காதே, மாறாக அவர்களிடம் அன்பு பூண் டொழுகு. அன்பினாலும், பாசத்தினாலும் அவர்களைக் கட்டு. குற்றவாளிகள் குற்றம் செய்வதற்கென்றே பிறந்தவர்கள் என எண்ணாதே... அவர்களும் திருந்த ஒரு வாய்ப்புக் கொடு..''[84] என்பது அறவுரைபோல் அமைந்து கொள்கையை விளக்க உதவுகிறது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அட்டவணை : 2 **அகிம்சைக் கொள்கை-கதைமாந்தர்**

எண்.	கதைகள்	அகிம்சைவழியில் அமைபவர்கள்	அகிம்சைவழியில் அமையாதவர்கள்	அகிம்சையைக் கருத்தளவில் சுட்டுபவர்கள்	தொடக்கத்தில் அகிம்சை வழியில் அமையாமல் இறுதியில் மனமாற்றம் அடைபவர்கள்	தொடக்கத்தில் அகிம்சை வழியில் அமைந்து இடையில் பிறழ்ந்து இறுதியில் மனமாற்றம் அடைபவர்கள்
1	'நரநாராயணன்'	சாத்வீக வீரன்	வல்லான்	—	—	—
2	'இராவணாகாரம்'	பத்மநாபன்	தம்பியப்பா, கணக்கர்	—	—	—
3	'கங்கை இன்னும் வற்றிவிடவில்லை'	தெலுங்கர்	பாராளுமன்ற உறுப்பினர், 'கௌபாய் சூட்டையன்'	கதைத் தலைவர்	—	—
4	'சிலையும் சிந்தனையும்'	—	—	—	—	இராமாமிர்தம்
5	'அண்ணலே உன்வழி'	—	—	கதராடைத் தொண்டர்	ஆனந்தன், நாகலிங்கம்	—

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அணுகுமுறை

அன்பு நெறியில் செல்லும் சாத்வீக வீரனிடம் இறைவனே வந்தடைகிறார் ('நரநாராயணன்'). அன்பால் உதவிய தெலுங்கரின் செயல் பெருமைக்குரியதாகக் கதைத் தலைவரால் போற்றப் படுகிறது ('கங்கைஇன்னும் வற்றிவிடவில்லை'). மன்னிக்கும் மனப் பாங்கை இராமாமிர்தம் அடையும்போது, அவரது உள்ளத்தில் ஒளிவும் மறைவும் இல்லாத நிலை ஏற்படுகிறது ('சிலையும் சிந்தனையும்'). தவறு செய்பவனை மன்னிப்பதே கடவுள் தொண்டு என ஆனந்தன் ஆன்ம நிறைவடைகிறான் ('அண்ணலே உன் வழி'). இந்நான்கு கதைகளிலும் கொள்கையின் சிறப்பு நேர்முக முறைகளில் விளக்கமுறுகிறது.

அகிம்சையின் விளைவு உயர்வு, இம்சையின் விளைவு வீழ்ச்சி என்ற அடிப்படையில் அகிம்சையை மேற்கொள்ளும் பத்மநாபன், அனந்தனின் உள்ளத்தில் பெருமைக்குரியவராக அமைய, இம்சையை மேற்கொள்ளும் தம்பியப்பா சிறுமைக்குரிய வராக அமைகிறார் ('இராவணாகாரம்'). இக்கதையில், நேர்முக, எதிர்மறை அணுகு முறைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

தூய அகிம்சை எல்லாவற்றிலும் பரவும்போது தொட்டதை யெல்லாம் தன்மயமாக்கும் எல்லையில்லாச் சக்தியுடையது என்ற[35] காந்தியடிகளின் கருத்திற்கேற்ப அகிம்சையின் சிறப்பை விளக்கப் பெரும்பாலும், கதைகளில் நேர்முகமுறை பயன்படுத்தப் பட்டுள்ளது.

கொள்கையை விளக்க உதவும் தலைப்பு

கருத்தினை வெளிப்படையாக விளக்க உதவும் தலைப்புகள் 'சிலையும் சிந்தனையும்', 'அண்ணலே உன் வழி' என்பன வாகும். குறியீட்டுத் [Symbolic] தலைப்புகளாக 'நரநாராயணன்', 'இராவணாகாரம்', 'கங்கை இன்னும் வற்றிவிடவில்லை' என்பன அமைகின்றன.

காந்தியடிகளின் சிலை அன்பு வழிச் சிந்தனைக்கு இட்டுச் செல்லும் நிலையில் 'சிலையும் சிந்தனையும்' என்ற தலைப்பு அமைகிறது. காந்தியடிகளின் வழி அகிம்சையாகும். பகைமையைப் போக்க அகிம்சையே வழி என்பதை உள்ளடக்கும் நிலையில் அமைவது 'அண்ணலே உன் வழி' என்ற தலைப்பாகும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அசுரர்களுக்கும் தேவர்களுக்கும் நடந்த போரில் தேவர்களைச் சிறப்படையச் செய்யும் நாராயணக் கடவுள் போல, இம்சைக்கும் அகிம்சைக்கும் இடையே ஏற்படும் போராட்டத்தில் அகிம்சையைச் சிறப்படையச் செய்யும் நரநாராயணன், சாத்வீக வீரன் உருவில் உள்ள காந்தியடிகள் என்பதை உணர்த்துமாறு 'நரநாராயணன்' என்ற குறியீட்டுத் தலைப்பு அமைகிறது. வீழ்ச்சியைத் தந்த இராவணனது கொடுங்கோன்மைபோல், வீழ்ச்சியைத் தரவிருக்கும் இம்சையின் கொடுமையைச் சுட்டுவதாய், 'இராவணாகாரம்' என்ற தலைப்பு அமைகிறது.

''அகிம்சை என்பது குறைவற்றதோர் நிலை.''[86] அத்தகைய அகிம்சை இந்திய மண்ணில் எத்தகைய இம்சைச் சூழல்களுக்கிடையேயும் குறைந்துவிடாது என்பதைக் குறிப்பால் விளக்குகிறது, 'கங்கை இன்னும் வற்றிவிடவில்லை' என்ற தலைப்பு.

காந்தியத் தாக்கத்தை உணர்த்தும் பிற உத்திகள்
காந்தியப் பின்னணி

'நரநாராயண'னில், ''சுதந்திர தேவதை குகைக்குள் பதுங்கிக் கொண்டாள். இருந்தும் நாற்றிசையும் 'அச்சமில்லை, அச்சமொன்றுமில்லையே' என்ற சப்தமே பேரிகைபோல் முழங்கியது. இது வெஞ்சிறையில் வாழும் சாத்வீகர்களின் இதய கீதம்''[87] என்ற இப்பகுதி காந்தியடிகளின் காலத்தில் வல்லரசின் பிடியில் உழன்ற இந்திய நிலையைக் காட்டும்.

'இராவணாகாரம்' என்ற கதையில், ''காந்தியடிகள் வகுத்துக் கொடுத்த நிருமாண வேலைத் திட்டப்படி 1931-ஆம் ஆண்டில் பாரதம் முழுவதும் மதுபானக்கடை மறியலும், விதேசித் துணிக்கடை மறியலும் மும்முரமாக நடந்து கொண்டிருந்தன. நம் தமிழகத்திலும் இது எதிரொலி செய்து கொண்டிருந்தது''[88] என்ற காந்திகால நிகழ்ச்சிப் பின்னணி இடம் பெறுகிறது.

'கங்கை இன்னும் வற்றிவிடவில்லை'யில், ''சுதந்திரப் போராட்டக் காலத்தில் இமயம் முதல் குமரி வரை ஒற்றுமைப்பட்டு 'வெள்ளையனே வெளியேறு'''[89] என்று குரல் கொடுத்த நிகழ்ச்சிப் பின்னணி சுட்டப்படுகிறது. 'சிலையும் சிந்தனையும்' என்பதில், ''இராமாமிர்தம் இத்தனைக்கும் வெள்ளைக்கார சார்ஜெண்டு பூட்சு காலில் உதைபட்டவர், மறியல் செய்த தேச

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பக்தர்''[90] என்ற பகுதி காந்தி கால நிகழ்ச்சிப் பின்னணியைக் குறிப்பிட உதவுகிறது.

இவ்வாறு காந்தியடிகளின் காலத்து நிகழ்ச்சிகள் இடம் பெறுவதன் வாயிலாகவும், சுட்டப்படுவதன் வாயிலாகவும் காந்தியத் தாக்கம் அமைகிறது.

காந்தியடிகளின் வாக்கைச் செயற்படுத்தல்

குடிகாரர்களிடம், குடியின் கேடுகளை எடுத்துரைத்து உண்மையை உணர்த்தும் முறையில் அமைதியாக மறியல் செய்தல் வேண்டும் என்கிறார் காந்தியடிகள்.[91] அவர் கூற்றிற்கேற்ப, 'இராவணாகார'த்தில் தொண்டர்கள், ''ஐயா, கள்ளு குடிக்கப் போகாதீர்கள். அது உங்களுக்குப் போதையுண்டு பண்ணி உடம்பைக் கெடுக்கும்...தயவுசெய்து திரும்பிப் போய் விடுங்கள்''[92] என்று கைகூப்பி வணக்கம் செய்து பணிவாகக் கேட்டுக் கொள்ளலாயினர். சத்தியாக்கிரகி, குடிப்பவர் மீது வன்முறை மேற்கொள்ளப்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்ற காந்தியடிகளின் கருத்திற்கேற்பக்[93] கட்குடியர் மூர்க்கத்தனமாகத் தம்மைப் பேசினாலும் அவர்களுக்கு ஊறு விளைவிக்காமல், அவர்களைக் கும்பிடுவது போல் தரையில் குறுக்கே விழுந்து வழி மறிக்கின்றனர் அத்தொண்டர்கள். இவ்வாறு காந்தியடிகளின் வாக்கைச் செயற்படுத்துவதாகச் சித்திரித்துக் காந்தியத் தாக்கம் உணர்த்தப்படுகிறது.

காந்தியடிகளின் கருத்தை அல்லது வாழ்க்கை நிகழ்ச்சியை நினைவுறுத்தல்

'நரநாராயண'னில் ''முதலில் உங்களையே நீங்கள் அடக்கி யாளுங்கள், வென்று வாருங்கள், என் நாட்டுக்கு வர வழி திறக்கும்''[94] என்று கடவுள் கூறுவதாக ஒரு பகுதி அமைகின்றது. இது காந்தியடிகள் கூறும் ''அந்த வியக்கத்தக்க விவரிக்கமுடியாத பாபமற்றதோர் [ஐம்புலனுக்கு வசமாகாத] நிலையில் மற்றவை யெல்லாம் நீங்கித் தம்முடன் கடவுள் இருப்பதை ஒருவர் உணர முடியும் என்பது எனது நம்பிக்கை''[95] என்ற கருத்தை நினைவு படுத்துகிறது.

'கங்கை இன்னும் வற்றிவிடவில்லை' என்பதில் கதைத் தலைவரின் மனம் ''இப்படிப்பட்ட குடிசைகளில் எல்லாம் மங்கல விளக்குப் பிரகாசமாக எரிய வேண்டுமென்றல்லவா எங்கள் காந்தி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இந்த நாட்டுக்கு விடுதலையை வேண்டினார்''[96] என்று சிந்திப்பதாக உள்ளது. இது, ''[ஏழைக் கிராமவாசிகள்] ஒவ்வொருவருக்கும் சத்துள்ள உணவும், குடியிருப்பதற்கு ஏற்ற வீடும், குழந்தைகளின் கல்விக்கு வேண்டிய வசதிகளும், போதுமான மருத்துவ வசதியும் இருக்க வேண்டும்''[97] என்ற காந்தியடிகளின் கருத்தை நினைவுகூரச் செய்யும். இவ்வாறு காந்தியத் தாக்கம் அமைகிறது.

காந்தியடிகளின் புகழ் போற்றப்படல்

'நர நாராயண'னில் காந்தியடிகளை உருவகமாகக் கொண்ட வீரனை வகுப்புவாதம் மும்முறை சுடும்போதும், அன்பு நெறியில் செல்லும் நான் தோற்கவில்லை என்றே பதிலளிக்கிறான். அவ்வீரனின் செயலுக்கு உலகம் வியப்பதாயும், பாட்டுக்கொரு புலவன் ''உனக்கினி யம பயமேது'' என்று பாடுவதாயும் குறிப்பிடுவதன் மூலம் காந்தியடிகளின் புகழ் போற்றப்படுகிறது.

''சூரியன் அஸ்தமிக்காத பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தையே கிடுகிடுக்கவைக்கிற காந்தியத் தொண்டர்கள்''[98] என்னும் பகுதியில் தொண்டர்களின் ஆற்றல் சுட்டப்படுவதன் வழி, காந்தியடிகளின் புகழ் போற்றப்படுகிறது. மற்றோரிடத்தில் ''... மகாத்மா காந்திக்கு ஜே''[99] என்ற தொண்டர்களின் அறைகூவல்வழி அவரது புகழ் உணர்த்தப்படுகிறது.

'கங்கை இன்னும் வற்றிவிடவில்லை' யில் ''நீண்ட நாட்கள் அடிமைப்பட்டுக் கிடந்தபின் முதன் முதலாக எங்கள் காந்தியின் மனத்தில் கங்கை சுரந்தது. அது கருணையாக விடுதலை வேட்கையாகத் தரித்திர நாராயணர்களுக்கு உதவும் நெகிழ்ச்சியாகச் சுரந்து பாரத தேசமெங்கும் பெருகி நனைத்தது''[100], என்ற பகுதியில் அகிம்சையின் மூலம் காந்தியடிகள் விடுதலை வாங்கிக் கொடுத்ததும், கடையனுக்கும் கடைத்தேற்றம் கிட்டுமாறு செய்ததும் போற்றப்படுகின்றன.

'சிலையும் சிந்தனையும்' என்பதில் இராமாமிர்தம், ''காந்தியின் அருமை எந்தப்பயலுக்கு நம்மூரில் தெரியும்? கொள்ளை அடிக்கத்தான் தெரியும்! கறுப்பு மார்க்கெட்டு, வெள்ளை மார்க்கெட்டு இரண்டையும் எவன் விட்டான்?''[101] என்று கூறுவதன் மூலம் காந்தியடிகளின் நேர்மை புகழப்படுகின்றது.

இவ்வாறெல்லாம் காந்தியடிகளையும் அவர்தம் செயல்களையும் புகழ்வதன் மூலம் காந்தியத் தாக்கம் இடம்பெறுகிறது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

காந்தியடிகளுடன் தொடர்புடையவை இடம் பெறல்

காந்தியடிகளுடைய தாரக மந்திரமாகிய "ஹே ராம்" என்ற சொல் 'நரநாராயண'னில் இடம் பெறுகிறது. சாத்வீக வீரன், தன் உயிர் பிரியும் வேளையிலும், ராமநாமத்தை உச்சரிக்கிறான். காந்தியடிகள் தம் உயிர் உடலைவிட்டு நீங்கும் வரையில் ராம நாமம் உதட்டைவிட்டு நீங்கக்கூடாது என்று கூறிய ஓர் ஆண்டு கழித்து அதே நாளில் அவர் உயிர்விடும் தறுவாயில் இறுதிச் சொல்லாக 'ராமராம' என்று இரு முறை சொல்லக் கேட்டதாக மனுகாந்தி கூறுவது இங்கு நினைத்தற்குரியது.[102]

'அண்ணலே உன் வழி'யில் கதராடை என்ற சொல் அந்த ஆடை அணிந்த தொண்டர் அன்பானவர், உண்மையானவர் என்பதை உணர்த்தப் பயன்படுத்தப்படுகிறது. "சத்தியத்திலும் அகிம்சையிலும் வேரூன்றப்படுவதற்காக நாம் கதரை மேற்கொண்டிருக்கிறோம்"[103] என்பது காந்தியடிகளின் கருத்து.

காந்தியடிகளுடன் நெருங்கிய தொடர்புடையவை இடம் பெறுவதன் வாயிலாகக் காந்தியத் தாக்கம் உணர்த்தப்படுகிறது.

காந்தியடிகளின் படம் இடம் பெறல்

'அண்ணலே உன் வழி' என்பதில் காந்தியடிகளைப்பற்றிய புத்தகத்தின் மேலுள்ள படம், தவறிழைத்தவரை அன்பினால் கட்டச் சொல்வது போல் சிரிப்பதாக உணர்கிறான் ஆனந்தன். இவ்வாறு குறிப்பிடுவதன் வாயிலாகக் காந்தியடிகளின் ஆளுமைத் தன்மையை உணர்த்தி அதன்வழிக்காந்தியத் தாக்கத்தை இடம் பெறச் செய்கிறார் ஆசிரியர்.

காந்தியடிகளோடும் அவர் காலத்தவரோடும் தொடர்புடைய பாடல்கள் இடம் பெறல்

காந்தியடிகளுக்கு விருப்பமான வழிபாட்டுப் பாடலான "இரகுபதி இராகவ இராஜாராம்" என்ற பாடலையும், உப்புச் சத்தியாக்கிரகத்தின் போது இடம் பெற்ற நாமக்கல் கவிஞரின் "கத்தியின்றி இரத்தமின்றி யுத்தம் ஒன்று வருகுது" என்ற பாடலையும், காந்தியடிகளின் காலத்தில் விடுதலை இயக்கத்தில் கலந்துகொண்ட பாரதியாரின், 'வீர சுதந்திரம் வேண்டி நின்றார்'; 'என்று தணியும் இந்தச் சுதந்திர தாகம்' என்ற பாடல்களையும், 'இராவணாகார'த்தில் சத்தியாக்கிரகிகள் பாடிக்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கொண்டு வருவது அவர்களுடைய விடுதலை ஆவேசத் துடிப்பை உணர்த்தும்.

இவ்வாறு காந்தியடிகளின் காலத்தில் அவரோடும் பிற கவிஞர்களோடும் தொடர்புடைய பாடல்களைக் கையாளுவதன் மூலமாகக் காந்தியத் தாக்கம் இக்கதைகளில் இடம் பெறுகிறது.

காந்தியடிகளுடன் தொடர்புடையவர்களைச் சுட்டல்

விடுதலைப் போராட்டக் காலத்தில் காந்தியடிகளுடன் பல தலைவர்கள் அப்போராட்டத்தில் பங்கு கொண்டனர். அவர்களில் ஒருவரான கேளப்பர் 'இராவணாகாரா'த்தில் சுட்டப்படுகிறார். காந்தியடிகளின் போராட்டத்தில் கலந்து கொண்ட இவரை, 'கேரளாவின் காந்தி' என்று அழைப்பர்.

'கங்கை இன்னும் வற்றிவிடவில்லை' என்ற கதையில் தாகூர், பாரதி போன்ற தேசியக்கவிஞர்களும், நேரு, சுபாசு போன்ற விடுதலைத் தலைவர்களும் சுட்டப்படுகின்றார்கள்.

நாட்டு விடுதலை இயக்கத்தில் காந்தியடிகளின் பணிகளில் பங்கு கொண்டவர்களையும் அவர்மீது அன்பு கொண்டவர்களையும் சுட்டுவதன் வாயிலாகக் காந்தியத் தாக்கம் இடம் பெறுகிறது.

காந்தியடிகளின் பெயரில் அமையும் பொருள்கள்

காந்தி மண்டபம் என்ற சொல் 'கங்கை இன்னும் வற்றி விடவில்லை'யில் இடம் பெறுகிறது. காந்தி மண்டபத்தைத் தெரியாத நிலையில் இவ்வளவு வேகமாகவா காந்தியை மறந்து விட்டார்கள் என்று கதைத்தலைவர் கூறுவதன் வாயிலாகக் காந்தியடிகள் என்றென்றும் மறக்கக்கூடியவர் அல்லர் என்பது புலப்படுத்தப்படுகிறது.

'சிலையும் சிந்தனையும்' என்பதில் "காந்தி சிலை" இடம் பெறுகிறது. அன்பிற்கு இடமான அச்சிலையின் சிறப்பை உணராத மக்கள் அதனைத் தீய செயலுக்கு உடந்தையாக்குவது தவறு என்பதை உணர்த்த அதனை இடம்பெறச் செய்துள்ளார் ஆசிரியர். இவ்வாறு காந்தியடிகளின் பெயரில் அமையும் பொருள்களை இடம்பெறச் செய்யும் நிலையில், இக்கதைகளில் காந்தியத் தாக்கம் அமைந்துள்ளது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இனி, ஆய்வுக்குரிய தொகுப்பு நூலில் உள்ள கதைகளின் ஆசிரியர்களால் எழுதப்பட்ட பிற கதைகளில் காணப்படும் அகிம்சைக் கொள்கை பற்றிய ஆய்வு அமைகிறது.

அகிம்சைக் கொள்கை அமைந்துள்ள பிற கதைகள்

அகிம்சையைக் கருவாகக் கொண்டுள்ள கதைகளாக நா. பார்த்தசாரதியின் 'புதிய பாலம்', ஸரோஜா ராமமூர்த்தியின் 'நினைவிலே நடந்து...', பி. எஸ். ராமையாவின் 'தரிசனம்' என்பன அமைகின்றன. அகிலனின் 'ஏழைப் பங்காளர்' என்பதில் பாத்திரத்தின் வழியும், சி. சு. செல்லப்பாவின் 'கேள்விக்கு பதில்' என்பதில் கதைப் பின்னலிலும், கல்கியின் 'பொங்கு மாங்கடல்', எஸ். ரெங்கநாயகியின் 'இதய கீதம்' ஆகியவற்றில் கருத்துச் சொற்றொடர்களிலும் அகிம்சையின் சிறப்பு உணர்த்தப் படுகிறது.

'புதிய பாலம்' என்பதில் ஏழைகளின் நலன் கருதிக் குருவிப்பட்டி வடதெற்கு ஊர்களுக்கு இடையில் கட்டப்பட்ட பாலம், செல்வாக்கு நிறைந்த செல்வர்தம் தீய செயல்களுக்குப் பயன்படுத்தப்படுங்கால், அத்தீமையை அமைதி மறியல்வழி எதிர்க்கிறான் பொன்னம்பலம். அகிம்சைப் போராட்டத்தின் முதற்படியில் நின்று, பணிவுடன் ஏழை நலனுக்காகக் கட்டப் பட்டது அப்பாலம் என்று எடுத்துக் கூறுகிறான். ஏழைகளுக்கு எதிராக மேலிட உத்தரவு அமையும்போது, மேலும் மறியலைத் தொடர்ந்து கடும் தாக்குதலுக்கு ஆளாகிறான். 'அகிம்சைவழியில் போராடுபவன் தீமை செய்வோருக்கு எத்தகைய துன்பமும் தராமல் தானே துன்பத்தை வலிய ஏற்பான்' என்பது கதைக்கரு.

'நினைவிலே நடந்து...' என்ற கதையில் வார்தாவிற்குத் தன் கணவன் ராமதுரையுடன் வரும் ராஜம் என்பவள் தோட்டக் காரன் மனைவி மங்களாவின் ஏழ்மைக்கு இரங்கி அவள் குழந்தையை வளர்க்க முற்படுகிறாள். ஆற்றில் தவறி விழுந்த குழந்தையை ராஜம் மருத்துவத்தினால் பிழைக்க வைத்தும், அவளுக்குத் தெரியாமல் குழந்தையுடன் ஊரைவிட்டுச் சென்று விடுகிறாள் மங்களா. அவளுடைய தாய்மை உணர்ச்சியைப் புண்படுத்துமாறு குழந்தையை வைத்துக்கொண்டதும் இம்சையே என்பதை அறிந்து வருந்துகிறாள் ராஜம்.

'எண்ணத்தாலும் பிறருக்குத் துன்பம் விளைவிக்காமல் இருப்பதே அகிம்சை'[104] என்ற காந்தியடிகளின் கருத்து, கதைக்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கருவாக உள்ளது. ''எந்த ஒரு செயலும்... அதை ஏற்றுக்கொள் கிறவனின் மனத்துக்கு உகந்ததாகவும் அவனை ஹிம்சைக்குள் இழுத்துச் செல்லாமலும் இருக்க வேண்டும் என்று சொன்னவர் பாபுஜி''[105] என்ற ராஜத்தின் கூற்றுவழிக் கரு விளக்கமுறுகிறது.

'தரிசனம்' என்பதில் திருப்பதி கோயிலருகில் தங்கிய மருதாசலம் இறைவனை வழிபடுவதற்குப் புறப்படுகிறார். இந்து முகமதியர் கலவரத்தில் பாதிக்கப்பட்ட பெண் ஒருத்தி, தன் கணவனைப்பற்றி அறியாத நிலையில் இறைவனிடம் முறையிட வந்ததைக் கூறி அவரிடம் பண உதவி கேட்கிறாள். அவர் தனது காணிக்கைப் பணத்தை அவளிடம் கொடுத்துவிட்டு வழிபாடு நிறை வேறிவிட்டது என்று கூறி வீட்டிற்குப் புறப்படுகிறார். 'ஏழைக்கு இரங்கி உதவுவது கடவுளைக் காணுதற்கு இணையானது' என்பது கதைக்கரு. 'அகிம்சை வழி இறைவனைக் காணலாம்'[106] என்கிற காந்தியடிகளின் கூற்று நினைவுகூர்தற்குரியது.

'அன்பை அலட்சியப்படுத்தக்கூடாது' என்ற கதையில் மாமா தனக்கு அன்புடன் அளித்த நூலைப் படித்தபின், நண்பனுக்கு விற்றுவிட்டதாகப் பாபு கூறுகிறான். காந்தியடிகள் சென்னைக்கு வந்தபோது, நடேசன் என்பவரது இல்லத்தில் சிறுவன் ஒருவன் அன்புடன் அளித்த எழுதுகோலைத் தவிர வேறு எழுதுகோலால் எழுத மறுத்த நிகழ்ச்சியைச் சுட்டும் பாபுவின் தாய், அன்பின் சக்தியை உணர்த்துகிறாள். பாபுவும் அந்தப் புத்தகத்தை வாங்கி வந்து காந்தியடிகளைப்போல் இருக்கப் போவதாகப் பெருமிதம் கொள்கிறான். 'அன்பு மதிக்கத்தக்க ஆற்றலுடையது' என்பது இக்கதையின் கருவாகும்.

'ஏழைப் பங்காளர்' என்ற கதையில் தேசத் தியாகி சீனிவாசன் என்ற பாத்திரப் படைப்பின் வழி அன்பின் ஆற்றலைப் புலப்படுத்துகிறார் ஆசிரியர். எழுபது வயதைக் கடந்த சீனிவாசன் திருப்பதிக் கோயிலில் மக்களினம் நலம்பெற இறைவனை வேண்டு கிறார். எல்லா உயிரிடத்தும் நல்லெண்ணத்துடன் இருக்கும் நிலையே அகிம்சை என்ற காந்தியடிகளின் கூற்றிற்கேற்ப இப் பாத்திரப்படைப்பு அமைகிறது. ''வேங்கடேசா!.. ஏழை எளிய வங்க பட்ற கஷ்டத்தைப் பார்த்தா அதைத் தீர்க்க முடியாமல் இந்த உசிரை வச்சிக்கிட்டிருக்கிறது எனக்குப் பாவம்னு தோணுது. அவுங்களுக்கு வேலை குடு, சோறு குடு, பணம் குடு''[107] என்று

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சீனிவாசன் வேண்டுவது பிறர் நலம் பேணும் அகிம்சையின் ஆற்றலை உணர்த்தும்.

'கேள்விக்கு பதில்' என்ற கதையின் பின்னலில் மருதநாயகம் என்ற சத்தியாக்கிரகி அகிம்சையின் தன்மையை விளக்குகிறார். அகிம்சை ஒரு கோழையின் ஆயுதம் என்ற கருத்திற்கு அடிமையாகும் குமரேசன் சிறை விதிகளை மீறக்கூடாது என்று காந்தியடிகளுக்குக் கொடுத்த வாக்குறுதிக்குப் புறம்பாகச் சிறை விதியை மீறி அடிவாங்கி 'ஐயோ' என அலறுகிறான். ''கோழையின் ஆயுதம் அஹிம்சையா? பலாத்காரமா? என்ற கேள்விக்கு அந்த 'ஐயோ' தான் எனக்குப் பதில் அறிவித்தது''[108] என்கிறார் மருதநாயகம். அகிம்சை கோழையின் ஆயுதம் அல்ல என்ற காந்தியடிகளின் கருத்தைக்[109] குறிப்பால் விளக்கமுறச் செய்கிறார் அவர்.

அகிம்சையின் சிறப்பைக் காந்தியடிகள் தம் செயல் மூலம் உலகத்திற்கு விளக்கியமை சில கதைகளில் சில கருத்துச் சொற்றொடர்களால் தெளிவாகிறது. 'பொங்கு மாங்கடல்' என்ற கதையில் ''பலாத்கார பயங்கரங்கள் எல்லாம் இல்லாமல் அஹிம்சா முறையில் இந்தியாவுக்குச் சுதந்திரம் வாங்கிக் கொடுத்த மகாத்மாவை வாழ்த்திக் கொண்டே இறங்கினேன்...''[110] என்கிறார் கதைத்தலைவர். ஆங்கிலப் பேரரசிடமிருந்து விடுதலை பெற அகிம்சையின் சக்தி பயன்பட்டமை சுட்டப்படுகிறது. ''இந்தியா வன்முறை வழிகளைக் கையாண்டு விடுதலை பெறுவதை நான் விரும்பவில்லை. ஏனென்றால் அது உண்மையான விடுதலையாகாது''[111] என்ற காந்தியடிகளின் கூற்று நினைத்தற்குரியது.

'இதய கீதம்' என்ற கதையில் ரகுபதி என்பவர் அகிம்சையைக் காந்தியடிகள் வற்புறுத்தியமைக்கு உரிய காரணங்களில் ஒன்றைக் கூறும்போது, ''...ஆத்மாவின் சம்பந்தம் உடலுக்கு ரொம்பத் தேவைப்படுகிறது. அதனால்தான் காந்திஜீ அன்பை ரொம்ப வற்புறுத்தினார்''[112] என்று விளக்குகிறார். இக்கருத்துடையவர் காந்தியடிகள் என்பது அவரது ''தன் ஆன்மாவை உணரும்பொழுது [மனிதன்] அகிம்சையாளனாகிறான்''[113] என்ற கூற்றால் தெளிவாகும்.

இதே கதையில் ''...ஆனால் காந்திஜீயைப் போல உன்னால் இருக்க முடியவில்லை. நீ கோழையாக இருக்கே''[114]; ''காந்தி தம் மனைவியிடம் வெளிப்படையாகச் சத்தியத்தைக் காட்டியிருக்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கிறார். நீயோ மனைவியிடம் சத்தியத்தைக் காட்டத் தயங்கறே''[115] என்பன அகிம்சை, கோழைத்தனத்திலிருந்து பிறந்ததன்று, அச்சம் கொண்டவர்கள் அகிம்சையைக் கடைப் பிடிக்க முடியாது என்ற காந்தியடிகளின் கூற்றினை விளக்க உதவுகின்றன.[116]

இக்கதைகளால் அறியப்படுவன

1. காந்தியடிகள் அரசியல் சமூக விடுதலைக்கு அகிம்சையைக் கருவியாகக் கொண்டார்.

இயல்பான மனிதப் பண்பு அகிம்சைப் பண்பாகும் என்பது காந்தியடிகளின் கருத்து.[117] அவர் சமுதாயப் போராட்டங்களிலும் அகிம்சையைச் செயற்படுத்தித் தமக்கென ஒரு முத்திரையைப் பதித்துக் கொண்டவர். நாடு அந்நிய அரசின் கரங்களில் சிக்கிய போழ்து, அவர் அகிம்சைவழியில் மக்களை ஒன்றுபடுத்தி ஆன்மீக பலத்தில் அதிகார இனத்தைப் பணியவைத்தார் ('நரநாராயணன்'). வன்முறை எதுவுமின்றி அகிம்சைவழியில் அரசியல் விடுதலையைப் பெற்றார் ('அமரவாழ்வு').

நாட்டு விடுதலையுடன் சமூக விடுதலைக்கும் முயன்ற காந்தியடிகள், சமூகம் விழிப்புணர்ச்சி பெற்று நலன் பெறவும் அன்புவழியைப் பயன்படுத்தினார். அகிம்சைவழியில் வகுப்பு ஒற்றுமைக்கு வித்திட்டார் ('நரநாராயணன்'). அவர் வகுத்துக் கொடுத்த நிருமாண வேலைத்திட்டத்தின்படி நாடு முழுவதும் மதுக்கடை, அந்நியத் துணிக்கடை மறியல்கள் நடைபெற்றன ('இராவணாகாரம்'). சமுதாயத்தில் ஏழ்மையைப் போக்கும் நெகிழ்ச்சியாக அவரது அகிம்சைப்புனல் பெருகியது ('கங்கை இன்னும் வற்றிவிடவில்லை').

2. அகிம்சையின் ஆற்றல் அளத்தற்கரியது. அது வீரர்களின் ஆயுதம். அவர்கள் பிறரைத் துன்புறுத்தாமல் துன்பங்களைத் தாமே வலிய ஏற்பர்.

காந்தியடிகளின் தலைமையில் அவர் வழியில் நின்று போராடியவர்கள் அகிம்சையின் இலக்கணத்தைத் தெளிவுறுத்தியுள்ளனர். போராட்டத்தில் ஈடுபட்டவர்கள், மறியலை மேற்கொண்டு அகிம்சையின் ஆன்மீக ஆற்றலை உணர்த்தியுள்ளனர் ('இராவணாகாரம்'). போராட்டங்களில், அவர் வகுத்துக் கொடுத்த வழியை முறையாக மேற்கொள்ளாத கோழைகளுக்கு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அகிம்சை ஆயுதமாக இராது என்ற உண்மையைப் புலப்படுத்தியுள்ளனர் ('கேள்விக்கு பதில்'). அவர்காட்டிய வழியில் தீய செயலை எதிர்க்க முற்படும் அகிம்சைவாதி தாக்குதலுக்கு ஆளாகி, தீமையாளர்க்கு ஊறு விளைவிக்காமல் தானே துன்பத்தை ஏற்க வேண்டும் என்பதை நிறுவியுள்ளனர் ('புதிய பாலம்').

3. காந்தியத் தாக்கம் அன்பின் ஆற்றலை அறிந்து அதன்வழி நிற்க உதவுகிறது.

நடைமுறை வாழ்வில் அகிம்சையின் சக்தியை உணரவும், அன்புவழியில் சமூகத்தைப் பேண எண்ணவும், பகைவனை மன்னிக்கக் கருதவும் காந்தியத் தாக்கம் காரணமாக அமைந்துள்ளது. "...ஏமாற்றத்தை வெல்லக்கூடிய திறனை [அகிம்சையின் விளக்கத்தால்] பாபு எனக்கு ஏற்படுத்தி வருகிறார்".[118] குடும்பத்தலைவி ராஜத்தின் இக்கூற்றும், "அவங்களை [ஏழைகளை] மீட்கறதுக்காக அவங்களோட ஒண்ணாய்க் குப்பத்திலேயும், குடிசையிலேயும் வாழ்ந்த ஒருத்தரைத்தான் சுட்டுக் கொன்னுட்டாங்க...நீதான்எளியவங்களைக்காப்பாத்தனும்..."[119] என்று இறைவனை வேண்டும் தியாகி சீனிவாசனின் கூற்றும், "அண்ணலே உனது ஆணை... தவறு செய்பவனை மன்னிப்பதே கடவுள் தொண்டு..."[120] என்ற ஆனந்தனின் கூற்றும் மேற்கூறிய கருத்தை வலியுறுத்த உதவும்.

4. காந்தியடிகளின் வாழ்வும் வாக்கும் கற்போரிடம் சிறந்த மாற்றத்தை ஏற்படுத்த வல்லவை.

பகைவனது உயிர் துன்புறும்போது அவனுக்கு உதவ மறுக்கும் நிலையில், பழிக்குப்பழி வாங்கத்துடிக்கும் ஆனந்தன் போன்றோர் காந்தியடிகளின் வாழ்க்கைச் சரிதத்தால் மனமாற்றம் அடையமுடியும் என்பது ('அண்ணலே உன் வழி') நிறுவப்படுகிறது. காந்தியடிகளின் வாழ்க்கைச் சரிதம் அதனைப் படிப்பவரிடம் பெரும் மாற்றத்தைக் கொணருகிறது ('அண்ணலே உன் வழி').

5. காந்திய அகிம்சையைச் சிலர் உணராவிடினும் மனித வாழ்வில் என்றும் அது மேலோங்கி ஒளிர்வதாகும்.

காந்தியடிகளின் சிலை, பார்க்கும் மக்களிடம் ஆன்மீக உணர்வை எழுப்பிப் பொதுநலத் தொண்டில் ஈடுபடச்செய்யும் நோக்கத்துடன் வைக்கப்படினும், நடைமுறையில் சிலரால்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அவ்வாறு நடக்கமுடியவில்லை ('சிலையும் சிந்தனையும்'). ஒரு புறம் இவ்வாறு அமையினும் காந்தியடிகள் போற்றி வளர்த்த அகிம்சை, மனித சமுதாயம் என்றும் பின்பற்றுவதற்குரிய ஒன்றாய் விளங்கும். " இந்த அஹிம்சையின் சின்னம் [காந்தியடிகள்] லோக ஜனனியின் அம்சமான இந்தியத் தாயின் திருநுதலில் என்றென்றும் ஜொலிக்கும்"[121] என்ற ஆசிரியர் கூற்று அதனை வலியுறுத்தும்.

குறிப்புகள்

1 ஸ்ரீகிருஷ்ணதத்தபட், (தொ.ஆ.), யூதசமயம், பக். 24–25.

2 "உன் பகைவன் பசியினால் வருந்தினால் அவனுக்கு உணவு அளி. அவன் தாகத்தினால் தவித்தால் குடிக்கத் தண்ணீர் கொடு". — மேலது, ப. 46.

3 "தீமையோடு எதிர்த்து நிற்கவேண்டாம்; ஒருவன் உன்னை வலது கன்னத்தில் அறைந்தால் அவனுக்கு மறு கன்னத்தையும் திருப்பிக்கொடு" பைபிள் புதிய ஏற்பாடு, மத்தேயு, 3.39.

4 மேற்கோள்: கந்தசாமி, சோ.ந., பௌத்தம், தேவசேனாபதி, வ.ஆ., (மொ.பெ.ஆ.), ப. 134.

5 வேங்கடசாமி, மயிலை, சீனி, சமணமும் தமிழும், முதற் பகுதி, ப.17.

6 ஸ்ரீகிருஷ்ணதத்தபட், (தொ.ஆ.), பார்ஸி சமயம், ப. 52.

7 ஸ்ரீகிருஷ்ணதத்தபட், (தொ.ஆ.), இந்துமதம்: புராணங்கள், ப. 42

8 "உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை அற்றேதவத்திற் குரு" திருக்குறள், 27.1.

9 "இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண நன்னயம் செய்துவிடல்" — மேலது, 32.4.

10 சிறுபஞ்சமூலம், 37.

11 திருநாவுக்கரசு, ஏ., (ப.ஆ.), பாரதியார் கவிதைகள், ஞானப்பாடல்கள், 23.

12 தணிகை உலகநாதன், (தொ.ஆ.), நாமக்கல் கவிஞர் பாடல்கள், 81.2.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

13 வேங்கடராஜுலு, ரா., (ப.ஆ.), மகாத்மாகாந்தி நூல்கள் தொகுதி 2, வேங்கடராஜுலு, ரா., (மொ. பெ. ஆ.), ப.7.

14 Gandhi, M.K., *Harijan*, dt. 1-9-1941.

15 வேங்கடராஜுலு, ரா., (ப.ஆ.), மகாத்மாகாந்திநூல்கள், தொகுதி 2, வேங்கடராஜுலு, ரா., (மொ.பெ.ஆ.), ப.12.

16 மேற்கோள்: அப்துல்ரசாக், அ., அகிம்சை, ப. 11.

17 Gandhi, M.K., *Young India*, dt. 19-3-1925.

18 வேங்கடராஜுலு, ரா., (ப. ஆ.), மகாத்மா காந்தி நூல்கள், தொகுதி 2, வேங்கடராஜுலு, ரா., (மொ. பெ. ஆ.). பக். 7-8.

19 மேலது, பக், 12-13.

20 மேலது, ப. 13.

21 மேற்கோள்: அப்துல் ரசாக், அ., மு. நூ., ப. 11.

22 Gandhi, M. K., *Young India*, dt. 11-8-1920.

23 Ibid, dt. 8-10-1925.

24 பைபிள், புதிய ஏற்பாடு, மத்தேயு, 5. 44.

25 லட்சுமணன், கே. எஸ்., புத்தரின் வாழ்வும் வாக்கும், ப. 54.

26 திருகூடசுந்தரம், பொ., பாபுஜி காட்டும் பாதை ப. 30.

27 Gandhi, M. K., *Harijan*, dt. 8-12-1946.

28 ராவ், வி. கே. ஆர். வி., மேற்கத்திய சமதர்மத்திற்கு காந்திய மாற்று முறை, குருசாமி, மா. பா., (மொ. பெ. ஆ.), ப. 54.

29 மேற்கோள் : குருசாமி, மா. பா., காந்தியடிகளும் கார்ல், மார்க்சும், ப. 83

30 மஷ்ருவாலா, கிசோர்லால் க., காந்தியும் மார்க்ஸும், ப. 128.

31 ஸ்ரீபால், டி. எஸ்., 'சமணமும் சமத்துவமும்', உலக இதய ஒலி, ஜன'82, ப. 10.

32 ரொமெய்ன் ரோலந்து, வாழ்விக்க வந்த காந்தி, ஜெயகாந்தன், (மொ. பெ. ஆ.), ப. 36.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

33 குருசாமி, மா. பா., காந்தியடிகளும் கார்ல் மார்க்சும், ப. 37.

34 வினோபா, வினோபா கண்ட காந்தி, கோபிநாதன், இராம., (மொ. பெ. ஆ.) ப. 121.

35 இராதாகிருஷ்ணன், எஸ்., மகாத்மா காந்தி, காந்தியடிகள் பல கோணங்களில், முத்தையா, நாக. & விசுவநாதன், தி. ரா., (மொ. பெ. ஆ.), ப. 4.

36 ஜெயமணி சுப்பிரமணியம், (ப. ஆ.), மகாத்மா காந்தி நூல்கள், தொகுதி 15, இராமசாமி, அ., & ஜெயமணி சுப்பிரமணியம், (மொ. பெ. ஆ.), ப. 71.

37 Gandhi, M. K., *Harijan*, dt. 4-11-1939.

38 குருசாமி, மா.பா., மு.நூ., ப. 48.

39 வேங்கடராஜுலு, ரா, (ப.ஆ.), மகாத்மா காந்தி நூல்கள், தொகுதி 10, ஜெயமணி சுப்பிரமணியம், (மொ.பெ.ஆ.), ப. 777.

40 Prabhu, R. K. and Rao, U.R., (eds.), *The Mind of Mahatma Gandhi*, P. 118.

41 Gandhi, M. K., *Harijan*, dt. 20-2-1937.

42 Gandhi, M.K., *Young India*, dt. 6-9-1928.

43 Ibid., dt. 11-9-1920.

44 Gandhi, M.K., *Harijan*, dt. 2-4-1938.

45 மகாத்மாகாந்தி, சத்தியசோதனை, வேங்கடராஜுலு, ரா., (மொ.பெ.ஆ.), ப. 510.

46 மகாத்மா காந்தி, பதினொரு மகாவிரதங்கள், அருணாசலம், க., (ப.ஆ.), ப. 5.

47 Bandyopadhyaya, J., *Social and Political Thought of Gandhi*, P.46.

48 ஜெயமணி சுப்பிரமணியம், (ப.ஆ.), மு.நூ., ப. 63.

49 வேங்கடராஜுலு, ரா., (ப.ஆ.), மகாத்மாகாந்தி நூல்கள், தொகுதி, 9 அருணாசலம், க., வேங்கடராஜுலு, ரா., & ஜெயமணி சுப்பிரமணியம், (மொ.பெ.ஆ.), ப. 796.

50 திருகூடசுந்தரம், பொ., மு.நூ., ப.63.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

51 வினோபா, மு.நூ., ப. 164.

52 ஜவகர்லால் நேரு, அச்சம் தவிர்த்த அண்ணல், இராமசாமி, ஆ., (மொ.ப.ஆ), ப.48.

53 கலியாணசுந்தரனார், திரு வி., மனித வாழ்க்கையும் காந்தியடிகளும், ப. 266.

54 வரதராசன், மு., காந்தி அண்ணல், ப.24.

55 மகாத்மாகாந்தி, சத்திய சோதனை, வேங்கடராஜுலு ரா., (மொ.பெ.ஆ.), ப. 47.

56 வேங்கடராஜுலு,ரா., (ப.ஆ.), மகாத்மாகாந்தி நூல்கள், தொகுதி 3, வேங்கடராஜுலு, ரா., (மொ. பெ. ஆ.), பக் 14-15.

57 மேற்கோள் : சண்முகசுந்தரம், மு., காந்தியின் வாழ்க்கையிலே, ப. 38.

58 சண்முகம்,ர., உத்தமர் காந்தி சத்தியக்கதைகள், ப.59.

59 Gandhi, M. K., *Young India,* dt. 18-11-1920.

60 வேங்கடராஜுலு,ரா., (ப.ஆ.), மகாத்மாகாந்தி நூல்கள், தொகுதி 3, வேங்கடராஜுலு, ரா., (மொ.பெ.ஆ.), ப.679.

61 பின்னிணைப்பில் (1) காணலாம்.

62 மகாத்மாகாந்தி, சத்திய சோதனை, வங்கடராஜுலு,ரா., (மொ. பெ. ஆ.), ப. 418.

63 மேலது, ப. 433.

64 காகாகாலேல்கர், காந்திக் காட்சிகள், (மொ. பெ. ஆ. பெயர் குறிப்பிடப்படவில்லை), ப. 167.

65 மேலது, ப. 140.

66 மகாத்மா காந்தி, சத்தியமும் கடவுளும், பிரிஜ்கிருஷ்ண சாந்திவாலா, (தொ.ஆ.), பக். 11-12.

67 Gandhi, M. K., *Young India, dt.* 13-10-1927.

68 வேங்கடராஜுலு, ரா., (ப.ஆ.), மகாத்மா காந்தி நூல்கள், தொகுதி 2, வேங்கடராஜுலு, ரா., (மொ. பெ.ஆ.), ப. 13.

69 மேலது, ப. 13.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

70 வேங்கடராஜுலு, ரா., (ப. ஆ.), மகாத்மா காந்தி நூல்கள், தொகுதி 8, வேங்கடராஜுலு ரா., & ஜெயமணி சுப்பிரமணியம், (மொ.பெ.ஆ.) ப. 127.

71 குமாரஸ்வாமி, த.நா., 'நரநாராயணன்', காந்திவழிக் கதைகள், கல்யாணராமன், கே.ஆர்., (தொ.ஆ.), ப. 47.

72 மேலது, ப. 46.

73 நாரணதுரைக்கண்ணன், 'இராவணாகாரம்', காந்திவழிக் கதைகள், கல்யாணராமன், கே.ஆர்., (தொ.ஆ.). ப. 222.

74 வேங்கடராஜுலு, ரா., மகாத்மா காந்தி நூல்கள் தொகுதி 8, வேங்கடராஜுலு, ரா., & ஜெயமணி சுப்பிரமணியம், (மொ.பெ.ஆ.), ப. 109.

75 நாரணதுரைக்கண்ணன், 'இராவணாகாரம்', மு. நூ., ப. 217.

76 மேலது, ப. 222.

77 பார்த்தசாரதி, நா., 'கங்கை இன்னும் வற்றிவிடவில்லை', காந்திவழிக் கதைகள், கல்யாணராமன், கே.ஆர்., (தொ.ஆ.), ப. 287-288.

78 Gandhi, M.K., *Young India*, dt. 9-3-1922.

79 சுகி சுப்பிரமணியம், டி,என்., 'சிலையும் சிந்தனையும்', காந்திவழிக் கதைகள், கல்யாணராமன், கே.ஆர்., (தொ.ஆ.), ப. 401.

80 Gandhi, M.K., *Young India*, dt. 6-9-.928

81 பார்த்திபன், வி., 'அண்ணலே உன் வழி'. காந்திவழிக் கதைகள், கல்யாணராமன், கே.ஆர், (தொ.ஆ.).ப.491

82 Gandhi, M.K., *Young India*, dt. 11-9-1920.

83 பார்த்தசாரதி, நா., 'கங்கை இன்னும் வற்றிவிடவில்லை', மு நூ., ப.305.

84 பார்த்திபன், வி., 'அண்ணலே உன் வழி', மு.நூ., ப.493,

85 மகாத்மா காந்தி, சத்திய சோதனை, வேங்கடராஜுலு ரா., (மொ.பெ.ஆ.), ப. 26.

86 Gandhi, M.K., *Young India*, dt. 9-3-1922.

87 குமாரஸ்வாமி, த.நா., 'நரநாராயணன்', மு.நூ., ப. 46.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

88 நாரண துரைக்கண்ணன், 'இராவணாகாரம்',மு.நூ.,ப.216.

89 பார்த்தசாரதி, நா., 'கங்கை இன்னும் வற்றிவிடவில்லை' மு.நூ. ப.298.

90 சுகி சுப்பிரமணியம், டி.என்., 'சிலையும் சிந்தனையும்'' மு.நூ., ப.401.

91 Gandhi, M.K., *Harijan*, dt. 28-8-1937.

92 நாரண துரைக்கண்ணன், 'இராவணாகாரம்',மு.நூ.,ப.217.

93 Gandhi, M.K., *Young India*, dt. 6-7-1921.

94 குமாரஸ்வாமி, த.நா., 'நரநாராயணன்,' மு.நூ.,ப.44.

95 Gandhi, M.K., *Young India*, dt. 17-11-1921.

96 பார்த்தசாரதி, நா., 'கங்கை இன்னும் வற்றிவிடவில்லை', மு.நூ., ப.296.

97 Gandhi, M.K., *Harijan*, dt. 31-3-1946.

98 நாரண துரைக்கண்ணன், 'இராவணாகாரம்', மு.நூ.,ப.216

99 மேலது, ப 225.

100 பார்த்தசாரதி, நா., 'கங்கை இன்னும் வற்றிவிடவில்லை', மு. நூ., ப. 290.

101 சுகி சுப்பிரமணியம், டி. என்., 'சிலையும் சிந்தனையும்', மு. நூ., ப. 401.

102 மகாத்மா காந்தி, ராமநாமம், (மொ.பெ.ஆ. பெயர் குறிப்பிடப்படவில்லை), பக் 83-84.

103 வெங்கடராஜுலு, ரா., (ப.ஆ.), மகாத்மா காந்தி நூல்கள், தொகுதி 5, வேங்கடராஜுலு, ரா., திரவியம், கா., (மொ.பெ.ஆ.), ப. 322.

104 Gandhi, M.K., *My Philosophy of Life*, P.43.

105 ஸரோஜா ராமமூர்த்தி, 'நினைவிலே நடந்து...' நினைவிலே நடந்து..., ப. 35.

106 மகாத்மா காந்தி, ரகுபதி ராகவ, ராஜாஜி, (மொ.பெ.ஆ.), ப. 7.

107 அகிலன், 'ஏழைப்பங்காளர்', சத்திய ஆவேசம், ப. 64.

108 செல்லப்பா, சி.சு., 'கேள்விக்கு பதில்', செல்லப்பா சிறுகதைகள், தொகுதி 5, ப. 99.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

109 Gandhi, M.K., *Young India*, dt. 6-9-1928.

110 கல்கி, 'பொங்குமாங்கடல்', அமரவாழ்வு, ப. *128.*

111 Tendulkar, T.G., *Mahatma, Vol. 2.,* P. 126.

112 ரெங்கநாயகி, எஸ்., 'இதய கீதம்', மு.நூ., ப. *41.*

113 Gandhi .M.K., *My Philosophy of Life,* P. 30.

114 ரெங்கநாயகி, எஸ்., 'இதய கீதம்' , மு.நூ., ப. *41.*

115 மேலது, பக். *41-42.*

116 Bandyopathyaya, J., *Social and Political Thought of Gandhi,* P. 46.

117 Dhebar, U.N., *Gandhiji A Practical Idealist,* P. 9.

118 ஸரோஜா ராமமூர்த்தி, (நினைவிலே நடந்து...', மு.நூ.) ப. *35*

119 அகிலன், 'ஏழைப்பங்காளர்', மு. நூ., ப. *64.*

120 பார்த்திபன், வி., 'அண்ணலே உன் வழி', மு. நூ., ப. *493.*

121 குமாரஸ்வாமி, த. நா., 'நரநாராயணன்', மு. நூ., ப. *48.*

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

1. காந்திவழிக் கதைகளில் மதுவிலக்கு

காந்தியடிகள் வலியுறுத்திய தனிமனித ஒழுக்க நெறிகளில் ஒன்று மதுவிலக்கு. ஆய்வுக்கு எடுத்துக்கொண்டுள்ள 'காந்திவழிக் கதைகள்' என்ற தொகுப்பு நூலில் உள்ள கதைகள் வழி மது விலக்குப்பற்றி இம்மூன்றாம் இயலின் முதற்பகுதி ஆராய்கிறது.

''மதுவிலக்கு, சமூகத் துறையிலும், நல்லொழுக்கத் துறையி லும் ஓர் அடிப்படையான சீர்திருத்தம்''[1] என்கிறார் காந்தியடிகள். தனி மனிதன் குடிவெறியில், தான் அழிவதுடன் தன்னைச் சூழ்ந்த குடும்பத்தையும் சமூகத்தையும் அழிவிற்கு ஆளாக்குகிறான். எனவே, தனி மனித ஒழுக்க நெறியில் இம்மதுவிலக்கு ஓர் அங்க மாகிறது. கள் முதலான மதுக்குடியை நீக்குவது இன்றியமை யாதது என்ற பொருளை உள்ளடக்கும் தொடர் 'மதுவிலக்கு' ஆகும்.

கொள்கை விளக்கம்

கட்குடி மனிதனின் பழக்கமான செயலாகத் தொன்றுதொட்டே இருந்துவரினும் அதன் தீமையைச் சமயச் சான்றோர்களும் பிறரும் அவ்வப்போது உணர்த்தி வந்துள்ளனர்.

''குடி வெறியில் திமிர்த் தண்டமாய் இருக்கும் முடி அரசனும் இழிவுறுவான். அவனை எவரும் மதிக்க மாட்டார்கள்''[2] என்கி றது யூத சமயம். கள், சாராயம் குடிப்பதன் அடிப்படையில் மனிதப் பண்பைத் தாழ்வாக மதிப்பிடுகிறது பார்ஸி சமயம்.[3] கள்ளுண்ணாமையை ஐவகைச் சீலங்களில் ஒன்றாகப்பௌத்தமும்[4] உயர் நோன்புகளில் ஒன்றாகச் சமணமும்[5] கூறுகின்றன.

தமிழ்இலக்கியங்களிலும் கட்குடியின் இழிவு விளக்கப்படுகிறது. கள்ளின் தீமையை உணர்த்த 'உண்ணற்க கள்ளை' என்கிறது வள்ளுவம்[6]. கட்குடியரை இழித்து இன்னா நாற்பதும்,[7] குடித்தலைப் பழித்துத் திரிகடுகமும்[8] குறிப்பிடுகின்றன. சிலப்பதி காரம் ''கள்ளுங்களவும்...ஒழிமின்''[9] என்று அறவுரை பகர்கிறது. மணிமேகலை''மயக்கும்கள்ளும்...கயக்கறுமாக்களும்கடிந்தனர்''[10] எனக்கூறிக் கள்ளை வெறுத்தொதுக்கிப் பேசுகிறது. ''தேசமெங்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கும் தீமைகள் மலிந்ததிந்தக் கள்ளினால்"[11] என்று குடியின் விளைவைச் சுட்டுகிறார் நாமக்கல் கவிஞர்.

பலராலும் இழிவாகக் கருதப்பட்ட குடியை வளர்ந்து வரும் சமூகத்தீமை என்கிறார் காந்தியடிகள்.[12]

மதுவிலக்கும் காந்தியடிகளும்

முன்னோர்களால் வெறுத்துக் கடியப்பட்ட மதுக்குடிப் பழக்கத்தை ஒழிக்கக் காந்தியடிகள் அணுகிய விதமும் கூறிய வழிகளும் தனித்தன்மையன.

(அ) ஒவ்வொரு மனிதனும் தன்னளவில் மேற்கொள்ளுமாறு அமைந்த மதுவிலக்கினைச் சமுதாய அளவிற்கு விரித்து மக்கள் அனைவரும் மேற்கொள்ளுமாறு செயற்பட்டவர் காந்தியடிகள்.

(ஆ) குடிப்பழக்கத்திற்கு ஆளானவர்கள் அடக்குமுறைக்கு அஞ்சுவதை உணர்ந்த காந்தியடிகள், "குடிப்பழக்கத்தை விடுவதும் அந்த ஆசைக்கு இடம் கொடுக்கும் மது வகைகளை அகற்றிவிடுவதுமே அவர்களுக்கு சுயராஜ்யம்"[13] என்கிறார். இவ்வாறு மது உடல், உள்ள நலங்களுக்கும் கேடு செய்கிறது என்ற பொதுவான எண்ணத்துடன் ஆன்மீக விடுதலைக்குத் தடையாக அது இருப்பதைச் சுட்டி மதுவிலக்கின் இன்றியமையாமையை விண்டு காட்டும் தன்மையிலும் அவரது சிறப்பு விளங்குகிறது.

(இ) சமுதாயத்தில் மதுவிலக்கை நடைமுறைப்படுத்த அவர் மேற்கொண்ட அகிம்சை வழி பிறரினும் அவரைத் தனித்துவப் படுத்துகிறது.[14]

மதுவிலக்கின் இன்றியமையாமை

தீண்டாமைக்கு அடுத்தபடியாகப் பெரிதும் கடிதலுக்குரியது ஒன்று உண்டென்றால் அது குடி என்ற சாபக்கேடுதான் என்பது காந்தியடிகளின் கணிப்பு.[15] அதற்குக் காரணம் அது மனிதனின் உள்ளத்தை முடமாக்கி, மிருகங்களுக்கும் கீழ்த்தரமான நிலைக்கு அவனைக் கொண்டு வருகின்றது என்பதே.[16] விடுதலைக்குப் பின்னும் குடிப்பழக்கம் இருக்குமாயின் அவ்விடுதலையை அவர் அடிமைகளின் விடுதலையாகக் கருதுகிறார்.[17] குடியினால் பெறும் வருவாய், குழந்தைகளின் கல்விக்குப் பயன்படுவது பெருமையளிப்பதன்று என்பதும் அவரது ஆணித்தரமான கருத்தாகும்.[1]

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மதுவின் கொடுமையை நகு உணர்ந்தமையே அவரதுன் மதுவிலக்குத் திட்டத்திற்குக் காரணமாக அமைகிறது என எண்ண இடமுண்டு. அதனால்தான் அவர், தம்மை ஒரு மணி நேரம் இந்தியா முழுமைக்கும் சர்வாதிகாரியாக அமர்த்தினால் முதற் செயலாக நட்ட ஈடும் கொடுக்காமல் எல்லாக் கள்ளுக்கடைகளை யும் மூடிவிடுவதாகக் கூறியுள்ளார்.[19] அந்த அளவிற்கு மதுவிலக் கின் இன்றியமையாமை அவர் உள்ளத்தில் வேரூன்றியிருந்தது.

குடிவரி [கலால் வரி] யை அகற்றுவது, இவ்வரி செலுத்து பவரை மிகுதியாகப் பொருளீட்டி நன்முறையில் செலவிட உதவுகிறது; நாட்டின் பொருளாதாரத்திற்கு இது மிகுந்த இலாபமாகும்; இதற்கு உடனடியாகப் பலன் கிட்டுவதால்தான் மதுவிலக்குக்கு முதலிடம் அளிப்பதாக அவர் கூறுகிறார்.[20] இது அவரது மதுவிலக்குத் திட்டத்திற்குப் பொருளாதார அடிப்படை யில் அமையும் காரணமாகும்.

வன்முறையைப் பயன்படுத்திக் குடிகாரன் அடக்கப்பட்டால் இறுதியில் அடக்கி வைக்கப்பட்டுள்ள அவன் தலைதூக்கத் தொடங்கி விடுவான் என்னும் உளவியல் உண்மையை அறிந்தவர் காந்தியடிகள். மதுவிலக்குத் திட்டத்தைச் செயற்படுத்த அவர் அகிம்சை வழியை மேற்கொண்டமை அவரது தனிச்சிறப்பை உணர்த்தும்.

மதுவிலக்கு மறியலின்போது, "குடிகாரர்களை நேரில் அணுகி இந்தச் சபலத்திற்கு இடம் கொடுக்காதீர்கள் என்று கேட்டுக்கொள்வது ஒன்றுதான் பலனளிக்கத்தக்க அமைதியான முறையாகும்"[21] என்பது அவரது முடிவு. இதற்காகக் குடி-காரரின் வீட்டுக்கு நேரில் போவது முறையான மறியலின் ஓர் அம்சமாகும்;[22] பெண்களும், மாணவர்களும் அகிம்சை மறியலுக்கு ஏற்றவர்கள் ஆதலால், குடிகாரர்களிடம் அப்பழக்கத்தை விடும்படி அவர்கள் அன்புடன் வேண்டுதல் வேண்டும் என்றெல்லாம் குறிப் பிடுகிறார்.[23] மதுக்கடைக்காரர் மீதோ, குடிகாரர்மீதோ வன்முறை யைப் பயன்படுத்தாமல் மறியல் செய்வது அறக்கோட்பாடு என்றுரைக்கும் அவர்,[24] மறியலில் உயிரை இழக்கவும் முன்வர வேண்டும் என்கிறார்.[25]

மதுவிலக்கிற்கு அடிகள் கூறும் வழிகள்

மதுவிலக்கிற்கான கருத்துரைக்கும் காந்தியடிகள், மதுவிலக் கின் தொடக்கமாகப் புதிய கள்ளுக்கடைகளுக்கு அனுமதி வழங்கா

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மல் இருப்பதும், அனுமதித்த கள்ளுக்கடைகளை மூடிவிடுவதும் அரசின் கடமையாகும் என்கிறார்.[26] முழுமையான மதுவிலக்கு என்பது வெறியூட்டும் பானங்களின் விற்பனையை அடியோடு தடை செய்வதாகும் என்று குறிப்பிடும் அவர் தேவைப்பட்டோர்க்கு மருத்துவர் அனுமதியின்பேரில் அரசினால் நடத்தப்படும் கடைகளில் வாங்கிக்கொள்ள அனுமதி தரலாம் என்று விதிவிலக்களிக்கிறார்.[27] குடியினால் இழக்கும் வருமானத்தை ஈடுசெய்ய இராணுவச் செலவை உடனடியாகக் குறைக்கலாம்[28] என்றும், புதுவரிகள் மூலம் வருமானத்தைப் பெருக்க முடியாவிட்டால் அரசு மான்யமோ வட்டியில்லாமல் கடனோ தரவேண்டும் என்றும் கூறுகிறார்.[29]

தொழிலாளிகளின் கடும் உழைப்பு அவர்களைக் குடிக்கத் தூண்டுகிறது என்பதை உணர்ந்த அவர், "களைப்புற்ற தொழிலாளி ஓய்வெடுத்துக் கொள்ளவும், சத்தான மலிவான உணவு, பானங்களைப் பெறவும், தகுந்த விளையாட்டுகளில் ஈடுபடவும் பொழுது போக்கு முறைகளை ஆரம்பிக்கலாம்"[30] என்கிறார். மதுவிலக்குப் பணியில் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் பங்குண்டு என்றுரைக்கும் அவர், "அவர்கள் நாள்தோறும் இரண்டு மணிநேரம் இப்பணியில் ஈடுபடலாம்"[31] எனத் தூண்டுகிறார். மாணவர்கள் குடியின் தீமையை விளங்கவைக்கும் பொதுநலத் தொண்டினை மேற்கொள்வதுடன் மது எதிர்ப்பு வெளியீடுகளைப் பயன்படுத்திச் சாராயம் காய்ச்சுவதை எதிர்த்துப் போராடவும் வேண்டுகிறார்.[32]

மதுவிலக்குச் சங்கங்கள் கள்ளுக்கடையினரை அணுகி, கடைகளைப் பொழுதுபோக்கு விடுதிகளாக மாற்றி நாணயத்துடன் பொருளீட்டக் கற்பிக்கலாம்;[33] உடல் நலத்துறை அலுவலர்களும் குடியினால் உடல் கேடுறுவதை விளக்கலாம்;[34] கள்ளிறக்குவோர் பதனீரை வெல்லமாக மாற்றலாம்;[35] குடிப்பவர்களிடம் தகுந்த மாறுதலைக் கொணர மருத்துவரை அணுகலாம்;[36] குடியை விட்டவர்கள் ஓய்வு நேரத்தில் அந்நினைவு வராமலிருக்க நூற்க முற்படின் ஊதியமும் கிட்டும்[37] என்பன காந்தியடிகள் மதுவிலக்கைச் செயற்படுத்த அரசுக்கும் மக்களுக்கும் கூறும் வழிகளாகும்.

மதுவிலக்கிற்கான முயற்சியில் காந்தியடிகளின் பங்கு

காந்தியடிகள் இளமைப் பருவத்தே தாய்க்கு அளித்த வாக்கிற்கேற்ப இங்கிலாந்துக்குக் கல்வி பயிலச்சென்றபோது மதுவைத் தீண்டியதில்லை.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பிற்காலத்திலும் அவர் மதுவிலக்குப் பணியில் தாமே நேரடியாகப் பங்கேற்றார். 1920-இல் மதுவிலக்கை நிருமாண வேலைத் திட்டங்களில் ஒன்றாக்கினார். 1921-இல் குடி ஒழிப்பு மறியலுக்கு, குஜராத் பெண்தொண்டர்களைப் பங்கேற்கச் செய்தார். 1930-இல் தண்டிப் பயணத்தின்போது குடியை நிறுத்த ஒவ்வோர் இடத்திலும் வற்புறுத்தினார். அப்போதும் அப்பணியில் பெண்களை ஈடுபடுத்தினார். மதுவின் கொடுமையைப் பல கூட்டங்களில் எடுத்துரைத்தும், பல கட்டுரைகளில் மதுவிலக்குக்கு விளக்கமளித்தும் செயற்பட்டார்.

1937-இல் மதுவிலக்கை அவசரச் சீர்திருத்தங்களில் ஒன்றாகக் குறிப்பிட்டதன் விளைவாக, சென்னை மாநில முதல்வராக இருந்த இராஜாஜி, அக்டோபர் முதல் தேதியிலிருந்து சேலம் மாவட்டத்தில் மதுவிலக்கை அமலாக்கினார்.

காந்தியடிகளின் மதுவிலக்குப் பிரசாரம் பலரை ஈர்த்தது. தமிழகத்தில் இராஜாஜி, 'விமோசனம்' என்ற இதழ்மூலம் விளக்கியும், மதுக்கடை மறியல்களில் கலந்தும் அப்பணிக்கு ஆதரவு நல்கினார். ''உலக மகான் காந்தியடிகள் மதுத்தயாரிப்பதற்கான சாதனங்களை அழிப்போம் என்று வட நாட்டில் கூறியபோது தென்னாட்டில் இருந்த வைக்கம் வீரர் ஈ. வெ. ராமசாமிப் பெரியார் கள்ளுக்கடை மறியல் செய்ததோடு, தம் தென்னந் தோப்பையே அழித்தார்''[38] என்ற குறிப்பும், ராமசாமிப் பெரியார் காந்தியடிகளின் மதுவிலக்குப் பணியில் பங்கு பெற்றமையை உணர்த்தும்.

காந்தியடிகள், வாழ்வை முழுமையாகக் கண்டவராதலால் சமுதாயத்தீமைகள் அனைத்தையும் எதிர்த்தார். அவர் மேற்கொண்ட குடிமறியல் விடுதலைப் போராட்டத்தில் சிறப்பான பங்கு வகித்தது என்பது நினைக்கத்தக்கது.[39]

இவ்வாறாகக் காந்தியடிகள் மதுவிலக்கின் இன்றியமையாமையை எடுத்து விளக்கி, அதற்குச் சில தீர்வுகளையும் மக்கட்கு எடுத்துரைத்துத் தாமே மதுவிலக்குப் பிரசாரத்தில் ஈடுபட்டும், பத்திரிகைகளில் அது குறித்து எழுதியும், சமுதாயத்தில் பலரை அப்பணியில் ஈடுபடச் செய்தும், அகிம்சை வழியில் மறியலை மேற்கொள்ளச் செய்தும் மதுவிலக்குத் தொண்டு செய்தார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மதுவிலக்கும் அதில் காந்தியடிகளுக்கு இருந்த உறுதியும்பற்றி அமைந்த இவ்விளக்கத்துடன் 'காந்திவழிக் கதைகள்' என்ற தொகுப்பு நூலில் உள்ள கதைகளில் மதுவிலக்குக் கொள்கை விளக்கப்படுவதை இனிக் காணலாம்.

மதுவிலக்குக் கொள்கை அமைந்த கதைகள்

இத்தொகுதியில் மதுவிலக்குக் கொள்கையை விளக்க வந்த கதைகள் ஐந்து. அவை, கல்கியின் 'தெய்வயானை', வி.எஸ். சுப்பையாவின் 'மது விலக்கு', 'சோமாஸ்' என்பவரின் 'விமோசனம்', பெ.தூரனின் 'புதுக்கடை', புலவர் நாகசண் முகத்தின் 'அடிச்சுவடு' ஆகியன.

கதைச் சுருக்கமும் கருவும்

'தெய்வயானை' என்ற கதையில், கள்ளுக்கடை மூலம் பொருள் திரட்டித் தெய்வயானை என்பவளை மணக்க எண்ணிய ஓமக்குட்டி, அவ்வாறே செல்வர் ஆகிறார். தமது கள்ளுக்கடை, தெய்வயானையைக் குடிக்கு அடிமையாக்கியதைக் கண்ட அவர் மனமுடைந்து கடையை ஒழித்து விடுகிறார். 'இல்லத்தில் புகுந்த மது குடும்பத்தைக் கெடுக்கும்' என்பது கதைக்கரு, "..குடிப் பழக்கம் காரணமாக... விவாகரத்துகள் ஏற்பட்டன"[40] என்று குடும்பங்களைக் கெடுக்கும் குடியைப்பற்றிக் காந்தியடிகள் குறிப்பிட்டுள்ளது நினைத்தற்குரியது.

'மதுவிலக்கு' என்பதில் கள்ளுக்கடை கண்ணுசாமிக்கு எதிராக மாவடியில் மதுவிலக்குப் பிரசாரம் செய்ய முற்படுகிறார் புது ஆசிரியர் நாகய்யா. கட்டுப்பாட்டுடன் கூடிய அவரது பிரசாரத் தால் அக்கிராமப் பெண் சங்கிலி மனம் மாறுகிறாள். "பள்ளி ஆசிரியர்கள்... அவர்களுடன் [குடிகாரர்களுடன்] கலந்து பழக வேண்டும். அவர்களுடன் பேசி நியாயத்தை எடுத்துச்சொல்லி உண்மையை உணர்த்தும் முறையில் அமைதியாக மறியல்செய்ய வேண்டும்"[41] என்பதற்கிணங்க நாகய்யா பிரசாரம் செய்கிறார். 'ஆசிரியர்கள் கட்டுப்பாட்டுடன் மதுவிலக்குப் பிரசாரம் செய்தல் வரவேற்கத்தக்கது' என்பது இக்கதையின் கரு.

'விமோசனம்' என்பதில், துரைசாமி என்பவனின் குடிப் பழக்கத்தின் விளைவாக அவன் மனைவி பிறர் வீடுகளில் உழைக்கும் நிலைக்குஆளாக, அவன் மகனோ பிறர் ஏளனத்திற்கு ஆளாகிறான். தான் குடித்ததைப் பற்றிக் குடும்பம் அறிந்ததற்கு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வெட்குறும் அவன், இனிக் குடிப்பதில்லை என உறுதி எடுப்பதுடன் கள்ளுக்கடையை மூட இருப்பதால் அஞ்ச வேண்டா என மனைவிக்கு ஆறுதல் மொழிகிறான். 'மதுவிலக்கிற்குரிய திட்டங்களில் ஒன்று கள்ளுக்கடையை மூடுவது'[42] என்ற காந்தியடிகளின் கருத்து இக்கதைக் கருவாகும்.

'புதுக்கடை' என்ற கதையில் கந்தப்பனின் குடிமயக்கம் காரணமாகப் பண இழப்பும் மானக் குறைவும் ஏற்படுவதுடன் தாலியும் அடகு வைக்கப்படுகிறது. மதுவிலக்கு அமலில் இருந்த போது குடிப்பதில்லை என்ற உறுதிமொழி, அமல் தளரும்போது கைவிடப்படுகிறது. கள்ளுக்கடையைத் திறக்காவிடில் அறிவு கெட்டிருக்காதே எனப் புலம்புகிறான். 'மதுவிலக்கை நீக்கினால் குடும்பங்கள் தீமையுறும்' என்பது இக்கதைக் கரு. 'ஆசைகாட்டி அழைப்பதற்கு வீட்டுக்கருகிலேயே கள்ளுக்கடை இருக்கும்வரையில் குடிகாரரை நாம் அணுக முடியாது'[43] என்ற காந்தியடிகளின் கருத்து இங்கே நினைத்தற்குரியது.

'அடிச்சுவடு' என்ற கதையில் ஒத்துழையாமை இயக்கத்தில் கலந்து உயிரிழந்த இராமநாதனுடைய மகன் தயாளன், தன் குடிப்பழக்கத்தால் குடும்ப நலனை மறக்கிறான். அதன் விளைவாகத் தாய் இறக்கிறாள். அவன் மனைவியோ குழந்தையுடன் கலங்குகிறாள். 'மதுப்பழக்கம் குடும்ப வாழ்வைச் சீர்குலைக்கும்' என்பது இக்கதைக் கருவாகும்.

கதைப்பின்னலில் கொள்கையைப் புலப்படுத்தல்

இக்கதைகளில் மதுக்குடிக்குச் சார்பான மாந்தர்தம் தீய உணர்வுகளுக்கும், மதுவிலக்கிற்கு ஆதரவான அவர்தம் நல்லுணர்வுகளுக்கும் இடையே ஏற்படும் தனி மனித அகப்புறப் போராட்டங்கள் கதைப்பின்னல்களுக்கு அடிப்படையாக உள்ளன. இறுதியில் மதுவிலக்கின் இன்றியமையாமை வலியுறுத்தப் படுகிறது.

பாத்திரப்படைப்பு

'தெய்வயானை'யில் ஓமக்குட்டி கள்ளுக்கடையை ஏலம் எடுக்க விரும்பியமை, ''கள்ளுக்கடையில் [தன் தந்தையால்] போன சொத்தைக் கள்ளுக்கடை மூலமாகவே சம்பாதித்துத் தீருவேன்''[44] என்பதாலும், தெய்வயானை குடிப்பதை அறிந்து மனம் மாறியமை ''...கள்ளு, சாராயக்கடைகளைத் தொலைத்துத்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தலை முழுகினேன்''[45] என்பதாலும் உணரப்படும். இம்மாற்றம் கொள்கையை வலியுறுத்திக் காட்டும். அவருடைய தாயார் ''அந்தப் பாவத்தொழில் நமக்கு வேண்டாமப்பா''[46] என்று கூறுவது அவளைக் கொள்கை வழியில் அமைபவளாக உணர்த்துகிறது.

காந்தியத்திற்கு எதிராக அமையும் பாத்திரங்களாக ஓமக் குட்டியின் தந்தை, தெய்வயானை, அவள் தந்தை அப்புக்குட்டி ஆகியோர் அமைகிறார்கள். ஓமக்குட்டியின் தந்தையைப் பற்றிய ''எல்லாம் [சொத்து] உன் தகப்பன் குடித்தே ஒழித்துப் போட்டான்''[47] என்ற அவன் தாயின் கூற்றும், அப்புக்குட்டியைப் பற்றிய ''...அகால மரணமடைந்ததற்கு மிதமிஞ்சிய குடிதான் காரணமாயிருக்க வேண்டும்''[48] என்ற ஆசிரியர் கூற்றும், மதுவின் தீமையைச் சுட்டி மதுவிலக்கின் இன்றியமையாமையை உணர்த்தும். குடிக்கு ஆளாவதாகச் சுட்டப்படும் தெய்வயானையின் படைப்பு, மதுவிலக்குப் பற்றிய எண்ணத்தை ஓமக்குட்டியிடம் கொணர உதவுகிறது.

'மதுவிலக்'கில், தன் தலைமையில் கூட்டம் நடத்திக் கள்ளை அடியோடு ஒழிக்க முடிவெடுத்த நாகய்யாவின் செயல், அவரைக் காந்திய வழியில் அமைபவர் என்பதைக் காட்டும். குடிக்கு அடிமையான சங்கிலி, நாகய்யாவின் வேண்டுகோளால் மனம் மாறியதை, ''வாத்தியாரையா, நீங்க சொன்னதைச் சங்கிலியிடம் சொன்னேன்... கள்ளைக் கையால் இனிமேல் தொடுவதுகூட இல்லை என்று என்தலையில் அடித்துச் சத்தியம் செய்துவிட்டாள்''[49] என்ற அவள் சகோதரன் கூற்று உணர்த்தும். மதுவிலக்குப் பிரசாரம் செய்யும் ஆசிரியர்களால் மனமாற்றம் கொணர முடியும் என்பதை எடுத்துக்காட்ட இப்பாத்திரப் படைப்பு அமைகிறது.

கண்ணுசாமி காந்தியத்திற்குப் புறம்பான நிலையில் கள்ளுக் கடை வாணிபத்தில் தேர்ந்தவன் என்பதை, ''காசை வாங்கிக் கொண்டு கள் விற்பதைவிட நெல்லுக்குக் கள்ளைப் பண்டமாற்று செய்வதில்தான் அதிக லாபம் என்பது கண்ணுசாமி கண்டு வைத்திருந்த சிதம்பர ரகசியம்''[50] என்ற ஆசிரியர் கூற்று விளக்கும். கள்ளினால் ஊரைக்கெடுக்கும் இவன், அவ்வூர் இளைஞர், நாகய்யா ஆகியோர் உள்ளங்களில் கள்ளை அடியோடு ஒழிப்பதற்கான உணர்வைத் தூண்ட உதவுகிறான்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'விமோசனம்' என்பதில், துரைசாமி இடைக்காலத்தில் குடிக்கு ஆளாகி, குடும்பம் சூன்புறக் காரணமாகி இறுதியில் மனம் மாறுகிறான். குடிப்பவர்கள் தங்களையும் தங்களைச் சேர்ந்தவரையும் துன்பத்திற்கு ஆளாக்குகின்றனர்"[51] என்ற காந்தியடிகளின் கருத்திற்கேற்ப அவன் படைப்பு அமைகிறது. அவன் மனைவி அங்கயற்கண்ணி "...கள்ளுக் குடிப்பது மகா பாவமில்லையா?"[52] என இரங்கிக்கேட்கிறாள். மதுவிலக்கு இயக்கத்தில் பெண்களின் பணிகளில் ஒரு பகுதி, குடிக்கும் கணவனை நல்வழிப்படுத்த மேற்கொள்ளும் முயற்சியாகும்[53].

'புதுக்கடை'யில், "கந்தப்பன் இப்பொழுது பெருங்குடிகாரனாகி விட்டான்... சில வேளைகளில் அவன் குடிவெறியால் நடுவழியில் உருண்டு கிடப்பான்"[54] என்ற ஆசிரியரின் இச்சித்திரிப்பானது, மது அப்பழக்கத்தவனைக் கீழ்மைப்படுத்தும் என்ற காந்தியக் கருத்தை நினைவுறுத்தும்.[55] இறுதியில் அவன் மனம் மாறுவதை, "... கள்ளுகடையை ஒரு சிலந்திக்கூடு என மனத்திற்குள்ளேயே சபிக்கலானான்"[56] என்ற தொடர் தெளிவாக்கும்.

'அடிச்சுவடு' என்னும் கதையில் "அவன் வாயிலிருந்து வந்த நெடி அவள் வயிற்றைக் குமட்டியது"[57] என்ற தயாளனைப் பற்றிய சித்திரிப்பு, அவனது குடிப்பழக்கத்தை உணர்த்தும். "...இன்று முதல் நான் முழு மனிதனாகி விட்டேன்"[58] என்று அவன் கூறுவது அவனது மனமாற்றத்தைத் தெளிவுபடுத்தும்.

இக்கதையில் இராமநாதனும் அவர் மனைவியும் காந்திய உணர்வுடையோர்களாகப் படைக்கப்பட்டுள்ளனர். இராமநாதன் முழுமையான காந்தியவாதியாகவே சுட்டப்படுகிறார். "அவர் காந்தியடிகளை ஞானகுருவாக ஏற்று ... மற்றவர்களால் ஒதுக்கி வைக்கப்பட்ட ஏழை எளியவர்களோடு கலந்து பழகத் தொடங்கிய போது ஊரே வியப்படைந்தது."[59] இப்பகுதி காந்திய நெறியில் செயற்பட்ட அவரது திறனைக் காட்டும். காந்தியடிகளை மகான் என மதிக்கும் அவர் மனைவி, தன்மகன் குடிவெறியில் காந்தியடிகள் படத்தை எறிய முற்படும்போது, அவனை மெய் சோர அடித்து மயங்கி வீழ்ந்து உயிர் நீங்குகிறாள். இந்நிகழ்ச்சி அவளது காந்தியப் பற்றை உணர்த்துகிறது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அட்டவணை : 3

மதுவிலக்கு—கதைமாந்தர்

எண்.	கதைகள்	காந்திய வழியில் செயற்படுவோர்	மதுவின் தீமையைக் கருத்தளவில் சுட்டுபவர்	காந்தியத்திற்கு எதிராகக் குடியில் ஆழ்ந்து இறுதியில் மனம் மாறுபவர்	காந்தியத்திற்கு எதிராக இறுதி வரைக் குடியில் மாள்பவர்
1	'தெய்வயானை'	—	ஓமக்குட்டியின் தாய்	ஓமக்குட்டி	ஓமக்குட்டியின் தந்தை, தெய்வயானை, அவள் தந்தை
2	'மதுவிலக்கு'	நாகய்யா	—	சங்கிலி	கண்ணுசாமி
3	'விமோசனம்'	—	துரைசாமியினுடைய மனைவி	துரைசாமி	—
4	'புதுக்கடை'	—	—	கந்தப்பன்	—
5	'அடிச்சுவடு'	இராமநாதன்	தயாளனின் தாய்	தயாளன்	—

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பாத்திரப் படைப்பு — ஒரு மதிப்பீடு

மேற்கூறிய ஐந்து கதைகளிலும் காந்திய வழியில் அமைந்து, கட்குடியரை அன்பால் திருத்தும் பாத்திரங்களுள் பெண்களே மிகுதியாகச் சித்திரிக்கப்பட்டுள்ளதைக் காணலாம். "ஒரு காலத்தில் சீராகவும் அமைதியாகவும் இருந்த குடும்பத்தைக் குடிப்பழக்கம் எவ்வளவு சீரழித்து விடுகிறது என்பதைக் குடிகாரக் கணவர்களைக் கொண்ட பெண்களே அறிவார்கள்"[60] என்கிறார் காந்தியடிகள். இதை உணர்ந்த கதையாசிரியர்கள், இக்கதைகளில் குடிப்பழக்கம் குடும்பத்தைப் பாழாக்கிவிடும் என அன்பு வழியில் எச்சரிப்பவர்களாக ஓமக்குட்டியின் தாய், துரைசாமியின் மனைவி, தயாளனின் தாய் ஆகியோரைப் படைத்துள்ளார்கள்.

இக்கதைகளில் காந்திய வழியில் தொடக்கத்திலேயே அமையும் பாத்திரங்களின் எண்ணிக்கையைக் காட்டிலும் முதலில் அவ்வழியில் அமையாமல் இறுதியில் தாமே உணர்ந்து மன மாற்றம் அடையும் பாத்திரங்களின் எண்ணிக்கை மிகுதியாக இருப்பதைக் காணலாம். அந்நிலையில் குடிப்பது இழிந்த செயல் என்பதைத் தாமே உணர்ந்து மனமாற்றம் அடையும் ஓமக்குட்டி, துரைசாமி, கந்தப்பன், தயாளன் ஆகியோர் கொள்கையை ஆழமாக உணர்த்த உறுதுணையாவர் என நினைத்து இத்தகு பாத்திரங்கள் எண்ணிக்கையில் மிகுதியாகப் படைக்கப்பட்டுள்ளன.

மதுவினால் ஏற்படும் துன்பங்களைக் காட்டுவதன் மூலம் மதுவின் கொடுமைகளை உணர்த்த இறுதிவரை மாற்றமடையாத பாத்திரங்களின் படைப்பு உதவுகிறது. இறுதிவரை குடியின் இழிவை உணராதவாறு ஓமக்குட்டியின் தந்தை, குடும்பம் கெடக் காரணமாயிருப்பதையும், அப்புக்குட்டி இறக்க நேர்வதையும், கண்ணுசாமி, துரைசாமியின் நண்பன் ஆகியோர் பிறர் குடித்துக் கெடக் காரணமாயிருப்பதையும் சுட்டும் நிலையில் அவர்கள் படைப்பு எதிர்மறை அணுகுமுறையில் மதுவிலக்குக் கொள்கையை விளக்க உதவுகிறது.

உத்திகள்

கொள்கையை விளக்கும் உரை

'அடிச்சுவ'ட்டில் குடியின் இழிவை உணரும் தயாளன், உள்ளம் நல்லதாக அமைந்துவிடுகிறபோது அன்பும் பாசமும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அங்கே குடியிருக்கத் தொடங்கிவிடுகின்றன. அதனால்தான் காந்தியடிகள் மனத்தூய்மையோடு வாழ வேண்டும் என்று கூறினார் ... மனிதனுக்குச் சிறப்பாக உள்ளது பகுத்தறிவு. அதையே பாழ் செய்யக்கூடியது குடி... மகான்களுடைய அடிச் சுவடுகள்தாம் மக்களைப் பூவுலகிலேயே சுவர்க்க போகத்தில் வாழச்செய்யும் வழிகாட்டிகள் ஆகும்''[31] என்று கூறுவது பிரசார உரையாக அமைந்து கொள்கையை விளக்குகிறது.

அணுகுமுறை

நாகய்யாவின் மதுவிலக்குப் பிரசாரம் சங்கிலியிடம் மன மாற்றம் ஏற்படுத்தும் வகையில் ('மதுவிலக்கு') நேர்முக முறை மேற்கொள்ளப்படுகிறது.

மதுவிலக்கு இன்மையால் குடும்பங்கள் பாழ்படுவதுடன் ஓமக்குட்டியின் மனம் தடையுறுகிறது ('தெய்வயானை'); தயாளனின் குடும்பம் இடர்ப்படுகிறது ('அடிச்சுவடு'). இக் கதைகளில் கொள்கை விளக்கம் எதிர்மறை அணுகு முறையில் அமைகிறது. மதுவிலக்கின்போது மகிழ்ச்சி பொங்க வாழ்ந்த குடும் பங்கள் மதுவிலக்கின்மையால் வறுமை, அமைதியின்மை, இழிவு ஆகியவற்றில் உழலுகின்றன ('விமோசனம்', 'புதுக்கடை'). இங்கு நேர்முக,எதிர்மறை முறைகள் கொள்கையைத்தெளிவுறுத்த உதவுகின்றன.

பெரும்பாலான கதைகளில் மதுவிலக்கின்மையால் ஏற்படும் கொடுமைகளை நுட்பமாகச் சித்திரித்துக் கொள்கை விளக்கம் செய்யும் முயற்சியில், எதிர்மறை அணுகுமுறை சிறப்பிடம் பெறுகிறது.

கொள்கையை விளக்க உதவும் தலைப்பு

மதுவிலக்குப் பிரசாரம் இடம்பெறுவதாலும், குடியின் தீமையைச் சுட்டி மதுவிலக்கு இன்றியமையாதது என உணர்த்தப் படுவதாலும் 'மதுவிலக்கு'என்ற தலைப்பு மிகப்பொருத்தமாகிறது.

'விமோசனம்' என்ற தலைப்பு, கள்ளுக்கடையை மூடி விட்டால் எல்லோர் வாழ்விற்கும் மேம்பாடு உண்டு என்பதைச் சுட்டுகிறது. இதே கருத்தினால்தான் இராஜாஜி, 'விமோசனம்' என்ற இதழை நடத்தினார் என்பது இங்கே நினைத்தற்குரியது. புதிய கள்ளுக்கடைகளை மேன்மேலும் திறக்க, சாதாரண

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Forwarded Free of cost, and
Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri
with the compliments of the
Department of Education,
Government of India, New Delhi.

மனிதனது உறுதி கெடும் என்ற விளக்கத்தைப் 'புதுக்கடை' என்ற தலைப்பு அளிக்கும்.

'அடிச்சுவடு' என்ற தலைப்பு, மதுவிலக்குப் பற்றிய காந்தியடிகளின் கொள்கை, மனித குலத்தை வாழ்விக்கும்; அன்னார் அடிச்சுவடுகளைப் பின்பற்றல் நம் கடமை என்ற உயர்ந்த சிந்தனைகளின் குறியீடாக அமைகிறது.

முன்-பின் நிலைகளை ஒப்பிட்டுக் காட்டி விளக்குதல்

சில கதைகளில் முன்பின் நிலைகளைக் குறிப்பிடுவதன் வாயிலாகக் கொள்கையை வலியுறுத்தும் போக்கு உள்ளது.

"முன்பெல்லாம் துரைசாமி அன்பும், ஆதரவும் நிறைந்த குரலில் அங்கயற்கண்ணியையும் முருகனையும் அழைத்துக் கொண்டே வீட்டுக்குள் நுழைவான். அதற்கு நேர் மாறாக இப் பொழுது... அவன் முகத்தில் வெறுப்பும் ஆத்திரமும் தாண்டவ மாடின... வீட்டுச் செலவுக்காக அங்கயற்கண்ணியிடம் கொடுக்கும் தொகையையும் அவன் வரவரக் குறைத்துக் கொண்டே வந்தான்."[62] 'மதுவிலக்கு' என்ற கதையின் இப்பகுதியில் துரைசாமி குடிப்பதற்கு முன் குடும்பத்தில் இருந்த மனமகிழ்ச் சியையும், அப்பழக்கத்திற்குப் பின் குடும்பத்தில் நிலவிய அமைதி யின்மையையும் காட்டும் வகையில் மதுவிலக்குக் கொள்கை வலியுறுத்தப் படுகிறது.

'புதுக்கடை'யில் "கிடைக்கும் சம்பளத்தைக் கொண்டு தன் மனைவி, இரு குழந்தைகளோடு சுகமாக வாழ்ந்து..."[63] என்ற பகுதியும் குடிப்பேய் ஆட்கொண்டபின் "இன்பம் குடி கொண்டிருந்த அக்குடும்பத்தில் வறுமை புகுந்துவிட்டது... குழந்தைகளுக்குச் சரிவரச் சோறு போடுவதே இப்பொழுது முடிவதில்லை"[64] என்ற பகுதியும் கந்தப்பன் குடிப்பதற்கு முன்-பின் நிலைகளைச் சுட்டுவதன்வழி, குடியின் இழிவை உணர்த்தும்.

காந்தியத் தாக்கத்தைப் புலப்படுத்தும் பிற உத்திகள்

காந்தியப் பின்னணி

'புதுக்கடை' என்ற கதையில், சேலம் மாவட்டத்தில் மது-விலக்கு அமலுக்கு வந்த[65] காந்தியக் காலப் பின்னணி இடம் பெறுகிறது. மதுவிலக்கு அமலுக்கு முதல் இடமாகத் தமிழ்நாட்டில்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சேலம் அமைந்தபோது காந்தியடிகள், திட்டம் முழுவதையும் அமல் நடத்துவதற்குச் சேலம் சோதனையின் வெற்றி போதிய ஊக்கமளிப்பதாக இருக்க வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளது நினைக்கத்தக்கது.[66]

'அடிச்சுவடு' என்பதில், இராமநாதன் ஒத்துழையாமை இயக்கப் போராட்டத்தில் கலந்து கொண்டு போலீஸ் தடியடிக்கு ஆளாகி மயங்கி வீழ்ந்து உயிரிழந்ததாகச் சுட்டப்படுகிறார். காந்தியடிகள் மேற்கொண்ட சத்தியாக்கிரகப் பின்னணியைச் சுட்டுவதன் வாயிலாக அப்பாத்திரத்தின் காந்திய வேட்கையைக் குறிப்பிட்டு அதன்வழி, காந்தியத் தாக்கத்தைப் புலப்படுத்து கிறார் ஆசிரியர்.

காந்தியடிகளின் வாக்கைச் செயற்படுத்தல்

கட்குடியர் உள்ள இடங்களுக்கு நேரில் சென்று, அன்பு வழியில் விளக்கி மறியல் செய்யக் காந்தியடிகள் கூறியதற்கேற்ப, 'மதுவிலக்கு' என்பதில் "...முக்கியமான யோசனை கட்குடியின் தீமையைப் பற்றி முதலில் மக்கள் உணர்ந்து மனம் திருந்த வேண்டும்...அடுத்து, கள் விற்பனைக் கடையோடுமட்டும் நிற்காமல் வயல்களிலும், களங்களிலும் விற்கப்படுவது உடனே நிறுத்தப்படவேண்டும்"[67] என்று அவ்வூர் முடிவெடுத்து மது ஒழிப்பிற்கு முயலுகிறது. 'புதுக்கடை'யில் "கிராம சேவையில் ஈடுபட்ட பல தொண்டர்கள் அக்கிராமத்தில் வந்து செய்யும் மது விலக்குப் பிரசாரத்தை..."[68] என்ற பகுதி, ஊழியர்கள் மதுவிலக்குப் பணிகளில் தம் சக்தியைப் பயன்படுத்த வேண்டும் என்ற காந்தியடிகளின்[69] கருத்துச் செயற்படுதலை உணர்த்தும்.

காந்தியடிகள் காங்கிரஸின் வேலைத் திட்டத்துடன் இணைந்த ஒன்றாய் மதுவிலக்குப் பிரசாரம் இருப்பது நல்லதே என்கிறார். அவர் வாக்கிற்கேற்ப,[70] 'விமோசனம்' என்றகதையில் காங்கிரஸ்காரர் மதுவிலக்குப் பிரசாரம் செய்ததாகச் சுட்டப்படு கிறது. இவ்வாறு காந்தியடிகளின் வாக்குச் செயற்படுவதாகக் காட்டுவதன்வழிக் காந்தியச் செல்வாக்கு இடம் பெறுகிறது.

காந்தியடிகள் பயன்படுத்திய உருவகத்தைப் பயன்படுத்தல்

காந்தியடிகள் தாம் குறிப்பிடும் "...குடி அரக்கனை விரட்டுவதைத் தொடர்ந்து ஏற்படும் சுபிட்சத்தை..."[71] என்ற

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பகுதியில் மதுவை அரக்கனாக உருவகம் செய்துள்ளார். மதுவின் கொடுமையை உணர்ந்து கூறிய அவ்வுருவகத்தைக் கதைகளில் பயன்படுத்து மாறு காந்தியத் தாக்கம் அமைகிறது. 'அடிச்சுவ'ட்டில் 'மனிதனை மிருகமாக்கும் மது அரக்கன்', 'மது அரக்கன் அவனை உளரச் செய்தான்' என்ற தொடர்களும், 'புதுக்கடை'யில் 'சேலத்தில் மது அரக்கன் மறுபடியும் தாண்டவ மாடலானான்' என்ற தொடரும், மதுவின் கொடுமையை உணர்த்த அச்சொல் பயன்படுத்தப்பட்டதைத் தெளிவுறுத்தும்.

காந்தியடிகளின் படம் இடம் பெறல்

'அடிச்சுவ'ட்டில் குடி வெறியில் நிற்கும் தயாளனிடம் காந்திமகானின் படத்தைக் காட்டி அவன் தாய், "இந்த மகானின் பரம பக்தர்களில் ஒருவரான உன்தந்தைக்கு நீயா பிள்ளை?"[72] என்று சீறுகிறாள். அப்படம் மதுவிலக்கிற்காகப் போராடிய காந்தியடிகளின் ஆளுமையைக் காட்டுவதற்குப் பயன்படுகிறது. "இந்தக் காந்தி படம் இருப்பதால் நான் குடிக்கக் கூடாது என்றால்..."[73] என்ற தயாளனின் கூற்றும் மேற்கூறிய கருத்தையே வலியுறுத்த உதவும்.

இதே கதையில் "நெடிதுயர்ந்து நின்ற மகாத்மாவின் படத்திற்கு அருகிலே சென்று... கால்களைத் தொட்டு வணங்கிய படி அவன் விம்மினான்"[74] என்று வருமிடத்தில் காந்தியடிகளின் படம், குடிவெறியனாய் இருந்து நல்லவனாக மாறிய பாத்திரத்தின் மனமாற்றத்தை வெளிப்படுத்த உதவுவதாய் அமைகிறது. அவன் உள்ளத்தில் காந்திய உணர்வு பதிந்தமையைக் காட்டக் காந்தியடிகளின் படம் ஒரு கருவியாய் உள்ளது. இவ்வாறு காந்தியடிகளின் படம் இடம் பெறுவதன் வாயிலாகக் காந்தியத் தாக்கம் அமைகிறது.

காந்தியடிகளுடன் தொடர்புடையவற்றைக் குறிப்பிடல்

'தெய்வயானை'யில் காந்திய இயக்கங்களுள் ஒன்றான மதுவிலக்கு இயக்கம் என்பது சுட்டப்படுகிறது. கதர்மூலம்தான் நாட்டின் ஏழ்மையைப் போக்க முடியும் என்ற எண்ணமுடைய காந்தியடிகள்[75] எளிமையின் சின்னமாகிய கதருடன் தம்மைப் பிணைத்துக் கொண்டவர். 'அடிச்சுவ'ட்டில் "இராமநாதன் முரட்டுக் கதர்த்துணியை அணிந்து கொண்டு தாழ்ந்த குடிமக்கள் என்று மற்றவர்களால் ஒதுக்கி வைக்கப்பட்ட ஏழை எளியவர்-

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

களோடு கலந்து''[76] பழகியது குறிப்பிடப்படுகிறது. காந்தியப் பணிபுரியும் அவரது எளிமையை உணர்த்தக் கதர் சுட்டப்படுகிறது. இவ்வாறு காந்தியடிகளுடன் தொடர்புடையவற்றைக் குறிப்பிடு வதன்வழிக் காந்தியச் செல்வாக்கு உணர்த்தப்படுகிறது.

காந்தியடிகளின் பெயரைப் பயன்படுத்தல்

'அடிச்சுவ'ட்டில், காந்தி மகான் பெயரால் விளங்கும் மாபெரும் சேவை அரங்கம், அதன் உள்ளே விளங்கும் பல தொழில் பிரிவுகள் ஆகியவற்றுடன் கூடிய பொன்னியூர் கிராமத்தை ஆசிரியர் காட்டுகிறார்; மக்களுக்குத் தொண்டு செய்வதற்குரிய அரங்கத்திற்கு, பொதுநலத் தொண்டில் தம்மை ஈடுபடுத்திய காந்தியடிகளின் பெயரைச் சூட்டி அவருடைய ஆளுமைச் சக்தியை வெளிப்படுத்துகிறார்.

காந்தியடிகளின் கூற்றையோ செயலையோ நினைவுறுத்தல்

'தெய்வயானை'யில் தந்தையின் குடிப்பழக்கம் தெய்வ யானையிடமும் அவள் சித்தியிடமும் பாதிப்பை ஏற்படுத்துமாறு அவர்களும் அப்பழக்கத்திற்கு அடிமையாவதைக் காண முடிகிறது. இந்நிகழ்ச்சி, ''குடித்தீமை குடிப்பவருடன் நின்று விடுவதில்லை. அது கொஞ்சம் கொஞ்சமாக அவருடைய குழந்தைகளுக்குப் பரவுகிறது. குடும்பத்தில் நிலையற்ற ஒரு நிலைமை ஏற்படு கிறது''[77] என்ற காந்தியடிகளின் கூற்றை நினைவுபடுத்துகிறது.

'மதுவிலக்கு' என்ற கதையில், ''சில இளைஞர்கள் மட்டும் அவ்வப்போது நகர்ப்புறங்களில் கேட்ட கொள்கைகளைப் பின்பற்றி மதுவிலக்குப் பிரசாரம் செய்யத் தொடங்குவார்கள்''[78] என்னும் இப்பகுதி, மதுவிலக்குத் திட்டங்களுள் ஒன்றாக மது விலக்குப் பிரசாரத்தை ஏற்குமாறு காந்தியடிகள் தொண்டர்களைத் தூண்டியமையை நினைவுபடுத்தும். மேலும் நகர்ப்புறங்களில் கேட்ட மதுவிலக்குக் கொள்கைகள், சில இளைஞர்களால் பின் பற்றப்பட்டன என்று சுட்டப்படுவது, காந்தியடிகளின் தொண்டர் களால் மேற்கொள்ளப்பட்ட பிரசாரங்கள், இளைஞர் பலரை ஈர்க்குமளவிற்கு வெற்றி தந்தன என்பதைக் குறிப்பாக உணர்த்துகிறது.

'புதுக்கடை'யில் குடிவெறியிலிருந்து கண் விழித்த கந்தப்பன் பறவைகளைக் காணுகிறான். ''... அப்பறவைகளுக்கு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அடக்க முடியாத, மயக்கம் தரும் களிப்பும் கிடையாது. பின்பு அதனால் ஏற்படும் தளர்ச்சியும் கிடையாது''[79] என்ற பகுதி ''மது அருந்திய ஒருவன் தன்னையே மறந்து விடுகிறான். போதை நீடிக்கும் வரையில் பயனுள்ள எதையும் செய்வதற்கு அறவே இயலாதவனாக இருக்கிறான்''[80] என்ற காந்தியடிகளின் கூற்றைக் குறிப்பால் நினைவுபடுத்துகிறது.

இக்கதையில், ''... அவர்களுக்கு எல்லாம் கடவுள்தான். சைவம், வைணவம் என்ற பெயரே தெரியாது. அவர்கள் மூன்று கோவிலுக்கும் சென்று வணங்குவார்கள்''[81] என்ற பகுதி காந்தியடிகளின் சர்வ சமயக் கோட்பாட்டை நினைவுபடுத்துகிறது. இவ்வாறு காந்தியத் தாக்கம் அமைகிறது.

'காந்திவழிக் கதைகள்' என்ற தொகுப்பு நூலில் உள்ள கதைகளை எழுதிய ஆசிரியர்களால் எழுதப்பட்ட பிற கதைகளில் மதுவிலக்குக் கொள்கை இடம் பெறுவது காந்தியத் தாக்கத்தின் வலிமையை மேலும் உறுதிப்படுத்தும். இனி அதனைப் பற்றிய ஆய்வு அமைகிறது.

மதுவிலக்குக் கொள்கை அமைந்துள்ள பிற கதைகள்

கல்கியின் 'சின்னத்தம்பியும் திருடர்களும்', 'விதூஷகன் சின்னுமுதலி', 'கவர்னர் வண்டி' ஆகிய கதைகளிலும், சி. சு. செல்லப்பாவின் 'சரித்திர தினம்', பெ. தூரனின் 'மதிமது மயக்கம்', 'குப்பன்', 'பால்பொங்கிற்றா?', 'கடையின் கவர்ச்சி' ஆகிய கதைகளிலும் இக்கொள்கை கருவாக அமைந்துள்ளது.

'சின்னத்தம்பியும் திருடர்களும்' என்பது ஓர் உருவகக் கதை. இதில் சின்னத்தம்பி என்பவனிடம் அவன்தாய் அறிவு என்ற ஒரு வைரக்கல்லைக் கொடுத்துப் பட்டணத்தில் நாணயமாக வாணிபம் தொடங்கச் சொல்கிறாள். எவரிடமும் ஏமாற வேண்டா என்ற அறவுரையை ஏற்ற அவன் சோம்பல், வியாதி, சூதாட்டம், சினம், சண்டை, மூர்க்கம், விபசாரம் ஆகிய திருடர்களிடமிருந்து தப்பிக்கிறான். ஆயின், இறுதியில் மதுத் திருடனிடம் ஏமாறும் அவன், வைரத்தை இழந்ததுடன், மற்ற எல்லாத் திருடர்களுக்கும் அடிமையாகி இறக்கிறான். 'தீமைகள் எல்லாவற்றிலும் மிகக் கொடியது மதுக்குடி' என்பது கதைக்கரு.

''... திருடர் 'தலைவனுக்கு [மதுக்குடிக்கு] அடிமைப் பட்டான். மற்ற எல்லாத் திருடர்களுக்கும் [தீமைகளுக்கும்]

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அவன் குற்றேவல் செய்ய வேண்டியிருந்தது''[32] என்று சின்னத் தம்பியைப் பற்றிக் குறிப்பிடுவது குடிப்பவன் எல்லாத் தீய பழக்கங்களுக்கும் இரையாகி அழிவான் என்பதை உணர்த்தும்.

'விதூஷகன்சின்னுமுதலி' என்ற கதையில் கூத்தாடி சின்னுமுதலிக்கு, 1921 காந்தி இயக்கத்தின்போது இருந்த மதுக்குடிக்கான கட்டுப்பாடு தளர்த்தப்படுகிறது. குடித்தால்தான் அவனுக்குக் கூத்தாட முடியும் என எல்லோரும் நம்பியதே அதற்குக் காரணம். அளவிற்கு மீறிய மதுக்குடியினால் அறிவு கலங்கியதுடன் அவன் குடும்பம் இழிநிலைக்கு ஆளாகிறது. "அளவிற்கு மீறிய குடி மனிதனின் மதியைக் கெடுக்கும்" என்பது கதைக்கரு. ''...ஆரம்பத்தில் கள்ளுக்குடித்து வந்தான். ஆனால், நாளடைவில் கள்ளில் அவ்வளவு ஜோர் பிறப்பதில்லை என்றறிந்து சாராயத்தில் புகுந்தான்''[33] என்ற பகுதி சின்னுமுதலிக்கு அளிக்கப்பட்ட மதுச்சலுகை அவனைப் படிப்படியாகக் குடிவெறிக்கு ஆளாக்கியதைச் சுட்டும்.

'கவர்னர் வண்டி' என்ற கதையில் ஆளுநர் வருகையின் போது இரயில் பாதையைக் காக்கச் செல்லும் தலையாரி முத்து விடம், குருசாமி என்பவர் குளிரைப் போக்க மதுவைக் குடிக்கத் தூண்டுகிறார். அவரிடமிருந்து பெற்ற பணத்திற்குக் குடித்து மயங்கிய அவன் ஆளுநர் வந்த இரயிலில் அடிபட்டு இறக்கிறான். 'மதுவானது உணர்வை நிலை குலையச் செய்து அழிவிற்குக் காரணமாகும்' என்பது கதைக்கரு. ''...உணர்ச்சி இருந்தால் அல்லவா குளிர் தெரியும்? கொஞ்ச நேரத்துக்கெல்லாம் புத்தி தடுமாற ஆரம்பித்தது. பிறகு மயக்கம் அதிகமாயிற்று...கவர்னர் துரையின் ஸ்பெஷல் ரயில் முத்துவின் உடம்பை ஆயிரந்தூளாகச் செய்து விட்டுப் பறந்து சென்றது.''[34] உள்ளத்தை நெருடும் இப் பகுதி, குடியினால் ஏற்படும் கொடுமையைப் புலப்படுத்தும்.

'சரித்திர தினம்' என்ற கதையில், அக்டோபர் 2-க்கு முந்தின நாள் முத்திருளு முடியுமட்டும் குடிக்கிறான். பிறகு மூன்று வாரங்கள் கழிந்தும் மனைவி சவந்திக்குச் சில்லரைகளே கொடுக் கிறான். அவள், அவனை மீண்டும் ஐயுற்றுக் கலங்க, அவனோ சேர்த்து வைத்த பணத்தையெல்லாம் அவளிடம் கொடுத்து, மகிழ்ச்சியில் ஆழ்த்துகிறான். 'மதுவிலக்குச் சட்டம் குடும்பத்தில் மகிழ்ச்சியைக் கொணருகிறது' என்பது கதைக்கரு. கணவனின்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மனமாற்றம் கள்ளுக்கடையை ஒழித்ததனால் ஏற்பட்டது என்பதை அறிந்த சவந்தி மகிழ்கிறாள்.

'மதி மது மயக்கம்' என்ற கதையில், குடிகாரக் கணவனின் கொடுமைக்கு ஆளாகும் ஒரு பெண் இறக்கும் முடிவோடு வருவதைக் கதைத்தலைவர் காணுகிறார். மதுவிலக்குச் சட்டம் நடைமுறைப் படுத்தப்பட்ட காலத்தில் எவ்வாறு குடிக்க முடியும் என வினவுகிறார். தன் கணவன் கள்ளச் சாராயம் காய்ச்சுவதையும், அதற்கு உடந்தையாகப் பழைய காவல் அலுவலர் இருப்பதையும் கூறுகிறாள். அன்றைய அலுவலர்களுக்கும், குடியர்களுக்கும் பிறகு இச்சட்டம் வெற்றியடையும் என்று அவர் கூறுகிறார். 'மதுவிலக்குச் சட்டமானது மெதுவாகக்காலப் போக்கில் நன்மை பயக்கும்' என்பது கதைக்கரு.

'குப்பன்' என்ற கதையில், நேர்மையில் வல்லவனான காட்டுப்புத்தூர் குப்பன், திருவிழாவின் போது இரவில் தான் அருந்தியது மட்டுமன்றிக் காவல் துறையினரையும் குடியில் ஆழ்த்திக் கைதியாகிறான். தனக்குப் பிறகு தன் மகனும் குடிகாரனாக இருந்துவிடக் கூடாது என்று விரும்பும் அவன், மதுவிலக்குச் சட்டம் வெகுநாட்கள் இருப்பின் பிள்ளைகளுக்கு நல்லது என்கிறான். 'மதுவிலக்குச் சட்டம் நடைமுறையில் நீடிப்பின் எதிர்கால வாரிசுகளுக்கு நல்லது' என்பது கதைக்கரு.

'பால் பொங்கிற்றா?' என்ற கதையில் காங்கயம் கிராமத்தில் வறட்சி ஏற்பட, மாடுகளை விற்ற ராமசாமி, தீய நண்பர்களின் சேர்க்கையால் கள்ளச்சாராயம் காய்ச்ச முற்படுகிறான். தீய வழியில் மேன்மேலும் பணம் பெருக, அவன் மாட்டுப் பொங்கல் கொண்டாட விரும்பிய நாளில் காவல் துறையினரால் கைதியாகிறான். 'கள்ளச்சாராயம் மனிதனின் ஆசையைத்தூண்டி முடிவில் துன்பக் குழியில் தள்ளுகிறது' என்பது கதைக்கரு.

'கடையின் கவர்ச்சி' என்பதில் விறகு வெட்டி ராமன் விறகு விற்கும் பணத்தில் ராகி, மிளகாய் வாங்கி வருவதாய்க் கூறிச் செல்கிறான். நண்பன் தூண்டுதலால் குடித்த அவன், மனைவி கறுப்பாயியை அடிக்கவும் முற்படுகிறான். 'கள்ளுக்கடையின் கவர்ச்சி சாதாரண மனிதனின் வாழ்வை நாசப்படுத்துகிறது' என்பது கதைக்கரு. கள்ளுக்கடையின் கவர்ச்சி அவனைப் பாழ் படுத்தியமை, '' ... கடையைக் கண்டாலே மனசு மயங்கிப் போவுது ''[88] என்ற அவன் கூற்றால் புலனாகும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இக்கதைகளால் அறியப்படுவன

1. மதுவினால் விளையும் இழப்பும் இழிவும் எண்ணிறந்தன.

ஒருவனது குடிப்பழக்கம் அவனையும் அவனுடன் தொடர்புடையோரையும் நாசப்படுத்திக் கீழ்மைப்படுத்துகின்றது என்பதை உணர்ந்த காந்தியடிகள், மதுவிலக்கை வலியுறுத்தியுள்ளார். மதுவிலக்கை வலியுறுத்தும் கதைகளில், பெரும்பாலும் அதன் இன்றியமையாமையை உணர்த்த, மதுக்குடியினால் ஏற்படும் இழிவுகளும் இழப்புகளும் சுட்டப்படுகின்றன. குடிப்பவர்கள் தம் மதியையும், மதிப்பையும் ஒரு சேர இழப்பதுடன் தம்மைச் சார்ந்த குடும்பத்தினரும் இழிநிலைக்கு ஆளாகி அவலமுறக் காரணமாயுள்ளனர்.[86] மேலும் குடியின் விளைவாகப் பொருட்களையும் பணத்தையும் இழந்து குடும்பங்கள் அல்லலுறுகின்றன.[87] கட்குடியர் தம் உயிருக்குத் தாமே காலனாக அமைந்து,[88] கற்போர் உள்ளத்தே கழிபேரிரக்கத்தைத் தூண்டுகின்றனர்.

இவ்வாறு அவலங்களைச் சித்திரிப்பதன்வழிச் சமுதாயத்திலிருந்து நீக்கப்படவேண்டியது மது என்ற காந்தியடிகளின் மதுவிலக்குக் கொள்கைக்கு ஆதரவு நல்கப்படுகிறது.

2. மது மாதரையும் அடிமைப்படுத்தக் கூடும்.

சமூகத்தில் குடிப்பழக்கத்திற்கு அடிமையாவோர் பெரும்பாலும் ஆடவர் எனினும் நகர, கிராமப் பெண்களும் அக்கொடுமைக்கு ஆளாகின்றனர். அதற்குக் காரணம் குடும்பத்தினரின் குடிப்பழக்கம் என்பது சுட்டப்படுகிறது ('தெய்வயானை' 'மதுவிலக்கு').

3. காந்தியத் தொண்டர்களின் பிரசாரம் கட்குடியரையும் மாற்றி விடுகின்றது.

மதுவிலக்கு இயக்க வேலைகள் காந்தியடிகளால் 1893-இல் தென்னாப்பிரிக்காவில் தொடங்கப்பட்டு, 1920-21-ஆம் ஆண்டுகளில் புயல் வேகத்தில் இருந்தது. மதுவிலக்குப் பிரசாரத்தின் தாக்கத்தைத் தம் கதைகளில் இடம்பெறச் செய்யும் சில ஆசிரியர்கள், காங்கிரசுக்காரர்களும் கிராம ஊழியர்களும் பிரசங்கம் செய்வதாகவும் ('விமோசனம்', 'புதுக்கடை'), நகர்ப்புறப் பிரசாரங்களால் ஈர்க்கப்பட்ட இளைஞர், கிராமங்களில் பிரசாரம் செய்ய முன்வருவதாகவும் ('மதுவிலக்கு') சித்திரித்துள்ளனர்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அன்பு வழியில் மேற்கொள்ளப்படும் இப்பிரசாரம், குடிப்பவரைக் குடிப்பழக்கத்தினின்றும் விடுவிக்கின்றது ('மதுவிலக்கு').

4, கள்ளுக்கடையும், கள்ளச் சாராயமும், குடிக்கத் தூண்டிக் கெடுக்கின்றன.

சமுதாயச் சீரழிவிற்கான குடிப்பழக்கத்தைக் கள்ளுக்கடையும், கள்ளச்சாராயமும் தூண்டுகின்றன. சாதாரண மக்களை மீண்டும் மீண்டும் தம்பால் ஈர்த்து அவர்கள் நாசமுறக் கள்ளுக் கடைகள் காரணமாயுள்ளன.[89] ''கடையில்லாவிட்டால் நான் புத்தி கெட்டுப்போயிருக்கமாட்டேனே'';[90] ''...சர்க்காரு கடையை எடுத்துப்பிட்டா எனக்கு இப்படித் தினமும் புத்தி கெட்டுப் போவாது''[91] என்றெல்லாம் குடித்தவர்கள் புலம்புகின்றனர். குடிகாரர்களை அணுக முடியாததற்குக் காரணம், ஆசை காட்டி அழைக்க வீட்டிற்கருகில் கள்ளுக்கடை இருப்பதே என்று காந்தி யடிகள் எண்ணுவதும்[92] மதுவிலக்கைத் தொடங்கப் புதுக்கடை எதற்கும் அனுமதி வழங்காமல் தடுத்துவிட வேண்டும்[93] என்று அவர் கருதுவதும் நினைத்தற்குரியன.

கள்ளச்சாராயம் காய்ச்சுவோர் சமூகத் தீமையாளராக இருப்பதுடன் ('பால் பொங்கிற்றா?'), அரசு அலுவலர்களைத் தமக்குச் சார்பாகக் கொண்டு மேலும் குடும்பங்கள் இன்னலுறக் காரணமாயுள்ளனர் ('மதிமது மயக்கம்'). கள்ளச்சாராயம் காய்ச்சுபவர் தண்டனைக்கு உரியவர் என்ற காந்தியடிகளின் கருத்திற்கு[94] ஏற்பக் கதையில் கள்ளச்சாராயம் காய்ச்சுபவர் கைதாகிறார் ('பால் பொங்கிற்றா?').

5. எவருக்கும் விதிவிலக்கின்றி மதுவிலக்கை அமல் படுத்தினால் நலனுண்டு.

மதுவிலக்கைச் சட்டத்திற்கேற்ப நிறைவேற்றினால் மதுவை ஒழிக்க முடியும் என்பது சுட்டப்படுகிறது. ''முதன் முதலில் காங்கிரஸ் ஆட்சி சென்னை மாகாணத்தில் ஏற்பட்டதும் சேலம் மாவட்டத்தில் மதுவிலக்கு அமலுக்கு வந்தது... மதுக் கடைகள் மூடப்பட்டன.''[95] இது, மதுக்கடைகளை ஒழிக்க மது விலக்கை அமல்படுத்த வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்த உதவும்.

மதுவிலக்கு அமலில் இருக்கும்போது தனிப்பட்டவர்க்கு அளிக்கப்படும் விலக்கு அவர்களைப் பாழ்படுத்துவதும் குறிப்பிடப்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

படுவதன்வழி ('விதூஷகன் சின்னுமுதலி') விதிவிலக்கு எவருக்கும் அளித்தல் கூடாது என்பது உணர்த்தப்படுகிறது.

மேலும் குடித்து இழிவுற்றவர்களே, மதுவிலக்குச் சட்டம் நன்மை தருவதை உணர்ந்து ''மதுவிலக்குச் சட்டம் ரொம்ப நாளைக்கு அப்படியே இருந்தா நம்ப பிள்ளை குட்டிகளுக்கு நல்லது''[96]; நம்ம ஜில்லாவிலேதான் ... கள்ளுக் கடைகளை எல்லாம் மூடிவிடறாங்களே''[97] என்று நம்பிக்கை தருகின்றனர்.

6. காந்தியடிகளின் மதுவிலக்குத் தொண்டு சிறந்த பலனை அளிக்கவல்லது.

காந்தியடிகளால்தான் மதுவிலக்குச் சட்டம் வெற்றியடைந்தது; குடும்பங்களில் மகிழ்ச்சி ஏற்பட்டது. ''எல்லாம் அந்த மவராசன் காந்தி புண்ணியம்''[98]; ''காந்திசாமியின் காங்கிரசு வாழவேணும்...'';[99] ''மது அரக்கன் வீழ்ந்தான்... மகிழ்ச்சி நிரம்பி ..''[100] என்பன அக்கருத்துக்களை வலியுறுத்த உதவும்.

மேலும் ''நமது புண்ணிய பூமிக்குக் காந்தியடிகளுடைய அடிச்சுவடுகளைவிடச் சிறந்த வழிகாட்டிகள் எங்கே அமைய முடியும்?''[101] என்ற வினா காந்தியடிகளின் மதுவிலக்கு முயற்சிகள் எதிர்காலத்திலும் பயன்தரக்கூடியவை என்பதை உணர்த்தும். மதுவிலக்கிற்கான முயற்சியில், காந்தியம் இந்நாட்டில் ஊன்றியுள்ளது என்பது இக்கதைகளால் புலனாகிறது.

குறிப்புகள் :

1 Gandhi, M.K., *Constructive Programme-Its Meaning and Place*, P.11.

2 ஸ்ரீகிருஷ்ணதத்தபட், (தொ. ஆ.), **யூத சமயம்**, ப.39.

3 ''ஒருவன் கள்-சாராயம் குடிக்கிறான் அல்லது குடிக்கவில்லை என்பதிலிருந்து அவன் நல்லவன் அல்லது கெட்டவன் என்பது தெளிவாகிவிடும்.'' — ஸ்ரீகிருஷ்ணதத்தபட், (தொ. ஆ.), **பார்ஸிசமயம்**, ப.61.

4 கந்தசாமி, சோ. ந., **பௌத்தம், தேவ சேனாபதி**, வ.ஆ., (பொ: ப. ஆ.), ப.145.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

5 வேங்கடசாமி, மயிலை. சீனி., சமணமும் தமிழும், முதற்பகுதி, ப.29.

6 திருக்குறள், 93. 2.

7 'கள் உண்பான் கூறும் கருமப் பொருள் இன்னா''. — இன்னா நாற்பது, 33.

8 ''கலம் பாயக்கம் கள் உண்டு வாழ்தல்... நன்மை இலாளர் தொழில்'' — திரிகடுகம், 39.

9 சிலப்பதிகாரம், வரந்தருகாதை, அடி, 197.

10 மணிமேகலை, ஆதிரை பிச்சையிட்ட காதை, அடி 84-85,

11 தணிகை உலகநாதன், (தொ. ஆ.), நாமக்கல் கவிஞர் பாடல்கள், 107. 7.

12 Gandhi, M.K., *Harijan*, dt. 14-8-1937.

13 Gandhi, M.K., *Young India*, dt. 22-1-1925.

14 இதன் விளக்கத்தை மதுவிலக்கும்-அகிம்சையும் என்ற பகுதியில் காணலாம்.

15 Gandhi, M.K., Young India, dt. 26-3-1925.

16 Ibid., dt. 8-1-1925.

17 Gandhi, M.K., *Harijan*, dt. 24-12-1938.

18 வேங்கடராஜுலு, ரா., (ப. ஆ.), மகாத்மா காந்தி நூல்கள், தொகுதி 7, வேங்கடராஜுலு, ரா., & ஜெயமணி சுப்பிரமணியம், (மொ. பெ. ஆ.), ப.661.

19 மேலது, ப.670,

20 மேலது, ப.680.

21 Gandhi, M.K., *Young India*, dt. 18-11-1926.

22 Gandhi, M.K., *Harijan*, dt. 9-10-1937.

23 Gandhi, M.K., *Constructive Programme-Its Meaning and Place*, p.11.

24 Gandhi, M.K., *Young India*, dt. 22-12-1921.

25 Ibid., dt. 22-6-1921.

26 Gandhi, M.K., *Harijan*, dt. 31-7-1937.

27 Ibid.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

28 வேங்கடராஜுலு, ரா., (ப.ஆ.), மகாத்மா காந்தி நூல்கள், தொகுதி 7, வேங்கடராஜுலு, ரா., & ஜெயமணி சுப்பிரமணியம், (மொ.பெ.ஆ.), ப. 670.

29 மேலது, ப. 695.

30 Gandhi, M.K., *Constructive Programme-Its Meaning and Place,* p.p. 11-12.

31 Gandhi, M.K., *Harijan,* dt. 28-8-1937.

32 Ibid; dt. 19-5-1946.

33 Ibid; dt. 28-8-1937.

34 Gandhi., M.K., *Young India,* dt. 6-8-1926.

35 வேங்கடராஜுலு, ரா., (ப.ஆ.), மகாத்மா காந்தி நூல்கள், தொகுதி 7, வேங்கடராஜுலு, ரா., & ஜெயமணி சுப்பிரமணியம், (மொ.பெ.ஆ.), ப. 701.

36 மேலது, பக். 708—709.

37 மேலது, பக். 677.

38 இராமையன், கே.பி., 'குடி கெடுத்த குடி', மது ஒழிப்புச் செயற்பாட்டு மாநாட்டு மலர், உரத்த நாடு, தஞ்சை மாவட்டம், ஜூன் 1975.

39 Priyaranjan Sen, Gandhism, p.p. 16-17.

40 வேங்கடராஜுலு, ரா., (ப.ஆ.), மகாத்மா காந்தி நூல்கள், தொகுதி 7, வேங்கடராஜுலு, ரா., & ஜெயமணி சுப்பிரமணியம், (மொ.பெ.ஆ.), ப. 773.

41 மேலது, ப. 708.

42 Gandhi, M.K., *Harijan,* dt. 28-8-1937.

43 Ibid., dt. 14-8-1937.

44 கல்கி, 'தெய்வயானை', காந்திவழிக் கதைகள், கல்யாண ராமன், கே.ஆர்., (தொ.ஆ.), ப.4.

45 மேலது, ப.7.

46 மேலது, ப.4.

47 மேலது, ப.4.

48 மேலது, ப.5.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

49 சுப்பையா, வி.எஸ்., 'மதுவிலக்கு', காந்திவழிக் கதைகள், கல்யாணராமன், கே.ஆர்., (தொ.ஆ.), ப.140.

50 மேலது, ப. 138.

51 மகாத்மாகாந்தி, மதுவிலக்கு, உதயசங்கர், த. அர., & கந்தசாமி, கு.ரா., (தொ.ஆ.), ப.11.

52 ஸோமாஸ், 'விமோசனம்' காந்திவழிக்கதைகள், கல்யாண ராமன், கே.ஆர்., (தொ.ஆ.), ப. 246.

53 Gandhi, M.K., *Harijan*, dt. 24-4-1937

54 தூரன், பெ., 'புதுக்கடை', காந்திவழிக் கதைகள், கல்யாணராமன், கே. ஆர்., (தொ.ஆ.) ப. 316.

55 மகாத்மா காந்தி, மதுவிலக்கு, உதயசங்கர், த.அர., & கந்தசாமி, கு.ரா., (தொ.ஆ.), ப,11.

56 தூரன், பெ., 'புதுக்கடை', மு. நூ., ப. 322.

57 நாகசண்முகம், 'அடிச்சுவடு', காந்தி வழிக் கதைகள், கல்யாணராமன், கே.ஆர்., (தொ.ஆ.), ப. 424.

58 மேலது, ப. 428.

59 மேலது, ப. 422.

60 Gandhi, M.K., *Young India*, dt. 10-4-1930.

61 நாகசண்முகம், 'அடிச்சுவடு', மு.நூ., ப. 427-428.

62 ஸோமாஸ், 'விமோசனம்', மு.நூ., ப. 244-245.

63 தூரன், பெ., 'புதுக்கடை', மு.நூ., ப. 316.

64 மேலது, ப. 317.

65 மேலது, ப.320.

66 வேங்கடராஜுலு., ரா., (ப. ஆ.), மகாத்மாகாந்தி நூல்கள், தொகுதி 7, வேங்கடராஜுலு, ரா., & ஜெயமணி சுப்பிரமணியம் (மொ, பெ. ஆ.), ப.695,

67 சுப்பையா, வி.எஸ்., 'மதுவிலக்கு', மு.நூ., ப.133.

68 தூரன், பெ., 'புதுக்கடை', மு.நூ., ப.319.

69 Gandhi, M.K., *Harijan*, dt. 14-8-1937.

70 Gandhi, M.K., *Young India*, dt. 11-7-1929.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

71 Gandhi, M.K., *Harijan*, dt. 1-4-1939.

72 நாகசண்முகம், 'அடிச்சுவடு', மு.நூ., ப.425.

73 மேலது.

74 மேலது, ப.427.

75 Gandhi, M.K., *Young India*, dt. 16-2-1921.

76 நாகசண்முகம், 'அடிச்சுவடு', மு.நூ., ப.422.

77 Gandhi, M.K., *Harijan*, dt. 18-9-1937.

78 சுப்பையா, வி.எஸ்., 'மதுவிலக்கு', மு.நூ., ப.137.

79 தூரன், பெ., 'புதுக்கடை', மு.நூ., ப.318.

80 வேங்கடராஜுலு, ரா., (ப. ஆ.), மகாத்மாகாந்தி நூல்கள், தொகுதி 4, அழகிரிசாமி, கு., (மொ. பெ. ஆ.). ப.35

81 தூரன், பெ., 'புதுக்கடை', மு.நூ., ப.317.

82 கல்கி, 'சின்னத்தம்பியும் திருடர்களும்', பாங்கர் விநாயகராவ், ப.44.

83 கல்கி, 'விதூஷகன் சின்னுமுதலி', பாங்கர் விநாயகராவ், ப.47

84 கல்கி, 'கவர்னர் வண்டி', பாங்கர் விநாயகராவ், பக். 75-76.

85 தூரன், பெ., 'கடையின் கவர்ச்சி', பிள்ளைவரம், ப. 87.

86 'தெய்வயானை', 'விமோசனம்', 'புதுக்கடை', 'அடிச்சுவடு', 'கடையின் கவர்ச்சி', 'மதி மது மயக்கம்', 'விதூஷகன் சின்னுமுதலி' ஆகிய கதைகளின்வழி இக்கருத்துப் புலனாகும்.

87 'தெய்வயானை', 'விமோசனம்', 'புதுக்கடை' ஆகிய கதைகள் இக்கருத்திற்குத் துணையாக உள்ளன.

88 'தெய்வயானை', 'அடிச்சுவடு', 'சின்னத்தம்பியும் திருடர்களும்', 'கவர்னர் வண்டி' ஆகிய கதைகளில் இச்சித்திரிப்பு இடம் பெறுகிறது.

89 'தெய்வயானை', 'விமோசனம்', 'புதுக்கடை', 'கடையின் கவர்ச்சி', 'சரித்திரதினம்' ஆகிய கதைகளின்வழி இக்கருத்துப் புலனாகிறது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

90 தூரன், பெ., 'புதுக்கடை', மு.நூ., ப.322.

91 தூரன், பெ., 'கடையின் கவர்ச்சி', மு.நூ., ப. 87.

92 Gandhi, M.K., *Harijan*, dt. 14-8-1937.

93 Ibid., dt. 31-7-1937.

94 Ibid.

95 தூரன், பெ., 'புதுக்கடை', மு.நூ., ப. 320.

96 தூரன், பெ., 'குப்பன்', தங்கச்சங்கிலி, ப. 146.

97 ஸோமாஸ், 'விமோசனம்', மு.நூ., ப. 247.

98 மேலது.

99 தூரன், பெ., 'குப்பன்', மு.நூ., ப. 146.

100 செல்லப்பா, சி.சு., 'சரித்திரதினம்', சத்யாக்ரகி, ப.80.

101 நாகசண்முகம், 'அடிச்சுவடு', மு.நூ., ப. 428.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

2. காந்திவழிக் கதைகளில் புலனடக்கம்

ஆய்வுக்கு உட்பட்டுள்ள காந்திவழிக் கதைகள் என்ற தொகுப்பு நூலில் உள்ள கதைகளில், காந்தியடிகள் குறிப்பிடும் தனிமனித ஒழுக்க நெறிகளில் ஒன்றான புலனடக்கக் கோட்பாடு பற்றிய ஆய்வு இம்மூன்றாம் இயலின் இரண்டாம் பகுதியில் அமைகிறது.

புலனடக்கம் – விளக்கம்

மணம் செய்து கொள்ளாமல் இருப்பதைக் குறிக்கும் வடசொல் பிரம்மச்சரியம் ஆகும்.[1] புலன்களை வெல்வது என்பதைப் பிரம்மச்சரியம் காத்தல் என்று பௌத்த மதம் இயம்பும்.[2] புணர்ச்சி விழையாமையைப் பிரம்மச்சரியம் எனக் குறிப்பிடுகிறது சமண மதம்.[3] எந்தக் காலத்திலும் எந்த இடத்திலும் எல்லாப் புலன் களையும் அடக்கியாளுவதே பிரம்மச்சரியம் என்கிறார் காந்தியடிகள்.[4]

புலனடக்கத்தின் சிறப்பைச் சமய நூல்கள் பல வலியுறுத்தி யுள்ளன. புலன்களால் பெறும் இன்பங்கள் இழிந்தவை; வெறுக்கத் தக்கவை என்றும் புலனடக்கத்தால் பேரின்பம் கிட்டும் என்றும் புத்தர் கருதினார்.[5] சிற்றின்பத்தை மனம் வாக்குக் காயங்களால் நுகராதிருத்தல் சமண உயர்நோன்புகளில் ஒன்றாகப் போற்றப் படுகிறது.[6] இறைவனுக்கு அணிவிக்கக் கூடிய எட்டு மலர்களுள் ஒன்று புலனடக்கம் என்று பத்ம புராணமும்,[7] அறவழியில் எல்லோரும் செல்ல உதவும் ஒன்பது நோன்புகளில் ஒன்று புலனடக்கம் என ஸ்கந்த புராணமும்[8] புலனடக்கத்தைச் சிறப்பிக்கின்றன.

"ஆமை தனது அங்க அவயவங்களை உள்ளே இழுத்துக் கொள்வதைப் போலத் தன் இந்திரியங்களை அவற்றின் ... புலன்களிடமிருந்து வலிந்து இழுத்துக் கொள்பவன் நிலைத்த மதியுடையோன் எனப்படுவான்"[9] என்பது பகவத் கீதையின் சாரம். புலனடக்கத்தின் மேன்மையைத் தமிழ் இலக்கியங்களும் புகழும். பொறிகளை அடக்கியாள்பவன் ஏழு பிறப்புகளிலும் நன்மையுறுவான் என வள்ளுவமும்,[10] பொறிவழி விருப்பங்களைத்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தடுத்துத் தவ ஒழுக்கத்தைக் காக்கவல்லவன் வீட்டுலகை அடைவான் என நாலடியாரும் இயம்பும்.[11]

இவ்வாறு வழிவழிப் போற்றி வந்த புலனடக்கத்தின் இன்றியமையாமையை உணர்ந்தவர் காந்தியடிகள்.

காந்தியடிகளும் புலனடக்கமும்

(அ) துறவிகளுக்கு மட்டும் உரியதாக இருந்த புலனடக்கம் இல்லறத்தாருக்கும் இன்றியமையாதது என விளக்கியமை காந்தியடிகளின் சிறப்பாகும்.

பொதுவாகப் புலனடக்கம் என்பது துறவிகளுக்கே பெரிதும் வேண்டப்படுவது என்று பௌத்த சமண சமயங்கள் கூறும். "பிக்கு பிக்குணியர்க்குக் காமம், அறவே களைதற்குரியது என்றும், இல்லறத்தாராகிய சில உபாசகர்க்கு ஒருவன் ஒருத்தி, ஒருத்தி ஒருவன் என்ற எல்லையில் வாழ்க்கை நடத்துதல் நன்றென்றும் புத்தர் வரையறுத்தார்".[12] சமணத்துறவிகளுக்கேயுரிய நான்காவது நோன்பாகப் பிரம்மச்சரியம் மேற்கொள்ளப் படுகிறது.[13] ஆயின் காந்தியடிகள், இல்லறத்தாரும் மேற்கொள்ளத் தக்கது புலனடக்கம் என்பதை உணர்ந்து திருமணப் பிணைப்பின் தூய்மையைக் காப்பாற்ற வேண்டுமானால் புலனடக்கத்தை வாழ்வின் கடமையாகக் கொள்ளுமாறு கூறுகிறார்.[14] இனப் பெருக்கத்திற்கு மட்டும் ஆண்-பெண் சேர்க்கை ஏற்றது என்பது அவரது கருத்தாகும். இதனை அவர், 'இல்லற பிரம்மச்சரியம்' என்கிறார்.[15]

(ஆ) மனைவி மக்களோடு இல்லறத்தில் இருந்து புலனடக்கத்தை மேற்கொண்ட தன்மையும் காந்தியடிகளுக்கு உரிய சிறப்பாகும்.

காந்தியடிகள் இல்லற வாழ்வில் இருந்த நிலையில் புலனடக்க ஆய்வுகள் செய்தவர். இது குறித்துக் "கையொன்று செய்ய வாயொன்று பேச மனமொன்று நினைக்காமல் விஞ்ஞானிகளுக்கு ஏகாக்கிரக நிலை தேவை. இந்நிலையில் கைதேர்ந்த விஞ்ஞானியாகிய காந்தியடிகள் தமது பொறி புலன்களைக் கட்டுப்படுத்தி ஆராய்ந்தார்.......ஆத்மா மிளிர வேண்டுமானால் புலனடக்கம் தேவை என்பதற்கு அவரது வாழ்க்கை ஒரு சத்திய சோதனையாயிற்று"[16] என விளக்கமளிக்கிறார் க. அருணாசலம். காந்தியடிகளே, "என்னுடைய புலனடக்கம், அகிம்சை ஆகிய

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இரண்டுமே சொந்த அனுபவத்தினின்றும் தோன்றியவை''[17] என்று குறிப்பிடுவதும் நோக்கத்தக்கது.

இவ்வாறு இல்லறத்தார்க்குப் புலனடக்கம் இன்றியமையாதது என்று விளக்கிய நிலையிலும், தம் இல்லற வாழ்க்கையில் ஒவ்வொரு படியிலும் புலனடக்கத்தைப்பற்றி ஆய்வு நடத்தி ஒளிவு மறைவின்றி அத்தன்னுணர்வுகளை வெளியிட்ட தன்மையிலும் தனித்தன்மையுடையவராகக் காந்தியடிகள் திகழ்கிறார்.

புலனடக்கம் பற்றிய காந்தியடிகளின் கருத்துகள்

சத்தியம், அகிம்சை, புலனடக்கம் ஆகிய மூன்று ஒழுக்கங்களிலிருந்தே எந்த ஓர் ஒழுக்கமும் தோன்றும் என்ற கருத்துடையவர் காந்தியடிகள்.[18] இறைவனைக் காணுவதற்கு இன்றியமையாதது புலனடக்கம் என்ற கருத்தில், ''பிரம்மத்தைத் தேடி நிற்கும் முயற்சியே பிரம்மச்சரியம்''[19] என்கிறார். புலனடக்கம் என்பது உடல் மட்டுமன்றி உணர்ச்சிகளின் கட்டுப்பாட்டில் அமைவது;[20] உடலில் மட்டுமன்றிச் சொல்லிலும் சிந்தனையிலும் தூய்மையாயிருப்பது[21] என்பன அவருடைய தெளிந்த முடிபுகள்.

புலனடக்கம் இல்லாமல் ஆணோ, பெண்ணோ உய்ய முடியாது;[22] ஆண்களும் பெண்களும் உடல் இச்சை உணர்வு அற்று இருப்பது என்பதே புலனடக்கத்தின் பொருள்;[23] மனித குலம் தழைக்கப் புலனடக்கம் உதவ வேண்டும் என்றெல்லாம் எண்ணுகிறார். ''உண்மையான பிரம்மச்சாரி சரீர இச்சையுடன் போராட வேண்டியிராது; மக்கள் உற்பத்தியில் விருப்பம் அவனுக்கு இராது... அவனுடைய விருப்பமெல்லாம் மனித குலத்தின் துன்பத்தைத் தீர்ப்பதாகவே இருக்கும்''[24] என்பது அவரது கருத்தாகும். சத்திய வாழ்க்கை வாழ்பவன் சத்தியத்தை வழிபடுவது தவிரச் சிற்றின்பத்தில் ஈடுபடமாட்டான். அகிம்சை என்பது கணவன் மனைவி ஒருவர்க்கொருவர் காட்டும் அன்பு மட்டுமன்று. அனைத்து உயிர்களிடத்தும் காட்டும் அன்பேயாகும். அதனால் சத்தியத்திற்கும், அகிம்சைக்கும் முற்றும் முரணானது புலனுகர்வு என்று அறுதியிட்டுக் கூறுகிறார்.[25]

மக்கட் பெருக்கத்தை இயற்கையான புலனடக்கத்தாலன்றிச் செயற்கை முறைகளால் கட்டுப்படுத்துவது கூடாது என்கிறார் காந்தியடிகள். ''மக்கள் தொகைக் கட்டுப்பாட்டுக்கு நேர்மையான உயர்ந்த வழி புலனடக்கம்'';[26] ''குடும்பக் கட்டுப்பாட்டிற்குத்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தொன்று தொட்டு அளிக்கப்பட்ட முறை புலனடக்கம் ... செயற்கை முறைகளைக் கையாளுவது தீய பழக்கங்களுக்கு ஆக்கமளிப்பது போன்றதாகும்''[27] என்பன அவர்தம் கருத்துகள். ''முழுமையான பிரம்மச்சரியம் அல்லது மணவாழ்விலும் பிரம்மச் சரியம் என்ற இலட்சியம் ஆன்மீக அல்லது ஓர் உயர்தர வாழ்வை எய்த விரும்புவோருக்கு இன்றியமையாதது''[28] என்றும் அவர் வலியுறுத்துகிறார்.

புலனடக்கத்தைக் கைக்கொள்ளும் வழி முறைகள்

இறைவனால் அளிக்கப்பட்ட சக்தி, கடுமையான தற்கட்டுப் பாட்டின்வழிக் காக்கப்பட்டு உடலுக்கு மட்டுமன்றி மனத்திற்கும் ஆத்மாவிற்கும் ஊக்கமும் வலிமையும் அளிக்கும் சக்தியாக மாற்றப்பட வேண்டும் என்ற கருத்துடையவர் காந்தியடிகள்.[29] அவர் புலனடக்கத்தை மேற்கொள்ள, சில விதிமுறைகளை வகுத் தளிக்கிறார். அவையாவன : (1) புலனடக்கத்தின் இன்றியமை யாமையை உணருவது முதற்படியாகும். (2) புலன் உணர்ச்சி களைச் சிறிது சிறிதாகக் கட்டுப்படுத்துவது அடுத்தபடியாகும். நாவடக்கம் இன்றியமையாதது. தூய பொருளை மட்டும் பார்த்தல், கேட்டல், நுகர்தல் நல்லது. விழித்திருக்குங்கால் கைகால்களுக்கு நல்ல வேலை கொடுக்க வேண்டும். அவ்வப்போது உண்ணாநோன்பு மேற்கொள்ள வேண்டும். (3) தூய நட்புக் கொள்ளல், நல்ல நூல்களைப் பயிலல் மூன்றாவது படியாகும். (4) அடுத்த படியாக அமைவது இறையருளைக் கோருவ தாகும்.[30] விலங்கிச்சையை வெல்வதற்கு மிகச் சக்தி வாய்ந்த துணை இராம நாமம் அல்லது அதைப் போன்ற வேறு ஏதாவது ஒரு மந்திரந்தான்.[31] தியானத்தின் மூலம் நம்முள்ளே பிரம்மத் தைத் தேடும் முயற்சியாகிய பிரம்மச்சரியத்தை மேற்கொள்ள வேண்டும்.[32] இவ்விதி முறைகள் படிப்படியாகப் புலனடக்கம் குறித்த மனவளர்ச்சிக்கு உதவுமாறு அமைந்துள்ளன.

புலனடக்கத்தால் விளையும் நன்மைகள்

உண்மையான புலனடக்கத்தை மேற்கொள்ளுபவர்கள் புறஅக நலன்களைப் பெறலாம் என்பது காந்தியடிகள் கண்ட உண்மை. ஆண்-பெண்கள் வலிமையுள்ளவர்களாக இருக்க முடியும்;[33] வாழ்நாள் முழுவதும் புலனடக்கம் காப்பவர்க்கு உடல் நோய்கள் அணுகா;[34] புலனடக்கம் என்ற தொடக்க விதியைப் பின்பற்றினாலொழிய நோய்களை ஒழித்துவிட முடியாது[35] எனப்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

புறநலன்களைச் சுட்டுகிறார். உண்மையான பிரம்மச்சாரிகளுக்கு இறப்புப்பற்றிய அச்சமும் வீண் சலனங்களும் இரா என அகநலன்களையும் குறிப்பிடுகிறார்.[36] மேலும் இச்சையின் வேகத்தை அடக்கி ஆள்பவர்கள், உடல் மனம் ஆன்மா ஆகியவற்றில் வலிமை பெறுகிறார்கள் எனவும் உணர்த்துகிறார்.[37]

காந்தியடிகளின் வாழ்க்கையில் புலனடக்கம்

"1899 முதல் நான் உளமுவந்தும் உளமார்ந்தும் புலனடக்கத்தை மேற்கொள்ள முயன்று வந்திருக்கிறேன்"[38] எனத் தம் முப்பதாவது வயதிலேயே புலனடக்கத்தை மேற்கொள்ளத் தொடங்கியதைக் குறிப்பிடுகிறார் அடிகள்.

புலனடக்கத்தை முழுமையாக மேற்கொள்வது சாத்தியமானதே என்பதில் ஐயம் இல்லை எனினும், முழுமையான புலனடக்கத்தைத் தாம் அடைந்துவிடவில்லை என அவர் ஒளிவு மறைவின்றிக் கூறுகிறார். உடலை அடக்கி ஆளும் வல்லமையை அடைந்திருப்பினும், சிந்தனை தொடர்பாக மேற்கொள்ளத்தக்கது மிகுதியாக உள்ளது என்றும் சிந்தனைக் கட்டுப்பாடின்மை பத்து ஆண்டுகளில் பல நோய்களுக்குக் காரணமாயிற்று என்றும் குறிப்பிட்டுள்ளார்.[39] எனினும், தமது முன்னேற்றம் நம்பிக்கையை அளிப்பதாயிருந்தது என்று பெருமிதம் கொள்கிறார்.[40]

தென்னாப்பிரிக்காவில் இருந்தபோது, தம் மனைவியிடம் தாம் புலனடக்கத்தை மேற்கொள்ள முடியாததற்குக் காரணம் போதிய மன உறுதி தம்மிடம் இல்லாமையே என அடிகள் ஒத்துக்கொள்கிறார். சமூகப்பணிக்குச் செல்வோர் குழந்தைப் பேற்றில் அவாவை நீக்கவேண்டும் என்ற எண்ணம், ஜுலுக் கலகத்தில் பணி செய்ய முற்பட்டபோது ஏற்பட்டது என்றும், அப்போது புலனடக்கம் குறித்துச் சிந்திக்கும் நிலை ஏற்பட்டது என்றும் அவர் குறிப்பிடுகிறார்.[41] ஆழ்ந்து சிந்தித்த பிறகு 1906-இல் தாம் புலனடக்க நோன்பை மேற்கொண்டதாயும், அது சத்தியாக்கிரகத்திற்கு ஆயத்தம் செய்ததுபோல் இருந்ததாயும் கூறுகிறார்.[42]

உலாவுதல் புலனடக்க நோன்பின் ஓர் அம்சம் எனக் கருதித் தென்னாப்பிரிக்காவில் நாள்தோறும் நாற்பது கல்தொலைவு நடந்ததைக் குறிப்பிடும் அவர், நாள்தோறும் பெறும் சக்தியைச் சேர்த்து வைக்காமல் பயன்படுத்தவேண்டும் என்ற உண்மையை வெளியிடுகிறார்.[43] "காமப்பசி என்னிடமிருந்து நாளாவட்டத்தில்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மறைய மறைய, என்னுடைய குடும்ப வாழ்க்கை மேலும்மேலும் அமைதியானதாகவும் இனிமையானதாகவும் ... ஆயிற்று...''[44] எனப் புலனடக்கத்தால் பெற்ற பயனைக் குறிப்பிடுகிறார்.

இனிக் 'காந்திவழிக் கதைகள்' என்ற தொகுப்பு நூலில் உள்ள கதைகளில் இடம்பெறும் புலனடக்கக் கோட்பாடு பற்றிய ஆய்வு இடம் பெறுகிறது.

புலனடக்கக் கோட்பாடு அமைந்துள்ள கதைகள்

'காந்திவழிக் கதைகள்' என்ற தொகுப்பு நூலில் உள்ள கதைகளில் 'புலனடக்கம்' என்ற கருத்தை விளக்க வந்த கதைகள் வாசவன் எழுதிய 'மடவார்ப் பொறை', முத்துராமலிங்கம் எழுதிய 'விளக்கேற்ற வந்தவள்' ஆகிய இரண்டும் ஆகும்.

கதைச் சுருக்கமும் கருவும்

'மடவார்ப் பொறை' என்ற கதையில் பதினைந்தாம் வயதில் விடுதலைப் போரில் ஈடுபட்டு நாடு விடுதலை அடையும் வரை புலனடக்கத்தை மேற்கொண்ட ஒரு சத்தியாக்கிரகி விடுதலை அடைந்தபின் செல்வ வாழ்வு காரணமாக மனச் சலனத்திற்கு ஆளாகிறார். ஐம்பத்து மூன்று வயதடைந்த அவர் ஏழைப் பெண்ணை மணந்த நாளன்று, மனைவியாக இருப்பதற்குத் தகுதியில்லாத அவள், தம்மை வஞ்சித்ததற்குக் காரணம் ஏழ்மையே என அறிந்து மனம் மாறி மகளாக ஏற்கிறார். 'செல்வ வாழ்க்கையின் தொடர்பு புலனடக்கத்தைத் தகர்த்து விடும்' என்பது கதைக்கரு. எல்லைப்புற மலை வகுப்பினரைப்பற்றிக் குறிப்பிடும் காந்தியடிகள் ''...இந்த மலை வகுப்பினருக்கு நாகரிகம் அல்லது சுகவாழ்வுடன் தொடர்பு ஏற்படும்போது அவர்களுடைய புலனடக்கம் தகர்ந்து விடுகிறது''[45] என்று கூறுவது நினைத்தற்குரியது.

'விளக்கேற்ற வந்தவள்' என்ற கதையில், கல்லூரி முதல்வரான சாந்தா புலனடக்கத்தைக் கைக்கொண்டு முப்பத்திரண்டு வயது வரையில் திருமணத்தை ஒதுக்கியே வாழ்கிறாள். கல்லூரிக்கு வந்த பேச்சாளர் கோபாலனிடம் மனம் ஒன்றிய அவள், அவரை எளிய முறையில் மணந்துகொள்கிறாள். இல்லறத்தில் இருந்து கொண்டு புலனடக்கத்தைப் பேண உறுதி கொள்கிறாள். 'இல்லறத்திலிருந்தும் புலனடக்கத்தை மேற்கொள்வது சிறப்பு' என்ற காந்தியக் கருத்து இக்கதையின் கரு.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கதைப்பின்னலில் கொள்கையைப் புலப்படுத்தல்

இருகதைகளிலும் தனிமனித உள்ளத்தில் ஏற்படும் அகப் போராட்டங்கள் கதைப்பின்னல்களுக்கு அடிப்படையாக உள்ளன. இறுதியில் புலனடக்கத்தின் இன்றியமையாமை வலியுறுத்தப் படுகிறது.

பாத்திரப் படைப்பு

'மடவார்ப் பொறை'யில் நாடு விடுதலை பெறப் போராடும் சத்தியாக்கிரகி புலனுணர்வுகளுக்கு இடம் கொடாமல் இயக்கங் களில் ஈடுபடுகிறார். நாடு விடுதலை அடைந்த பின் வசதிமிக்க வாழ்வு சிற்றின்பத்தில் உழல வழிவகுக்கிறது. ''...மனித வாழ்க் கையின் அனுபவ ஏடுகள் எதையும் நாங்கள் புரட்டிப் பார்த்த தில்லை... பருவ உணர்ச்சிகளுக்குத் தீனி போடாத கல்நெஞ்சனாக நான் ..''[46] என்ற அவரது தற்கூற்று நாட்டுத் தொண்டில் பங்கேற்க மேற்கொண்ட, அவரது உணர்வுக் கட்டுப் பாட்டை உணர்த்தும். ''...தனது முழு ஆன்ம சக்தியுடன் மனித வர்க்கத் திற்குச் சேவை செய்ய வேண்டும் என்று விரும்புகிறவர் பிரம்மச் சரியம் இல்லாமல் அதைச் செய்யமுடியாது''[47] என்ற காந்திய டிகளின் கருத்திற்கேற்பக் கதைத்தலைவர் சலன உணர்வுகளை வென்றவராயிருப்பது நினைத்தற்குரியது. செல்வ வளத்தில் திளைக்கும் கட்டத்தில் ''...நான் இறைவனை அழைத்தபோ தெல்லாம் காம ஸ்வரூபிணியே காட்சி தந்தாள்...''[48] என்று அவர் கூறுவது அவரது புலனடக்க வீழ்ச்சியைக் காட்டும்.

'விளக்கேற்ற வந்தவள்' என்பதில் சாந்தா மேற்கொண்ட தொடக்க காலப் புலனடக்கத்தை, ''உணர்ச்சிகளை அடக்கி வாழ்வு முழுவதும் வடுப்படாத கன்னியாகவே வாழ ஆசைப் பட்டாள். வாழ்ந்தும் வந்தாள் கடந்த பல ஆண்டுகளாக''[49] என்ற ஆசிரியரின் கூற்றுத் தெளிவாக்கும். பிறகு திருமண வேட்கையால் அவளது உறுதிப்பாடு பிறழ்ந்தாலும், திருமணம் செய்து கொண்ட பின்னும் புலனடக்கத்தைக் காக்க முடிவு செய்தமை அவளது உள்ளத்து ஆற்றலை உணர்த்தும்.

பாத்திரப் படைப்பு — ஒரு மதிப்பீடு

மேற்கூறிய இரு கதைகளிலும் படைக்கப்பட்ட பாத்திரங் களில், இல்லறத்தில் இருந்து தேவைப்படும் குழந்தையை மட்டும் பெற்றுப் புலனடக்கத்தைக் கைக்கொள்ள விழையும் சாந்தாவின்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

படைப்பு இயல்பான ஒன்றாக அமைந்துள்ளது. பிள்ளைப் பேறு விரும்பும் காலந்தவிர ஏனைய காலங்களில் குடும்பத்தில் கட்டுப் பாட்டுடன் வாழ்தல் 'இல்லற பிரம்மச்சரியம்' என்ற காந்தியடி களின் கருத்தை விளக்க அமைகிறது இப்பாத்திரம். ஆயின், 'மடவார்ப் பொறை'யில் சத்தியாக்கிரகியாக இருந்த கதைத் தலைவர், முதிர்ந்த வயதில் தம்மை மீறிய காமத்துன்பத்தில் உழன்றாலும், தம்மை மணக்க முன்வந்த பெண்ணிடம் அவள் ஏழ்மையைக் காரணமாக்குவதால் ஏற்படும் குற்ற உணர்வுடன் அணுகுவதும், அவள் விருப்பத்தைநேரிடையாகக் கேட்ட பின்னரே மணக்க முன்வர முயலுவதும், அவள் தங்கையின் மணத்திற்கும் உதவ வருவதும், இவற்றிற்கும் மேல் தான் மனைவியாக இருக்கத் தகுதியற்றவள் என்று அவள் கூறியபோது தம்மிடம் அதுவரை மேலோங்கியிருந்த ஆவலைக் கட்டுப்படுத்தி அதனைத் தவற்றுக்கு மாற்றுத்தேடும் உணர்வாக ஆக்கி அவளை மகளாக ஏற்பதும் கற்பவரிடம் நெகிழ்வை உண்டாக்கும் நிலையில் சிறந்த படைப்பாக அமைகிறார்.

வயதான பருவத்தில் காமவேட்கையில் சிக்குண்டதை வெளிப்படையாகக் கூறும் இப்பாத்திரத்திடம், தந்தை மரணத்தின் போது காமவேட்கை தம்மைக் குருடாக்கியது என்பதை வெளிப் படையாகக் கூறும் காந்தியடிகளின் வாழ்க்கைச் சாயல் அமைந்துள்ளது.

அட்டவணை : 4

புலனடக்கக்கோட்பாடு-கதைமாந்தர்

எண்	கதைகள்	காந்திய வழியில் புலனடக்கத்தை மேற் கொண்டு இடையில் மனம் தடுமாறி மீண்டும் மனமாற்றம் அடைபவர்	காந்திய வழியில் புலனடக்கத்தை மேற் கொள்ள உறுதி எடுப்பவர்
1	'மடவார்ப் பொறை'	கதைத்தலைவர்	—
2	'விளக்கேற்ற வந்தவள்'	—	சாந்தா

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

உத்திகள்

வயது மிகுந்த பருவத்தில் காம உணர்வுகளுக்கு இடங் கொடுப்பதன் விளைவாகச் சத்தியாக்கிரகி வாழ்வில் ஏமாற்றம் அடைகிறார் ('மடவார்ப் பொறை'). இதில் எதிர்மறை அணுகு முறை மேற்கொள்ளப்படுகிறது.

கொள்கையை விளக்க உதவும் தலைப்பு

புலனடக்க ஒளியால் இல்லற விளக்கை ஏற்ற வந்தவள் என்ற பொருளை உள்ளடக்கும் தலைப்பு, 'விளக்கேற்ற வந்தவள்' ஆகும்.

காந்தியத் தாக்கத்தைப் புலப்படுத்தும் பிற உத்திகள்

காந்தியப் பின்னணி

'மடவார்ப் பொறை'யின் தலைவர் காந்தியக் காலப் பின்னணியில் பணி புரிந்தவர் என்பது ''... சென்னையில் காந்திஜி தொடங்கிய... ஒத்துழையாமை இயக்கத்துக்குத் தமிழ் நாட்டில் தொண்டர்களைச் சேர்ப்பதற்கு நான் ஒரு விளம்பரப் பலகையாக இருந்தேன்''[50] என்ற அவர்தம் கூற்றால் தெளிவா கும். இவ்வாறு காந்தியப் பின்னணி இடம்பெறுவதன் வாயிலாகக் காந்தியத் தாக்கம் அமைகிறது.

காந்தியடிகளின் வாக்கைச் செயற்படுத்தல்

சத்தியாக்கிரகிகள் அகிம்சைவழியில் இன்னல்களைத் தாங்கிக் கொள்ள முன்வர வேண்டும் என்கிறார் காந்தியடிகள். 'மடவார்ப் பொறை'யில், ''சர்வ பரித்தியாகம் செய்யத் துணிந்த சத்திய சீலர்களே அங்கு இருந்தனர்... தடியால் அடித்தான், தாங்கிக் கொண்டோம். ஆனால் பின்வாங்கினோமில்லை. உப்பு எடுத் தோம், சிறைப்பட்டோம். வெள்ளைச் சிங்கத்தைத் துரத்த ''அடிமைநாய்''களை வில்லும், வேலும், வாளுமாகத் தயாரித் தோம். அத்தனையும் அகிம்சை உலையில் வார்க்கப்பட்டவை''[51] என்று தலைவர் விளக்குவது, காந்தியடிகளின் கூற்றைச் செயற் படுத்திய விடுதலை வீரர்கள் சத்தியாக்கிரகிகள் என்பதை உணர்த்தும்; இவ்வாறு காந்தியடிகளின் வாக்குச் செயற்படுவ தாகக் காட்டும் உத்தி, காந்தியத் தாக்கத்தைப் புலப்படுத்தும்.

காந்தியடிகளின் பொன்மொழிகள் இடம்பெறல்

'விளக்கேற்ற வந்தவள்' என்பதில், ''ஒவ்வொரு இந்தியப் பெண்ணும் மணம் செய்து கொள்வதற்காகவே பிறக்கவில்லை.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பிரம்மச்சரிய வாழ்க்கையை மேற்கொண்டு பாரத பூமிக்குப் பெருமை தேடித் தரப் பிறந்தவளே என்ற காந்தியடிகளின் பொன்மொழியை அடிக்கடி தன் மனத்தில் எழுதிப்படித்துப் பார்த்துக் கொள்ளுவாள்''[52] என்பதும் 'காம உணர்ச்சியைக் கட்டுப்படுத்த முடியாத ஒருவர் திருமணம் செய்து கொள்வது தவறானதல்ல' என்ற பொன்மொழி அவள் மனச்சாட்சியின் குமுறலை அடக்கிவிட்டது''[53] என்பதும் காந்தியடிகளின் பொன் மொழிகள் கதைமாந்தரிடம் தாக்கம் ஏற்படுத்துவதை உணர்த்தும். இவ்வாறு, காந்தியடிகளின் பொன்மொழிகள் அமைவதன்வழிக் காந்தியச் செல்வாக்கு உணர்த்தப்படுகிறது.

காந்தியடிகளின் கொள்கைச் சிறப்பைக் குறிப்பிடல்

'விளக்கேற்ற வந்தவ'ளில் ''பருவத்தின் கொந்தளிப்பு அவளைப் பலமுறை வாட்டி வதக்கியபோதெல்லாம் காந்தியடிகளின் பிரம்மச்சரிய ஆலோசனைகள் அவளது சுய உணர்வைத் தட்டி எழுப்பி நேர்மைப் பாதையில் அவளை அழைத்துச் செல்லும்''[54] என்ற பகுதி காந்தியடிகளின் புலனடக்கக்கொள்கை, மனித வாழ்வுப் பாதையைச் செம்மைப்படுத்துவது என்பதைச் சுட்டும் நிலையில் காந்தியச் செல்வாக்கை உறுதிப்படுத்தும்.

காந்தியடிகளின் சமகாலத் தலைவர்களைக்குறிப்பிடல்

''சத்திய மூர்த்தியின் கனல் உரையும், ராஜாஜியின் தீர்க்க தரிசன வாசகமும், சீனிவாச சாஸ்திரியாரின் மாணவர்கள் கல்விக் கூடங்களைத் துறப்பார்களா? என்ற கேள்வியும், சர்தார் பட்டேல், ஜம்னாலால் பஜாஜ், மோதிலால் நேரு, சித்தரஞ்சன் தாஸ் ஆகியோரின் சுதந்திர முழக்கமும் என்னை ஒரு விடுதலை வீரனாக்கிவிட்டன''[55] என 'மடவார்ப் பொறை'யில் வரும் பகுதி காந்தியடிகளின் கீழ் விடுதலைப்போராட்டத்தில் ஈடுபட்ட தலைவர் களைச் சுட்டுவதன் வாயிலாகக் காந்தியத் தாக்கத்தை உணர்த்துகிறது.

காந்தியடிகளுடன் தொடர்புடைய பொருளைச் சுட்டல்

'மடவார்ப் பொறை'யில் ''பெர்மிட் லாபங்களுக்காகக் கதர்க் குல்லாயை மாட்டிக்கொண்ட கள்ளச் சந்தைக்காரர்கள் இல்லை''[56] என்ற பகுதி, காந்தியத்தின் உண்மைச் சின்னம் கதர்க் குல்லாய் என்பதை உணர்த்துகிறது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'விளக்கேற்ற வந்தவ'ளில் ''மகாத்மாவின் இல்லறமும் பிரம்மச்சரியமும்'' என்ற காந்தியடிகளின் கருத்துகள் கொண்ட நூல் குறிப்பிடப்படுகிறது. இந்நூல் கதைத்தலைவிக்குக் கொள்கை உறுதிக்கான தன்னம்பிக்கையைத் தருகிறது. காந்தியடிகளுடன் தொடர்புடைய பொருள்களைச் சுட்டுவதன் மூலம் காந்தியத் தாக்கம் அமைகிறது.

அடுத்து, ஆய்வுக்குரிய தொகுப்பு நூலில் அமைந்துள்ள கதைகளின் ஆசிரியர்களால் எழுதப்பட்ட பிறகதைகளில் உள்ள புலனடக்கக் கோட்பாடுபற்றிய ஆய்வு இடம்பெறுகிறது.

புலனடக்கக் கொள்கை அமைந்துள்ள பிறகதைகள்

கோவி மணிசேகரனின் 'தாயும்சேயும்', ஆர். சூடாமணியின் 'தாயகம் தாரகம்' ஆகிய இருகதைகளும் புலனடக்கக் கொள்கையை நிகழ்ச்சிப் பின்னலில் இடம் பெறச் செய்துள்ளன. 'தாயும் சேயும்' என்ற கதையில் குழந்தைக்காக ஏங்கும் ரகுராமன் தன் மனைவியிடம் காந்தியடிகளின் திட்டத்தை அவள் ஆதரிப்பதாகக் குறைபடப் பேசுகிறான். அவளோ காந்தியடிகளும் தேவைக்கு ஒன்றிரண்டு குழந்தைகள் பெறலாமென்று சொல்லுகிறார் என்று காந்தியக் கொள்கையை விண்டு காட்டுகிறாள். திருமணத்தைப் புனிதச் சடங்காக ஏற்கும் கணவன் மனைவி இருவரும் தகுதியும் விருப்பமும் கொள்ளும்போது குழந்தை பெற்றுக் கொள்ளலாம்[57] என்ற காந்தியடிகளின் கருத்தை அவள் கூற்று நினைவுகூரச் செய்கிறது.

'தாயகம்-தாரகம்' என்ற கதையில் புலனடக்கம்பற்றிய காந்தியடிகளின் கருத்து இடம்பெறுகிறது. நாட்டிற்கு ஏதேனும் தான் செய்திட விரும்புவதாகக் கூறும் ராஜுவிடம், மூன்றாவது குழந்தையுடன் போதும் என்று அவன் முடிவு செய்வது இன்றைய சூழலில் நாட்டுப்பணியாகும் என இராணுவ நண்பன் சந்திரன் குறிப்பிடுகிறான். ''மூன்று அல்லது நான்கு குழந்தைகளுக்கு மேல் பெறுதல் பாவம்''[58] என்றும், ''ஒருவர் பெருகிக் கொண்டே போகும் ஒரு பெரிய குடும்பத்தைக் காப்பாற்றுவதும் அதே நேரத்தில்... ஒரு நாட்டிற்குப் பணி செய்வதும் கடினம்...''[59] என்றும் குறிப்பிடும் காந்தியடிகளின் கருத்துகள் நினைத்தற்குரியன.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இக்கதைகளால் அறியப்படுவன

1. விடுதலைப் போராட்டக் காலத்தில் புலனடக்கு நோன்பு பெரிதும் போற்றப்பட்டது.

புலனடக்க நோன்பு சத்தியாக்கிரகத்திற்கு உறுதுணையானது என்பதைத் தம் பட்டறிவினால் அறிந்தவர் காந்தியடிகள். அவரைத் தலைவராகக் கொண்ட காங்கிரசுத் தொண்டர்கள் விடுதலை அடையும்வரை திருமணம் செய்து கொள்வதில்லை என்ற உறுதியோடு விடுதலை இயக்கப் போராட்டத்தில் பங்கு கொண்டு வெற்றியடைந்தனர். காந்தியப் புலனடக்கத்தின் நேரிடையான தாக்கம் விடுதலைப் போராட்டக் காலத்தில் இருந்து வந்தமை ''லௌகீக வாழ்க்கையின் சபலம் சுதந்திரக் கனலில் எரிந்து ஸ்புடமாகிய மனிதர்கள்தாம் காங்கிரஸ் தொண்டர்கள்''[60] என்ற பகுதியால் உணரப்படும்.

2. காந்தியடிகளின் புலனடக்கக் கருத்துகள் தனிமனித வாழ்வில் புலனடக்கத்திற்கு உதவி நிற்கின்றன.

காந்தியடிகளின் 'இல்லறமும் பிரம்மச்சரியமும்' என்ற நூலின் தாக்கம் மணவாழ்க்கையினர் புலனடக்கத்தை மேற்கொள்ள வழிகாட்டியாய் உள்ளது. ''திருமண வாழ்த்துக்களிடையே மகாத்மாவின் 'இல்லறமும் பிரம்மச்சரியமும்' என்ற நூலும் இருந்தது ... தன்னம்பிக்கையையும் கொடுத்தது''[61] என்ற பகுதி அக்கருத்தை வலியுறுத்த உதவும்.

காந்தியடிகள் தேவைக்கு ஒன்றிரண்டு குழந்தைகளைப் பெற்றுக் கொள்ளலாம் என்று கூறியிருப்பதை இல்லறப் பெண்மணி உணர்ந்திருக்கிறாள் ('தாயும் சேயும்').

குறிப்புகள் :

1 மகாத்மா காந்தி, **புலனடக்கம்**, ராமரத்னம், **என்.**, (மொ.பெ.ஆ.), ப. *71.*

2 கந்தசாமி, சோ. ந., **பௌத்தம்**, தேவசேனாபதி, வ. ஆ., (பொ.ப.ஆ.), ப. *139.*

3 வேங்கடசாமி, மயிலை, சீனி., **சமணமும் தமிழும்**, முதற் பகுதி, ப. *19.*

4 Gandhi, M.K., *Young India*, dt. 5-6-1924.

5 கந்தசாமி, சோ. ந., மு.நூ., ப. *139.*

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

6 வேங்கடசாமி, மயிலை, சீனி., மு.நூ., ப. 19.

7 ஸ்ரீகிருஷ்ண தத்தபட் (தொ.ஆ.), இந்துமதம்: புராணங்கள். ப. 22.

8 மேலது, ப. 23.

9 ஸ்ரீமத் பகவத் கீதை, அத். 2. 58.

10 "ஒருமையுள் ஆமைபோல் ஐந்துஅடக்கல் ஆற்றின்
எழுமையும் ஏமாப்பு உடைத்து"
—திருக்குறள், 13.6.

11 "ஐவாய வேட்கை அவாவினைக்—கைவாய்
கலங்காமல் காத்துய்க்கும் ஆற்றல் உடையான்
விலங்காது வீடு பெறும்."
—நாலடியார், 59.

12 கந்தசாமி, சோ. ந., மு.நூ., ப. 13.

13 வேங்கடசாமி, மயிலை, சீனி., மு.நூ., ப. 19.

14 மகாத்மா காந்தி, புலனடக்கம், மு.கு., பக். 28-29.

15 Gandhi, M.K., *Harijan*, dt. 20-8-1937.

16 அருணாசலம், க., காந்தி சிந்தனைகள், ப. 25.

17 Gandhi, M.K., *Harijan*, dt. 3-10-1936.

18 மகாத்மா காந்தி, புலனடக்கம், மு.கு., ப. 144.

19 மேலது, ப. 53.

20 வேங்கடராஜுலு, ரா., (ப.ஆ.), மகாத்மா காந்தி நூல்கள், தொகுதி 8, வேங்கடராஜுலு, ரா., & ஜெயமணி சுப்பிரமணியம், (மொ.பெ.ஆ.), ப. 191.

21 Gandhi, M.K., *Harijan*, dt. 29-2-1936.

22 Ibid., 3-10-1936.

23 மகாத்மா காந்தி, புலனடக்கம், மு. கு., ப. 33.

24 Gandhi, M.K., *Young India*, dt. 29-4-1928.

25 மகாத்மா காந்தி, ரகுபதிராகவ (சத்தியமே கடவுள்) ராஜாஜி, (மொ.பெ.ஆ.), ப. 165.

26 Gandhi, M.K., *Young India*, dt. 12-4-1925.

27 Ibid.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

28 Gandhi, M.K., *Harijan*, dt. 5-6-1937.

29 மகாத்மா காந்தி, **புலனடக்கம்**, மு.கு., ப. 33.

30 Gandhi, M.K., *Young India*, dt. 29-4-1928.

31 மகாத்மா காந்தி, **புலனடக்கம்**, மு.கு., ப. 59.

32 மேலது, ப. 53.

33 மேலது, ப. 33.

34 மேலது, ப. 50.

35 Gandhi, M.K., *Harijan*, dt. 12-12-1935.

36 மகாத்மா காந்தி, **புலனடக்கம்**, மு.கு., ப. 35.

37 Gandhi, M.K., *Harijan*, dt. 21-3-1936.

38 Ibid., 29-2-1936.

39 மகாத்மா காந்தி, **புலனடக்கம்**, மு.கு., பக். 54-55.

40 மேலது, ப. 56.

41 மகாத்மா காந்தி, **சத்திய சோதனை**, வேங்கடராஜுலு, ரா., (மொ.பெ.ஆ.), பக். 206-207.

42 மேலது, பக். 208-209.

43 காகா காலேல்கர், **காந்திக் காட்சிகள்**, (மொ.பெ.ஆ. பெயர் குறிப்பிடப்படவில்லை), ப. 119-120.

44 மகாத்மா காந்தி, **சத்திய சோதனை**, வேங்கடராஜுலு, ரா., (மொ.பெ.ஆ.), ப. 280.

45 Gandhi, M.K., *Harijan*,. dt. 10-4-1937.

46 வாசவன், 'மடவார்ப் பொறை', **காந்திவழிக் கதைகள்**, கல்யாணராமன், கே.ஆர்., (தொ.ஆ.), ப. 308.

47 வேங்கடராஜுலு, ரா., **மகாத்மா காந்தி நூல்கள், தொகுதி 3**, வேங்கடராஜு, ரா., (மொ.பெ.ஆ.), ப. 415.

48 வாசவன் 'மடவார்ப் பொறை', மு.நூ., ப. 310.

49 முத்துராமலிங்கம், 'விளக்கேற்ற வந்தவள்', **காந்தி வழிக் கதைகள்**, கல்யாணராமன், கே.ஆர்., (தொ.ஆ.), பக். 450-451.

50 வாசவன், 'மடவார்ப் பொறை', மு.நூ., பக். 306-307.

51 மேலது, ப .308.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

52 முத்துராமலிங்கம், 'விளக்கேற்ற வந்தவள்', மு.நூ., ப. 451.

53 மேலது, ப. 454.

54 மேலது, ப. 451.

55 வாசவன், 'மடவார்ப் பொறை', மு.நூ., ப. 307.

56 மேலது, ப. 308.

57 மகாத்மா காந்தி, **கர்ப்பத்தடையா, பிரமசரியமா?**, (மொ.பெ.ஆ. பெயர் குறிப்பிடப்படவில்லை), ப. 20.

58 மேலது, ப. 71.

59 Gandhi, M.K., *Young India*, dt. 26-4-1928.

60 வாசவன், 'மடவார்ப் பொறை', மு.நூ., ப. 308.

61 முத்துராமலிங்கம், 'விளக்கேற்ற வந்தவள்', மு.நூ., ப. 454.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

3

3. காந்திவழிக் கதைகளில் வழிபாடு

ஆய்வுக்கு அமைந்துள்ள 'காந்திவழிக் கதைகள்' என்ற தொகுப்பு நூலில் உள்ள கதைகளில் காந்தியடிகள் குறிப்பிட்டுள்ள தனிமனித ஒழுக்க நெறிகளுள் பிறிதொன்றான வழிபாடு பற்றிய ஆய்வு இம்மூன்றாம் இயலின் மூன்றாம் பகுதியில் இடம் பெறுகிறது.

காந்தியடிகள் இறை வழிபாடின்றி எச்செயலையும் மேற் கொள்ளாதவர்.[1] மனித வாழ்க்கையின் அடிப்படை இறைவழி பாடு என்பதை உணர்ந்தவர்.[2] அவ்வழிபாடே அவர்தம் வாழ்க் கையைக் காப்பதாக அமைந்தது.[3]

வழிபாடு—பொருள் விளக்கம்

காந்தியடிகளின் கணிப்பின்படி, வழிபாடு என்பது உள்ளத்தை ஆய்வுக்கு உட்படுத்தும் முறை;[4] பணிவுடன் இருக்கு மாறு அறைகூவுவது;[5] தன் — தூய்மையும் உள் ஆராய்ச்சியும் இன்றியமையாதவை என்பதை வலியுறுத்துவது;[6] இறைவனிடம் மிகுந்த பக்தியுடன் ஏதாவது கேட்பதுடன் பக்தியுடன் செயற் படுவது;[7] இறையுடன் ஒன்றிய நிலையை அடைய, இறையருளைப் பெற உள்ளத்தின் வேட்கையை வெளியிடுவது;[8] மாசு நீங்கித் தூய்மை அடைய உள்ளம் விரும்புவது;[9] தம்முடைய தகுதியின் மையையும் பலவீனத்தையும் ஒப்புக்கொள்வது ஆகும்.[10]

வழிபாட்டின் ஆற்றல்

முறைப்படி மேற்கொள்ளின் செயல்புரிவதற்கு மிகச் சக்தி வாய்ந்த கருவி வழிபாடு[11] என்பதை உணர்ந்த காந்தியடிகள், வீரத்தையும் தன்னலத் தியாகத்தையும் அளித்து நாட்டு விடு தலைக்கும் தன்மானக் காப்பிற்கும் அது இட்டுச் செல்கிறது என்கிறார்.[12] இறைவனுக்கும் மனிதனுக்கும் உள்ள தெய்வீகத் தொடர்பாம் வழிபாடு, மனிதன் அந்தகாரத்தின் பிடியிலிருந்து விடுதலை அடைய உதவுகிறது என்று குறிப்பிடும்[13] அவர், ஆன்மீக விடுதலைக்கும் இன்றியமையாதது வழிபாடு என்பதைப் புலப்படுத்துகிறார். இத்தகைய வழிபாட்டின் ஆற்றலை உணர எல்லையற்ற பொறுமை தேவை எனச் சுட்டுகிறார்.[14]

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வழிபாட்டின் முறையும் இலட்சியமும்

வழிபாடு ஒவ்வொருசொல்லிலும் செயலிலும் எண்ணத்திலும் ஒளிரும் வகையில், வாயளவிலன்றி, உள்ளத்தினின்றும் பொங்கி வரவேண்டும் எனக்குறிப்பிடுகிறார் காந்தியடிகள்.[15] வழிபாட்டின் போது கண்களை மூடிக்கொள்வதால் மனத்தை ஒருநிலைப்படுத்த முடியும் என்பது அவரது எண்ணம்.[16] ஒவ்வொருவரும் அவரவர் மனத்திற்கு ஏற்ப இறைவனைச் சிந்திக்கலாம் என்றாலும், அச் சிந்தனை தூய்மையதாக, மனிதனை உயர்த்துவதாக இருத்தல் வேண்டும்;[17] உண்மையான வழிபாடு மனம் வாக்கு மெய் ஆகிய மூன்றின் தூய்மையில் அமையும்;[18] எல்லா உயிர்களிடத்தும் அறம் பிறழாமல் நடந்து கொள்ளும் இலட்சியத்திற்காக வழிபாடு அமைதல் வேண்டும்;[19] வழிபாட்டினால் கிடைக்கக்கூடிய தூய்மை ஒரு மேன்மையான செயலுக்குப் பயன்படின் அதுவே ஒரு பெரிய வேள்வியாகும்[20] என்பன அவர்தம் கருத்துகள்.

சுருங்கக்கூறின் வழிபாடு என்பது உள்ளத்தின்ஆழத் தினின்று வரவேண்டும் என்றும், அத்தகு உண்மையான வழிபாடு பொது நலத்திற்குப் பயன்படவேண்டும் என்றும் காந்தியம் உணர்த்துவதை இவற்றினின்றும் அறியலாம்.

கூட்டு வழிபாடு

மனிதர் ஒன்று சேர்ந்து மேற்கொள்ளும் வழிபாட்டினைச் சிறந்த வழிபாடாக ஏற்கும் காந்தியடிகள், அத்தகு வழிபாட்டின் நோக்கம் ஒற்றுமையை நிறுவுதலாகும் என்கிறார்,[21] ‘‘...மக்கள் சேர்ந்து செய்யும் எதுவும் இணையற்ற சக்தி பொருந்தியதாகி விடுகிறது ... தாளத்துடனும் இசையுடனும் அது பாடப்பட்டுக் குரல், பக்க வாத்தியங்கள், சிந்தனை முதலிய மூன்றும் ஒன்று சேரும்போது சொல்ல முடியாத இனிமையும் சக்தியும் பொருந்திய ஒரு சூழ்நிலை உருவாகின்றது’’[22] என்று கூட்டு வழிபாட்டின் சிறப்பை உணர்த்துகிறார். அந்நிலையில் அது வெறும் எந்திரம் போன்ற செயலாக இராமல் உள்ளத் தொடர்பின் எதிரொலியாக இருக்கவேண்டும் என்கிறார்.[23] அவரது கருத்தின்படி வழிபாட்டின் வெற்றி தலைவரின் தூய்மையையும், கூட்டத்தினரின் நம்பிக்கை யையும் பொறுத்ததாகும்.[24]

உருவ வழிபாடு

உருவ வழிபாட்டில், அந்த உருவம் வழிபடுவதற்குக் கருவி யாக உணரப்படுவதைக் காந்தியடிகள் சுட்டுகிறார்.[25] இந்துக்கள்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இறைவனுக்கும் தமக்கும் ஒரு தொடர்பை வேண்டிக் கல்லில் செதுக்கிய உருவத்தை வைத்திருக்கிறார்கள்[26] என்றும் அவ்வழி பாட்டிற்கு உரியவை எல்லாம் நிறைவான பக்திக்கும் மெய்ஞ் ஞானத்திற்கும் உதவும் என்றும் குறிப்பிடுகிறார்.[27]

உருவ வழிபாடு மூடநம்பிக்கையன்று; மனித இயல்புக்கு ஏற்புடையது என்பது காந்தியடிகளின் எண்ணம். ''கண்ணுக்குப் புலனாகாத கடவுளை வழிபடக் கண்ணுக்குப் புலனாகும் ஒரு சின்னம் வேண்டியுள்ளது. சிலருக்குக் கோவிலுக்குள் வீற்றிருக்க ஓர் உருவம் வேண்டும். அதனால் கோவில்களை மூடநம்பிக்கையின் வடிவங்களாக எண்ண வேண்டா''[28] என்று விளக்குகிறார். ''போலி நம்பிக்கைகளால் மாசுபட்டு இழிநிலையை அடையும் போது உருவ வழிபாடு இழிவான ஒரு சமூகத் தீமையாகிவிடு கிறது. அதற்கு மாறாகத் தனது கொள்கைக்குப் பருப்பொருள் உருவம் கொடுக்க வேண்டுமென்ற எண்ணத்தால் உருவ வழிபாடு செய்வது மனிதனின் இயல்புக்கு ஏற்புடையதே ஆகும்''[29] என்கிறார்.

காந்தியடிகளின் வாழ்க்கையில் வழிபாடு

காந்தியடிகள் தம் சிறு வயதில் அச்சம் ஏற்படும்போ தெல்லாம் தம்மை வளர்த்த செவிலித்தாயாகிய ரம்பா என்பவர் கூறியபடி இராமநாம மந்திரத்தை உச்சரித்துக் கொண்டே இருந்தார்.

அவர் தொடக்க காலத்தில் வழிபாட்டின் இன்றியமையா மையை அவ்வளவாக உணர்ந்தாரில்லை என்பது, ''இறை வனிடத்தும் வழிபாட்டிலும் நம்பிக்கையின்றியே நான் வாழ்க்கை யைத் தொடங்கினேன்... ஆனால், வாழ்க்கையின் பிற்பகுதியில் உடலுக்கு உணவு எந்த அளவு இன்றியமையாததோ அந்த அளவு ஆன்மாவுக்கு வழிபாடு இன்றியமையாதது என்பதை உணர்ந்தேன்''[30] என்ற அவரது கூற்றால் புலனாகும். காந்தி யடிகளின் வழிபாடு நாட்டு விடுதலைக்காகவே மேற்கொள்ளப் பட்டதாகும் என்பது ''... நான் இந்தியாவுக்கு விடுதலை விரும்பு கிறேன். அந்த விருப்பம் நிறைவேறுவதற்கும் அந்த முயற்சியில் ஈடுபட எனக்குச் சக்தி உண்டாவதற்கும் நான் வழிபாடு செய்கி றேன்''[31] என்ற அவரது உரையால் தெளிவாகும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஒருசேர மேற்கொள்ளும் வழிபாட்டின் சக்தியில் நம்பிக்கை கொண்டிருந்த அவர், அதனைத் தென்னாப்பிரிக்க சத்தியாக் கிரகப் போராட்டம் தொடங்குவதற்குச் சிறிது காலத்திற்கு முன், முதன் முதலாக மேற்கொண்டார். வெள்ளையர்தம் ஆயுத சக்திக்கு மாறாக ஆன்ம சக்தி ஆயுதத்தைப் பயன்படுத்தும் பயிற்சி அளிக்கப் போனிக்ஸிலும், டால்ஸ்டாய்ப் பண்ணையிலும் வழிபாடு இடம் பெறலாயிற்று.

ஆசிரம வாழ்க்கையில் ஒவ்வொரு நாளும் காலை 4-20க்கும் மாலையில் 7-00 மணிக்கும் எல்லோரும் ஒரு சேர வழிபாட்டை நடத்தச்செய்தவர் காந்தியடிகள். அவரது வழிபாட்டில் பல்வேறு சமய அறக்கோட்பாடுகளும் சான்றோர் வாக்குகளும் இடம்பெறும். வழக்கறிஞராக இருந்தபோதும், நிறுவனங்கள் நடத்தியபோதும், அரசியல் பணிகளிலும் ஆன்மீகத் துறையிலும் தமக்குச் சோதனைகள் நேர்ந்தபோதெல்லாம் இறைவனே தம்மைக் காப்பாற்றினார் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.[32]

காந்தியடிகளின் கண்ணோட்டத்தில் அமையும் வழிபாடு பற்றிய விளக்கத்திற்கு அடுத்துக் 'காந்திவழிக் கதைகள்' என்ற தொகுப்பு நூலில் உள்ள கதைகளில் இடம்பெறும் வழிபாடுபற்றிய ஆய்வு அமைகிறது.

வழிபாட்டுக் கோட்பாடு அமைந்த கதைகள்

இத்தொகுதியிலுள்ள கதைகளுள், கூட்டுவழிபாட்டின் நோக்கத்தை, சி. சு. செல்லப்பாவின் 'பிரார்த்தனை' என்ற கதையும், கோயில் உருவ வழிபாட்டின் சிறப்பை அக்ஷயம் எழுதிய 'ஆத்ம திருப்தி' என்ற கதையும் விளக்குகின்றன.

கதைச் சுருக்கமும் கருவும்

'பிரார்த்தனை' என்ற கதையில் விடுதலைப் போராட்டக் கைதிகள் இருக்கும் சிறையில் ஜெயசிங்கின் வழிபாட்டுப் பாடல் நாள்தோறும் சிறப்பிடம் வகிக்கிறது. அன்று தாயை இழந்த துன்பத்தில் வழிபாட்டில் கலந்து கொள்ளாத அவன், குழுவினரின் பாடலால் ஈர்க்கப்படுகிறான். அதில் கலந்து தன்னை மறந்து பாடத்தொடங்கி இடையில் தடுமாற்றமடையும் அவனிடம், தலைவன் நாட்டை நினைவுறுத்த மீண்டும் தொடர்ந்து பாடுகிறான். 'நாட்டு விடுதலை பெறும் முயற்சியில், தன்னல மறுப்பு உணர்ச்சியைத் தருவது வழிபாடே' என்பது கதைக் கருவாகும். நாட்டு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நிலையை அறியத் தேவையான ஒழுங்கும் தியாக உணர்ச்சியும் பணிவும் மனஉறுதியும் உண்டாவதற்கு, வலிமை பொருந்திய இருகருவிகளுள் வழிபாடும் ஒன்று[33] எனக் காந்தியடிகள் குறிப்பிடுவது நினைத்தற்குரியது.

'ஆத்ம திருப்தி' என்ற கதையில் தன் மன்னி கிரிஜாவுடன் கோயிலுக்குப் புறப்பட்ட வனஜா, கோயிலில் கல்லை வழிபடுவது மடமை என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறாள். கோயிலுக்குள் நுழைந்ததும் ஏதோ சக்தியால் ஆட்கொள்ளப்பட்ட அவள், கண்ணீர் பெருக்கெடுக்க நிற்கிறாள். வீட்டிற்கு வந்த அவளிடம் மனத்தை நிலைப்படுத்த உருவ வழிபாடு உதவுவதை விளக்குகிறாள் கிரிஜா. 'இறைவனை வழிபட உருவ வழிபாடு ஏற்புடைத்து' என்பது கதைக்கரு. மக்கள் மேன்மையடைய உருவ வழிபாடு உதவுகிறது என்கிறார் காந்தியடிகள்.[34]

கதைப்பின்னலில் கொள்கையைப் புலப்படுத்தல்

தனிமனிதனின் அகப்புறப் போராட்டங்களின் அடிப்படையில் அமையும் கதைப்பின்னலில் முறையே தன்னலமற்ற உணர்வுகளுக்கு வழிவகுப்பது வழிபாடே என்பதும், உருவ வழிபாடு நம்பிக்கைக்குகந்தது என்பதும் விளக்கமுறுகின்றன.

பாத்திரப் படைப்பு

'பிரார்த்தனை' என்பதில் பிறந்த நாட்டுக்காக நாள்தோறும் ஜெயசிங் மேற்கொண்ட கூட்டுப்பிரார்த்தனை, பெற்ற தாயின்மேல் கொண்ட அன்பால் தடையாகிறது. ''மனதுக்குப் பிரார்த்தனையைக் கிரகித்துக் கொள்ளும் பக்குவம் அப்போது இல்லை; திரும்பத் திரும்பத் தாய்தான் அவன் மனக்கண்ணில் சுழன்று கொண்டிருந்தாள்'';[35] பாடத் தொடங்கிய நிலையிலும், ''விக்கலும் விம்மலும் உள்ளடங்கிப் பெருமூச்சாக வெளிவந்தது''.[36] ஆசிரியரின் இக்கூற்றுகள் ஜெயசிங்கின் மனநிலையை விளக்கும். இறுதியில் ''பிரார்த்தனையை விட்ட இடத்திலிருந்து தொடர்ந்து பாட ஆரம்பித்தான்''[37] என்ற வரிகள் அவனது மனமாற்றத்தை உணர்த்தும்.

இக்கதையில் ''ஜெயசிங், நீ உன் தாயை இழந்துவிடவில்லை. அதோ பார், அங்கே இருக்கிறாள் உன் தாய்... அந்தத் தாய்க்கு, தன்னைவிடச் சிறந்ததான ஒரு சக்திக்கு உன் தொண்டை, கடமையைச் செய்யத்தான் தன் இருப்பிடத்தைக்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

காலி செய்துவிட்டுப் போயிருக்கிறாள் அவள் ..''[38] என்று கூறும் தலைவனது படைப்பு, நாட்டு விடுதலைக்கான சத்தியாக்கிரகத் திற்கு மன உறுதியை அளிக்கத் துணையாவது வழிபாடு என்பதை ஜெயசிங்கிற்கு நினைவுறுத்த உதவுகிறது. இந்திய விடுதலைக் கான விருப்பம் நிறைவேறவும் அந்த முயற்சியில் ஈடுபட ஆற்றல் உண்டாகவும் வழிபாடு அமைதல் வேண்டும்[39] என்ற காந்தியடி களின் கூற்று நினைவுகூரத்தக்கது.

'ஆத்ம திருப்தி'யில் உருவ வழிபாட்டில் முதலில் நம்பிக்கை இல்லாதவளாக இருக்கும் வனஜா, இறுதியில் மனமாற்றம் அடைபவளாகச் சித்திரிக்கப்படுகிறாள். ''இந்தக் கல் சிலைக்கு ஆத்ம சக்தி ஏது?''[40] என்று கேட்கும் அவள் இறுதியில் கோயில் சிலை வழிபாட்டில் மனம் ஒன்றிய நிலையில் ''... இப்படிப்பட்ட சுகம் இருக்கிறது என்றுகூட நான் கனவு கண்டதில்லை''[41] என்கிறாள். இக்கதையில் ''... ஒருமைப்பட்ட உள்ளத்தைப் பெறுவதற்காக நமக்கு ஓர் ஆதாரம்-ஒரு பிடிப்பு- ஓர் உதவி தேவையாக இருக்கிறது. அந்தக் குறையை நிறைவு செய்து கொள்வதற்காக மனிதனுடைய கற்பனை அருவமான கடவுளுக்கு ஓர் உருவத்தை வழங்கியிருக்கிறது''[42] என்று எடுத்தியம்பும் கிரிஜாவின் படைப்பு உருவ வழிபாட்டில் வனஜா விற்கு நம்பிக்கையைத் தர உதவுகிறது.

பாத்திரப்படைப்பு — ஒரு மதிப்பீடு

''உடலுக்கு உணவு எவ்வளவு இன்றியமையாததோ அவ்வளவு ஆன்மாவுக்கு வழிபாடு இன்றியமையாதது''[43] என்ற காந்தியடிகள் கூற்றினை உறுதிப்படுத்த அறவுரை கூறும் பாத்திரங்களாகத் தலைவன் ('பிரார்த்தனை'), கிரிஜா ('ஆத்ம திருப்தி') ஆகியோர் அமைந்துள்ளார்கள்.

விடுதலைப் போராட்டத்தின்போது தன்னலமறுப்பு உணர் வுடன் சிறைக்கு வந்தாலும், தாயின் மரணச் செய்தியால் உறுதி சிறிது தளர்ந்து மீண்டும் கடமையை உணர்ந்து மன வலுவினை அளிக்க வல்ல வழிபாட்டுப் பாடலைப் பாடமுற்படும் ஜெயசிங்கின் படைப்பு மனத்தில் பதியுமாறு உள்ளது. எந்த ஒரு மாறுதலை யும் எவரும் இம்சைவழி வலிந்து செய்வதை விரும்பாதது காந்தியம். உருவ வழிபாட்டில் நம்பிக்கை இல்லாத வனஜா விடம் கோயிலுக்குள் புகுந்த மாத்திரத்திலேயே மனமாற்றத்திற் கான வித்து, பதிந்துவிட்டதுபோல் சித்திரித்துள்ளார் ஆசிரியர்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அட்டவணை: 5 **வழிபாட்டுக் கொள்கை - கதைமாந்தர்**

எண்	கதை	காந்தியக்கருத்தின் வழி வழிபாட்டை மேற்கொள் வதில் சிறிது சலனமுற்று மீண்டும் ஒருநிலைப் படுபவர்	வழிபாடு குறித்துக் காந்தியக் கருத்தை விளக்குபவர்	வழிபாட்டுக் கருத்தைத் தொடக்கத்தில் எதிர்த்து இடையில்மனம்மாறுபவர்
1	'பிரார்த்தனை'	ஜெயசிங்	குழுத் தலைவன்	—
2	'ஆத்ம திருப்தி'	—	கிரிஜா	வனஜா

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பிற உத்திகள்
கொள்கையை விளக்கும் உரை

'பிரார்த்தனை' என்பதில் ''.. தன்னைவிடச் சிறந்ததான ஒரு சக்திக்கு உன் தொண்டை, கடமையைச் செய்யத்தான் தன் இருப்பிடத்தைக் காலிசெய்துவிட்டுப் போயிருக்கிறாள்... புரிகிறதா?''[44] என்று தலைவன் கூறுவது அறவுரையாக அமைகிறது.

'ஆத்ம திருப்தி'யில் கிரிஜா சிந்தனையைக் கிளறுவது போல் உருவ வழிபாட்டின் இன்றியமையாமையைக் குறித்துப் பேசுகிறாள். ''...மனத்தைப் பரிசுத்தமாக வைத்துக்கொள்வதற்கு அமைதியான ஒரு இடம் தேவை'';[45] ''...ஹிந்து கலாசாரம் மிகவும் பழமையானதால்-விஸ்தாரமானதால் தம் ஆராதனைக்கு ஓர் உருவம் கொடுத்துச் சாந்தியுற்ற மனத்துடன் ஆராதனை யில் ஈடுபடுகிறது''[46] என்கிறாள்.

அணுகுமுறை

'பிரார்த்தனை' என்ற கதையில் ஜெயசிங் தன் தாய் இறந்த வருத்தச் சூழலில் மனத்தைத் திடப்படுத்திப் பாட ஆரம்பித்த போக்குத் தன்னலமறுப்பு உணர்ச்சிக்கு வலிவு கொடுப்பதாக வழிபாடு அமைவதைத் தெளிவுபடுத்தும். இங்கே நேர்முக அணுகுமுறை கையாளப்படுகிறது.

''வனஜாவின் வாழ்க்கையில் [உருவ வழிபாட்டிற்குப்பின்] வியப்பை அளிக்கும் மாறுதல் ஏற்பட்டுவிட்டது. அவள் வாழ்க்கை யில் எளிமையும் சாத்வீக பாவமும் தாண்டவமாடின''[47] என்கிற ஆசிரியர் கூற்று, கொள்கை விளக்கம் நேர்முக முறையில் அமைந்திருப்பதைச் சுட்டும்.

கொள்கையை விளக்க உதவும் தலைப்பு

வழிபாட்டின் சிறப்பை விளக்க வந்த கதை 'பிரார்த்தனை' என்ற தலைப்பையுடையதாகிறது. மனநிறைவுக்கு உருவவழி பாடு இன்றியமையாதது என்பதை உள்ளடக்கும் தலைப்பு 'ஆத்ம திருப்தி' என்பதாகும்.

காந்தியத் தாக்கத்தைப் புலப்படுத்தும் பிற உத்திகள்
காந்தியப்பின்னணி

'பிரார்த்தனை'யில் ''அவர்கள் பாதுகாப்புச் சட்டக் கைதிகள். தேசத்தின் பாதுகாப்புக்கு இடைஞ்சல் செய்தவர்கள், செய்துவிடக்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கூடியவர்கள் என்பதற்காக அவர்கள் பாதுகாப்பில் வைக்கப்பட்டிருந்தார்கள்''[48] என்ற ஆசிரியர் கூற்று காந்தியடிகளின் காலப் பின்னணியைச் சுட்டுவதன் மூலம் காந்தியத் தாக்கத்தை உணர்த்தும்.

காந்தியடிகளின் கருத்தை நினைவுறுத்தல்

''...உடல் வருத்தம் மிகுந்த ஒரு வாழ்க்கை நடுவே திடத்தை வேண்டி ஆண்டவனைக் கோரும் ஆத்ம சிந்தனை...''[49] இவ்வாறு, 'பிரார்த்தனை' என்ற கதையில் வழிபாட்டின் ஆற்றல் உணர்த்தப்படுகிறது. இக்கருத்து, ''நான் அடைய வேண்டிய சக்தியை என்னுடைய பிரார்த்தனையினால் அடைவேன் என்பது என்னுடைய நிச்சயம்''[50] என்ற காந்தியடிகளின் கூற்றை நினைவுகூரச் செய்கிறது.

'ஆத்ம திருப்தி' என்பதில் கோயிலுக்குச் செல்லுபவர்களைக் கண்ட வனஜா, அச்செயல் குருட்டு நம்பிக்கை என முணுமுணுக்கிறாள். இது கோயில்களில் நடைபெறும் வழிபாடு மூடநம்பிக்கையன்று என்ற காந்தியடிகளின் கருத்தை மறைமுகமாக நினைவுபடுத்துகிறது.[51] இதே கதையில் கல் சிலைக்கு ஆத்ம சக்தி இருக்கமுடியாது என வனஜா கூறுவது கல்லிலும் செம்பிலும் உள்ள கடவுளைத்தான் வழிபடுகிறோம் என்ற காந்தியடிகளின் கருத்தினை மறைமுகமாக நினைவுகூரச்செய்கிறது.[52]

காந்தியடிகளின் கூற்றைச் செயற்படுத்தல்

'ஆத்ம திருப்தி' என்ற கதையில், கோயில் வழிபாட்டைக் குருட்டு நம்பிக்கை என எண்ணிய வனஜா கோயிலுக்குள் நுழைந்ததும் அந்த எண்ணம் மறையப் பெறுகிறாள். ''நிரந்தர சுகத்தைத் தரும் சக்தி ஒன்று அவளுடைய உள்ளத்தில் குடிபுகுந்தது...முன்பின் அறிமுகமில்லாத ஒரு சக்தி தன் தளிர்க்கரங்களை நீட்டி... பிரகாசத்தின் பக்கம் தன்னை இழுத்துச் செல்வது போல...''[53] தோன்றியது என்ற பகுதியில் இறைவனை உள்ளத்தில் ஏற்கும் ஒருவர் மின்சாரத்தையும் விட நுட்பமான வியத்தகு சக்தியை அடைவது உறுதி[54] என்ற காந்தியடிகளின் கூற்றினது செயற்பாடு அமைவதை உணரலாம். இந்நிலையில் காந்தியத் தாக்கம் அமைகிறது.

காந்தியடிகளின் வாக்கின் சாரத்தைப் பயன்படுத்தல்

''கண்ணுக்குப் புலனாகாத இறைவனை வழிபட்டு நிறைவு அடைவது கடினம். தீண்டக்கூடிய, காணக்கூடிய, முன்விழுந்து

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வணங்கக் கூடிய ஒரு சின்னம் வேண்டியதாகிறது''[55] என்கிறார் காந்தியடிகள். 'ஆத்ம திருப்தி' என்ற கதையில், ''...மனிதனுடைய கற்பனை அருவமான கடவுளுக்கு ஓர் உருவத்தை வழங்கியிருக்கிறது. மனத்தை ஒரு நிலையில் நிறுத்த ஒரு பிடிப்பைத் தேடிக் கொண்டிருக்கிறது...''[56] என்ற கிரிஜாவின் கூற்று மேற்கூறிய காந்தியடிகளின் வாக்கின் கருத்தை உட்கொண்டதாகும்.

''பக்தியுடன் கோயிலுக்குச் சென்று பூசனை செய்தால் உள்ளம் தூய்மையடையும்'';[57] ''உள்ளத்தின் மலம் நீங்குவதற்காகத்தான் கோயிலுக்குப் போகிறோம்''[58] என்ற காந்தியடிகளின் கருத்துகளைப் ''...பச்சாத்தாபத்தினால் பெருகும் கண்ணீரைக் கொண்டு உள்ளத்தின் அழுக்கை அலம்பலாம்''[59] என்ற கிரிஜாவின் உரை உள்ளடக்குகிறது. இக்கதையில் கிரிஜா, இறைவழிபாடு கடமையின் கண்ணே செல்லத் தூண்டும் என்கிறாள். இது காந்தியடிகள் குறிப்பிடும் வழிபாட்டின் வழித் தூய்மை அடைந்த உள்ளம், கடமைகளைச் சரிவரச் செய்வதற்குப் பயன்படும் என்ற கருத்தின் சாரமாக உள்ளது.[60] இவ்வாறு காந்தியடிகளின் வாக்கின் சாரம் இடம் பெறுவதன் வழி, காந்தியத் தாக்கம் அமைகிறது.

காந்தியடிகளின் புகழ் போற்றப்படல்

''காந்திஜீயை எடுத்துக்கொள்ளேன். அவர் மகா புருஷர். மாந்தருக்குள் ஒரு தெய்வம். தம் காலத்தில் ஒரு யுகத்தையே நிர்மாணித்தவர். சத்தியமும் அஹிம்சையுமே உருவானவர்.''[61] 'ஆத்ம திருப்தி'யில் வரும் இப்பகுதியில் இவ்வாறு காந்தியடிகளின் புகழ் போற்றப்படுவதன் மூலம் காந்தியத் தாக்கம் இடம் பெறுகிறது.

காந்தியடிகளை மேற்கோளாகக் கூறல்

''மூர்த்தி பூஜைதான் அவரிடமுள்ள [காந்தியடிகளிடமுள்ள] பக்தியையும் சிரத்தையையும் நாம் காட்டுவதற்குச் சிறந்த சாதனம் என்று ஆகிறது.''[62] 'ஆத்ம திருப்தி'யில் இவ்வாறு காந்தியடிகளின் மேற்கோளாகக் கூறப்படுவதன் வாயிலாகக் காந்தியச் செல்வாக்கைப் புலப்படுத்துகிறார் ஆசிரியர்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

காந்தியடிகளுடன் தொடர்பு கொண்ட பாடலைக் கையாளல்

'ஆத்ம திருப்தி' என்ற கதையில் வழிபாட்டில் நம்பிக்கை யற்று இருந்த வனஜாவின் வாழ்க்கையில் மாறுதல் ஏற்பட்ட பிறகு, இணையற்ற ஒளி வீசிடத் தன்னை மறந்து 'ரகுபதி ராகவ' என்ற பாடலைப் பாடுகிறாள். காந்தியடிகளுக்கு விருப்பமான அனைத்துச் சமய வழிபாட்டுப் பாடலான இதனை, இக்கதையில் இடம்பெறச் செய்து காந்தியத் தாக்கத்தை உணர்த்துகிறார் ஆசிரியர்.

இக்கதைகளால் அறியப்படுவன

'பிரார்த்தனை', 'ஆத்ம திருப்தி' ஆகிய இருகதைகளின் வழிச் சில உண்மைகள் அறியவருகின்றன. சத்தியாக்கிரகிக்கு இறை நம்பிக்கையைத் தவிர வேறு துணையில்லை என்றார் காந்தியடிகள். விடுதலைப் போராட்ட வீரர்களின் வாழ்வில் கூட்டு வழிபாடு இன்றியமையாத ஒன்றாக இருந்தது. நாள்தோறும் ஏற்படும் துன்பங்களுக்கு இடையே மனவலிமையைத் தரவல்ல வழிபாடு காந்தியடிகள் காலத்தில் சிறைக்குள்ளும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டது. உயர்ந்த இலட்சியத்திற்காக வழிபாடு அமைதல் வேண்டும் என்ற காந்தியடிகளின் கருத்திற்கேற்ப, நாட்டுப்பணிக்கு அது பயன்பட்டது ('பிரார்த்தனை').

இறைவன் திரு உருவங்கள் மக்களின் உள்ளத்தில் பரவச மூட்டவல்லவை; அவர் தம் வாழ்க்கையில் வியத்தகு மாறுதலை ஏற்படுத்த வல்லவை ('ஆத்ம திருப்தி').

குறிப்புகள் :

1 Gandhi, M.K., *Young India*, dt. 25-9-1924.

2 Ibid., dt. 23-1-1930.

3 Gandhi, M.K., *ON Myself*, Anand T. Hingorani, (ed.), p.35.

4 Gandhi, M.K., *Harijan*, dt. 8-6-1935.

5 Ibid.

6 **வேங்கடராஜுலு, ரா., (ப.ஆ.), மகாத்மா காந்தி நூல்கள், தொகுதி 10, ஜெயமணி சுப்பிரமணியம், (மொ.பெ.ஆ.),** ப. 88.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

7 Gandhi, M.K., *Young India,* dt. 10-6-1926.
8 Ibid.
9 மகாத்மா காந்தி, ரகுபதிராகவ (சத்தியமே கடவுள்), ராஜாஜி, (மொ.பெ.ஆ.), ப. 73.
10 வேங்கடராஜுலு, ரா., (ப.ஆ.), மகாத்மா காந்தி நூல்கள், தொகுதி 10, ஜெயமணி சுப்பிரமணியம், (மொ.பெ.ஆ.), ப. 153.
11 Gandhi, M.K., *Harijan,* dt. 14-4-1946.
12 Ibid.
13 Gandhi, M.K., *Young India,* dt. 20-12-1928.
14 Ibid.
15 Ibid.
16 Gandhi, M.K., *Harijan,* dt. 18-8-1946.
17 Ibid.
18 மகாத்மா காந்தி, ரகுபதி ராகவ (சத்தியமே கடவுள்), ராஜாஜி, (மொ.பெ.ஆ.), ப. 79.
19 மேலது, ப. 73.
20 மேலது, ப. 74.
21 Gandhi, M.K., *Harijan,* dt. 3-3-1946.
22 Ibid., dt. 7-4-1946.
23 Ibid., dt. 3-3-1946.
24 Ibid., dt. 21-7-1946.
25 மகாத்மா காந்தி, ரகுபதி ராகவ (சத்தியமே கடவுள்), ராஜாஜி, (மொ.பெ.ஆ.), ப. 106.
26 மேலது, ப. 116.
27 மேலது, ப. 120.
28 Gandhi, M.K., *Harijan,* dt. 23-1-1937.
29 Ibid., dt. 26-9-1929.
30 Ibid., dt. 24-9-1931.
31 Ibid., dt. 19-8-1939.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

32 மகாத்மா காந்தி, சத்திய சோதனை, வேங்கடராஜுலு, ரா., (மொ.பெ.ஆ.), ப. 73.

33 வேங்கடராஜுலு, ரா., (ப.ஆ.), மகாத்மா காந்தி நூல்கள், தொகுதி 8, வேங்கடராஜுலு, ரா., & ஜெயமணி சுப்பிரமணியம், (மொ.பெ.ஆ.), ப. 234.

34 Gandhi, M.K., *Young India*, dt. 28-8-1927.

35 செல்லப்பா, சி.சு., 'பிரார்த்தனை', காந்திவழிக் கதைகள், கல்யாணராமன், கே.ஆர்., (தொ.ஆ.), ப.35.

36 மேலது, ப. 39.

37 மேலது.

38 மேலது.

39 Gandhi, M.K., *Harijan*, dt. 19-8-1939.

40 அக்ஷயம், 'ஆத்ம திருப்தி', காந்திவழிக்கதைகள், கல்யாணராமன், கே.ஆர்., (தொ.ஆ.), ப.463.

41 மேலது, ப.469.

42 மேலது, ப.467.

43 Gandhi M.K., *Young India*, dt, 24-9-1931.

44 செல்லப்பா, சி.சு., 'பிரார்த்தனை', மு.நூ., ப. 39.1

45 அக்ஷயம், 'ஆத்ம திருப்தி', மு.நூ., ப. 468.

46 மேலது.

47 மேலது, ப. 469.

48 செல்லப்பா, சி.சு., 'பிரார்த்தனை', மு.நூ., ப. 33.

49 மேலது, ப. 34.

50 Gandhi, M.K., *Harijan*, dt. 19-8-1939.

51 Gandhi, M.K., *Young India*, dt. 5-11-1925.

52 மகாத்மா காந்தி, ரகுபதி ராகவ, (சத்தியமே கடவுள்), ராஜாஜி, (மொ.பெ.ஆ.), ப. 116.

53 அக்ஷயம், 'ஆத்ம திருப்தி', மு.நூ., ப. 464.

54 வேங்கடராஜுலு, ரா., (ப.ஆ.), மகாத்மா காந்தி நூல்கள், தொகுதி 4, அழகிரிசாமி, கு., (மொ.பெ.ஆ.), ப. 109.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

55 Gandhi, M.K., *Harijan,* dt. 23-1-1937.

56 அக்ஷயம், 'ஆத்ம திருப்தி', மு.நூ., ப. 467.

57 Gandhi M.K., *Harijan,* dt. 23-1-1937.

58 Ibid., dt. 18-3-1933.

59 அக்ஷயம், 'ஆத்ம திருப்தி', மு.நூ., ப. 465.

60 Gandhi, M.K., *young India,* dt. 24-3-1920.

61 அக்ஷயம், 'ஆத்ம திருப்தி', மு.நூ., ப. 468.

62 மேலது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

4

1. காந்திவழிக் கதைகளில் தீண்டாமை விலக்கு

காந்தியச் சமுதாய நெறிகளுள் ஒன்று தீண்டாமை விலக்கு. இக்கோட்பாட்டை, ஆய்வுக்கு அமைந்துள்ள 'காந்திவழிக் கதைகள்' என்ற நூலில் இடம்பெறும் கதைகளின்வழி இந்நான்காம் இயலின் முதற்பகுதி ஆராய்கிறது.

உயர்வு தாழ்வு கருதாமை

மனிதருள் ஒரு பிரிவினரைத் தீண்டத்தகாதவர்கள் என ஒதுக்கி வைக்கும் உணர்வு தீண்டாமையாகும். சமுதாயத்தில் மேல்கீழ்ச் சாதியினர் என்ற பாகுபாடு என்று தோன்றியதோ அன்றே சமூக நிலை தாழ்வடைந்தது. அச்சாதிப் பாகுபாட்டிலும் தீண்டத்தகாதவர் என ஒரு பகுதியினரைப் புறக்கணிக்கும் நிலை வந்தபோது சமூகம் மேலும் தாழ்ந்தது.

தீண்டாமையை எதிர்த்தவர் பலர். பிறப்பினால் வேற்றுமை இல்லை, செயல்கள்தாம் மக்களை உயர்த்தவும் தாழ்த்தவும் கூடும் எனப் புத்தர் இயம்புகிறார்.[1] மாந்தர் அனைவரும் ஒரே தந்தையின் பிள்ளைகள் என ஏசு குறிப்பிடுகிறார்.[2] எத்துணை யும் பேதமின்றி எவ்வுயிரும் தம்முயிர்போல் மதிப்பவர் உள்ளத்தில் இறைவன் எழுந்தருளுவதை இராமலிங்கர் சுட்டுகிறார்.[3] எளிய குடில்களில் உயர்ந்த உள்ளத்துடன் வாழ்பவர்களைத் தீண்டத் தகாதவர்கள் என இழிவுபடுத்துவது தகாதது எனக் கருதுகிறார் விவேகானந்தர்.[4]

பிறப்பில் உயர்வு தாழ்வு கற்பிப்பதைத் தமிழ் இலக்கியங் களும் சாடுகின்றன. பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் எனத் திருவள்ளுவம் விளம்புகிறது.[5] ''சாதியிரண்டொழிய வேறில்லை... இட்டார் பெரியோர் இடாதார் இழிகுலத்தோர்''[6] என்பது நல் வழியின் விளக்கம். மனிதருள் இழிந்த குலத்தவர் என ஒதுக்கப் படுதலை ஏற்க மறுக்கிறார் பாரதியார்.[7] ''ஈனசாதி எனும் பேச் சினைப் போல் நெஞ்சை ஈர்ந்திடும் வாளொன்று வேறுளதோ''[8] என வினாத் தொடுக்கிறார் கவிமணி. தீண்டாதது என ஒரு சாதி இல்லையெனத் தெளிவதே தீண்டாமை விலக்கல் என

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

விளக்கமளிக்கிறார் நாமக்கல் கவிஞர்.[9] எல்லோருக்கும் உலகம், இருள், ஒளி ஆகியன ஒன்றே என்பதை அறுதியிட்டு உரைக்கின்றார் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்[10]. ''பிறவியில் உயர்வும் தாழ்வும் சொல்லல் மடமை''[11] எனச் சாடுகிறார் பாரதிதாசன்.

இவ்வாறு காலந்தோறும் வெறுத்தொதுக்கப்பட்டு வந்த தீண்டாமையை இந்து சமயத்தின் களங்கம், சாபக்கேடு, எனக் கருதி அந்த வழக்கத்தை ஒழிக்க முயன்றவர் காந்தியடிகள்.

தீண்டாமை விலக்கு முயற்சியில் காந்தியடிகளின் பங்கு

பிறப்பில் உயர்வு தாழ்வு கற்பிப்பது தவறு என்பது காந்தியடிகளின் கொள்கை. தம்மை உயிர் வாழுமாறு செய்துவரும் இரு விருப்பங்களில் ஒன்று தீண்டாதாரின் முன்னேற்றம் காணல் என்கிறார்.[12] தீண்டாதாரை இழி நிலைகளினின்று விடுவிக்கவும், அவர்களுக்கு இழைக்கப்படும் துன்பங்களையும் இழிவுகளையும் அவர்களுடன் சேர்ந்து தாமும் பகிர்ந்துகொள்ளவும், தாம் மீண்டும் பிறந்தால் தீண்டாதவனாகவே பிறக்க வேண்டும் என்று விரும்பியவர் அவர்.[13] அவர் தம்மைப் 'பங்கி' [தோட்டி] என்று கூறிக் கொள்ளுவதில் பெருமகிழ்ச்சி அடைந்தவர்.

தீண்டாமையை ஒழிக்கக் காந்தியடிகள் செய்த முயற்சிகள் பல. அது குறித்துப் பல சொற்பொழிவுகளிலும் கட்டுரைகளிலும் விளக்கம் அளித்தார். சமுதாயத்தில் தீண்டாமையை ஒழிக்க ஓர் இயக்கத்தையே உருவாக்கிச் செயற்பட்ட தன்மையில் அவரது செயல் தனித்துவமாகிறது. ''தீண்டாமையை ஒழிக்க முன்னே சிலர் முயன்றனர். அன்னார் முயற்சி ஓர் இயக்கமாக உருக் கொள்ளாதொழிந்தது. காந்தியடிகள் முயற்சியால் அவ்வியக்கம் ஓர் உருக்கொண்டு நாட்டில் நிற்கிறது''[14] என்கிறார் திரு.வி. கலியாணசுந்தரனார்.

காந்தியடிகள் வைதிகரைத் தீண்டாமை விலக்கிற்காகவும் வற்புறுத்தக்கூடாது என்கிறார்.[15] இது தீண்டாமைக்கொடுமையை அகற்றும் பணியிலும் அகிம்சையை அவர் மேற்கொண்ட சிறப்பை உணர்த்தும்.

காந்தியடிகளின் கணிப்பில் தீண்டாமைக் கொடுமை

இந்துக்கள் தம் சகோதரர்களான ஒரு பகுதியினரைத் தீண்டுவது பாவமென எண்ணுவதையும்[16] பொதுக் கோயில்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

களுக்குள் அவர்களை அனுமதிக்க மறுப்பதையும்[17] இழிவெனக் காந்தியடிகள் கருதுகிறார். அவர்களுக்குச் சமஉரிமை அளிக்க மறுப்பது இறைவனையே மறுப்பதற்கு ஒப்பாகும்[18] எனவும், பகுத்தறிவிற்கும் இரக்க உணர்விற்கும்[19] ஒழுக்க விதிகட்கும்[20] தீண்டாமை முரண்பட்டதாக அமைந்திருக்கிறது எனவும் எடுத்துரைக்கிறார்.

குறிப்பிட்டோரைத் தாழ்த்திவிட்டு அவர்தம் தாழ்ந்த நிலையையே அவர்க்கு எதிராகப் பயன்படுத்துவது கொடுமை என உணர்கிறார் காந்தியடிகள்.[21] அதனால்தான், ஆன்ம சுத்தி பெற இயற்கையானது நில அதிர்வை ஏற்படுத்தியது என எண்ணுகிறார்.[22] ஆங்கிலேயரால் இந்தியர்கள் ஒடுக்கப்பட்ட தற்குக் காரணமாக அமைந்த தீண்டாமை[23] இந்து மதத்தினை அழித்துவிடக் கூடியது[24] என எச்சரிக்கிறார்.

தீண்டாமை ஒழிப்பிற்கான தீர்வுகள்

அனைவர்க்கும் சம உரிமை வழங்கும் உளப்பாங்கு, தீண்டாமை ஒழிப்பிற்கு இன்றியமையாதது எனக் கருதுகிறார் காந்தியடிகள். தாழ்த்தப்பட்டவரிடமிருந்து பறிக்கப்பட்ட உரிமை களைத் திரும்ப வழங்குவதுடன்[25] அவர்களிடம் நட்புக்கொண்டு[26] அவர்களின் பொருளாதாரக்[27] கல்வி[28] நலன்களில் அக்கறை காட்டி, அவர்தம் உரிமையை உணரச் செய்தல் வேண்டும் என விளம்புகிறார்.

மேலும் தீண்டாதார்க்கு இழைக்கப்படும் கொடுமைகளை உணர்ந்து மனம் வருந்தி[29] அதனைப் போக்க முயலும் தொண்டர்கள், பிறருடன் தம்மை ஒருசேர வைத்து எண்ண உதவும் வகையில், தம் உடலையும் சுற்றுப்புறங்களையும் தூய் மையுற வைத்துக் கொள்ளவும்,[30] தமது தாழ்வு மனப்பான் மையைப் போக்கிக் கொள்ளவும்[31] தாழ்த்தப்பட்டோர்க்கு அறிவுறுத்தக்கோருகிறார். தீண்டாமை சத்தியத்திற்கும் அகிம்சைக்கும் முரணானது என்பதை வைதிகர்க்கு எடுத்துக் காட்டிப்[32] பொறுமையுடன் கலந்துரையாடி நேர்மையுடன் நடந்து அவர்தம் மூட நம்பிக்கைகளைக் கைவிடும்படி[33] செய்யவேண்டும்; தேவையெனில் வீறுகொண்டு எழுந்து[34] இக்கொடுமையைப் புறக்கணித்துச் சத்தியாக்கிரகம் மேற்கொள்ளவேண்டும்[35] என்பன அவர் குறிப்பிடும் தீர்வுகளாகும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பெண்கள் இம்முயற்சியில் ஈடுபடின் இந்துமதம் தூய்மை அடைவதுடன் தீண்டாமை ஒழிப்பு எளிதாகும் என்பது அவர் தம் கருத்தாகும்.[36]

காந்தியடிகளின் வாழ்வில் தீண்டாமை விலக்கு

''நான் வாழ்வதும் இருப்பதும் நடமாடுவதும் இந்துமதத்திலிருந்து இந்தச் சாபக்கேட்டை ஒழிப்பதற்குத்தான்''[37] என்ற காந்தியடிகளின் கூற்றானது தீண்டாமையில் அவருக்கிருந்த வெறுப்பை உணர்த்தும்.

தீண்டாமை நெறியற்றது என்ற உணர்வு பன்னிரண்டு வயது ஆவதற்கு முன்பே காந்தியடிகளுக்கு ஏற்பட்டிருந்தமை அவர் குறிப்பிடும் நிகழ்ச்சியொன்றால் விளங்கும். உகா என்ற தோட்டியைத் தீண்டக் கூடாதென்றும், தீண்டிவிடின் நீராடி வருமாறும் தம் தாய் கூறும்போதெல்லாம், அவ்வாறு நினைப்பது தவறு எனச் சுட்டிக்காட்ட அவர் தவறவில்லை.

1898–இல் டர்பனில் வழக்கறிஞர் தொழில் செய்த காலத்தே தம் இல்லத்திற்கு வந்த தீண்டத்தகாத ஒருவர் பயன்படுத்திய அழுக்குநீர்ப்பாண்டத்தைத் தூய்மைப்படுத்தக் கஸ்தூரிபா மறுத்த போது, தீண்டாமையின் பொருட்டுச் சீற்றம் கொண்டார். அக்காலத்தே தீண்டாதாருடன் வேற்றுமையின்றி உடனிருந்து உண்பதும் அவரது வழக்கம். ''தென்னாப்பிரிக்காவில் இந்த உயர்வு மனப்பான்மைக் கொள்கையை நான் அங்குலம் அங்குலமாக எதிர்த்துப் போராடியிருக்கிறேன்''[38] என்று அவர் குறிப்பிடுவது, அங்கிருந்தோர் ஏற்றத்தாழ்வு பாராட்டியபோதும் சத்தியாக்கிரகத்தின் வழி அவர் எதிர்த்தமையைப் புலப்படுத்தும்.

இந்தியாவில் தீண்டாமை ஒழிப்பு இயக்கத்தை உருவாக்கினார். அதற்குத் தென்னாப்பிரிக்காவிலிருந்த சூழ்நிலையும், அங்கு அவர் மேற்கொண்ட பணியும் காரணமாயின என்பதை, ''1915-ஆம் ஆண்டு தென்னாப்பிரிக்காவிலிருந்து திரும்பியபோது தீண்டாமை ஒழிப்பு இயக்கம் என் மனத்தில் உருவாகத் தொடங்கியது''[39]என்ற அவர் கூற்றே தெளிவுறுத்தும். அகமதாபாத்தில் சத்தியாக்கிரக ஆசிரமத்தில் தீண்டாதார் குடும்பத்தைஏற்றமைக்குப் பல்வேறு எதிர்ப்புகள் உருவாகிப் பொருட்கொடை நிறுத்தப்படும் நிலைகண்டும் அவர் அஞ்சவில்லை. ''இந்தக் குடும்பத்தைச் சேர்த்துக் கொண்டது ஆசிரமத்திற்குச் சிறந்ததொரு படிப்பினையாயிற்று. ஆசிரமம் தீண்டாமையைப் பாராட்டாது என்பதை ஆரம்பத்திலேயே உலகிற்கு எடுத்துக் காட்டினோம்''[40] எனத் தம்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சரிதையில் குறிப்பிடுகிறார். பிறகு அக்குடும்பத்துக் குழந்தை இலட்சுமியைத் தம் வளர்ப்பு மகளாக ஏற்றார்.

மாபெரும் முனிவரான நரசிம்ம மேத்தாவினால் கடவுளின் மனிதன் என்ற பொருளில் குறிக்கப்பெற்ற 'ஹரிஜன்' என்ற சொல்லைத் தீண்டாதாரைக் குறிக்கப் பயன்படுத்தினார். கோத்ரா வில் தீண்டாமை ஒழிப்பு மாநாடு ஒன்று தீண்டாதார் சேரியில் நடத்த ஏற்பாடு செய்தார். அதே மாநாட்டில் தீண்டாதாரின் பணிக்கென ஆசிரமம் ஒன்று ஆரம்பிக்க முடிவாயிற்று. அரிசனங் களின் துன்பங்களைத் துடைப்பதே அரிசன நிதியின் நோக்கம்[41] எனக்கூறி நிதி திரட்ட இந்தியாவில் சுற்றுப்பயணங்களை மேற் கொண்டார். தீண்டாமைக் கொடுமையை முதன் முதலில் இந்தி யாவுக்குத் தெளிவாக எடுத்துக் காட்டியது வைக்கம் சத்தியாக் கிரகமே. இப்போராட்டத்திற்குக் காந்தியடிகளின் கருத்துரை உதவியது. திருவாங்கூரில் தீண்டாமைப் பணியைத் தீவிரமாக மேற்கொண்டதன் விளைவாகச் சாலைகளும் கோவில்களும் அரிசனங்களுக்குத் திறந்து விடப்பட்டன.

1931-இல், தாழ்த்தப்பட்டோர்க்குத் தேர்தலின்போது தனித்தொகுதி ஏற்படின் தம் உயிரைக்கொடுத்தும் எதிர்ப்பதாகச் சிறுபான்மையோர் குழுக் கூட்டத்தில் குறிப்பிட்டார். தீண்டா தார்க்குத் தனித்தொகுதி என அரசு அறிக்கை வெளியிட்டபோது எரவாடா சிறையில் உண்ணாநோன்பு இருந்தார்.

தீண்டாமை விலக்கிற்காக 'அரிசன சேவக சங்கம்' அமைத் தார். சாதி இந்துக்கள் பணிபுரிவதற்குரிய அச்சங்கத்தின் நோக்கத்தை, ''அரிசன சேவக சங்கம் தீண்டாமையை எதிர்ப்பதற்காக ஏற்பட்ட மாபெரும் நிறுவனமாகும்''[42] எனக் குறிப்பிட்டார். தாம் தொடங்கிய வார இதழ் ஒன்றுக்கு 'ஹரிஜன்' எனப் பெயரிட்டார். சபர்மதி ஆசிரமத்தின் சில பொருள்களை அரிசன இயக்கத்திற்கு அளித்தார். சபர்மதி ஆசிரமத்தை அரிசன சேவா நிலையமாக மாற்றினார். 1933-இல் சட்ட மறுப்பிற்காகச் சிறையில் இருந்தபோது, அரிசன முன் னேற்றப் பணிகள் மேற்கொள்ள வசதிகள் நல்கப்படாமைக்கு உண்ணாநோன்பை மேற்கொண்டார். அரிசனங்களுக்குச் செய்யக் கூடிய தூய செயலுக்காக அரிசன நாள் கொண்டாடக் குறிப் பிட்டார். சாதி இந்துக்களைக் கொண்ட அரிசன சேவை அமைப்பு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

களுக்கு உதவி நல்க அரிசனங்களைக் கொண்ட கருத்துரைக் குழுக்களை அமைக்கக் கோரினார்.

தீண்டாமை விலக்கை நிருமாணத் திட்டங்களுள் ஒன்றாக்கித் தம் வாழ்நாளில் பெரிதும் உழைத்தவர் காந்தியடிகள். "உறங்கும் நேரத்தைத் தவிர மற்ற நேரம் அனைத்தையும் அரிசனத் தொண்டில் ஈடுபடுத்தி வருகின்றோம்"[43] என மணிபென் பட்டேலுக்கு எழுதிய கடிதக் குறிப்பு அக்கருத்தை உறுதிப் படுத்தும்.

இனி இந்த ஆய்வுக்கு எடுத்துக் கொண்டுள்ள 'காந்திவழிக் கதைகள்' என்ற தொகுப்பு நூலில் இடம்பெறும் கதைகளில் தீண்டாமை விலக்குக் கோட்பாடுபற்றிய ஆய்வு இடம்பெறுகிறது.

தீண்டாமை விலக்குக் கோட்பாடு அமைந்துள்ள கதைகள்

'தீண்டாமை விலக்கு' என்ற கொள்கையை விளக்கத் தொகுப்பு நூலில் அமைந்துள்ள கதைகள் ஏழு ஆகும். தீண்டாமை விலக்கின் இன்றியமையாமையை விளக்குவன புதுமைப்பித்தனின் 'புதிய நந்தன்', ராஜாஜியின் 'அன்னையும் பிதாவும்' ஆகியன. தீண்டாமை விலக்கின் சிறப்பை விளக்குவது ரஸவாதியின் 'அரங்கேற்றம்' ஆகும். தீண்டாமை விலக்கின் வழியைப்பற்றியது ஸரோஜா ராமமூர்த்தியின் 'ஒரு துளி'. அரிசன முன்னேற்றத்தின் இன்றியமையாமையை உணர்த்துவன து. ரா.வின் 'குணம்', சிதம்பர ரகுநாதனின் 'இழிதொழில்' ஆகிய இரண்டும் ஆகும். கலப்பு மணத்தினை விளக்க வந்த கதை கே. ஜயலக்ஷ்மியின் 'எது வெற்றி?' என்பதாகும்.

இவற்றுள் 'இழி தொழில்' என்ற கதையில் நகரச் சுத்தித் தொழிலாளர் வேலை நிறுத்தம் செய்வது இடம்பெறுகிறது. இது காந்தியடிகளின் கருத்திற்கு ஒவ்வாதது. "தோட்டி ஒரு நாளைக்குக் கூட வேலை செய்யாமல் இருந்துவிடக்கூடாது. நீதியை அடைவதற்கு அவருக்கு வேறு வழிகள் எத்தனையோ இருக்கின்றன"[44] என்று கூறுகிறார் காந்தியடிகள். வேலை நிறுத்தச் சத்தியாக்கிரகம் கதையில் இடம்பெறுவது அவர் கருத்தின்படி சரியன்று என்பதைச் சுட்டிக் காட்டுவது இன்றியமை யாததாகிறது. என்றாலும் அரிசன முன்னேற்றத்தைக் கருவாகக் கொண்ட இக்கதையில், காந்தியத் தாக்கத்தை உணர்த்த உதவும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பாத்திரப்படைப்பு, உத்திகள் ஆகியன ஆய்வு செய்தற்குரியனவாய் இருப்பதால் இக்கதை ஆய்வுக்கு உரியதாகிறது.

கதைச் சுருக்கமும் கருவும்

'புதிய நந்தன்' என்ற கதையில் சிறு வயதில் அந்தணர் குடியிருப்புக் குளத்தில் இறங்கிய சேரிக்கருப்பன், விச்வநாத ச்ரௌதியால் அடிபட்டுக் கண்களை இழக்கிறான். சில ஆண்டு கட்குப் பிறகு, கருப்பன் மகளும் ச்ரௌதியின் மகன் ராமநாத னும் இணைகின்றனர். அவளைத் திருமணம் செய்து கொள்வதாக ராமநாதன் கருப்பனைக் கேட்க அவனோ அச்செயல் பாவம் என மறுக்கிறான். கருப்பன் மகன் நரசிங்கத்தாலும் தந்தையின் மனத்தை மாற்றமுடியவில்லை. 'பழைய தலைமுறையினர் ஒத்துக் கொள்ளாத தீண்டாமை விலக்கானது புதிய சமுதாயம் ஏற்கு மளவிற்கு வளர்ச்சி பெற்றிருக்கிறது' என்பது இக்கதையின் கருவாகும்.

'அன்னையும் பிதாவும்' என்ற கதையில் அர்த்தநாரி என்பவன், தான் மணக்க விரும்பும் அந்தணர் குலத்தவளான பங்கஜத்திடம் தான் ஓர் அரிசன் என்பதை மறைக்கிறான். அதற்காகச் சேலம் மாவட்டத்தில் இருக்கும் தன் பெற்றோர், தன்னுடன் பெங்களூரில் இருக்க விரும்பியதற்கும் மறுத்துவிடுகி றான். அவர்களைப் புறக்கணித்ததன் விளைவாகப் பெற்றோ ரையும் சகோதரனையும் இழக்கிறான். இறுதியில் குற்ற உணர்வு காரணமாகக் காதலியையும் பிரிந்து தன் கிராமத்திற்கே அவன் போய் விடுகிறான். 'அரிசன இனத்தவனிடம் உள்ள தாழ்வு மனப்பான்மை அவனையே துன்புறுத்தும்' என்பது கதைக்கரு. தீண்டாமை ஒழிப்பிற்கான வழிகளில் ஒன்று அரிசனங்களைத் தாழ்வு மனநிலையினின்று விடுவிப்பது என்ற காந்தியடிகளின் கருத்து நினைத்தற்குரியது.[45]

'அரங்கேற்றம்' என்பதில் வேம்புவையர் தன் மகன் சாமா வின் கச்சேரி அரங்கேற்றத்தை உயர்குலத்துச் செல்வர் இல்லத்தில் நடத்தச் செல்லும்போது வழியில் வண்டி பழுதாகிறது. பெரிய மனிதர் கூட்டத்தில் பாடிப் பரிசைப் பெறமுடியாத நிலைக்கு அவர் வருந்துகிறார். மகன் சாமாவோ நடுத்தெருவில் சூலாயுதம் முன்பு, அரிசனங்கள் சூழ இசை அரங்கேற்றம் செய்து, அரிசனக் கிழவன் அன்புடன் கொடுக்கும் பாலைக் குடித்து அவர் காலை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வணங்கி, கச்சேரி அரங்கேற்றம் நன்கு நிறைவேறிவிட்டதாகக் கூறுகிறான். 'இசையின்ப நாதத்திற்குச் சாதி உயர்வு தாழ்வு வேற்றுமை கிடையாது' என்பது இக்கதைக் கரு.

'ஒரு துளி' என்பதில் விடுதலை இயக்கப் போராட்டத்தில் ஈடுபட்ட அந்தணர் குல வாசு என்பவர், ஊரார் ஏளனங்களுக் கிடையில் அரிசனச்சிறுவன் குமரனை வளர்க்கிறார். சென்னைக்குச் சென்றபின் ஆடம்பர வாழ்வில் திளைக்கும் அவர் மகன் தியாகு தந்தையின் பொதுநலப்பணிகளை இகழ்கிறான். வாசு இறக்கும் போது, தியாகு இட்ட தீயால் வேகாத உடல் குமரன் இடும் தீயால் வேகிறது. வாசுவின் தேசப் பணியினைத் தொடரக் குமரன் செல்லுகிறான். 'அரிசனங்களைத் தங்கள் குழந்தைகளாகவே குடும்பங்களில் சேர்த்துக்கொண்டு அவர்களுக்குச் சரியான பயிற் சியையும் அளிக்க வேண்டும்'[46] என்கிறார் காந்தியடிகள். 'தீண்டாமை விலக்கின் வழிகளில் ஒன்று அரிசனக் குழந்தையை வளர்ப்பது' என்ற காந்தியடிகளின் கருத்து கதையின் கருவாகும்.

'குணம்' என்பதில் தலையாரி முருகனைத் தீண்டத்தகாத வன் என வெறுக்கும் கன்னையாவிடம் எல்லோரும் சமம் என அவ்வப்போது கோபால சாஸ்திரி உணர்த்துகிறார். பன்னிரண்டு ஆண்டுகட்குப் பின் தன் மகனுக்காகக் கோட்டாட்சியர் விநாயகத் திடம் சான்றிதழ் பெறும்போது, முருகனுக்கு மகன் அவர் என் பதை அறிகிறார் கன்னையா. கல்வி கற்றகாலத்தில் விநாயகத் திற்கு உதவி அளிக்காததுடன் அவன் படிப்பை இழிவாகப் பேசி யதை நினைவுகூரும் கன்னையா, இன்று தம் மகனைப் போலல் லாமல் அவன் பணிவுடன் பணிபுரிவது கண்டு வியக்கிறார். 'வாய்ப்பளிக்கப்படின் தீண்டத்தகாதவரும் மேன்மையுறுவர்' என்பது இக்கதைக் கரு.

'இழி தொழில்' என்பதில் தம் நலன்கள் புறக்கணிக்கப் பட்டதற்காக நகரச்சுத்தித் தொழிலாளர் வேலை நிறுத்தம் செய்து ஊர்வலம் வருகிறார்கள். காந்தியவாதிபோல் நடிக்கும் நகர சபைத் தலைவர் தில்லைத் தாண்டவராயர், தாமே ஊரைச் சுத்தி செய்வதற்குத் தம் குழுவுடன் எதிரே ஊர்வலமாக வருகிறார். தங்கள் சிக்கல்களை உணர்த்திய அரிசனக் கிழவன் தாக்கப்பட்டு இறக்க, மனம் மாறிய நகரசபைக் குழுவினர் தலைவருடன் ஒத்துழைக்க மறுத்துத் திரும்புகின்றனர். 'அரிசன நலன் பேணப் படல் இன்றியமையாதது' என்பது கதைக் கரு.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அந்தணரல்லாத குலத்திலும் அரிசனக் குலத்திலும் முறையே திருமணம் செய்துகொண்ட இரு அந்தணர் குலப் பெண்களைப்பற்றிய கதை 'எது வெற்றி?' என்பது. அவர்களுள் கோமளவல்லி, கணவன் மேற்கொண்ட இழிந்த பழக்கவழக்கங் களை ஏற்றும், அரிசனனை மணந்த சீதா, தான் புகுந்த இடத்தைத் தூய்மையாலும் உழைப்பாலும் உயர்ந்த பண் பாடுடையதாக மாற்றியும் குடும்பம் நடத்துகிறார்கள். தன் தோழிகளுடன் இருவர் இல்லங்களுக்கும் சென்று திரும்பும் ஜயம், இலட்சியத்தில் வெற்றியடைந்தவள் சீதா என விளக்கு கிறாள். 'கலப்பு மணம் அரிசனங்களின் பண்பாடுகளை உயர்த்த உதவ வேண்டும்' என்பது இதன் கரு. ''ஒவ்வொரு கலப்பு மணமும் அதனதன் தரத்துக்குத் தகுந்தவாறு அத்தகைய மணங்களுக்குக் கற்பிக்கப்படும் களங்கத்தை அகற்றுவதாக இருக்க வேண்டும்''[47] என்ற காந்தியடிகளின் கருத்தின் அடிப் படையில் கதை அமைகிறது.

கதைப்பின்னலில் கொள்கையைப் புலப்படுத்தல்

இக்கதைகளில் தனிமனிதனுக்குத் தனிமனிதனிடையேயும், சமுதாயத்திடையேயும் ஏற்படும் புறமோதல்களும், தனிமனித உள்ளத்தே ஏற்படும் அகமோதல்களும் கதைப் பின்னல்களுக்கு அடிப்படையாய் உள்ளன. இறுதியில் தீண்டாமையுணர்வு விலக்கப்படுதற்குரிய ஒன்று என்பதும், தீண்டாதார் முன்னேற்றம் இன்றியமையாதது என்பதும், பிறப்பினாலன்றி ஒழுக்கத்தினால் உயர்வு அமைகிறது என்பதும் விளக்கமுறுகின்றன.

பாத்திரப் படைப்பு

'புதிய நந்தன்' என்பதில், காந்திய நெறிக்குப் புறம்பாகத் தீண்டாமையை ஏற்றுக்கொண்டு மரத்துப்போன — தயங்குகிற பாத்திரமாகச் சேரிக்கருப்பன் அமைகிறான். ''தகப்பனாரின் முட்டாள்தனமான நம்பிக்கையைத் தகர்க்க [நரசிங்கத்தால்] முடியவில்லை''[48] என்று ஆசிரியர் கூறுவது கருப்பனிடம் குலத் தாழ்வுணர்வு வேரூன்றியதைக் காட்டும். அரிசனங்களும் அவர் களுடைய தூக்கத்தினின்றும் எழுப்பப்பட்டு விடுவார்களாயின் கொடிய இத்தீமையிலிருந்து அவர்களை மீட்க இயலும் என்கிறார் காந்தியடிகள்.[49] அவர் கருத்தின்படி விழிப்புணர்வைப் பெற வேண்டியவனாகக் கருப்பன் சித்திரிக்கப்பட்டுள்ளான்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சுப்பு சாஸ்திரிகளும் விச்வநாத ச்ரௌதியும் எந்த அளவிற்குத் தீண்டாமைக் கொடுமை இழைத்துத் திளைப்பவர்கள் என்பதை, ''.. அக்ரஹாரத்தில் இருக்கும் தெப்பக்குளத்தில் இறங்கி ஒரு கை தண்ணீர் அள்ளிக் குடித்து விட்டான். கோயில் தெய்வத்தின் உலாவுப் பிரதிநிதியான சுப்பு சாஸ்திரிகள் கண்டு விட்டார்.... விச்வநாத ச்ரௌதி தம்மை மீறிய கோபத்தில் அடித்த அடி கருப்பனைக் குருடாக்கியது''[50] என்னும் ஆசிரியர் கூற்று விளக்கும். கருப்பன் மகனைக் கிறித்தவ சமயத்திற்கு மதமாற்றம் செய்து வைத்தும், தம் மகளை அவனுக்கு மணம் செய்விக்க மறுக்கும் ஜான் ஐயரின் தீண்டாமையுணர்வு, ''பறக்கழுதை வீட்டை விட்டு வெளியே இறங்கு''[51] என்ற அவரது கூற்றால் தெளிவாகும். தீண்டாமை விலக்கின் இன்றியமையாமையை உணரச் செய்யும் நிலையில், இக்கொடுமையாளர்களின் படைப்பு அமைகிறது.

இக்கதையில் தீண்டாமை விலக்கைத் தன் வாழ்வில் செயற்படுத்துபவனாக ச்ரௌதியின் மகன் சத்தியாக்கிரகி ராமநாதன் அமைகிறான். தன்னுடன் இணைந்த கருப்பன் மகளைக் ''கலியாணம் செய்து கொள்வதாக வாக்களித்தான்''[52] என்ற ஆசிரியர் கூற்று அக்கருத்தை விளக்கும். இளைய சமுதாயத்தைச் சேர்ந்தவள் கருப்பன் மகள் என்றாலும், ஆடவர் போல் வெளி உலக அறிவு இல்லாத காரணத்தால் அவளுக்கும் தந்தையைப் போல் குலத்தாழ்வு மனப்பான்மை இருப்பதைச் ''சாமி, கிட்ட வராதிங்க, பறச்சி, கருப்பன் மவ,...''[53]; ''அதெப்படி [திருமணம்] முடியும் சாமி''[54] என்ற அவளுடைய கூற்றுகள் தெளிவாக்கும்.

''தீண்டாமை செத்து ஒழிந்து விட்டது என்பதைத் தீண்டாதார் உணரவேண்டும்''[55] என்கிற காந்தியடிகள் கருத்திற்கு மாறான எண்ணமுடையவனாக 'அன்னையும் பிதாவும்' என்ற கதையில் அர்த்தநாரி சித்திரிக்கப்படுகிறான். தான் அரிசன் என்பதை மறைக்கத் தன்னைச் சைவ முதலியார் என்று பொய் மேல் பொய் கூறிய நிலையில் குடும்பத்தார் இறப்பிற்கும் காரணமாகிறான். இறுதியில், ''...நான் கொலைபாதகன், என் தகப்பனையும், தாயாரையும் கொன்றவன்''[56] எனப்புலம்புகிறான். குலத்தாழ்வு மனப்பான்மை ஒருவனை நெறியல்லா நெறிக்கு இட்டுச் செல்வதை அவனது படைப்பு விளக்கும். அகில இந்திய அரிசன சேவக சங்கத்தின் செயலரிடம் ஆறு வருடங்கள் அவன்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வளர்க்கப்பட்டவன் என்று சுட்டப்படுவதை நோக்குமிடத்து, அரிசனங்களை முன்னேற்றும் சூழலிலும் எந்த அளவிற்கு அரிசனிடம் தாழ்வு மனப்பான்மை வேரூன்றியிருக்கிறது என்பதை விளக்க வந்த பாத்திரம் அர்த்தநாரி.

இக்கதையில் "... நாம்தாம் சாதி குலம் கவனிப்பதை விட்டுவிட்டோமே"[57] என்ற கோவிந்தராவின் கூற்றும், "நீர் எந்தச் சாதியாயிருந்தால் என்ன?"[58] என்ற பங்கஜத்தின் கூற்றும் அவர்கள் இருவரும் தீண்டாமை விலக்கை ஏற்பதற்குத் தயங்காதவர்கள் என்பதைத் தெளிவுறுத்தும்.

'அரங்கேற்ற'த்தில், தீண்டாமையைப் பொருட்படுத்தாத சாமாவின் பண்பினை "... இந்தச் சந்நிதானத்தையும் இதோ இருக்கிற ஜனங்களையும் [அரிசனங்களையும்] விடவா பெரிய சபை கிடைக்கப் போறது?"[59] என்ற அவனது கூற்றே தெளிவாக்கும். இக்கதையில், வேம்புவையர், "இந்தக் கோவணாண்டிகள் சதஸ்தான் உனக்கு வேணுமா? சீச்சீ"[60] என்று கூறுவது தீண்டாமையைப் பாராட்டும் அவர், காந்திய வழியில் அமையாமையைச் சுட்டும். அவரது எதிர் வாதத்திற்கு முன் மகனது கொள்கைப் பிடிப்பை உறுதி செய்ய உதவும் வகையில் இந்த எதிர்நிலைப் பாத்திரம் அமைகிறது.

'ஒரு துளி'யில், வாசு காந்திய விடுதலைப் போராட்டங்களில் ஈடுபட்டுத் தடியடி வாங்கியவர். அரிசன இனத்தவனான குமரனை அழைத்து வந்து, "உள்ளே அழைச்சிண்டு போடா தியாகு, இனிமே அவனுக்கு எழுதப் படிக்கச் சொல்லித் தர வேண்டியது உன் பொறுப்பு .."[61] என்று மகனிடம் கூறுவது தீண்டாமை விலக்கினைச் செயற்படுத்தும் அவரது போக்கை உணர்த்தும். அவர் மனைவி செல்லம், தீண்டாமை விலக்குக் கொள்கையை ஆதரிப்பவள் என்பது "... நீ என்னுடைய கொள்கைகளுக்குப் பணிஞ்சு, உனக்கென்று ஓர் எண்ணமும் இல்லாம ரொம்பத் தியாகம் பண்ணிட்டே"[62] என்ற வாசுவின் கூற்றால் புலனாகும்.

இக்கதையில் "... எம்.ஏ.,பி.எல்., பாஸ் பண்ணிவிட்டுச் சத்தியாக்கிரகமும் ஹரிசன சேவையும் [அவர்] பண்ணிண்டிருந்தா வாழ்க்கையிலே சுகத்தை எப்படியம்மா காணமுடியும்?"[63] என்ற தியாகுவின் கூற்று அரிசனப்பணிக் கொள்கைக்கு எதிரான அவனது உளப்பாங்கைச் சுட்டும். வாசுவிற்கு எதிராகத்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தீண்டாமையில் ஊறிய ஊர்க்காரர்களுள் வைத்தீஸ்வரன் தம்பதியர், ஜகன்னாதாச்சாரி போன்றோர் குறிப்பிடத்தக்கவர் ஆவர்.

''கறுப்பு நாயை வெள்ளை நாயாக்கப் பாக்கறான் இல்லையா?''[64] என்று வைத்தீஸ்வரன் தம்பதியர் கூறிச் சிரிக்கிறார்கள். ''கறுப்பாகக் கன்னங்கரேலென்று ஒரு பையன்...... சாப்பிட்டுக் கொண்டிருப்பதை...... சுட்டிக் காட்டினார்''[65] என்று ஜகன்னாதாச்சாரி பற்றி ஆசிரியர் கூறுவதும், தீண்டாமை உணர்வு அவர்களிடம் இரத்தத்துடன் ஊறியிருப்பதை உணர்த்தும். இவர்களுள் வைத்தீஸ்வரன் இறுதியில் மனம் மாறி வாசுவின் பள்ளிப் பொறுப்பை ஏற்கிறார்.

தீண்டப்படாத குலத்தவனான குமரன், வாசுவின் இல்லத்தில் வளர்க்கப்பட்டதன் விளைவாக அவருடன் சேர்ந்து சேரிக் குழந்தைகளுக்கு இரவுப் பள்ளி வைத்து நடத்தியும், பிற முன்னேற்றத்திற்குரிய செயல்களைச் செய்தும் வருவது ''......நம்ப ஊர்ச் சேரிப் பக்கம் நீ வந்து பார்க்கலே. கிளி கொஞ்சறது. குமரனும் அவருமாச் சேர்ந்து எவ்வளவு பண்ணியிருக்கா?......''[66] என்ற செல்லத்தின் கூற்றால் புலனாகும். ''நம் குடும்பங்களில் கலந்து விடும் அரிசனங்கள் தாழ்வு மனப்பான்மையையெல்லாம் இழந்துவிடுவதோடு அரிசனங்களுக்கும் உயர்சாதி இந்துக்களுக்கு மிடையே இணைப்பின் உயிர்களாகவும் ஆகிவிடுகிறார்கள்''[67] என்ற காந்தியடிகளின் கருத்திற்கேற்ப அமைகிறான் குமரன்.

'குணம்' என்ற கதையில், கோபால சாஸ்திரி, ''..... நமக்கு மேலே இருக்கிறவாளோடே சம உரிமை கொண்டாடப் பார்க்கிறோம். நமக்குக் கீழே இருக்கிறவாளுக்கு அந்த உரிமையைக் குடுக்க மனசு வல்லே......''[68] என்று கூறுவது, அரிசன முன்னேற்றங் காண விழையும் அவரது எண்ணத்தைத் தெளிவாக்கும். இவரது கூற்று, தீண்டாமை என்ற மாசைப் போக்க மற்றவர்கள் என்ன செய்ய வேண்டும் என்று விரும்புவதை நாம் மற்றவர்க்குச் செய்ய வேண்டும்[69] என்ற காந்தியடிகளின் கருத்தை நினைவு கூரச் செய்யும்.

இதே கதையில் அரிசன முன்னேற்றத்தை ஆதரிக்காதவர் கன்னையா என்பது ''...... ஆனா, இந்தச் சேரிப் பசங்களை நாம்ப நடுஊட்டுலே கொண்டாந்து வச்சிக்கணும்னு சொல்றாரே [காந்தி], அதுமட்டும் சரியில்லே......''[70] என்ற அவரது கூற்றால்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

விளங்கும். இறுதியில் அவரது மனமாற்றத்தை "இன்னிக்குத்தான் பகவான்... என் கண்ணை மூடி இருந்த அறியாமையைத் தொடச்சி விட்டான்..."[71] என்ற அவரது தற்கூற்று விளக்கும். கன்னையாவின் எண்ணத்திற்கு எதிராக அரிசன முன்னேற்றம் தேவையானது என்பதைச் சாஸ்திரி உறுதிப்படுத்தும் நிலையில், கன்னையாவின் படைப்பு மறைமுகமாக உதவுவதை உணரலாம்.

'இழி தொழில்' என்ற கதையில், காந்தியவாதிபோல் பேசி நகரச் சுத்திக்குப் புறப்படும் தில்லைத்தாண்டவராயர், ஊர்வலத்தில் வன்முறையைப் பயன்படுத்துவதால், நடைமுறையில் காந்தியடிகளின் பெயரைப் பயன்படுத்திப் போலித்தனம் புரியும் படைப்பாக அவரது படைப்பை ஏற்கலாம். இக்கதையில் சத்தியாக்கிரகத்தை மேற்கொள்வதாகக் கூறும் அரிசனக் கிழவன், எதிரே வரும் ஊர்வலத்தைத் தடை செய்வதும் காவல்துறையினரால் அடிவாங்கும்போது 'ஐயோ' என்று அலறி வீழ்வதும் சத்தியாக்கிரகியாக அவனது படைப்பு அமையவில்லை என்பதை உறுதிப்படுத்தும்.

கலப்பு மணம் அதற்குக் கற்பிக்கப்படும் களங்கத்தை அகற்றுவதாக அமையவேண்டும் எனக் காந்தியடிகள் விரும்பியவாறு 'எது வெற்றி?' என்பதில், சீதா தனது வாழ்க்கையை அமைத்துக் கொள்ள, கோமளவல்லியோ அவ்வாறு அமைத்துக் கொள்ளவில்லை. "... கோமளவல்லியைப் போல் அவளும் ஒரு நான்பிராமினாக மாறிவிடவில்லை. அதற்குப் பதிலாகத் தன் கணவரையே ஓர் ஒழுக்கத்தில் உயர்ந்த பிராமணனாக மாற்றி விட்டாள்..."[72] என்ற ஐயத்தின் கூற்றுவழி அறியலாம்.

பாத்திரப் படைப்பு - ஒரு மதிப்பீடு

இக்கதைகளில் தீண்டாமை விலக்கை ஆதரிப்போரிலும் எதிர்ப்போரிலும் மூத்த தலைமுறையினரும் உண்டு; இளைய தலைமுறையினரும் உண்டு. இவர்களில், இக்கொள்கைக்கு ஆதரவு நல்குபவர்கள் பெரும்பாலும் உயர் சாதியினர் ஆகும். இயல்பாகவே சாதிவேறுபாடு கருதாத பங்கஜம், கோவிந்தராவ், காந்தியத்திற்கு ஆதரவு தரும் வாசுவின் மனைவி செல்லம், காந்தியடிகளின் உரையால் கவரப்படும் கோபால சாஸ்திரி, காந்தியப் போராட்டங்களில் தீவிரமாகக் கலந்து கொள்ளும் ராமநாதன், வாசு ஆகியவர் அத்தகையோர் ஆவர். இக்கொள்கையை ஆதரிக்கும் அவர்கள், வெறும் பேச்சளவில் இல்லாமல் செயலளவில் தீவிரமாக இருப்பவர்களாகச் சித்திரிக்கப்பட்டுள்ளார்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கள். தான் விரும்பிய கருப்பன் மகளை மணமுடிக்க ராமநாதன் முன்வருகிறான். தாழ்ந்த குலத்தவன் எனத் தெரிந்தும் அர்த்த நாரியை மணக்க முன்வருகிறாள் பங்கஜம். அதற்கு உடன்படு கிறார் கோவிந்தராவ். அரிசனச் சிறுவனான குமரனைப் பல எதிர்ப்புகளுக்கிடையில், வாசுவும் அவர் மனைவியும் வீட்டிற்கே அழைத்துவந்து வளர்த்து வருகிறார்கள். தலையாரி முருகன் கையினால் கொடுக்கும் பொருள்களை நேரடியாகப் பெறுவதற்குக் கன்னையா எதிர்ப்புத் தெரிவிக்கும் சூழலுக்கிடையே, அவ்வாறு பெறும் கோபால சாஸ்திரி தம் செயல் நியாயமானது என வாதாடவும் செய்கிறார்.

ஊராரால் தீண்டப்படாதவர்போல் ஒதுக்கி வைக்கப்பட்ட நிலையிலும் அரிசனச் சிறுவனையும் வளர்த்து, அரிசனப் பள்ளி ஒன்றும் நடத்தி உயிர்விடும்வரை தீண்டாமை விலக்குப் பணியில் தோய்ந்த வாசு, அவருடைய பணியில் ஒன்றுபட்ட செல்லம் ஆகியோரது படைப்பு உள்ளத்தைத் தொடுவதாக உள்ளது.

தீண்டாமை விலக்கை எதிர்க்கும் மேல் சாதியினருள் பெரும் பாலோர் பழைய மரபில் ஊறித் திளைத்தவர்களாக அமை கின்றனர். அவர்களுள், மனத்தளவில் மட்டும் என்றில்லாமல், வெளிப்படையாகப் பேசி இக்கொள்கைக்குத் தம் எதிர்ப்பைக் காட்டுபவர்களாக வைத்தீஸ்வரன் தம்பதியினர், ஜகன்னாதாச் சாரி, கன்னையா, வேம்புவையர் போன்றோர் அமைகின்றனர். அதற்கு மேலும், எல்லையைக் கடந்த அளவில் விச்வநாத ச்ரௌதி போன்றோர் கருப்பனைக் குருடனாக்கி அடித்துத் துன்புறுத்தவும் தயங்கவில்லை. இத்தகு எதிர்ப்புகள் இருந்த போதிலும், அவற்றால் பயனில்லை என்னுமாறு இவர்களுள் பெரும்பாலோரிடம் மனமாற்றம் நிகழ்வதாகக் காட்டிக் கொள்கை யின் சிறப்பு வலியுறுத்தப்படுகிறது.

தீண்டாமை சமுதாயத்தில் இருக்க வேண்டியதுதான் என்று தீண்டப்படாதோரில் கருப்பன் போன்ற மூத்த பரம்பரையினர் எண்ணுவதும், அர்த்தநாரி போன்ற இளைய சமுதாயத்தினர் தீண்டாமை உணர்வால் தாழ்வு மனப்பான்மை கொண்டு உழல் வதும் தவிர்க்க முடியாததாக இருக்கின்றன. இத்தகையோர் அவர்தம் கருத்துகளை மாற்றிக் கொண்டால், சமுதாயத்தில் சிக்கல் இருந்திருக்காதே என்ற உணர்வு படிப்பவர் மனத்தில் எழுமாறு, அவர்களின் படைப்பு அமைகிறது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தீண்டத்தகாதோர் எனப்படுவோர்க்குத் தகுந்த வாய்ப்பு அளிக்கப்படுமாயின் மேன்மையுண்டு என்ற நிலையில் குமரன் போன்றோரை வளர்க்க முற்படுவதும், வினாயகம் போன்றோருக்குக் கல்வி வசதி அளிப்பதும் வரவேற்கத் தக்கன என்ற வகையில் கதைகளில் அவர்கள் உயர்ந்த பண்பாளர்களாகச் சித்திரிக்கப்பட்டுள்ளனர்.

உத்திகள்

கொள்கையை விளக்கும் உரை

'புதிய நந்த'னில் தீண்டத்தகாதவர்களையும் உயர் சாதியினனையும் இரயிலில் அடிபட்டு இறக்குமாறு செய்யும் ஆசிரியர் ''மூவரின் இரத்தங்கள் ஒன்றாய்க் கலந்தன. ஒன்றாய்த்தான் இருக்கின்றன, இதில் யாரை நந்தன் என்பது!''[73] என்ற சிந்தனையைக் கிளறும் உரையால் தீண்டாமை விலக்கின் இன்றியமையாமையை உணர்த்துகிறார். 'அரங்கேற்றம்' என்பதில் ''கௌரவம் வித்தைக்குத்தான் [இசைக்குத்தான்]. அதைப் பணக்கார உயர் குலத்தவன் கொடுத்தாலென்ன அல்லது இந்த ஏழை அரிஜனங்கள் கொடுத்தால் என்ன?''[74] என்ற பிரசார உரை கருவை விளக்குகிறது.

'ஒரு துளி'யில் ''இங்கே வா செல்லம், இப்ப நாலு பேரோடு சமாளிக்க முடியாத பிரச்னையை நாளைக்கு நாலாயிரம் பேரோடே சமாளிக்கணும். அப்புறமா நாலு லட்சம் நாலு கோடின்னு ஆகும். பிற்பாடு நாற்பது கோடியோடே சமாளிச்சே ஆகணும். ஒரு நல்லது நடக்கணும்னா பலரோடே மோதிண்டுதான் ஆகணும் செல்லம், மோதிண்டுதான் ஆகணும்''[75] என்ற வாசுவின் உரை பிரசாரம் போல் அமைகிறது.

'குணம்' என்ற கதையில் ''...குலம்கறது பெறவியினாலே ஏற்படற நெலமை இருக்கே அது இல்லே, ஒழுக்கத்தினாலே ஏற்படுதே அந்த நெலமைதான்னு புரியுது. அந்தக் காலத்துலே பெரியவங்க அந்த அர்த்தத்துலே அதைச் சொல்லல்லேன்னாக் கூட அந்த அர்த்தத்துலேதான் நாம்ப அதை எடுத்துக்கணும்...''[76] என்று கன்னையா கூறுவது பிரசார உரையாக உள்ளது. 'எது வெற்றி?' என்பதில் ''கலப்பு மணங்களால் சமுதாயத்திலுள்ள ஏற்றத் தாழ்வுகளெல்லாம் மறையும் என்றுதான் காந்தியடிகள் விரும்பினார். அந்த ஏற்றத் தாழ்வுகள் வெறும் பணம் காசுகளோ அல்லது சாதிப்பிரிவுகளோ மட்டும் அல்ல. மனிதனின்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அட்டவணை: 6

தீண்டாமை விலக்கு - கதைமாந்தர்

எண்	கதைகள்	காந்திய நெறியில் கொள்கையை நடைமுறைப் படுத்துபவர்	காந்திய நெறிக்கு எதிரானவர்	தீண்டாமை உணர்வு காரணமாகத் தாழ்வு மனப்பான்மை கொண்டவர்	தொடக்கத்தில் கொள்கைக்கு எதிராக இருந்து இறுதியில் மன மாற்றம் அடைபவர்
1	'புதிய நந்தன்'	ராமநாதன்	சுப்பு சாஸ்திரிகள், விச்வநாத ச்ரௌதி, ஜான் ஐயர்.	கருப்பன், கருப்பன் மகள்.	—
2	'அன்னையும் பிதாவும்'	கோவிந்தராவ், பங்கஜம்.	—	அர்த்தநாரி	—
3	'அரங்கேற்றம்'	சாமா	—	—	வேம்புவையர்
4	'ஒரு துளி'	வாசு, செல்லம்.	தியாகு, வைத்தீஸ்வரன் மனைவி, ஜகன்னாதாச்சாரி.	—	வைத்தீஸ்வரன்
5	'குணம்'	கோபால சாஸ்திரி	—	—	கன்னையா
6	'இழி' தொழில்'	—	தில்லைத் தாண்டவராயர்	—	—
7	'எது வெற்றி?'	சீதா	கோமளவல்லி,	—	—

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

திறமைகளும் உயர்ந்ததும் நல்லதுமான ஒழுக்கங்களும்கூட ...''[77] என்ற பகுதி பிரசாரம் போல் அமைகிறது.

அணுகுமுறை

தீண்டாமையால் விளையும் தீமைகளும், தீண்டாமை விலக்கால் விளையும் நன்மைகளும் உணர்த்தப்படுவதன்வழிக் கொள்கை விளக்கமுறுகிறது.

தீண்டாமை விலக்கின்மையால் கருப்பன் குருடாவதுடன் அவன் மக்கள் நல்வாழ்வு பெறாததும் ('புதிய நந்தன்'), தீண்டாமை பற்றிய தாழ்வு மனப்பான்மையால் அர்த்தநாரி பெற்றோரையும் வாழ்வையும்இழப்பதும் ('அன்னையும் பிதாவும்'), தொழிலாளரின் நலன்கள் புறக்கணிக்கப்பட்டதால் போராட்டங்களும் தீயவிளைவுகளும் ஏற்படுவதும் ('இழி தொழில்') அந்தந்தக் கதைகளில் சித்திரிக்கப்படுவதன் வாயிலாகக் கொள்கை எதிர்மறை அணுகுமுறையில் விளக்கமுறுகிறது.

தீண்டாமை விலக்குணர்வு கொண்ட சாமா இசையின்ப வெள்ளத்தில் அரிசனங்களை ஆழ்த்தி மனநிறைவு அடைவதும் ('அரங்கேற்றம்'), தீண்டாமை விலக்கினைச் செயற்படுத்திய வாசு சேரிமக்கள் மனங்குளிர்வதற்கும், அரிசனக் குலத்தவனான குமரன் நாட்டுப்பணியில் புதுப்பலம் பெறுவதற்கும் காரணமாவதும் ('ஒரு துளி'), வாய்ப்பளிக்கப் பெற்ற அரிசன் வினாயகம் உயர் பதவி பெற்று ஒழுக்க வல்லவனாகத் திகழ்வதும் ('குணம்') சுட்டப்படுவதன் வாயிலாகக் கொள்கை நேர்முக அணுகுமுறையில் விளக்கம் பெறுகிறது.

கலப்பு மணம் சீரான வாழ்வால் பெருமையுறுவதும் சிறப்பற்ற வாழ்வால் சிறுமையுறுவதும் நேர்முக, எதிர்மறை அணுகுமுறைகளால் விளக்கப்பட்டுள்ளன. இக்கதைகளில் தீண்டாமை விலக்கின்மையால் விளையும் கொடுமைகளை விண்டு காட்டிப் படிப்போர்தம் உள்ளத்தில் அவல உணர்வைத் தூண்டும் வகையில் கொள்கை எதிர்மறை அணுகுமுறையில் விளக்கப்படுவது சிறப்பாக உள்ளது.

கொள்கையை விளக்க உதவும் தலைப்பு

புராண நந்தன் காலத்திருந்த அவனைப்பற்றிய தீண்டாமை உணர்வு இக்காலத்திலும் கருப்பன் போன்றோரால் வலுப் பெற்றிருப்பதைச் சுட்டும் நிலையில் புதிய நந்தனாகக் கருப்பன்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அமைகிறான். பழைய நந்தனை அக்கினியில் புடம் போட்டது போல் புதிய நந்தனை இரயிலடியில் 'புடம் போடும் நிலை' ஏற்படுகிறது. இக்கருத்துகளை உள்ளடக்குகின்ற தலைப்பு, 'புதிய நந்தன்' ஆகும்.

'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' என்ற மூத்தோர் வாக்கின் பெருமையைச் சிதைக்கும்வண்ணம், மகனது குலம் பற்றிய தாழ்வு மனப்பான்மை, அன்னையும் பிதாவும் இறக்கக் காரணமாகுமாறு நிலையில், 'அன்னையும் பிதாவும்' என்பது கதைக்குத் தலைப்பாக அமைகிறது. தாழ்ந்த சாதியினர் முன்னிலையில் நடைபெறும் முதல் இசை நிகழ்ச்சியும் அரங்கேற்றம் எனப்படும் என்ற பொருளில் 'அரங்கேற்றம்' என்ற தலைப்பு அமைகிறது.

வாசுவால் வளர்க்கப்பட்ட சேரிக்குமரன் அவரிடமிருந்து புதுப்பலம் பெற்று நாட்டு வேள்வியில் தன்னைக் கரைக்க ஒரு துளியாக மாறுகிறான் என்பதை உள்ளடக்கும் தலைப்பு 'ஒரு துளி' ஆகும். அந்தணர் சமுதாயத்தில் தீண்டாமை விலக்கிற்காகச் சீர்திருத்தப் புரட்சியில் ஈடுபட்ட 'ஒரு துளி' வாசு ஆவார் என்பதைச் சுட்டுவதாகவும் அத்தலைப்பை ஏற்கலாம்.

''குலத்தளவே ஆகும் குணம்'' என்ற ஔவையின் பாடலில் வரும் குலம் என்பது, பிறப்பினால் ஏற்படுவது அல்ல, ஒழுக்கத்தால் அமைவது என்ற முடிவுக்குக் கன்னையா வருகிறார். உயர்வு-தாழ்வு குணத்தால் கணிக்கப்படுவதைச் சுட்டும் தலைப்பே 'குணம்' ஆகும். அரிசன முன்னேற்றத்திற்குத் தடையான செயலை 'இழி தொழில்' என்ற தலைப்புச் சுட்டுகிறது. அரிசன உயர்வுக்கு உதவக் கூடிய கலப்பு மணம் வெற்றிக்குரியது என்ற விளக்கத்தைப் பெற உதவும் தலைப்பு 'எது வெற்றி?' ஆகும்.

காந்தியத் தாக்கத்தைப் புலப்படுத்தும் பிற உத்திகள்
காந்தியப் பின்னணி

'புதிய நந்த'னில் விச்வநாத ச்ரௌதியின் மகன் ராமநாதன் மாவட்ட ஆட்சியாளர் பதவியையும் உதறிவிட்டு 1930–ஆம் ஆண்டில் சத்தியாக்கிரக இயக்கத்தில் கலந்து தடியடிபட்டுச் சிறைத்தண்டனை பெற்றதாகச் சுட்டப்படுகிறது. படித்துப் பட்டம் பெற்றவர்களையும், உடல் பொருள் ஆவி அனைத்தையும் இழக்க உடன்படுமாறு காந்தியடிகளின் சத்தியாக்கிரகம் ஈர்த்தமை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

புலனாகிறது. இதே கதையில் காந்தியடிகள் தென்னாட்டில் அரிசன இயக்கத்திற்காகப் பிரசாரம் செய்ய வரும் நிகழ்ச்சியும் இடம் பெறுவதன் வாயிலாகக் காந்தியடிகள் அரிசன முன்னேற்றத் திற்காகப் பாடுபட்டமை நினைவுபடுத்தப்படுகிறது.

'ஒரு துளி'யில், ''உப்புச் சத்தியாக்கிரகத்தில் போலிசாரிடம் வாங்கிய தடியடியின் நினைவுச் சின்னம்போல் நெற்றியில் பிறைக் கீற்றாக வடு''[78] வாசுவிற்கு இருப்பதைச் சுட்டுவதன் வாயிலாகக் காந்தியடிகளின் சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டவர்கள் தடியடி களுக்கு அஞ்சவில்லை என்பது உணர்த்தப்படுகிறது. இக்கதையில் ''தேசம் எங்கும் ஆகஸ்ட் புரட்சிக்குப் பிறகு அமைதி குலைந்து... காந்தியடிகள் மற்ற தலைவர்கள் ஆகாகான் மாளிகையில் சிறை வைக்கப்பட்டு...''[79] என்ற பகுதி நாட்டு விடுதலைக்காகச் சிறை வாழ்க்கையை ஏற்ற காந்தியடிகளின் செயலைச் சுட்டுகிறது.

'குணம்' என்பதில், ''... காந்திஜி சென்னைக்கு வந்திருந்தபோது கோபால சாஸ்திரி தவறாமல் பிரார்த்தனைக் கூட்டத்துக்குப் போய் வந்தார்''[80] என்ற பகுதி தமிழக மக்களைக் காந்தியடிகள் கவர்ந்தமையைத் தெளிவுறுத்தும். இவ்வாறு காந்தியப் பின்னணி இடம் பெறுவதன் வாயிலாகக் காந்தியத் தாக்கம் அமைகிறது.

காந்தியடிகளின் கருத்தையும் கூற்றையும் நினைவுறுத்தல்

சில கதைகளில் அமையும் நிகழ்ச்சிகளும் கருத்துகளும் காந்தியடிகளின் கருத்தை நினைவில் கொணர உதவுகின்றன. அவ்வகையில் காந்தியத் தாக்கம் அக்கதைகளில் இடம் பெற்றுள்ளன.

'புதிய நந்தன்' கதையில் விச்வநாத ச்ரௌதி அந்தணர்க் குரிய குளத்தில் இறங்கிய சேரிக் கருப்பனைக் குருடாக்கிய நிகழ்ச்சி, ''......[தீண்டாமை விலக்கு நடைமுறைப்படுத்தப்படின்] பொதுக் கிணறுகளை உபயோகிக்கவோ துணியும் தீண்டாதாரை இப்போது சிலர் தண்டிப்பது போல் தண்டிப்பதற்கு அவருக்குச் சக்தி இராது''[81] என்ற காந்தியடிகளின் கூற்றை நினைவுறுத்து கிறது.

இக்கதையில், காந்தியடிகள் அரிசன இயக்கப் பிரசாரம் செய்ய வருவதாக இருக்கும்போது ''ச்ரௌதிகள் அவருடன்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வாதம் செய்ய, புராண அத்தாட்சிகளுடன்''[82] வருகிறார். இந் நிகழ்ச்சி, ''கற்றறிஞர்களான பண்டிதர்கள், தீண்டாமையைப் போன்ற ஒளிவு மறைவற்ற தீமைக்குச் சாத்திரங்களினின்று ஆதாரம் காட்ட முன் வருவதைக் காண எனக்கு வருத்தமாக இருக்கிறது''[83] என்ற காந்தியடிகளின் கூற்றை நினைவுபடுத்தும்.

'அன்னையும் பிதாவும்' என்ற கதையில், அர்த்தநாரியின் குலத்தாழ்வு மனப்பான்மைக்குப் பெற்றோரின் குடிப்பழக்கம், சுத்தமின்மை ஆகியவை காரணங்களாக உள்ளன. இச்சித்திரிப்பு, ''..... சமுதாயத் தராசில் தீண்டாதார் நிகரான இடம் பெற வேண்டுமாயின் அவர்கள் தூய்மையற்ற பழக்க வழக்கங்களைக் கைவிட்டுத் தீர வேண்டும்''[84] என்னும் காந்தியடிகளின் கருத்தைச் சிந்திக்க உதவும்.

'ஒரு துளி' என்ற கதையில், ''காந்தி சொல்றாராம் அவர்தான் ஹரியோடே குழந்தைகள்னு''[85] என்று கூறுவது, ''நம்முடன் ஒப்பிடும்போது தீண்டாதார் உண்மையில் அரிசனே, அதாவது கடவுளின் மனிதரேயாவார்''[86] என்ற காந்தியடிகள் கூற்றை நினைவுபடுத்தும். 'குணம்' என்பதில், ''அவனும் [தீண்டத்தகாதவனும்] நம்மைப் போல மனுஷன்தானே நாயுடு ஸார்''[87] என்கிறார் கோபால சாஸ்திரி. இது, ''ஓர் உயர்ந்த மனிதர் தமது ஆன்மாவுக்கும் தம்மைவிடத் தாழ்ந்தவர் என்று நினைக்கும் ஒருவரின் ஆன்மாவுக்கும் வேற்றுமை எதுவுமில்லை என்பதை அறிகிறார்''[88] என்ற காந்தியடிகளின் கூற்றை நினைவுறுத்தும்.

'இழி தொழில்' என்பதில் ''தோட்டித் தொழிலை இழி வானதென்றோ கேவலமானதென்றோ நாம் கருதக் கூடாது''[89] எனவரும் தொடர், தோட்டி வேலை மிகத் தாழ்வான வேலை என்று கருதப்பட்ட போதிலும், மக்களின் உடல் நலத்தை அதுவே காப்பாற்றுவதால் உண்மையில் அதுவே உயர்வான வேலை[90] என்ற காந்தியடிகளின் கருத்தை மனத்தில் நிறுத்தும். இக்கதையில் நகரச்சுத்தித் தொழிலாளர்க்கு நல்ல குடியிருப்புக் கிடையாது; தண்ணீர் வசதி கிடையாது; விளக்கு வசதி கிடையாது; சம்பளம் வயிற்றுக்குக் காணாமல் கடன் வாங்கினார்கள்[91] எனவரும் பகுதி, ''நல்ல வீட்டு வசதிகளை அவர்களுக்குச் செய்து கொடுங்கள்... நியாயமான கூலி கிடைக்கும்படியும் பாருங்கள்''[92] என்ற காந்தியடிகளின் வேண்டுகோளை நினைவுபடுத்தும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

காந்தியடிகளின் பெருமையை வெளிப்படுத்தல்

சில கதைகளில் காந்தியடிகளின் பெருமையை சுட்டுவதன் மூலம் காந்தியத் தாக்கம் இடம் பெறுகிறது. 'புதிய நந்த'னில் "கருப்பன் கிழவன், மவாத்துமா கிழவரைப் பார்க்க ஆசை"[93] என்ற தொடர் முதியவர்களைக் காந்தியடிகள் ஈர்த்தமையைக் குறிப்பால் உணர்த்தும். 'ஒரு துளி'யில் "'மகாத்மா காந்தீ கீஜே' என்கிற தாரக மந்திரத்துடன் தன் கணவர் சிறை சென்று விடுவாரோ என்று பயந்தபடி எழுந்தாள் செல்லம்..."[94] என்ற பகுதி, விடுதலைப் போராட்டச் சத்தியாக்கிரகிகள் சிறைக்குச் செல்லும்போது, காந்தியடிகளை வாழ்த்துவதன்மூலம் அவரது பெருமையை உலகறியச் செய்ததைச் சுட்டும். இக்கதையில் "— மனசுக்குள்ளே இவர்களும் காந்தியடிகளின் கொள்கைகளை ஆதரிக்கிறவாதான், அப்பா மாதிரி பைத்தியமாயிடலே"[95] என்று தியாகு கூறுவது, முழு அளவு தம்மால் இயலாவிடினும் மனத்தளவில் காந்தியத்தை ஏற்பவர்களும் இருக்கிறார்கள் என்ற நிலையில் காந்தியடிகளின் பெருமையை உணர்த்தும்.

'குணம்' என்பதில், "... காந்திஜி சொன்னதை எல்லாம் கேட்டேன்... அவர் சொல்றதுதான் சரின்னு புரிஞ்சிது..."[96] என்று சாஸ்திரி கூறுவது காந்தியடிகளின் பெருமையைச் சுட்டும்.

காந்தியடிகளின் உருவப்படம் இடம்பெறல்

'ஒரு துளி' என்ற கதையில் வாசுவின் எளிமையான குடிலின் சுவரில் உள்ள காந்தியடிகளின் படம் காந்தியடிகளின் எளிமையைச் சுட்டும் வகையில் காந்தியத் தாக்கத்தை உணர்த்தும்.

காந்தியடிகளுடன் தொடர்புடையவை இடம்பெறல்

காந்தியடிகளுடன் தொடர்புடைய சில பொருட்களைச் சில கதைகளில் சுட்டி, அவற்றின்வழிக் காந்தியடிகளைப்பற்றி அறியச் செய்யும்போக்கும்உள்ளது. 'அன்னையும் பிதாவும்' என்ற கதையில் 'அகில இந்திய ஹரிஜன சேவா சங்கம்' சுட்டப்படுகிறது. தீண்டாமையை எதிர்ப்பதற்காகக் காந்தியடிகள் தோற்றுவித்த மாபெரும் நிறுவனத்தைச் சுட்டுவதன் மூலம் அதன் நிறுவனரான காந்தியடிகளின் ஆளுமையை உணரச் செய்து காந்தியத் தாக்கத்தை உணர்த்துகிறார் ஆசிரியர்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

எல்லோரும் எளிய கதர் அணிவதன்வழித் தீண்டாதார்க்குப் பொருளாதார உதவி கிடைக்க உதவ முடியும் என்பது காந்திய டிகளின் எண்ணம். 'ஒரு துளி'யில் தீண்டாதார் நலனில் அக்கறை கொண்ட வாசுவும் செல்லமும் கதர் ஆடை அணிந்திருப்பதும் கைராட்டை வைத்திருப்பதும் அவர்களது எளிமையை உணர்த்தும். 'தரித்திர நாராயணன்' என்ற சொல் இக்கதையில் இடம் பெறு கிறது. ஏழையினும் ஏழையைக் குறிப்பிடுவதற்குக் காந்தியடிகள் இச்சொல்லைப் பயன்படுத்தியுள்ளார்.

விடுதலை இயக்கப் பாடலைக் குறிப்பிடல்

'பறையருக்கும் இங்கு தீயர் புலையருக்கும் விடுதலை' என்ற பாடலைப் பாடிக்கொண்டே 'இழி தொழில்' என்ற கதை யில் ஊர்வலம் வருவது சுட்டப்படுகின்றது. பாரதியாரின் விடுதலை இயக்கப் பாடலின்வழிக் காந்தியடிகளின் கருத்தை நினைவுறச் செய்யும் நிலையில் காந்தியத் தாக்கம் அமைகிறது.

இனி, 'காந்திவழிக் கதைகள்' என்ற தொகுப்பு நூலின்கண் அமைந்துள்ள கதைகளைப் படைத்த ஆசிரியர்களின் பிற கதை களில் இடம்பெறும் தீண்டாமை விலக்குக் கோட்பாடு பற்றிய ஆய்வு அமைகிறது.

தீண்டாமை விலக்குக் கோட்பாடு அமைந்துள்ள பிறகதைகள்

தீண்டாமை விலக்குக் கொள்கையை விளக்க அமைந்துள்ள பிற கதைகளில் கல்கியின் 'விஷமந்திரம்', து. ராமமூர்த்தியின் 'துர்க்கையின் சாபம்', விந்தனின் 'ஒரே உரிமை', பி.எஸ், ராமையாவின் 'புதுமைக் கோயில்', ராஜாஜியின் 'ஜகதீச சாஸ்திரிகள் கனவு', 'அறியாக் குழந்தை', சி.சு. செல்லப்பாவின் 'அவள் மேல் ஜாதியாம்' ஆகிய கதைகள் கொள்கையைக் கருவில் கொண்டுள்ளன. மஹியின் 'சமானன்' என்ற கதையில் கொள்கையானது கதைப்பின்னலில் விளக்கமுறுகிறது. அகிலனின் 'சாதி' என்ற கதையிலும், ராஜாஜியின் 'நடேசய்யரின் குற்றம்' என்ற கதையிலும் கொள்கையானது கருத்தளவில் சுட்டப் படுகிறது.

'விஷ மந்திரம்' என்ற கதையில் விடக்கடி மந்திரத்தில் வல்லவரான நாராயண ஐயர், காந்தியடிகளிடம் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தும் தீண்டாமை விலக்கில் நம்பிக்கையில்லாதவர்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஒரு முறை அஞ்சலக அதிகாரி முன்னிலையில் பாம்பு விடத்தை இறக்கி ஒருவரைக் காப்பாற்றும் அவர், தீண்டத்தகாதவர்கள் அருகில் இருந்தால் தமது மந்திரம் பலிப்பதில்லை என்கிறார். அருகிலிருந்த அதிகாரி தாம் தீண்டத்தகாத குலத்தவர் என்ற உண்மையைக் கூற நாராயண ஐயரின் ஞானக் கண் திறக்கின்றது. 'பிறப்பில் தீட்டில்லை' என்பது கதைக்கரு.

"... ஒரு பஞ்சமனுடைய காற்று மட்டும் என்பேரில் பட்டிருந்தால் தூரத்திலுள்ள பறையன் ஒருவனைப் பார்த்தால் எப்போதும் மந்திரம் பலிப்பதில்லை... ஆகவே பறையனிடம் தீட்டு இல்லையென்று நான் எவ்வாறு ஒப்புக்கொள்ள முடியும்"?[97] என்று வாதிடும் நாராயண ஐயர், இறுதியில் உண்மையை உணர்ந்தபின் "பிறப்பில் தீட்டில்லை என்பது எனக்கு நிச்சயமாகி விட்டது. என் கண்கள் திறந்தன"[98] என்ற முடிவிற்கு வருவது அவரது மனமாற்றத்தை உணர்த்தும்.

'துர்க்கையின் சாபம்' என்பதில், தன் காதலி ரூபாவின் தாய், துர்க்கை கோயிலில் மகளுக்குத் திருமணம் நடத்த நேர்த்திக் கடன் செய்ததால், கோயிலுக்குள் செல்ல உரிமையில்லாத அரிசன் குலசேகரனுக்குச் சோதனை ஏற்படுகிறது. காதலியிடம் தன் குலத்தைக் குறிப்பிடாமல் துர்க்கையின் சாபம் இருப்பதால், அக்கோயிலுக்குள் செல்லும் தன்னைப் பேய் அடிக்கும் என்று கூறுகிறான். துர்க்கையின் சாபம் எப்போது நீங்கும் என்று ஒரு நாள் கேட்ட ரூபாவிடம், தாழ்த்தப்பட்டவர்கள் கோயிலுக்குச் செல்லும் காட்சியைக் காட்டித் தனக்கு வழி பிறந்ததைக் குறிப்பிடு கிறான். அவன் தாழ்ந்த வகுப்பினன் என்பதை அறிந்தும் ரூபா அவனை மகிழ்வுடன் ஏற்கிறாள். 'தீண்டாமை விலக்கு முயற்சி களில் ஒன்று அரிசனங்களுக்குக் கோயில்களைத் திறந்துவிடுவ தாகும்' என்பது கதைக்கரு. "என்னுடைய பயணத்தின்போது பல கோவில்களை அரிசனங்களுக்குத் திறந்து வைக்கும் பேறு எனக்குக் கிட்டியது"[99] என்ற காந்தியடிகளின் கூற்று நினைத் தற்குரியது.

'ஒரே உரிமை' என்பதில் கதைத்தலைவர், ஏழை அரிசன் சோலையப்பனுக்கு ரொட்டிக் கடை வைத்துக் கொடுக்கிறார். தான் பறையன் என்பதால் எவரும் தன் கடைக்கு வருவதில்லை எனக்கூறும் சோலையப்பன் தனக்குத் தற்கொலை ஒன்றே உரிமை என வருந்துகிறான். இக்கதையில், காந்தியடிகளால் குறிப்பிடப்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பட்ட தீண்டாமை விலக்கிற்கான முயற்சிகளுள் சேரி மக்களுக்குக் கல்வி கற்பித்தல், ஆலய நுழைவு உரிமை அளித்தல் ஆகியன மேற்கொள்ளப்பட்டும், தீண்டத்தகாதோரை உயர் சாதியினர் புறக்கணிப்பதை விளக்கும் போக்கில் 'தீண்டாமை ஒழிய மனித மனமாற்றம் இன்றியமையாதது' என்ற கரு குறிப்பால் உணர்த்தப் படுகிறது. ''ஒவ்வோர் இந்தியனும் தன் இதயத்திலிருந்து தீண்டாமையை வேருடன் களைந்துவிட வேண்டும்''[100] என்ற காந்தியடிகளின் கருத்தைக் கதைக்கரு நினைவுபடுத்துகிறது.

'புதுமைக்கோயில்' என்ற கதையில், விறகு வெட்டிமுனியன் தீண்டத் தகாதவன் ஆதலால் உள்ளே வரக்கூடாது என்று தந்தை கூறுவது, குழந்தை ரோஹிணிக்கு நிறைவைத் தரவில்லை. அவள், முனியன் விறகு வெட்டிய இடத்தில் ஒரு கோயில் கட்டி, தந்தையையும் முனியனையும் அழைக்கிறாள். முதலில் மறுத்த தந்தை, தம் மனமே தம்மைச் சுட மனம் மாறி, மகள் கட்டிய கோயிலுக்கு முனியனையும் அழைக்கிறாள். 'தொழிலால் தீண்டத் தகாதவர் எவரும் இல்லை' என்பது இதன் கதைக்கரு. ''அவன் பள்ளன், அவன் நம்முடைய வீட்டிற்குள்ளே வரக்கூடாது''[102] என்று கூறிய அவள் தந்தை மனம் மாறிய பின், ''முனியா நீயும் வா...அந்தக் கோயிலில் தீண்டாதவன் என்று யாரும் கிடையாது... இனி நல்ல காலம் பிறந்து விட்டது''[102] என்கி றார். தீண்டாமை ஒழிப்பிற்கு உயர் சாதியினரின் மனமாற்றம் இன்றியமையாதது என்ற காந்தியடிகளின் கருத்து நினைவு கூரத்தக்கது.

'ஜகதீச சாஸ்திரிகள் கனவு' என்ற கதையில், தீண்டாமை உணர்வில் தோய்ந்த ஜகதீச சாஸ்திரிகள், ஓடிப்போன தம் மனைவி தீண்டாத குலத்தவள் என அறிந்து தம் மகனது திருமணம் தடை படுமே என்று வருந்துகிறார். தம் சம்பந்தி, அவர் மனைவி, கிராமத்தார் அனைவரும் தம் மகனைப் பறையன் எனப் புறக் கணிப்பதாகக் கனவு கண்டு, சாத்திரத்தைப் பழித்து அலறித் துன்புற்று ஊரைவிட்டே போய் விடுகிறார். 'தீண்டாமையுணர்வு காரணமாக ஏற்பட்ட தாழ்வு மனப்பான்மை அமைதியைக் குலைக்கும்' என்பது கதைக்கரு.

''...ஆதி சிருஷ்டி நாலு வர்ணந்தான். அதற்குப் பிறகு வர்ணக் கலப்பு ஏற்பட்டு, சங்கர சாதி உற்பத்தியாயிற்று. பிரதி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

லோமச் சேர்க்கைகளின் பலனாகச் சாதிச் சண்டாளர்கள் உண்டானார்கள்''[103] என்று ஜகதீச சாஸ்திரிகள் கூறுவது, தீண்டாதோரை இழிவாகக் கருதும் அவரது உளப்பான்மையை விளக்கும். தம் மகனை எல்லோரும் பழிப்பதைக் கனவில் கண்டு, சாத்திரங்களை எவரேனும் கொளுத்திச் சாம்பலாக்க மாட்டார்களா என்று கத்துவது அவரது அமைதியற்ற போக்கைச் சுட்டும்.

'அறியாக் குழந்தை' என்ற கதையில், நாலு வயதுக் குழந்தை சுப்பு வியக்குமளவிற்குப் பறையன் கருப்பனைத் தீண்டத்தாகதவன் என விரட்டுகின்றனர் சுப்புவின் குடும்பத்தார். கோயில்களைப் பறையருக்குத் திறந்து விடப்போகும் நிகழ்ச்சியைக் கேள்வியுற்றுச் சுப்புவின் தந்தை, உலகமே தலைகீழாகப் போகிறது என்று அங்கலாய்க்கிறார். காந்தியடிகள், தீண்டத்தாகதோர் கோயில்களுக்குச் செல்லும் உரிமை பெறப் பாடுபட்ட செயலுக்கு, அவர் காலத்தில் எதிர்ப்பு இருந்ததை இக்கதை குறிப்பால் சுட்டுகிறது. 'உயர் சாதியினரின் மனமாற்றம் தீண்டாமை விலக்கிற்கு இன்றியமையாதது' என்பது இக்கதைக் கரு. ''... பறைப்பயலே... குழந்தைக்கு இவ்வவவு பக்கம் வருகிறாய். ஓடிப்போ தூர''[104] என்ற அவன் மாமாவின் கூற்று அவரது தீண்டாமை உணர்வை உணர்த்தும்.

'அவள் மேல் ஜாதியாம்' என்ற கதையில் வயல் வரப்பில் வருபவர்கள் அரிசனக் குழந்தைகள் என்பதற்காக இறங்கி வழிவிட மறுக்கிறாள் ஒரு கிழவி. அவர்கள் பாதிவழி வந்ததைப் பொருட்படுத்தாதுடன், அவர்களை இழிவாகப் பேசியும், அடித்தும், அவர்களுடைய கலையங்களை உடைத்தும் துன்புறுத்த அவள் தயங்கவில்லை. 'சாதி உயர்வு உணர்வு வெறித்தனத்திற்கு இட்டுச்செல்லும்' என்பது இக்கதைக் கரு. மனிதருள் உயர்வு தாழ்வு இல்லை என்பதை இக்கதையின் தலைப்பும் உணர்த்தும்.

'சமானன்' என்ற கதையின் பின்னலில், காலணியை மெருகேற்றும் சிறுவன் லக்ஷ்மணன், பள்ளியில் தம் மகன் அருகே அமர்வதற்குப் பொருமுகிறார் குருவின் தந்தை. ''தோல் தொழிலாளியின் மகனுக்குப் பக்கமாக என் பையனை உட்கார வைப்பதாக இருந்தால் என் பையனைப் பள்ளிக்கு அனுப்ப முடியாது''[105] என்று ஆவேசமாக உரத்துக் கூவித் தம் செல்வாக்கினைப் பயன்படுத்தி லக்ஷ்மணனைப் பள்ளியினின்றும் நீக்கிவிடுகிறார். விடுதலைப் போராட்டக் காலத்தில் பள்ளியில் அரிசனர் தம்மக்கள் அருகில் உட்காரப் பொறாத அளவிற்கு உயர் சாதி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

யினர் தீண்டாமையுணர்வில் அழுந்தியிருந்த கொடுமை இக்கதையில் சித்திரிக்கப்படுகிறது. 'சாதி' என்ற கதையில் காந்தியடிகள் சாதியில் வேறுபாடு கூடாது என்று கூறிய கருத்துச் சுட்டப்படுகிறது. 'நடேசய்யரின் குற்றம்' என்பதில் காந்தியடிகள் 'எல்லோரும் ஒன்று என்று கூறிய கருத்து இடம் பெறுகிறது.

இக்கதைகளினால் அறியப்படுவன

1. காந்தியடிகளின் தீண்டாமை விலக்குக் கொள்கைக்கு அவர் காலத்திலும், அவர் காலத்திற்குப் பின்னும் எதிர்ப்புகள் இருந்தமை சுட்டப்படுகின்றன.

காந்தியடிகளின் காலத்தில் பழைமைவாதிகள் இக்கொள்கையைக் கடுமையாக எதிர்த்திருக்கின்றனர். காந்தியடிகளிடம் புராண அத்தாட்சிகளுடன் வாதம் செய்வதற்கும் முன்வந்திருக்கின்றனர் ('புதிய நந்தன்'). ''...காந்தி சொல்ராறாம் அவாதான் ஹரியோடே குழந்தைகள்னு''[106] எனச் சிலர் ஏளனமாகப் பேசிக் களித்திருக்கின்றனர். அவர் காலத்திற்குப் பிறகும் பழைமையில் ஊறிய சிலர் காந்தியடிகளின் இக்கொள்கையால் சனாதன அறம் அழிந்து விட்டதே என அலறித் துடிக்கின்றனர் ('ஜகதீச சாஸ்திரிகள் கனவு'). ''...காந்தி என்னடான்னா, சாதியிலே வித்தியாசம் கூடாதுன்னார்''[107] என அங்கலாய்க்கின்றனர்.

2. காந்தியத்தில் நம்பிக்கை கொண்டோருள்ளும் சிலர் இக்கொள்கையை ஏற்கவில்லை.

''காந்தியடிகளிடம் பக்தி அதிகம் ... ஆனால் மகாத்மா காந்தியின் திட்டங்களுள் தீண்டாமை விலக்கு மட்டும் அவருக்கு விலக்கு''[108]; ''...அவர் [காந்தி] சொல்றது சிலதை எல்லாம் நானும் ஒப்புக்கறேன்... ஆனா இந்தச்சேரிப் பசங்களை நாம்ப நடு ஊட்டுலே கொண்டாந்து வச்சிக்கணும்னு சொல்றாரே அது மட்டும் சரியில்லே...''[109] என்பன அக்கருத்தை வலியுறுத்த உதவும். இவ்வாறு காந்தியத்தில் நம்பிக்கையுடையவர்கள் சிலர் கூறுவது, பழைமைப் பிடிப்பை விடமுடியாத அவர்தம் நிலையை உணர்த்தும்.

3. காந்தியம் தீண்டாமை விலக்குக் கொள்கையை நடைமுறைப்படுத்த முயன்றது.

காந்தியடிகளின் கொள்கைக்குப் பல எதிர்ப்புகள் இருந்தாலும், காந்தியத்தால் கவரப்பட்டவர்கள் தீண்டாமை விலக்கைச்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

செயலளவில் நடைமுறைப்படுத்தினர். முதுகலை படித்துவிட்டு மாவட்ட ஆட்சியாளர் பதவியையும் உதறிவிட்டுத் தந்தையின் விருப்பத்திற்கு எதிராக அரிசன இயக்கத்தில் ஈடுபட்டமையும் ('புதிய நந்தன்'), வழக்குரைஞர் பட்டம் பெற்றும் காந்தியப் போராட்டத்தில் பங்கு கொண்டு அரிசனச் சிறுவனை நடைமுறை வாழ்வில் எதிர்ப்புகளுக்கிடையில் வளர்த்தமையும் ('ஒரு துளி'), காந்தியடிகளின் நேரிடையான அறவுரையால் கவரப்பட்டுத் தீண்டாமை விலக்கை அன்றாட வாழ்வில் நடைமுறைப்படுத்திய மையும் ('குணம்'), காந்தியடிகளிடம் கொண்ட பற்றின் காரண மாகச் சேரி மக்களுக்குக் கல்வி அளித்தமையும் ('ஒரே உரிமை') மேற்கூறிய கருத்தை விளக்கமுறச் செய்யும்,

4. காந்தியத் தீர்வுகளின் விளைவாக அரிசனங்களுக்கு நன்மை கிட்டியுள்ளது.

காந்தி மகானின் முயற்சியால் தாழ்த்தப்பட்டவர்களுக்குச் சாப விமோசனம் ஏற்பட்டது எனக் கோயிலைத் தமக்காகத் திறந்தமைக்கு அரிசன குலத்தவர் மகிழ்ச்சியுறுகின்றனர் ('துர்க் கையின் சாபம்'). அரிசனக் குலத்தவனுக்கு அளிக்கப்பட்ட கல்வி அவனது உயர்பதவிக்கு உதவுகிறது ('குணம்').

குறிப்புகள் :

1 கந்தசாமி, சோ. ந., **பௌத்தம்**, தேவ சேனாபதி, வ. ஆ., (பொ.ப.ஆ), ப. 156.

2 ஸ்ரீகிருஷ்ணதத்தபட், (தொ.ஆ.), கிறிஸ்துவம், ப. 15

3 இராமலிங்க அடிகள், **திருவருட்பா ஆறாம் திருமுறை**, 5297.

4 சீனிவாசன், ரா., **விவேகானந்தர் வாழ்வும் வாக்கும்**, ப. 104.

5 "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்" —**திருக்குறள்**, 98.2.

6 **நல்வழி**, 2.

7 "ஏழை யென்றும் அடிமையென்றும்
எவனும் இல்லை ஜாதியில்
இழிவு கொண்ட மனித ரென்ப
திந்தி யாவில் இல்லையே,"

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

—திருநாவுக்கரசு, ஏ., (ப.ஆ.), **பாரதியார் கவிதைகள், தேசிய கீதங்கள்**, *30.2*.

8 தேசிகவிநாயகம் பிள்ளை, சி., **மலரும் மாலையும்** *98.11*.

9 தணிகை உலகநாதன், (தொ.ஆ.), **நாமக்கல் கவிஞர் பாடல்கள்**, *300*.

10 பாலகிருஷ்ணன், பி.இ., (தொ.ஆ.), **பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் பாடல்கள்**, ப. *290*.

11 பாரதிதாசன், **பாரதிதாசன் கவிதைகள்**, புதிய உலகம், *18*.

12 Gandhi, M.K., *Young India*, dt. 4-5-1921.

13 Ibid.

14 கலியாண சுந்தரனார், திரு.வி., **தமிழ்த் தென்றல்**, ப.*88*.

15 மகாத்மா காந்தி, **தீண்டாமை ஒழிப்பு**, உதயசங்கர், த. அர., & கந்தசாமி, க.ரா., (தொ.ஆ.), ப. *32*.

16 Gandhi, M.K., *Young India*, dt. 4-5-1921.

17 Ibid., dt. 11-6-1931.

18 Ibid., dt. 6-10-1921.

19 Ibid.

20 Gandhi, M.K., *Harijan*, dt. 28-9-1934.

21 வேங்கடராஜுலு, ரா., (ப.ஆ.), **மகாத்மா காந்தி நூல்கள், தொகுதி 7**, வேங்கடராஜுலு, ரா., & ஜெயமணி சுப்பிரமணியம், (மொ.பெ.ஆ.), ப.25

22 மேலது, ப. *27*.

23 மேலது, ப. *23*.

24 Gandhi, M.K., *Young India*, dt. 23-4-1925.

25 Ibid., dt. 19-1-1921.

26 Gandhi. M.K., *Harijan*. dt. 31-8-1934.

27 Ibid.

28 வேங்கடராஜுலு, ரா., (ப.ஆ.), **மகாத்மா காந்தி நூல்கள், தொகுதி 7**, வேங்கடராஜுலு, ரா., & ஜெயமணி சுப்பிரமணியம் (மொ பெ.ஆ.), ப. *173*.

29 மேலது, ப. *423*.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

30 மேலது, ப. 422.

31 மேலது, ப. 49.

32 Gandhi, M.K., *Harijan*, dt. 6-4-1934.

33 Gandhi, M.K., *Young India*, dt. 22-1-1925.

34 Ibid, dt. 5-11-1925.

35 Ibid, dt. 20-10-1927.

36 Gandhi, M.K., *Harijan*, dt. 8-12-1933.

37 Gandhi, M.K., *Young India*, dt. 23-4-1925.

38 Ibid, dt. 29-9-1927.

39 Ibid, dt. 28-11-1929.

40 மகாத்மா காந்தி, சத்திய சோதனை, வேங்கடராஜுலு ரா., (மொ.பெ.ஆ.), ப. 403.

41 Gandhi, M.K.,*Harijan*, dt. 31 8-1934.

42 Ibid, dt. 21-3-1936.

43 காந்தியடிகள் 25-11-1932 அன்று மணிபென் பட்டேலுக்கு எழுதிய மடற்செய்தி.

44 Gandhi, M.K., *Harijan*, dt. 21-4-1946.

45 வேங்கடராஜுலு, ரா., (ப.ஆ.), மகாத்மா காந்தி நூல்கள், தொகுதி 7, வேங்கடராஜுலு, ரா., & ஜெயமணி சுப்பிரமணியம் (மொ.பெ.ஆ.), ப. 49

46 Gandhi, M.K., *Harijan*, dt. 19-5-1946,

47 வேங்கடராஜுலு, ரா., (ப.ஆ.), மகாத்மா காந்தி நூல்கள், தொகுதி 7, வேங்கடராஜுலு, ரா., & ஜெயமணி சுப்பிரமணியம் (மொ.பெ.ஆ.), ப. 164.

48 புதுமைப்பித்தன், 'புதிய நந்தன்', காந்திவழிக் கதைகள் கல்யாணராமன், கே.ஆர்., (தொ.ஆ.), ப. 13

49 Gandhi, M.K., *Harijan*, dt. 22-9-1946.

50 புதுமைப்பித்தன், 'புதிய நந்தன்', மு.நூ., ப. 9.

51 மேலது, ப. 10.

52 மேலது, ப. 12.

53 மேலது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

54 மேலது.

55 Gandhi, M.K., *Harijan*, dt. 18-3-1933.

56 ராஜாஜி, 'அன்னையும் பிதாவும்'. காந்திவழிக் கதைகள், கல்யாணராமன், கே.ஆர்., (தொ.ஆ.), ப. 30.

57 மேலது, ப. 23.

58 மேலது, ப. 30.

59 ரஸவாதி 'அரங்கேற்றம்', காந்திவழிக் கதைகள், கல்யாணராமன், கே.ஆர்., (தொ.ஆ), ப. 211.

60 மேலது.

61 ஸரோஜா ராமமூர்த்தி, 'ஒரு துளி', காந்திவழிக் கதைகள், கல்யாணராமன், கே.ஆர்., (தொ.ஆ.), ப. 270.

62 மேலது, ப. 273.

63 மேலது, ப. 276.

64 மேலது, ப. 270.

65 மேலது, ப. 271.

66 மேலது, ப. 276.

67 Gandhi, M.K., *Harijan*, dt. 25-5-1940.

68 து.ரா., 'குணம்', காந்திவழிக் கதைகள், கல்யாணராமன், கே.ஆர்., (தொ.ஆ.), ப. 78.

69 Gandhi, M.K., *Young India* dt. 19-1-1921.

70 து.ரா., 'குணம்', மு.நூ., ப. 77.

71 மேலது, ப. 81.

72 ஜயலக்ஷ்மி, கே., 'எது வெற்றி?', காந்திவழிக் கதைகள் கல்யாணராமன், கே.ஆர்., (தொ.ஆ.), ப. 349.

73 புதுமைப்பித்தன், 'புதிய நந்தன்', மு.நூ., ப. 14.

74 ரஸவாதி 'அரங்கேற்றம்' மு.நூ., ப. 214.

75 ஸரோஜா ராமமூர்த்தி, 'ஒரு துளி', மு.நூ., ப. 270.

76 து.ரா., 'குணம்', மு.நூ., ப. 81.

77 ஜயலக்ஷ்மி, கே., 'எது வெற்றி?', மு. நூ., பக். 349-350.

78 ஸரோஜா ராமமூர்த்தி, 'ஒரு துளி', மு. நூ., ப. 268.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

79 மேலது, ப. 278.

80 து. ரா., 'குணம்', மு. நூ., ப. 76.

81 Gandhi, M.K., *Young India*, dt. 11-6-1931.

82 புதுமைப்பித்தன், 'புதிய நந்தன்', மு. நூ., ப. 12.

83 Gandhi, M.K., *Harijan*, dt. 5-1-1934.

84 Gandhi, M.K., *Young India*, dt 14-1-1926.

85 ஸரோஜா ராமமூர்த்தி, 'ஒரு துளி', மு. நூ., ப. 270.

86 Gandhi, M.K., *Young India*, dt. 6-8-1931.

87 து. ரா., 'குணம்', மு. நூ., ப. 76.

88 Gandhi, M.K., *Young India*, dt. 5-11-1925.

89 சிதம்பர ரகுநாதன், 'இழி தொழில்', **காந்திவழிக் கதைகள்**, கல்யாணராமன், கே.ஆர்., (தொ.ஆ.), ப. 124.

90 வேங்கடராஜுலு, ரா., (ப.ஆ.), **மகாத்மா காந்தி நூல்கள்**, தொகுதி 6, வேங்கடராஜுலு, ரா., (மொ.பெ.ஆ.), ப. 555.

91 சிதம்பர ரகுநாதன், 'இழி தொழில்', மு. நூ., பக். 126-127

92 வேங்கடராஜுலு, ரா., (ப.ஆ.), **மகாத்மா காந்தி நூல்கள்**, தொகுதி 6, வேங்கடராஜுலு, ரா., (மொ.பெ.ஆ.), ப. 554.

93 புதுமைப்பித்தன், 'புதிய நந்தன்', மு. நூ., ப. 13.

94 ஸரோஜா ராமமூர்த்தி, 'ஒரு துளி', மு. நூ., ப. 268.

95 மேலது, ப. 276.

96 து. ரா., 'குணம்', மு. நூ., ப. 78.

97 கல்கி, 'விஷ மந்திரம்', **சாரதையின் தந்திரம்**, ப. 153.

98 மேலது, ப. 155.

99 Gandhi, M.K., *Harijan*, dt. 4-5-1934.

100 Ibid, dt. 19-12-1936.

101 ராமையா, பி.எஸ்., 'புதுமைக் கோயில்', **புதுமைக் கோயில்**, ப. 36.

102 மேலது, ப. 49.

103 ராஜாஜி, 'ஜகதீச சாஸ்திரிகள் கனவு', **ராஜாஜி கதைகள்**, ப. 81.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

104 ராஜாஜி, 'அறியாக் குழந்தை', ராஜாஜி கதைகள், ப.190.

105 மஹி, 'சமானன்', ஜாலக்கடல், ப. 97.

106 ஸரோஜா ராமமூர்த்தி, 'ஒரு துளி', மு. நூ., ப. 270.

107 அகிலன், 'சாதி', பசியும் ருசியும், ப. 67.

108 கல்கி, 'விஷ மந்திரம்', மு. நூ., ப. 149.

109 து. ரா., 'குணம்', மு. நூ., ப. 77.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

4

2. காந்திவழிக் கதைகளில் பெண்டிர் நலன்

ஆய்வுக்குரிய 'காந்திவழிக் கதைகள்' என்ற தொகுப்பு நூலில் அமைந்துள்ள கதைகளில், காந்தியச் சமுதாய நெறிகளுள் மற்றொன்றான பெண்டிர் நலன் பற்றிய ஆய்வு இந்நான்காம் இயலின் இரண்டாம் பகுதியில் இடம்பெறுகிறது.

பெண்மையின் சிறப்பைப் பேசாதார் இலர் எனலாம். சமயச் சான்றோருள் ஏசு[1], புத்தர்[2] போன்றோரும் பிறநாட்டுச் சான்றோருள் டால்ஸ்டாய்[3], பெர்னாட்ஷா[4] போன்றோரும் இதில் ஒத்தே உளர்.

தமிழ் இலக்கியங்களும் பெண்மையின் பெருமையைப் பெரிதும் போற்றியுள்ளன. ''பெண்ணின் பெருந்தக்க யாவுள?''[5] எனப் பெண் பிறப்பை விதந்தோதுகிறார் திருவள்ளுவர். மங்கை யராகப் பிறப்பதற்கு மாதவம் செய்திருக்க வேண்டும் என்பது தேசிகவிநாயகம்பிள்ளையின் கணிப்பு.[6] பெண்களை அடிமைப் படுத்தாது விடுதலை வாழ்வளிக்க வேண்டும் என்று கருதிப் ''பெண்ணுக்கு விடுதலை நீர் இல்லையென்றால் பின்னிந்த உலகினிலே வாழ்க்கையில்லை''[7] என எச்சரிக்கை விடுக்கிறார் பாரதியார். பெண்மைத் தன்மையே இறைமைத் தன்மை என்று சிறப்பிக்கிறார் திரு.வி.கலியாணசுந்தரனார்.[8] ''பெண்ணடிமை தீருமட்டும் பேசுந்திருநாட்டு மண்ணடிமை தீர்ந்து வருதல் முயற்கொம்பே''[9] என அறுதியிட்டு உரைக்கிறார் பாரதிதாசனார். பெண்மைக்குத் தக்க மதிப்பும் பெருமையும் தரும் நாட்டையே முன்னேற்றம் பெற்ற நாடாகக் கருதலாம் என்பது மு. வரதராச னாரின் கருத்து.[10]

பல்லாற்றானும் இங்ஙனம் சிறப்பிக்கப்படும் பெண்மையை அகிம்சையின் அவதாரம் எனப் போற்றுகிறார் காந்தியடிகள்.[11]

பெண்களின் நலனுக்கு வித்திட்ட காந்தியடிகளின் சிறப்பு

இல்லினுள் இருப்பதற்குரியவள் என ஒதுக்கப்பட்ட பெண் களுக்குக் காந்தியடிகள் விழிப்புணர்வூட்டினார்; ஆடவர்க்கும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பெண்டிர்க்கும் உணர்வும் ஆன்மாவும் ஒன்றே என்று எடுத்துரைத்தார்.[12] அவர் பெண்களின் தாழ்வு மனப்பான்மையைப் போக்கத் தூண்டியதை எடுத்துரைக்கிறார் திவாகர்.[13] அகிம்சையை எல்லாத் துறைகளுக்கும் அவர் கைக்கொண்டதால் பெண்களின் ஆற்றலைத் தூண்ட முடிந்தது; இது காந்தியடிகளின் சிறப்பு எனக் குறிப்பிடுகிறார் வினோபா.[14]

மேலும் அவர், நாட்டு விடுதலைக்கான சத்தியாக்கிரகத்தில் பெண்களை ஈடுபடச் செய்து அவர்கள் மதிப்பை உயர்த்தினார். உலக அமைதிக் கலையைக் கற்பிக்கும் வாய்ப்பு, பெண்களுக்கே உண்டு என எண்ணிய அவர் சத்தியாக்கிரகத்திற்குப் பெண்கள் தலைமை வகிக்கலாம் என்றார்.[15] மக்கள் நலனில் அக்கறை கொண்டு நிருமாணத் திட்டங்களை மேற்கொள்ளவும் சமூகத் தீமைகளைக் களையவும் மகளிர்க்கு ஊக்கமளித்தார். அன்பு வழியை மேற்கொள்ளும் பெண்கள் மறியல்களில் சிறப்பாக ஈடுபடத் தூண்டினார்.[16] மிக இழிந்தவர்களையும் எதிர்க்கும் ஆற்றல் தலைசிறந்த நியாய சக்தியாக விளங்கும் பெண்களிடம் இருப்பது கண்டு கள்ளுக்கடை மறியல், அந்நியத் துணி மறியல் ஆகியவற்றிற்கு அவர்களை அனுப்பி வைக்கக் காந்தியடிகள் முடிவெடுத்ததை வினோபா சுட்டுகிறார்.[17] இந்நிலையில் பெண்களை அச்சத்தினின்றும் விடுவித்தார் காந்தியடிகள்.

அவருக்குப் பெண் சக்தியிலிருந்த அளப்பரும் நம்பிக்கை, பல பெண்களை அவர்திட்டத்தை மேற்கொள்ள ஈர்த்தது. குழந்தையைப்பெறவும் ஆடவர்க்கு ஊழியம் செய்யவும் மட்டும் தகுதியுடையவள் பெண் எனக் கருதப்பட்ட நாட்டில், பாபு பெண்களிடம் பாராட்டிய உயர்ந்த மதிப்பே அவர்களை உளமாரக் கவர்ந்தது என்கிறார் ராஜகுமாரி அமிருத் கௌர்.[18] பெண்களுக்கிழைக்கப்படும் கொடுமைகளையும் அகிம்சை வழியிலேயே போக்க அறிவுரை கூறும் பாங்கும் காந்தியடிகளின் சிறப்பை எடுத்துரைக்கும்.[19]

பெண்களின் நலன் குறித்துக் காந்தியடிகளின் கருத்துகள்

பெண்களின் சம உரிமைகளை மறுப்பதாக மனுநூல் கூறியிருப்பின் அது வேதவாக்கன்று என்கிறார் காந்தியடிகள்.[20] குறிப்பிட்ட பணிகளைப் பெண்களே செய்யவேண்டும் என வற்புறுத்தக் கூடாது என்றும் அவர்களின் தனித் திறமையின்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

காரணமாகக் குடும்பங்களைக் கவனித்தல், குழந்தைகளை வளர்த்தல் ஆகிய பணிகளைத் தாமே மேற்கொள்ளவேண்டும் என்றும் தெரிவிக்கிறார்.[21] பெண்கள் துப்பாக்கி ஏந்துவதோ, வெளிவேலைக்குச் செல்வதோ வேண்டாதது என்பது அவர் கருத்து.[22]

வரதட்சணையை எதிர்க்கவும்[23] தாம் விரும்பியபடி கணவரைத்தேர்ந்தெடுத்துக்கொள்ளவும் ஊக்கமளிக்கிறார்.[24] கணவருக்கு அடிமையாக இராமல் அவர் செய்யும் பாவத்திற்கு உடன்படாமல் அவர்களைத் திருத்தவும் அவர்களிடமிருந்து பிரிந்து வாழவும் பெண்களுக்கு உரிமை வேண்டும் எனக் குரல் கொடுக்கிறார்.[25] விதவையர் மறுமணம் செய்து கொள்ள விரும்பினால் அனுமதிக்கப் படவேண்டும்[26] என்றும், இளைஞர்கள் அவர்களைத் திருமணம் செய்து கொள்ள முன்வர வேண்டுமென்றும் அறைகூவல் விடுக்கிறார்.[27]

வழுக்கி விழுந்த பெண்கள் விபசாரத் தொழிலைக் கைவிட்டு, நூற்றல், நெய்தல் போன்ற ஏதேனும் ஒரு நல்ல தொழிலை மேற்கொண்டு மானத்துடன் வாழ வற்புறுத்துகிறார்.[28] பலவந்தமாகக் கடத்தப்பட்ட பெண்கள் மாசற்றவர்கள் என்று கூறி, அவர்களுக்கு இரக்கம் காட்டி வாழ்க்கையளிக்க வேண்டுகிறார்.[29] தேவதாசிகள் என்ற பெயரில் மானக்கேடான வாழ்வு நடத்தும் பெண்களை அதனின்றும் மீட்பது சமுதாயத்தின் பொறுப்பாகும் என்றும் குறிப்பிடுகிறார்.[30]

காந்தியடிகளின் நேரிடைப் பங்கு

பெண்களின் நலன் காக்க முற்பட்ட காந்தியடிகள், அதன் வழி மனித சமுதாயம் முழுமைக்கும் பாடுபட விழைந்தார். அவர் பெண் தலைவியர் பலரை உருவாக்கினார்.[31] பெண்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளைத் தம் எழுத்துகளிலும் பேச்சுகளிலும் படம் பிடித்துக் காட்டி அவற்றை விலக்கத் துணிவு பெறச்செய்தார்.[32] பெண்கள் திருமண வாழ்விலும் தன்னடக்கத்தை மேற்கொண்டு நாட்டுப் பணிக்கு ஏற்ற மக்களை அளிக்க வேண்டினார்.[33] எழுத்தாளர் பெண்களைத் தவறாகச் சித்திரிப்பதை எதிர்த்தார்.[34] அந்நியத் துணி எதிர்ப்பிலும் ஈடுபட அறைகூவல் விடுத்தார்.[35] உப்புச் சத்தியாக்கிரகத்தில் பெண்களைப் பங்கேற்கச் செய்தார்.[36] பெண்டிர்தம் நலனுக்காகவே கஸ்தூரிபா பெயரில் நிறுவனம் அமைத்தார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இவ்வாறு பெண்களின் நலன் காக்கக் காந்தியடிகள் உழைத்ததை, ''பெண்ணினத்திற்காகத்தானே நான் பாடுபடு கிறேன். அவர்களுக்கும் அவர்கள் மூலம் மனித இனம் முழுவதற் கும் இன்னும் அதிகப் பணி புரியப் போதிய தூய்மை வேண்டு-மென்றுதான் என் ஆன்மாவை நான் வருத்திக்கொண்டிருக் கிறேன். என் உயிர்நாடியான அகிம்சை, இப்பொறுப்புகளை எனக்குத் தருகிறது''[37] என்ற அவர்தம் கூற்றே புலனாக்கும்.

இனி, 'காந்திவழிக் கதைகள்' என்ற தொகுப்பு நூலில் அமைந்துள்ள கதைகளில் பெண்டிர் நலன் பற்றிய ஆய்வு இடம்பெறுகிறது.

பெண்டிர் நலன் பற்றி விளக்க அமைந்துள்ள கதைகள்

'பெண்டிர் நலன்' என்ற இக்கொள்கையை விளக்க அமைந்துள்ள கதைகள் ரா. பாலகிருஷ்ணனின் 'மனிதருள் ஒரு தேவன்', வேனாவின் 'ஆண் பிரிய வாழாது', கு. ப. சேது அம்மாளின் 'சோதனை', கோமதி சுப்பிரமணியத்தின் 'சட்டத் திற்கு வாழ்க்கைப்பட்டவள்' ஆகியனவாகும்.

கதைச் சுருக்கமும் கருவும்

'மனிதருள் ஒரு தேவன்' என்ற கதையில் இராணுவ அதிகாரி மல்ஹோத்ரா என்பவர் தம் சிற்றூருக்குச் சென்ற போது, இனக் கலவரத்தால் ஊராருடன் தம் குடும்பம் அழிந்த தைக் கேள்வியுற்று வருந்தித் திரும்புகிறார். அக்கலவரத்தில் தன் பெண்மையை இழந்த ஸாரா என்பவளை மறுமணம் செய்து கொள்கிறார். கொடுக்கப்பட்ட பெண்ணுக்கு மறுவாழ்வு தருதல் இக்கதைக் கருவாகும்.

'ஆண் பிரிய வாழாது' என்பதில் தாசி குலத்தவளான குமுதத்தை அன்புடன் ஏற்ற அம்பலவாணன், அவளுடன் உரையாடியவர் அவள் தமையன் என்பதை உணராமல் ஐயங் கொள்கிறார். மறுமணம் செய்து கொண்ட அவர், அவளைப் பற்றிய உண்மை அறிந்து ஏற்க முற்பட, அவளோ மறுத்து உயிர் துறக்கிறாள். தேவதாசி தன்னை ஏற்பவனுக்கும் கற்பில் பொது நிலை விரும்புவது கதைக் கருவாக உள்ளது. தேவதாசி கள் பிற பெண்களைப் போல நல்ல உணர்ச்சியும் ஒழுக்கமும் உடையவர்கள் என்றும்,[38] பெண்ணும், ஆணும் ஒருவருக்கொரு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வர் சரிபாதி என்றும்[39] ஒத்துக்கொள்ளும் காந்தியடிகள் கருத்துகளை இக்கரு உள்ளடக்கியுள்ளது.

'சோதனை' என்ற கதையில் காந்தி கிராம ஆசிரமத்தில் தொண்டு புரியும் இளம் விதவை சியாமளாவைச் சீர்திருத்த மணம் புரிந்து கொள்கிறான் சந்திரன் என்ற காந்தியத்தொண்டன். தந்தையின் எதிர்ப்பு நீங்கவும் குடும்பத்தில் மகிழ்ச்சி ஏற்படுகிறது. எப்படியும் ஒரு விதவையைத் தேடியே மணப்பதற்கு இளைஞர்கள் உறுதி செய்திடல் வேண்டும் என்ற காந்தியடிகள் கூற்று நினைத்தற்குரியது.[40] 'விதவை மறுமணத்தை ஏற்பது மகிழ்ச்சிகரமானது' என்பது இக்கதையின் கரு.

'சட்டத்திற்கு வாழ்க்கைப்பட்டவள்' என்ற கதையில் அடுத்தவளை விரும்பும் கணவனுக்குச் சட்டத்தின்படி விடுதலை அளிக்கும் சாரதா, மறுமணம் செய்து கொள்ளத் தமையன் சரவணன் வற்புறுத்த, மறுக்கிறாள். 'உண்மை அன்பில்லாத திருமணங்களைப் பெண்கள் மறுக்க உரிமையுண்டு' என்பது இக்கதையின் கரு. பெண்களுக்குத் திருமணத்திலும் மறுமணத்திலும் உரிமை வேண்டும் என்கிறார் காந்தியடிகள்.[41]

கதைப் பின்னலில் கொள்கையைப் புலப்படுத்தல்

இக்கதைகளில் கதைப் பின்னல்களுக்குரிய தனிமனித அகப்புறப் போராட்டங்களின் விளைவாகப் பெண்டிர் நலன் பேணப்படல் வேண்டும் என்பது வலியுறுத்தப்படுகிறது.

பாத்திரப் படைப்பு

பலவந்தத்திற்கு ஆளாகும் பெண்கள்மீது எவ்வித மாசும் இல்லை என்று குறிப்பிடும் காந்தியடிகள், அவர்களுக்குத் தகுதியான கணவன்மார்களைத் தேடிக் கொடுக்கவேண்டும் என்கிறார்.[42] அவரது கூற்றிற்கேற்ப 'மனிதருள் ஒரு தேவன்' என்ற கதையில் மல்ஹோத்ரா, ஸாராவிற்கு வரன் தேடியலைந்து இறுதியில் அவள் கருவுற்றிருப்பதை அறிந்து, ''நானே அவளை மணப்பதுதான் அவளுக்கு வாழ்வளிக்கும் ஒரே வழி என்று புரிந்து கொண்டேன்''[43] என முடிவெடுத்து அவளை மணந்து கொள்கிறார்.

தேவதாசி சமூகத்தின் தீமைகளுக்கு உட்பட மறுக்கவேண்டும் என்ற காந்தியடிகளின் கூற்றிற்கேற்பத்[44] தன்னை ஏற்றவர் வேறொருத்தியை மணந்தபின் மீண்டும் தன்னிடம் வரும்போது,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கொள்கை உறுதிப்பாட்டுடன் அவரைக் குமுதம் மறுக்கிறாள். 'ஆண் பிரிய வாழாது' என்ற கதையின் இப்பாத்திரம் தாசியே யாயினும் கற்பு என்பது ஆடவர்க்கும் பெண்டிற்கும் பொதுவே என்பதை நிலைநாட்டப் படைக்கப்பட்டுள்ளது.

தேவதாசியை மணப்பவர் ''அவர் மீதும் அவர் மனைவி மீதும் மற்றவர்களுக்கு உள்ள வெறுப்பைப் பொருட்படுத்தாமல் வாழ்க்கையை நடத்த வேண்டும்''[45] என்ற காந்தியடிகளின் கூற்றின்படி அமையாதவர் அம்பலவாணன். குமுதாவை ஊரார் இழிவாகப் பேசிய பேச்சுக்குச் செவி சாய்த்தமையே திடீரென அவளை ஐயுறச்செய்து வேறொருத்தியை மணம் செய்வதற்குக் காரணமாகும். கற்பின் திறம் அவளுக்கும் தமக்கும் பொது என்பதைச் சிந்திக்காமல் மறுமணம் செய்த செயல், இழிந்த நோக்கிற்காகத் தாசியைப் பயன்படுத்திய அவரது போக்கை உணர்த்தும்.

'சோதனை' என்பதில் சந்திரன் சாந்திநிகேதனத்தில் மாணவனாகவும் காந்தி கிராமத்தில் பொது நலத் தொண்டனாக வும் எளிய வாழ்க்கை வாழ்ந்து வருபவன். ''...காந்தி மகானின் கொள்கைகளில் பற்றுள்ளதால் சீர்திருத்த மணம் செய்து கொண் டீர்கள்...''[46] என்ற சியாமளாவின் கூற்றானது காந்தியத்தைச் செயற்படுத்திய அவனது போக்கைத் தெளிவாக்கும். இக்கதை யில், ''உள்ளூர் காந்தி கிராமத்தில் சேர்ந்து பொதுப்பணியில் தன்னை அர்ப்பணித்துக்கொண்டாள்..''[47] என்ற ஆசிரியரது கூற்றுச் சியாமளாவின் காந்தியப் பற்றைப் புலப்படுத்தும். காந்திய அகிம்சையைப் பயன்படுத்தி மாமியாரிடம் நல்லபெண் என்ற பெயரெடுக்கும் அவள், குடும்ப மகிழ்ச்சிக்குக் காரணமாகிறாள்.

''...அந்த நாட்களில் நீங்களும்தான் காந்தியின் அஹிம்சை, சத்தியம், பரோபகாரம், அஞ்சாமை ஆகியவற்றைப் பிரமாத மாகப் புகழ்ந்து கொண்டாடியவர்தானே''[48] என்று சந்திரனின் தாய் தன் கணவனிடம் கூறுவது, முன்பு அவர் காந்தியப்பற்று டையவராக இருந்ததையும் இன்று விதவையை மருமகளாக ஏற்க மறுக்கும் நிலையில், நடைமுறையில் காந்தியத்தைப் புறக்கணிப் பவராக இருப்பதையும் தெளிவாக்கும். இறுதியில் மனம் மாறும் அவரது போக்கு, கதைக் கொள்கையின் வெற்றியைப் புலப் படுத்தும். அவர் தாய் தொடக்கத்தில் விதவையை மருமகளாக ஏற்க விரும்பாவிடினும் இறுதியில் உடன்படுகிறாள் என்பது,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

''...நல்ல பெண்ணாக இருக்கவேதான் ஏதோ செய்து கொண் டான்.... காலத்தையும் அனுசரித்துத்தானே போகவேண்டும்?''[49] என்ற அவளது கூற்றால் புலனாகும். கதைக் கருவிற்கேற்றபடி விதவை மறுமணத்தை மகிழ்வுடன் ஏற்கும் பாத்திரமாக அவள் அமைகிறாள்.

'சட்டத்திற்கு வாழ்க்கைப்பட்டவள்' என்ற கதையில் ''... தன்னுடைய எதிர்ப்பு ஓர் உயரிய இலட்சியத்திற்காக என்று மனைவி நினைக்கும்போது தன் வழிப்படி சென்று விளைவுகளை ஏற்றுக் கொள்ள அவளுக்கு முழு உரிமை இருக்கிறது''[50] என்ற காந்தியடிகளின் கருத்திற்கு ஏற்பக் கணவனின் இன்ப வாழ்விற் காகவே மணமுறிவு செய்பவளாகவும் சாரதா அமைகிறாள். மேலும் மறுமணம் செய்வதற்கு விரும்பாத இலட்சியத்தில் உறுதியாய் நின்று தன் தமையனிடம் உரிமையை நிலை நாட்டு கிறாள்.

இக்கதையில் காந்திய நெறிக்குப் புறம்பானவனான சரவணன், ''...உன் கணவருக்கு எப்படி இன்னொரு பெண்ணை நேசிக்க உரிமை இருந்ததோ அதைப் போலவே உனக்கும் இன்னொருவனை மணந்துகொள்ளவும் உரிமைஉண்டு...''[51] என்று கூறி மறுமணத்திற்குக் கட்டாயப்படுத்துவதன் வாயிலாகப் பெண்மையின் தன்னுணர்வுக்கு மதிப்பளிக்க மறுப்பது புலனாகும். இவன் படைப்பு, சாரதாவின் உரிமையை நிலைநாட்டும் கொள்கைப் பிடிப்பை உணர்த்த உதவுகிறது.

பாத்திரப் படைப்பு—ஒரு மதிப்பீடு

பெண் சமுதாயம் நலன் அடைய உழைத்தவர் காந்திய டிகள். பெண்ணலம் குறித்துப் பல கருத்துகளை வழங்கியிருக்கி றார் அவர். இக்கதைகளில், காந்தியடிகள் போற்றிய பெண் மையை மதித்துப் பெண் நலனுறச் செயற்பட்டவர்களுள் மல்ஹோத்ரா, பெண்மையை இழந்தவளுக்கு வாழ்வளிக்க முன் வந்து அவளை மணம் புரிந்து கொள்கிறார். குடும்பத்தில் எல் லோரையும் இழந்து துன்புறும் நிலையில், களங்கப்படுத்தப்பட்ட ஸாராவிற்கு மணம் செய்விக்க முயன்று, அவள் கருவுற்றிருக்கி றாள் எனத் தெரிந்ததும் தாமே மணக்க முன்வந்த மல்ஹோத் ராவின் படைப்பு உள்ளத்தைத் தொடுவதாக உள்ளது. பொது வாகச் சீர்திருத்த மணத்திற்குப் பெற்றோரின் எதிர்ப்புகள் இருக்கும் நிலையில், சந்திரனுக்கும் அவ்வாறு எதிர்ப்பு இருப்பி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

னும் இறுதியில் தாய் அதற்கு இசைவதுடன் தன் கணவனையும் அமைதிப்படுத்துகிறாள். அவ்வகையில் புரட்சிகர உள்ளம் கொண்ட அத்தாயினது படைப்புப் பெருமைக்குரியதாகிறது.

பெண்களுள் உரிமையை நிலைநாட்டுபவர்களாகக் குமுதம், சாரதா போன்றவர்கள் முன்னணியில் அமைந்துள்ளனர். தேவ தாசி எனினும் தன்னை ஏற்ற அம்பலவாணனுக்கும் தன்னைப் போல் பிறழாக் கற்பு இல்லையே என்று அவரை மறுக்கும் உரிமையுடையவளாகக் குமுதம் அமைகிறாள். அவள் தன்னை மாய்த்துக் கொள்வதன் மூலம், ஆணுலகத்திற்கும் கற்பு இல்லையெனில் பெண்ணுலகு அவதியுறும் என்பதையும்உணர்த்துகிறாள். சாரதா தன் கணவனது நலன் கருதி அவனிடமிருந்து சட்டப்படி பிரியுமளவிற்கு உரிமை பெற்றவளாகத் திகழ்கிறாள். அவ்வுரிமையை நன்னெறியில் நிலைநாட்ட முற்படாத தமையனை எதிர்த்து மேலும் பெண்ணுரிமையை வலிவுறச் செய்கிறாள்.

உத்திகள்

கொள்கையை விளக்கும் உரை

'ஆண் பிரிய வாழாது' என்பதில், "இது அவள் உள்ளம் மட்டும்தானா? 'கற்பு நிலையென்று சொல்ல வந்தார். இரு கட்சிக்கும் அஃது பொதுவில் வைப்போம்' என்ற மனிதத்துவம் நிரம்பிய புதுமையின் குரல் அல்லவா?"[62] என்ற பகுதி கொள்கையை விளக்க வந்த பிரசாரமாகும்.

அணுகுமுறை

பெண்ணுரிமை அபலைக்கு மறுமணம் நிகழ்த்த உதவுவதாலும் ('மனிதருள் ஒரு தேவன்'), பெண்மையின் விழிப்புணர்ச்சி ஆணுக்குப் பெண் தாழ்ந்தவளல்ல என்ற கொள்கை உறுதிப்பாட்டில் நிற்க வழிவகுப்பதாலும் ('ஆண் பிரிய வாழாது'), பெண் முன்னேற்றம் விதவை மறுமணத்திற்கு இடமளிப்பதாலும் ('சோதனை'), பெண்ணுரிமை சாரதாவின் மணவாழ்வை வகுத்துக் கொள்ள உதவுவதாலும் ('சட்டத்திற்கு வாழ்க்கைப்பட்டவள்') இந்நான்கு கதைகளிலும் 'நேர்முக அணுகு முறை' கொள்கையைத் தெளிவாக்க உதவுகிறது.

இக்கதைகளில் பெண்டிர்க்கு அளிக்கப்படும் உரிமைகளால் விளையும் நன்மைகளை எடுத்துக்காட்டி, பெண்டிர் நலன்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அட்டவணை : 7 பெண்டிர் நலன் – கதைமாந்தர்

எண்	கதைகள்	காந்திய வழியில் அமைபவர்	காந்திய வழியில் அமையாதவர்	காந்திய வழியில் அமையாமல் இறுதியில் மனமாற்றம் அடைபவர்
1	'மனிதருள் ஒரு தேவன்'	மல்ஹோத்ரா	—	—
2	'ஆண் பிரிய வாழாது'	குமுதம்	அம்பலவாணன்	—
3	'சோதனை'	சந்திரன், சியாமளா	—	சந்திரனின் பெற்றோர்
4	'சட்டத்திற்கு வாழ்க்கைப்பட்டவள்'	சாரதா	சரவணன்	—

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

காத்தல் இன்றியமையாதது என்பதை வலியுறுத்துவது சிறப்பாக உள்ளது.

கொள்கையை விளக்க உதவும் தலைப்பு

மணமாகுமுன் தாய்மை நிலையடையும் கொடுமைக்கு ஆளான ஸாராவை மணந்து கொண்ட மல்ஹோத்ரா, மிகுந்த பெருமைக்குரியவர் என்ற பொருளை உள்ளடக்குகிறது 'மனிதருள் ஒரு தேவன்' என்ற தலைப்பு. கற்புடையவளாக வாழ்ந்த குமுதம் தன்னை ஏற்ற அம்பலவாணன் கற்பு நெறி பிறழ்ந்தபோது [தன்னைவிட்டு வேறொரு பெண்ணை மணந்தபோது], தன்னையே மாய்த்துக் கொள்கிறாள். கற்புநெறி ஆணிடமிருந்து பிரியின் பெண் உயிர் வாழாள் என்ற கருத்தை உள்ளடக்குகிறது, 'ஆண் பிரிய வாழாது' என்ற தலைப்பு. 'சோதனை' என்ற கதையில் விதவை மறுமணத்தை ஏற்று மகிழ்ச்சியடைவதற்கு முன்பு சந்திரனின் பெற்றோர் ஏற்பாரோ ஏற்க மாட்டாரோ என்ற சிறிய சோதனை சியாமளாவின் வாழ்வில் ஏற்படுவதைக் குறிப்பிடு கிறது அத்தலைப்பு.

அரசுச் சட்டத்திற்கு மேலாக மனச்சாட்சி சட்டத்தை ஏற்று நடப்பது காந்திவழி.[53] சட்டப்படி கணவனிடமிருந்து விலக்குப் பெற்றவள், மனச்சாட்சி சட்டத்திற்கு வாழ்க்கைப்பட்டாள் என்ற பொருளில் 'சட்டத்திற்கு வாழ்க்கைப்பட்டவள்' என்ற தலைப்பு அமைகிறது.

காந்தியடிகளின் கருத்தை நினைவுறுத்தல்

'சோதனை' என்ற கதையில் விதவைப் பெண்ணையே மணக்க ஆடவர் உறுதி செய்து கொள்ள வேண்டும்[54] என்ற காந்தியடிகளின் கூற்றை நினைவுறுத்துமாறு ''ஓர் அபலைப் பெண்ணுக்கு வாழ்வளிக்க உறுதி பூண்டேன்''[55] என்ற சந்திரனின் கூற்று அமைகிறது. இக்கதையில் மாமியின் மனத்தைப் புண் படுத்தாமல் தன்னை ஏற்குமாறு மாற்றிய சியாமளா ''நானும் மகாத்மாவின் அடிச்சுவடு பற்றி வருபவள்தானே? பிறர் மனம் நோக நான் சகிக்கமாட்டேன்....''[56] என்று கூறுவது காந்தி யடிகளின் அகிம்சைக் கருத்தை நினைவுபடுத்துகிறது. இது எண்ணத்திலும் துன்பம் இழைக்காததே அகிம்சை என்ற காந்தி யடிகளின் கருத்தை நினைவுபடுத்துகிறது. இவ்வாறு காந்தியத் தாக்கத்தைப் புலப்படுத்துகிறார் ஆசிரியர்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

காந்தியடிகளின் கருத்தைச் செயற்படுத்தல்

'மனிதருள் ஒரு தேவன்' என்பதில் ''மகாத்மாஜியின் சொல்லைச் செயலாக்கி வாழ்ந்து காண்பித்த உத்தமர் மல்ஹோத்ரா...''[57] என்ற பகுதி கொடுமை இழைக்கப்பட்ட [கற்பை இழந்த] அவள் நம் இரக்கத்திற்குரியவள். அவள் துன்பத்தைப் போக்கவேண்டும் என்று குறிப்பிட்டுள்ள[58] காந்தியடிகளின் கருத்தினைச் செயற்படுத்தியவர் மல்ஹோத்ரா என்பதைப் புலப்படுத்தும்.

தொண்டர்கள் எளிமை மிகு வாழ்வை நடத்த வேண்டும் என்பது காந்தியடிகளின் கருத்து. அவரது கருத்திற்கேற்பச் சாந்திநிகேதனத்தில் மாணவனாகக் கல்வி கற்றபோதும், காந்தி கிராமத்தில் பொது நலத் தொண்டனாகப் பணியாற்றியபோதும் சந்திரன் எளிய வாழ்க்கை நடத்துபவனாக இருந்தான் என்பது 'சோதனை' என்ற கதையில் சுட்டப்படுகிறது. இவ்வாறு காந்தியடிகளின் கருத்தைச் செயற்படுத்துமாறு பாத்திரத்தை அமைப்பதன் வாயிலாகக் காந்தியத் தாக்கம் உணர்த்தப்படுகிறது.

காந்தியடிகளின் உருவப்படம் இடம்பெறல்

'சோதனை'யில் ''...எனக்கு வாழ வழி வகுத்த மகான்...''[59] என்று சியாமளா காந்தியடிகளின் படத்தைக் குறிப்பிடுவது அபலையருக்கு வாழ வழி வகுத்த அவரது ஆளுமையை உணர்த்துவதன் வாயிலாகக் காந்தியச் செல்வாக்கைப் புலப்படுத்தும்.

காந்தியடிகளுடன் தொடர்புடையவை கதைகளில் அமைதல்

கீதை, தக்ளி, ராமநாமம் போன்ற காந்தியடிகளுடன் தொடர்புடையவற்றை இடம் பெறச் செய்வதன்வழிக் காந்தியத் தாக்கம் கதைகளில் அமைகிறது. 'மனிதருள் ஒரு தேவ'னில், ''கீதை முழுவதும் அவருக்கு மனப்பாடம். எவ்வளவு நெருக்கடியான சந்தர்ப்பத்திலும் அவர் நிதானமிழக்காமலிருப்பது எனக்கு வியப்பூட்டும்''[60] என்ற பகுதி கீதையின் சிறப்பை உணர்த்தும். சோதனைகள் ஏற்படும் காலத்தில்கூட நிதானம் இழக்காமல் இருக்கக் கீதை உதவும் என்று காந்தியடிகளும் குறிப்பிட்டுள்ளார்.[61] இக்கதையில் இடம்பெறும் ''...தக்ளியில், நூல் நூற்பவனின் விடாமுயற்சியையும் பொறுமையையும் காணலாம்''[62] என்ற

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தொடர், நூற்பவருக்குப் பொறுமை கிட்டும்[63] என்ற காந்தியடிகளின் கருத்தைச் சுட்டுகிறது.

'சோதனை' என்ற கதையில், ''எல்லாம் அவன் செயல் என்று நிர்ச்சிந்தையாக இருங்கள்... ராமநாமாவை ஜபித்துக் கொண்டு...''[64] என்று சந்திரனின் தாய் கூறுகிறாள். இது ''ராமநாமம் பற்றின்மையையும் பதறாமையையும் தந்து ஆபத்துக் காலத்தில் நிதானம் இழக்காதிருக்க உதவும்''[65] என்ற காந்தியடிகளின் இராமநாமக் கருத்தைத் தாங்கி நிற்கிறது.

காந்தியடிகளின் பெயரில் அமைபவை இடம்பெறல்

பொதுநலப் பணிக்கு இடமளிக்கும் காந்தியடிகளின் பெயரில் அமையும் காந்தி கிராமம், காந்தி இயக்கம் என்பன 'சோதனை' என்ற கதையில் இடம் பெறுவதன் வாயிலாகக் காந்தியத் தாக்கம் அமைகிறது.

'இனி, 'காந்திவழிக் கதைகள்' என்ற தொகுப்பு நூலில் இடம்பெறும் கதைகளைப் படைத்துள்ள ஆசிரியர்களால் எழுதப் பட்ட பிறகதைகளில், பெண்டிர் நலன் குறித்தமைந்துள்ளமை ஆய்வுக்கு அமைகிறது.

பெண்டிர் நலன் குறித்து அமைந்துள்ள பிற கதைகள்

கல்கியின் 'சுபத்திரையின் சகோதரன்' என்ற கதையில் 'பெண்டிர் நலன்' என்ற கொள்கை கதைக் கருவில் அமைகிறது. அவருடைய 'கமலாவின் கல்யாணம்', 'ஸ்ரீகாந்தன் புனர் ஜன்மம்' ஆகியவற்றிலும், அகிலனின் 'யார் தியாகி?' என்ற கதையிலும் கதைப்பின்னலில் கொள்கை விளக்கப்படுகிறது. பூவை எஸ். ஆறுமுகம் எழுதிய 'திருமதி சிற்றம்பலம்' என்ற கதையில் கொள்கை, கருத்துத் தொடரில் சுட்டப்படுகிறது.

'சுபத்திரையின் சகோதரன்' என்ற கதையில் நண்பன் இராஜகோபாலனின் சகோதரி சுபத்திரையை, மூன்றாந்தாரமாகக் கணபதி ஐயர் மணக்கவிருந்த திருமணத்தைத் தியாகு குழுவின ரால் தடுக்க முடியவில்லை. மணவிழாவிலேயே, கணபதி ஐயர் மரணத்திற்குக் காரணமாக இராஜகோபாலன் அமைய சுபத்திரை விதவையாகிறாள். பைத்தியமாகிச் சிறையில் உயிர் ஊசலாடும் நிலையில் இராஜகோபாலன் தன் தங்கையைத் தியாகுவின் கையில் ஒப்படைக்க அவளை மணந்து பெற்றோர்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

எதிர்ப்புக்கிடையில் வாழ்க்கை நடத்துகிறான் தியாகு. 'விதவைகளுக்கு மறுவாழ்வு தருவது' இதன் கதைக் கரு. "...பருவமடைந்த மங்கைகளையாவது... கைம்பெண்ணானவளையாவது மணம் செய்து கொள்வதாகப் பிரதிக்ஞை செய்கிறேன்"[66] என்று நண்பனுக்கு வாக்களித்ததற்கேற்ப, விதவை சுபத்திரையைமணந்து கொள்வது தியாகுவின் புரட்சிகரமான உள்ளத்தைக்காட்டும்.

'கமலாவின் கல்யாணம்' என்ற கதையின் பின்னலில், குழந்தை மணத்தடுப்பு இடம்பெறுகிறது. பன்னிரண்டு வயதுள்ள பெண்ணுக்கும் ஐம்பத்தைந்து வயதுள்ள கணபதிராம சாஸ்திரிக்கும் நடக்க இருந்த திருமணத்தைத் தடுக்கக் காந்தியவாதி கிருஷ்ணய்யர் ஒரு குழுவுடன் செல்லுகிறார். 'வந்தே மாதரம்', 'மகாத்மா காந்திக்கு ஜே', 'பால்ய விவாகம் ஒழிக'—என்று குரல் எழுப்பித் தொண்டர்கள் உடன்வரச் செல்லும் கிருஷ்ணய்யர், அகிம்சைவழியில் மாப்பிள்ளையின் மனத்தில் பதியுமாறு எடுத்துரைத்துத் திருமணத்தைத் தடுக்கிறார்.

'ஸ்ரீகாந்தன் புனர் ஜன்மம்' என்ற கதையின் பின்னலில் அமையும் "...இரண்டு ஸ்திரீ தொண்டர்களுடன் மறியலுக்குப் புறப்பட்டாள். புறப்பட்ட இடத்திலேயே அவர்களைக் கைது செய்து கொண்டு போனார்கள்"[67] என்ற பகுதி காந்தியப் போராட்டத்தில் பெண்களும் பங்கு பெற்றதைச் சுட்டுமாறு பெண் முன்னேற்றத்தை உணர்த்தும்.

அகிலனின் 'யார் தியாகி?' என்பதில் "...நாட்டு மக்களின் விடுதலைப் போர்... வேறொரு பக்கம் சகுந்தலா நின்று கொண்டாள்... 'வெள்ளையர்களின் ஆட்சியை இங்கே நடக்காமல் செய்வோம்', அல்லது எல்லோரும் செத்து மடிவோம், என்று முழங்கினார்கள்"[68] என்ற பகுதி கல்லூரி மாணவிகளும் விடுதலைப் போராட்டத்தில் பங்கு பெற்றமையைச் சுட்டும்.

'திருமதி சிற்றம்பலம்' என்ற கதையில் பெண்களுக்கு இழைக்கப்பட்ட தீமைகளைக் களைய முற்பட்டவர் காந்தியடிகள் என்ற குறிப்பு இடம்பெறுகிறது.

இக்கதைகளால் அறியப்படுவன

1. காந்தியடிகள் பெண்களைச் சமூகத் தீமைகளினின்றும் உய்விக்க முயன்றார்.

காந்தியடிகள் தாம் வாழ்ந்த காலத்தில் பெண்ணினத்திற்கு இழைக்கப்பட்ட சமூகத் தீமைகளினின்று அவர்களை உய்விக்க

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

முயற்சி செய்தமை, ''சமுதாயத் தீவினைகளுக்குப் பலியான பெண்களுக்குக் கைகொடுக்க அன்று ஒரு மகாத்மா வாழ்ந்தார்''[69] என்ற குறிப்பினால் தெளிவாகிறது.

2. அவர்வழில் பொதுநலப் பணியை மேற்கொண்டவர்கள் குழந்தை மண எதிர்ப்பில் ஈடுபட்டும் அபலையர்க்கு வாழ்வு தந்தும் புரட்சி செய்தனர்.

காந்தியடிகள் வாழ்ந்த காலத்தில் பெண் குலத்திற்கு மாசு ஏற்படுத்தும் வண்ணம் குழந்தை மணக்கொடுமையும் ('சோதனை' 'சுபத்திரையின் சகோதரன்', 'கமலாவின் கல்யாணம்'), அதன் விளைவாக ஏற்பட்ட விதவைக் கோலத்தீவினையும் ('சோதனை', 'சுபத்திரையின் சகோதரன்') இருந்தன.

அவர் வாழ்ந்த காலச் சூழலில் மேற்கூறிய இரு கொடுமைகளையும் தடுப்பதற்குக் காந்தியத்தில் தோய்ந்த முதியவர்களும் இளைஞர்களும் முன்வந்தனர். அவர்களுள் காந்தியடிகளின் விடுதலைப் போராட்டங்களில் கலந்து காந்திய வழியில் பொது நலப் பணியை மேற்கொண்டவர்களும் ('கமலாவின் கல்யாணம்') இருந்தனர். அப்பொதுநலப் பணித் தொண்டர்கள், இளம் பெண்ணை மணக்கவிருந்த முதியவரிடம் அத்தகைய மணத்தினால் விளையக் கூடிய தீமைகளை, '' ஒரு சின்னப் பெண் குழந்தையை இந்த வயதில் நீங்கள் கல்யாணம் செய்து கொண்டால் அந்தப் பெண் சந்தோஷமாக இருக்கமுடியுமா?... சம வயதுள்ள ஒரு விதவையை .. நாங்களே கிட்ட இருந்து நடத்தி வைக்கிறோம்''[70] என்று அகிம்சை வழியில் எடுத்துரைத்து மனமாற்றமடைய உதவினர்.

விதவைகளுக்கும், இனக்கலவரச் சூழலில் ஆடவரின் வெறித் தனத்தால் பெண்மையை இழந்தவர்களுக்கும் உள்ள இழிவைப் போக்கிச் சமூகத்தைச் சீர்திருத்தம் செய்ய இளைஞர்கள் முன்வரல் வேண்டும் என்ற காந்தியடிகளின் கருத்தைப் புரட்சிகரமான இளைஞர்கள் நடைமுறைப்படுத்தியமை கதைகளில் சுட்டப்படுகிறது. அந்த இளைஞருள் காந்தியடிகள் வாழ்ந்த காலத்தில் அவர் சொல்லைச் செயலாக்கும் நிலையில் புரட்சிகரமணம் செய்து கொண்டவரும் ('மனிதருள் ஒரு தேவன்'), அவர் வாழ்ந்த காலத்திற்குப்பின், அவருடைய கொள்கைகளால் ஈர்க்கப்பட்டுச் சீர்திருத்த மணம் செய்து கொண்டவரும் ('சோதனை') குறிப்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பிடப்படுகின்றனர். காந்தியம் சொல்லளவில் வெறும் இலட்சிய உரைகளாக இல்லை; செயலளவில் வாழ்ந்து காட்டுவதற்கு வழி காட்டியாக உள்ளது[71] என்பதை இவர்கள் சமுதாயத்திற்கு உணர்த்துகின்றனர்.

தம் குடும்பங்களில் சீர்திருத்த மணங்களுக்கு ஆதரவு தர விரும்பாதவர்களுள் காந்திய இயக்கத்தில் முன்னாளில் ஈடுபட்ட பெரியவர்களும் உள்ளனர். ஆயினும், தம் மக்களின் துடிப்பான செயற்பாட்டின் விளைவாக அவர்களின் எதிர்ப்பும் அமைதியடையும் நிலையில் ('சுபத்திரையின் சகோதரன்', 'சோதனை') அத்திருமணங்கள் நடைபெற்றமை தெளிவாகிறது.

3. விடுதலைப் போராட்டங்களில் பெண்களையும் ஈடுபடுத்திய பெருமை காந்தியடிகளுக்கு உண்டு.

காந்தியடிகள் போராட்டம் நிகழ்த்திய காலத்தில், தம் இல்லங்களில் ஒடுக்கப்பட்டிருந்த பெண்களும் தம் அடிமை விலங்கைத் தகர்த்தெறிபவர்போல் காந்தியப் போராட்டங்களில் ஈடுபட்டனர் ('யார் தியாகி?', 'ஸ்ரீகாந்தன் புனர் ஜன்மம்'). இது, பெண்களை விடுதலைப் போராட்டத்தில் ஈடுபடத் தூண்டிய பெருமைக்குரியவர் காந்தியடிகள் என்பதை உணர்த்தும்.

4. காந்தியக் கொள்கைகளின் தாக்கத்தால் சாதாரண குடும்பத்தினரும் சீர்திருத்த மணத்தை ஏற்றனர்.

காந்தியப்பற்று இல்லாவிடினும் சாதாரண குடும்பத்தின் தாய் ''அவன் முழுக்க முழுக்கக் காந்திக் கொள்கைகளைக் கடைப்பிடிப்பவன் — நல்ல பெண்ணாக இருக்கவேதான் ஏதோ செய்து கொண்டான், சந்தோஷமாக இருக்கட்டுமென்று விட்டு விட வேண்டியதுதான்......''[72] என்று கூறி விதவை மணத்திற்கு ஆதரவு நல்குவது, சராசரி மனிதர்களிடத்தும் காந்தியச் சீர்திருத்த மணம் முத்திரை பதித்ததை உணர்த்தும்.

பெண்டிர் நலன் பேணும் நிலையில் காந்தியடிகளின் காலத்திலும், அவர் காலத்திற்குப் பின்பும் காந்தியம் எதார்த்த வாழ்வில் கொள்கை வேரூன்றக் காரணமாக உள்ளதைத் தெளியலாம்.

குறிப்புகள்

1 ''...அவர்கள் ஆணும் பெண்ணும் இருவராயிராமல் ஒரே மாம்சமாயிருக்கிறார்கள் [ஒரே உரிமையுடையவர்கள்]''.
— பைபிள், புதிய ஏற்பாடு, மத்தேயு, *19.6.*

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

2 ''பெண்கள் சமூகத்தின் கௌரவச சின்னம்'',
— மேற்கோள் : லட்சுமணன், கே.எஸ்., 'புத்தரின் வாழ்வும் வாக்கும்', ப.44.

3 ''அன்பிற்கு இருப்பிடமாக, தியாகத்திற்கு உறைவிடமாக இருப்பவளே பெண்''.
— மேற்கோள் : காஞ்சனா, 'தற்காலத்தில் பெண்கள்', இளவேனில், தொகுதி 4, 1975, ப.117.

4 'உலகை உய்விக்க வந்த உயர்வான ஆத்மாக்களை அளித்தவளே பெண்''.
— மேற்கோள் : மேலது.

5 திருக்குறள், 64.

6 தேசிகவிநாயகம்பிள்ளை, சி., மலரும் மாலையும். 93.1.

7 திருநாவுக்கரசு. ஏ., (ப.ஆ.), பாரதியார் கவிதைகள், சுயசரிதை, பாரதி அறுபத்தாறு, 45.

8 கலியாணசுந்தரனார், திரு. வி., 'பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கைத் துணை, ப.301.

9 பாரதிதாசன், பாரதிதாசன் கவிதைகள், காவியம், 1.

10 வரதராசன், மு., பெண்மை வாழ்க, ப. 11.

11 Gandhi, M.K., *Harijan*, dt. 2 -2-1940

12 Ibid.

13 "He pointed out that Gandhiji wanted the people to be free from fear and urged women to shed their inferiority complex": — R. R. Diwakar in his speech at Madurai Gandhi Museum on 6-7-83.
— Indian Express 7-7-83.

14 விநோபா, மகளிர் மாண்பு, (மொ. பெ. ஆ. பெயர் குறிப்பிடப்படவில்லை), பக் 50-51.

15 Gandhi, M.K., *Harijan*, dt. 24-2-1940.

16 Gandhi, M.K., *Young India*, dt. 10-4-1930.

17 விநோபா, மு.நூ., ப.32.

18 ஜெயமணி சுப்பிரமணியியம், (ப.ஆ.), மகாத்மா காந்தி நூல்கள், தொகுதி 16, திரவியம், கா., (மொ.பெ.ஆ.), ப.349.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

19 Gandhi, M.K., *Young India*, dt. 21-6-1928.

20 Gandhi, M.K., *Harijan*, dt. 12-10-1934.

21 வேங்கடராஜுலு, ரா., (ப.ஆ.), **மகாத்மா காந்தி நூல்கள் தொகுதி 7**, வேங்கடராஜுலு, ரா., & ஜெயமணி சுப்பிரமணியம், (மொ.பெ.ஆ.), ப.490.

22 மேலது, ப.514.

23 மேலது, பக். 628-629.

24 Gandhi, M.K., *Young India*, dt. 7-10-1926.

25 Ibid, dt. 3-10-1929.

26 மகாத்மா காந்தி, **பெண்ணுரிமை**, உதயசங்கர், த.அர., & கந்தசாமி, சு.ரா., (தொ.ஆ), ப.37

27 வேங்கடராஜுலு, ரா., (ப.ஆ.), **மகாத்மா காந்தி நூல்கள், தொகுதி 7**.வேங்கடராஜுலு, ரா., & ஜெயமணி சுப்பிரமணியம், (மொ.பெ.ஆ.), ப.580.

28 மேலது, ப.593.

29 மேலது, ப.653.

30 மேலது, ப.605.

31 கமலா நேரு, மனுகாந்தி, ஆபாகாந்தி, ஆஷா தேவி, அரிய நாயகம், சுசேதா கிருபளானி, சௌந்திரம் இராமச்சந்திரன், சுசிலா நய்யார், சரோஜினி, அம்புஜம்மாள் முதலான பல தலைவியரை உருவாக்கினார்.

32 சென்னைப் பொது நலத்தொண்டர் டாக்டர், எஸ். முத்து லட்சுமிக்குப் பெண் முன்னேற்றங் குறித்து விளக்கம் எழுதியது எங் இந்தியா 23-5-1929 இதழில் வெளியாகியது. மலபாரி மண்டபத்தில் நடைபெற்ற பெண்கள் மகாநாட்டில் கலந்து கொண்ட பெண்ணிற்குப் பெண் உரிமைகளைக் குறித்து விளக்கம் எழுதியது, எங் இந்தியா 17-10-1929 இதழில் வெளியாகியது.

1918-இல் பம்பாய் பகினிசமாஜத்தின் ஆண்டுக் கூட்டத்தில் பெண்கள் மறுமலர்ச்சி பற்றி உரையாற்றினார். 1927-இல் கொழும்பில் சிங்களப் பெண்கள் கூட்டத்தில் பெண்கள் நகைகளை அணிதல் வேண்டா எனக் கேட்டுக் கொண்டார். அதே ஆண்டு யாழ்ப்பாணம் இராமநாதன் பெண்கள் பள்ளியில்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வரதட்சணையை எதிர்க்கத் தூண்டினார். வார்தாவில் உள்ள மஹிளா ஆசிரமப் பெண்களுக்கு அவர்கள் கடமைகளைக் குறித்து அறிவுறுத்தியது ஹரிஜன் *15-3-1942* இதழில் வெளியாகியது.

33 சமூகப்பணியில் ஈடுபட்ட பெண்ணிற்கு எழுதிய மடலுக்கு அளித்த விளக்கம் ஹரிஜன் *22-3-1942* இதழில் வெளியாகியது.

34 ஜோதி சங்கம் என்ற பெண்கள் இயக்கத்தைச் சேர்ந்தவர் எழுதிய மடலுக்கு அனுப்பிய விளக்கம் ஹரிஜன் *21-11-1936* இதழில் வெளியாகியது.

35 Tendulkar, D.G., *Mahatma, Vol. II*, p.56.

36 சியாமளா தங்கமணி, 'காந்தியுகத்தில் காந்தியடிகளும் பெண்களும்', **காந்தியடிகளும் பெண்களும்**, பாண்டியன், ச., (தொ.ஆ.), ப.*20*.

37 இராஜகுமாரி அமிருத கௌர் அவர்களுக்கு *8-7-1938*-இல் காந்தியடிகள் எழுதிய மடலில் உள்ள குறிப்பு.

38 வேங்கடராஜுலு, ரா.,(ப.ஆ,), **மகாத்மா காந்தி நூல்கள், தொகுதி 7**, வேங்கடராஜுலு, ரா., & ஜெயமணி சுப்பிரமணியம், (மொ.பெ.ஆ), ப. *605*.

39 மேலது, ப. *657*.

40 மேலது, ப. *580*.

41 Gandhi, M.K., *Young India*, dt. 7-10-1926.

42 Gandhi, M.K., *Harijan*, dt. 3-11-1946.

43 பாலகிருஷ்ணன், ரா., 'மனிதருள் ஒரு தேவன்', **காந்திவழிக் கதைகள்**, கல்யாணராமன், கே.ஆர்., (தொ.ஆ.), ப. *114*.

44 Gandhi, M.K., *Harijan*, dt. 14-9-1934.

45 Ibid.

46 சேது அம்மாள், கு.ப., 'சோதனை', **காந்திவழிக் கதைகள்**, கல்யாணராமன், கே.ஆர்., (தொ.ஆ.), ப. *397*.

47 மேலது, ப. *396*.

48 மேலது, ப. *397*.

49 மேலது, பக். *397-398*.

50 Gandhi, M.K., *Young India*, dt. 21-10-1926.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

51 கோமதி சுப்பிரமணியம், சட்டத்திற்கு வாழ்க்கைப் பட்டவள்', காந்திவழிக் கதைகள், கல்யாணராமன், கே.ஆர்., (தொ.ஆ.), ப. 448.

52 வேனா, 'ஆண் பிரிய வாழாது', காந்திவழிக் கதைகள், கல்யாணராமன், கே.ஆர்., (தொ.ஆ.), ப. 372.

53 மகாத்மா காந்தி, 'சத்திய சோதனை', வேங்கடராஜுலு, ரா., (மொ.பெ.ஆ.), ப. 419.

54 Gandhi, M.K., *Young India*, dt. 15-9-1927.

55 சேது அம்மாள், கு.ப., 'சோதனை', மு. நூ., ப. 396.

56 மேலது, ப. 397.

57 பாலகிருஷ்ணன், ரா., 'மனிதருள் ஒரு தேவன்', மு. நூ., ப. 114.

58 Gandhi, M.K., *Harijan*, dt. 1-3-1942.

59 சேது அம்மாள், கு.ப., 'சோதனை', மு. நூ., ப. 398.

60 பாலகிருஷ்ணன், ரா., 'மனிதருள் ஒரு தேவன்', மு. நூ., ப. 104.

61 வேங்கடராஜுலு, ரா., (ப.ஆ.), மகாத்மாகாந்தி நூல்கள், தொகுதி 11, ஜெயமணிசுப்பிரமணியம் (மொ.பெ.ஆ.), ப. 133.

62 பாலகிருஷ்ணன், ரா., 'மனிதருள் ஒரு தேவன்', மு. நூ., ப. 104.

63 Gandhi, M.K., *Young India*, dt. 27-5-1926.

64 சேது அம்மாள், கு.ப., 'சோதனை', மு நூ., ப. 398.

65 Gandhi, M.K., *Young India*, dt. 20-12-1926.

66 கல்கி, 'சுபத்திரையின் சகோதரன்', சாரதையின் தந்திரம், ப. 114.

67 கல்கி, 'ஸ்ரீகாந்தன் புனர்ஜன்மம்', கணையாழியின் கனவு, ப. 92.

68 அகிலன், 'யார் தியாகி?' சகோதரர் அன்றோ?, ப. 100.

69 ஆறுமுகம், பூவை. எஸ்., 'திருமதி சிற்றம்பலம்', திருமதி சிற்றம்பலம், ப. 49.

70 கல்கி, 'கமலாவின் கல்யாணம்', சாரதையின் தந்திரம், ப. 37.

71 Shriman Narayan, *Mahatma Gandhi-The Atomic Man*, p.1.

72 சேது அம்மாள், கு.ப., ''சோதனை', மு. நூ., ப. 398.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

4

3. காந்திவழிக் கதைகளில் ஒற்றுமை

ஆய்வுக்குரிய 'காந்திவழிக் கதைகள்' என்ற தொகுப்பு நூலில் உள்ள கதைகளில் விளக்கமுறும் 'ஒற்றுமை' என்பதும், காந்தியடிகள் காட்டும் சமுதாய நெறிகளுள் ஒன்றாகும். அதனைப் பற்றிய ஆய்வு இந்த நான்காம் இயலின் இப்பகுதியில் இடம் பெறுகிறது.

ஒற்றுமை ஆற்றல்

மனிதர் அனைவரும் ஒன்றே என்ற உணர்வு மக்களிடம் நிலவச் சமயங்கள் என்றும் விரும்புகின்றன. உலகிற்குத் தந்தையாகிய இறைவனுக்கு எல்லோரும் மக்களாவர் என்பது கிறித்தவத்தின் அடிப்படைக் கோட்பாடாகும்.[1] எல்லோரையும் சமமாகக் கருதுபவன் தலைசிறந்த பக்தன் என்று பாகவதம் இயம்பும்.[2] ஒற்றுமையின் சிறப்பைத் தமிழ் இலக்கியங்களும் வலியுறுத்துகின்றன. தமிழ்ச் சான்றோருள் ''சாதியிலே மதங்களிலே சமய நெறிகளிலே......அலைகின்ற உலகீர்''[3] எனச் சமய வெறியாளரைச் சாடுவார் இராமலிங்க வள்ளலார். ''எல்லாரும் இன்புற்று இருக்க நினைப்பதுவே''[4] உயர்வுடையது என்பது தாயுமானவரின் கருத்தாகும்.

''சாதி சமயம் பற்றிவரு சண்டை ஓய்ந்து மறைந்திடவே''[5] விழைகிறது கவிமணி தேசிகவிநாயகத்தின் உள்ளம் ''எல்லோரும் ஓர் இனம்''[6] என முழங்கும் பாரதியார் ''ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே''[7] என ஒற்றுமையின்மையின் விளைவையும் குறிப்பிடுகிறார். ''தொல்லுலக மக்களெல்லாம் 'ஒன்றே, என்னும் தாயுள்ளம் தனிலன்றோ இன்பம்''[8] என்று மகிழ்கிறார் பாரதிதாசன். ''எதிலும் ஒத்துமை கலைஞ்சதுன்னா வளர முடியுமா?''[9] என்ற வினாவின்வழி ஒற்றுமையின் சிறப்பை வலியுறுத்துகிறார் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்.

இவ்வாறு பலரால் வலியுறுத்தப்பட்ட ஒற்றுமைப் பண்பைத் தம் காலத்தில் மக்களிடையே நிறுவ முயன்றவர் காந்தியடிகள். மனிதஇன ஒற்றுமைக்காகப் பல கருத்துக்களை நல்கியவர் அவர். தம் காலத்தில் இந்தியாவில் ஒற்றுமையின்றி இந்துக்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

களும், முகமதியரும், சீக்கியரும் அல்லலுற்றபோது, அக்களத்தில் நேரிடையான பங்குகொண்டு அதற்காக உண்ணா நோன்பு மேற்கொண்டு ஒற்றுமையை நிலைநிறுத்திய பெருமை அவருக்குரியதாகும்.

காந்தியடிகளின் கண்ணோட்டத்தில் ஒற்றுமை

இந்திய நாட்டு மக்கள் அனைவரும் ஓர் இனம் என்ற உணர்வுடையவர் காந்தியடிகள். இந்தியாவைத் தங்கள் நாடாகக் கொண்டிருக்கும் இந்துக்கள், முகமதியர்கள், பார்சிகள், கிறித்தவர்கள் ஆகியோர் இந்நாட்டு மக்களே என்று கருதும் அவர், இவர்கள் யாவரும் தங்களுடைய நல்வாழ்வைக் கருதியாவது ஒன்றுபட்டு வாழ்ந்தாகவேண்டும்[10] என்று அறிவுரை பகர்கிறார். இறைவனைக் குரான், பைபிள், தால்மத், அவெஸ்தா, கீதை போன்ற அனைத்து மத நூல்களின்வழிக் காணுவதால் ஒருவர்க்கொருவர் பூசலிடத் தேவையில்லை;[11] எல்லோருக்கும் மத உணர்ச்சி இருப்பதால் மதத்துடன் விளையாடி இவ்வுணர்ச்சியின் அடிப்படையைத் தகர்த்துவிடக்கூடாது[12] என்ற அவர்தம் சிந்தனைகள், ஒற்றுமை மேற்கொள்ள வேண்டிய ஒன்று என்பதை உணர்த்தும்.

''ஒற்றுமையே பலம் என்பது ஏட்டுச் சுரைக்காய் அன்று, இது வாழ்க்கை விதி''[13] என்று முத்திரையிடும் அவர் மொழி அடிப்படையில் தமிழர் - இந்திக்காரர், வங்காளத்தவர் - பஞ்சாபி, குஜராத்தி எனவும், மத அடிப்படையில் இந்து, முகமதியர், பார்சி எனவும் குல அடிப்படையில் இந்துக்களிடையே பிராமணர், க்ஷத்திரியர், வைசியர் எனவும் கருதப்படும் வேற்றுமையுணர்வு நம்மை ஒவ்வொரு கட்டத்திலும் முன்னேற முடியாதவாறு தடுத்துவிடும் என எச்சரிக்கை விடுக்கிறார்.[14] பலதரப்பட்ட பிரிவினரின் நலனும் ஒன்றாகவே இருப்பதால் ஒருவர்க்கொருவர் பிரிவினைக் காழ்ப்புக்களை விட்டொழிப்பது நமது கடமை என வலியுறுத்துகிறார்.[15]

இந்தியாவைத் தாயகமாகக் கருதும் அனைவரின் ஒற்றுமையையும் இந்து முகமதியர் ஒற்றுமை குறிக்கும் என்று கணித்தவர் காந்தியடிகள்.[16] அந்த ஒற்றுமையே நாட்டு விடுதலைக்கு வழிவகுக்கும்;[17] நாடு முன்னேற உதவும்;[18] என்றெல்லாம் குறிப்பிடும் அவர், இந்தியாவின் உடனடியான எதிர்காலம் இந்து

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

முகமதியர் ஒற்றுமைக்குத் தேடும் தீர்வையே பொறுத்திருக்கிறது எனச் சுட்டுகிறார்.[19] ''அனைவரும் வாழ வேண்டும்; அமைதி நிலவ வேண்டும் என்னும் எண்ணத்தில் பிறந்திருப்பதால் இந்து முகமதியர் ஒற்றுமை இந்தியாவிற்கும் உலகிற்கும் ஒரு வரப்பிர சாதமாகும்''[20] என்ற காந்தியடிகளின் சிந்தனை மனித இன ஒருமைப்பாட்டிற்கு வழிவகுப்பதாகும்.

ஒற்றுமைக்கான காந்தியடிகளின் தீர்வுகள்

சமயங்களின் அடிப்படையை உணர்வது ஒற்றுமையைக் காண வழிவகுக்கும்என்பதுகாந்தியடிகளின்தீர்வுகளில் ஒன்றாகும். ஒருவர் சமயத்தை மற்றொருவர் உளமார மதிப்பதாலேயே நம்முள் ஒற்றுமை ஏற்படும்படி செய்யமுடியும் என அவர் கருதுகிறார்.[21] ஒவ்வொருவரும் தம்முடைய மதத்தின் தத்துவத்தை அறிந்து அதைக் கடைப்பிடித்துப் பொய்மை கற்பிப்பவருக்கு இடமளிக்காமலிருந்தால் பூசல்களுக்கு இடமில்லை;[22] எல்லா மதங்களுக்கும் அடிப்படையாக உள்ள ஒற்றுமையைக் கண்டு பிடிக்க உண்மையும் அகிம்சை நெறியும் என்ற திறவுகோல் தேவை. இந்த அடிப்படையில் ஒற்றுமையை உணராதவரையில் மதத்தின் பெயரால் நிகழும் பூசல்கள் ஓயா[23] என்பன அவர்தம் ஆழ்ந்த சிந்தனைகள்.

சமுதாய ஒற்றுமைக்கு இன்றியமையாதது இதய ஒற்றுமையே எனக் குறிப்பிடும் அவர் அதற்குப் போதியஅளவு தியாகம் புரிய ஒவ்வொருவரும் ஆய்த்தமாயிருத்தல் வேண்டும் என்கிறார்.[24] ஒற்றுமையை வளர்க்க வேண்டுமெனில் சில உயர் பண்புகளை எல்லோரும் கொண்டிலங்க வேண்டும் எனஅவர் கருதுகிறார். அவையாவன: ஒருவரோடொருவர் நன்கு பழகுவதுடன் விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையையும் வளர்த்தல்,[25] தன்னம்பிக்கை யுடன் மனிதனது உயர் தன்மையில் நம்பிக்கையும் கொண்டி ருத்தல்,[26] ஒருவரைக் கண்டு ஒருவர் அஞ்சாதிருத்தல்,[27] இறைவனை நம்புதல்,[28] தூய்மை பெற்றுத் தவமுறையை மேற்கொண்டு தீயமுறைகளை உதறித்தள்ளல்,[29] தன் உரிமை களையும் சலுகைகளையும், தன்னிச்சையாக விட்டுக்கொடுத்தல்,[30] தன்னலத் தியாக உணர்வுடன் உதவல்[31] ஆகியனவாகும்.

இரு இனத்தாரிடையே சிக்கல்கள் ஏற்படின் அவற்றை அன்புவழியில் தீர்க்க முற்படுகிறது காந்தியம். இந்துவோ முகமதி யரோ தவறு இழைப்பின் அதை ஓர் இந்தியனுக்குச் செய்ததாகக்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கருதி அனைவரும் தீர்வு காண முயலவேண்டும் என எண்ணும் காந்தியடிகள், அந்நிலையில் இருதரப்பினரும் குற்றங்களை மனம் விட்டு முழுவதும் ஒப்புக்கொண்டு ஒத்த முடிவிற்கு வருவதே ஏற்பு டையது எனவும்,[32] ஒத்த முடிவு ஏற்படாவிடில் நடுவரின் முடிவிற்கு விட்டு விடல் வேண்டும் எனவும் குறிப்பிடுகிறார்.[33] ''கலகங்களை அகிம்சை நெறியில் அடக்கவேண்டுமானால், தவறிழைக்கும் காலிகளையும் அன்புடன் தழுவும் மெய்அகிம்சை ஒருவன் உள்ளத்தில் உறையவேண்டும்'';[34] ''சத்தியாக்கிரக நெறியை ஒப்புக்கொண்டுவிட்டால் ஒற்றுமை தானே ஏற்பட்டுவிடும்''[35] என்றெல்லாம் அவர் குறிப்பிடுவது ஒற்றுமையை வளர்க்க அகிம்சையும் சத்தியமும் இன்றியமையாத கருவிகள் என்பதைப் புலப்படுத்தும்.

ஒற்றுமை காணுவதில் காந்தியடிகளின் பங்கு

இந்து மதத்தினருக்கும் முகமதியர்களுக்கும் இடையே வேற்றுமை நீங்க வேண்டும் என்ற ஆர்வம் இளம் பருவத்திலேயே காந்தியடிகளுக்கு வேரூன்றியிருந்தது.[36] அதுவே படிப்படியாக வளர்ந்து வலுவடைந்து, ''இந்து முகமதியர் ஒற்றுமையை என் வாழ்க்கையின் இலட்சியமாகக் கொண்டுள்ளேன்''[37] என்று அவர் கூறுமளவிற்கு வளர்ச்சி பெற்றிருக்கிறது. 1921-இல் பம்பாயில் கலகம் ஏற்பட்டபோது, பம்பாய் இந்து மதத்தினரும் முகமதியர் களும், பார்சிகள், கிறித்தவர்கள், யூதர்கள் முதலியோருடன் அமைதி ஏற்படுத்திக் கொள்ளாத வரையில் நீரைத் தவிர எதனை யும் உட்கொள்ள மறுத்து உண்ணா நோன்பை மேற்கொண் டார். 1924 செப்டம்பர்த் திங்களில் வகுப்பு ஒற்றுமைக்காக மீண்டும் இருபத்தொரு நாட்கள் உண்ணா நோன்பை மேற் கொண்டார்.

டில்லியில் நடந்த பொதுக் கூட்டத்தில், இன ஒற்றுமைக் காகச் சத்தியாக்கிரகம் என்ற ஆயுதத்தைப் பயன்படுத்தப் பெண் களைக் கேட்டுக் கொண்டார். இந்திய தேசிய காங்கிரசு மத்தியக் குழுக் கூட்டத்திலும், பிற கூட்டங்களிலும் இந்து முகமதியர் ஒற்றுமையின் இன்றியமையாமையை வற்புறுத்தினார். 1938 ஏப்ரல் திங்களில் ஜின்னாவுடன் இனச் சிக்கல்களைப்பற்றி உரையாடினார். 1946 நவம்பர்த் திங்களில் இனக் கலவரம் ஏற்பட்ட நவகாளிக்குப் புறப்பட்டுச் சென்று கொலை, கொள்ளை கள் நடைபெற்ற கிராமங்களுக்கு நடந்து சென்றார். 1947-இல்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கல்கத்தாவில் தோன்றிய இனவெறித் தீயை அணைக்க உண்ணா நோன்பை ஏற்றார். மீண்டும் அத்தீ உருவானால் இறக்கும்வரை அன்னோன்பை ஏற்க நேரிடும் என்றார். 1947-இல் டில்லியில் கலவரம் தோன்றியபோது அங்கு ஓய்வில்லாது செயற்பட்டார். 1948 சனவரித் திங்களில் சமூக ஒற்றுமைக்காக மீண்டும் உண்ணா நோன்பை மேற்கொண்டு, அமைதி நிலவினாலொழிய உயிர்வாழ விரும்பவில்லை எனக் குறிப்பிட்டார்.

இவ்வாறு நாட்டில் ஒற்றுமையை நிறுவ முயன்றார் காந்தியடிகள். நவகாளியில் அவர் ஆற்றிய பணியின் சிறப்பைப்பற்றிக் குறிப்பிட்ட மவுண்ட் பாட்டன் தாம் பஞ்சாபில் இனக் கலவரத்தை அடக்க 55,000 சிப்பாய்களை அனுப்பியிருந்தும் தோற்று நிற்க, தனியொரு பாதுகாப்பு வீரராக நின்று காந்தியடிகள் வங்கத்தில் இனக் கலவரத்தைத் தடுத்து நிறுத்தினார் என்று பாராட்டினார்.

இனி, ஆய்வுக்கு எடுத்துக் கொண்டுள்ள 'காந்திவழிக் கதைகள்' என்ற நூலில் இடம்பெறும் கதைகளில் ஒற்றுமைக் கோட்பாடு பற்றிய ஆய்வு அமைகிறது.

ஒற்றுமைக் கோட்பாடு அமைந்துள்ள கதைகள்

'காந்திவழிக் கதைகள்' என்ற தொகுப்பு நூலில், ஒற்றுமைக் கோட்பாடு பற்றி அமைந்துள்ள கதைகளுள் இந்து முகமதியர் கலவரக் கொடுமையைச் சித்திரிப்பன, மாயாவி எழுதிய 'அஞ்சலி', கோமகள் எழுதிய 'வந்தேமாதரம்' ஆகிய இரண்டாகும். இன வேறுபாடு கருதாமல் நாட்டுப் பணியில் ஈடுபடுபவரைப் பற்றிய கதை தி.சா.ராஜூவின் 'மேஜர் ரஹ்மான் பேசுகிறேன்' என்பதாகும். இனக் கலவரச் சூழலுக்கிடையே மனித அன்புப் பிணைப்பை விளக்குவது மகுதூம் எழுதிய 'பாங்கொலி' ஆகும். தேசிய ஒருமைப்பாட்டின் சிறப்பை விளக்க வந்த கதை அகிலனின் 'சகோதரர் அன்றோ?' என்பதாகும்.

'சகோதரர் அன்றோ?' என்ற கதையில் அகிம்சையற்ற நிலையில் வன்முறையில் நிகழும் போர் நிகழ்ச்சிப் பின்னணி இடம்பெறினும், இரு போர் வீரர்களுக்கிடையில் உள்ள ஒருமைப்பாட்டுணர்வின் ஆற்றலை உணர்த்துவதாகக் கதைக்கரு அமைவதால் இக்கதை மேலும் ஆய்வதற்கு உரியதாக ஏற்கப்பட்டுள்ளது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கதைச் சுருக்கமும் கருவும்

'அஞ்சலி' என்ற கதையில் இனவெறிக் கலவரத்தில் பெண்மையை இழந்த ரோஷனாரா என்ற முகமதியப் பெண்ணைத் தன் மதத்திற்கு மாற்றி மணந்து கொள்கிறான், கேஸர் ஸிங் என்ற சீக்கியன். இனவெறிக்குட்பட்ட அவளுடைய பெற்றோரால் மீண்டும் கட்டாய மறுமணத்திற்கு ஆளான அவள், வேதனையுடன் கேஸர் ஸிங்கிடம் தனது நிலையை [மறுமணம் நிகழ்ந்ததை] மறைக்கிறாள். தன்னுடன் வர அவள் மறுத்ததால் குழந்தையுடன் அவன் தற்கொலை செய்து கொள்கிறான். 'இன வெறி மனித வாழ்வைப் பாழ்படுத்தக்கூடியது' என்பது இக்கதையின்கரு.

'வந்தே மாதரம்' என்பதில் சோமுவின் தாய் இனக் கலவரத்தில் பெண்மையை இழந்ததுடன் தன் கணவனையும் பலி கொடுக்கிறாள். தன் வயிற்றில் அவமானச் சின்னத்தை ஏற்றபொழுதிலிருந்து அவலத்தில் உழன்ற அத்தாய், அது சுமதியாகப் பிறந்தபோது அவளை அன்புடன் வளர்க்க வேண்டியவளாகிறாள். 'இன வெறிக்குப் பலியாகிக் கருவுறும் பெண் கணந்தோறும் தவிப்பிற்கு ஆளாதல்' இக்கதையின் கரு.

'மேஜர் ரஹ்மான் பேசுகிறேன்' என்ற கதையில் மதவேறுபாடு கருதாத பரம்பரையில் பிறந்த மருத்துவர் ரஹ்மான், தன் பணி மகன் ஹர்கீரத் சிங்குடன் பாகிஸ்தான் படையால் தாக்குண்ட இந்தியர், காயமுற்று வரும் பாகிஸ்தானியர் உட்பட யாவர்க்கும் மருத்துவம் புரிகிறார். இனக் கலவரத்தின்போது முகமதியர்களால் குடும்பத்திலிருந்து பிரிக்கப்பட்ட ஹர்கீரத் சிங், ரஹ்மானுடன் அன்பால் இணைந்து செயற்படுகின்றான். ரஹ்மான் வேற்று மதத்தவனான ஹர்கீரத் சிங்குடன் கொண்ட நட்பும் உயரியது. ஹர்கீரத்சிங் இறந்த பிறகு வேற்றுமை பாராட்டாத அவனது பண்பை ரஹ்மான் நடுகல்லில் பொறிக்கின்றார். 'இன ஒற்றுமைக்கு மத உணர்வு தடையாவதில்லை' என்பது இதன் கதைக் கரு. ஒற்றுமை என்பது வாழ்க்கை விதி என்ற காந்தியடிகளின் கருத்திற்கேற்ப[33] வாழ்க்கையை அவர்கள் இருவரும் அமைத்துக் கொண்டமை பாராட்டற்குரியது.

'பாங்கொலி' என்ற கதையில் இனக் கலவரச் சூழற்கிடையே இந்து இனத்தவளான வடிவம்மாளின் குழந்தைகளுக்கு முஸ்தபா மோதினார், வீட்டிற்கு வந்தும் ஓதுகிறார். தன் கணவன்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ரங்கனின் குழு மோதினாரைத் தாக்க இருப்பதை அறிந்த வடிவம்மாள், இரவோடு இரவாக அவரைக் காக்க முற்பட்டுப் பாறையில் மோதுகிறாள். மனம் மாறிய ரங்கன் மோதினாரை அழைத்து வர, அவரைக் கண்டதும் நிம்மதியடைகிறாள். 'இனக் கலவரச் சூழற்கிடையேயும் வேறுபட்ட மதத்தினரிடையே அன்பு நிலவும்' என்பது இக்கதைக் கரு. மற்றவர் மதத்தை மதிப்பது ஒற்றுமை நிலவ உதவும் என்ற காந்தியடிகளின்கருத் திற்கேற்ப[39] மோதினார்- வடிவம்மாள் உறவு அமைகிறது.

'சகோதரர் அன்றோ?' என்பதில் சீனப் போரின் போது பஞ்சாபி ராஜ்பகதூரும், தமிழ் இளைஞன் குமாரும் இந்தியப் படைக்குத் தலைமை ஏற்றுப் போரிடுகிறார்கள். கல்லூரி வாழ்வில் ஏற்பட்ட பகைமையை மறந்து, காயமுற்ற தன்னைக் காக்க முற்படும் ராஜ்பகதூரைத் தப்பிக்க வேண்டுகிறான் குமார். தந்தை யாகப் போகும் குமாரின் உயிர் இன்றியமையாதது என்று கூறி, அவனைக் காப்பாற்றித் தன்னுயிரை இழக்கிறான் ராஜ்பகதூர். 'தேசிய ஒருமைப்பாட்டின் சக்தி ஏற்றமுடையது' என்பது இதன் கதைக் கரு.

கதைப் பின்னலில் கொள்கையைப் புலப்படுத்தல்

இக்கதைகளில் இன வேறுபாடு கருதும் தனிமனிதடனும் சமூகத்துடனும்,இன வேறுபாடு கருதாத தனிமனிதனுக்கு ஏற்படும் புறப் போராட்டங்களின் சித்திரிப்பும், இன வேறுபாடு கருதாத தனிமனிதர் இருவர்க்கிடையே ஏற்படும் தியாகப் போராட்டத்தின் சித்திரிப்பும் கதைப் பின்னல்களுக்கு அடிப்படையாக உள்ளன. இவற்றின்வழி ஒற்றுமையின் இன்றியமையாமையும் சிறப்பும் சுட்டப்படுகின்றன.

பாத்திரப் படைப்பு

'அஞ்சலி'யில், "... தன்னைப் பொறுத்தவரை எம்மதமும் சம்மதமாக வாழ்வது, தன் மதத்தவரால் பகைமை பாராட்டப் படும் முகமதியர்களுக்கு இயன்றவரை உதவுவது என்று அவன் உறுதி பூண்டான்"[40] என்ற பகுதி, கேஸர்ஸிங் இன மத வெறிக்கு அப்பாற்பட்டவன் என்பதை விளக்கும். தன் மதத்தின் தத்துவத்தை அறிந்து அதைக் கடைப்பிடித்துப் பொய்ம்மை கற்பிப் பவருக்கு இடமளிக்காமலிருக்க வேண்டும் என்ற[41] காந்தியடி களின் கருத்திற்கேற்பக் கேஸர்ஸிங் படைக்கப்பட்டுள்ளான்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மேலும் அவன், வகுப்புக்கலவரத்தில் களங்கமடைந்த ரோஷனாராவை மணப்பதன் வாயிலாகக் காந்திய நெறியில் அமையும் மனிதத்தன்மையைச் சிறக்கச் செய்கிறான்.

'வந்தே மாதரம்' என்பதில் சோமுவின் தாய் காந்தியடிகளால் ஈர்க்கப்பட்டமை, "... அந்த எளிய காந்தியடிகளின் புன்னகைக்கு நாற்பது கோடி மக்களும் கட்டுப்பட்டுக் கிடந்த போது, நான் ஒரு பொருட்டா?..."[42] என்ற அவளது கூற்றால் தெளிவாகும். இக்கதையில் சோமு காந்தியடிகளின்பால் கொண்ட மதிப்பு, "சன்மார்க்க நெறி பிறழாச் சத்தியப் போர் முனையில் அன்பு சுதந்திரம் கண்ட மகானையா அவமதிக்க இருந்தேன்? அதன் மூலம் நான் என்னையே அவமானப்படுத்திக் கொள்ள இருந்தேனா?"[43] என்ற அவனது சிந்தனைவழிப் புலனாகும். ஆயினும் மத வெறிக்குட்பட்ட அவனது மனநிலையை, "சுமதி,... நீ 'நாதிரா' என்று அழைக்கப்படும்போது என் காதில் காய்ச்சி ஊற்றிய நாராசம் என்னைச் செவிடாக்காமல் விட்டது குறித்து ஆச்சரியப்படுகிறேன்..."[44] என்ற அவனது ஆவேசப் பேச்சு உணர்த்தும். காந்தியடிகளிடம் மதிப்புக்கொண்ட சிலரிடத்தும் மத வெறியுணர்வு மேலோங்கியிருந்ததை உணர்த்துகிறது இப் பாத்திரப் படைப்பு.

'மேஜர் ரஹ்மான் பேசுகிறேன்' என்பதில், ரஹ்மானும் அவரது பணியாள் ஹர்கீரத் சிங்கும் இன வேறுபாடு கருதாமல் ஒருவருடன் ஒருவர் அன்புடன் பழகுவதை "அவனைக் காணும் போதெல்லாம் என் மனத்தில் பரவச உணர்ச்சி உண்டாகும்"[45] என்ற ரஹ்மானின் கூற்றும், "காப்டன் ஸாஹிப் .. உங்களை விட்டால் எனக்கு வேறு துணை ஏது?"[46] என்ற ஹர்கீரத் சிங்கின் கூற்றும் உணர்த்தும்.

'பாங்கொலி'யில் மோதினார் முஸ்தபா, ஊரிலுள்ள இனக் கலவரத்தைப் பொருட்படுத்தாத நிலையில் இந்து மதத்தவளான வடிவம்மாளின் குழந்தைக்கு ஓத முற்படுவது, "ஊரில் புரையோடிய பிளவால் அவர் மனசு மாறிடுமோ என மற்றப் பெண்கள் எண்ணினும் அந்த எண்ணத்தின் கீற்றுக்கூட வடிவம்மாள் சிந்தனையில் எழவில்லை... வடிவம்மாள் அருகில் வந்து அக் குழந்தையின் புன்னகையை வரவழைத்து அதற்கு ஓதிப் பார்த்தார்"[47] என்ற பகுதியால் தெளிவாகும். வடிவம்மாளும் ஊரில் உள்ள கலவரத்திற்கு அஞ்சாமல் மோதினாரை அழைத்துவரப்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

புறப்பட்டமை, ''மனத்தில் ஒரு நம்பிக்கையுடனும் உறுதியுடனும் வெளியேறினாள்''[48] என்ற தொடரால் அறியலாகும்.

'சகோதரர் அன்றோ?' என்பதில் குமார், ''...நிம்மதியாக என்னைச் சுட்டுத்தள்ளிச் சாகவிட்டு நீ பத்திரமாகத் திரும்பிப் போ''[49] என வேண்டுகிறான். ராஜ்பகதூர், ''.. நான் இறந்தால் இந்த தேசம் ஒரு வீரனை மட்டும் இழக்கும். நீ ஒரு கணவன், ஒரு தந்தை, ஒரு வீரன்... தேசத்துக்கு நம் இருவரில் இப்போது யார் முக்கியம்?...''[50] என உருக்கமாகப் பேசுகிறான். இருவர்தம் உரையாடலின்வழி இன மொழி வேறுபாடு கருதாத அவர்தம் உள்ளத்து ஒருமைப்பாட்டுணர்வு உணரப்படுகிறது.

பாத்திரப் படைப்பு - ஒரு மதிப்பீடு

'ஒற்றுமை' என்ற கருவை விளக்க வந்த கதைகளில் இரு வேறுபட்ட பாத்திரப் படைப்பைக் காண முடிகிறது. அவற்றுள் இனக் கலவரத்தால் துன்பத்திற்கு ஆளான பாத்திரங்கள் ஒரு வகை; மனித குலத்துள் இன வேறுபாடு கருதாமல் ஒருவர்க் கொருவர் பழக விரும்பும் பாத்திரங்கள் மற்றொரு வகை.

இனக் கலவரத்தால் துன்பத்திற்கு ஆளான பாத்திரங்களுள் 'அஞ்சலி' என்ற கதையில் கேஸர் ஸிங், அவன் நண்பன் அமீர்கான் ஆகியோரும், 'மேஜர் ரஹ்மான் பேசுகிறேன்' என்பதில் ஹர்கீரத் சிங்கும், 'வந்தே மாதரம்' என்ற கதையில் சோமுவின் தாயும் குறிப்பிடத்தக்கவர் ஆவர். இக்கலவரத்தின் வெறித்தனம் ஆடவர், பெண்டிர் ஆகியோரது வாழ்க்கையை நசுக்கியது. கேஸர் ஸிங் போன்றோர் மனைவி மக்களைப் பிரிந்து புலம்பி வெறுத்துத் தாமே சாவை அணைக்கின்றனர். அமீர்கான் போன்றோர் உடலால் காயமுறுகின்றனர். ஹர்கீரத் சிங் போன்றோர் குடும்பத்திலிருந்து வேரோடு பிரிக்கப்பட்ட நிலையில் ஒரு நிலைப்பட முடியாதவராக வாழ்ந்து இறுதியில் இனவெறிக்கே பலியாகின்றனர்.

இனவெறிக் கலவரம் ரோஷனாரா, குமுத் போன்ற இளம் பெண்களின் கற்பைச் சூறையாடுகிறது. இது திருமணமாகிக் கணவன் குழந்தைகளுடன் வாழும் சோமுவின் தாய் போன்றவரைக் களங்கப்படுத்தியது மட்டுமின்றி, அவர்களின் அன்புக் கணவன் மாரைப் பலியாக்கவும் தயங்கவில்லை. இக்கலவரத்தால் குடும்பம், உடைமை, உயிர் இழப்புகளை அடைந்தவர்களைச் சுட்டும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நிலையில் இப்பாத்திரங்களை ஆசிரியர்கள் படைத்திருக்கிறார்கள்.

இனக் கலவரச் சூழலுக்கிடையேயும், வேறுபாடு கருதாமல் மனிதத்துவத்துடன் பழகும் மேஜர் ரஹ்மான் - ஹர்கீரத் சிங், மோதினார் - வடிவம்மாள் போன்றவர்களுக்கிடையே இழையோடும் ஒற்றுமையுணர்வை நாம் உணரும் வண்ணம் அப்பாத்திரங்கள் சித்திரிக்கப்பட்டுள்ளன.

உத்திகள்

கொள்கையை விளக்கும் உரை

'மேஜர் ரஹ்மான் பேசுகிறேன்' என்பதில், ''அன்பு [வேற்றுமை கருதாதவரிடையே] எந்த வடிவிலிருந்தாலும் சரி. அதுதான் ஆண்டவனின் செயல்முறை''[51] என்பது இன ஒற்றுமையின் சிறப்பை வலியுறுத்த உதவும் அறவுரையாகும்.

'பாங்கொலி'யில், ''அந்த எல்லைக் கல்லுக்கும் அப்பால்... மோதினார் முஸ்தபாவையும் வடிவம்மாளையும் பிணைக்கும் அன்புப் பாலத்தை நல்லூர் வரலாறு சொல்லப் போகிறதா என்ன? நல்லூரார்தான் உணரப்போகிறார்களா?''[52] என்பது பிரசார உரைபோல் அமைந்து கொள்கையை விளக்க உதவும்.

'சகோதரர் அன்றோ?' என்ற கதையில், ''..ஆயிரம் வேற்றுமைகளையுடைய நம் தேசத்தில் அடிப்படையான ஒரு பண்பாடு வலிமையாக இழையோடுகிறது. எனக்கும் உனக்கும் இமயமலை சொந்தம்... அதுபோலவே கன்யாகுமரியும் ராமேச்வரமும் ராஜ்பகதூருக்குச் சொந்தம்... அவனும் நானும் நாமும் ஒரு தாய் வயிற்றுப்பிள்ளைகள்... நெடுங்கால உறவு இது...''[53] என்பது பிரசார உரைபோல் அமைந்து ஒருமையுணர்வை விளக்க உதவும்.

அணுகுமுறை

இன வேறுபாடின்றி இரு வேறுபட்ட மதத்தினர் கலந்து பழகி மனநிறைவு பெறுவதையும் ('மேஜர் ரஹ்மான் பேசுகிறேன்', 'பாங்கொலி'), இரு வேறுபட்ட மொழியினர் ஒருமைப்பாட்டுணர்வு பாராட்டி அன்பின் ஆழத்தைப் பெருக்குவதையும் ('சகோதரர் அன்றோ?') நேர்முக அணுகுமுறையில் ஆசிரியர் விளக்குவர்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அட்டவணை : 8

ஒற்றுமைக் கோட்பாடு - கதைமாந்தர்

எண்	கதைகள்	இன வேறுபாடு கருதாத கதைமாந்தர்	தொடக்கத்தில் இன வேறுபாட்டுணர்வில் அழுந்தி இறுதியில் மன மாற்றம் அடைபவர்	இனவெறிக்குப் பலியானவர்		
				காயமுற்றோர்	உயிரிழந்தோர்	பெண்மையிழந்தோர்
1	'அஞ்சலி'	கேஸர்ஸிங், அமீர்கான்	—	அமீர்கான்	கேஸர்ஸிங்	ரோஷனாரா குமுத்.
2	'வந்தே மாதரம்'	சோமுவின் தாய், தங்கை	சோமு	—	—	சோமுவின் தாய்
3	'மேஜர் ரஹ்மான் பேசுகிறேன்'	மேஜர் ரஹ்மான், ஹர்கீரத் சிங்	—	—	ஹர்கீரத்சிங்	—
4	'பாங்கொலி'	மோதினார், முஸ்தபா, வடிவம்மாள்	ரங்கன்	—	—	—
5	'சகோதரர் அன்றோ?'	ராஜ்பகதூர், குமார்	—	—	—	—

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இன வேற்றுமையுணர்வு இன வெறிக் கலகங்களுக்கு இடங் கொடுத்து, பல்வேறு கேடுகளுக்குக் காரணமாவது ('அஞ்சலி', 'வந்தேமாதரம்') எதிர்மறை அணுகுமுறையில் விளக்கப்படுகிறது. இருமுறைகளும் ஒற்றுமையை வலியுறுத்த உதவுகின்றன எனினும், காந்தியடிகளின் காலப்பின்னணியில் இன வெறித்தனம் எப்படி இருந்திருக்கக் கூடும் என்பதைப் படம்பிடித்துக் காட்டி ஒற்றுமை யின் இன்றியமையாமையை வலியுறுத்தும் எதிர்மறை அணுகு முறை சிறப்பாக உள்ளது.

கொள்கையை விளக்க உதவும் தலைப்பு

இன வெறிக்கு எதிராகச் செயற்பட்டோரும், அவ்வெறித் தனத்தால் அலைக்கழிக்கப்பட்டோரும் அஞ்சலி செய்வதற் குரியவர் என்ற பொருளில் 'அஞ்சலி' என்ற தலைப்பு அமைகிறது.

''வலுக்கட்டாயமாகக் கற்பழிக்கப்பட்ட பெண்கள் வெட்கப்படுவதற்கு ஒன்றும் இல்லை. அவர்கள் கற்பழிந்தவர்களோ ஒழுக்கம் தவறியவர்களோ அல்லர்''[54] என்கிறார் காந்தியடிகள். அவர் கூற்றிற்கேற்ப 'வந்தே மாதரம்' என்ற கதையில் சோமுவின் தாய் இனக் கலவரத்தில் மாசுபடுத்தப்பட்டாலும், ஒழுக்க நிலை-யில் மதிப்பிற்குரியவள் என்பதை உள்ளடக்குமாறு வணக்கத்திற்கு உரிய தாய் என்ற பொருளில் 'வந்தே மாதரம்' என்பது தலைப்பாக உள்ளது.

இறையுணர்வைத் தூண்டும் பாங்கொலி, வேற்று மதத்த வளான வடிவம்மாளிடம், இறைவனுக்கு அடுத்த நிலையிலிருப்ப தாக அவள் கருதும் மோதினாரிடத்துக் கொண்ட அன்புணர்வு களைத் தூண்டுவதால் இக்கதைக்குப் 'பாங்கொலி' என்ற தலைப்புப் பொருத்தமாகிறது.

காந்தியத் தாக்கத்தைப் புலப்படுத்த உதவும் பிற உத்திகள்

காந்தியடிகளின் கூற்றை நினைவுறுத்தல்

'அஞ்சலி' என்ற கதையில் முகமதியன் தம் கோயிலுக்குள் நுழைந்ததைப் பொறாத சீக்கியர், அவனை அடித்து நொறுக்கும் போது, ''நம் கோயிலில் அவன் நுழைந்து விட்டதால் என்ன கெட்டுப் போய்விட்டது?... இதுதான் நமது புனித சீக்கிய மதம் போதிக்கும் நீதியா?''[55] என்று கடிந்துரைக்கிறான் கேஸர் ஸிங். இக்கூற்று, ''பல்வேறு சமயங்களையும் சேர்ந்தவர்கள் ஒருவர்க் கொருவர் பூசலிட்டுக் கொள்ளுவதன் மூலம் தங்களுடைய சமயத்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தையே மறுப்பவராகின்றார்கள்''[56] என்ற காந்தியடிகளின் கூற்றை நினைவுபடுத்துகிறது.

இக்கதையில் ''ஆதி காலத்தில் முகமதியர்களின் கொடுமைக்கும் அட்டூழியங்களுக்கும் ஆளாகியிருந்த காரணத்தால் தங்கள் மதத்தை அழிக்கத் தோன்றியிருப்பவர்களே முகமதியர்கள் என்று அவர்கள் மீது அடங்காத் துவேஷம் கொண்டார்கள் இந்தத் தீவிர மதாபிமானிகள்''[57] என்ற கருத்து இடம் பெறுகிறது. இது, ''முன் காலத்தில் சண்டையிட்டுக் கொண்டிருந்ததனால் எதிர்காலத்திலும் சண்டையிட்டுக் கொள்ளுவோமென முடிவு செய்வது சரித்திரத்தைத் தவறாகத் தெரிந்து கொள்ளுவதேயாகும்... சுய நலமுள்ள மதக் குருக்கள் இரு மதங்களையும் [இஸ்லாம், இந்து] ஒன்றுக்கொன்று விரோதமானதென்று கருதும்படி செய்துவிட்டார்கள்''[58] என்ற காந்தியடிகளின் கூற்றை நினைவுபடுத்தும்.

மேலும் இக்கதையில் இனக் கலவரத்தில் கற்பை இழந்த பெண்களிடம் ''...நீங்கள் மாசுபடுத்தப்பட்டிருக்கிறீர்கள். ஆகையால் இது உங்கள் பிழையாகாது''[59] என்கிறான் கேஸர் ஸிங். இது, ''வலுக்கட்டாயமாகக் கடத்தப்பட்ட பெண்கள் ஒரு குற்றத்தையும் செய்தாரில்லையென்பதிலும் அவர்களுக்கு ஒரு மாசும் ஏற்படவில்லையென்பதிலும் எனக்கு ஐயமில்லை''[60] என்ற காந்தியடிகளின் கருத்தை நினைவுகூரச் செய்யும்.

காந்தியடிகளின் வரலாற்று நிகழ்ச்சி இடம்பெறல்

'வந்தே மாதரம்' என்பதில் இனக் கலவரத்தில் பெண்மையை இழந்து துடித்த பெண்களுக்குக் காந்தியடிகள் ஆறுதல் மொழி அளித்தமை குறிப்பிடப்பட்டுள்ளது. ''...ஈ எறும்பு கடித்த நினைவாக அதை ஒரு துர்க்கனவாக எண்ணி அன்னையாக வாழுங்கள். அன்பு மனைவியாக வாழுங்கள்...''[61] எனச்சுட்டுவதன் வாயிலாகக் காந்தியத் தாக்கம் அமைகிறது.

காந்தியடிகளின் வாழ்க்கைச் சாயல் அமைதல்

'மேஜர் ரஹ்மான் பேசுகிறேன்' என்ற கதையில், ''...அத்தகையவர்களுக்கு [சிப்பாய்களுக்கு] என்னால் ஆன உதவியைச் செய்கிறேன் என்ற திருப்தி மட்டும் எனக்குப் போதுமே''[62] என்ற நினைப்பில் ஹர்கீரத் சிங் சீன, பாகிஸ்தான் போர்களில் காயமுற்றவர்களுக்கு மருத்துவ உதவி செய்கிறான். இந்நிகழ்ச்சி தென்னாப்பிரிக்காவில் ஜுலுக் கலகம், போயர் போர் நடந்த

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

போது மருத்துவப் பணியை விரும்பி ஏற்ற காந்தியடிகளின் வாழ்க்கைச் சாயலைப் பெற்றுள்ளது. இவ்வாறு காந்தியடிகளின் வாழ்க்கை வரலாற்றுச் சாயலை அமைத்துக் காந்தியத் தாக்கத்தைப் புலப்படுத்துகிறார் இக்கதையின் ஆசிரியர்.

காந்தியடிகளின் பெருமையை உணர்த்தல்

'வந்தே மாதரம்' என்பதில், ''புன்னகையே உருவாக, சத்தியமே உறுதுணையாக நின்ற காந்திஜி''[63] என்ற தொடர் சத்தியத்தோடு இணைந்த காந்தியடிகளின் ஆளுமையை உணர்த்த உதவுகிறது. ''...அன்று இந்த நாடு ஒரே ஒரு மனித பலத்தில் சத்தியத்தின் திருக்கரத்தில், சாத்வீகத்தின் இனிப்பில் தன்னை மறந்து கட்டுப்பட்டிருத்தது... ஒரு முழ வேட்டி கட்டிய ஒருவரிடத்தில் அடி பணிந்த பாரதம் இது...''[64] என்ற இக்கதையின் பகுதி இந்தியா முழுமையும், தம் ஆன்மீக சக்தியால் கவர்ந்தவர் காந்தியடிகள் என்பதைத் தெளிவுறுத்தும்.

'மேஜர் ரஹ்மான் பேசுகிறேன்' என்பதில், ''கொல்லாமைத் தத்துவத்தை மேற்கொண்ட காந்தியடிகள்''[65] என்ற தொடர், பாராட்டத்தக்க பண்பையுடைய அவர் பெருமையைக் குறிக்கும். இக்கதையில், ''...நெஞ்சில் குண்டுபட்டு ஆவி பிரியும்போது காந்தியடிகள் கூறிய கடைசி வார்த்தை 'ஹேராம்' என்பதுதான். அந்த இரண்டரை அட்சரம் கடைசி வினாடியில் நினைவுக்கு வரவேண்டுமானால் வாழ்நாள் முழுவதும் அதை உருப்போட்டிருக்கவேண்டும்''[66] என்ற பகுதி காந்தியடிகளின் இறையுணர்வின் சிறப்பைக் குறிப்பிடும்.

இவ்வாறு காந்தியடிகளின் ஆளுமையைக் கதைகளில் குறிப்பிடுவதன் வாயிலாகக் காந்தியத் தாக்கம் அமைகிறது.

காந்தியடிகளின் உருவப்படம் இடம் பெறல்

'வந்தே மாதரம்' என்ற கதையில் காந்தியடிகளின் படத்தை சோமு பார்க்கும்போது, அவருடைய ஆளுமைத்தன்மை, அவனது இனவேறுபாடு கருதும் மனப்பாங்கினைக் குத்திக்காட்டுவதுபோல் அவன் உணர்கிறான். அத்தகைய மனப்பாங்கு தவறு என்பதையும் உணர்ந்து கொள்ளுகிறான். காந்தியடிகளின் படம் இப்பாத்திரத்தினிடம் தவறான எண்ணத்தினின்றும் சிறிது நெகழ்ச்சியைத் தோற்றுவிக்கும் நிலையில் ஓர்உயர்வான இடத்தைப் பெற்றுள்ளது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இதே கதையில் சோமுவின் தாய், தான் இனக் கலவரத்தில் பெண்மையை இழக்கும் அளவிற்குக் கொடுமைப் படுத்தப்பட்டிருப் பினும், தன் மகள், அவள் விரும்பியபடி முகமதிய இனத்தவனை மணக்க இசைகிறாள். அப்போது அவளைத் தாங்கியவாறு காந்தி யடிகளின் படத்திற்கு எதிரில் வருகிறாள் என்ற சித்திரிப்பானது, அனைத்துச் சமயங்களையும் மதிக்கும் கோட்பாடுடைய காந்தி யடிகளின் வழியை அவள் ஏற்றமையை உணர்த்தும்.

காந்தியடிகள் விரும்பும் பாடலைக் குறிப்பிடல்

'வந்தே மாதரம்' என்பதில் ''ரகுபதி ராகவ ராஜாராம்'' என்ற பாடலைச் சோமுவின் தாய் பாடுவதாகக் குறிப்பு உள்ளது. காந்தியடிகளுக்கு விருப்பமான சமய ஒருமைப்பாட்டுப் பாடல் இடம்பெறுவதன் வாயிலாகக் காந்தியத் தாக்கம் உணர்த்தப் படுகிறது.

இனி, 'காந்திவழிக் கதைக'ளில் இடம்பெறும் கதைகளை எழுதிய ஆசிரியர்களின் பிற கதைகளில் அமையும் ஒற்றுமைக் கோட்பாடுபற்றிய ஆய்வு இடம்பெறும்.

கொள்கையை விளக்க அமைந்துள்ள பிற கதைகள்

ஒற்றுமைக் கொள்கையைக் கருவில் கொண்ட கதைகள் மாயாவியின் 'இந்தச் சமூகம்', அகிலனின் 'கூட்டுக் குடும்பம்' ஆகியன. ஆர். சூடாமணியின் 'ஓர் இந்தியன் இறக்கிறான்' என்பது தேசிய ஒருமைப்பாட்டின் இன்றியமையாமையைக் கருவில் கொண்டுள்ளது. 'கூட்டுக் குடும்பம்', 'ஓர் இந்தியன் இறக்கிறான்' ஆகியன காந்தியடிகளை இணைத்தே உருவானவை.

'இந்தச் சமூகம்' என்ற கதையில் 'இனக் கலவரத்தில் பெண்மை இழந்தவர்களை இழிவாக எண்ணுவது மிகக் கொடுமை-யாகும்' என்ற காந்தியடிகளின் கருத்தானது கருவாக உள்ளது. இளம் விதவை தேவகியைச் சமூக எதிர்ப்புக்கிடையே மணந்து கொண்ட மணி, இனக் கலவரத்தில் பெண்மையை இழந்த அவளை ஏற்றுக் கொள்வதாகக் கூறுகிறான். ஏனைய அகதிகள் அவளை இழிவாகக் கருத, அதனைப் பொறாத அவள் தன்னுயிரை மாய்க்கிறாள். நாட்டு விடுதலையைத் தொடர்ந்து வந்த பிரிவினை யின் விளைவால், பல மாகாணங்களில் கொந்தளிப்பு ஏற்பட்டது. அந்தப் படுகளங்களில் ஒவ்வொரு தனிமனிதனும் வேதனையும், மானக் குறைவும் அடைந்தான். அதே சூழலில் மணி-தேவகி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

குடும்பத்தினர் அடைந்த துயரங்கள் இக்கதையில் நெஞ்சுருகச் சித்திரிக்கப்பட்டுள்ளன.

''ஒரு முறை எனக்காகச் சமூகத்தின் பழியைச் சுமந்தீர்கள்; மறுமுறையும் பழி சுமக்க விடமாட்டேன்... சமூகம் உங்களை ஏசுவதை நான் பொறுக்க மாட்டேன்.''[67] என்று தேவகி மடல் எழுதிவிட்டுச் சாவை அணைப்பது, வலுக்கட்டாயமாகக் கெடுக்கப்பட்ட பெண்கள் தவறிழைக்கவில்லை என்ற காந்தியடிகளின் கருத்தினைச் சமுதாயம் உணராததால் ஏற்பட்ட விளைவைக் காட்டுகிறது.

'கூட்டுக் குடும்பம்' என்ற கதையில் இந்திய நாட்டை ஊராகவும், காந்தியடிகளை உத்தமன் ஒருவனாகவும் உருவகப் படுத்தியுள்ளார் ஆசிரியர். கூட்டுக் குடும்பமாக வாழ்ந்த அந்த ஊரானது ஒற்றுமையை இழந்தமையால் அடுத்த ஊர்க்காரராலும், கடற் கொள்ளைக்காரராலும் பாழ்படுகிறது. அந்த ஊரில் தோன்றிய உத்தமன் ஒருவன், கோழைகளாகவும் அடிமைகளாகவும் இருந்த அவ்வூராரின் நெஞ்சங்களினின்றும் அச்சத்தைப் போக்கி அவர்களை ஒற்றுமையின் வலிமையால் பிணைக்கிறான். அந்த வித்தகன் பின் திரண்ட மக்கள், வன்முறையாளர்களை விரட்டி விட்டனர். வளமுடன் வாழத் தொடங்கிய அவ்வூர் மீண்டும் ஒற்றுமையின் சக்தியை இழந்ததால், வெளியூர் உள்ளூர்ப் பண அதிகார வேட்கைகளுக்குப் பலியாகி அல்லலுறுகிறது. 'மனித இன ஒற்றுமையின்மை அழிவைத் தரும்' என்பது இதன் கதைக் கரு.

இக்கதையில் ஊரானது ஒற்றுமையின்மையால் ''அடிமைப் பட்டுச் சுரண்டப்பட்டு.. ஒற்றுமையின் அடித்தளமே தகர்க்கப் பட்டு உருக்குலைந்து... பழைய துரோகிகளும், சமூக விரோதி களும் புதிய வேஷம் போட்டுக்கொண்டு...''[68] திரிவதற்கு இடமானதைச்சுட்டும் நிலையில் ஒற்றுமையின் இன்றியமையாமை வலியுறுத்தப்படுகிறது.

'ஓர் இந்தியன் இறக்கிறான்' என்பதில் காந்தியடிகளை நேரில் காணும் வாய்ப்பைப் பெற்ற, நோயினால் நலிந்த ஒரு பிச்சைக்காரன், பல்வேறு உட்பூசல்களால் இந்தியா பிளவு பட்டிருப்பதை அறிந்து மனம் நொந்து மேலும் நலிகிறான். மொழி, கொள்கை, கட்சி என்ற பிரிவினைகளுக்கு அப்பாற்பட்டுத் தன்னை ஓர் இந்தியனாக உணரும் ஒருவரிடம் சென்று உயிரை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

விட நினைக்கும் அவன் மகாத்மா சிலையருகே அமர உயிரும் பிரிகிறது. 'காந்தியடிகளின் வழி நின்று ஒருமைப்பாட்டை வளர்க்க வேண்டும்' என்பது கதைக் கரு.

அப்பிச்சைக்காரன் ஒருமைப்பாட்டுணர்வுடையவனாக இருப்பதை, ''.. தன் துடிப்பு வடக்கே எங்கோ ஒரு பனிவரையில் உயிரைப் பணயம் வைத்துப் போரிட்டுக் கொண்டிருக்கும் ஒரு பஞ்சாபிக்கு, ஒரு பீகாரிக்கு, ஒரு ராஜஸ்தானிக்கு, ஒரு தமிழனுக்கு-ஏதோ ஓர் இந்தியனுக்கு - வலிமை சேர்ப்பதாக அவனுள் தெளிவற்ற எண்ணம் குறுகுறுத்தது''[69] என்ற பகுதி விளக்கும். ஒருமைப்பாட்டு உணர்வைக் காந்தியடிகளுடன் இணைத்தே கொண்டிருந்த அவனுக்கு, அவ்வுணர்வு காந்தியடிகளின் நேர் வருகையின் விளைவால் ஏற்பட்டதைச் சித்திரிக்கும் ஆசிரியர், காந்தியடிகளின் நெறிச் செல்வதே ஒற்றுமைக்குரிய ஒரே வழி என உணர்த்துகிறார்.

இக்கதைகளால் அறியப்படுவன

ஒற்றுமைக் கோட்பாட்டை விளக்க அமைந்த கதைகளால் சில உண்மைகள் அறியப்படுகின்றன.

1. இன வெறிக் கலவரங்களைத் தூண்டுவதற்குக் காரணங்களாக இந்திய பாகிஸ்தான் பிரிவினை, பரந்த மனப்பான்மையின்மை, சமய விழாக்களின்போது எழுந்த பூசல்கள், பழம்பகைமை ஆகியன அமைந்துள்ளன.

''...நாட்டை இரு கூறுகளாக வெட்டி விட்டதால்... இந்தியாவிலும் பாகிஸ்தானிலும் ரத்தக் களறியான அமளிகள் தோன்றின'';[70] ''...முகமதியர்களுக்குத் தீங்கு விளைவிப்பதை மதத்தின் பெயரால் தங்கள் கடமையாகக் கொண்டார்கள்'',[71] ''இந்துக்கள் கோயிலில் பெரும் விழாக் கொண்டாடினார்கள். ...பின்னர்க் கலவரமாக [அப்போது ஏற்பட்ட பகைமை] வளர்ந்தது'',[72] ''ஆதிகாலத்தில் முகமதியர்களின் கொடுமைக்கும், அட்டூழியத்துக்கும் ஆளாகியிருந்த காரணத்தால் .. துவேஷம் கொண்டார்கள்'',[73] என்பன முறையே நாட்டுப் பிரிவினை, மதவாதிகளின் குறுகிய நோக்கு, சமய விழா எடுப்போரின் பெருந்தன்மையின்மை, கடந்த காலப் பகைமை ஆகியன இனக் கலவரங்கள் தூண்டப்படுதற்குக் காரணங்களாக அமைந்தமையைத் தெளிவுறுத்தும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

2. இனக் கலவரங்களால் விளைந்த தீய விளைவுகள் சுட்டப்படுவதன் வாயிலாக அவல நிலையை இடித்துக் காட்டி ஒற்றுமையின் இன்றியமையாமை வலியுறுத்தப் படுகிறது.

இன வெறிக் கலவரங்களால் பலர் கொலையுண்டமையும், பெண்மையை இழந்தமையும், சமூக இழிவிற்குப் பெண்கள் ஆளான மையும், குடும்பத்தினரைப் பிரிந்தமையும், அடிதடிக்கு ஆட்பட்ட மையும் கதைகளில் சுட்டப்பட்டுள்ளன. வன்முறைக் கொலை களால் பெற்றோரையும் ('அஞ்சலி'), கணவனையும் ('வந்தே மாதரம்'), இழந்து வாழ்நாள் முழுவதும் துன்புறும் கொடுமைகள் சித்திரிக்கப்பட்டுள்ளன. பெற்றோரை இழந்த பெண்கள் அக்கல வரச் சூழலில் கடத்தப்பட்ட நிலையும் சுட்டப்படுகிறது ('அஞ்சலி').

''...தீமை செய்த கொடுமைகளை அனுபவித்தவருள் முதன் மையானவர்கள் தாய்மார்கள்...''[74] என்ற புலம்பலும், ''...மறு படியும் அன்னையாகிய பாவி...''[75] என்ற துடிப்பும், ''பெற் றோர்-சுற்றத்தாரைப் பிரிந்து கற்பை இழந்து நிற்கும் இந்த அபலைகள்''[76] என்ற கொதிப்பும் பெண்களுக்கு இழைக்கப்பட்ட தீங்கினை உணர்த்தும்.

இவ்வாறு தீய சக்தியால் கறைபட்ட பெண்களை இழிவாகக் கருதும் சமூகமும் ('இந்தச் சமூகம்'), கெடுக்கப்பட்ட பெண்களை ஏலத்திற்கு விட்டுக் காமப் பசியைத் தணிக்க முயலும் சமூகமும் ('அஞ்சலி') படம் பிடிக்கப்பட்டுள்ளன. மேலும் இக்கலவரத் தின் விளைவாக மனைவி, மக்கள் அனைவரையும் பிரிந்து துன்புற்றமையும் ('மேஜர்ரஹ்மான், பேசுகிறேன்') கொடிய வெறித்தனத் தாக்குதல்களுக்கு உட்பட்டு உடற்காயமுற்றமையும் ('பாங்கொலி', 'அஞ்சலி'), தெளிவாகின்றன.

இவை அனைத்தும் அவல உணர்வைத் தோற்றுவித்து ஒருமைப்பாட்டுணர்வின் இன்றியமையாமையை உணர்த்தி நிற்கின்றன.

3. கலவரப் பகுதிகளுக்கு வருகை தந்து ஆறுதலளித்தவர் காந்தியடிகள்.

கலவரச் சூழலில் மாசுபடுத்தப்பட்ட பெண்களுக்குக் காந்தி யடிகள் ஆறுதல் அளித்தமை, ''...அவரைக் கண்டு கதறித் துயர் தீர்ந்தோம்... அவர் பாதத் தூளிகளைத் தொட்டு ஒற்றிக்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கொண்டதன் மூலம் மாசுகளைந்து புனிதமானதுபோல் தோன்றியது''[77] என்ற உரையால் அறியப்படுகிறது.

4. ஒற்றுமைக்கு வித்திட்டவர் காந்தியடிகள்.

மக்களனைவரும் ஒருமைப்பாட்டுணர்வுடன் வாழச் செயற் பட்டவர் காந்தியடிகள் என்பது ''காந்தியைப் போற்றிவிட்டு முகமதிய சகோதரர்களை வெறுப்பதா?'';[78] ''காந்திஜீ எந்த இருபெரும் சமுதாய நலத்திற்குப் பாடுபட்டாரோ '';[79] ''அந்த ஊரில்... உத்தமன் [காந்தியடிகள்] உருவானான்... ஒற்றுமையின் வலிமையை அதுகண்டு கொண்டது''[80] என்ற குறிப்புகளால் உணர்த்தப்படுகிறது.

''...மகானின் [காந்தியடிகளின்] தரிசனம் அவனுள் ஓர் அபூர்வமான அமைதியைப் படரச் செய்தது... நாட்டின் பல கோடி மக்கள் அவ்வாறு எண்ணுபவர்கள் இருப்பார்கள்... மகத் தான தாயகத்துக்கு எந்நாளும் குறைவில்லை...''[81] என்ற பகுதி காந்தியடிகள் காட்டிய ஒற்றுமைக்கான அமைதிவழி, எந்நாளும் இந்தியாவிற்கு வழிகாட்டியாய் இருக்கும் என்ற நம்பிக்கையைத் தருவதாக உள்ளது.

குறிப்புகள் :

1 ஸ்ரீகிருஷ்ணதத்தபட், (தொ.ஆ.), **கிறிஸ்துவம்**, ப. *3*.

2 ஸ்ரீகிருஷ்ணதத்தபட், (தொ.ஆ.), **இந்துமதம் : புராணங் கள்**, ப. 45

3 இராமலிங்க அடிகள், திருவருட்பா, ஆறாம் திருமுறை, *5566*.

4 தாயுமானவர், பராபரக்கண்ணி, *221*.

5 தேசிகவிநாயகம் பிள்ளை, சி., **மலரும் மாலையும்** ,*91.2*.

6 திருநாவுக்கரசு, ஏ., (ப.ஆ.), **பாரதியார் கவிதைகள்**, தேசிய கீதங்கள், *17.4*.

7 மேலது, *1.4*.

8 பாரதிதாசன், பாரதிதாசன் கவிதைகள், புதிய உலகம், *1*.

9 பாலகிருஷ்ணன், பி.இ., (தொ.ஆ.), பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் பாடல்கள், ப. *230*.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

10 வேங்கடராஜுலு, ரா., (ப.ஆ.), **மகாத்மா காந்தி நூல்கள், தொகுதி 9**, அருணாசலம், க., வேங்கடராஜுலு, ரா., & ஜெயமணி சுப்பிரமணியம், (மொ.பெ.ஆ.), ப. *19*.

11 மேலது, ப. *180*.

12 மேலது, ப. *40*.

13 Gandhi, M.K., *Young India*, dt. 11-5-1921.

14 வேங்கடராஜுலு, ரா., (ப.ஆ.), மு.நூ., ப.2.

15 மேலது, பக். *2-3*.

16 Gandhi, M.K., *Young India*, dt., 11-5-1921.

17 Ibid., dt. 29-5-1924.

18 வேங்கடராஜுலு, ரா., (ப.ஆ.), மு. நூ., ப. *70*.

19 Gandhi, M.K., *Young India*, dt. 28-8-1924.

20 Ibid., dt. 21-8-1924.

21 வேங்கடராஜுலு, ரா., (ப.ஆ.), மு.நூ., பக். *16-17*.

22 மேலது, ப. *23*.

23 Gandhi, M.K., *Harijan*, dt. 13-7-1940.

24 Gandhi, M.K., *Young India*, dt. 5-1-1928.

25 Ibid., dt. 11-5-1921.

26 Ibid., dt. 20-10-1921.

27 வேங்கடராஜுலு, ரா., (ப.ஆ.) மு.நூ., ப.*157*.

28 Gandhi, M.K., *Young India*, dt. 29-9-1921.

29 Ibid., dt. 18-9-1924.

30 வேங்கடராஜுலு, ரா., (ப.ஆ.), மு.நூ., ப. *342*.

31 மேலது, ப. 70.

32 Gandhi, M.K., *Harijan*, dt. 28-9-1947.

33 Ibid.

34 வேங்கடராஜுலு, ரா., (ப.ஆ.), மு.நூ., ப.382.

35 மேலது, ப. *31*.

36 Gandhi, M.K., *Young India*, dt. 14-5-1919.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

37 Ibid., dt. 27-1-1927.
38 Ibid., dt. 11-5-1927.
39 வேங்கடராஜுலு, ரா., (ப.ஆ.), மு.நூ., பக்.16-17.
40 மாயாவி, 'அஞ்சலி', காந்திவழிக் கதைகள், கல்யாண ராமன், கே.ஆர்., (தொ.ஆ.), ப.61.
41 வேங்கடராஜுலு, ரா., (ப.ஆ.) மு.நூ., ப. 23.
42 கோமகள், 'வந்தே மாதரம்', காந்திவழிக் கதைகள், கல்யாணராமன், கே.ஆர்., (தொ.ஆ.), ப. 256.
43 மேலது, ப.250.
44 மேலது, ப.251.
45 ராஜு, தி.சா., 'மேஜர் ரஹ்மான் பேசுகிறேன்' காந்திவழிக் கதைகள், கல்யாணராமன், கே.ஆர்., (தொ.ஆ.), ப.327.
46 மேலது, ப. 328.
47 மகுதூம், 'பாங்கொலி', காந்திவழிக் கதைகள், கல்யாண ராமன், கே.ஆர்., (தொ.ஆ.), ப. 352.
48 மேலது, ப. 356.
49 அகிலன், 'சகோதரர் அன்றோ?', காந்திவழிக் கதைகள், கல்யாணராமன், கே.ஆர்., (தொ.ஆ.), ப. 167.
50 மேலது, ப. 171.
51 ராஜு, தி.சா., 'மேஜர் ரஹ்மான் பேசுகிறேன்', மு. நூ., ப. 338.
52 மகுதூம், 'பாங்கொலி', மு.நூ., ப. 359.
53 அகிலன், 'சகோதரர் அன்றோ?', மு. நூ., ப. 172.
54 Gandhi, M.K., *Harijan*, dt. 7-12-1947.
55 மாயாவி, 'அஞ்சலி', மு. நூ., ப. 60.
56 Gandhi, M.K., *Harijan*, dt. 29-6-1947.
57 மாயாவி, அஞ்சலி', மு. நூ., ப. 60.
58 வேங்கடராஜுலு, ரா., (ப.ஆ.), மு. நூ., ப. 77.
59 மாயாவி, 'அஞ்சலி', மு. நூ., ப. 66.
60 Gandhi, M.K., *Harijan*, dt. 3-11-1946.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

61 கோமகள், 'வந்தே மாதரம்', மு. நூ., ப. 256.

62 ராஜு, தி.சா., 'மேஜர் ரஹ்மான் பேசுகிறேன்', மு. நூ., ப. 328.

63 கோமகள், 'வந்தே மாதரம்', மு. நூ., ப. 256.

64 மேலது.

65 ராஜு, தி.சா., 'மேஜர் ரஹ்மான் பேசுகிறேன்', மு. நூ., ப. 329.

66 மேலது, ப. 332.

67 மாயாவி, 'இந்தச் சமூகம்', அகுதி, ப. 11.

68 அகிலன், 'கூட்டுக் குடும்பம்', 'சத்திய ஆவேசம்', ப. 60.

69 சூடாமணி, ஆர்., 'ஓர் இந்தியன் இறக்கிறான்', **ஓர் இந்தியன் இறக்கிறான்**, ப. 43.

70 மாயாவி, 'அஞ்சலி', மு. நூ., பக். 63–64.

71 மேலது, ப. 60.

72 மகுதூம், 'பாங்கொலி', மு. நூ., ப. 353.

73 மாயாவி, 'அஞ்சலி', மு. நூ., ப. 60.

74 கோமகள், 'வந்தே மாதரம்', மு. நூ., ப. 255.

75 மேலது, ப. 257.

76 மாயாவி, 'அஞ்சலி', மு. நூ., ப. 64.

77 கோமகள், 'வந்தே மாதரம்', மு. நூ., ப. 256.

78 மேலது, ப. 249.

79 மேலது, ப. 256.

80 அகிலன், 'கூட்டுக் குடும்பம்', மு. நூ., பக். 58-59.

81 சூடாமணி, ஆர்., 'ஓர் இந்தியன் இறக்கிறான்', மு. நூ., ப. 49.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

5

1. காந்திவழிக் கதைகளில் கிராம முன்னேற்றம்

காந்தியடிகளின் பொருளாதாரக் கோட்பாடுகளில் ஒன்று கிராம முன்னேற்றம். 'காந்திவழிக் கதைகள்' என்ற தொகுப்பு நூலின்கண் அமைந்துள்ள கதைகளின் அடிப்படையில் இக்கோட் பாடுபற்றிய ஆய்வு இவ்வைந்தாம் இயலின் முதற் பகுதியில் இடம்பெறுகிறது.

இந்தியக் கிராமங்கள்

இந்திய நாட்டைப்போல் இந்தியக் கிராமங்கள் பழமைச் சிறப்புடையவை என்பதை உணர்ந்த காந்தியடிகள், நம்முடைய கிராமங்கள் அழிந்தால் இந்தியாவும் அழிந்துவிடும் என்பதை நுணுக்கமாக ஆய்ந்தறிந்தவர்.[1] அவர் கருத்தின்படி சமுதாய வாழ்விற்குக் கிராம அலகு அடிப்படையாகும்.

தற்கட்டுப்பாட்டுடன் கூடிய தன்னாட்சியை, விடுதலை என்று குறிப்பிடும் அவர்[2] அத்தகைய விடுதலை உழவர் உட்பட எல்லோருக்கும் உரிமையுடையதாக இருக்க வேண்டும் என்கிறார்.[3] காந்தியடிகளின் கிராமத் தன்னாட்சியில் தனிமனித நலன் இன்றி யமையாதது. அற ஆன்மீக ஆற்றல்களைச் சார்ந்து அமையும் காந்தியப் பொருளாதாரத்தில் ஒவ்வொரு தனிமனிதனும் உயர் வானவன் என்ற குமரப்பாவின் விளக்கம் அக்கருத்தை வலியுறுத்த உதவும்.[4]

இந்தியா உண்மையான விடுதலை அடைய வேண்டுமானால், மக்கள் கிராமங்களில்தான் வாழவேண்டியிருக்கும்; நகரங் களில் அமைதியுடன் ஒரு போதும் வாழ முடியாது என்று கணித்துக் கூறுகிறார் காந்தியடிகள்.[5] எளிமையான கிராமிய வாழ்க்கையில்தான் சத்தியத்தையும் அகிம்சையையும் காணமுடி யும் என்பது அவரது தெளிந்த முடிபு.[6] அவ்வாறு அகிம்சையைக் கடைப்பிடிக்கும் நிலையில்தான் தனிப்பட்டவர்க்கு முழுமையான விடுதலை கிடைக்க முடியும் என்பது அவரது எண்ணம்.[7]

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கிராமத் தன்னாட்சி

காந்தியடிகள் கிராமத் தன்னாட்சி எப்படி இருக்கவேண்டும் என்று திட்டமிட்டு வரைபடம் உருவாக்கியவர். அவர் கருத்தின் படி, அது வாழ்வின் அடிப்படைத் தேவைகளுக்கு அடுத்தவரை எதிர்பார்க்காத ஒரு முழுமையான குடியரசாக இருக்கும்; ஒவ்வொரு கிராமமும் தனது உணவுக்குத் தேவையான பயிர் களையும், துணிக்குத் தேவையான பருத்தியையும் விளைவிப்பதில் விழிப்பாக இருக்கும்; கிராமத்தில் கால்நடை மேய்ச்சல் நிலம், வயதானவர் ஓய்வு பெறும் நிலம், குழந்தைகள் விளையாடுமிடம் ஆகியவை தவிர எஞ்சிய நிலத்தில் பயனுள்ள பயிர்களை விளை விக்கும்; நாடக அரங்கு, பள்ளிக்கூடம், பொது மண்டபம், குடி நீர் நிலையம், ஆதாரப்பள்ளி ஆகியவற்றுடன் விளங்கும் கிராமத்தில் எல்லாச் செயல்களும் கூட்டுறவு அடிப்படையில் நடைபெறும்; அங்குத் தீண்டாமையும் சாதிகளும் இருக்கமாட்டா.[8]

அவரது எண்ணத்தின்படி சத்தியாக்கிரகம், ஒத்துழையாமை என்ற ஆயுதங்களுடன் அகிம்சையே கிராமத்தின் அதிகார பல மாக இருக்கும்; பொதுநலப் பணி புரிவதற்காகக் கிராமத் தொண் டர்படை அமையும்; மக்களால் உருவாகும் பஞ்சாயத்தே சட்ட மன்றமாகவும், நீதி மன்றமாகவும், ஆட்சிக் குழுவாகவும் விளங்கும்.[9] காந்தியடிகள் விரும்பும் இலட்சியக் கிராமத்தில் நூற்றுக்கு நூறு சுகாதாரம், போதுமான வெளிச்சம், காற் றோட்டம் ஆகியவற்றுடன் ஐந்து கல் சுற்றளவிற்குள் கிடைக்கும் பொருள்களைக் கொண்டு கட்டப்பட்ட குடிசைகள் இருக்கும்; மேலும் எல்லோரும் வழிபடக் கூடிய ஆலயங்கள், கூட்டுறவுப் பால்பண்ணை, தொழிற் கல்வியை மையமாகக் கொண்ட தொடக்க உயர்நிலைப் பள்ளிகள் முதலியனவும் அங்கு இருக்கும்.[10]

உழவுத் தொழில், கிராமக் கைத்தொழில்கள், தன்னிறைவு என்பன காந்தியடிகளின் கிராமப் பொருளாதாரத் திட்டக் கோட் பாடுகளுள் சில ஆகும். ''காந்தியப் பொருளாதாரக் கருத்துகளின் மையமாக உழவனும், வேளாண்மைக் கூலியும் இருக்கின்றனர். அவர் கதர் கிராமக் கைத்தொழில்களைச் சார்ந்த வேளாண்மை நாகரிகத்தின் காப்பாளராக இருந்தார்''[11] என்ற விசுவநாத் பிரசாத் வர்மாவின் கூற்று நினைத்தற்குரியது.

உழவுத் தொழில்

உழவர்தம் வாழ்க்கை மேன்மையான வாழ்க்கை என்பதைக் 'கடையனுக்கும் கடைத்தேற்றம்' என்ற நூலின் வழி அறிந்தவர்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

காந்தியடிகள். இந்திய நாட்டு மக்களுக்கு எப்போதும் தவறாத நிலையான ஆதரவாக இருப்பது உழவுத்தொழில் ஒன்றே[12] என்பதை நன்கு உணர்ந்த அவர், ''விவசாயத்தில் கவனம் செலுத்த வேண்டிய காலம் வந்து விட்டது... விவசாயத்தில் அக்கறை கொள்ளக் கூடிய ஊழியர்களை நாம் இனிமேல் கண்டு பிடிக்க வேண்டும்''[13] என்கிறார்.

மனிதனின் உடல் உழைப்பு, உழவுத் தொழில் ஒன்றைத் தான் சார்ந்ததாக இருக்க முடியும் என்பது காந்தியடிகள் கணிப்பு.[14] வாழ்க்கைக்கு வேண்டிய உணவைப் பெறுவதற்குத் தனி ஒருவன் நெற்றி வேர்வை நிலத்தில் விழப் பாடுபட வேண்டும்;[15] அவ்வாறு தனது நிலத்தில் தானே உழைக்கும் உழவனுக்குத்தான் முதலிடம் உண்டு;[16] செல்வத்தை உண்மை யாக உற்பத்தி செய்பவர்கள் அவர்களே;[17] என்பன உழவுத் தொழிலின் உயர்வில் அவருக்கிருந்த நம்பிக்கையை உறுதிப் படுத்தும்.

கிராமப் பொருளாதாரத்தின் அடிப்படைத் தத்துவமே சத்துள்ள உணவு கிடைக்க வேண்டும் என்பதுதான் என எண்ணும்[18] அவர், பணப்பயிர்கள் பயிர் செய்வதை விடுத்து உணவுப் பொருள்களை உற்பத்தி செய்வதும், அதற்காகத் தரிசு நிலங்களையும் பண்படுத்துவதுமே சிறப்பு என்றும் கருதுகிறார்.[19] மேலும், உழவின் முழுப்பலன்களும் கிட்டவேண்டுமாயின், கூட்டுறவு விவசாயப் பண்ணையை மேற்கொள்ளல் சிறப்பு என்பதையும் சுட்டுகிறார்.[20]

கிராமக் கைத்தொழில்கள்

கிராம முன்னேற்றம் எல்லாக் கிராமக் கைத்தொழில்களை யும் மறுமலர்ச்சியடையச் செய்வதன் மூலம் சாத்தியமாகும் என நம்பும் காந்தியடிகள், சிறு தொழில்களுக்கு நாம் உதவினால் நாட்டின் உயர்வுக்கு உதவியவர்களாவோம் என்கிறார்.[21] ''இந்தியாவின் பொருளாதார தார்மீக மறுமலர்ச்சிக்குக் கையால் நூற்பதும் நெய்வதும் மிகப் பெரிய சாதனங்களாக இருக்கும்''[22] என்பதில் தமக்கு உறுதியான நம்பிக்கை இருப்பதாகச் சுட்டுகிறார்.

நகர நாகரிகமும் கிராம நாகரிகமும் முற்றும் வேறுபட்டவை என்று கருதும் அவர், ஒன்று எந்திரத் தொழிலையும் மற்றொன்று

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கைத்தொழில்களையும் சார்ந்திருப்பதைச் சுட்டியுள்ளார்.[23] தொழில் மயமாக்குவதால் நகர மக்களுக்குக் கொள்ளை இலாபமும் நல்ல ஊதியமும் கிடைக்கலாம். ஆனாலும் கிராம மக்களின் இரத்தத்தை உறிஞ்சுவதன் மூலமே இது சாத்தியமாகும் என அறுதியிட்டுரைக்கிறார்.[24]

''நகரங்களும், ஆலைகளும் பெருகிக்கொண்டே போவது இந்தியாவிலுள்ள கோடிக்கணக்கான மக்களுடைய செல்வ வளத்துக்கு நிச்சயமாக உதவாது; அதற்கு மாறாக வேலையற்றிருப்போரின் வறுமையை அது அதிகப்படுத்தும். அதனால் பட்டினியால் வரக்கூடிய அத்தனை நோய்களும் வரும்''[25] என்று அவர் கூறுவது எந்திரப் பொருளாதாரத்தின் தீமையை உணர்த்தும். கையால் மாவு அரைத்தல், நெல் குத்துதல், சோப்பு செய்தல், காகிதம் செய்தல், தீப்பெட்டி செய்தல், தோல் பதனிடுதல், எண்ணெய் ஆட்டுதல் முதலிய இன்றியமையாத கிராமக் கைத்தொழில்கள் இல்லாமல் கிராமப் பொருளாதாரம் முழுமை அடைய முடியாது என்பதை உணர்ந்த அவர், எங்கெங்கே கிராமியப் பொருள்கள் கிடைக்கின்றனவோ அங்கெல்லாம் அவற்றைப் பயன்படுத்த ஒவ்வொருவரும் உறுதி கொள்ள வேண்டுகிறார்.[26]

தன்னிறைவு

கிராமங்கள் தமக்கு வேண்டிய இன்றியமையாத எல்லாப் பொருள்களையும் உற்பத்தி செய்து தன்னிறைவுடன் திகழ வேண்டும் என்ற விழைவுடைய காந்தியடிகள், தேவை ஏற்படும் போது கிராமங்கள் ஒன்றையொன்று சார்ந்திருக்கும் என்றும் குறிப்பிடுகிறார்.[27] நகரங்கள் கிராமங்களுக்குத் துணையாக இருக்க வேண்டும் என்பதை, ''என்னுடைய திட்டத்தின் கீழ், எவற்றை ஒரே மாதிரி நன்றாகக் கிராமங்களிலும் உற்பத்தி செய்ய முடியுமோ அவற்றை நகரங்களில் உற்பத்தி செய்ய அனுமதிக்க மாட்டோம். நகரங்கள் கிராமப்பொருள்களை விற்பனை செய்பவையாகச் சரியாகச் செயற்படும்''[28] என்று விளக்குகிறார்.

ஒரு கிராமம் விவசாயம், கைத்தொழில்கள் ஆகியவற்றில் தன்னிறைவு அடைவதற்குக் கிராம ஊழியர் உதவ வேண்டும் என எண்ணுகிறார் காந்தியடிகள். அவர்கருத்தின்படி ஊழியரின் வாழ்க்கை, கிராம வாழ்க்கையை ஒட்டியதாக இருக்க வேண்டும்;[29] தொண்டுணர்வு உள்ளவர்களைத் தூண்டிக் கிராமங்களில் குடியேற்றி அங்குள்ளவர்களுடன் நல்லுறவு கொள்ளச் செய்து கிராமப் பணியில் இன்புங்காணச் செய்தல் வேண்டும்.[30]

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஒவ்வொருவரும் தமக்குத் தேவையான அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்வதற்கு உரிய இடம் கிராமம் என்று கருதும் அவர், அத்தகைய தன்னிறைவு ஒரு பொதுநலப் பணிக்கு வழியாக இருக்க ஒவ்வொருவரும் தம் தேவையை நிறைவு செய்து கொண்ட பிறகு, ஒழிந்த நேரத்தைப் பிறர் நலத்திற்காகப் பயன்படுத்தினால் நலம் என்கிறார்.[31] கல்வி கற்ற ஒவ்வொருவரும் கிராம நிருமாண முறையில் நிலத்தில் பாடுபட்டும், எஞ்சிய நேரத்தில் பிறருக்குத் தம் அறிவைப் பயன்படுத்தியும் பணிபுரியின், தன்தேவை நிறைவு அடைவதுடன் கிராமங்கள் முழு வளர்ச்சியும், மலர்ச்சியும் பெறும் என்ற வினோபாவின் கூற்று நினைத்தற்குரியது.[32]

கிராமப் பணியில் காந்தியடிகளின் பங்கு

காந்தியடிகள் பிறப்பாலும் வளர்ப்பாலும் நகரைச் சார்ந்த வர் எனினும், வாழ்க்கையாலும் இலட்சியத்தாலும் கிராமத்தைச் சார்ந்தவர். தம்மைக் கிராம மக்களுடைய தோட்டியாகவும், மருத்துவராகவும், பணியாளராகவும் கருதிப் பணி செய்ய முற்பட்டவர் அவர்.

கிராம மக்களுடன் நெருக்கமான பிணைப்பை வைத்துக் கொள்ளுவதன் மூலமாக அவர்களுடைய பழக்க வழக்கங்களையும் சீர்ப்படுத்த விரும்பியவர் அவர். ''... அவர்கள் குடும்ப நிலையை அறிய வேண்டும்... நம் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் போலவே பாவித்து அவர்களை நன்கு அறிந்து கொள்ள வேண்டும் ... அவர்களுடன் நாம் தொடர்பு ஏற்படுத்திக் கொண்டால் அவர்கள் பழக்கங்களில் சிலவற்றை விட்டுக் கொடுக்கச் செய்யும் முயற்சி எளியதாகவும் பலனுள்ளதாகவும் இருக்கும்''[33] என்ற அவரது விளக்கம் மேற்கூறிய கருத்தைத் தெளிவுபடுத்தும்.

வழக்கறிஞர் தொழிலினின்று விலகிய அவர், தென்னாப்பிரிக் காவில் உருவாக்கிய போனிக்ஸ் குடியிருப்பில் தாமே விரும்பி உடலுழைப்பை மேற்கொள்ளும் நிலையில் உழவுத் தொழிலில் ஈடுபட்டார். இந்தியாவிற்குத் திரும்பிய பிறகும் உழவர்களோடு சேர்ந்தே வாழ முற்பட்டார். உழவர்களுக்காக 1917-இல் அவர் இந்தியாவில் முதல் சத்தியாக்கிரகத்தை மேற்கொண்டார். சம்பாரண் மாவட்ட உழவர்களின் துன்பத்தைப் போக்க நேரிடை யாக அவ்விடத்திற்குச் சென்று அவர்களைச் சந்தித்ததைக்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

''...கடவுளையும் அகிம்சையையும், சத்தியத்தையும் நேருக்கு நேராக நான் தரிசித்தேன்...''[34] என்கிறார்.

சம்பாரண் சத்தியாக்கிரக நிகழ்ச்சி, காந்தியடிகளைக் கிராமப் பணிக்குத் தூண்டுவதாக இருந்தது. அவர் தொண்டர் பலரைச் சேர்த்துக்கொண்டு அங்கே ஆறு கிராமங்களில் உள்ள மக்களுக்குக் கல்வி, சுகாதாரம் கற்பித்தும், வைத்திய உதவி அளித்தும் அவர்களுடைய நம்பிக்கையையும் மதிப்பையும் பெற்றார். 1918-இல் கேடா மாவட்டத்தில் உழவர்களுக்காக நிலவரியை எதிர்த்துச் சத்தியாக்கிரகத்தை மேற்கொண்டார்.

கிராமத்தாரைப் போல் குடிசையில் வாழ்ந்து உடலுழைப்புச் செய்வதையே கடமையாகக் கொண்டவர் காந்தியடிகள். இதன் பயனாகக் 'கதர் கிராமத் தொழில் இயக்கம்' பிறந்தது. அவர் இந்தியாவில் இருந்தபோது, கிராமப் பணி புரியவேண்டும் என்ற குறிக்கோளில் சேவா கிராமத்தைத் தேர்ந்தெடுத்து ஆசிரமம் அமைத்துத் தம்முடன் சேர்ந்திருந்தவரையெல்லாம் அப்பணியில் ஊக்குவித்தார். ''என் இதயம் கிராமங்களில் உள்ளது... கிராமத்திற்குச் செல்லக் கடவுளே அளித்த வாய்ப்பாக ஏற்றுச் செல்வேன்''[35] என மீராபென்னுக்கு எழுதிய மடலில் குறிப்பிட்டுள்ளார். சிந்தி என்ற கிராமத்தில், கிராம மக்கள் செவிசாய்க்க மறுத்தால் மீராபென் குழுவினரே சாலைகளைத் துப்புரவு செய்ய வேண்டும் என அவர் கூறியதற்கேற்ப, அக்குழுவினர் கழிவுப் பொருள்கள் உள்ள இடங்களைத் துப்புரவு செய்தனர். காந்தியடிகளின் தூண்டுதலால் இராஜகுமாரி அமிருத்கௌர், கிராம மக்களுடன் தொடர்பு கொண்டு சுற்றியுள்ள கிராமங்களைத் தாமே சீர் படுத்த முன்வந்தார்.

இவ்வாறு நகரத்தில் பிறந்து இங்கிலாந்தில் மேல்படிப்புக் கற்ற காந்தியடிகள் இந்தியாவின் சீரமைப்பிற்கு அடிப்படை கிராம முன்னேற்றம் எனக்கண்டு, கிராமப் பணியில் ஈடுபட்டுத் தாம் கிராமத்தைச் சார்ந்தவராக வாழ்ந்து காட்டித் தம்மோடு சேர்ந்தவர்களையும் அப்பணியில் ஊக்குவித்துக் கிராம இயக்கம் உருவாக்கிய நிலையில் தனித்தன்மை மிக்கவராகக் காணப்படுகிறார். மேலும் கிராமங்கள் தோறும் சென்று அங்குள்ள மக்களிடம் நேரிடையாக உரையாடியும், சொற்பொழிவுகள் ஆற்றியும், பல கட்டுரைகள் எழுதியும் கிராம மக்களிடம் விழிப்புணர்ச்சியை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

உண்டாக்கிக் கிராமக் கைத்தொழில்கள் சீர்மை பெற அவர் உழைத்தார்.[36]

இனி, 'காந்திவழிக் கதைகள்' என்ற நூலில் உள்ள கதைகளில் இடம்பெறும் கிராம முன்னேற்றம் பற்றிய ஆய்வு இடம் பெறுகிறது.

கிராம முன்னேற்றம் பற்றிய கதைகள்

'கிராம முன்னேற்றம்' என்ற கொள்கையை விளக்க அமைந்துள்ள நான்கு கதைகளுள், கிராம முன்னேற்றப் பணியில் கற்றோரும் பங்கு பெறவேண்டும் என்பதை வசந்தன் எழுதிய 'வைத்தியநாதன்' என்ற கதையும், சமூக நலனுக்காக உழவுத் தொழில் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதை எஸ். ரங்கநாயகியின் 'அமுத நீர்' என்ற கதையும் விளக்குகின்றன. கிராமியச் சூழலில் உடல் உழைப்பால் உயர்ந்து விளங்கும் குடும்பத்தினரைப் பற்றியது உமா குருமூர்த்தி எழுதிய 'ராஜியின் கணவன்'. நகரினும் கிராமமே வாழ்வதற்கு ஏற்றது என்பதை மஹி எழுதிய 'கிராம ராஜ்ஜியம்' என்ற கதை விளக்குகிறது.

கதைச் சுருக்கமும் கருவும்

'வைத்திய நாதன்' என்ற கதையில் கொள்ளை நோய்க்குப் பலியான கீழையூர்க் கிராம மக்களைக் காப்பதற்கான பணியை விரும்பி ஏற்கும் மருத்துவர் சுந்தரம் அங்கே செல்கிறார். கிராமப் பணியை விரும்பாத அவர் மனைவி மன நோய்க்கு ஆளாகி மயக்கமுறுகிறாள். அப்போது பயணம் செய்தல் கூடாது என்பதால் அக்கிராமத்தில் வேறோர் இடத்தில் அவளை இருக்கச் செய்யும் அவர், தான் இருப்பது பட்டணமே என்ற உணர்வை அவளிடம் உண்டாக்குகிறார். இறுதியில் உண்மையறிந்து தன் செயலுக்கு வருந்தும் அவள், கணவனுடன் கிராமநலப் பணியை மேற்கொள்கிறாள். 'பட்டம்பெற்ற வைத்தியர்கள் கிராம மருத்துவப் பணியில் ஈடுபட வேண்டும்' என்பது இக்கதைக் கருவாகும். இலட்சிய சமுதாயத்தில் படித்த மருத்துவர்கள் முதலானோர் சமூக நலனுக்காக உழைக்கவேண்டும்[37] என்ற காந்தியடிகளின் கருத்திற்கேற்பக் கரு அமைந்துள்ளது.

'அமுத நீர்' என்ற கதையில் நாட்டுப்பற்று மிக்க ஆறுமுகம் என்பவர் பொது நலனுக்குப் பயன்படுத்த வேண்டும் என்பதற்காகவே, கிராமத் தரிசு நிலங்களை வளமாக்கி நல்ல விளைச்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சலைக் காண்கிறார். இலாப நோக்கிற்காகத் தரிசு நிலங்களை அவரிடம் விற்ற முத்துக்குமரு என்பவர் தன்னலத்திற்காக உழுது விதைத்துப் பலன் கிட்டாத நிலையில், கந்தன் என்பவனால் ஆறுமுகத்தின் விளைச்சலை நாசப்படுத்தத் திட்டமிடுகிறார். நாட்டு மக்களுக்கு ஊட்டத்தைக் கொடுக்கும் அமுதத்தை வழங்குபவள் நிலத்தாய் என்ற ஆறுமுகத்தின் ஆவேசப் பேச்சு, கந்தனை மனம் மாறச் செய்கிறது. 'சமூக நன்மைக்காக உழவுத் தொழிலில் ஈடுபட்டு உணவு உற்பத்தி செய்தல் மிகச் சிறந்த பணி' என்பது இக்கதைக் கரு. பொது நன்மைக்காகவே உழவுத் தொழில் அமையவேண்டும் என்று குறிப்பிடும் காந்தியடிகளின் கருத்து நினைத்தற்குரியது.[38]

'ராஜியின் கணவன்' என்பதில் கிராம ஆசிரியரான தன் கணவன், மாமி முதலியோர் காந்தியடிகள் குறிப்பிடும் தன்னிறைவுக் கோட்பாட்டின்படி தாமே உழைத்துப் பயனடைவதைக் கண்ட ராஜி, கிராம நாகரிகத்தில் மனம் தோய்கிறாள். நகர நாகரிகத்தில் உழலும் அவள் தாய் வீட்டார் அவளை எள்ளி நகையாடுகின்றனர். மூத்த மருமகனின் வயிற்றுக் கோளாறு நீங்கத் தோட்டத்துப் பனி நீர் தேவை என நகர மருத்துவர் கூறியதை, அவள் தந்தை குறிப்பிட எல்லோரையும் கிராமத்திற்கு வருமாறு மகிழ்வுடனும் பெருமையுடனும் கூறுகிறாள். 'கிராம வாழ்க்கை தன்னிறைவிற்குரியது' என்பது இதன் கரு. கிராமங்கள் தன்னிறைவு உள்ளவையாக இருத்தல் வேண்டும்[39] என்ற காந்தியடிகளுடைய கருத்தின் அடிப்படையில் இக்கதை அமைகிறது.

'கிராமராஜ்ஜியம்' என்ற கதையில் குரு என்பவரை, ரோஸம்மா என்ற சமூகநலத் தலைவி குடியரசு விழாவில் கொடியேற்றத் தன் கிராமத்திற்கு அழைக்கிறாள். பள்ளிப் பருவத்தில் காந்தியடிகளால் ஈர்க்கப்பட்டுப் பிற்காலத்தில் ரோஸம்மா கிராமப் பணியைத் தொடங்கக் குருவோ அரசியலில் நுழைந்தார். மனத் தடுமாற்றத்திற்கு இடமளிக்கும் அரசியல் வாழ்வில் அலுப்புற்ற அவர், அவளுடைய கிராமத்திலேயே தங்கிக் கிராமக் கலைகளைக் கற்க முற்படுகிறார். 'அரசியல் பதவிகளை நாடி அலைவதினும் கிராமக் கலைகளைக் கற்று மனநிறைவுடன் வாழ்வதே சிறப்பு' என்பது இக்கதையின் கரு. நிருமாணத் திட்டங்களில் ஒன்றாகக் கிராமக் கைத்தொழில்களைக் காந்தியடிகள் ஏற்றிருப்பதும்,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

''நிருமாணத் திட்டம் இல்லாமல் எந்த அரசியல் திட்டமும் நிலைத்து நிற்க முடியாது''[40] என்று அவர் குறிப்பிட்டிருப்பதும் நினைத்தற்குரியன.

கதைப் பின்னலில் கொள்கையைப் புலப்படுத்தல்

இக்கதைகளில் தனிமனிதரிடையே நிகழும் புறப்போராட்டங் களும், தனிமனித அகப்போராட்டமும் நிகழ்ச்சிப் பின்னல்களுக்கு அடிப்படையாயுள்ளன. இறுதியில் கிராம வாழ்வின் இன்றிய மையாமை உணர்த்தப்படுகிறது.

பாத்திரப் படைப்பு

'வைத்தியநாதன்' என்ற கதையில் மருத்துவர் சுந்தரம், படித்துப் பட்டம் பெற்றவராக இருந்தும் கிராமத்தில் பொருளீட்டு வதைக் குறிக்கோளாகக் கொள்ளாமல் அங்கு மருத்துவம் புரிவதை இலட்சியமாகக் கொண்டுள்ளார். ''...நான் வரும்படிக்காகக் கீழையூருக்குப் போகவில்லை. ஏழை ஜனங்களுக்குச் சேவை செய்வதற்காகத்தான் போகிறேன்.''[41] என்ற அவருடைய கூற்று அக்கருத்தை வலியுறுத்த உதவும். ''எல்லோருடைய பொது நன்மைக்காகவும் உழைக்கும் ஒருவன் சமூகத்துக்காகச் சேவை செய்கிறான்''[42] என்ற காந்தியடிகளின் கருத்திற்கேற்பச் சமூகப் பணியாளராக ஒளிர்கிறார் சுந்தரம்.

இக்கதையில் அவர் மனைவி ஜானகி கிராமப் பணியில் விருப்பற்று இருந்தமை, ''கணவன் நகரத்தில் வைத்தியம் செய்து அதிகப் புகழையும் பொருளையும் சம்பாதிப்பான். தானும் நல்ல ஆடம்பர வாழ்க்கை வாழலாம் என்று மனக்கோட்டை கட்டியிருந்த ஜானகிக்குத் தன் கணவனின் கிராம சேவைப் பித்து கொஞ்சமும் பிடிக்கவில்லை''[43] என்ற ஆசிரியர் கூற்றால் புலனாகும். இறுதி யில் அப்பணியில் தன்னையும் அவள் ஈடுபடுத்துவது, கிராமப் பணி வாழ்க்கை மேற்கொள்ளத்தக்க ஒன்று என்ற அவளது எண்ணத்தை உணர்த்தும்.

'அமுத நீர்' என்பதில், ''...இந்த நெலத்துலே விளையற ஒவ்வொரு மணி நெல்லும் எனக்குச் சொந்தமில்லைடா. இந்த நாட்டுலே இருக்கிற ஒவ்வொருத்தனுக்கும் சொந்தம்..[44] என்ற ஆறுமுகத்தின் கூற்று, உழவுத்தொழில் நாட்டிற்காக மேற் கொள்ளத்தக்க ஒன்று என்பதைத் தெளிவுறுத்தும். இக்கதையில், ''...இந்த மலட்டு மண்ணை விற்று, தான் [முத்துக்குமரு] லாபம்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கண்டுவிட்டதாக இறுமாந்திருக்கும் போது...[15] என்ற ஆசிரியர் கூற்றுப் பிறர் நலம் கருதாமல் இலாப நோக்கையே கருதி உழவுத் தொழிலை மேற்கொள்ள முனைந்தவர் முத்துக்குமரு என்பதை விளக்கும்.

'ராஜியின் கணவன்' என்பதில் மாதவன் ஆசிரியராக இருந்தும் கிராமச் சூழலில் தன்னிறைவுடன் வாழ்வதை ''விடியற் காலையில் எழுகை; தொழுகை; பின்னர் தொழுவத்தில் மாடுகள் பராமரிப்பு, தோட்ட வேலை, வேலைக்காரர்களை விசாரித்தல்... பாதிநாட்கள் பக்கத்துக் கிராமத்தில் நூற்பு யக்ஞம் சேரியில் காரியம் என்று வெளி வேலைகள் வேறு''[46] என ஆசிரியர் சித்திரிக் கிறார். உணவிற்கு வேண்டிய பொருள்களையும் துணிக்குவேண்டிய பஞ்சையும் ஒவ்வொருகிராமமும் உற்பத்தி செய்து கொள்ளுவதைத் தன்னிறைவு என்கிறார் காந்தியடிகள்.[47] ''...மாடும், கன்றும், வீடும் வாசலும் வேலைகள் கொள்ளை கொள்ளையாய்க் காத் திருக்கையில் இந்தத் தள்ளாத வயதிலும் வேலைக்கு ஆளின்றி எப்படித்தான் சமாளிக்க முடிகிறதோ?''[48] என்று மாதவனுடைய தாய் தன்னிறைவு வாழ்வு வாழ்வதை ஆசிரியர் குறிப்பிடுகிறார்.

இக்கதையில் நகரச் சூழலில் பிறந்தவளான ராஜிக்கு அவள் தாய் வீட்டில் உடலுழைப்பிற்கும், தற்சார்பிற்கும் இடமேயில்லை என்பதை ஆசிரியர் சுட்டுகிறார். ''அவர்களுடைய தகுதிக்கு வீட்டில் சமையலுக்கு ஆள் இல்லை என்றாலே நாலு பேர் நகைப் பார்கள். அப்படியிருக்க அஞ்சலையின் வேலையை அவர்களால் எப்படிச் செய்ய முடியும்?''[49] என்று பிறரை நம்பியே வாழும் ராஜியின் குடும்பத்தாரது நகர வாழ்வை ஆசிரியர் படம் பிடிக் கிறார்.

'கிராமராஜ்ஜிய'த்தில் குரு அரசியல் பணி புரிந்ததை, ''அந்தச் சந்திப்பின் [காந்தியடிகளுக்கு மாலையணிவித்த] கார ணமோ என்னமோ நானும் அரசியலில் பங்கு கொண்டு அதிகமாக ஈடுபட்டேன்''[50] என்ற அவரது கூற்றே தெளிவாக்கும். நகரத்தில் இருந்து கொண்டு அரசியல் பணி செய்வதினும் கிராம நிருமாணத் திட்டத்தினைச் செயற்படுத்துவதே நல்லது என்று நினைத்த அவரது மனமாற்றத்தைப் ''...பட்டண வாழ்வு எனக்குப் பிடிக்க வில்லை''[51]; ''எனக்கும் நூற்கக் கற்றுக் கொடுப்பாயா...''[52] என்ற அவர்தம் உரைகள் விளக்கும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இக்கதையில் ரோஸம்மா காந்திய வழியில் நூற்பு முதலிய கிராமியக் கலைகளை மேற்கொண்டு கிராம மக்களையும் அக் கலைகளில் ஈடுபடுத்திக் கிராம நலனுக்குப் பணி புரிபவளாகப் படைக்கப்பட்டிருக்கிறாள். ''...இன்னம் நூற்றுக்கொண்டிருக்கி றேன். என்னுடன் மட்டும் இல்லாமல் இந்தப் பக்கத்துக் கிராம மக்கள் அனைவரும் நூற்கிறார்கள்''[53] என்ற அவள் கூற்று மேற் கூறிய கருத்தைத் தெளிவாக்கும்.

பாத்திரப் படைப்பு - ஒரு மதிப்பீடு

இக்கதைகளில் கிராம முன்னேற்றத்திற்காகச் செயற்படும் பாத்திரங்களைக் காட்டிலும், அதற்குத் தடையாகச் செயற்படுபவர் கள் மிகச் சிலரே காணப்படுகின்றனர். கிராமச் சமுதாயங்கள் மறுமலர்ச்சி அடையுமாறு செய்யவேண்டும் என்று[54] காந்தியடிகள் கூறியபடி கிராமச் சீரமைப்பு ஒன்றே நாட்டின் முன்னேற்றத் திற்கு வழி என்பதைச் சமுதாயத்தில் ஒவ்வொருவரும் அறிவர். ஆதலால் எக்கதையிலும் இக்கொள்கையைக் கடுமையாக எதிர்க் கும் பாத்திரம் படைக்கப்படவில்லை.

கிராம முன்னேற்றத்திற்காகத் தம் குடும்பத்தார் அப்பணியில் ஈடுபட்டிருப்பதை விரும்பாதவர்களாகப் பெண்கள் சித்திரிக்கப் பட்டுள்ளனர். கிராமத்தில் கணவன் மருத்துவப்பணி புரிவதை விரும் பாதவளாக ஜானகியும் ('வைத்தியநாதன்'), கிராமத்தில் நாள் தோறும் தன் கணவன் பிறரைச் சார்ந்திராமல் தானே உழைப் பதை விரும்பாதவளாக ராஜியும் ('ராஜியின் கணவன்'), மண் நிலத்திற்குச் செலவிட்டு மாடாய் உழைக்கும் கணவனதுசெயலுக்கு வருந்துபவளாக வள்ளியும் ('அமுத நீர்') அமைகின்றனர். கிராமப் பணியில் விருப்பமின்மைக்குக் காரணத்தை ஆராயுங்கால் ஜானகி, ராஜி போன்றோரின் நகர நாகரிக விருப்பமே என்பது தெளி வாகிறது. இறுதியில் இவர்கள் மனமாற்றம் அடைவதாகக் காட்டு வதன்வழி நகர நாகரிகத்திற்கு ஆதரவு தராமல் கிராம நாகரி கத்தை ஏற்பதே சிறந்தது என்பது உணர்த்தப்படுகிறது.

கிராமத்தை வெறுத்த ஜானகி, ராஜி போன்றோர் அவ் வெறுப்பினின்று நீங்குவதும், கிராமநில விளைச்சலை அழிக்கத் தூண்டிய தன்னலநோக்குடைய முத்துக்குமரு மனம் மாறுவதும் எத்தகைய கட்டாயத்தினாலன்றித் தாமாகவே அடையும் மன மாற்றத்தினால் என்பது தெளிவாகிறது. வன்முறைகள் ஏது மின்றித் தானாக உணர்ந்து மனமாற்றம் அடைவது காந்தியத்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தின் சிறப்பு. அந்நிலையில் கணவன்மார்தம் அன்புவழிப்பணி அப்பெண்கள் மனம் மாறுவதற்கும், ஆறுமுகத்தின் பகைமை பாராட்டாத பண்பு முத்துக்குமருவின் மனம் நெகிழ்வதற்கும் காரணங்களாக அமையுமாறு அந்தந்தப் பாத்திரங்கள் படைக்கப் பட்டிருப்பது அன்புவழியின் ஆற்றலை உணர்த்தும்.

உத்திகள்

கொள்கையை விளக்கும் உரை

'அமுத நீர்' என்ற கதையில், நாட்டிலுள்ளோர்க்குப் பயன்பட உழவின் வளத்தினைப் பெருக்குவது கடமை என்பதை ஆறுமுகம், ''...இந்தப் பூமித் தாயின் கருணையிலும் கனவிலும் தான் நாம நிக்கிறோம். இந்தத் தாயைக் காப்பாத்த வேலப்பனைப் போல வலுவுள்ளவங்க எல்லையிலே நிக்கறாங்க. நாம பயமில்லாம தாய்க்கு வலுவூட்டி, அவ கருணையிலே அவங்களையும் வலு வாக்கி, நம்பளும் பசியாத்தறோம்..''[55] என்று பிரசாரம்போல் கூறுகிறார்.

'ராஜியின் கணவன்' என்ற கதையில் ராஜி தன் கணவன் வீட்டார் தம் உழைப்பில் நிறைவு காணுவதை, ''...போலி கௌரவத்துக்கு அடிபணிவதால் வீண் செலவுகள்தாம் மிஞ்சும் என்பதை அறிந்து உழைப்பின் உன்னதத்தை உணர்ந்தவர்கள் அவர்கள்... சுதந்திர பாரத நாட்டின் சீரிய வளர்ச்சிக்குச் சிக்கனமும் சிறு தொழிலும் சிறந்த சாதனங்கள் என்பதைக் கண்டவர்கள்.. சோம்பேறியாக எதற்கும் பிறர் கையை எதிர்பார்ப்பதை விடுத்துச் 'சுயதேவைப் பூர்த்தி' செய்து கொள்வதைப் பெரிதும் வரவேற் கிறேன்''[56] என்று பிரசாரம்போல் விளக்குகிறாள்.

அணுகுமுறை

படித்த மருத்துவர் கிராமப் பணி புரிவதால் நோயினால் நலிந்த கிராம மக்கள் நன்மையுறுகின்றனர் ('வைத்தியநாதன்'). பிறர் நலத்திற்காக மேற்கொள்ளப்படும் உழவுத்தொழில் அநாதைக் குழந்தைக்கு உதவுகிறது ('அமுதநீர்'). தன்னிறைவுடன் கிராமத் தில் வாழும் மாதவன் குடும்பத்தார் பெருமையடைவதுடன், நகர வாழ்வு வாழும் ராஜியின் குடும்பத்தாரால் பெருமைக்குரியவர் களாகவும் மதிக்கப்படுகின்றனர் ('ராஜியின் கணவன்'). நூற்பு முதலான கிராமக் கலைகள் அமைதியான வாழ்விற்கு வழிவகுக்கும் ('கிராமராஜ்ஜியம்').

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அட்டவணை-9

கிராம முன்னேற்றம் - கதைமாந்தர்

எண்	கதைகள்	கொள்கை விளக்கத்திற்கு உதவுபவர்	தொடக்கத்தில் கொள்கைக்கு முரணாக இருந்து இறுதியில் மனமாற்றம் அடைபவர்
1	'வைத்திய நாதன்'	மருத்துவர் சுந்தரம்	ஜானகி
2	'அமுத நீர்'	ஆறுமுகம்	முத்துக்குமரு
3	'ராஜியின் கணவன்'	மாதவன், மாதவனின் தாய்	ராஜி, ராஜியின் குடும்பத்தினர்
4	'கிராம ராஜ்ஜியம்'	ரோஸம்மா, குரு	—

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இந்நான்கு கதைகளிலும் நேர்முக அணுகுமுறை மேற்கொள்ளப்படுகிறது. கிராம வாழ்க்கையினால் ஏற்படும் நன்மைகளை விண்டு காட்டிப் படிப்பவர் மனத்தில் பதியுமாறு கிராம வாழ்க்கையின் இன்றியமையாமையை வலியுறுத்த, இம்முறை பயன்படுத்தப்படுவது சிறப்பாக உள்ளது.

கொள்கையை விளக்க உதவும் தலைப்பு

தீர்க்க முடியாத நோய்களைத் தீர்க்கும் இறைவன் வைத்தீஸ்வரர் போல், கிராம மக்களின் நோய்களைத் தீர்க்க முற்படுபவராக மருத்துவர் சுந்தரம் அமைகிறார் என்பதை உள்ளடக்கும் உருவகத் தலைப்பு 'வைத்தியநாதன்' என்பதாகும். தேவர்களுக்கும், அசுரர்களுக்கும் உதவின அமுதம் போல், எல்லா மக்களுக்கும் உதவுகின்ற அமுத நீராம் உணவுச் சத்தை உற்பத்தி செய்வது கிராமமே என்ற பொருளை அடக்கியுள்ளது 'அமுத நீர்' என்ற உருவகத் தலைப்பு.

தன்னுடைய வாழ்வின் அடிப்படைத் தேவைகளுக்காக அண்டை அயலார்களை எதிர்பார்க்காமல் முழுமையான குடியரசாகக் கிராமம் விளங்குவதே கிராமத் தன்னாட்சி என்பது காந்தியடிகளின் கருத்து.[57] பிறரைச் சார்ந்திராமல் தம் நூற்புக் கலைகளினால் வாழ்விற்குத் தேவையான ஊதியத்தை ரோஸம்மாவும் கிராம மக்களும் பெறுவதைச் சுட்டுகிறது 'கிராமராஜ்ஜியம்' என்ற தலைப்பு.

காந்தியத் தாக்கத்தைப் புலப்படுத்தும் பிற உத்திகள்
காந்தியப் பின்னணி

'கிராமராஜ்ஜியம்' என்ற கதையில் பீகார் நில அதிர்வுக்கு உதவி நிதி பெறக் காந்தியடிகள் தமிழ் நாட்டிற்கு வருகை தந்த நிகழ்ச்சி சுட்டப்படுகிறது. மேலும் 1942-இல் கதைத் தலைவர் குரு, சிறை சென்ற நிகழ்ச்சியைச் சுட்டுவதன் வாயிலாக 'வெள்ளையனே வெளியேறு' இயக்க நிகழ்ச்சி நினைவுகூரப்படுகிறது. இவ்வாறு காந்தியடிகளின் காலத்து நிகழ்ச்சிகளைச் சுட்டுவதன் வாயிலாகக் காந்தியத் தாக்கம் அமைகிறது.

காந்தியடிகளின் கருத்தினைச் செயற்படுத்தல்

சில கதைகளில் காந்தியடிகள் கூறிய கருத்துகளுள் சில வற்றைச் செயற்படுத்தும் நிலையில் சில நிகழ்ச்சிகளை அமைத்துக் காந்தியத் தாக்கத்தைப் புலப்படுத்துகின்றனர் ஆசிரியர்கள்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

''...தங்களிடமும், தங்களுடைய இலட்சியத்திலும் நம்பிக்கை உள்ளவர்கள்தாம் கிராமங்களுக்குத் தொண்டு செய்ய முடியும்''[58] என்கிறார் காந்தியடிகள். அவரது கூற்றினைச் செயற்படுத்தும் நிலையில் 'வைத்தியநாதன்' என்ற கதையில் மருத்துவர் சுந்தரம் கிராமத்திற்குச் செல்ல முற்படுகிறார். ''...இவ்வாறு [கொள்ளை நோய்க்குப்பலியாவது] இனி நேராமல் தடுப்பதற்காகவே நான் அங்குப் போகிறேன். வருகிற வரும்படியை வைத்துக் கொண்டு ஓர் ஏழையாகவே இருக்க உத்தேசம்''[59] என்று முடிவாகச் சொல்லுவது அவரிடமும் அவரது இலட்சியத்திலும் உள்ள பிடிப்பை விளக்கும்.

இதே கதையில் சுந்தரம் கிராமப்பணியை எளிய முறையில் மேற்கொள்ள முற்படுவதை, ''ஒரு சின்ன வீட்டை வாடகைக்கு எடுத்துக் கொண்டான். வாசல் திண்ணைதான் அவன் ஆஸ்பத்திரி''[60] என்ற ஆசிரியர் கூற்று விளக்கும். கிராமப் பணியில் ஈடுபடும் மருத்துவர் பெரிய கட்டடங்களுக்கு மாற்றாக எளிய கூரை வேய்ந்த குடிசையை மருத்துவ மனைக்குப் பயன்படுத்துவது நலம்[61] என்ற காந்தியடிகளின் வாக்கினைச் செயற்படுத்தும் வகையில் சுந்தரத்தின் பணி அமைந்துள்ளது.

எளிய வாழ்க்கையும் உயர்ந்த எண்ணமும் என்ற குறிக்கோளே உயர்வானது என்று கருதும் காந்தியடிகள் தேவைகளைச் சுருக்குவதே உண்மையான நாகரிகம் என்கிறார்.[62] அவர் கருத்திற்கேற்பச் செயற்படுபவராக 'ராஜியின் கணவன்' என்பதில் மாதவன் அமைகிறார். ''உணவில்தான் எளிமை என்றால் உடையிலும் கூட அதே எளிமை. தேவைக்கு அதிகமான எந்தப்பொருளும் வீட்டில் இடம் பெறாது''[63] என்ற பகுதி அக்கருத்தை விளக்க உதவும்.

வேறுசில நன்மைகளுடன், நாட்டின் பொருளாதார நிலையைச் சீர் செய்து கொள்ளவும், புலனடக்கத்தை மேற்கொள்பவர் அமைதியாக வாழவும் நூற்பு உதவுகிறது என்கிறார் காந்தியடிகள்.[64] இவ்விரண்டு நோக்கங்களுக்காகக் 'கிராமராஜ்ஜியம்' என்ற கதையில் ரோஸம்மா நூற்பை மேற்கொள்வதாகச் சித்திரிக்கப்படுகிறாள்.

காந்தியடிகளின் வாழ்க்கைச் சாயல் அமைதல்

'ராஜியின் கணவ'னில் ''...காலைக் கடன் முடித்து, பிரார்த்தனை செய்வோம்...''[65] என்ற பகுதி மாதவனின் அன்றாட

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வாழ்க்கையின் தொடக்கம் வழிபாட்டுடன் அமைவதைச் சுட்டும். அன்றாட வாழ்க்கையின் தொடக்கமே வழிபாட்டுடன் அமையும் காந்தியடிகளின் வாழ்க்கைச் சாயல் அவரிடம் காணப்படுகிறது.

'கிராமராஜ்ஜியம்' என்ற கதையில் நிருமாண வேலைத் திட்டத்தை மேற்கொண்டவளாக ரோஸம்மா அமைகிறாள். தம் குறிக்கோள்களில் ஒன்றான நிருமாண வேலைத் திட்டம் நிறைவேற்றப்படவேண்டும் என்று அல்லும் பகலும் அதற்காகவே உழைத்த காந்தியடிகளின் வாழ்க்கைச் சாயல் அவளிடம் அமைகிறது. இவ்வாறு காந்தியடிகளின் வாழ்க்கைச் சாயல் இடம் பெற்றுக் காந்தியத் தாக்கத்தை உணர்த்தும்.

காந்தியடிகளின் சிறப்பைப் புகழ்தல்

'ராஜியின் கணவ'னில் ராஜி தன் கணவன் வீட்டாரைக் குறிப்பிடும்போது ''...வயதையோ மதிப்பையோ பாராட்டாமல் வளம் பெற உழைத்து, காந்தியடிகளின் அடிச்சுவட்டைப் பின் பற்றுபவர்கள்...''[66] என்கிறாள். உழைப்பைப் பெருமையாகக் கருதியவர் காந்தியடிகள் என்பதை உணர்ந்தவர்கள், அவருடைய கருத்தின்வழி நடக்க முற்பட்டதைக் குறிப்பிடுவதன் மூலம் காந்தியடிகளின் பெருமை உணர்த்தப்படுகிறது.

'கிராமராஜ்ஜிய'த்தில் ''...நான் எந்த மதமும் இல்லை. காந்தி மதம்...''[67] என்கிறாள் கதைத் தலைவி ரோஸம்மா. காந்தியடிகள் சமயங்களை ஒரு நிகராகக் கருதும் கோட்பாடுடையவர் என்பதைச் சிறப்பிக்கக் காந்தி மதம் என்ற சொல் அமைகிறது. இதே கதையில் ''நான் அண்ணலுக்கு மாலையணிவித்தேன். அன்றிலிருந்து அரசியலில் பங்கு கொண்டேன்''[68] என்று குரு கூறுகிறார். காந்தியடிகளைக் கண்டவர்கள் அம்மாத்திரத்திலேயே அவரின் ஈர்ப்புச் சக்தியால் கவரப்பட்டார்கள் என்ற சிறப்பைக் குறிப்பால் சுட்டுவதன் வாயிலாக அவர்தம் செல்வாக்கு உணர்த்தப்படுகிறது.

இவ்வாறு காந்தியடிகளின் சிறப்பைப் புகழ்வதன்வழிக் காந்தியத் தாக்கம் அமைகிறது.

காந்தியடிகளின் உருவப்படம் இடம்பெறல்

'ராஜியின் கணவன்' என்பதில் இடம்பெறும் ''பூஜையறையின் நுழைவாயிலில் மாட்டப்பட்டிருந்த மகாத்மாவின் பெரிய படத்தில் மலர் மாலை, காலை இளங்காற்றில் இலேசாய் அசைந்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தாடிற்று''[69] என்ற பகுதி பூசையறை நுழைவாயிலில் இருக்கத் தக்க காந்தியடிகளின் படத்தின் புனிதத் தன்மையைச் சுட்டுவதன் வாயிலாகக் காந்தியச் செல்வாக்கை உணர்த்துகிறது.

காந்தியடிகளுடன் தொடர்புடையன அமைதல்

காந்தியடிகளுடன் தொடர்புடைய பொருள்களான தக்கிளி, இராட்டை, கதர் என்பன 'கிராமராஜ்ஜிய'த்தில் இடம் பெற்றுள் ளன. காந்தியடிகள் காலத்தில் ஆங்கில அரசின் ஆதிக்கம் இருந்த போதும், பள்ளிகளில் அமைதியாகத் தக்கிளி, இராட்டை ஆகிய வற்றை மாணவர்தம் மனத்தில் பதிய வைத்த முயற்சியை ஆசிரியர் இக்கதையில் உணர்த்துகிறார்.[70] அந்நிய அதிகாரச் சூழலிலும் காந்தியடிகளின் செல்வாக்கு எந்த அளவிற்கு மேலோங்கியிருந் தது என்பதை உணர முடிகிறது.

இக்கதையில், உதவி நிதி கேட்டுத் திருச்சிக்கு வந்த காந்தி யடிகளுக்குக் கதர் மாலை அணிவித்துச் சிறு தொகை அளிக்கத் தலைமையாசிரியர் ஏற்பாடு செய்திருந்தமையும் சுட்டப்படுகிறது. காந்தியடிகள் எக்கூட்டத்திற்குச் சென்றாலும் கதர் மாலையால் சிறப்புச் செய்வதை ஏற்பது வழக்கம் என்ற உண்மை நிகழ்ச்சியை நினைவுறுத்தக் 'கதர் மாலை' என்ற சொல் இங்கே பயன்படுத்தப் படுகிறது. மேலும் இக்கதையில், ''... அரசியலில் [காந்திய அரசியலில்] பங்கு கொண்டேன். அதன் சின்னமாகக் கதர் அணிகிறேன்''[71] என்று குரு கூறுவது காந்தியச் சின்னமாகக் கதர் விளங்குவதை நினைவுகூரச் செய்யும்.

காந்தியடிகளின் பெயரில் அமைவன இடம்பெறல்

'காந்தி நூற்பு ஆலை' கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ளதாகக் 'கிராமராஜ்ஜியம்' என்ற கதையில் குறிப்பு உள்ளது. கிராமப் புனர் வாழ்விற்குச் சிறந்த தொழிலாக நூற்பினைக் கருதுபவர் காந்தியடிகள்.[72] அவரது பெயரில் நூற்பு ஆலையை அமைத்து, நூற்பில் அவர் கொண்ட ஆழ்ந்த ஈடுபாட்டைக் காட்டுவதன் வாயிலாகக் காந்தியத் தாக்கம் இக்கதையில் அமைகிறது.

இனி, இக்கதைகளின் ஆசிரியர்களால் எழுதப்பட்ட பிற கதைகளில், கிராம முன்னேற்றம் பற்றிய ஆய்வு அமைகிறது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கொள்கை அமைந்துள்ள பிற கதைகள்

கிராம முன்னேற்றக் கொள்கை, சிதம்பர ரகுநாதனின் 'புத்துயிர்', கல்கியின் 'ஒன்பது குழி நிலம்' ஆகிய கதைகளின் கருவில் அமைகிறது. வி.எஸ்.சுப்பையாவின் 'சரளாவின் கலியா ணம்' என்பதில் கருத்தளவிலும் கொள்கை விளக்கமுறுகிறது.

'புத்துயிர்' என்பதில் இந்தியாவின் கிராமங்களைச் சாந்தி நிகேதனங்களாகவும் சேவாகிராமங்களாகவும் மாற்றிவிட வேண் டும்; எதிர்காலத் தலைவர்களை உருவாக்க வேண்டும் என்ற நோக்கில் பயிற்சி பெற்று, ஓர் ஆசிரியர் கிராமத்திற்கு வருகிறார். கிராமத்தில் வசதிகளற்ற, துன்பங்கள் மிகுந்த சூழலில் பதவி விலகல் மனுவை எழுதுகிறார். முன்னாளில் தன்னால் விரும்பப் பட்ட அன்னம்மாள் என்பவள், குடிகாரக் கணவன் பொறுப்பற்று இருப்பதால் தன் குழந்தையை முன்னிலைக்குக் கொணர வேண் டுகிறாள். ஆசிரியர் மனம் மாறுகிறார்.

'கிராமத்தொண்டு புரிய எண்ணுபவர் குறிக்கிடும் இடையூறுகளைப் பொருட்படுத்தக் கூடாது' என்பது இக்கதைக் கரு. தொண்டு மனப்பான்மையுடன் கிராமங்களில் குடியேறியவர் கள் அங்குத் தங்களை எதிர் நோக்கும் துன்பங்களைக் கண்டு அஞ்சுவதில்லை என்கிறார் காந்தியடிகள்.[73] கிராமத்திற்குச் சென்ற பின்பு ஏதேனும் சிறு துன்பம் ஏற்பட்டதற்காக எந்த இளைஞனும் தனது முயற்சியைக் கைவிடக்கூடாது[74] என்ற அவரது கூற்றின்வழிச் செயற்படுபவராகக் கிராம ஆசிரியர் அமைகிறார்.

'ஒன்பது குழி நிலம்' என்ற கதையில், 'கிராமச் சீரமைப் பிற்கு உதவுவது கிராமப் பஞ்சாயத்தே அல்லாமல் நகர நீதி மன்றங்கள் அல்ல' என்பது கருவாக அமைந்துள்ளது. ஒன்பது குழி நிலத்திற்காகக் கமலாபுரம் மிராசுதார் சீனிவாசத்திற்கும் கலியாணபுரம் பண்ணைச் சோமசுந்தரத்திற்கும் அடிதடி வழக்கு மன்ற நட்டங்கள் ஏராளம். இறுதியில் சோமசுந்தரத்தின் மகன் வழக்கறிஞர் சுப்பிரமணியன், "...கோர்ட் விவகாரத்தினால் ஏற்படும் தீங்குக்கு நமது குடும்பமே சிறந்த உதாரணமாக விளங்கவில்லையா? மகாத்மா காந்தியின் கொள்கைகளைப்பற்றி எனக்குச் சிறிதளவு இருந்த ஐயமும் இவ்வழக்கினால் நீங்கி விட்டது"[75] என்று கூறிச் சட்ட ஞானத்தால் வழக்குகளை நீதி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மன்றத்திற்குப் போக விடாமலேயே தீர்க்க முடிவு கொள்கிறார். கிராமப் பஞ்சாயத்தின் மூலம் சச்சரவுகளைத் தீர்க்க முற்படுகிறது காந்தியம்.[76]

'சரளாவின் கலியாணம்' என்ற கதையில் கதைத் தலைவர், ''கிராம வாழ்க்கையின் குளிர்ச்சி நகர வெக்கையில் அடிபட்ட எனக்கு மிகவும் ஆறுதலையும் சாந்தியையும் கொடுத்தது என்பதைச் சொல்ல வேண்டியதில்லை''[77] என்று கூறுவது, கிராம வாழ்வின் மேன்மையைச் சிறப்பிக்கும்.

இக்கதைகளால் அறியப்படுவன

1. காந்தியத் தாக்கம் பெற்றவர்கள் கிராமப் பணி புரிகின்றனர்.

காந்தியத்தால் கவரப்பட்டுக் கிராமப் பணியை மேற்கொள்ளு பவர்களுள் இருவகையினரைக் காணமுடிகிறது. காந்தியடிகளின் காலத்தில் அவருடைய நேரிடையான செல்வாக்கால் கிராமியக் கலைப் பணியை மேற்கொண்டவர்கள் ('கிராம ராஜ்ஜியம்') அவர் களில் ஒருவகையினர்; காந்தியத்தில் இயல்பாகவே ஆழமான ஈடுபாடு கொண்டு அவரது அடிச்சுவட்டில் கிராமிய வாழ்வு நடத்த வேண்டும் என்ற முனைப்பில் தன்னிறைவு வாழ்க்கை வாழும் மனிதர்கள் ('ராஜியின் கணவன்') மற்றொரு வகையினர்.

2. காந்தியடிகளின் கிராமியக் கொள்கை நடைமுறையில் சாத்தியமானது.

கிராமங்கள் எப்படி இயங்கவேண்டும் எனக் காந்தியடிகள் வரைபடம் வரைந்தாரோ, அதன்படி அவற்றை உயிர்ப்பிக்கும் வண்ணம், அவர் கொள்கையின்படி வாழ்ந்து காட்டும் பாத்திரங் களைக் கதைகளில் காண முடிகிறது. கிராமங்களில் மருத்துவப் பணி, உழவுப் பணி, ஆசிரியப்பணி ஆகியவற்றை மேற்கொண்டும். கிராமக் கலைகளைக் கிராமத்தார் மேற்கொள்ளச் செய்தும், தன்னிறைவுடன் வாழ்ந்து காட்டியும் காந்தியக் கொள்கையைச் செயற்படுத்துகின்றனர். காந்தியடிகளின் கருத்தின்படி வலிந்தேற் கும் ஏழ்மை அவர் தம் எளிய வாழ்க்கையில் இடம் பெறுகிறது.[78]

3. கிராமவாழ்வே நகரவாழ்வினும் உயரியது.

''...[பட்டணத்தில்] லைசன்ஸ், கோட்டா, ஏற்றுமதி இறக்குமதி, வரிச்சள்ளைகளோடு வேலை நிறுத்தம், தொழிற்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சங்கம் எல்லாமாக அவரை அயரவைத்துவிட்டன.''[79] நகர வாழ்வில் இவ்வாறு அலுப்படைந்த ஆறுமுகத்தை, கிராம மண் ஈர்க்கிறது. ''...உண்மையாய்ச் சொல்றேன். பட்டினத்துலே இருக்கறப்போ பிடிச்சு இளுக்கும் சக்தி இந்த மண்ணுக்கு இருக்கும்னு நான் நெனச்சதே கிடையாது.''[80]

''இங்கே [நகரத்தில்] அனுபவிக்கும் ராஜபோகத்தைவிட அங்கே [கிராமத்தில்] அவர்களுடன் சேர்ந்து உழைக்கும் எளிய சேவையே எனக்கு நிறைவைத் தருகிறது''[81] என ராஜி கூறுவதும், ''பட்டணவாசத்தில் [உடல் நலனுக்கு இன்றியமையாத] தோட்டத்திற்கு எங்கே போவது? ராஜியின் [கிராம] வீட்டுக்குத் தான் போக வேண்டும்...''[82] எனப் பட்டணத்தாரே ஒத்துக்கொள்வதும் கிராம வாழ்வின் சிறப்பை விண்டுகாட்டும்.

''... பட்டண வாழ்வு எனக்குப் பிடிக்கவில்லை'';[83] ''...இங்கே [கிராமத்தில்] வந்து நிம்மதியாக... வாழலாமே''[84] என நகரத்தாரும் கிராமத்தாரும் உரையாடுவதும் கிராமவாழ்வே ஏற்புடையது என்பதைப் புலப்படுத்தும். மேலும், ''அன்னிய அரசாங்கம் இந்நாட்டில் நிலைத்துப் பலம் பெறுவதற்குக் கோர்ட்டுகளும் வக்கீல்களும் காரணமாயிருக்கின்றனர்... வழக்குகளை... [கிராமப் பஞ்சாயத்தால்] தீர்த்து வைப்பது சிறந்த வேலை...''[85] என்ற விளக்கம் கிராமப் பஞ்சாயத்தின் சிறப்பை எடுத்துரைக்கும்.

நகர வாழ்வு மனத்திற்கு ஒவ்வாத செயல்களுக்கு இடமளிக்கக் கிராம வாழ்வோ பிறர்க்குதவ இடமளிக்கிறது ('சரளாவின் கலியாணம்'). இப்பகுதிகள் அனைத்தும் நகரினும் கிராம வாழ்க்கை மேன்மையுடையது என்பதைத் தெளிவுறுத்தும்.

4. காந்தியத் தாக்கம் பெற்றுக் கிராமப்பணிபுரிவோர் காந்தியடிகளின் கண்ணோட்டத்தில் கிராம ஊழியருக்குரிய பண்புநலன்களைக் கொண்டிலங்குகின்றனர்.

காந்தியத் தாக்கம் பெற்றுக் கிராம முன்னேற்றத்திற்காக அயராது உழைப்பவர்கள், காந்தியடிகள் விரும்பியபடி கிராம ஊழியர் பெறத்தக்க தகுதிகளைக் கொண்டு விளங்குவதை அறியலாம். காந்தியடிகளால் கவரப்பட்டுக் கிராமப் பணிகளுள் நூற்புக் கலையை மேற்கொண்டு, பர்ணசாலை அமைத்துக் கிராம மக்களை அன்புக் குடும்பமாகச் சேர்த்துக்கொண்டு, அவர்களுக்காக உழைக்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கின்றார்கள் ('கிராமராஜ்ஜியம்'). காந்தியடிகள் நாள்தோறும் ஆசிரமத்தில் திட்டமிட்டு வாழும் வாழ்க்கையின்படி வழிபாடு, பசு பராமரிப்பு, தோட்ட வேலை, பள்ளி வேலை ஆகியவற்றுடன் சேரியில் தொண்டு புரிதல் எனக் கிராம நலனுக்காக உழைப்பவர்களையும் ('ராஜியின் கணவன்') காணமுடிகிறது.

இவ்வாறு காந்தியத்தின் தூண்டுதலால் கிராமப் பணிகளை ஏற்பவர்கள் உயர்ந்த இலட்சியவாதிகளாகவும் முழுமையான தகுதிவாய்ந்த கிராமத் தொண்டர்களாகவும் இருப்பதற்குக் காந்தியடிகளின் செல்வாக்கே காரணம் என்பதைத் தெளிய முடிகிறது.

குறிப்புகள் :

1 ஜெயமணி சுப்பிரமணியம், (ப.ஆ.), **மகாத்மா காந்தி நூல்கள், தொகுதி 15.** இராமசாமி, அ., (மொ.பெ.ஆ.), *ப. 62.*

2 மேலது, *ப. 25.*

3 Gandhi, M.K., *Young India*, dt. 1-5-1930.

4 Kumarappa, J.C., *Gandhian Economic Thought*, p. 85.

5 ஜெயமணி சுப்பிரமணியம், (ப.ஆ.), மு.நூ., *ப. 62.*

6 மேலது, *ப. 63.*

7 Gandhi, M.K., *Harijan*, dt. 27-5-1939.

8 ஜெயமணி சுப்பிரமணியம், (ப.ஆ.), மு.நூ., *பக். 63-64.*

9 மேலது, *ப. 64.*

10 மேலது, *ப. 65.*

11 மேற்கோள்: குருசாமி, மா.பா., **காந்தியடிகளும் கார்ல் மார்க்சும்,** *ப. 95.*

12 ஜெயமணி சுப்பிரமணியம், (ப.ஆ.), மு.நூ., *ப. 142.*

13 மேலது, *பக். 142-143.*

14 Gandhi, M.K., *From Yeravda Mandir*, Valji Govindji Desai, (Tra.), p. 25.

15 ஜெயமணி சுப்பிரமணியம், (ப.ஆ.), மு.நூ., *பக். 144.*

16 மேலது, *ப. 147.*

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

17 மேலது, ப. *148.*
18 மேலது, ப. *144.*
19 மேலது, ப. *181.*
20 மேலது, ப. *161.*
21 மேலது, ப. *213.*
22 Gandhi, M.K., *Young India*, dt. 21-7-1920.
23 ஜெயமணி சுப்பிரமணியம், (ப.ஆ.), மு.நூ., ப. 52.
24 மேலது.
25 மேலது, ப. *201.*
26 Gandhi, M.K., *Constructive Programme-Its Meaning and Place,* p. 17.
27 Gandhi, M.K., *Harijan, dt.* 30-11-1935.
28 Gandhi, M.K., *Harijan, dt.* 28-1-1939.
29 ஜெயமணி சுப்பிரமணியம், (ப.ஆ.), மு.நூ., ப.301.
30 மேலது, ப. *321.*
31 வேங்கடராஜுலு, ரா., (ப.ஆ.), **மகாத்மா காந்தி நூல்கள், தொகுதி 5**, வேங்கடராஜுலு, (மொ.பெ.ஆ.), ப.504.
32 வினோபா, **கிராமந்தோறும் சுயராஜ்யம்**, (மொ.பெ.ஆ. பெயர் குறிப்பிடப்படவில்லை), ப. 25.
33 *24-5-1935* அன்று இராஜகுமாரி அமிருத்கௌர் அவர்களுக்குக் காந்தியடிகள் அனுப்பிய மடல் செய்தி.
34 மகாத்மா காந்தி, **சத்திய சோதனை**, வேங்கடராஜுலு, ரா., (மொ.பெ.ஆ.), ப. *418.*
35 *14-2-1936* அன்று மீராபென்னுக்குக் காந்தியடிகள் அனுப்பிய மடற்செய்தி.
36 1. *1927*-இல் செட்டிநாட்டிற்கு வருகை தந்தபோது இல்லந்தோறும் கிராமக் கைவினைப் பொருள்களைப் பயன்படுத்தவும், உழவர் நலனுக்காகச் சங்கம் அமைக்கவும் கேட்டுக்கொண்டார்.

2. *1935* ஏப்ரல் திங்களில் அகில இந்திய கிராமக் கைத்தொழில் சங்கத்தின் முதலாவது கண்காட்சியைத் திறந்து உரையாற்றினார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

3. 1936 மே திங்களில் சேவாசிரமத்தில் கிராமத்தாருக்கு நூற்பது பற்றி விளக்கிக் காட்டினார்.

4. 1945 பிப்ரவரித் திங்களில் கிராமப்பெண்கள், குழந்தைகள் ஆகியோர்தம் நலனுக்குக் கஸ்தூரிபாய் நினைவுநிதியில் அறக்கட்டளை நிறுவினார்.

5. 1947 ஏப்ரல் திங்களில் நடைபெற்ற ஆசிய நாடுகள் மகாநாட்டில் உண்மையான இந்தியாவைக் கிராமங்களில் தான் காணமுடியும் எனச் சொற்பொழிவாற்றினார்.

6. 1948 சனவரித் திங்களில் கிராமத்தார் விழிப்புணர்ச்சி பெற அவர் உரையாற்றிய செய்தி வழிபாட்டுக் கூட்டத்தில் படிக்கப்பட்டது.

7. 1948 சனவரித் திங்கள் 30-ம் நாள் காலையில். அடுத்து நடைபெறவிருந்த காங்கிரசு காரியக் கமிட்டிக் கூட்டத்துக்காகக் காந்தியடிகள் காங்கிரசின் புனரமைப்பு விதிகளைத் தயாரித்தார் அதில் காங்கிரசு நிறுவனத்தை 'லோக சேவா சங்க' மாக மாற்றிக் கிராமப் பஞ்சாயத்துகளை அமைத்துக் கிராமப் பணிக்காக ஊழியர்களை நியமிக்கும் ஆலோசனை கூறப்பட்டிருந்தது.

37 ஜெயமணி சுப்பிரமணியம், (ப.ஆ.), மு.நூ., ப. 83.

38 மேலது, ப. 82.

39 மேலது, ப. 43.

40 மேலது, ப. 365.

41 வஸந்தன், 'வைத்தியநாதன்', காந்திவழிக் கதைகள், கல்யாணராமன், கே.ஆர்., (தொ.ஆ.), ப. 16.

42 ஜெயமணி சுப்பிரமணியம், (ப.ஆ.), மு.நூ., ப. 83.

43 வஸந்தன், 'வைத்தியநாதன்', மு.நூ., பக். 16-17.

44 ரங்கநாயகி, எஸ்., 'அமுத நீர்', காந்திவழிக் கதைகள், கல்யாணராமன், கே.ஆர்., (தொ.ஆ.), ப. 183

45 மேலது, ப. 178.

46 உமா குருமூர்த்தி, 'ராஜியின் கணவன்', காந்திவழிக் கதைகள், கல்யாணராமன், கே.ஆர்., (தொ.ஆ.), பக். 410-411.

47 Gandhi, M.K., *Harijan*, dt. 26-7-1942.

48 உமா குருமூர்த்தி, 'ராஜியின் கணவன்', மு.நூ., ப. 411.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

49 மேலது.

50 மஹி, 'கிராமராஜ்ஜியம்', காந்திவழிக் கதைகள், கல்யாணராமன், கே.ஆர்., (தொ.ஆ.), ப. 481.

51 மேலது, ப. 486.

52 மேலது.

53 மேலது, ப. 484.

54 Gandhi, M.K., *Harijan*, dt. 27-2-1937.

55 ரங்கநாயகி, எஸ்., 'அமுத நீர்', மு.நூ., ப. 188.

56 உமா குருமூர்த்தி, 'ராஜியின் கணவன்', மு.நூ., பக். 416-417.

57 ஜெயமணி சுப்பிரமணியம், (ப.ஆ.), மு.நூ., ப. 63.

58 மேலது, ப. 321.

59 வஸந்தன், 'வைத்தியநாதன்', மு.நூ., ப. 16.

60 மேலது.

61 ஜெயமணி சுப்பிரமணியம், (ப.ஆ.), மு.நூ., ப. 300.

62 மேலது, முன்னுரை, பக். 5-6.

63 உமா குருமூர்த்தி, 'ராஜியின் கணவன்', மு.நூ., ப. 413.

64 Gandhi, M.K., *Young India*, dt. 27-5-1926.

65 உமா குருமூர்த்தி, 'ராஜியின் கணவன்', மு.நூ., ப. 407.

66 உமா குருமூர்த்தி, 'ராஜியின் கணவன்', மு.நூ., ப. 416.

67 மஹி, 'கிராமராஜ்ஜியம்', மு.நூ., ப. 483.

68 மேலது, ப. 484.

69 உமா குருமூர்த்தி, 'ராஜியின் கணவன்', மு.நூ., ப. 407.

70 மஹி, 'கிராமராஜ்ஜியம்', மு நூ., ப. 480.

71 மேலது, ப. 484.

72 Gandhi, M.K., *Young India*, dt. 21-5-1925.

73 ஜெயமணி சுப்பிரமணியம், (ப.ஆ.), மு நூ., ப. 321.

74 மேலது, ப. 322.

75 கல்கி, 'ஒன்பது குழி நிலம்', சாரதையின் தந்திரம், ப.143.

76 ஜெயமணி சுப்பிரமணியம், (ப.ஆ.), மு.நூ., ப. 65.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

77 சுப்பையா, வி.எஸ்., 'சரளாவின் கலியாணம்', கதைக் கொடி, ப. 68.

78 'வைத்தியநாதன்', 'அமுத நீர்', 'ராஜியின் கணவன்', 'புத்துயிர்' ஆகிய கதைகளில் இக்கருத்து இடம்பெறுகிறது.

79 ரங்கநாயகி, எஸ்., 'அமுத நீர்', மு.நூ., ப. 175.

80 மேலது.

81 உமா குருமூர்த்தி, 'ராஜியின் கணவன்', மு.நூ., ப. 417

82 மேலது, ப. 418.

83 மஹி, 'கிராமராஜ்ஜியம்', மு.நூ., ப. 486.

84 மேலது.

85 கல்கி, 'ஒன்பது குழி நிலம்', மு.நூ., ப. 144.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

2. காந்திவழிக் கதைகளில் கதர், சுதேசியம், உடலுழைப்பு.

காந்தியடிகளின் பொருளாதாரக் கோட்பாடுகளாகிய கதர், சுதேசியம், உடலுழைப்பு ஆகியவை காந்திவழிக் கதைகளில் விளக்கமுறுவது இங்கு ஆராயப்படுகிறது.

காந்தியப் பொருளாதாரம் மேலைநாட்டுப் பொருளாதாரத் தினின்றும் அடிப்படையில் வேறுபட்டது. மேற்கத்திய அமைப்பு முறையிலுள்ள எந்திர ஆதிக்கம், குவிதல் முறை, பேரளவுத் தொழில் முறை, தேவைப்பெருக்கம், வாணிகப்போட்டி, நாகரிகப் போக்கு, ஏற்றத் தாழ்வு நிலை ஆகியவற்றைக் காந்தியடிகள் ஏற்கவில்லை.

காந்தியப் பொருளாதாரம், கடையனுக்கும் கடைத்தேற்றம் உண்டாகுமாறு அமையும் சர்வோதயப் பொருளாதாரம் ஆகும். அது கிராம மக்களின் தன்னிறைவுக்கு வழிவகுக்கின்றது. கைத்தொழில்களுக்குச் சிறப்பிடம் அளித்துப் பரவல் முறையில் அடிப்படைத் தேவைப் பொருட்களை உற்பத்தி செய்து ஆடம் பரத்திற்கும் வன்முறைக்கும் இடங்கொடாதவாறு சமத்துவம் காண விழைகிறது.

காந்தியப் பொருளாதாரத்தின் அடிப்படை சத்தியமும் அகிம்சையும் ஆகும். அகிம்சை முறைகளைப் பயன்படுத்தி வெறுப்பிற்கு மாறாக அன்பு உணர்ச்சிகளைத் திரட்டி மக்களைத் தம்பக்கம் திருப்புவதன் மூலம் பொருளாதாரச் சமத்துவத்தை ஏற்படுத்தக் காந்தியடிகள் விரும்புகிறார்.[1]

இவ்வடிப்படையில் காந்தியப் பொருளாதாரத்தில் கதர், சுதேசியம், உடலுழைப்பு ஆகியவை பெறுமிடம் சிறப்பானதாகும்.

கதர்

ஒரு நாட்டின் பொருளாதாரம் அதனுடைய வெப்ப நிலை, நில அமைப்பு, மக்களின் மனநிலை ஆகியவற்றைப் பொறுத் திருக்கிறது[2] என்று குறிப்பிடும் காந்தியடிகள், பொருளாதாரத்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

துன்பச் சிக்கலை மிகவும் இயற்கையான, எளிதான, செலவில்லாத செயல்வழியில் தீர்க்கக் கூடிய பெருமை இராட்டைக்கு உண்டு என்கிறார்.[3] நூற்கும் இராட்டையைப் பற்றிய ஆராய்ச்சியே இந்தியாவின் பொருளாதார ஆராய்ச்சி. அழிந்து வரும் கிராமக் கைத்தொழில்களைப் புதுப்பிக்க இன்றியமையாதது இதுவே என்பது அவரது முடிவு.[4] கிராமக் கைத்தொழில்கள் எந்திரங்களினால் நசுக்கப்பட்டதால், கிராமத்தைச் சார்ந்தோர் உழைப்பின்றி ஏழ்மைக்கு ஆளாயினர்[5] என்பதை உணர்ந்து, கோடிக் கணக்கான கிராம மக்களின் நன்மையைப் பொறுத்தவரையில் கதர் ஒன்றுதான் சரியான பொருளாதாரத்திட்டம் என்றும் அறுதியிட்டுக் கூறுகிறார்.[6]

நூற்பு மற்றெல்லாவற்றினும் மேன்மையான அன்புத் தொழில்;[7] நூற்கும் இராட்டை மனத்தை அடக்குவது;[8] ''நாட்டு மக்களின் வளத்திற்கும் அதனால் விடுதலைக்கும்சின்னம்இராட்டை அது நல்லெண்ணத்தையும் தன்முயற்சியையும் அறிவுறுத்துகிறது;''[9] நாட்டு மக்கள் எல்லோரும் பங்கெடுத்துக் கொள்ள இடம் தருவது கதர்தான்;[10] நூற்பானது பல கோடி பணத்தை மிச்சம் பிடித்து நாட்டு மக்களின் மற்றைய வளர்ச்சிக்கும் உதவும்;[11] மக்களிடையே கூட்டுறவைப் பெற இதுவே அதிக சக்தி வாய்ந்த ஆயுதம்;[12] இலட்சக்கணக்கான பெண்கள் தம் இல்லங்களிலிருந்து மேற்கொள்ளத்தக்க தூய்மையான இத் தொழில் அவர்களின் வறுமைப் பிணியைத் தீர்க்கும்;[13] பட்டினி கிடக்கும் கோடிக்கணக்கான மக்களுக்கு வயிற்றுக்குச் சோற்றையும் கட்டத் துணியையும் அளிப்பதற்கென்றே அது உருவாக்கப் பட்டிருக்கிறது[14] என்ற அவர்தம் கருத்துகள், நூற்புத் தொழில் மிகச் சிறந்தது என்பதைத் தெளிவுறுத்தும்.

காந்தியடிகளின் கதர்ப் பொருளாதாரத்தைப் பலர் பாராட்டியுள்ளனர். சர்க்கா, கதர், கிராமக் கைத்தொழில்கள் ஆகியவற்றுக்குக் காந்தியடிகள் தனி முக்கியத்துவம் அளித்தார். சர்க்காவை மக்களுக்குப் புரட்சிகரப் பொருளாதாரச் சின்னமாக அவர் ஆக்கினார் என்று நேரு குறிப்பிட்டுள்ளார்.[15] ''கதர் கிராமத் தொழிலுக்குப் பின்புலமாக ஆன்ம மற்றும் ஒழுக்க சக்தி உள்ளது... 'இராட்டையை இயக்கி விடுதலை பெறுவோம்' என்று மகாத்மா முழங்கியது பொருள் பொதிந்தது''[16] என்று பாராட்டுகிறார் ஜே.சி. குமரப்பா.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

திரு.வி.கலியாணசுந்தரனார், ''காந்தியடிகள் தம் வாழ்வில் ஆற்றிய தொண்டுகளுள் தலையாயது கைராட்டினத்தை உயிர்ப்பிக்க ஆற்றியதாகும். இருபதாம் நூற்றாண்டில் இயந்திர இயக்கம் யாண்டும் பரவி வேரூன்றியுள்ள இந்நாளில் ராட்டின் இயக்கத்தை உயிர்ப்பித்தல் எவரால் முடியும்? காந்தியடிகள் இம்முயற்சியில் தலைப்பட்டு வெற்றி பெற்றதை அறியாதார் இல்லை''[17] என்று கூறுவது காந்தியடிகள் கதர்க்கு அளித்த சிறப்பினை உணர்த்தும்.

சுதேசியம்

காந்தியப் பொருளாதாரத்தின் ஓர் உறுப்பாகத் திகழ்வது சுதேசியக் கோட்பாடாகும். சுதேசி என்பது நம்முள் இருக்கும் ஓர் உணர்ச்சி. தொலைவில் இருப்பதை விலக்கிவிட்டு நம்மை ஒட்டிச் சுற்றிலுமிருப்பனவற்றைப் பயன்படுத்திக் கொள்ளுபவர்களாகவும் அவற்றிற்குப் பணி புரிபவர்களாகவும் நம்மை அந்த உணர்ச்சி கட்டுப்படுத்துகிறது[18] என்ற காந்தியடிகளின் கருத்தின்படி நம்மைச் சுற்றி இருப்பவருடன் நெருங்கிய பிணைப்பை உண்டாக்கக் கூடியதாக இருப்பது சுதேசியம் என்பது புலனாகும்.

சுதேசி அறத்தை ஆசிரம நோன்புகளில் ஒன்றாக அமைத்தவர் காந்தியடிகள். மனிதனின் முதல் கடமை தன் அண்டை வீட்டுக்காரனுக்குப் பணி புரிவதே. இது அந்நியர் மீது வெறுப்புக் கொள்ளுவதாகவோ, சொந்த நாட்டுக்காரனுக்காக ஒருபாற் சார்வதாகவோ ஆகாது. ஒவ்வொருவரும் தத்தம் அண்டை வீட்டுக்காரனுக்குத் தம் கடமையைத் தவறாது செய்து விட்டால் உலகத்தில் எவருமே கவனிப்பாரற்றுப் போய்விடமாட்டார்கள். ஆகவே தம் அண்டை வீட்டுக்காரனுக்குப் பணி புரிபவன் உலகம் முழுமைக்கும் பணி புரிகிறான்[19] என்பது அவரது சுதேசி அறத்தின் விளக்கமாகும். இவ்விளக்கம், சுதேசியமானது படிப்படியாக ஒன்றுபடுத்தும் முயற்சியில் எல்லோரையும் தழுவிக் கொள்ள முற்படுவதை உணர்த்தும்.

சுதேசியத்தில் தன்னலத்திற்கு இடமில்லை;[20] அகிம்சை அல்லது அன்பைச் சரியாக மேற்கொள்ளச் சுதேசியமே வழி[21] என்றெல்லாம் கருதுகிறார் காந்தியடிகள். அண்டை வீட்டார்க்குப் பணி செய்வதில் தன்னலம், ஒருபாற்சார்பு, சுரண்டுதல் ஆகியன இல்லாத நிலையில்தான் அவர்களும் இத்தகைய பணியின் உண்மையான பொருளை உணர்ந்து கொண்டு, தாங்களும் அண்டை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வீட்டார்க்குப் பணி செய்ய எதிர்பார்க்கப்படுவதை உணர்வர். இவ்வாறு பார்க்குமிடத்து, இருக்க இருக்கப் பெரிதாகும் பனிப்பந்து போல் பணியானது உலகெங்கும் பரந்து ஆட்கொள்ளும் எனச் சுதேசியத்தின் சிறப்பை அவர் உணர்த்துகிறார்.[22]

உடலுழைப்பு

யக்ஞம் செய்யாமல் உணவருந்துபவன் திருட்டு உணவை உண்பவனாகிறான் என்று கீதையும்,[23] நெற்றி வியர்வை நிலத்தில் விழ உழைத்து உண்ணவேண்டும் என்று விவிலியமும்[24] மொழிகின்றன. ஒவ்வொருவரும் தம் உடலுழைப்பால் வாழ்க்கைக்குத் தேவையானவற்றை ஈட்ட வேண்டும் என்கிறது காந்தியப் பொருளாதாரம். ரஸ்கின் எழுதிய 'கடையனுக்கும் கடைத்தேற்றம்' என்ற நூலும் டால்ஸ்டாய் கருத்துகளும் காந்தியடிகளுக்கு உடலுழைப்புச் சட்டத்தை உணர்த்தின.[25]

படித்தவர்கள் உடலுழைப்பின் மேன்மையை உணர வேண்டும்[26] என்ற கருத்துடைய காந்தியடிகள், அவர்கள் உணவிற்கான உடலுழைப்பைச் செய்வதுடன் தம் அறிவைப் பொது நலனுக்குப் பயன்படுத்த வேண்டும் என்றும் விழைகிறார்.[27] உண்மையான அறிவு வளர்ச்சி பெறுவதற்குக் கூடப் பயனுள்ள உடலுழைப்பை மேற்கொள்ள வேண்டும் என்பது அவரது கருத்து.[28] உழைத்து உண்ணுவதால் ஏற்படும் நலன்களை நன்குணர்ந்த அவர், தம் உணவுக்காகத் தாம் உழைக்க வேண்டும் என்ற பொறுப்பை ஒவ்வொருவரும் ஏற்றுக்கொண்டால் உயர்ந்தவர் தாழ்ந்தவர் என்ற பாகுபாடு அழிந்துவிடும்;[29] உணவிற்காக உழைத்தால் உணவு, உடைப்பஞ்சம் என்பன இரா;[30] இத்தகு உழைப்பானது தியாகத்தின் உச்சமாக இருக்கும்[31] என்றெல்லாம் கருதுகிறார்.

தம்முடைய உழைப்பினால் கிடைக்கும் பொருள்களிலிருந்து ஒருவர் மிகச்சிறந்த இன்பத்தை அடைவார். அவருடைய உடல் நலம் மேன்மை அடையும். தாம் இதற்குமுன் துய்த்த பல பொருள்கள் தேவையற்றவை என்பதைக் காண்பார் என்ற காந்தியடிகளின் விளக்கம் ஒருவரது உடலுழைப்பு அவரது தேவையைக் குறைத்து எளிமைக்கு வழிவகுக்கும் என்பதைத் தெளிவுறுத்தும்.[32]

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

உழைப்பானது சமூகப் பணியாக இருக்க வேண்டுமானால் அது எல்லோரின் நலனுக்காகவும் அமைதல் வேண்டும் என்றும் காந்தியம் விரும்புகிறது.[33]

கதர், சுதேசிய, உடலுழைப்பு விளக்கக் கதைகள்

ஆய்வுக்கு எடுத்துக் கொண்டுள்ள தொகுப்பில் கதரின் சிறப்பை விளக்கும் கதைகள் மணியன் எழுதிய 'சத்தியத்தின் சின்னம்', எல்லார்வி எழுதிய 'வாழும் வழி' ஆகியனவாகும். சுதேசியத்தின் உண்மை நிலையை விளக்க வந்த கதை எம். அப்துல் வஹ்ஹாப் எழுதிய 'உண்டி கொடுத்தோர்' ஆகும். உடலுழைப்பின் சிறப்பை விளக்குவது ரா. கி. ரங்கராஜனின் 'சாந்தி பிறந்த நாள்' என்பதாகும்.

கதைச் சுருக்கமும் கருவும்

'சத்தியத்தின் சின்னம்' என்ற கதையில் குடும்பப் பொறுப்பற்ற போக்கிரி முருகேசன் பொய்ச்சாட்சி கூறச் செல்லும் அவசரத்தில், அவன் மனைவி ரங்கநாயகி தைத்த கதர்ச் சட்டையை அணிந்து கொண்டு ஓடுகிறான். தூய கதராடையைக் கூர்ந்து நோக்கிய அவன், சத்தியத்தின் சின்னம் அது என்பதை உணர்ந்து, அதற்கு மாசு ஏற்படுத்த விரும்பாமல், தான் பொய்ச் சாட்சி கூற வந்ததை அம்பலப்படுத்துகிறான். 'சத்தியத்தின் சின்னம் கதர்' என்பது இக்கதைக் கரு. சத்தியத்திலும் அகிம்சை யிலும் வேரூன்றுவதற்காக நாம் கதரை மேற்கொண்டிருக்கிறோம் என்ற காந்தியடிகளின் கருத்து[34] இக்கதையில் தெளிவுறுகிறது.

'வாழும் வழி' என்ற கதையில், ஏழ்மையில் உழலும் பஞ்சநதத்தின் மகன் நடேசன், வீட்டில் இருக்கும் ஒரே துணியை உடுத்திச் செல்கிறான். தம் குடிசைக்கு வந்த இளைஞன் தண்ணீர் கேட்டபோது, தாம் மறுத்ததற்குக் காரணம், மகள் மரகதம் உடுக்கத் துணியில்லாமல் இருந்ததே என்பதைப் பஞ்சநதம் அவனிடம் விளக்குகிறார். அதனைக் கேட்டு வருந்திய இளைஞன் மறுநாள் கதர் ஆடைகளையும், சர்க்காவையும் கொடுத்து மரகதம் நூற்கத் தொடங்கினால் வாழ்க்கை நலமுறும் என்கிறான். 'நூற்பு ஏழைகளுக்கு வாழ்வை அளிக்கும்' என்பது இக்கதைக் கரு. ஏழ்மையைப் போக்கவல்லது இராட்டையைவிட வேறொன்றுமில்லை[35] என்ற காந்தியடிகளின் கருத்தைக் காட்டும் கரு இது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'உண்டி கொடுத்தோர்' என்ற கதையின் கிளைக் கதையில் ஹஜ்ஜுக்கு வராதவரான அஹ்மது அஷ்காக் என்பவருக்கு அருள் வழங்கியதாக இறைவன் குரல் ஒலிக்க, ஹஜ்ஜுக்கு வந்த துன்னூன் மிஸ்ரி என்பவர் வியப்புற்று அஷ்காக்கைச் சந்திக்கச் செல்லுகிறார். செருப்பைத் தைக்கும் அஷ்காக், ஹஜ்ஜு செய்வதற்குச் சேர்த்து வைத்த பணத்தைப் பசியால் துன்புறும் அடுத்த வீட்டுக்காரனுக்கு அளித்ததைக் கேள்வியுற்று மேலும் வியக்கிறார். 'அடுத்த வீட்டுக்காரர் பசிக்கு உதவும் சுதேசிய உணர்வு இறைவன் தொண்டுக்கும் மேலானது' என்ற கருவை விளக்குகிறது இக்கதை. மனிதனின் முதற்கடமை தன் அண்டை வீட்டுக்காரனுக்குப் பணிபுரிவதே என்ற காந்தியடிகளின் சுதேசியக் கருத்தை[34] விளக்கமுறச் செய்கிறது இக்கரு.

'சாந்தி பிறந்த நாள்' என்பதில், மேனாட்டு நகப் பூச்சு நாகரிகத்தில் உழலும் சாந்திக்குக் கைவிரல்களற்ற பிச்சைக்காரியைக் கண்ணுற்றபோது, மனமாற்றம் ஏற்படுகிறது. நகப் பூச்சுக்காகத் தனக்கு இறைவன் விரல்களைக் கொடுக்கவில்லை என்பதை உணர்ந்து நூற்கவும், நூற்பைப் பிறருக்குக் கற்றுக் கொடுக்கவும் தன் விரல்களைப் பயன்படுத்த முடிவு செய்கிறாள். ''ஒவ்வொருவரும் உடலுழைப்பை வாழ்க்கையில் சிறப்பாக ஏற்க வேண்டும்''[37] என்ற காந்தியக் கருத்து இக்கதையின் கரு.

கதைப் பின்னலில் கொள்கையைப் புலப்படுத்த உதவும் நிகழ்ச்சிகள்

இந்நான்கு கதைகளிலும் தனிமனிதர்தம் உள்ளங்களில் நிகழும் போராட்டங்கள் கதைப் பின்னல்களுக்கு அடிப்படையாக உள்ளன. அப்போராட்டங்களின் விளைவாகக் கதர், நூற்பு ஆகியவற்றின் சிறப்பும், அருகிலுள்ளோர்க்கு உதவும் சுதேசியத்தின் உயர்வும், உடலுழைப்பின் பெருமையும் வலியுறுத்தப்படுகின்றன.

பாத்திரப் படைப்பு

'சத்தியத்தின் சின்னம்' என்ற கதையில், ''ரங்கம் ஒரு கைராட்டையை வைத்துக் கொண்டு அதில் நூல் நூற்றுச் சிட்டம் தயாரித்து அதில் வரும் வருவாயைக் கொண்டு திட்டமாகக் குடித்தனம் நடத்தி வந்தாள்''[38] என்ற ஆசிரியரின் அறிமுகம், கதரின் சிறப்பை உணர்ந்து செயற்படும் ரங்கநாயகியின் நிலையைத்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தெளிவுறுத்தும். ''ஆயிரக்கணக்கான ஏழைப் பெண்கள் நூற்பத னாலேயே தங்கள் வாழ்க்கைக்கு வேண்டியதை ஈட்டி வருகிறார் கள்''[39] என்ற காந்தியடிகளின் கருத்திற்கேற்ப வாழ்க்கை நடத்துகிறாள் ரங்கம்.

ரங்கநாயகியின் கணவன் முருகேசன் கதரின் சிறப்பை உணராததுடன் சத்திய நெறியினின்றும் பிறழ்ந்தவன். ''கதர்ச் சட்டையென்றால்... போட்டுக் கொள்ள மாட்டான்''[40] என்ற தொடரும், ''சரி கோர்ட்டுக்கு வந்து பொய்ச் சாட்சி சொன்னா எவ்வளவு கொடுப்பே?...''[41] என்ற தொடரும் முருகேசன் காந்திய நெறியில் அமையாதவன் என்பதை விளக்கும். இறுதியில் முருகேசன் மனமாற்றமடைவதை ''...சத்தியத்தின் சின்னத்தின் சேர்க்கையால் அவன் தூயவனாகி விட்டான்...''[42] என்ற பகுதி தெளிவாக்கும்.

'வாழும் வழி' என்பதில், ''...சர்க்காவையும் பஞ்சுப் பொட்டணத்தையும் இறக்கித் திண்ணையிலே வைத்தவன் நூல் நூற்கத் தொடங்கினான். ''உங்கள் மரகதம் இதைச் செய்யட்டும்...''[43] என்ற பகுதி பஞ்சநதத்தினிடம் வந்த ஊழிய இளைஞன் காந்திய வழியில் கதரைப் பரப்ப முயலுவதைச் சுட்டும். ஒவ்வோர் இளைஞனும் கைராட்டினத்தில் நூற்கக் கற்றுக் கொண்டு அதைக் கிராமத்திலும் பரப்புவதைத் தன் கடமையாகக் கருதவேண்டும்[44] என்ற காந்தியடிகளின் கருத்தைச் செயற்படுத் துபவனாக அந்த இளைஞன் அமைகிறான்.

'உண்டி கொடுத்தோர்' என்பதன் கிளைக் கதையில் அஹ்மது அஷ்காக் அண்டை வீட்டுக்காரருக்கு உதவுவதன்வழிச் சுதேசிய அறத்தைப் பின்பற்றுவதை, ''அண்டை வீட்டுக்காரனும் அவன் செல்வங்களும் பசியால் துடிதுடித்துக் கொண்டிருக்க நாம் வயிறு புடைக்க உண்டுவிட்டுப் பணமும் சேர்த்து வைக்கி றோம். இது அநீதி ஆயிஷா! பெரும் அநீதி! கொண்டுவா அந்தப் பணத்தை. அது என் சோதரனுக்கு உரியது''[45] என்ற அவரது கூற்றே தெளிவுறுத்தும்.

'சாந்தி பிறந்த நாள்' என்ற கதையில், தொடக்கத்தில் நாகரிகத்தில் உழன்ற சாந்தி, இறுதியில் உழைப்பின் பெருமையை அறிவது, ''...விதவிதமான நகப்பூச்சுக்காக ஆண்டவன் விரல் களைக் கொடுக்கவில்லை... உழைக்கவும் பிறருக்கு உதவவும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

விரலைப் பயன்படுத்தலாம்...''[46] என்ற அவளது கூற்றால் அறியப்படும்.

பாத்திரப் படைப்பு - ஒரு மதிப்பீடு

காந்தியப் பொருளாதாரத்தில் கதர் சிறப்பான இடம் பெற்றுள்ளதை உணர்த்தும் வகையில் பெண்களின் படைப்பு முதலிடம் பெறுகிறது. இலட்சக்கணக்கான பெண்கள் தம் இல்லங்களிலிருந்து மேற்கொள்ளக்கூடிய புனிதத் தொழில் இதுவே [நூற்பே][47] என்ற காந்தியடிகளின் கருத்திற்கேற்பப் படைக்கப் பட்டுள்ளவர்கள் ரங்கநாயகி, மரகதம், சாந்தி ஆகியோர் ஆவர்.

இராட்டையைச் சுற்றும்போது அது சாந்தத்தையும் நல்லெண்ணத்தையும் அன்பையுமே நூற்கிறது[48] என்ற காந்தியடிகளின் கருத்தைத் தன் மூலம் நடைமுறைப்படுத்தும் ரங்கநாயகியின் படைப்புச் சிறப்பாக அமைகிறது. தன் கணவன் பொறுப் பற்றவனாகத் தீய பழக்கங்களை மேற்கொண்டு புண்படுத்தும் போதும், பொறுமையுடன் அன்பையே இழையாகக்கொண்டு கதராடை தைத்து அவனுக்கு அளிக்கிறாள்.

கோடிக்கணக்கான மக்களுக்கு வயிற்றுக்கு உணவையும் உடுத்தத் துணியையும் கொடுப்பது நூற்பு[49] என்ற காந்தியக் கருத்தை உணராத குடும்பத்தில், சகோதரன் உடுத்திச் சென்ற ஒற்றையாடை வரும்வரை கிழிசல் உடையுடன் மறைவிலிருக்கும் மரகதத்தின் படைப்பு உள்ளத்தை நெகிழச் செய்யும். இந்தியக் கிராமங்களில் உழலும் ஏழ்மையின் மொத்த உரு என்னுமாறு அமையும் அவள் மூலம், நூற்பின் இன்றியமையாமை உணர்த்தப் படுவது சிறப்பாக உள்ளது.

பக்கத்து வீட்டுக்காரன் பசித்திருக்கத் தான்மட்டும் வயிறு புடைக்க உண்பது மட்டுமன்றிப் பணமும் சேர்த்து வைக்கும் இரட்டிப்புக் குற்றங்களுக்கு ஆளானதைச் சுட்டியதுடன், ஹஜ்ஜுக்குச் செல்லும் விருப்பில் தன்னை வருத்திச் சேர்த்த பொருளை மனமுவந்து கொடுத்துப் பக்கத்து வீட்டுக்காரரின் பசியைப் போக்க உதவிய ஏழை அஹ்மது அஷ்காக் சுதேசியக் கோட்பாட்டிற்கு இலக்கணமாகத் திகழும் மிகச் சிறந்த பாத்திரம்.

உத்திகள்

கொள்கையை விளக்கும் உரை

'வாழும் வழி'யில் வறுமையைப் போக்கவல்ல நூற்பினை மேற்கொள்ள வேண்டும் என்பது ''உங்கள் மரகதம் இதை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அட்டவணை-10

காந்தியப் பொருளாதாரக் கோட்பாடுகள் - கதைமாந்தர்

எண்	கதைகள்	காந்தியப் பொருளாதார நெறியைச் செயற் படுத்துபவர்	காந்தியப் பொருளாதார நெறியைத் தொடக்கத்தில் உணராமல் இறுதியில் உணருபவர்	காந்தியப் பொருளாதார நெறிக்கு முரணாகத் தொடக்கத்தில் இருந்து இறுதியில் மனம் மாறுபவர்
1	'சத்தியத்தின் சின்னம்'	ரங்கநாயகி	—	முருகேசன்
2	'வாழும் வழி'	ஊழிய இளைஞன்	பஞ்சநதத்தின் குடும்பத்தினர்	—
3	'உண்டி கொடுத்தோர்'	அஹ்மது அஷ்காக்	—	—
4	'சாந்தி பிறந்த நாள்'	—	—	சாந்தி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

[நூற்பை]ச் செய்யட்டும், உடைப்பஞ்சம் மட்டுமன்று, உணவுப் பஞ்சமும் பறந்தே போய்விடும்''[50] என அறவுரைபோல் கூறப்படுகிறது. 'உண்டி கொடுத்தோர்' என்பதில், ''.. ஒவ்வொரு மனிதனும் தன் அண்டை வீட்டுக்காரனின் நலத்தில் அக்கறை செலுத்த ஆரம்பித்தால் பசியேது? பிணியேது?...''[51] என்ற பிரசார உரையால் கரு உணர்த்தப்படுகிறது.

அணுகுமுறை

கதராடையானது, தீயவனான முருகேசனைத் தூயவனாக மாற்ற உதவுகிறது ('சத்தியத்தின் சின்னம்'). நூற்பானது மரகதத்திற்கு உணவு உடைப் பஞ்சங்களைப் போக்க நம்பிக்கையைத் தருகிறது ('வாழும் வழி'). அடுத்த வீட்டார்தம் பசியைப் போக்கிய அஷ்காக் இறையருளால் ஹஜ்ஜுவின் பயனைப் பெறுகிறார் ('உண்டி கொடுத்தோர்'). உடலுழைப்பானது பிறர்க்குப் பிழைக்கும் வழி காண உதவும் என்ற நம்பிக்கைக்கு இடமளிக்கிறது ('சாந்தி பிறந்த நாள்').

இந்நான்கு கதைகளிலும் 'நேர்முக அணுகுமுறை' மேற்கொள்ளப்படுகிறது. காந்தியப் பொருளாதார நெறி மேற்கொள்ளத்தக்க ஒன்று என்பதை நிறுவ முயலும் ஆசிரியர்கள், அதனை மேற்கொள்ளுவதால் ஏற்படும் பயன்களை எடுத்துக்காட்ட இம்முறையைப் பயன்படுத்துவது சிறப்பாக உள்ளது.

கொள்கையை விளக்க உதவும் தலைப்பு

கதரானது அணிபவர் எவரையும் சத்திய சீலராக்கும் வகையில் சத்தியத்தின் சின்னமாக இருக்கிறது என்ற பொருள் விளக்கத்தைக் கொண்டது 'சத்தியத்தின் சின்னம்' என்ற தலைப்பு. ஏழைகள் வாழ்வதற்கான வழியாக அமைவது கதர் என்பதை உள்ளடக்கும் தலைப்பு 'வாழும் வழி' ஆகும். 'உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே' என்ற மணிமேகலைக் காப்பியத் தொடரின் முன் பகுதியைத் தலைப்பாகக் கொண்ட 'உண்டி கொடுத்தோர்' என்ற தலைப்பு, சுதேசிய அறத்தைப் பின்பற்றுபவர் தலையானவர் என்ற பொருளில் அமைகிறது. நாகரிகத்தின் சிறுமையிலிருந்து விடுபட்டு உழைப்பின் பெருமையைச் சாந்தி உணரும் நாள் அவளுக்கு, மீண்டும் பிறப்பெடுக்கும் நாளாகவும், மன அமைதி பிறந்த நாளாகவும் கொள்ளுமாறு 'சாந்தி பிறந்த நாள்' என்ற தலைப்பு அமைகிறது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கதைகளில் காந்தியத் தாக்கத்தைப் புலப்படுத்தும் பிற உத்திகள்

காந்தியப் பின்னணி

'வாழும் வழி'யில் கதை நிகழ்ச்சிகள் 1938-இல் நடைபெறுவனவாக உள்ளன. வரலாற்றின்படி இந்த ஆண்டு ஹரிபுராவிலும், வார்தாவிலும் காந்தியடிகள் கதர் கிராமக் கைத்தொழில் கண்காட்சிகளைத் திறந்து வைத்துப் பேசிய நிகழ்ச்சிகளையும் கதரைப் பரப்புவதில் அவர் எடுத்த முயற்சிகளையும் சுட்டும். கதர்ப் பொருளாதாரக் கருவைக் கொண்டுள்ள இக்கதைக்கு அந்த ஆண்டைத் தகுந்த காலப் பின்னணியாக அமைத்துள்ளார் ஆசிரியர்.

'உண்டி கொடுத்தோர்' என்பதில் காந்தியப் பொருளாதாரத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்ட முன்ஷி முத்துசுந்தரம் 1942-ஆம் ஆண்டில் சிறைக்குச் சென்றிருந்தமை சுட்டப்படுகிறது. 1942-இல் காந்தியடிகளின் 'வெள்ளையனே வெளியேறு' இயக்கத்தில் பல்லாயிரக்கணக்கான மக்கள் பங்கு கொண்டனர் என்பது வரலாறு. 'சத்தியத்தின் சின்னம்' என்பதில் ''அந்த வெண்ணிற ஆடையில் [கதரில்] அண்ணல் காந்தியின் முகம் தெரிந்தது... ஆயிரமாயிரம் தியாகிகள் ஈடுபட்ட புனிதமான தேசியப் போராட்டம் தெரிந்தது அவனுக்கு''[52] என்ற பகுதியால் காந்தியடிகள் கதருக்குப் புத்துயிர் அளித்த வரலாறும், அவர்தம் போராட்டத்தில் ஈடுபட்ட வீரர்கள் கதரைச் சீருடையாக அணிந்திருந்த வரலாறும் தெளிவுறும். இவ்வாறு காந்தியப் பின்னணி அமைவதன் வாயிலாகக் காந்தியத் தாக்கம் உணர்த்தப்படுகிறது.

காந்தியடிகளின் கருத்தை நினைவுறுத்தல்

'சத்தியத்தின் சின்னம்' என்பதில் கதராடையை உற்று நோக்கிய முருகேசன், ''நமக்குக் கிடைத்த சுயராஜ்யமே இதனால்தானே?''[53] என்கிறான். இது, ''...நூற்பது சுயராஜ்யத்தை அடைவதற்கு உதவியாக இருக்கும்''[54] என்ற காந்தியடிகளின் கருத்தை நினைவுகூரச் செய்யும். இதே கதையில் ''அட கதர்ச் சட்டையா? பெரிய ஆள் ஆயிட்டேப்பா நீ''[55] என்ற பக்கிரியின் கூற்றுக் கதர் அணிபவர் உயர்ந்த பண்புடையவராக இருப்பர் என்ற அவனுடைய எண்ணத்தை உணர்த்தும். இக்கருத்துக் காந்தியடிகளின் ''உண்மையாகக் கதர் உடுத்தும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஒருவர் ஒரு பொய்யும் சொல்ல மாட்டார். மனத்தில் வன்முறையினையோ, ஏமாற்றுதலையோ, தீய எண்ணத்தையோ கொள்ள மாட்டார்''[56] என்ற கருத்தை நினைவுறுத்தும்.

'உண்டி கொடுத்தோர்' என்பதில் ''பொருளாதார ஏற்றத் தாழ்வுகள் சீர்படுவதுதான் மக்களின் அமைதியான வாழ்க்கைக்கு முதற்படியாக அமையும்...''[57] என்ற கருத்து இடம்பெறுகிறது. இது, ஏற்றத் தாழ்வுகள் தொடர்ந்து நீடித்தால் வன்முறைப் புரட்சி ஏற்பட்டே தீரும் என்ற காந்தியடிகளின் கூற்றை[58] மறைமுகமாக நினைவில் கொணரும். இவ்வாறு காந்தியடிகளின் கருத்தை நினைவுகூரச் செய்வதன்வழிக் காந்தியத் தாக்கம் இடம் பெறுகிறது.

காந்தியடிகளின் பெருமை சுட்டப்படல்

'சத்தியத்தின் சின்னம்' என்பதில், ''காந்தி மகான் கண்டு பிடித்த கைராட்டையைச் சுழற்றிப் பயிற்சி பெற்றவர்களுக்குப் பொறுமையை இழக்கவே முடியாதே''[59] என்ற பகுதி பொறுமையின் சின்னமான கைராட்டையைக் கண்டுபிடித்த பெருமைக் குரியவர் காந்தியடிகள் என்பதைச் சுட்டும். இதே கதையில்''... காந்தி மகாத்மா கண்டு பிடித்த மூலிகை [கதர்] அல்லவா? இதை வைத்துக் கொண்டுதானே நமக்கு அவர் சுதந்திரம் வாங்கிக் கொடுத்தார்?...''[60] என்ற பகுதி, விடுதலை பெறுவதற்குக் கதர் காந்தியடிகளால் பயன்படுத்தப்பட்டமையை விளக்கும்.

'வாழும் வழி'யில் ''... காந்தியடிகளின் அடியார்கள் தோற்றுவித்த சமத்துவ சமதர்ம சேவா சங்கத்தின் ஊழியர்களில் ஒருவன்...''[61] என ஓர் இளைஞன் தன்னை அறிமுகம் செய்கிறான். சமத்துவ சமதர்ம சேவைக்காகப் பாடுபட்ட தலைவர் காந்தியடிகள் என்ற நிலையில் அவரது பெருமை குறிப்பாக உணர்த்தப்படுகிறது.

'சாந்தி பிறந்த நாள்' என்பதில் சர்வோதய நாளின் சிறப்பைக் குறிப்பிடும் சங்கர், ''வருஷம் முன்னூற்றறுபத்தைந்து நாளும் பணம் சம்பாத்தியம், பிஸினஸ் .. ஆளைக் கவிழ்ப்பது... இரண்டொரு நாள் இப்படித்தான் வாழ்க்கையைத் திருப்பிக் கொள்வோமே? அப்போது கிடைக்கிற மன அமைதியில் மற்ற நாட்களை ஓட்டலாம்''[62] என்கிறான். சர்வோதய நாள் காந்தியடிகளை நினைவுறுத்தும் நிலையில் மன அமைதி தரும் நாள் என்ற பெருமைக்குரியதாகிறது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இவ்வாறு காந்தியடிகளின் பெருமைகளைச் சுட்டுவதன் வாயிலாக அவர்தம் செல்வாக்கு உணர்த்தப்படுகிறது.

காந்தியடிகளின் உருவப்படம் இடம்பெறல்

'சத்தியத்தின் சின்னம்' என்பதில் தன் கணவன் கதரின் சேர்க்கையால் தூயவனாகியதை அறிகிறாள் ரங்கநாயகி. அவள் உள்ளம் காந்தியடிகளை நினைத்து மகிழ்ச்சியுறுவதை ஆசிரியர் சித்திரிக்கிறார். "...சத்தியத்தின் சின்னத்தை நமக்களித்த, சத்திய சோதனைக்குள்ளாகி வெற்றி கண்ட சாந்த புருஷனின் படத்தைப் பார்த்தாள், கண்களில் ஆனந்தக் கண்ணீர் மல்க".[63] ரங்கநாயகியின் உள்ளத்தில் பொங்கும் உவகைக்குக் காரணமான காந்தியடிகளின் ஆளுமைச் சக்தியை உணர்த்துகிறது அவரது படம்.

'வாழும் வழி'யில் இடம் பெறும் "காந்தி மகான் இராட்டை சுற்றும் படத்தைக் குடிசையிலே மாட்டிவிட்டு விடை பெற்றுச் சென்றான் வாலிபன்"[64] என்ற பகுதி குடிசைகளெல்லாம் காந்தியடிகளின் இராட்டைத் தத்துவத்தால் மாண்புறும் என்பதைக் குறிப்பாகச் சுட்டுகிறது. இவ்வாறு காந்தியடிகளின் படங்களை, இடம்பெறச் செய்து காந்தியத் தாக்கம் உணர்த்தப்படுகிறது,

இனி, காந்திவழிக் கதைகளை உருவாக்கிய ஆசிரியர்தம் பிற கதைகளில் கதர், சுதேசியம், உடலுழைப்பு ஆகியவை பற்றிய ஆய்வு அமைகிறது.

பிற கதைகளில் கதர், சுதேசியம், உடலுழைப்பு

கதர்த் தத்துவத்தைக் கருவில் கொண்டுள்ள பிற கதைகள் சி. சு. செல்லப்பாவின் 'அப்பாவின் ராட்டை', எல்லார்வியின் 'ஆதரவு', ராஜாஜியின் 'தேவ தரிசனம்' ஆகியன. கே.ஜயலக்ஷ்மி எழுதிய 'வாழ்க்கை ஒரு வானவில்' என்ற கதையின் பின்னலில், கதர் நூற்புச் சுட்டப்படுகிறது. இவை தவிரப் பூவை. எஸ். ஆறுமுகத்தின் 'தீபாவளிக் கடவுள்' என்ற கதை சுதேசியத்தைக் கருவில் கொண்டுள்ளது. உடலுழைப்புத் தத்துவத்தைக் கருவில் கொண்டவை பெ.தூரனின் 'கூலிக்கார வீரப்பன்', கோவி. மணி சேகரனின் 'மக்களுக்கு உணர்ச்சி தேவை' என்ற இரு கதைகளாகும். இத்தத்துவம் கே.ஜயலக்ஷ்மியின் 'கற்றுக்கொள் கவிக்குயிலிடம்' என்ற கதையின் பின்னலிலும் சுட்டப்படுகிறது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'அப்பாவின் ராட்டை' என்ற கதையில் கதை கூறுபவர் காந்தியடிகளின் காலத்தில் தம் தந்தை அரசுப் பணியில் இருந்த போதே, ஓர் உயர்ந்த இலட்சிய காந்தியவாதியாக இருந்து கதர் உணர்ச்சியில் ஆழ்ந்திருந்ததை எடுத்தியம்புகிறார். எளிய கைராட்டினமேயன்றிப் புதிய எந்திரங்களில் நூற்பது படிப்படியாகப் பெரிய பெரிய எந்திரத் தீமைகளுக்கு இட்டுச் செல்லும் என்று அவர் தந்தை எச்சரித்ததற்கேற்ப நடைமுறையில் புதிய எந்திரங்கள் தோன்றியமையைச் சுட்டுகிறார்.

'கதர்த் தத்துவத்திற்கு, விரைவு இராட்டை எந்திரமும் முரணானதே' என்பது இக்கதையின் கரு. ''மனிதன் தன் இரண்டு கைகளின் வலுவுக்கும் திறமைக்கும் ஏற்பத் தக்க அளவு வேலை செய்ய வேண்டும் முழு உழைப்பாக என்பது அவர் கருத்து''[65] என்று இக்கதையில் காந்தியடிகளின் கதர்த் தத்துவம் வலியுறுத்தப்படுகிறது.

'ஆதரவு' என்ற கதையில் நெசவுத் தொழிலில் முன்னேற்றங் கண்ட கந்தசாமியின் வாழ்க்கை எந்திர ஆலையுடன் போட்டியிட முடியாமல் சிதைகிறது. எந்திர ஆலையில் பணியை ஏற்கும் அவன், வேலை நிறுத்தம் போன்றவற்றால் வேலையை இழந்து வாடுகிறான். மீண்டும் நெசவுத் தொழில் அவனுக்கு வாழ்வளிக்கிறது. 'எந்திரப் பொருளாதாரம் தீமைகளுக்கு இட்டுச் செல்லும்' என்ற காந்தியடிகளின் கருத்து[66] இக்கதையின் கரு. ''நூறு பேர் நாள் முழுவதும் செய்யும் வேலையை இயந்திரம் ஒரு மணி நேரத்துள் செய்து முடித்தது... மில்களுடன் போட்டி போடச் சக்தியற்று வீழ்ந்தனர்''[67] என்ற பகுதி எந்திர ஆலை, கைநெசவு புரியும் பல்லோர்தம் வேலையின்மைக்குக் காரணமாவதை உணர்த்தும்.

'தேவ தரிசனம்' என்ற கதையில் சுந்தரம் என்பவருடைய மனைவியின் மந்திர ஆற்றலால் புராண காலத்து முன்னோர்களான இராமர், பலராமர், வசிட்டர், பீமர், தருமர் போன்றோர் அவர்கள் இல்லத்திற்கு வருகை தருகின்றனர். கதருடையில் வந்துள்ள அனைவரையும் கண்டு சுந்தரம் வியக்க, ''மகனே... அந்த [பழம் பெருமைக்குரிய கதர்]த் துணியையே நாங்கள் இப்போது உடுத்தி வருகிறோம். நீங்கள் ஏன் விட்டு விட்டீர்கள்? நாட்டில் ரொம்பத் தரித்திரமாமே?''[68] என்கிறார்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தருமர் 'நாட்டில் வறுமையைப் போக்கவல்ல கதரை அணிவது சிறப்பு' என்பது இக்கதையின் கரு. கற்பனைக் கதையேயெனினும் கதரின் சிறப்பை ஆழமாக எடுத்துரைக்கிறது இக்கதை.

'வாழ்க்கை ஒரு வானவில்' என்ற கதையில் முடவனான மாதவன் அம்பர் சர்க்காவை வாங்கி நூற்கத் தொடங்குவது சுட்டப்படுகிறது.

'தீபாவளிக் கடவுள்' என்ற கதையில் தன் குடும்பமே நெய்த வேட்டியைத் தீபாவளிக்கு முன்தினம் விற்க முற்படும் வேலையன், 'கொள்ளே காலம் ஸில்க் எம்போரிய'த்திற்கு வரும் நாகரிக மக்களாலும், போலித் தியாகியாலும் புறக்கணிக்கப்படுகிறான். அவனது ஏழ்மையை உணர்ந்த ஏழை விறகுவெட்டி, அவனிடம் ஒரு வேட்டியை வாங்கி உதவ, மகிழ்ச்சியடைகிறான் வேலையன். 'உள் நாட்டில் ஏழை உற்பத்தி செய்யும் பொருளை வாங்கி அவனுக்கு உணவளிக்க உதவ வேண்டும்' என்ற சுதேசியத் தத்துவத்தை விளக்கமுறச் செய்கிறது இக்கதை.

'கூலிக்கார வீரப்பன்' என்ற கதையில் தன் மகன் இறந்த பின், வயதான பருவத்தில் இல்லறச் சுமையை ஏற்கும் ஏழை வீரப்பனைத் தம் பண்ணை மேற்பார்வைக்கு அழைக்கிறார் பண்ணைக்காரர் முத்துசாமி. இதற்கு முன் கடும் உழைப்பில் அவரது பண்ணையைச் செழிக்கச் செய்த அவன், இன்று உழைப்பின்றி மேற்பார்வை புரிந்து ஊதியம் பெற மறுக்கிறான். 'உழைத்து உண்ணுவதே சிறப்பு' என்ற காந்தியப் பொருளாதாரக் கருத்து இக்கதையின் கரு.

'மக்களுக்கு உணர்ச்சி தேவை' என்ற கதையில் பரிசுச் சீட்டால் செல்வராகலாம் என விழையும் நண்பரிடம், உழைப்பின்றிச் செல்வம் பெறல் தவறு எனச் சுட்டி அச்சீட்டை எரித்து விடுகிறார் மகாதேவன். 'கடும் உழைப்பில் நம்பிக்கை கொள்ள வேண்டும்' என்பது இதன் கரு. ''...சோம்பேறித்தனமான முயற்சிகள் தலைதூக்குமேயானால் எண்ணிவிடக் கூடிய மிகச் சிலர் லட்சாதிபதிகளாகவும், கோடீசுவரர்களாகவும் வந்துவிடலாம். ஆனால் லட்சோபலட்சம் கோடானகோடி மக்கள் எதிர்காலத்தில் கடன்காரர்களாகவும், பிச்சைக்காரர்களாகவும் போய் விடுவர்''[69] என்று மகாதேவன் அறிவுறுத்துகிறார். ''ஒவ்வொருவரும் உடலுழைப்புச் செய்தால் உயர்வு தாழ்வு மறையும்''[70] என்ற காந்தியடிகளின் கருத்து நினைக்கத்தக்கது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'கற்றுக்கொள் கவிக்குயிலிடம்' என்ற கதையின் பின்னலில் தன்னைச் சார்ந்திருக்கும் உடலுழைப்புத் தத்துவத்தை உணர்த்தக் காந்தியடிகளின் வாழ்க்கைக் குறிப்பு மேற்கோளாகச் சுட்டப்படுகிறது. காந்தியடிகள் எரவாடா சிறையில் தாமே அறைகளைத் தூய்மைப் படுத்தியதும், சபர்மதி ஆசிரமத்தில் தம் தேவைகளைத் தாமே நிறைவு செய்ததும் சுட்டப்படுகின்றன.

இக்கதைகளால் அறியப்படுவன

1. காந்தியடிகள் காலத்திற்கு முன்பே கதர் இருந்திருப்பினும் அந்நிய ஆட்சியால் அழிக்கப்பட்ட அதற்கு அடிகள் புத்துயிரளித்தார்.

இந்திய மக்கள் காந்தியடிகளின் காலத்திற்கு முன்பே கைராட்டையால் நூற்று நெய்த துணியை அணிந்திருக்கின்றனர். ('தேவ தரிசனம்'). காந்தியடிகள் தம் காலத்தில் அரசு எதிர்ப்புகளுக்கு அஞ்சாமல், கதரைப் பலரும் அணியும் புரட்சி செய்தார் ('தேவ தரிசனம்'). கதரை அனைவரும் அணிய வேண்டும் என்பது அவரது அவா. "... சுதேசித் துணிகளை அணியனும்னு சொல்லி, லாரி லாரியாப் பரதேசித் துணிகளைக் கொளுத்தி..."[71] வரலாற்றில் புரட்சி செய்தார். காந்தியையும் கதரையும் பிரிக்க முடியாது என்னுமாறு ('அப்பாவின் ராட்டை') கதருடன் தோய்ந்து அதனைப் புத்துயிர் பெறச் செய்தவர் காந்தியடிகள்.

2. காந்தியடிகளின் கதர்த் தத்துவம் வாழ்க்கைக்கு உரியது என உணர்ந்த மக்கள் அதனை ஏற்று நடைமுறைப்படுத்த முயன்றனர்.

மக்கள் வாழ்வாங்கு வாழக் கைக்கொடுத்து உதவக் கூடியது காந்தியடிகள் வழங்கிய கதர்த் தத்துவம் என்பதை உணர்ந்தவர், அதனை வாழ்க்கையில் ஏற்றும் செயற்படுத்தியும் வெற்றி காணுகின்றனர். ஓடியாட முடியாத தன் போன்றோர்க்குக் காந்தி மகான் இராட்டையைத் தந்திருப்பார் என்ற நம்பிக்கையில் அதனை வாங்கி நூற்கத் தொடங்குவதும் ('வாழ்க்கை ஒரு வானவில்'), உடை, உணவுப் பற்றாக் குறைகளைப் போக்க உதவும் என்ற எண்ணத்தில் காந்தி மகான் அளித்த இராட்டையைப் பணிவுடன் ஏற்பதும் ('வாழும் வழி') சித்திரிக்கப்படுகின்றன.

கைராட்டையானது, நூற்றுச் சிட்டம் தயாரித்து வருவாயை ஈட்ட உதவுகிறது. அதில் பெறும் பயிற்சியால் கிட்டும் பொறுமை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வாழ்க்கையின் துன்பத்தடைகளை இனிதே ஏற்க உதவுகிறது ('சத்தியத்தின் சின்னம்'). எந்திர ஆலை, வாழ்க்கையைச் சீரழிக்கக் கைநெசவு வாழ்க்கைக்கே கைகொடுக்கிறது ('ஆதரவு'). ''இப்போ இந்தக் காந்தி வந்ததுக்கப்புறம், அல்லாரும் அதைத் தானுங்க [கதரை] வாங்கறாங்கோ''[72] ('கூலிக்கார வீரப்பன்').

இவையனைத்தும் காந்தியப் பொருளாதாரத்தில், கதர் நடைமுறைப்படுத்தப்படுவதையும் அது, வாழ்க்கையைச் செழிக்கச் செய்வதையும் உணர்த்தும்.

3. பிறருக்காக உடலுழைப்பு மேற்கொள்ளுதல் சிறப்பு.

உடலுழைப்பானது பிறர் நன்மைக்காக அமைவதாயிருப் பின் அதுவே வேள்வியாகும் என்பது காந்தியடிகளின் கணிப்பு.[73] அவரது கருத்திற்கேற்ப உழைக்கவும் ஏழைகளுக்கு நூற்பைக் கற்பிக்கவும் செல்வ மகள் முடிவெடுப்பதும் ('சாந்தி பிறந்த நாள்'), தள்ளாத வயதில் மனைவி, மருமகள், பேரன்மார் ஆகியோரைக் காக்கக் கடும் உழைப்பை ஏற்பதும் ('கூலிக்கார வீரப்பன்') சுட்டப்படுகின்றன.

4. அருகில் உள்ளோர்க்கு உதவும் சுதேசிய உணர்ச்சி சிறந்த தொண்டாகும்.

காந்தியடிகளின் கருத்தின்படி நம் அருகில் உள்ளோர்க்கு உதவி நல்குவது இறைத்தொண்டிற்கு இணையாகும். அருகிலுள்ள வர் பசியால் துடித்துக் கொண்டிருக்கத் தான் மட்டும் உண்டு க்ளிக்க எண்ணாது உதவுவதும் ('உண்டி கொடுத்தோர்'), தன்னருகே இருப்பவன் குடும்பத்துடன் ஏழ்மையில் பொசுங்கு வதைக் கேட்கப் பொறாமல் தான் உதவ முன்வருவதும் ('தீபாவளிக் கடவுள்') சித்திரிக்கப்பட்டுள்ளன.

குறிப்புகள் :

1 Gandhi, M.K., *Harijan*, dt. 31-3-1946.

2 Gandhi, M.K., *Young India*, dt. 8-12-1921.

3 Ibid.

4 Ibid., dt. 8-1-1925.

5 **வேங்கடராஜுலு, ரா., (ப.ஆ.), மகாத்மா காந்தி நூல்கள் தொகுதி 5.** வேங்கடராஜுலு, ரா., (மொ.பெ.ஆ.), ப.187.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

6 மேலது, ப. *188*.

7 மேலது, ப. *63*.

8 மேலது.

9 Gandhi, M.K., *Young India*, dt. 8-12-1921.

10 Ibid., dt. 10-2-1927.

11 Ibid., dt. 10-12-1919.

12 வேங்கடராஜலு, ரா., (ப.ஆ.), **மகாத்மா காந்தி நூல்கள்**, தொகுதி 5, வேங்கடராஜுலு, ரா., (மொ.பெ.ஆ). ப. *79*.

13 மேலது, ப. *34*.

14 Gandhi, M.K., *Young India*, dt. 18-2-1925.

15 ஜவகர்லால் நேரு, **அச்சம் தவிர்த்த அண்ணல்**, இராமசாமி, அ, (மொ.பெ.ஆ.), ப. *99*.

16 குமரப்பா. ஜே.சி., 'கதர் கிராமத்தொழில்கள்-சில அடிப்படை உண்மைகள்', **காந்தியப் பொருளாதாரம்**, அருணாசலம், க,. & செயப்பிரகாசம், ச., (ப.ஆ), ப.*282*.

17 கலியாணசுந்தரனார், திரு.வி., **'மனித வாழ்க்கையும் காந்தியடிகளும்'**, ப. *228*.

18 வேங்கடராஜுலு, ரா., (ப.ஆ.), **மகாத்மா காந்தி நூல்கள்**, தொகுதி 5, வேங்கடராஜுலு, ரா., (மொ.பெ.ஆ.), ப. 7.

19 வேங்கடராஜுலு, ரா., (ப.ஆ.), **மகாத்மா காந்தி நூல்கள்**, தொகுதி 6, அழகிரிசாமி, கு., (மொ.பெ.ஆ.), ப.*307*.

20 Gandhi, M.K., *Young India*, dt. 18-6-1931.

21 வேங்கடராஜுலு, ரா., (ப.ஆ.), **மகாத்மா காந்தி நூல்கள்**, தொகுதி 5, வேங்கடராஜுலு, ரா., (மொ.பெ.ஆ.), ப.*16*

22 Gandhi, M.K., *Harijan*, dt. 23-3-1947.

23 Gandhi, M.K., *From Yeravda Mandir*, Valji Govindji Desai, (Tra.), pp. 23-24.

24 வேங்கடராஜுலு, ரா., (ப.ஆ.), **மகாத்மா காந்தி நூல்கள்**, தொகுதி 6, ராமரத்தினம், ந., (மொ.பெ.ஆ,),ப. *167*.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

25 Gandhi, M.K., *From Yeravda Mandir*, Valji Govindji Desai, (Tra.), p. 23.

26 வேங்கடராஜுலு, ரா., (ப.ஆ.), **மகாத்மா காந்தி நூல்கள், தொகுதி 12**, ராமரத்தினம், ந., (மொ.பெ.ஆ.), ப. 491.

27 Gandhi, M.K., *Harijan*, dt. 2-3-1947.

28 வேங்கடராஜுலு, ரா., (ப.ஆ.). **மகாத்மா காந்தி நூல்கள், தொகுதி 6**, ராமரத்தினம், ந., (மொ.பெ.ஆ.), ப. 185.

29 Gandhi, M.K. *From, Yeravda Mandir*, Valji Govindji Desai, (Tra.), p. 24

30 Gandhi, M.K., *Harijan*, dt. 7-9-1947.

31 ஜெயமணி சுப்பிரமணியம், (ப. ஆ.), **மகாத்மா காந்தி நூல்கள், தொகுதி 15**, இராமசாமி, அ., (மொ.பெ.ஆ.), ப. 82.

32 Gandhi, M.K., *Harijan*, dt. 29-6-1935.

33 ஜெயமணி சுப்பிரமணியம் (ப.ஆ.), மு.நூ., ப. 83.

34 வேங்கடராஜுலு, ரா., (ப.ஆ.), **மகாத்மாகாந்தி நூல்கள், தொகுதி 5**, வேங்டராஜுலு, ரா., (மொ.பெ.ஆ.), ப. 322

35 Gandhi, M.K., *Young India*, dt. 17-3-1927.

36 வேங்கடராஜுலு, ரா., (ப.ஆ.), **மகாத்மா காந்தி நூல்கள், தொகுதி 6**, அழகிரிசாமி, கு., (மொ.பெ.ஆ.), ப. 307.

37 Gandhi, M.K., *Young India*, dt. 5-11-1928.

38 மணியன், 'சத்தியத்தின் சின்னம்', **காந்திவழிக் கதைகள்**, கல்யாணராமன், கே.ஆர்., (தொ.ஆ.), ப. 430.

39 Gandhi, M.K., *Young India*, dt. 27-5-1926.

40 மணியன், 'சத்தியத்தின் சின்னம்', மு.நூ., ப. 433.

41 மேலது, ப. 432.

42 மேலது, பக். 434-435.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

43 எல்லார்வி, 'வாழும் வழி', காந்திவழிக் கதைகள், கல்யாணராமன், கே.ஆர்., (தொ.ஆ.), ப. 478.
44 Gandhi, M.K., *Young India*, dt. 9-9-1926.
45 அப்துல் வஹ்ஹாப், எம்., 'உண்டி கொடுத்தோர்', காந்தி வழிக் கதைகள், கல்யாணராமன், கே.ஆர்., (தொ.ஆ.), பக். 461-462.
46 ரங்கராஜன், ரா.கி., 'சாந்தி பிறந்த நாள்', காந்திவழிக் கதைகள், கல்யாணராமன், கே.ஆர்., (தொ.ஆ.), ப.89.
47 Gandhi, M.K., *Young India*, dt. 16-2-1921.
48 Ibid., dt. 8-12-1921.
49 Ibid , dt. 18-2-1925.
50 எல்லார்வி 'வாழும் வழி', மு.நூ., ப. 478.
51 அப்துல் வஹ்ஹாப், எம்., 'உண்டி கொடுத்தோர்', மு.நூ., ப. 462.
52 மணியன், 'சத்தியத்தின் சின்னம்', மு.நூ., ப. 434.
53 மேலது.
54 வேங்கடராஜுலு, ரா., (ப.ஆ.), மகாத்மா காந்தி நூல்கள், தொகுதி 5, வேங்கடராஜுலு, ரா., (மொ.பெ. ஆ.), ப. 526.
55 மணியன், 'சத்தியத்தின் சின்னம்', மு.நூ., ப. 434.
56 Gandhi, M.K., *Harijan*, dt. 26-2-1938.
57 அப்துல் வஹ்ஹாப், 'உண்டி கொடுத்தோர்', மு.நூ., ப.456.
58 Gandhi, M.K., *Constructive Programme - Its Meaning and Place*, pp. 24-25.
59 மணியன், 'சத்தியத்தின் சின்னம்', மு.நூ., ப. 430.
60 மேலது, ப. 434.
61 எல்லார்வி, 'வாழும் வழி', மு.நூ., ப. 476.
62 ரங்கராஜன், ரா.கி., 'சாந்தி பிறந்த நாள்', மு.நூ., பக். 84-85.
63 மணியன், 'சத்தியத்தின் சின்னம்', மு.நூ., ப. 435.
64 எல்லார்வி, 'வாழும் வழி', மு.நூ., ப. 478.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

65 செல்லப்பா, சி.சு., 'அப்பாவின் ராட்டை', **செல்லப்பா சிறுகதைகள்**, தொகுதி 6, ப. *132*.

66 வேங்கடராஜுலு, ரா., (ப.ஆ.), **மகாத்மா காந்தி நூல்கள்**, தொகுதி 1, அவினாசிலிங்கம், தி.சு., சுப்பராமன், நா.ம.ரா., & ராஜம்மாள் தேவதாஸ், (மொ.பெ.ஆ.), ப. *710*.

67 எல்லார்வி, 'ஆதரவு', **மணி ஓசை**, பக். *29-30*.

68 ராஜாஜி, 'தேவ தரிசனம்', **ராஜாஜி கதைகள்**, பக். *185-186*.

69 கோவி மணிசேகரன், 'மக்களுக்கு உணர்ச்சி தேவை', **கோவியின் கதைகள்**, பக். *35-36*.

70 Gandhi, M.K., *From Yeravda Mandir*, Valji Govindji Desai, (Tra.), p. 24.

71 ஆறுமுகம், பூவை.எஸ்., 'தீபாவளிக் கடவுள்', **பூவையின் கதைகள்**, ப. *49*.

72 தூரன், பெ., 'கூலிக்கார வீரப்பன்', **பிள்ளை வரம்**, ப. *110*.

73 Gandhi, M.K., *Young India*, dt. 15-10-1925.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

6

1. காந்திவழிக் கதைகளில் அரசியல் போராட்டங்கள்

ஆய்வுக்குரிய காந்திவழிக் கதைகளில் இடம்பெறும் அரசியல் போராட்டக் கதை ஒன்று காந்தியடிகள் கண்ணோட்டத்தில் அமையும் அரசியல் போராட்டத்திற்கு முரணாக இருப்பதால், அதனை விடுத்து ஆய்வுக்குரிய தொகுப்பு நூலில் உள்ள கதை யாசிரியர்தம் பிற கதைகளில் அச்சத்தியாக்கிரகப் போராட்டங்கள் எவ்வாறு விளக்கப்பட்டுள்ளன என்பதைப் பற்றிய ஆய்வு இவ் வியலின்கண் அமைகிறது.

நாடு விடுதலை பெறவும், பெற்ற விடுதலையைப் பேணிக் காக்கவும் மேற்கொள்ளக்கூடிய போராட்டங்கள் அரசியல் போராட்டங்கள் ஆகும். இத்தகு இலட்சியப் போராட்டங்களில் குறிக்கோளைப் போலவே வழிமுறைகளுக்கும் சிறப்பிடம் நல்கிய வர் காந்தியடிகள். அவரது வாழ்க்கை ஒழுகலாறுகள் அகிம்சையில் ஊன்றியிருப்பவை. ''நான் முற்றும் அகிம்சையில் ஊறியவன் என்று நம்புகிறேன். அகிம்சையும் சத்தியமும் எனக்கு இருக்கும் இரு சுவாசப் பைகள். அவையின்றி நான் வாழ இயலாது''[1] என்ற காந்தியடிகள் கூற்று அவரது எந்தச் செயலும் அகிம்சை அடிப்படையில் அமைவது என்பதைத் தெளிவுறுத்தும்.

''பலாத்கார வழியில் இந்தியா சுதந்திரத்தை அடையு மானால்... இந்நாடு நான் பெருமைகொள்ளும் நாடாக இராது'';[2] ''வெளிநாட்டு முற்றுகையினையோ உள்நாட்டுக் குழப்பத்தையோ அகிம்சை முறையினால் சமாளிக்க முடியும்''[3] என்பன இந்தியா விடுதலை பெறவும், பெற்ற விடுதலையை வெளிநாட்டு உள்நாட்டு எதிர்ப்புச் சக்திகளினின்று காக்கவும் அகிம்சையைத்தான் பயன்படுத்தவேண்டும் என்ற அவரது உட்கிடையைக் காட்டும்.

இம்சைவழிப் போராட்டங்கள் எந்த நிலையிலும் வேண்டற் பாலனவல்ல என்பதைக் காந்தியம் உணர்த்தும். ''இந்தியா [வன்முறையில்] தொடுக்கும் எந்தப்போரிலும் நேரடியாகவோ அன்றி மறைமுகமாகவோ நான் பங்கு எடுத்துக் கொள்ளுவது

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

என்பதற்கே இடமில்லை''[4] என்று அவர் 1929-இல் கூறிவிட்டார். மேலும் போரானது சில நிலைகளில் சரியானது என்று காட்டுவதற்குத் தம்முடைய செய்கையை யாராவது பயன்படுத்தினால் தாம் வருத்தம் அடைய நேரிடும் என்ற அவரது விளக்கம்,[5] வன்முறை வழியில் நடக்கும் எந்தப் போரும் அவர்வழிக்கு உடன்பாடன்று என்ற உண்மையைப் புலப்படுத்தும்.

'காந்திவழிக் கதைகள்' என்ற நூலில் இடம் பெறும் அரசியல் என்ற பகுதிக்குரிய, ஜ.ரா. சுந்தரேசனின் 'அவளிட்ட குங்குமம்' என்ற கதை, நாட்டுப்பற்று மிகுந்த ஒரு குடும்பத்தைப் பற்றியது. பெற்ற விடுதலையைக் காக்கும் அடிப்படையில், சீனப் போரில் பகைவர்களைக் கொல்லுமாறு கோவிந்தராஜுவின் பெற்றோரும், மனைவியும் அவனை வாழ்த்தி அனுப்புகிறார்கள். அவ்வாறே அவனும் பகைவர்களைக் குண்டுகளால் அழிக்கிறான். இக்கதையில் குடும்பத்தினர் அனைவரின் நோக்கமும் பெற்ற விடுதலையைப் பேணிக்காப்பது எனினும், அவர்கள் மேற்கொள்ள முற்படும் வழிமுறை வன்முறை ஆதலால் கருவிலும், நிகழ்ச்சிப் பின்னலிலும், பாத்திரப் படைப்பிலும் இம்சைப் போக்கமைந்த இக்கதை, காந்தியத்திற்கு உடன்பாடற்ற நிலையில் இருப்பதால் ஆராய்வதற்குரிய தகுதியினின்றும் விடுபடுகிறது.

அகிம்சைவழியில் சத்தியாக்கிரகப் போராட்டங்களை விளக்க அமையும் பிற கதைகளில் காந்தியத் தாக்கம் எவ்வாறு அமைந்துள்ளது என்பது ஆராய்ச்சிக்குரியதாக இருப்பதால், அவை ஆய்விற்கு ஏற்கப்பட்டுள்ளன.

முடிவும் வழியும்

நாட்டின் விடுதலை ஓர் உயர்ந்த இலட்சியமே எனினும், அதனை அடையும் வழிமுறைகளும் உயர்ந்தவையாக இருத்தல் வேண்டும் என்பது காந்தியப் பண்பாகும். குறிக்கோள் உயர்ந்ததாக இருப்பினும் அதனை எய்தும் வழியும் தூயதாக இருக்க வேண்டும் என்பது காந்தியச் சிந்தனையின் அடிப்படை விதியாகும்.[6]

சத்தியாக்கிரகம்

சத்தியத்தை விடாது கடைப்பிடிப்பது என்பதே சத்தியாக்கிரகம் என்பதன் பொருள். சத்தியமே ஆன்மா. எனவே, அது ஆன்ம சக்தி என்று சொல்லப்படுகிறது. வன்முறையைப் பயன்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

படுத்துவதை அது விளக்குகிறது. முழுமையான சத்தியத்தை அறியும் ஆற்றல் மனிதனுக்கு இல்லாததனால் அவன் தண்டிப் பதற்கு வேண்டிய தகுதி இல்லாதவனாகிறான் என்று சத்தியாக் கிரகத்திற்கு விளக்கம் அளிக்கிறார் காந்தியடிகள்.[7] அவரது கருத்தின்படி ஆன்ம சக்தியால் போராடுவது சத்தியாக்கிரகப் போராட்டம் ஆகும்.

சத்தியாக்கிரக எண்ணம் உருவாக உதவியவை

சத்தியாக்கிரகக் கொள்கை இளம் வயதிலேயே தம் மனத்தில் உருவானதைச் சுட்டும் காந்தியடிகள் நன்மை செய்த வருக்கு நன்மை செய்வது பெரிதில்லை. தீமை செய்தவருக்கும் நன்மை செய்வதில்தான் உண்மையான பெருமை உண்டு என்னும் கருத்தமைந்த குஜராத்திப் பாடல் தம் மனத்தில் பெரும் மாறுதலை உண்டாக்கியதாகக் குறிப்பிட்டுள்ளார்.[8]

சாத்விக எதிர்ப்பினைப்பற்றி அறிய அவருக்கு உதவியது விவிலியத்தின் புதிய ஏற்பாடு. இதனை, ''உண்மையில் நியாய மாக நடப்பதில் எனக்கு விழிப்பை உண்டாக்கியதோடு சாத்விக எதிர்ப்பின் மேன்மையையும் உணரும்படி [புதிய ஏற்பாடு] செய்தது''[9] என்று அவர் குறிப்பிடுகிறார். பகவத் கீதை அவரது சாத்விக எண்ணத்தை உறுதிப்படுத்தியது. டால்ஸ்டாயின் 'உன்னுள் இருக்கும் கடவுளின் ஆட்சி' என்ற நூல் அதற்கு நிலையானதோர் உருவை அவருக்கு அளித்தது.[10]

சாத்விக எதிர்ப்பும் சத்தியாக்கிரகமும்

அமைதியான வழியில் கொடிய சட்டத்தை எதிர்க்கவும் அதற்குக் கீழ்ப்படியாமல் அதனால் ஏற்படும் தண்டனையை ஏற்கவும் முற்பட்ட ஆங்கிலேயர் மேற்கொண்ட முறை சாத்விக எதிர்ப்பு (Passive Resistance) எனப்பட்டது.

இங்கிலாந்தில் பெண்கள் ஓட்டுரிமைக்காகப் போராடியவர் களும், 'நான்கன்பார்மிஸ்டு' என்ற கிறித்தவப் பகுதியினரும் மேற்கொண்ட இந்தச் சாத்விக எதிர்ப்பானது சக்தியற்றவர்களின் ஆயுதமாகக் கருதப்பட்டு வந்ததையும், வன்முறையை முழுமையாக அது நீக்கிவிடவில்லை என்பதையும் உணர்ந்தவர் காந்தியடிகள்.[11] தென்னாப்பிரிக்காவில் இந்தியர்களின் உரிமைக்காகப் போராட உருவாக்கிய இயக்கத்தைக் குறிப்பிடத் தொடக்கத்தில், 'Passive Resistance' என்ற சொல்லையே பயன்படுத்தினார் அவர்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அதனைப்பற்றிக் குறிப்பிடும் அவர் "...இச்சொற்றொடர் [Passive Resistance] குழப்பத்தை உண்டாக்கியது. இப்பெரிய போராட்டம் ஓர் ஆங்கிலப் பெயரால் மாத்திரம் வழங்கப்படுவது வெட்கமாகத் தோன்றிற்று"[12] என்றார். தவிர இந்த அந்நிய நாட்டுச் சொற்றொடரைச் சமூகத்தில் எல்லோராலும் பயன் படுத்த முடியவில்லை என்று கருதிய அவர், இப்போருக்கு நல்லபெயரைத் தேர்ந்தெடுப்பவர்களுக்குப் பரிசு அளிப்பதாக 'இந்தியன் ஒப்பீனிய'னில் அறிவித்தார்.

இப்போட்டியில் பங்கு கொண்ட திரு. மகன்லால் காந்தி 'சத்கிரஹ என்ற சொல்லை 'நல்ல ஒன்றில் உறுதி' என்ற பொருளில் கண்டு பிடித்தார். அச்சொல் தமக்குப் பிடித்திருந்த போதும் தாம் எதிர்பார்த்த முழுக் கருத்தையும் தெரிவிக்காததால் 'சத்தியாக்கிரகம்' என்று திருத்தினார் காந்தியடிகள். 'சத்தியம்' என்னும் சொல்லில் அன்பு என்னும் பொருள் மறைந்து நிற்கிறது. 'ஆக்ரஹ' என்றால் உறுதி. உறுதி சக்தியை உண்டாக்குவதால் சக்தி என்ற பொருளுடன் விளங்குகிறது எனக்கொண்டு இந்திய இயக்கத்தைச் 'சத்தியாக்கிரகம்' என்று கூறத் தொடங்கினார். சத்தியத்திலிருந்தும் அகிம்சையிலிருந்தும் பிறந்த சக்தி என்பது அதன் பொருள். 'சாத்விக எதிர்ப்பு' என்னும் சொற்றொடரைப் பின்னர் அவர் பயன்படுத்தவில்லை.

சத்தியாக்கிரகிகளுக்குரிய பண்புகள்

தீமையைச் செய்கிறவர்களை மனமாற்றம் அடையச்செய் வதே சத்தியாக்கிரகியின் நோக்கமாக இருத்தல் வேண்டுமேயல் லாமல், அவர்களைத் துன்பத்தில் ஆழ்த்தவேண்டும் என்பதன்று என்பதைச் சத்தியாக்கிரகப் போராட்டத்தை மேற்கொள்பவர்கள் அறிந்திருக்க வேண்டியது இன்றியமையாததாகும்.

சத்தியாக்கிரகப் போராட்டத்தின் அடிப்படை, தனிமனிதன் வலிந்து துன்பத்தை மேற்கொள்ளுவதுதான் என்பர் வர்மா.[13] சத்தியாக்கிரகி வலிந்து துன்பத்தை ஏற்றுத் தன் மனவலிமை யினால் அதைத் தாங்கும் நிலையில் எதிர்ப்பவனது மனத்தை மாற்றுமாறு போராடுவது சத்தியாக்கிரகப் போராட்டத்தின் அடிப்படையாக அமைகிறது.

சத்தியாக்கிரகி பல தகுதிகளை உடையவராக இருக்க வேண்டும் என்று காந்தியடிகள் குறிப்பிடுகிறார்.[14] அவற்றுள் சில:

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

1. சத்தியாக்கிரகிக்குக் கடவுளிடம் ஆழ்ந்த நம்பிக்கை இருக்க வேண்டும்.
2. சத்தியமும் அகிம்சையுமே தமது அறம் என்று அவர் நம்ப வேண்டும். ஆகையால் துன்பங்களைத் தாம் தாங்கிக் கொள்வதன்மூலம் சத்தியத்தையும் அன்பையும் உண்டாக்க அவர் எதிர்பார்ப்பதால் மனித இயல்பில் நல்லதே உண்டு என்பதிலும் அவருக்கு நம்பிக்கை இருக்கவேண்டும்.
3. தூய வாழ்க்கையை அவர் நடத்தி வரவேண்டும். தமது இலட்சியத்திற்காக உயிர் உடைமைகளை விடவும் தயாராக இருக்கவேண்டும்.
4. அவர் வழக்கமாகவே கதர் உடுத்துபவராகவும் நூற்பவராக வும் இருக்க வேண்டும்.
5. அவருடைய அறிவு குழப்பமில்லாதிருப்பதை முன்னிட்டும், திடமானதாக இருப்பதற்காகவும் அவர் மது வகைகள் உட்கொள்ளாதவராக இருப்பதோடு போதைப் பொருள்கள் எவற்றையும் பயன்படுத்தாதவராகவும் இருக்க வேண்டும்.
6. அப்போதைக்கப்போது விதிக்கப்படும் கட்டுத்திட்ட முறை களையெல்லாம் மனமார அவர் நிறைவேற்றி வரவேண்டும்.

சத்தியாக்கிரகி, கைதி என்ற முறையில் மேலும் சில விதிகளைக் கடைப்பிடிக்க வேண்டும் எனக் குறிப்பிடுகிறார் காந்தியடிகள்.[15] அவையாவன:

1. கைதி என்ற முறையில் சிறை அதிகாரிகளிடம் மதிப்புக் குறைவற நடந்து கொள்ளவேண்டும். தன்மதிப்புக்கு மாறு பட்டதாக இல்லாதிருக்கும் எல்லாச் சிறைச்சாலைக் கட்டுத் திட்டங்களுக்கும் ஏற்ப நடந்து கொள்ளவேண்டும்.
2. சத்தியாக்கிரகி, மற்றச் சாதாரண கைதிகளுக்கும் தனக்கும் வேறுபாடு கற்பிக்கக்கூடாது. மற்றவரினும் தான் உயர்ந் தவன் என எண்ணுதல் கூடாது. தன் உடலை நல்ல நிலையில் வைத்துக்கொள்ளத் தேவையற்ற வசதிகளைக் கேட்காமல் தன் உடல் அல்லது ஆன்மா ஒழுங்காக இருப்பதற்குத் தேவை யான வசதிகளைக் கோரும் உரிமை உண்டு.
3. தன்னுடைய வசதிகளுக்காக உண்ணாநோன்பு இருக்கக் கூடாது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இப்பண்புகளுடன் சத்தியாக்கிரகிகள் எவ்வாறு விடுதலைப் போராட்டங்களில் ஈடுபட்டு அப்போராட்டங்களுக்கு ஒரு 'காந்திய முத்திரை பதித்தனர் என்பது பிற கதைகளின்வழி இனி ஆராயப் படுகிறது.

விடுதலைப் போராட்டங்கள் அமைந்துள்ள பிற கதைகள்

விடுதலைப் போராட்டத்தைக் கதைக் கருவிலும் கதைப் பின்னலிலும் விளக்குமாறு கதைகள் அமைந்துள்ளன. சி. சு. செல்லப்பாவின் 'வந்தே மாதரம்', 'சட்டத்துக்கு மிஞ்சி', 'கனவு', 'அன்றைய பொங்கல்', 'கந்தசாமி' ஆகிய கதைகளிலும்அகிலனின் 'இன்பத்தீ' என்ற கதையிலும் கொள்கை கருவில் அமைகிறது. சி.சு. செல்லப்பாவின் 'சத்யாக்ரகி', 'சிப்பாய் இதயம்', கல்கியின் 'கணையாழியின் கனவு', 'பவானி, பி.ஏ.,பி.எல்.', 'சிரஞ்சீவிக் கதை', ராஜாஜியின் 'மந்திரி சீதாராமய்யர்', பி. எஸ். ராமையா வின் 'அமிஞ்சிக்கரை சோமு' ஆகிய கதைகளில் கதைப் பின்னலில் கொள்கை விளக்கப்படுகிறது.

'வந்தே மாதரம்' என்ற கதையில் 'காந்திய விடுதலைப் போராட்டத்திற்கு அரசு ஊழியரும் உள்ளூர ஆதரவளித்தனர்' என்பது உரிப்பொருள். சிறு வயதில் காந்தி ஊர்வலத்தில் தீவிர மாகக் கலந்து தந்தையிடம் அடிபட்ட மாணிக்கத்தை, இன்று கண்முன் சென்றுகொண்டிருக்கும் காந்தி ஊர்வலத்தில் கலந்து கொள்ளச் சக்தியற்றவனாக அவனுடைய வயிற்றுப் பிழைப்பானது கட்டுப்படுத்துகிறது. 'வந்தே மாதரம்' என்று பெருமூச்சுடன் உள்ளூரச் சொல்லிக்கொள்கிறான்.

சிறு வயதில் 'வந்தே மாதரம்', 'பாரதமாதாகீ ஜே' என்று காந்தியடிகளின் படத்தைக் கையில் பிடித்துக்கொண்டு தொண்டை கமறும்வரை கத்தினான். ''இன்று கிட்ட வந்த ஊர்வலத்தில் ஆர்வம் காட்டத் தன் வாழ்க்கையே தடை செய்திருக்கிறது. மீறினால் கிடைக்கும் தண்டனை தெரியாதா அவனுக்கு?''[16] என்ற பகுதி தேசிய உணர்ச்சியை வெளிப்படுத்த முடியாத அவனது அவல நிலையை உணர்த்தும்.

'சட்டத்துக்கு மிஞ்சி' என்ற கதையில், 'பிறர் மரணத்தையும் அலட்சியப்படுத்தும் அதிகாரிகளுக்குக் கட்டுப்பட்டே வாழ்பவர்கள் விடுதலைப் போராட்டக் கைதிகள்' என்பது கதைக் கருவாகும். சிறைவிதிப்படி பூட்டிய சிறைக் கதவைத் திறக்க அனுமதி பெற்று

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அதன் பின் மருத்துவ உதவி வருவதற்குள் நடு இரவில் உயிர் துறக்கிறார் ஒரு சத்தியாக்கிரகி. விடிந்தபின் அந்தக் கைதிக்காக இரங்கல் கூட்டம் நடத்திய அதிகாரி, மீண்டும் திரும்பி வந்து முந்தின நாள் அந்தக் கைதிக்கு, ''ஏ'' வகுப்பிற்கு மாற்றலாக உத்தரவு வந்ததைச் சொல்ல மறந்ததாகப் பொறுப்பற்ற தன்மையில் கூறுகிறார்.

சிறை அதிகாரிகளின் அலட்சிய மனப்போக்கு, அதைச் செரித்துக் கொண்டு வாழ்நாளைக் கழிக்கும் சத்தியாக்கிரகிகளின் நிலை, ''...என்னவோ ஒண்ணு குறைஞ்சுது' என்று சர்வ சாதாரணமான குரலில் ஒருவிதக் கிளர்ச்சியும் காட்டாமல் ஒரு சாவைப்பற்றிப் பேசினான். வாஸ்தவம். ஒரு கைதியைப்பற்றி அவனுக்கு இதற்கு மேல் என்ன சிரத்தை இருக்க முடியும்?'' [17] என்ற ஒரு சத்தியாக்கிரகியின் கூற்றால் உணரப்படுகின்றன.

'கனவு' என்ற கதையில், பாதுகாப்புச் சட்டக் கைதி மாரியப்பன் ஓர் ஆண்டு சிறைவாழ்வில் குடும்பத்தை எளிதில் மறக்க முடியாமல் தவிக்கிறான். விடுதலை பெற்ற நாளன்று, சிறை வாயிலில் ஆவலுடன் காத்துக்கொண்டிருக்கும் மனைவிமக்களுடன் உரையாடிக்கொண்டிருக்கும்போதே மீண்டும்கைதியாக்க உத்தரவு வர அவன் தலைசுழலுகிறது. 'விருப்பமில்லாவிடினும் பாதுகாப்புச் சட்டக்கைதி விடுதலைபெற்றகணத்தில் மீண்டும் கைதியாவதற்கும் ஆயத்தமாயிருத்தல் வேண்டும்'என்பதுஇக்கதையின்உரிப்பொருள். வாழ்க்கையைத் தியாகம் செய்யக்கூடிய பக்குவமில்லாத ஒருவனது அவல நிலையை இக்கதையில் காணமுடிகிறது.

'அன்றைய பொங்கல்' என்ற கதையில், பொங்கலுக்கு முந்தின நாள் சத்தியாக்கிரகம் செய்து கைதியான சாமிநாதனுக்குப் பொங்கலன்று மத்திய சிறைக்குச் செல்லும்போது, இரயில்வே நிலையத்தில் தாய் அனுப்பிய பொங்கலைச் சுவைக்க நேரிடுகிறது. விடுதலை அடைந்தபின் ஒவ்வோர் ஆண்டும் பொங்கலுக்கு முந்தின நாள் நடந்த அந்நிகழ்ச்சி இருவர் மனத்திலும் பசுமையாக நிற்கிறது. 'விடுதலைப் போரில் ஈடுபடும் இளைஞர்க்கு நாளும் பொழுதும் ஒரு பொருட்டாக இருந்ததில்லை' என்பது கதைக் கரு. பொங்கல் கழித்துச் சத்தியாக்கிரகம் மேற்கொள்ள இரங்கிக் கேட்கும் தாயிடம், ''அம்மா, யுத்த களத்தில் சிப்பாய்களுக்கு உத்தரவு போட்ட மாதிரி. அதை மீறக்கூடாது அம்மா'' [18] என்று சாமிநாதன் மொழிவது எந்த நாளும் சிறைக்குச் செல்லத் தயாராக

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இருக்கும் அவனது உட்கிடக்கையையும் கட்டுப்பாட்டுணர்வையும் தெளிவாக்கும்.

'கந்தசாமி' என்ற கதையில் சத்தியாக்கிரகி வேதாசலம் வேலூர் சிறையிலிருந்து அலிப்புரம் சிறைக்கு மாற்றலாகிச் செல்லும்போது, பாகாலா இரயில்வே நிலையத்தில் அவர் தமக்கையின் குடும்பத்தினர் காண வருகின்றனர். மிருகத்தன மிகுந்த காவல்துறை அதிகாரி சற்று நகரும்போது, இரயில் புறப்படும் நேரத்தில், மெய்க்காவலர் கந்தசாமி சன்னல் கதவைத் தூக்கி அவர்கள் வேதாசலத்தைக் காண உதவுகிறான். விளைவு, அவனுக்குப் பதவி பறிபோகிறது.

'சத்தியாக்கிரகிகளுக்குச் சிறு உதவி புரியும் அரசினைச் சார்ந்தோரும் கடுந் தண்டனைக்கு ஆளாயினர்' என்பது கதைக் கரு. ''எஸ்கார்ட் என்று அடிவயிற்றிலிருந்து கத்தி... 'ஏன் கதவைத் திறந்தாய்?'''[19] என்று கூறிச் சரி, இதற்குச் சமாதானம் சொல்ல வேண்டும்''[20] எனச் சினந்து அவனது எண்ணைக் குறித்துக் கொள்ளும் காவல்துறை அதிகாரியின் செயல், அன்றைய அரசு சத்தியாக்கிரகிகளைக் கடுமையாக நடத்திய போக்கைச் சுட்டும்.

'இன்பத் தீ' என்ற கதையில் காந்தியடிகளைச் சிறையில் தள்ளியதால் காந்தியத் தொண்டன் ரங்கசாமி கிராமத்தாரைத் திரட்டித் தன் விருப்பப்படி அடிமைத்தனத்தை எதிர்க்கிறான். தன் காதலி அழகம்மாளின் கற்பைச் சூறையாடப் புகும் உள்ளூர்க் காவல்துறையினனைத் தாக்கிய ரங்கசாமி, தன் காதலியுடன் இராணுவ வீரனின் குண்டுகளுக்கு இரையாகிறான். 'காந்தியடிகளைச் சிறையிலிட்டமை வன்முறைக்கும் பல நாசங்களுக்கும் வழி வகுத்தது' என்பது இக்கதைக் கரு. ''காந்தியின் வழி என்ன என்று தெரிந்து கொள்ள முடியாதபடி அக்கிரமக்காரர்கள் அவரை அடைத்து விட்டதால் மக்கள் தங்கள் தங்கள் இஷ்டப்படியெல்லாம் அடிமைத் தனத்தை எதிர்த்தார்கள்''[21] என்ற பகுதி வன்முறைக்கான காரணத்தைத் தெளிவுறுத்தும் நிலையில் காந்தியச் செல்வாக்கை உணர்த்தும்.

'சத்யாக்ரகி' என்ற கதையில், கதைப் பின்னலில் காந்திய வழியில் நாட்டு விடுதலைப் போரில் பங்குபெறும் சத்தியாக்கிரகிகளுக்குத் தேவையான பயிற்சிகள் பற்றிய விளக்கங்கள் இடம் பெறுகின்றன. ''காந்திய முறையில் எத்தனையோ பார்த்திருக்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கிறோம். அத்தனைக்கும் பயிற்சி பெற்றவன்தான் ஒரு சத்யாக் கிரகி...'';[22] ''உப்பளத்திலே இருந்து ஒரு பிடி சர்க்கார் உப்பை அள்ளின கையிலேயும் ஊர்வல முகப்பிலே கொடி பிடித்துப் போகிற கையிலேயும், தடுக்கப்பட்ட ஊர்வலத்தை மீறி நடத்திப் போகிறபோது முன் நீளுகிற முழங்காலிலேயும் 'பிடியை விடு, கலைந்து போ' என்று எலும்பு முறிய மேலே மேலே லாத்திஅடி விழுகிறபோது 'வந்தே மாதரம்' என்று சொல்லிக் கொண்டே கீழே உட்காரப் பயிற்சி தேவை''[23] என்ற பகுதிகள் சத்தியாக் கிரகப் பயிற்சியின் ஆற்றலை உணரச்செய்யும். இப்பயிற்சியானது கல்லூரியில் பெறுவதன்று; இந்தச் சத்தியாக்கிரகிகள் ஒவ்வொரு வரும் காந்தியடிகளை மனத்தில் இருத்தித் தம்மைத்தாமே இப்பயிற்சிக்கு உருவாக்கிக் கொண்டவர்கள் என்பதும் புலப் படுத்தப்படுகிறது.

''அப்போதெல்லாம் சபர்மதி ஆக்ஞை ஆணை வைத்த மாதிரி. இப்போ மாதிரி .....ஆத்திரப்பட்டுக் கல்லெறிந்துவிட்டு ஓடிப்போகிற சிறுபிள்ளைத்தனம், பொறுப்பின்மை சத்யாக்ரகக் காலப் பிஞ்சுகளுக்குக் கூட கிடையாது'';[24] ''அன்றைய ஒரு சத்யாக்ரகி எதையும் இழக்கமுடியும். இழக்கத் தயாரானவன்... உங்கள் சிப்பாய் பலாத்காரத்தை வீசுவான், வாங்கியும் கொள் வான். சத்யாக்ரகி பலாத்காரத்தை வாங்கிக் கொள்வானே தவிரக் கொடுக்க மாட்டான். தான் தாங்குவான், தாக்கமாட்டான். அது தான் காந்தியுகம் பார்த்த அதிசயம். உன் தலைமுறைக்கு அது தெரியாது. ஏன்னால் இதுவரை அது தொடரவில்லை.''[25] இப்பகுதிகள் உண்மையான சத்தியாக்கிரகியின் பண்புகளைச் சுட்டும்.

நாடு விடுதலை பெறக் காந்தியப் போராட்டத்தில் ஈடுபட்ட ஓர் இளைஞனானவன் சிப்பாய் ஒருவனால் கொடுமைக்கு ஆளாவது 'சிப்பாய் இதயம்' என்ற கதையின் பின்னலில் சித்திரிக்கப்பட்டுள்ளது. ''முதல் அடி முழங்கால் சிப்பியில், வெட்டி வீழ்த்தினதுபோல் விழுந்தது. 'ஸ்...ஹா' என்று வாய்விட்டு வீறிடப் போனவன், எப்படியோ பல்லை இறுக்கிக் கொண்டு விட்டேன். அடுத்த க்ஷணம் வலது முழங்கையில். கையே ஒடிந்து நொறுங்கினதா? அப்படியே இடது கை ஓடி அதை அமுக்கிப் பிடித்தது...''[26] இச்சித்திரிப்பு, உடலால் தாங்கமுடியாத கொடிய தாக்குதல்களை ஆன்ம பலத்துடன் ஏற்றுப் போர்முனையில் தன் கடமையை ஆற்றும் சத்தியாக்கிரகியின் பண்பை உணர்த்தும்.

'கணையாழியின் கனவு' என்ற கதையில் ஆசிரியரும் விடு தலை இயக்கத்தில் ஈடுபட்டு, காயமுற்றுச் சிறைக்குச் சென்றமை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சுட்டப்படுகிறது. 'பவானி, பி.ஏ., பி.எல்.,' என்ற கதையின் நிகழ்ச்சிப் பின்னலில் விடுதலைப் போராட்டத்தின் ஒரு பகுதியாக விளங்கிய, அந்நியத் துணிக் கடை மறியல் போராட்டம் இடம் பெறுகிறது. காந்தி குல்லா அணிந்த தொண்டன் கடை வாசலில் வருவோரிடம் கைகூப்பி, ''அம்மணி! கல்வியறிவு படைத்த தாங்கள் இப்படிச் செய்யலாமா? தயவு செய்து திரும்பிப் போங்கள்''[27] என்று இரங்கிக் கேட்பதும், ''.. வந்தே மாதரம் என்று கோஷித்தான். கரகரவென்று அவன் கால்களைப் பிடித்து இழுத்துக்கொண்டு போனார்கள். போலீஸ் லாரியில் தூக்கிப் போட்டார்கள்''[28] என்று அவனது சத்தியாக்கிரகத்தை ஆசிரியர் சித்திரிப்பதும் அகிம்சை வழியில் போராடுபவர் அதன் விளைவாகத் துன்பத்தை ஏற்பதை அறியச் செய்யும்.

'சிரஞ்சீவிக் கதை'யின் நிகழ்ச்சிப் பின்னலில் உப்புச் சத்தியாக்கிரகப் போராட்டம் இடம் பெறுகிறது. காந்தி குல்லா அணிந்த காங்கிரசுத் தொண்டர்கள் சென்னைக் கடற்கரையில் உப்புக் காய்ச்சியதும், அதன் விளைவாகக் காவலர் துப்பாக்கிக் குண்டுகளைப் பயன்படுத்தியதும் சுட்டப்படுகின்றன. 'மந்திரி சீதாராமய்யர்' என்ற கதையில் வழக்கறிஞர் சீதாராமய்யர் 1930-இல் விடுதலை இயக்கத்தில் சேர்ந்து சிறை செல்வது நிகழ்ச்சிப் பின்னலில் இடம்பெறுகிறது. சிறைக்குச் செல்லும் அவர், ''தேசத்தின் மானத்தைக் காப்பாற்ற வேண்டும். உனக்கு விஷயம் தெரியாது''[29] என்று கூறுவது நாட்டின் விடுதலையைக் குறித்து அமையும் அவரது மான உணர்வைப் புலப்படுத்தும்.

'அமிஞ்சிக்கரை சோமு' என்ற கதையின் கதைத் தலைவர் வேதாரண்ய உப்புப்போரில் சிறையிலிருந்தபோது, உடனிருந்த திருட்டுக் கைதி சோமுவுக்கு அவ்வப்போது அறவுரை கூறி அவனைத் திருத்தியது சுட்டப்படுகிறது. சத்தியாக்கிரகிகள் உடனிருந்த பிற சிறைக் கைதிகளையும் நல்லுள்ளம் கொண்டவர்களாக மாற்றியமை புலனாகிறது.

விடுதலைப் போராட்டக் கதைகளைத் தவிரக் காந்தியத் தாக்கம் பெற்ற சாதாரண தொழிலாளியின் நாட்டுப் பற்றை உணர்த்தும் கோவி மணிசேகரனின் 'அன்னையின் குரல்' என்ற கதையும் இப்பகுதியில் சேர்ப்பதற்குரியதாகும். காந்தியடிகளிடம் ஈடுபாடுகொண்ட வள்ளியப்பன், மரணமுற்ற தாயைக் காண ஊருக்குப் புறப்படும் போது, தெருவில் நாட்டுப் பாடலைக் கேட்டு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நின்றுவிட்டபடியால் ஊர்தியைப் பிடிக்க முடியாது வீடு திரும்புகிறான். ''காந்தியச் செல்வாக்குச் சாதாரண ஏழை உழைப்பாளியிடம் நாட்டுப்பற்றைத் தூண்டக் காரணமாகிறது'' என்பது இக் கதையின் கரு.

இக்கதைகளால் அறியப்படுவன

விடுதலைப் போராட்ட நிகழ்ச்சிகளை விளக்க வந்த கதைகளினால் கீழ்க்காணும் உண்மைகள் அறியப்படுகின்றன.

1. காந்திய விடுதலைப் போராட்டங்கள் நாட்டுப்பற்று உணர்வு கொண்ட மக்களை ஈர்த்து, அவர்களை அப் போராட்டங்களில் பங்கு பெறச் செய்தன. அந்நிலையில் சிறைக்கொடுமைகளைத் தாங்கவும், சிறைக்குச் செல்லும் சூழலில் வருந்தும் குடும்பத்தினரைப் பிரியவும், காவல் துறையினரின் கொடுமைகளைத் தாங்கவும் துணிவுடையவர்களாக அவர்கள் இருந்தனர்.

உடலாலும் உணர்வாலும் அனுபவிக்க நேர்ந்த சிறைக் கொடுமைகளைச் சில கதைகள் விரிவாக விளக்குகின்றன. ''...சாக்குப் படுக்கை... கம்பளியைப் போர்த்துக் கொண்டதால் ஏற்பட்ட கடி உபத்திரவத்தில்... உடம்பைப் போட்டுப் பிய்த்துப் பிடுங்கி''[30]; ''...அலுமினியத்தட்டு, குவளை, இரண்டு மண் மல்லைகள்...''[31]; ''...அச்சடித்த கட்டியும் அவுன்ஸ் கொழம்பும் ...''[32]; ''...சிறைக்கஞ்சியை ஆரம்பித்து... அதிலே செத்து மிதந்த ஒரு பாச்சை...''[33]; ''கழுத்தை இறுக்கிப் பிடித்து நுழைக்கும்படியாக ஒட்டக்கழுத்துச்சட்டை, தொடையை இறுக்கிப் பிடிக்கிற டிராயர், ஒரு கௌபீனத்தின் அகல நீளத்தை விடச் சற்று அகல நீளமான துண்டு, ஒரு குல்லா...'';[34] ''நீளவாட்டில் ஐந்து எட்டுக்கள் போட்டதும் கால் விரல்கள் எதிர்ச் சுவரில் போய் உராய்ந்தன. குறுக்கு வாக்கில் நடந்தான். மூன்று எட்டுக்கள் தான் போட முடிந்தது''.[35] இப்பகுதிகள் சிறைக்குள் சத்தியாக்கிரகிகள் ஏற்ற துன்ப நிலையைத் தெளிவுறுத்தும்.

இவற்றிற்கும் மேலாகச் சிறைக்குள் அவர்களின் உணர்வுகள் இழி நிலைக்குட்பட்டதையும் அறியமுடிகிறது. சத்தியாக்கிரகிகள் மரணத்தைத் தழுவவும் தயாராக இருக்குமாறு அவர்களுடைய ஆன்ம பலத்தைக் காந்தியடிகள் தூண்டியிருக்கிறார். அந்நிலையில் மரணத்தைத் தழுவியதற்குத் தேவையற்ற கால நீட்டிப்பு இருந்தமை ''... பூட்டிய சிறைக் கதவைத் திறப்பதற்கு அனுமதி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பெற்று வைத்திய உதவி வருவதற்குள் அவருடைய கடைசி மூச்சு நின்று விட்டதாம்''[36] என்ற பகுதியாலும், மரணச் செய்திபற்றிக் கூட அலட்சியமாக இருந்தமை, ''மனிசன் எங்கிருந்தோ இங்கே வந்து உசிரை விட்டாரு, வீட்டிலே சாகாமே'';[37] ''...ஊரு பேரைக் கவனிச்சு வச்சுக்கிடறதுதானா எங்க வேலை? என்னவோ ஒண்ணு குறைஞ்சுது'';[38] ''... சொல்ல மறந்து விட்டேன்... நேற்றிரவு மரணமடைந்த அந்தக் கைதியை 'ஏ' வகுப்புக்கு மாற்ற... உத்தரவு... வந்திருக்கிறது...''[39] என்ற பகுதிகளாலும் உணர்த்தப்படுகின்றன.

சிறைக்குச் செல்லுபவர்களின் பிரிவால் குடும்பத்தார் அல்லலுறுவதை, ''தாய் கண்களில் கண்ணீரைப் பொலபொலென உதிர்த்து...'';[40] ''... நான்கு நாட்களாகச் சரியாகச் சாப்பிட வில்லை...'';[41] ''... இரண்டு குஞ்சுகளுக்குத் தாயான அவன் இளம் மனைவி காத்தாயி... விட்ட கண்ணீர்'';[42] என்ற பகுதி களால் அறிய முடிகிறது.

சிறைமாற்றமடையும்போது காணலாம் என ஆவலுடன் வரும் உறவினர்களைப் பார்க்கவும் பேசவும் ஒட்டாமல் கடுமை யாகச் சத்தியாக்கிரகிகள் தடுக்கப் பட்டமை ''... எங்கிருந்தோ பாய்ந்து வந்தான் சார்ஜெண்ட். வண்டியை நெருங்கி விட்ட அவர் மார்பில் கைவைத்துப் பின்னுக்குத் தள்ளினான்''[43] என்ற பகுதியால் புலனாகிறது.

2. விடுதலை ஒன்றையே குறிக்கோளாகக் கொண்ட வர்கள், காவல் துறையினரின் தாக்குதல்களுக்கும் தளரா திருந்த நிலையில் தம் ஆன்மீக பலத்தை நிலைநிறுத்தினர்.

''பட்பட்பட்...தொண்டன் கீழே விழுந்து கொண்டிருந்தான். அவன் நெற்றியிலிருந்து இரத்தம் பீறிட்டது... வந்தே மாதரம் என்று கோஷித்தான்'';[44] ''சத்யாக்ரகி இடம் விட்டு நகர்வதா? ...வலி தெறிக்கும் முழிகளின் முழு பலத்தையும் உபயோகித்து நிலை நிற்க உறுதி காட்டினேன்...'';[45] ''... அந்தச் சத்யாக்ரகி ரத்த வெள்ளத்தில்'';[46] '''கொ...டி...எ...ங்...கே?' அவர் கை கொடிக்காகத் துளாவியது''[47] என்பன துன்பத்தைத் தாங்கும் சத்தியாக்கிரகிகளின் மனவலிமையை உணர்த்தும்.

3. சத்தியாக்கிரகிகள் சிறையில் ஒரே குடும்பமாக வாழ்ந்தனர்.

விடுதலைப் போராட்டக் கைதிகள் பல இடங்களினின்றும் வரப்பெற்றுச் சிறையில் அடைக்கப்பட்டாலும் ஒரு குடும்பத்தினர்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

போல் மனமகிழ்ச்சியுடன் பழகுவதும் ('கனவு', 'கந்தசாமி'), ஒருவர் துன்பத்தில் மற்றவர் பங்கு பெறுவதும் ('சட்டத்துக்கு மிஞ்சி') காட்டப்பட்டுள்ளன.

4. சத்தியாக்கிரகிகள் எக்கணத்திலும் சிறைக்குச் செல்லத் தயாராக இருந்தனர்.

சத்தியாக்கிரகிகள் விழா நாளிலும் ('அன்றைய பொங்கல்'), விடுதலை பெற்ற மறுகணத்திலும் ('கனவு'), மீண்டும் மீண்டும் ('மந்திரி சீதாராமய்யர்') சிறைக்குச் செல்லும் நிலை ஏற்பட்டதையும் உணரமுடிகிறது.

5. இக்கதைகளினால் காந்தியடிகளின் காலத்து வரலாற்றினை அறிய முடிகிறது.

இக்கதைகளுள் சில, அக்கால வரலாற்றுக் குறிப்புகளையும் தருகின்றன. 1942 ஆகஸ்ட் மாதம் காந்தியடிகளைச் சிறைக்குள் தள்ளியதும், அதன் விளைவாக மக்கள் அவரவர் விருப்பப்படி வன்முறையில் இறங்கியதும் ('இன்பத் தீ') சுட்டப்பட்டுள்ளன. ''...அதை [உப்புச் சத்தியாக்கிரகம்] ஆரம்பித்த மகாபுருஷரை ஒரு வாரத்திற்கு முன்புதான் கைது செய்து சிறைக்கு அனுப்பியிருந்தார்கள்'';[48] வ.உ.சி.யைக் கைது செய்த சமயம் — 1906 வாக்கிலே தூத்துக்குடியிலே ..'';[49] ''ஆயிரத்தி தொளாயிரத்து முப்பது ஜனவரி இருபத்தாறாம் தேதி முதல் சுதந்திர ஊர்வலம்...'';[50] ''தென்னாப்பிரிக்காவில் ... வெற்றி கண்ட நம்பிக்கையில்தான் 1920, 30, 40, ஆகிய மூன்று காலகட்டத்து படிப்படியாக உயர்ந்த போராட்டங்களை வகுத்தார்''[51] என்ற வரலாற்றுக் குறிப்புகளைச் சில கதைகளில் காணலாம்.

6. பல்வேறுபட்ட மக்களிடம் தேசிய இயக்க உணர்வுகளுக்கு வித்திட்டவர் காந்தியடிகள்.

காந்திய விடுதலை இயக்க உணர்வுகள் நிரம்பப் பெற்றவர்களுள் குறிப்பாக ஒடுக்கப்பட்ட அரசு ஊழியன் ('வந்தேமாதரம்'), நெசவாலைத் தொழிலாளி ('கனவு'), வழக்கறிஞர் ('மந்திரி சீதாராமய்யர்'), கல்லூரி மாணவன் ('சத்யாக்ரகி'), கிராமவாசி ('இன்பத் தீ') ஆகியோரும் பிறரும் இருந்தனர். அந் நிலையில் நகரவாசி, கிராமவாசி, கற்றவர், மற்றைய தொழிலாளர், மாணவர் போன்ற பலர் உள்ளத்தில் நாட்டுப்பற்றினைத் தூண்டக் காந்தியடிகள் காரணமாயிருந்தார் என்பது புலனாகிறது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

7. நம்பிக்கை தருவதற்குரியது காந்தியம்.

தக்க உணர்வு பெற்றால், காந்திய வழியை உலகம் தன் சிக்கல்கள் எல்லாவற்றிற்கும் தீர்வு காணப் பயன்படுத்தலாம் என்ற நம்பிக்கையில், ''அந்த வழி குறித்துக் குறிப்பு நோக்கிச் செல்லும் பக்குவம் கொஞ்சமாவது நமக்கு ஏற்பட ஆன கால அளவையும் கணித்துப் பார்த்தோமானால் காரிய சித்தியைப் பற்றிக் கொஞ்சம் அனுமானிக்க முடியலாம்''[52] என்று சொல்லப் படுவது, காந்தியடிகள் காலத்தில் விடுதலைக்கு நம்பிக்கை தந்த காந்தியம் எதிர்காலத்திலும் வாழ்க்கைக்கு நம்பிக்கை தருவதே என்பதை உணர்த்தும்.

குறிப்புகள் :

1 வேங்கடராஜுலு, ரா., (ப.ஆ.), **மகாத்மா காந்தி நூல்கள், தொகுதி 2, வேங்கடராஜுலு**, ரா., (மொ.பெ.ஆ.), ப. *131.*

2 மேலது, ப. *256.*

3 Gandhi, M. K., *Harijan*, dt. 12-5-1946.

4 Gandhi, M.K., *Young India*, dt. 9-5-1929.

5 Ibid.

6 Bandyopathyaya, J., *Social and Political Thought of Gandhi*, pp. 376-377.

7 Gandhi, M.K., *Young India*, dt. 23-3-1921.

8 வேங்கடராஜுலு, ரா., (ப.ஆ.), **மகாத்மா காந்தி நூல்கள், தொகுதி 8, வேங்கடராஜுலு**, ரா., & ஜெயமணி சுப்பிரமணியம், (மொ.பெ.ஆ.), ப. *23.*

9 மேலது, ப. *24,*

10 மேலது.

11 Gandhi, M.K., *Young India*, dt. 23-3-1921.

12 வேங்கடராஜுலு, ரா.,(ப.ஆ.), **(மகாத்மாகாந்தி நூல்கள்) தொகுதி 8, வேங்கடராஜுலு**, ரா., & ஜெயமணி சுப்பிரமணியம், (மொ. பெ. ஆ.), ப. *34.*

13 Varma, V. P., *The Political Philosophy of Mahatma Gandhi and* Sarvodaya, p. 193.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

14 Gandhi, M. K., *Harijan*, dt. 25-3-1939.
15 Gandhi, M. K., *Young India*, dt. 27-2-1930.
16 செல்லப்பா, சி.சு., 'வந்தே மாதரம்', **சத்யாக்ரகி**, ப. 14.
17 செல்லப்பா, சி.சு., 'சட்டத்துக்கு மிஞ்சி', **சத்யாக்ரகி**, ப. 40.
18 செல்லப்பா, சி.சு., 'அன்றைய பொங்கல்', **சத்யாக்ரகி**, ப. 85.
19 செல்லப்பா, சி.சு., 'கந்தசாமி', **சத்யாக்ரகி**, ப. 98.
20 மேலது.
21 அகிலன், 'இன்பத் தீ', **ஆண்-பெண்**, ப. 74.
22 செல்லப்பா, சி.சு., 'சத்யாக்ரகி', **சத்யாக்ரகி**, ப. 138.
23 மேலது, பக். 138-139.
24 மேலது, ப. 144.
25 மேலது, ப. 148.
26 செல்லப்பா, சி.சு., 'சிப்பாய் இதயம்', **சத்யாக்ரகி**, ப. 16
27 கல்கி, 'பவானி, பி.ஏ., பி.எல்.', **கணையாழியின் கனவு**, ப. 214.
28 மேலது, ப. 216.
29 ராஜாஜி, 'மந்திரி சீதாராமய்யர்', **பாற்கடல்**, பக். 86-87.
30 செல்லப்பா, சி.சு , 'சட்டத்துக்கு மிஞ்சி', மு.நூ., ப. 35.
31 செல்லப்பா, சி.சு., 'கனவு', **சத்யாக்ரகி**, ப. 51.
32 மேலது, ப. 48.
33 செல்லப்பா, சி.சு., 'அன்றைய பொங்கல்', மு.நூ., ப. 85.
34 செல்லப்பா, சி.சு., 'கந்தசாமி', மு.நூ., ப. 88.
35 செல்லப்பா, சி.சு., 'கனவு', மு.நூ., ப. 52.
36 செல்லப்பா, சி.சு., 'சட்டத்துக்கு மிஞ்சி', மு.நூ., ப. 41.
37 மேலது, ப. 40.
38 மேலது,
39 மேலது, ப. 45.
40 செல்லப்பா, சி.சு., 'அன்றைய பொங்கல்'. மு.நூ., ப. 84.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

41 மேலது, ப. 87.

42 செல்லப்பா, சி.சு., 'கனவு', மு.நூ., ப. 50.

43 செல்லப்பா, சி.சு., 'கந்தசாமி', மு.நூ., ப. 97.

44 கல்கி, 'பவானி, பி.ஏ., பி.எல்'., மு.நூ., ப. 216.

45 செல்லப்பா, சி.சு., 'சிப்பாய் இதயம்', மு.நூ., ப. 17.

46 செல்லப்பா, சி.சு., 'சத்யாக்ரகி', மு.நூ., ப. 146.

47 மேலது, ப. 147,

48 கல்கி, 'சிரஞ்சீவிக் கதை', **கணையாழியின் கனவு**, ப. 73.

49 செல்லப்பா, சி.சு., 'சத்யாக்ரகி', மு.நூ., ப. 145.

50 மேலது, ப. 149.

51 மேலது, ப. 137.

52 செல்லப்பா, சி.சு., 'சத்யாக்ரகி', மு.நூ., ப. 135.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

7

1. காந்தியம் - உண்மையும் போலியும்

காந்தியத்தை உண்மையாகவே நடைமுறைப்படுத்த முயலும் தன்மையும், காந்தியடிகளின் பெயரால் போலி வாழ்வு நடத்திச் செல்வாக்குப் பெறமுயலும் போக்கும் எவ்வாறு உள்ளன என்பதைக் 'காந்திவழிக் கதைகள்' என்ற தொகுப்பு நூலில் இடம்பெறும் கதைகளின்வழி ஆராய்வது இவ்வியலின்கண் அமைகிறது.

காந்தியத்தின் உண்மை செயற்பாட்டில் அமைதல்

'காந்தியம் — உண்மையும் போலியும்' என்ற தலைப்பிற்கு விளக்கமாகக் காந்தியடிகளின் கருத்துகளை முதற்கண் காணுவது தகும்.

''...என் பெயரைத் தொத்திக் கொண்டிராதீர்கள். கொள்கைகளையே பற்றிக் கொண்டிருங்கள். கொள்கைகளை முக்கியமாகக் கொண்டு உங்களுடைய நடவடிக்கைகளை அளவிடுங்கள். எழும் ஒவ்வொரு சிக்கலையும் அச்சமின்றிச் சமாளித்துக் கொள்ளுங்கள்''[1] என்று காந்தியடிகள் குறிப்பிடுவது உண்மையில் காந்தியம் என்பது காந்தியடிகளின் பெயரளவில் அமைவதன்றி அவர்தம் கொள்கைகளின் செயற்பாடாக அமைவதாகும் என்பதைத் தெளிவுறுத்தும். தம் கொள்கைகளைத் தம் வாழ்க்கை வழித் தெளிதல் வேண்டும் என்ற நோக்கில் ''என் வாழ்வே என் செய்தி''[2] என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எண்ணத்தால் — சொல்லால் மட்டுமன்றிச் செயலால் வாழ்ந்து காட்டிய பெருமைக்குரியவர் காந்தியடிகள். கொள்கைச் செயற்பாடே என்றும் மனிதத்துவத்திற்கு வழிகாட்ட உதவும் என நம்பியவர் அவர். ''நான் கூறியவையோ எழுதியவையோ அல்ல, நான் செயலில் காட்டியவைதான் நிரந்தரமாக இருக்கும்''[3] என்பது அவர்தம் கூற்று. மேலும் தம் கொள்கைகளை நடைமுறைப் படுத்தாவிடில் எத்தகைய நலனும் இல்லை என்பதை, ''மகத்தான கொள்கைகளான சத்தியத்தையும், அகிம்சையையும் நீங்கள் மேற்கொள்ளுவதற்கு என் பேச்சுகளும் எழுத்துகளும் உதவியாக இருக்கும் அளவுக்கு மாத்திரமே அவை பலனளிப்பவை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

யாக இருக்கும். அக்கொள்கைகளை நீங்கள் அனுசரிக்காவிடில் அவற்றினால் உங்களுக்கு யாதொரு பலனும் இல்லை''[4] என்று அறுதியிட்டு உரைக்கிறார்.

காந்தியடிகளின் இக்கருத்துகளின்படி காந்தியத்தின் உண்மையானது செயற்பாட்டில் அமைவதே என்பதும் பெயரள விலும் சொல்லளவிலும் காந்தியத்தைக் குறிப்பிட்டுச் செயற் பாட்டில் மாறுபடுவது போலித்தனமே என்பதும் உணரப் படுகின்றன.

இனி, காந்தியம்-உண்மையும் போலியும் என்பதை விளக்கும் வண்ணம், காந்தி வழிக் கதைகளில் அமையும் கதைகள் பற்றிய ஆய்வு இடம் பெறுகிறது.

கதைகளில் உண்மைக் காந்தியமும், காந்தியப் போலியும்

'காந்தியம்-உண்மையும் போலியும்' என்பதைத் தெளி வுறுத்துவன ஆர். சூடாமணியின் 'உள்ளும் புறமும்', பொன்னித் துறைவனின் 'கங்கை எரிகிறது' ஆகிய இரண்டும் ஆகும்.

கதைச் சுருக்கமும் கருவும்

'உள்ளும் புறமும்' என்ற கதையில் முத்து, ரமணன், கோபி ஆகியோர் மாணவப்பருவத்தில் 1942 மறியல் போராட்டங் களில் தீவிரமாக ஈடுபட்டவர்கள். குடும்ப வாழ்வை ஏற்ற பல ஆண்டுகட்குப்பின் காந்தியடிகளின் பெயரைப் பயன்படுத்திச் செல்வமும், செல்வாக்கும் அடையும் தானும், ரமணனும் போலி வாழ்வு வாழ்வதை எண்ணி மனம் கூசுகிறான் முத்து. பல ஆண்டுகட்குப்பின் அவன் கோபியைச் சந்திக்கும்போது, இனக் கலவரத்தில் பெண்மை இழந்த மிருணாளினியை மணந்து எளிய வாழ்வு வாழ்வதைக் கண்டு மெய் சிலிர்க்கிறான். 'காந்தியத்தின் உயிர்ப்பு வாழ்ந்து காட்டுவதில் அமைகிறது' என்பது இக் கதைக் கரு.

'கங்கை எரிகிறது' என்ற கதையில் கங்கை எரிந்ததற்குச் சிறிதும் வருந்தாத ஆன்மீக வறட்சியடைந்த சமுதாய நிலை கண்டு திடுக்குறுகிறார் காந்தி பக்தர் கோவிந்ததீட்சிதர். நாட்டில் தீவினை நடந்ததோ எனக் கலங்கியவர், எங்கு நோக்கி னும் தியாகம், நேர்மை, கற்பு, நாணயம் முதலியவற்றை இழந்த

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

போலி வாழ்வையும் நாகரிகப் போர்வையில் காந்தி அஞ்சலி செய்யும் போலித் தனத்தையும் கண்டு, காந்தியடிகளை மீண்டும் பிறந்து வர வேண்டுகிறார். 'நாட்டில் சத்தியம் தழைக்க உதவுவது காந்தியம்' என்பது இக்கதையின் கரு.

கதைப் பின்னலில் கொள்கையைப் புலப்படுத்தல்

உண்மைக்கு மாறான பொய்ம்மையில் உழலுவதை உணரும் போது ஏற்படும் தனிமனிதனின் அகப்போராட்டங்கள், கதைப் பின்னல்களுக்கான அடிப்படையாகும். இறுதியில் காந்தியத்தைச் செயற்படுத்துவதே சிறப்பு என்பது வலியுறுத்தப்படுகிறது.

பாத்திரப் படைப்பு

'உள்ளும் புறமும்' என்பதில் காந்தியப் போர்வையில், பிறர் துன்பத்தைப் பொருட்படுத்தாமல் நேர்மையற்ற வழியில் பொருள் சேர்த்துப்போலித்தனம் புரிகிறான் முத்து. "...நேர்மை தவறியவர்கள் சத்திய வடிவினரின் பெயரில் பொதுக் கட்டடங்கள் கட்டுவது மட்டும் போலியில்லையா?"[5] என்ற பகுதி முத்துவின் போலி வாழ்க்கையைச் சுட்டும். ரமணனின் போலி வாழ்க்கையை, "...மனைவியை அவமதிக்கும் இவன் மகாத்மாவின் பெண் முன்னேற்றம் பற்றிய கருத்துக்களை விரும்பி எழுதுகிறானாம்! என்ன கேலி இது"[6] என்ற முத்துவின் சிந்தனையும், "...ஒரு சினிமாவுக்குக் கதை எழுதிக் கொடுத்தாலும் ஆயிரக்கணக்கில் வாரிக் குவிக்கலாமே! ஏதோ காந்திஜி பேரைச் சொன்னா நமக்கு ஒரு மதிப்பாச்சேன்னு பார்த்தால்..."[7] என்ற ரமணனின் கூற்றும் உணர்த்தும்.

இக்கதையில் அபலையரை மணக்க ஆடவர் முன்வரல் வேண்டும் என்ற காந்தியக் கருத்தின்படி வாழ்க்கையை அமைத்துக் கொள்கிறான் கோபி. "இவள்தான் மிருணாளினி, என் மனைவி"[8] என்று இனக் கலவரத்தில் கற்பிழக்கும் கொடுமைக்கு ஆளானவளைச் சுட்டும் நிலையில், அவன் காந்தியடிகளின் கருத்தைச் செயலளவில் நடைமுறைப் படுத்தியதை உணர்த்தும்.

'கங்கை எரிகிறது' என்பதில் சமுதாய மக்களின் போலித் தனத்தை, ஆசிரியர் இவ்வாறு வருணிக்கிறார்: "...கட்சிப் பூசல் ...கயமை... வெறித்தனம்... குடும்பம் என்ற சமூக ஆணிவேரையே அறுக்கும் ஒரு புதிய நாகரிகத்தைப் பார்த்தார். ...சத்தியம்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

செல்லாக் காசாகி... ஆன்மீகம் அர்த்தமற்றதாகி... சிறுமையைக் கண்டு துடிக்காத தோள்களைக் கண்டார்.''[9]

இக்கதையில் கோவிந்ததீட்சிதர் காந்தியத்தில் உண்மையான ஈடுபாடு கொண்டமை ''... கதர் வேஷ்டியும் துண்டுமாகச் சேரியின் நடுவில் ஒரு குடிசையைப் போட்டுக் கொண்டார். தோட்டிகளோடு இவரும் தெரு கூட்டினார். குஷ்டரோகிகளுடன் உழன்றார்... கள்ளுக் கடையில் போய் மறியல் செய்தார்...''[10] என்ற பகுதியால் தெளிவாகும். தொண்டர்கள் நிருமாணப்பணி சேவைகளைச் செய்திடல் வேண்டும்[11] என்ற காந்தியடிகளின் கருத்திற்கேற்பக் காந்தியத்தைச் செயலளவில் பின்பற்றுகிறார் தீட்சிதர்.

பாத்திரப் படைப்பு - ஒரு மதிப்பீடு

இரண்டு கதைகளிலும் அமையும் பாத்திரப் படைப்பை நான்கு பகுப்புகளில் வகுத்துக் கொள்ளலாம். காந்தியடிகளின் பெயரில் நூல்கள் எழுதியே பிழைப்பை நடத்திச் செயலளவில் காந்தியத்தைப் புறக்கணிக்கும் ரமணன் ஒரு வகையினன். அவர் பெயரால் கட்டடங்கள் கட்டிக் கொண்டு தீய வழியில் பொருளீட்டி வாழ்க்கை நடத்திக்கொண்டே அவ்வப்போது குற்ற உணர்வால் தவிக்கும் முத்து இரண்டாம் வகையினன். காந்தியடிகள் கூற்றிற் கேற்ப, அபலைப் பெண்ணை மணந்து எளிய வாழ்வு வாழ்ந்து இனிதே குடும்பம் நடத்தும் கோபி மூன்றாம் வகையினன். தீய வாழ்க்கையிலிருந்து முழுமையாக மனம் மாறிச் சமுதாயம், சத்திய நெறியிலிருந்து விலகிச் சென்று கொண்டிருப்பதற்காகப் புலம்பும் கோவிந்த தீட்சிதர் அடுத்த வகையினர்.

போலி வாழ்வு வாழும் ரமணன், முத்து ஆகியோருள் செல்வச் செழிப்பில் ஒரு சலிப்பு ஏற்பட்ட நிலையில் நன்மை தீமையைப் பகுத்துப் பார்க்க முற்படும் முத்துவின் உள்ளத்தை ஆசிரியர் திறந்து காட்டுவது சிறப்பாக உள்ளது. அத்தகையோர் மனமாற்றம் அடைவதற்குரிய வாய்ப்பு விரைவில் கிட்டும் என்னு மாறு ஓர் உணர்வு தோன்றுகிறது. செயலளவில் காந்தியத்தை மேற்கொள்ளாமல் போலிவேடம் தரிக்கும் ரமணனின் குடும்ப உறவு ஆணவத்தால் பிணைக்கப்பட்டிருக்கக் காந்திய வழியைப் பின்பற்றி வாழ்க்கை நெறியை அமைத்துக் கொண்ட கோபியின் குடும்பம் இனிதே கட்டுண்டிருப்பதாகச் சித்திரிப்பதன் வழிக் கோபியின் சிறப்பை உள்ளத்தே நிலைநிறுத்துகிறார் ஆசிரியர்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ரமணன் போன்ற மக்களின் போலித்தனத்தால் பாழடைந்த சமுதாய நிலைக்கு உள்ளம் வெம்பித் துடிக்கும் கோவிந்த தீட்சி தரின் படைப்பு, உள்ளத்தைத் தொடுமாறு அமைகிறது. காந்தியத் தால் சமுதாய வாழ்வு மலரும் என்ற நம்பிக்கையை அளிக்கிறது அப்பாத்திரம்.

அட்டவணை-: 12

காந்தியம்-உண்மையும் போலியும்-கதைமாந்தர்

எண்	கதைகள்	காந்திய நெறியில் அமைபவர்	காந்திய நெறிக்குப் புறம் பாக அமைபவர்
1	'உள்ளும் புறமும்'	கோபி	முத்து, ரமணன்
2	'கங்கை எரிகிறது'	கோவிந்த தீட்சிதர்	நகர, கிராமத்து மக்கள்

உத்திகள்

கொள்கையை விளக்கும் உரை

'உள்ளும் புறமும்' என்ற கதையில் ''அகிம்சையாளரின் பெயரில் கட்டடங்கள் எழுப்பிவிட்டு மகனுக்குத் துப்பாக்கி வாங்கித் தருபவனும், சத்தியத்தின் பூஜாரியைப்பற்றி நூல்கள் வரைந்துவிட்டு மகனின் தேர்வுக்காக லஞ்சமளிப்பவனும் கூடும் இடத்தில் அந்த மகான் ஏன் நிற்கிறார்? போலிகளிடையே அவருக்கு என்ன வேலை?''[12] என்ற பகுதி பிரசாரம்போல் அமைந்து கொள்கையை விளக்க உதவும்.

அணுகுமுறை

'உள்ளும் புறமும்' என்பதில் காந்தியத்தின் பெயரால் சிறுமையான வாழ்க்கை வாழும் நிலையில் அமைதியற்ற போக்கையும், உண்மையான காந்திய வாழ்க்கை வாழும் தன்மை யில் இனிமையும் அமைதியும் நிரம்பிய எழிலையும் ஒருசேரக் காட்டுமாறு எதிர்மறை நேர்முக அணுகுமுறைகள் மேற்கொள்ளப் படுகின்றன.

'கங்கை எரிகிறது' என்பதில் காந்திய நெறியினின்று பிறழ்ந்தமையால் விளையும் சமுதாயச் சீர்கேட்டைப் படம்பிடிக்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கும் வண்ணம் கொள்கை வலியுறுத்தல் எதிர்மறை அணுகு முறையில் அமைகிறது. காந்திய நெறியினின்றும் விலகுவதால் ஏற்படும் தீமைகளை எதிர்மறை அணுகு முறையில் சுட்டி உண்மையான காந்திய வாழ்க்கையின் சிறப்பை உணரச்செய்வது சிறப்பாக உள்ளது.

கொள்கையை விளக்க உதவும் தலைப்பு

உள்ளத்தில் காந்தியத்தைப் போற்றும் உண்மையானவனை யும் புறவேடதாரியையும் சமுதாயம் கொண்டுள்ளது என்பதை உணர்த்துகிறது 'உள்ளும் புறமும்' என்ற தலைப்பு.

'கங்கை எரிகிறது' என்பது இந்திய நாடு சிறுமையில் தடுமாறுகிறது என்பதனைக் குறியீடாகக் கொண்ட தலைப்பு ஆகும். சத்தியத்தின் குறியீடாகக் கங்கையை அமைத்து நாட்டில் சத்தியம் எரிகிறது என்பதைச் சுட்டுமாறு அத்தலைப்பு அமைந்துள்ளது எனலாம். காந்தியத்தை உண்மையாக நாடு அறியவில்லை என்று கருதிக் கங்கைபோல் புனிதமாக மாறியுள்ள தீட்சிதரின் உள்ளம் எரிகிறது என்பதையும் உள்ளடக்குவதாக இத்தலைப்பு உள்ளது என்றும் கொள்ளலாம்.

காந்தியத் தாக்கத்தைப் புலப்படுத்தும் பிற உத்திகள் காந்தியப் பின்னணி

'உள்ளும் புறமும்' என்ற கதையில் இடம்பெறும், "அகிம்சையின் வழியிலேயே போராட்டம் நடத்தி அன்னிய ஆட்சியை முறியடிக்க அன்று அறை கூவல் எழுப்பிய...";[13] "நாடு முழுவதிலும் அன்று சிம்ம கர்ஜனையாய் ஒலித்த அந்தச் சத்தியப் பெருமுழக்கம்..."[14] என்ற பகுதிகள், காந்தியடிகள் அந்நிய அரசிற்கு எதிராக நாட்டு மக்களை ஒன்று திரட்டி அகிம்சைவழிப் போராட்டங்கள் நடத்திய நிகழ்ச்சிப் பின்னணி யைச் சுட்டும். "... நாற்பத்திரண்டாம் வருஷம் மாணவர்களாய் இருந்தப்போ நாம் கிளர்ச்சி, மறியல் எல்லாம் செய்திருக் கோமே!..."[15] என்ற ரமணன் கூற்றும், காந்தி காலப் பின்னணி யைச் சுட்டும்.

'கங்கை எரிகிறது' என்பதில் "நாற்பத்து இரண்டாம் வருஷத்திலேயே ... 'நீ காந்தி பக்தன்தானேடா?' என்று கேட்டு ஒரு காரணமுமில்லாமல் மண்டையில் மடேர் மடேரென்று குண்டாந்தடியால் போலீஸ்காரர்கள் அடித்து நொறுக்கிய

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

போதே...''[16] என்ற பகுதியில் 1942-இல் நடந்த போராட்டமும் அப்போராட்டத்தின்போது காந்தியத் தொண்டர்கள் எவ்வாறு துன்பம் அடைந்தார்கள் என்பதும் சுட்டப்படுகின்றன. இவ்வாறு காந்தியப் பின்னணி இடம் பெறுவதன் வாயிலாகக் காந்தியத் தாக்கம் அமைகிறது.

காந்தியடிகளின் வருகை சுட்டப்படல்

'உள்ளும் புறமும்' என்ற கதையில் இனக் கலவரத்தில் பெண்மையை இழந்த அபலையர்க்குக் காந்தியடிகள் ஆறுதல் அளித்தமை சுட்டப்படுவதன்வழிக் காந்தியத் தாக்கம் அமைகிறது.

காந்தியடிகளின் பிற கொள்கைகள் சுட்டப்படல்

'உள்ளும் புறமும்' என்பதில் ''பெண்கள் முன்னேற்றம், பெண்களை மதிச்சு நடத்தணும் அப்படிங்கற காந்திஜியின் கொள்கையைப் பத்தி...''[17]; ''சொந்த வாழ்வில் மட்டுமன்றி நாட்டு விடுதலைப் போராட்டத்திலும் ஆணுக்கு நிகராய் அவள் [பெண்] இலங்க வேண்டுமென்றார். அவளுக்குக் கல்வி அவசிய மென்றார் [காந்தியடிகள்]...''[18] என்ற பகுதிகள் காந்தியடிகளின் கொள்கைகளுள் ஒன்றான பெண் முன்னேற்றம் பற்றிய அவர்தம் விளக்கங்களைச் சுட்டும். 'செல்வர்களின் செல்வம் அவர்களிடம் ஏழையரின் நலனுக்காக ஒப்படைக்கப்பட்டுள்ள பொருளாக இருப்பது...''[19] என்ற பகுதியில் காந்தியடிகளின் 'அறக்காவலர் கோட்பாடு' என்ற கொள்கையின் விளக்கம் அமைகிறது.

காந்தியடிகளின் வாக்கு இடம்பெறல்

'உள்ளும் புறமும்' என்பதில் ''நான் [காந்தியடிகள்] ஏதும் செயற்கரியது செய்துவிடவில்லை. நான் சாதித்தது ஒவ்வொரு வரும் சாதிக்கக்கூடியதுதான்'';[20] ''பலியான பெண்களை மணந்து கொள்ள இளைஞர்கள் முன்வர வேண்டும்'';[21] ''நேர்மை, சத்தியம் போன்றவை... உண்மையான மனிதனுக்கு இயல்பாக இருக்க வேண்டிய குணங்கள்தாம்''[22] என்ற காந்தியடிகளின் கூற்றுகளை இடம்பெறச் செய்வதன் வாயிலாகக் காந்தியத் தாக்கம் அமைகிறது.

காந்தியடிகளின் கருத்தை நினைவுறுத்தல்

'உள்ளும் புறமும்' என்ற கதையில் நாகரிகத்தில் தோய்ந் தவள் முத்துவின் மனைவி என்பது, ''... அவையே [வெளிநாடு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

களே] நாகரிகத்தின் உறைவிடமாகவும் தன் சொந்த மண் பாமர நாடாகவும் தோன்றியது''[23] என்ற ஆசிரியர் கூற்றால் புலனாகும். இது, ''இந்த [இந்திய] நாகரிகம் சிறந்தது என்பதில் ஆட்சேபணையே இல்லை... மேல்நாட்டு நாகரிகத்தினால் பீடிக்கப்பட்டிருப்பவர்கள் மாத்திரமே அடிமைகள் ஆகிவிட்டார்கள்''[24] என்ற காந்தியடிகளின் கருத்தை நினைவுறுத்துகிறது.

இதே கதையில், ''அவன் [முத்து] பொருள்தேடிய வழிகள், எத்தனை சந்தர்ப்பங்களில் தொழிலில் மோசடி செய்திருக்கிறான்...''[25] என்ற பகுதி இலட்சியத்தைப்போல் வழிமுறைகளும் உயர்ந்தவைகளாக இருக்க வேண்டும் என்ற காந்தியடிகளின் கருத்தை மறைமுகமாக நினைவுபடுத்தும்.[26]

காந்தியடிகளின் வாழ்க்கை வரலாற்றுக் குறிப்புகள் சுட்டப்படல்

'கங்கை எரிகிறது' என்பதில் ''1948 ஜனவரி முப்பது... தெய்வம் [காந்தியடிகள்] மனித உடலை நீத்து... நாடே சோகத்தில்''[27] என்ற பகுதி காந்தியடிகள் மறைந்த செய்தியையும் அம்மறைவினால் மக்களிடையே ஏற்பட்ட அவல நிலையையும் குறிப்பிடுவதன் வாயிலாகக் காந்தியச் செல்வாக்கை உணர்த்தும். இதே கதையில் தந்தை மரணப் படுக்கையில் இருந்தபோது காந்தியடிகள் தம் மனைவியுடன் களித்திருந்ததற்காக வருந்தியமை, தீட்சிதரைப் பழைய தீவினை வாழ்விலிருந்து விடுபட உதவியதாகச் சுட்டப்படுகிறது. இந்நிலையில் காந்தியச் செல்வாக்கு உணர்த்தப்படுகிறது.

காந்தியடிகளின் பெருமை சுட்டப்படல்

''... அந்த மகான் ஆயுதமின்றியே போர் நடத்தி அதில் வெற்றியும் கண்ட புதுமையை உலகமே பார்த்து அதிசயிக்கவில்லையா?... சத்தியமும் அகிம்சையும்... ஒவ்வொரு செயலிலும் நிலைநிறுத்திக் காட்டி...''[28] 'உள்ளும் புறமும்' என்ற கதையில் அமையும் இக்குறிப்புகள் காந்தியடிகளின் பெருமையைச் சுட்டும். இதே கதையில், '' 'இந்தியாவினின்று வெளியேறு' என்று... அந்த மகாத்மாவின் குரல் கேட்டுச் சிலிர்த்தெழுந்து கிளர்ச்சியில் குதித்த மாணவர் கூட்டம்...'';[29] ''...காந்திஜியாலே நாம் [மாணவர்] இன்ஸ்பைர் ஆனோமில்லையா?''[30] என்ற பகுதிகள் மாணவர்களிடையே அவருக்கு இருந்த செல்வாக்கை உணர்த்தும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'கங்கை எரிகிறது' என்ற கதையில் ''அந்தப் போர்பந்தர் யோகியைத் தரிசனம் செய்ய லக்ஷக்கணக்கில் ஜனங்கள்...''[31] என்பது மக்களிடையே இருந்த அவரது செல்வாக்கை உணர்த்தும். இதே கதையில் ''...கோடிக்கணக்கான உள்ளங்களை ஒரு நிமிஷ மேனும் அழுது உருக வைத்து விடறவன் மகாத்மா...''[32] என்று அவரது இறப்பினை அறிந்த தீட்சிதர் கூறுவது மக்களின் உள்ளங்களில் சிறப்பிடம் பெற்றவர் காந்தியடிகள் என்பதைத் தெளிவாக்கும்.

இவ்வாறு காந்தியடிகளின் பெருமையினைச் சுட்டும் நிலையில் காந்தியத் தாக்கம் இடம்பெறுகிறது.

காந்தியடிகளின் உருவப்படம் இடம்பெறல்

'உள்ளும் புறமும்' என்பதில் ''... பகட்டான உடையணிந்த வடிவங்களிடையே அரையில் உடுத்த ஒரே ஆடையுடன் ஓர் எளிய முதிய மோகன உருவம்... அந்தப் புன்னகையில்... எதிராளியையே வெறுக்காத அன்பின் மந்தகாசம் அல்லவா?''[33] என்று குறிப்பிடப்படும் காந்தியடிகளின் படத்தின் எழில், ஆடம்பர மனித உலகினின்று விலகி அகிம்சையின் சின்னமாய் ஒளிரும் அவரது ஆளுமைத் தன்மையை உணர்த்தும்.

தற்கால-முற்கால நிலைகளை ஒப்பிடல்

'உள்ளும் புறமும்' என்பதில், ''இப்போதெல்லாம் நடை பெறும் மறியல், வேலை நிறுத்தம், சத்தியாக்கிரகம், ஒத்துழை யாமை இவற்றுக்கும் முன்பு நடந்தவைக்கும் சாரத்திலே எத்தனை வேறுபாடு! இப்போது இவற்றுக்கெல்லாம் அடிப்படை நோக்கம் சுயநலம்தான். முன்போ? அந்த மகான் உண்ணாவிரதம் மேற் கொண்ட போதெல்லாம் அதன் நோக்கம் தம்மைத் தூய்மைப் படுத்திக் கொள்வதும், நிகழும் குற்றங்குறைகளுக்கு ஒரு கழுவா யாக நோன்பு வடிவமாய் இறங்குவதும்தான்''[34] என்று தற்கால முற்காலப் போராட்டங்களை ஒப்பிடுவதன்வழிக் காந்தியப் போராட்டத்தின் உயர்நிலையை உணர்த்துகிறார் ஆசிரியர்.

'காந்திவழிக் கதை'களைப் படைத்துள்ள ஆசிரியர்தம் பிற கதைகளில், 'காந்தியம்-உண்மையும் போலியும்' பற்றிய ஆய்வு இனி அமைகிறது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

உண்மைக் காந்தியமும், காந்தியப் போலியும் அமைந்துள்ள பிற கதைகள்

'காந்தியம் - உண்மையும் போலியும்' என்ற பொருள், நா. பார்த்தசாரதியின் 'ஒரு கிராமவாசி சுதந்தர தினத்தன்று சிறைப்படுகிறான்', அகிலனின் 'காந்தி வந்தார்' ஆகிய கதைகளில் கருவாக அமைந்துள்ளது. நா. பார்த்தசாரதியின் 'அநுதாபக் கூட்டம்' என்ற கதையில் கதைப் பின்னலிலும், அவரது 'காந்தி நூற்றாண்டு விழா' என்பதில் பாத்திரப் படைப்பிலும் அப்பொருளானது விளக்கமுறுகிறது. காந்தியடிகளின் பெயரில் போலித்தனம் நடைபெறுவதைக் கருத்துத் தொடரில் சுட்டுகிறது சி. சு. செல்லப்பாவின் 'முத்துவின் கோவில்' என்ற கதை.

'ஒரு கிராமவாசி சுதந்தர தினத்தன்று சிறைப்படுகிறான்' என்ற கதையில் நாட்டின் இருபத்தைந்தாவது ஆண்டு விடுதலை நாளை மிக ஆடம்பரமாகக் கொண்டாடும் நகர மக்கள், காந்தியடிகளின் சிலையை இருளில் மூழ்கடிக்கின்றனர். இதனைக் கண்ணுற்ற கிராமத்தான் ஒருவன் அச்சிலைக்கு விளக்கேற்ற முயலும்போது, நெருப்பு வைக்க வந்தவன் என்ற பழிக்கு ஆளாகிறான். அந்நகரத்தார் உண்மையைக் கூறவிடாமல் அவனைச் சிறையிலடைக்கின்றனர். 'நகரப் பொய்ம்மை சத்தியத்தைப் புறக்கணித்துவிட்டு வெற்று ஆரவாரத்தில் உழலுகிறது' என்பது இதன் கரு.

''அவ்வளவு ஒளிமயமாகப் பூங்காவை அலங்கரித்தவர்கள் காந்தி சிலையை மட்டும் ஏன் இருளில் மூழ்க விட்டுவிட்டார்கள் என்பது புரியவில்லை'';[35] ''வேல்ச்சாமியை அவர்கள் பேசவிடவே இல்லை... விலங்கு மாட்டி அவனை உள்ளே தள்ளினார்கள்...''[36] என்ற பகுதிகள் உண்மையை இருட்டடிப்புச் செய்யும் நகர மக்களின் உளப்போக்கைச் சுட்டும்.

'காந்தி வந்தார்' என்பதில் நேர்மைவழியில் பொருளீட்டும் தண்பரைப் போலன்றிக் காந்தியடிகளின் பெயரைப் பயன் படுத்தியே நேர்மையற்ற வழியில் பொருளீட்டுகிறார் தியாகி தண்டபாணி. தண்டபாணியின் கண்களுக்குப் புலப்படாத காந்தியடிகளின் ஆவி, நண்பர் கண்களுக்குப் புலப்படுகிறது; தீய வழியில் பொருள் சேர்த்துத் தந்நலத்துடன் போலி வாழ்வு வாழும் தண்டபாணியிடம் சத்தியத்திற்கு வேலையில்லை என்பதைச்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சுட்டிக்காட்டி மறைகிறது. மனமாற்றம் அடையும் அவர், தம் செல்வத்தைப் பொது நலத்திற்குச் செலவிட முன்வருகிறார். 'தீய வழியில் பொருளீட்டிப் போலி வாழ்வு நடத்துவது இழிவானது' என்பது இக்கதையின் கருவாகும். ''தியாகத்துக்குப் பரிசாய்க் காந்தி துப்பாக்கிக் குண்டுகளை வாங்கிக் கொண்டார். தண்ட பாணியோ அந்தத் தியாகத்தைப்பற்றி மேடைகளில் முழக்கம் செய்தே வட்டியும் முதலுமாய்ச் சேர்க்கலானார்''[37] என்ற பகுதி அவரது போலி வாழ்வைப் படம் பிடிக்கும்.

'அநுதாபக்கூட்டம்' என்ற கதையின் பின்னலில் காந்தியத் தொண்டர் கந்தப்பபிள்ளைக்காக நடத்தப்படும் இரங்கல் கூட்டத்தில் தியாகிபோல் வேடமிடும் மாவடியாபிள்ளை, நினைவு மண்டப நிதி அளிப்பதாகக் கூற உண்மையான காந்தியத் தொண்டரைப் பாராட்ட மறந்த பேச்சாளர்கள், மாவடியாபிள்ளையை மனமாரப் பாராட்டுகின்றனர். காந்தியத் தொண்டு என்ற பெயரில் பொய்ம்மை நடமாடுவதைப் பாராட்டுகிற சமுதாயத்தின் போக்கைச் சுட்டுகிறார் ஆசிரியர்.

'காந்தி நூற்றாண்டு விழா' என்ற கதையில் மகாத்மா காந்தியின் பெயரில் பள்ளியை நடத்திக்கொண்டு குடி, குதிரைப் பந்தயம் என்று அலைந்து திரிபவர் நாச்சியப்பன். ''...இந்த வருஷம் அக்டோபர் முதல் தேதியிலிருந்து நானே குடிக்கிறதை... விட்டாலும் அது என்னை விடாது போலிருக்கிறதே''[38] என்று அவர் கூறுவது, குடி அரக்கனுக்கு அடிமைப்பட்டவர் என்பதைக் காட்டுகிறது. பள்ளிக்குக் காந்தியடிகளின் பெயரைச் சூட்டிவிட்டுக் காந்தியத்திற்குப் புறம்பாகப் பொய்ம்மை இன்பங்களில் களித்திருக்கும் போலித்தனத்தைச் சுட்ட இப்பாத்திரப் படைப்பு உதவுகிறது.

இக்கதையில் அப்பள்ளிக்குக் காந்தியடிகளின் பெயரை வைக்குமாறு தூண்டிய தியாகி குமாரசாமி, நாச்சியப்பனை அவ்வப்போது திருத்தமுயலுகிறார். ''மாமா குமாரசாமி அகிம்சை வாதி... அறிவுரை கூறுவாரே ஒழிய மனம் புண்படும்படி கூறி நிர்ப்பந்திக்க அவருக்குத் தெரியாது''[39]; ''கையால் நூற்றுச் சிட்டம் போட்டுத்தான் வேட்டி துணிமணி வாங்குவார்''[40] என்ற பகுதிகள் காந்தியத்தைச் செயலளவில் உண்மையோடு கைக் கொள்பவர் அவர் என்பதைப் புலப்படுத்தும்.

'முத்துவின் கோவில்' என்ற கதையில் காந்தியடிகளை வணங்கிக் கொண்டே கள்ளத்தனமாகப் பொருளீட்டுவது சுட்டப் படுகிறது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இக்கதைகளினால் அறியப்படுவன

1. காந்தி [என்ற] பெயரில் அட்டூழியங்கள் நடைபெறு கின்றன. அவற்றுள் காந்தியடிகளின் பெயரைப் பயன் படுத்தியே பணத்தையும் பொருளையும், பெருமையையும் பெருக்கும் போக்கும், காந்தியடிகளின் பெயரால் பள்ளி நடத்திக்கொண்டு குடி முதலான தீய பழக்கங்களுக்கு இரையாகும் போக்கும் உள்ளன.

''காந்திஜி பேரைச் சொல்றதிலே... புகழும்தான் வேணும், பணமும்தான் வேணும். இரண்டுக்காகவும்தான் நான் எழுதறேன்''[41]; ''...அவர் பெயரிலே எத்தனைக் கட்டடம் நிறுவி யிருக்கே நீ! உனக்கு அதனாலெல்லாம் எத்தனைப் புகழ்''[42]; ''1960-க்குப் பின் கதர்ச் சட்டையை மாட்டிக்கொண்டு தேர்தல் நிதிகளுக்குத் தாராளமாக நிதி உதவி செய்ததன் மூலம் முன்னுக்கு வந்து விட்டவர்''[43]; ''நோட்டுக் கற்றைகளாக அது [பணம்] அவரைத் தேடி வந்தது. காந்தியின் கடாட்சம் லட்சுமி கடாட்ச மாக மாறியது''[44]; ''...சுதந்திரத்துக்காக ராட்டை சுற்றிக் கதரைக் கட்டின கை காந்தியைக் கும்பிட்டுக்கிட்டே கள்ள மார்க்கெட்டிலே சம்பாதிச்ச பணத்துலே மெத்தை வீடு கட்டற துன்னா?...''[45] என்பன காந்தியடிகளின் பெயரைக் கூறித் தன்னலத்தில் மூழ்கும் சமுதாயப் போக்கைச் சுட்டும்.

''உங்கப்பா நினைவா நீ நடத்தற பள்ளிக்கூடத்துக்கு 'மகாத்மா காந்தி ஸ்கூல்னு' பேர் வச்சு... அந்தக் காந்திங்கற கங்கை இந்தத் தேசத்திலே ஓடத் தொடங்கி நூறு வருஷம் நிறையற சமயத்திலேகூட இந்தப் பாழாய்ப்போன கெட்ட பழக் கங்களை நீ விடலேன்னா அர்த்தமே இல்லை''[46] இப்பகுதியால் காந்தியடிகளின் பெயரை ஒரு புறம் சூட்டிக்கொண்டு, அப்பெய ருக்குக் களங்கத்தையும் ஏற்படுத்துமாறு முரண்பட்ட வாழ்க்கை நடத்தும் போலித்தனத்தையும் அறிய முடிகிறது.

2. எளிய முறையில் காந்தியடிகள் பெற்றுத் தந்த விடுதலைநாள் ஆடம்பரமாகக் கொண்டாடப்படுகிறது.

நாட்டு விடுதலையை அமைதி வழியில் பெற்றதையும் அதனைப் பெறக் காரணமான காந்தியடிகளையும் மறந்து விட்டு, வெற்று ஆரவாரத்தில் விழா எடுத்து மகிழும் போலித்தனம், ''இத்தினி ஸீரியல் ஸெட் அலங்காரங்களை இந்த இருபது

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வருசத்திலே நான் பார்த்ததில்லை''[47]; ''...அவ்வளவு ஒளிமயமாகப் பூங்காவை அலங்கரித்தவர்கள் காந்தி சிலையை மட்டும் ஏன் இருளில் மூழ்கவிட்டு விட்டார்கள் என்பது புரியவில்லை''[48] என்ற பகுதிகளால் சுட்டப்படுகிறது.

3. காந்தி வழியை நடைமுறையில் பின்பற்றும் தனி மனிதர்களும் காந்தியத்தை உணரும் எளிய கிராமத்தாரும் சமுதாயத்தில் உளர்.

காந்தியத்தை உண்மையாகப் பின்பற்றும் நிலையில் மகாத்மாவைப் பற்றி எழுதாமல் சொற்பொழிவுகள் நிகழ்த்தாமல் பேச்சில்கூட அவரைக் குறிப்பிடாமல் அபலைப்பெண்ணை மணந்து வாழ்ந்து காட்டுபவனையும் ('உள்ளும் புறமும்'), ''கையால் நூற்றுச் சிட்டம் போட்டுத்தான் வேட்டி துணிமணி வாங்கு''[49] வதையும் கதர் அணிவதையும் குறிக்கோளாகக் கொண்ட முன்னாள் தியாகியையும், ''...நேர்மையான உழைப்பால் நான் பாடுபட்டுச் சம்பாதிக்காத காசுக்கு என்னை ஆசைப்படச் சொல்லாதீர்கள்''[50] என்று பொருளீட்டுவதில் சத்தியத்தை மதிப்பவரையும் அந்தந்த ஆசிரியர்கள் சித்திரித்துள்ளனர். மேலும், ''தியாகி கந்தப்பபிள்ளை...குடும்பத்தினருக்குப் பாரமாக நிறைய விஷயங்களை விட்டுச் சென்றிருந்தார்''[51] என்ற பகுதி, குடும்ப நலனுக்கு முதலிடம் கொடாது காந்தியத் தொண்டர் வாழ்ந்ததை உணர்த்துகிறது.

இவர்களைத் தவிர எளிய கிராமத்து மக்கள் காந்தியடிகளின் பணிகளை மனமார உணர்ந்தவர்கள் என்பதும் ''..கிராமத்து முச்சந்தியிலுள்ள காந்திசிலைக்கு அவனும் மற்றக் கிராமவாசிகளும் வெள்ளிக்கிழமை தவறாமல் அகல் விளக்கு ஏற்றி 'ரகுபதி ராகவ' பாடுவது உண்டு''[52] என்ற பகுதியால் அறியப்படுகிறது.

4. காந்தி வழியில் அமையும் வாழ்க்கை நிறைவுடன் அமையப் போலிவாழ்க்கை சிறுமைக்கு இட்டுச் செல்லுகிறது.

உண்மையான உள்ளத்துடன் காந்தியத்தைப் பின்பற்றுபவர்கள் எளிமையுடன் ஆனால் இனிமையுடன் வாழ்வு நடத்துவதையும் ('உள்ளும் புறமும்'), காந்தியத்தால் மாற்றமடைந்த உண்மையான உள்ளத்துள் உலகமே அடக்கமாவதை உணர்வதையும் ('கங்கை எரிகிறது'), ''நான் சிரமப்படுவது உண்மைதான்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

என்றாலும்... அதிக வசதியோடு வாழ்வதாகவே நினைக் கிறேன்''[53] என்று மனநிறைவு கொள்வதையும் உணர முடிகிறது.

போலி உள்ளத்துடன் காந்தியத்தை அணுகியவர் செல்வ ராயிருந்தும் நிம்மதியற்ற வாழ்வால் சலிப்புறுவதையும் ('உள்ளும் புறமும்'), அவர்கள் தீயவழியில் ஈட்டும் வருவாய் குடும்பத்தினர் கெடக் காரணமாயிருப்பதையும் ('காந்தி வந்தார்') தெளிய முடி கிறது. காந்தியத்திற்குப் புறம்பாக வாழும் வாழ்க்கையால், மயானத்தைத் தேடிப்போவது போன்ற உணர்வு தனிமனிதனிடம் ஏற்படுவதையும் ('காந்தி நூற்றாண்டு விழா'), கட்சிப் பூசல், அடுத் துக் கெடுக்கும் கயமை, வெறித்தனம் இவற்றால் சமுதாயம் இழி நிலையடைவதையும் ('கங்கை எரிகிறது') காண முடிகிறது.

5. சமுதாயம் காந்தியத்தைச் செயலளவில் பின்பற்றத் தவறியிருப்பினும், சமுதாய நலனுக்குத் தீர்வாகக் காந்தியம் அமைகிறது.

''இப்போது எங்கும் சுயநலம் மலிந்த சூழ்நிலையில் முக்கிய நாட்களிலும் கூட்டங்களிலும் சொற்பொழிவுகளில் அடிபடும் ஒரு பெயர் [காந்தியடிகள்] மட்டுமாக நின்று விட்டாரே''[54] என்ற அங்கலாய்ப்பு இருந்தாலும், ''சத்தியம் செல்லாக் காசாகி விட்டதை''[55]க்காண நேர்ந்தாலும், ''கங்கையில் [காந்தி என்ற கங்கையில்] எத்தனை முறை மூழ்கினாலும் புண்ணியந்தானே''[56] என்ற உணர்வும், காந்தியடிகளைச் செயலில் கண்டு விடலாம் என்ற செருக்கும் ('காந்தி வந்தார்') மனிதரிடையே நம்பிக்கை தருவதாய் உள்ளன. இம்மண்ணில் மனிதர்களை மனிதர்களாக வாழச் செய்வதற்கு மீண்டும் மீண்டும் உதவுவது காந்தியமே ('கங்கை எரிகிறது') என்பதும், ''அவருக்கு வாய்ப்பூஜை செய்வதை நிறுத்திவிட்டு ஒழுக்கத்தில் அவர் தத்துவங்களுக்கு உயிரளித்தால் இந்தப் பாரதம்''[57] நலம் பெறும் என்பதும் என்றைக்கும் சமுதாய நலன்பெற உதவும் தீர்வாக அமைவது காந்தியம் என்பதை உணர்த்தும்.

குறிப்புகள் :

1 Gandhi, M.K., *Harijan*, dt. 1-5-1937.

2 Quoted in 'In Memory of Mahatma Gandhi' Published by Gandhi Smarak Nidhi in 1976, p. 28.

3 Gandhi, M.K., *Harijan*, dt. 1-5-1937.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

4 Ibid.

5 சூடாமணி, ஆர்., 'உள்ளும் புறமும்', காந்திவழிக் கதைகள், கல்யாணராமன், கே ஆர்., (தொ.ஆ.), ப. 232.

6 மேலது, ப. 235.

7 மேலது, ப. 234.

8 மேலது, ப. 241.

9 பொன்னித்துறைவன், 'கங்கை எரிகிறது', காந்திவழிக் கதைகள், கல்யாணராமன், கே.ஆர்., (தொ.ஆ.), ப. 380.

10 மேலது, ப. 376.

11 ஜெயமணி சுப்பிரமணியம், (ப.ஆ.), மகாத்மா காந்தி நூல்கள், தொகுதி 15, இராமசாமி, அ., (மொ.பெ.ஆ.), ப. 59.

12 சூடாமணி, ஆர்., 'உள்ளும் புறமும்' மு.நூ., ப. 238.

13 மேலது, ப. 228.

14 மேலது.

15 மேலது, ப. 230.

16 பொன்னித்துறைவன், 'கங்கை எரிகிறது', மு.நூ., ப. 374.

17 சூடாமணி, ஆர்., 'உள்ளும் புறமும்', மு.நூ., ப. 231.

18 மேலது, ப. 235.

19 மேலது, ப. 232.

20 மேலது, ப. 235.

21 மேலது, ப. 236.

22 மேலது.

23 மேலது, ப. 227.

24 வேங்கடராஜுலு, ரா,, (ப.ஆ.), மகாத்மா காந்தி நூல்கள், தொகுதி 1, அவினாசிலிங்கம். தி.சு., சுப்பராமன், நா.ம.ரா., & டாக்டர் ராஜம்மாள் தேவதாஸ் (மொ.பெ. ஆ.). ப. 671.

25 சூடாமணி, ஆர்., 'உள்ளும் புறமும்', மு.நூ., ப. 232.

26 ஜெயமணி சுப்பிரமணியம், (ப.ஆ.), மகாத்மா காந்தி நூல்கள், தொகுதி 15, இராமசாமி, அ., (மொ.பெ.ஆ.), ப. 369.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

27 பொன்னித்துறைவன், 'கங்கை எரிகிறது', மு.நூ., ப. 378.

28 சூடாமணி, ஆர்., 'உள்ளும் புறமும்', மு.நூ., ப. 228.

29 மேலது, ப. 229.

30 மேலது, ப. 230.

31 பொன்னித்துறைவன், 'கங்கை எரிகிறது', மு.நூ., ப,377.

32 மேலது, ப. 378.

33 சூடாமணி, ஆர்., 'உள்ளும் புறமும்', மு.நூ., ப. 238.

34 மேலது, ப. 234.

35 பார்த்தசாரதி, நா., 'ஒரு கிராமவாசி சுதந்தர தினத்தன்று சிறைப்படுகிறான்', **பிரதிபிம்பம்**, ப. 75.

36 மேலது, பக். 78-79.

37 அகிலன், 'காந்தி வந்தார்', **எரிமலை**, ப. 71.

38 பார்த்தசாரதி, நா., 'காந்தி நூற்றாண்டு விழா', **பிரதி பிம்பம்**, ப. 80.

39 மேலது, ப. 84.

40 மேலது, ப. 81.

41 சூடாமணி, ஆர்., 'உள்ளும் புறமும்', மு.நூ., ப. 234.

42 மேலது, ப. 231.

43 பார்த்தசாரதி, நா., 'அநுதாபக்கூட்டம்', **பிரதிபிம்பம்**, ப. 91.

44 அகிலன், 'காந்தி வந்தார்', மு.நூ., ப. 71.

45 செல்லப்பா, சி.சு., 'முத்துவின் கோவில்', **செல்லப்பா சிறுகதைகள், தொகுதி 7**, ப. 108.

46 பார்த்தசாரதி, நா., 'காந்தி நூற்றாண்டு விழா', **பிரதி பிம்பம்**, ப. 80.

47 பார்த்தசாரதி, நா., 'ஒரு கிராமவாசி சுதந்தர தினத்தன்று சிறைப்படுகிறான்', மு.நூ., ப. 75.

48 மேலது, ப. 77.

49 பார்த்தசாரதி, நா., 'காந்தி நூற்றாண்டு விழா', மு.நூ., ப. 81.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

50 அகிலன். 'காந்தி வந்தார்', மு.நூ., ப. 68.

51 பார்த்தசாரதி, நா., 'அநுதாபக் கூட்டம்', மு.நூ., ப. 90.

52 பார்த்தசாரதி, நா., 'ஒரு கிராமவாசி சுதந்தர தினத்தன்று சிறைப்படுகிறான்' மு.நூ., ப. 78.

53 அகிலன், 'காந்தி வந்தார்', மு.நூ., ப. 66.

54 சூடாமணி, ஆர்., 'உள்ளும் புறமும்', மு.நூ., ப. 234.

55 பொன்னித்துறைவன், 'கங்கை எரிகிறது', மு.நூ., ப. 380.

56 பார்த்தசாரதி, நா., காந்தி நூற்றாண்டு விழா', மு.நூ. ப. 89.

57 சூடாமணி, ஆர்., 'உள்ளும் புறமும்', மு.நூ., பக். 234-235.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

1. காந்திவழிக் கதைகளில் காந்தியத் தாக்கம் - ஒரு கணிப்பு

இவ்வியலில் காந்திவழிக் கதைகளில் காந்தியத் தாக்கம் பற்றிய சில பொது முடிபுகள் இவண் சுட்டிக் காட்டப் பெறுகின்றன.

காந்தியக் கதைகள் எழுதக் காரணம்

கதையாசிரியர் உணர்ச்சி மிக்கவராகக் கற்பனையில் ஆழ்ந்தால்தான் அவருடைய கதையிலும் பலதிற உணர்ச்சிகளைப் புலப்படுத்த இயலும் என்பர் மு. வரதராசன்.[1] காந்தியக் கொள்கையைப் போன்ற குறிப்பிட்ட கொள்கையைக் கதையின் வழி விளக்க முற்படும் ஆசிரியர், அக்கொள்கை பற்றிய உணர்வு அழுத்தத்திற்கேற்பப் பல கோணங்களில் அக்கொள்கையை விளக்கமுறச் செய்ய இயலும்.

காந்தியத்தில் கொண்ட ஈடுபாட்டால் காந்தியக் கோட்பாட்டை உணர்த்த முயன்ற ஆசிரியர்கள், அதனை வெறும் தத்துவமாக எடுத்தியம்பாமல், தத்துவப் பின்னணியில் உருக் கொள்ளும் கதையாகச் சிறுகதை வடிவில் வடிக்க மேற்கொண்ட முயற்சியால் காந்தியத் தாக்கம் பெற்ற கதைகள் மலர்ந்துள்ளன. ஏற்கெனவே சிறுகதை ஆசிரியர்களான இவர்கள், தம் படைப் பாற்றலைச் சமுதாயத்தில் செல்வாக்குப் பெற்ற குறிப்பிட்ட கொள்கை விளக்கத்திற்குப் பயன்படுத்திப் பார்க்கும் வகையில் இத்தகைய கதைகளை உருவாக்கியுள்ளனர்.

காந்தியக் கதைகளில் கருத்துகளைப் பயன்படுத்தும் நோக்கம்

சிறுகதைகள் இன்பப் பொழுது போக்கிற்காக மட்டுமன்றி ஆசிரியரின் விழுமிய நோக்கிற்கும் இடந்தருவன. காந்திவழிக் கதைகளின் ஆசியர்கள் தம் படைப்புகளில் என்ன நோக்கத்துடன் காந்தியக் கருத்துகளைப் பயன்படுத்தியுள்ளனர் என்பதை ஏழு வகையாகப் பகுக்கலாம். அவை கொள்கையை விளக்குதல், கொள்கைச் சிறப்பைத் தெளிவுறுத்தல், சீர்திருத்தம், வரலாற்றை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நினைவுபடுத்துதல், காந்தியடிகளின் வாழ்க்கை வரலாற்றுக் குறிப்பை வடித்தல், காந்தியடிகளின் ஆளுமையை உணர்த்தல், காந்தியமே வழிகாட்டி என்பதைச் சுட்டல் என்பனவாகும்.

கதையின் ஒரு கருப்பொருள் காண்பவர் கண்ணோட்டத்தைப் பொறுத்துப் பல்வேறு வகையாகத் தோன்றும் வாய்ப்பு இருக்கிறது. எனினும், சில அடிப்படைக் காரணங்கள் வரையறை செய்யப் பட்டு இவ்வாய்வுக் கட்டுரையில், காந்திவழிக் கதைக் கருப்பொருள் களின் நோக்கம் விளக்கப்பட்டுள்ளது. அதுபோல் பாத்திரம், நிகழ்ச்சி, கருத்துத்தொடர் ஆகியவற்றின்வழி அறியப்படும் கருத்துகளைப் பயன்படுத்திய நோக்கமும் விளக்கப்பட்டுள்ளது.

கொள்கை விளக்கும் நோக்கம்

காந்திவழிக் கதைகளைப் படைத்த ஆசிரியர் சிலர், காந்திய டிகளின் கொள்கையை விளக்க முற்பட்டுக் கொள்கையைச் சுட்டியும், பாத்திரத்தின் வழியும் நிகழ்ச்சி வழியும் கொள்கையை விளக்கிக் காட்டியும், குறிப்பிட்ட கொள்கையைப் பின்பற்றாமை யால் ஏற்படும் தீமைகளைச் சுட்டியும், குறிப்பிட்ட கொள்கைக்குக் காந்தியடிகள் அளித்த தீர்வுகளை எடுத்துரைத்தும் கதைகளைப் படிப்போர் காந்தியடிகளின் கருத்துகளை ஏற்கச் செய்வதைத் தம் குறிக்கோள்களாகக் கொண்டுள்ளனர். இவர்களின் இந் நோக்கத்தின் பயனாகக் காந்தியடிகளின் கொள்கை பற்றிய பல் வேறு கருத்துகளின் தெளிவு புலனாகிறது.

எச்சூழலிலும் பலனைப்பற்றிக் கவலை கொள்ளாமல் உண்மையே உரைக்கும் ஒருவரைச் சித்திரிக்கும் 'நெருப்பு', இக்கட்டான சூழலில் சபலத்தையும் வென்று நேர்மையில் ஒளிரும் கதைத் தலைவரைக் கொண்ட 'அண்ணல் காட்டிய வழி', தீமையுடன் ஒத்துழைக்க மறுக்கும் சத்தியப் பற்றுடையவரைப் படைத்துக் காட்டும் 'யாருக்கு விரோதி?', சத்தியத்தின் அடிப் படையில் அரசியல் பணியை மேற்கொள்பவரைப் படம் பிடித்திடும் 'மூன்றாம் முனை' ஆகிய கதைகள் சத்தியக் கொள்கையை விளக்கமுறச் செய்கின்றன. உண்மையே உரைக்கவேண்டும் என்பதைச் சுட்டுகிறது 'நஷத்திரக் குழந்தைகள்' என்ற கதை. தன்னைப் புறக்கணித்த அலுவலகத்தைத் தீயினின்றும் காத்த நேர்மையை 'எஜமான விசுவாசம்' என்ற கதை பாத்திரத்தின் வழியும், நேர்மையுள்ளவர் பயன்கிட்டும் சூழலிலும் நெறிபிறழார்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

என்பதை 'ஊற்றுக்கண்' என்ற கதை, கதைப் பின்னல் வழியும் அழகுற வடித்துக் காட்டுகின்றன.

காந்தியடிகளின் கட்டளையின்கீழ் கள்ளுக்கடை மறியல் இடம்பெறும் வரலாற்று நிகழ்ச்சிப் பின்னணியுடன் அகிம்சை வழியில் போராடுபவர் பிறர்தம் இரக்கத்திற்குரியவர் ஆவர் என்ற அகிம்சையின் நுட்பமான கூறில் ஒளியைச் செலுத்தும் கதை 'இராவணாகாரம்'. பகைவனாகக் கருதுபவரிடமும் அன்பு பாராட்டுவதைச் 'சிலையும் சிந்தனையும்' என்ற கதையும், எண்ணத்தாலும் துன்பம் தராததை 'நினைவிலே நடந்து...' என்ற கதையும் சித்திரித்து அகிம்சையின் மதிப்பை விளக்கமுறச் செய்யும். அன்புவழியில் செல்பவர் இறைவனைக் காணலாம் என்ற கோட்பாட்டைத் 'தரிசனம்' விளக்குகிறது. காந்தியடிகள் காலத்து வரலாற்று நிகழ்ச்சியினைக் கொண்ட 'கேள்விக்கு பதில்' என்ற கதை அகிம்சை கோழைத்தனமன்று என்ற கொள்கை விளக்கத்திற்கு முதலிடம் தருகிறது. அக்கொள்கையைக் கருத்தளவில் சுட்டும் கதை 'இதய கீதம்'.

மதுவின் கொடுமையை உணர்த்தி மதுவிலக்குக் கொள்கையின் இன்றியமையாமையை வலியுறுத்துகின்றன, 'தெய்வயானை', 'கவர்னர் வண்டி', 'சின்னத்தம்பியும் திருடர்களும்' ஆகிய கதைகள். மதுவை விலக்குவதற்குரிய தீர்வுகளான அனுமதிச் சீட்டு (Licence) வழங்காதிருத்தல், மதுக்கடைகளை மூடுதல் முதலியவற்றைச் சுற்றிப் புனையப்பட்டவை முறையே 'விதூஷகன் சின்னுமுதலி', 'கடையின் கவர்ச்சி' ஆகியன. மதுவிலக்குச் சட்டம் காலப்போக்கில் நன்மை தரும் என்பதை 'மதிமது மயக்கம்' சுட்டுகிறது.

குழந்தைப் பேறு விரும்புபவர் ஒன்றிரண்டு பெற்றுக் கொள்ளலாம், அதிகமான குழந்தைகளைப் பெறுதல் நாட்டுப் பணிக்கு இடையூறு ஆகும் என்ற புலனடக்கம்பற்றிய காந்தியக் கருத்துகளை முறையே 'தாயும் சேயும்', 'தாயகம்-தாரகம்' ஆகிய கதைகளின் நிகழ்ச்சிப் பின்னல்களில் காணலாம். உருவ வழிபாடு ஏற்புடையது என்ற கருத்தை விளக்கமுறச் செய்கிறது 'ஆத்ம திருப்தி'.

தீண்டாமை விலக்கிற்கான தீர்வுகளில் ஒன்று தீண்டாதோர் தம் தாழ்வு மனப்பான்மையினின்று விடுபடல் என்ற காந்தியடிகளின் கருத்தை வலியுறுத்துகிறது 'அன்னையும் பிதாவும்' என்ற

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கதை. கலப்பு மணம் அதன் தரத்தை உயர்த்துவதாக இருக்க வேண்டும் என்ற கருத்தை விளக்குகிறது 'எது வெற்றி?'. பிறப்பில் தீண்டாமை இல்லை என்பதை நிறுவுகிறது 'விஷ மந்திரம்'. சாதி வேறுபாடு பாராட்டுதல் கூடாது என்ற காந்தியக் கருத்தை நிகழ்ச்சிப் பின்னலில் சுட்டுகின்றன 'பசியும் ருசியும்', 'நடேசய்யரின் குற்றம்' ஆகிய இரு கதைகள்.

பெண்ணுரிமையை நிலைநாட்டி ஆணும் பெண்ணும் ஒன்றே என்ற கொள்கையை நிறுவுகிறது 'ஆண் பிரிய வாழாது'. உடலுழைப்பானது தனக்கும் பிறர்க்கும் பயன்பட வேண்டும் என்ற கருத்தை ஏற்கச் செய்கிறது 'சாந்தி பிறந்த நாள்'. விரைவு இராட்டை எந்திரம் கதர்த் தத்துவத்திற்கு முரண் என்ற காந்தியப் பொருளாதாரக் கொள்கைபற்றிய விளக்கம் 'அப்பாவின் ராட்டை'யில் அமைகிறது. சத்தியாக்கிரகிக்கு ஆன்மீகப் பயிற்சி தேவை என்பதை விளக்கிக் காட்டுகிறது 'சத்யாக்ரகி' என்ற கதை. நாட்டின் வறுமையைப் போக்கவல்லது கதர் என்ற கருத்தைச் சுட்டுகின்ற கதை 'தேவதரிசனம்'.

இவ்வாறு கொள்கையை விளக்கும் கதைகள், குறிப்பிட்ட கொள்கையின் பல்வேறு அம்சங்களையும் நன்கு அறிய உதவுகின்றன.

கொள்கைச் சிறப்பை விளக்கும் நோக்கம்

காந்தியக் கொள்கைகளின் சிறப்பை விளக்கும் கதைகள், குறிப்பிட்ட கொள்கையைப் பின்பற்றுவதால் விளையும் நன்மைகளையும், பின்பற்றாமையால் ஏற்படும் தீமைகளையும் விளக்கிக் காட்டுகின்றன. காந்தியக்கொள்கையின் உயர்வைச் சுட்டுவனவும் இத்தலைப்பின்பாற்படும்.

உண்மையை மறைப்பதால் ஏற்படும் அமைதியின்மையையும், அதனை வெளிப்படுத்துவதால் விளையும் மகிழ்வையும் சித்திரிக்கும் 'ஸத்யமேவ ஜயதே' என்ற கதையும், நேர்மையில் நிற்பவரின் மனநிறைவையும், நேர்மையற்றவரின் மன வேதனையையும் எடுத்துரைக்கும் 'துணி வெளுக்க மண்ணுண்டு' என்ற கதையும் சத்தியக்கொள்கையின் சிறப்பைச் சுட்டுவன. இம்சைச் சூழல்களையும் மீறி அகிம்சை என்றும் வற்றாத ஆற்றலுடையது என்பதை விளக்குகிற கதை 'கங்கை இன்னும் வற்றிவிடவில்லை'. விடுதலையைப் பெறப் பிறரால் பயன்படுத்தப்பட்ட வன்முறை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

யானது, தீய விளைவுகளுக்குக் காரணமாவதையும் காந்தியடிகளால் பயன்படுத்தப்பட்ட அகிம்சையானது, விடுதலைக்கும் அதன்வழி மகிழ்ச்சிக்கும் காரணமாவதையும் கருத்துத் தொடரில் சுட்டுகிறது 'பொங்குமாங் கடல்'.

மதுவிலக்கை அமல் படுத்தாதபோது குடும்பத்தில் வீசும் புயலையும், அதனை அமல் படுத்தியபோது தவழும் தென்றலையும் சித்திரித்து மதுவிலக்கின் சிறப்பை விளக்குகின்றன 'புதுக் கடை'யும், 'சரித்திரதின'மும். 'மேஜர் ரஹ்மான் பேசுகிறேன்' என்ற கதை முகமதியருக்கும் சீக்கியருக்கும் இடையே நிலவிய உயர்ந்த நட்பின் சிறப்பை எடுத்தியம்பும். பஞ்சாபிக்கும் தமிழனுக்கும் இடையே தவழும் ஒருமைப்பாட்டுணர்வு உயிர்த் தியாகத்திற்கும் இட்டுச் செல்லுவதை நெஞ்சுருக விளக்குகிறது 'சகோதரர் அன்றோ?' என்ற கதை.

அரசியல் பணியினும் கிராமக்கலைப் பணியே சிறப்புடைத்து என்பதைக் 'கிராமராஜ்ஜியம்' என்ற கதையும், நகரினும் கிராமமே நல்வாழ்விற்கு ஏற்றது என்பதைக் கருத்தளவில் 'சரளாவின் கலியாணம்' என்ற கதையும் சிறப்பிக்கின்றன. பொருள் சேர்த்து இறைவனைத் தரிசிப்பதினும் அடுத்த வீட்டவரின் பசித் துன்பம் போக்கல் உயர்வுடைத்து என்ற சுதேசியத்தின் சிறப்பை விளக்கி உள்ளத்தை உருக்குவது 'உண்டி கொடுத்தோர்' என்ற கதை. எந்திரத்தின் தீமையினையும் கை நெசவின் நன்மையினையும் ஒப்பிட்டுக் காட்டும் 'ஆதரவு' என்ற கதையும், மில் துணியினும் அருகிலுள்ள தொழிலாளியின் உற்பத்திக்கு ஆதரவு தரல் நன்று என்ற சுதேசியக் கருத்தினைத் தெளிவுறுத்தும் 'தீபாவளிக் கடவுள்' என்ற கதையும் காந்தியப் பொருளாதாரத்தின் சிறப்பை உணர்த்துவனவாகும். உழைக்காமல் பொருள் பெறுவதினும் உழைத்து உண்ணலின் சிறப்பைக் 'கூலிக்கார வீரப்பன்' என்ற கதை இயம்புகின்றது.

சீர்திருத்த நோக்கம்

காந்தியடிகள் குறிப்பிட்ட ஒரு தீமை அல்லது குறை சமுதாயத்தில் பரவலாக இருப்பதைச் சுட்டிப் படிப்பவர் மனத்தில் அது உறுத்துமாறு எழுதியும், அவர் சுட்டியுள்ள திட்டத்தையோ கொள்கையையோ மேற்கொள்ளாததால் விளையும் சீர்கேடுகளைச் சித்திரித்தும், சமுதாயத் தீமையினின்றும் ஏற்றம் பெறுவகை விளக்கியும், சமுதாய நலன்பெறச் சில தீர்வுகளைச்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சுட்டியும், சமுதாயத்தில் ஒரு மாற்றத்தைக் கொணருவதாகவோ, கொணர விரும்புவதாகவோ பாத்திரங்களைச் சித்திரித்தும் சீர்திருத்த நோக்கமுடைய கதைகள் அமைகின்றன.

சத்தியத்தின் துணையில் சமுதாயச் சீர்கேடுகளைக் களைய முற்படுவதைச் சித்திரிக்கின்றன 'நெல்லூர் அரிசி', 'மந்தையில் ஒரு மனிதன்' என்பன. சமூகத் தீமைகளை அகிம்சைவழியில் எதிர்க்க முற்படுபவர், முதலில் ஏழைகளுக்கும் நியாயத்திற்கும் இடையே பாலம் போடுவதுதான் சரியான வழி என்ற முடிவிற்கு வருவதைப் 'புதிய பாலம்' சித்திரிக்கும். பிறர் நலன் எண்ணும் பேராளரால் சமுதாயம் நலனுறக் கூடும் என்பதைப் பாத்திரத்தின் வழி 'ஏழைப் பங்காளர்' என்ற கதை விளக்கும்.

மதுவிலக்கிற்கான தீர்வுகளில் ஒன்றான ஆசிரியரின் கட்டுப்பாடுடன் கூடிய பிரசாரம் 'மதுவிலக்கு' என்ற கதையில் இடம் பெறுகிறது. சமுதாயத் தீமைக்கு இடமான கள்ளச் சாராயம் காய்ச்சுபவரைத் தண்டனைக்குரியராக்கிச் சீர்திருத்தங் கொணர விழைகிறது 'பால் பொங்கிற்றா?' என்ற கதை. தீண்டாமையினால் விளையும் தீமைகளைச் சித்திரித்து, உயர்ந்த வர் தாழ்ந்தவர் அனைவர்க்கும் குருதி ஒன்றே என்பதைக் காட்சி முகத்தான் உணர்த்துகிறது 'புதிய நந்தன்'. இசையின்ப நாதத் திற்கு உயர்வு தாழ்வு வேறுபாடு இல்லை என்பதை உயர் சாதியினரின் மூத்த தலைமுறையினருக்கு உணர்த்துகிறது 'அரங்கேற்றம்' என்ற கதை.

சமுதாயத்தில் அரிசனங்களுக்குச் சமவாய்ப்பை நல்கிக் கோட்டாட்சியர் பதவிக்கு உயர்த்திச் சீர்திருத்தங்காண முற்படு கிறது 'குணம்' என்ற கதை. அரிசன நலன் பேணப்பட வேண்டும் என்பதை 'இழிதொழில்' என்ற கதை உணர்த்துகிறது. முன்னா ளில் தீண்டாமை உணர்வில் அழுந்திக் கிடந்த உயர்சாதியினர் ஒருவர், பின்னாளில் தீண்டத் தகாதவளுக்குப் பிறந்தவன் தம் மகன் என்பதை அறிந்து துடித்து மன அமைதியை இழப்பதைச் சித்திரிக்கும் 'ஜகதீச சாஸ்திரிகள் கனவு' என்ற கதை 'தீண்டாமை வேண்டாமை' என்பதை அறிவுறுத்துகிறது. தீண்டாமை நீங்கு வதற்குரிய சில தீர்வுகளைச் சுட்டி, அவற்றுள் இன்றியமையா தது உயர் சாதியினரின் மனமாற்றம் என்பதை அழகுற உணர்த் துகிறது 'ஒரே உரிமை'. தீண்டாமையின் கொடுமையை விளக்கிச் சமுதாயம் இந்த இழிநிலையினின்று விடுபட வேண்டுமானால்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

உயர்சாதியினர் மனம் மாறவேண்டியதுதான் ஒரே வழி என்பதை 'அறியாக் குழந்தை', 'அவள் மேல் ஜாதியாம்' ஆகிய கதைகள் விளக்குகின்றன. தொழிலால் தீண்டாமை இல்லை என்பதைப் பின்னாளில் உணர்ந்த உயர் சாதியினர் தீண்டாதாரை ஏற்குமாறு சீர்திருத்தம் காணும் கதை 'புதுமைக் கோயில்'. பெண்மை இழந்தவளை மணக்க முன்வரும் இளைஞரைச் சித்திரிக்கிறது 'மனிதருள் ஒரு தேவன்'. விதவையர்க்கு மறுமணம் நிகழ்த்தும் புரட்சியில் வெற்றி காணும் கதைகள் 'சோதனை', 'சுபத்திரையின் சகோதரன்' ஆகும். பெண்ணிற்கு மணத்திலும் மறுமணத்திலும் உரிமையுண்டு என்பதை நிலைநாட்டும் சீர்திருத்தக் கதை 'சட்டத்திற்கு வாழ்க்கைப்பட்டவள்'. மனித இனத்தில் இனக் கலவரத்திற்கு இட்டுச் செல்லும் ஒற்றுமையின்மையால் ஏற்படும் சீர்கேடுகள் பல என்பதை விண்டு காட்டிச் சீர்திருத்தம் காண விழைகின்றன 'அஞ்சலி', 'வந்தே மாதரம்' என்பன. இனக் கலவரத்தில் பெண்மையை இழந்தவளை இழிவாகக் கருதும் சமூகத்தின் கொடுமையை உணர்த்துகிறது 'இந்தச் சமூகம்'. இனவேறுபாடு கருதும் மனப்போக்கானது தேவையற்றது என்பதை ஏற்கச் செய்கிறது 'பாங்கொலி'.

நகர நாகரிகத்தை மதித்துக் கிராம நாகரிகத்தை இழிவாக எண்ணும் பாத்திரம், இறுதியில் கிராமப் பணிபுரிய மனம் மாறுவதை 'வைத்தியநாதன்' சுட்டுகிறது. சமுதாயம் நலனடையக் கிராம உழவு இன்றியமையாதது என்பதை 'அமுத நீர்' என்ற கதை உணர்த்துகிறது. கிராம வாழ்வின் சிறப்பை உணரும் நகரத்தினரைக் கிராமத்திற்கு வரவழைக்கிறது 'ராஜியின்கணவன்' என்ற கதை. கிராமம் புத்துயிர் பெற ஆசிரியரின் பங்கு இன்றியமையாதது என்பதைத் தெளிவிக்கும் கதை 'புத்துயிர்'. கிராமச் சீரமைப்பிற்குக் கைகொடுப்பது கிராமப் பஞ்சாயத்து என்பதை விளக்கமுறச் செய்கிறது 'ஒன்பது குழி நிலம்'.

தற்காலத்தில் உழைப்பின்றிச் செல்வம் துய்ப்பதினும் கடும் உழைப்பில் நம்பிக்கை கொள்ளத் தூண்டுகிறது 'மக்களுக்கு உணர்ச்சி தேவை' என்ற கதை. காந்தியடிகளின் பெயரில் போலி வாழ்வு வாழும் இழிந்த சமுதாயத்தை இடித்துரைக்கிறது 'உள்ளும் புறமும்' என்ற கதை. அப்போலி வாழ்வைக் கதைப் பின்னல்வழியும், பாத்திரத்தின்வழியும் படம் பிடித்துக் காட்டுவன 'அநுதாபக் கூட்டம்', 'காந்தி நூற்றாண்டு விழா' ஆகியன. அத்தகைய இழிந்த நிலையை 'முத்துவின் கோயில்' என்ற

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கதையின் நிகழ்ச்சிப்பின்னலும் சாடுகிறது. தம் பெயரைப் பயன் படுத்தித் தீயவழியில் பொருளீட்டிப் போலி வாழ்வு நடத்துவதைச் சுட்டும் காந்தியடிகள், சமுதாயத்திற்கு அறவுரை கூறுவதை விளக்கும் கதை 'காந்தி வந்தார்' என்பது. நகரப் பொய்ம்மையை விண்டு காட்டிச் சீர்திருத்தம் கொணர விழைகிறது 'ஒரு கிராம வாசி சுதந்தர தினத்தன்று சிறைப்படுகிறான்' என்ற கதை.

வரலாற்றை உணர்த்தும் நோக்கம்

இந்தியாவின் விடுதலைப் போராட்டத்திற்குத் தலைமை ஏற்ற காந்தியடிகளின் செல்வாக்கு மக்களைப் பெரிதும் ஈர்த்தது. குறிப்பிட்ட அக்கால கட்டத்தில் அவர்தம் ஆணைப்படி எவ்வாறு பலதிறப்பட்ட மக்கள் விடுதலை இயக்க வேள்வியில் குதித்துத் தம் உடல் பொருள் ஆவி அனைத்தையும் ஒரு பொருட்டாக மதிக்காமல் செயற்பட்டனர் எனவும், எவ்வாறு அவர்தம் கொள்கை வழியில் நிருமாணத் திட்டச் செயல்களை மேற்கொண்டனர் என்றும் வரலாற்று நிகழ்ச்சிகளை மையமாக வைத்துக் கதைகளைப் படைத்துள்ளனர் சில ஆசிரியர்.

இத்தகு நோக்குடன் எழுதப்படும் கதைகளைக் குறித்து, ''அன்றைய சூழ்நிலையில் பாதிப்பு எப்படி எல்லாம் ஏற்பட்டது, ஏற்பட்டிருக்கக்கூடும் என்பதை என் கற்பனையில், அனுமானத்தில் உருவாக்கி இருக்கிறேன்''[2] என்று சி.சு.செல்லப்பா கூறுவது நினைவுகூரத்தக்கது.

அன்புவழியில் விடுதலை பெறத் துடித்த சத்தியாக்கிரகி களுள், இளைஞர் நாளையும் பொழுதையும் பொருட்படுத்தாமல் பொங்கலன்றும் சத்தியாக்கிரகம் புரிந்து சிறைக்குச் சென்றதை 'அன்றைய பொங்கல்' என்ற கதை உணர்த்துகிறது. நாட்டின் மானத்தைக் காக்க வழக்கறிஞர், ஆசிரியர் ஆகியோர் சிறைக்குச் சென்றதை, 'மந்திரி சீதாராமய்யர்', 'கணையாழியின் கனவு' ஆகிய கதைகளின் நிகழ்ச்சிப் பின்னல்கள் எடுத்துரைக்கின்றன. சத்தியத்தை நிலைநிறுத்தக் குடும்பத்தைப் பிரிந்து சிறைத் துன்பம் ஏற்கவும் முன்வந்த மாந்தனைச் 'சிசுவின் குரல்' சித்திரிக்கிறது. சிறையினின்று வெளிவந்த கணத்திலேயே மீண்டும் சிறைக்குச் செல்லும் நிலை சத்தியாக்கிரகிக்கு ஏற்படுவதைக் 'கனவு' என்ற கதை எடுத்துரைக்கின்றது.

வெஞ்சிறையில் கொடுமைக்கு ஆட்பட்டாலும் காந்தியடி களின் வாக்குறுதியின்படி கொள்கைப் பிடிப்பினின்றும் சிறிதும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வழுவாமல் காந்திய மதிப்பீட்டை உயர்த்தும் சத்தியாக்கிரகி களைப் படம் பிடித்துக் காட்டும் கதைகளும் உள. சிறையில் குடும்பத்தாரைக் காணவும் மறுத்துக் கொள்கையுறுதியை நிலை நாட்டியதும், மரணத்தையும் அலட்சியப்படுத்தும் சிறை அதிகாரி களுக்குக் கட்டுப்பட்டே வாழ்ந்ததும், சிறையில் தன்னல மறுப்பு உணர்ச்சியை அளிக்கும் வழிபாட்டை மேற்கொண்டதும் முறையே 'சிறை ஸத் ஸங்கம்', 'சட்டத்துக்கு மிஞ்சி', 'பிரார்த்தனை' ஆகிய கதைகளில் விளக்கமுறுகின்றன. சிறைக்குள் துன்பத்தைத் தாங்கிக் கொண்ட வீரர்கள் ஊராரால் வகுப்பு உயர்வு கிடைத்த போது, மனம் நொந்து வாடியதை 'மருதநாயகம்' என்ற கதையின் பாத்திரப்படைப்பு உணர்த்தும். உப்புச் சத்தியாக்கிரகத்தின்போது சிறையிலிருந்த சத்தியாக்கிரகி, குற்றம் புரிந்து சிறைக்கு வந்த பிற கைதிகளுக்கு அறிவுரை வழங்கித் திருத்தியதை 'அமிஞ்சிக் கரை சோமு' என்ற கதை தன் பின்னலில் சுட்டுகிறது.

காந்தியடிகள் காலத்து விடுதலை இயக்க வீரர்கள் சிறைக்கு வெளியேயும் பெருந்துன்பத்திற்கு ஆளாயினர். சிறைமாற்றம் நிகழ்ந்தபோது, புகைவண்டி நிலையத்தில் காணவந்த உற வினரைக் காணவொட்டாது அன்றைய அதிகாரிகள் கடுமையாகச் செயற்பட்டதைக் 'கந்தசாமி' என்ற கதை உணர்த்தும். அதிகாரி கள் எலும்பு நொறுங்குமாறு அடித்தபோதும் ஆன்ம பலத்துடன் சத்தியாக்கிரகிகள் தாங்கியதைச் 'சிப்பாய் இதயம்' என்ற கதையின் நிகழ்ச்சிப் பின்னல் உடல் சிலிர்க்கச் சித்திரிக்கிறது. உப்புச் சத்தியாக்கிரகத்தின்போது உப்புக் காய்ச்சியதையும், அது போழ்து துப்பாக்கிக் குண்டுகளைக் காவலர் பயன்படுத்தியதையும் 'சிரஞ்சீவிக் கதை'யின் கதைப் பின்னல் படம்பிடிக்கிறது. அந்நியத் துணிக்கடை மறியலில் காவலர் அளித்த தழும்புப் பரிசுடன் காவலரின் வாகனத்தில் தள்ளப்பட்டதைப் 'பவானி, பி.ஏ., பி.எல்.' என்ற கதையின் நிகழ்ச்சிப் பின்னல் காட்டுகிறது.

அக்காலப் போராட்டத்தில் பெண்களும் ஈடுபட்டமை 'ஸ்ரீகாந்தன் புனர் ஜன்மம்', 'யார் தியாகி?' ஆகிய கதைகளின் நிகழ்ச்சிப் பின்னல்களில் விளக்கமுறுகிறது. துன்பத்தை ஒரு பொருட்டாக மதிக்காமல் விடுதலைப் போராட்டத்தில் பங்கு பெற்றவர், புலனடக்கத்துடன் ஆத்ம வேள்வியில் ஈடுபட்டதை 'மடவார்ப் பொறை'யில் காணலாம். அரசினது கெடுபிடிகளுக்கு இடையேயும் இத்தகைய போராட்டத்திற்கு அரசு ஊழியர்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

உள்ளூர ஆதரவு நல்கியதை 'வந்தே மாதரம்' [சி.சு. செல்லப்பா] உணர்த்தும். காந்தியடிகளை 1942-இல் சிறைப்படுத்தியபோது அவரது கட்டளைப்படி போராட்டத்தில் ஈடுபடத் தயாராக இருந்தவர்களுள் சிலர், வன்முறையில் ஈடுபட்டதை 'இன்பத் தீ' என்ற கதை விளக்குகிறது.

காந்தியடிகள் தமது செயல் திட்டத்தில் ஒரு பக்கம் விடுதலைப் போராட்டத்தையும், மறுபக்கம் நிருமாணப் பணித் திட்டங்களையும் அமைத்தார். நிருமாணத் திட்டத்தில் தம் சிந்தனையை அவர் திருப்பியமைக்குக் காரணம், நாடு பாழ்பட்டு நின்ற நிலையாகும். மனிதருள் ஒரு பிரிவினரைத் தீண்டத் தகாதவர் என்று வேறுபடுத்திய சமூகம், தன் குழந்தைகளருகே அரிசனக் குழந்தைகள் அமர்ந்து கல்வி கற்பதையும் விரும்பாமல் கொடுமையாக நடந்ததைச் 'சமானன்' என்ற கதையின் நிகழ்ச்சிப் பின்னல் உணர்த்தும். சமூகத்தை இந்த இழிநிலையிலின்றும் விடுவிக்க முயன்ற சத்தியாக்கிரகிகள், தம்முடன் ஒத்த உயர் சாதியினரின் எதிர்ப்புகளுக்கிடையில் அரிசனக் குழந்தையை எடுத்து வளர்த்து உயர்த்திப் புரட்சி செய்தமை 'ஒரு துளி' என்ற கதையில் இடம் பெறுகிறது. குழந்தை மணத் தடுப்பைக் காந்திய நெறியில் நின்று செயற்படுத்தியதைக் 'கமலாவின் கல்யாணம்' என்ற கதையின் நிகழ்ச்சிப் பின்னல் சித்திரிக்கிறது.

இத்தகைய காந்தி கால வரலாற்றை உணர்த்தும் நோக்கத்தின் விளைவாக, அக்கால வரலாற்று நிகழ்ச்சிகளும் காந்தியக் கருத்து விளக்கங்களுக்குத் துணையாயிருந்தமை தெளிவாகிறது. படிப்பவர் அறியாமலேயே அவர்தம் உள்ளங்கள் காந்தியுகத்திற்கு இழுத்துச் செல்லப்படுவதையும் உணரமுடிகிறது.

வாழ்க்கை வரலாற்றுக் குறிப்புணர்த்தும் நோக்கம்

காந்தியடிகளின் செயல்களைச் சுட்டுவதும் போற்றுவதும் நோக்கமாகக் கொண்டு சில ஆசிரியர்கள், காந்திவழிக் கதைகளைப் படைத்துள்ளனர்.

காந்தியடிகள் இந்திய விடுதலைக்காக அந்நிய அரசை அகிம்சை வழியில் எதிர்த்து வெற்றியடைந்ததை 'நரநாராயணன்' என்ற உருவகக் கதை விளக்குகிறது. மதுவிலக்குத் திட்டத்தில் காந்தியடிகளின் பங்கை உணர்த்தும் நோக்கில் 'விமோசனம்' என்ற கதையில் குடித்துக் கெட்டழிந்த ஒருவன், மதுவிலக்குச்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சட்டத்தைக் கொணரப் போவதை உணர்த்த, அவன் மனைவீ காந்தியடிகளை வாழ்த்துகிறாள். 'குப்பன்' என்ற கதையில், மதுவிலக்குச் சட்டம் நீண்ட நாளைக்குத் தொடரவேண்டும் என்று குடிக்கு அடிமையாகிய ஒருவன் குறிப்பிட்டு அதற்குக் காரணமான காந்தியடிகளின் காங்கிரசு வாழ வாழ்த்துகிறான்.

தீண்டாமையைச் சாபக்கேடு எனக் குறிப்பிட்ட காந்தியடிகள், தம் வரலாற்றில் அதனை விலக்க எடுத்த முயற்சிகள் பல. 'துர்க்கையின் சாபம்' என்ற கதையில், காந்தியடிகள் தீண்டாதார்க்காகக் கோயில்களைத் திறக்கும் காட்சியைச் சுட்டிக் கோயிலில் தன் திருமணம் இனி நடைபெறும் என மகிழ்கிறான் அரிசன இனத்தவன். பெண்களின் முன்னேற்றத்திற்கு உழைத்தவர் காந்தியடிகள் என்பதைத் 'திருமதி சிற்றம்பலம்' என்ற கதை கருத்தளவில் சுட்டுகிறது. பொருளாதார நெருக்கடியில் ஏழ்மையைப் போக்கவல்ல கதரை அளித்தவர் காந்தியடிகள். கிராமத்தில் உணவு உடைப் பஞ்சங்களைப் போக்கவல்லது காந்தியடிகளின் இராட்டை என்பதை 'வாழும் வழி' உணர்த்துகிறது. தனக்காகக் காந்தியடிகள் இராட்டையைத் தோற்றுவித்தார் என்ற நம்பிக்கையில் முடவன் நூற்பதை 'வாழ்க்கை ஒரு வானவில்' என்ற கதையின் நிகழ்ச்சிப் பின்னல் சுட்டுகிறது. தீயவனை நல்லவனாக மாற்றிய கதரைக் காந்தியடிகள் அளித்த சத்தியத்தின் சின்னம், மூலிகை எனப் புகழ்கிறது 'சத்தியத்தின் சின்னம்' என்ற கதை. காந்தி என்ற பெயர் சத்தியத்தைச் சுட்டுவது என்ற குறிப்பின்வழிக் காந்தியடிகளின் சத்தியப் பண்பை உணர்த்துகிறது 'அன்பின் எல்லை'.

இவ்வாறு காந்தியடிகளின் வரலாற்றுக் குறிப்புகளை உணர்த்தும் நோக்கமுடைய ஆசிரியர்கள், அந்நோக்கத்தின் வழிக் காந்தியடிகளின் அரும்பெரும் பணிகளைச் சுட்டிக்காட்டியும், அவரது சிறப்பை வியந்தோதிப் போற்றியும் தம் குறிக்கோள்களை நிறைவுறச் செய்கின்றனர்.

காந்தியடிகளின் ஆளுமையை உணர்த்தும் நோக்கம்

காந்தியடிகளுடைய ஆளுமையின் ஆற்றலைத் தம் கதைகளில் வடிக்க விரும்பிய ஆசிரியர்கள், அவரது ஆளுமைச் சக்தி எந்த அளவிற்கு மக்களைக் கவர்ந்தது என்பதை அழகுறச் சித்திரித்துள்ளனர்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

காந்தியடிகளுடன் மேற்கொண்ட நேரிடையான உரையாடலால் சிறு வயதில் ஏற்பட்ட தாக்கம், படிப்படியே உள்ளூர வளர்ந்து சிந்தனையில் தடுமாற்றமில்லாமல் கொள்கைப் பிடிப்பில் இறுதிவரை நிற்க உதவுவதைப் 'பதச் சோறு' என்ற கதை விளக்கும். காந்தியடிகளின் தரிசனத்தால் அவர்தம் தாக்கம் பெற்ற பாத்திரம், தடுமாற்றமடைந்த மற்றொருவரிடம் காந்தியடிகளின் சத்தியம் பற்றிய கொள்கை விளக்கமளித்துச் சத்திய உறுதி எடுக்க உதவுவதைச் 'சத்திய தரிசனம்' விளக்கும். காந்தியடிகளின் சிந்தனைகளைப் பற்றித் தன் தாய் அளித்த விளக்கம், சிறு வயதில் தாக்கம் ஏற்படுத்தி இறுதிவரை கொள்கைப் பிடிப்பில் ஊன்ற வழிகோலியதைச் 'சத்திய சோதனை' சித்திரிக்கும். காந்தியடிகளின் ஆளுமைத்திறன் இந்திய ஒற்றுமைக்கு வழிகாட்டியாயிருந்ததைக் 'கூட்டுக் குடும்பம்' என்ற கதை விளம்பும்.

காந்தியடிகளின் நூல்களும் அவரைப் பற்றிய கதைகளும் சமுதாயத்தில் தம் செல்வாக்கை நிறுவி, அவர் ஆளுமைத் திறனை உணர்த்துகின்றன. 'அண்ணலே உன்வழி' என்பதில், பகைவரிடம் அன்பு பாராட்டிய காந்தியடிகளின் வாழ்க்கை வரலாறு பகைமையை வேருடன் களைந்து எறிந்து பகைவனுக்கு உதவத் தூண்டுகிறது. அவர்தம் பிரம்மச்சரிய கருத்துகள் அடங்கிய நூல் திருமணத்திற்கு முன்னும் பின்னும் வாழ்வாங்கு வாழக் கைகொடுப்பதை 'விளக்கேற்ற வந்தவள்' சித்திரிக்கிறது. காந்திக் கதைகள் சிறுவர்களை நன்னெறிப்படுத்தவல்லன என்பதை 'அவனா இவன்?' என்ற கதை உணர்த்துகிறது. காந்தியடிகள் தம் வாழ்வில் அன்பைப் பெரிதும் பாராட்டியமை சிறுவனிடம் சிறந்த தாக்கத்தை விளைவிப்பதை, 'அன்பை அலட்சியப்படுத்தக் கூடாது' என்ற கதை எடுத்துரைக்கிறது. அவர் எரவாடா சிறையிலும், சபர்மதி ஆசிரமத்திலும் தாமே தம் தேவைகளை நிறைவு செய்த நிகழ்ச்சிகள், சிறுமியிடம் தன் செயல்களைத் தானே மேற்கொள்ளத் தூண்டுகோல்களாயிருப்பதைக் 'கற்றுக்கொள் கவிக்குயிலிடம்' என்ற கதையின் நிகழ்ச்சிப் பின்னல் விளக்குகிறது. காந்தியடிகளிடம் கொண்ட பற்றுச் சாதாரண தொழிலாளியிடம் சிறந்த நாட்டுப் பற்றைத் தூண்டுமளவிற்குத் தாக்கத்தை ஏற்படுத்தியதை 'அன்னையின் குரல்' என்ற கதை சித்திரிக்கும். காந்தியச் செல்வாக்கு நாட்டுப்பற்றுடையவரைக் கொள்கைப்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பிடிப்பில் நிலை நிறுத்துவதை 'இரவு ஒரு மணி' என்ற கதையின் தலைமைப் பாத்திரப் படைப்புச் சுட்டுகிறது.

இவ்வாறு காந்தியடிகளிடம் இயல்பாக இருந்த பல்வேறு ஆளுமைகள் பல்லோரை ஈர்த்து நன்னெறிப்படுத்தித் தம் செல்வாக்கை நிறுவியதை விளக்கும் நோக்கத்திற்கு முதலிடம் தந்துள்ளனர் சில ஆசிரியர்கள்.

காந்தியடிகளே வழிகாட்டி என்பதை உணர்த்தும் நோக்கம்

இன்றைய வன்முறைகள், தீய சக்திகள், ஒழுக்கமின்மை இவையெல்லாம் சமுதாயத்தினின்றும் விலக்கப்பட்டு மக்கள் ஏற்றம் பெற உதவுவது காந்தியமே என்பதைச் சில ஆசிரியர்கள் நிறுவ முற்படுகின்றனர்.

மதுக்குடி போன்ற தீய சக்திகளுக்கு இரையாகாமல் மக்களை நன்னெறியில் நிறுத்த முயன்றவர் காந்தியடிகள். ஆதலால் நம் புண்ணிய பூமிக்கு அவருடைய அடிச்சுவடுகளைவிடச் சிறந்த வழிகாட்டிகள் அமைய முடியா என்பதை 'அடிச்சுவடு' என்ற கதை அறுதியிட்டு உரைக்கிறது. சாதி, கட்சிப் பூசல் களையுடைய, சிந்தனைத் தெளிவற்ற, நேர்மையற்ற சமூகத்தைச் சத்திய நெறியில் நிலைநிறுத்தக் காந்தியமே வழி காட்டி என்பதை விளக்கமுறச் செய்கிறது 'கங்கை எரிகிறது' என்ற கதை. நம்நாடு ஒருமைப்பாட்டுணர்வுடன் அமைந்து சிறந்தவொரு நாடாகத் திகழ வேண்டுமானால், காந்தியடிகளின் வழியே உதவக் கூடியது என்பதை 'ஓர் இந்தியன் இறக்கிறான்' என்ற கதை உணர்த்துகிறது.

மனித சமுதாயம் உய்வடையக் காந்தியடிகளின் கோட்பாடுகளே உதவக் கூடியன என்பதை முத்திரையிட இத்தகைய ஆசிரியர்கள் விழைந்தமை புலனாகும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வரைபடம்-1

காந்தியக் கருத்துகளைப் பயன்படுத்தும் நோக்கம்

கொள்கை விளக்கம் (32 கதைகள்)
கொள்கைச் சிறப்பு (14 கதைகள்)
சீர்திருத்தம் (35 கதைகள்)
வரலாறு (22 கதைகள்)
வாழ்க்கை வரலாற்றுக் குறிப்பு (9 கதைகள்)
ஆளுமை (11 கதைகள்)
காந்தியே வழிகாட்டி (3 கதைகள்)

காந்திவழிக் கதைகளில் (126) காந்தியக் கருத்துகளைப் பயன்படுத்திக்காட்டும் நோக்கங்களில் சீர்திருத்த நோக்கமும் (35 கதைகள்), கொள்கை விளக்க நோக்கமும் (32 கதைகள்) அதிகமான கதைகளில் காணப்படுகின்றன.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கதைமாந்தரிடம் காந்தியத் தாக்கம் ஏற்படுத்தவல்லன

காந்தியத்தை விளக்கமுறச் செய்யும் கதைகளில், கதைமாந்தரிடம் காந்தியத் தாக்கம் ஏற்படுத்த உதவும் கருவிகளாகக் காந்தியடிகளின் படம், நூல், அவரது சின்னமாகிய கதர், அவரது இயக்கம், கொள்கைத் திட்டம், அவரால் உருவாக்கப்பட்ட கல்விப் பயிற்சி ஆகியன சுட்டப்படுகின்றன. இவை தவிரக் காந்தியடிகளின் வருகை, சொற்பொழிவு, அவருடன் அமைந்த நேர் உரையாடல் ஆகியனவும் பாத்திரங்களிடம் தாக்கம் விளைவிக்கக் காரணங்களாக உள்ளன. மேலும் காந்தியடிகளின் கருத்துகளும் பண்புகளும் கருத்துகள் பற்றிய அறவுரைகளும் தகுந்த மாறுதலை ஏற்படுத்துகின்றன.

இவற்றுள் காந்தியடிகளின் நூல், கதர், இவை தவிர ஏனையவை சாதாரண மாந்தரிடம் அவர்தம் உள்ளப் பக்குவத்திற்கேற்பக் காந்தியச் செல்வாக்கைப் பதிக்க உதவுகின்றன. ஆயின், காந்தியடிகளின் கதர், நூல் ஆகியவற்றால்[3] ஏற்படும் தாக்கம் விலங்கு நிலையிலிருக்கும் மனிதர்களைத் தூய மனமுடையவர்களாக மாற்றவும் காரணமாக அமைகின்றது.

காந்தியத் தாக்கத்தைக் கதை மாந்தரிடம் ஏற்படுத்தக் கூடியவற்றுள் கதர், நூல் ஆகியவை தவிர ஏனைய கருவிகள் இரு நிலைகளில் நோக்கங்களை நிறைவுறச் செய்கின்றன. மாந்தரின் சாதாரண மனநிலையில் இயல்பான ஒரு தாக்கத்தைச் சில கருவிகள் ஏற்படுத்தல் ஒரு நிலை. சில கருவிகள் சிறிது சலனமுற்ற உள்ளமுடையவனிடம் மனத்தை ஒரு நிலைப்படுத்த உதவுதல் மற்றொரு நிலை. கதரோ அசத்திய வாழ்க்கை வாழ்பவனின் உள்ளுணர்வுகளைத் தூண்டிச் சத்திய வாழ்வு வாழுமாறு மாற்றத்தைக் கொணர உதவுகிறது. ஆயின், காந்தியடிகளின் நூலோ பெருஞ்சலனத்திற்குட்பட்ட மாந்தரை நேர்மையாளராக மாற்றுவதுடன் அவர்தம் ஆன்மீக உணர்வுகளைத் தட்டி எழுப்பிப் பிறர் நலம் பேணும் பேராண்மையுடையவர்களாகவும் உயர்த்துகிறது.

கலைகளனைத்தும் ஆன்மாவின் வெளிப்பாடே என்ற கருத்துடையவர் காந்தியடிகள். 'மனிதனுக்குள்ளிருக்கும் ஆன்மீக உணர்வை வெளிப்படுத்துவதாக இருந்தால் மட்டுமே அக்கலையின் புறவடிவம் போற்றப்படும். அப்படிப்பட்ட கலையே எனக்கு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

விருப்பமானதாகும்''[4] என்ற அவர்தம் எண்ணத்திற்கேற்ப, இலக்கியக் கலையும் ஆன்மீக உணர்வைத் தூண்டும் வகையில் அமையின் அது இலக்கியத்தின் வெற்றியாகும். காந்தியடிகளின் இவ்விலக்கியக் கண்ணோட்டத்தின்படி கதைகளில் இடம்பெறும் காந்தியடிகளின் நூல்கள் எந்த அளவிற்குச் சிறப்பிடம் பெறு கின்றன என்பதைக் காணலாம்.

காந்தியடிகளின் சுய சரிதையின் தாக்கம், மனிதகுலம் அழிவதற்குரிய பழிவாங்கும் துடிப்புடன் உழலும் மாந்தரிடையும், மிக இழிந்த காம உணர்வுகளுக்கு இடமளித்துச் சீரழிந்த மாந்தரிடையும் பெரும் மாறுதலைக் கொணரும் வகையில், அவர்களைத் தூய்மைப் படுத்துவதுமட்டுமன்றி மனிதருள் மாணிக்கங்களாக அவர்கள் ஒளிரவும் உதவுகிறது. எவரைப் பழிவாங்கத் துடித்தானோ அவரது உயிரைக் காக்கும் பண்பாள னாக ஒருவனை உயர்த்துகிறது. காமப்பசியால் உழன்ற உள்ளத் தைச் சமுதாய நலனுக்காக வருந்துமளவிற்கு ஏற்றமுறச் செய்கிறது.

''... வரலாறு [சுய சரிதை] வாசகர்களுக்குப் பலனளிக்காமற் போகாது என்று நம்புகிறேன்''[5] எனக் காந்தியடிகள் தாம் எழுதிய சத்திய சோதனையைப்பற்றிக் குறிப்பிட்டமை, கதையாசிரி யருக்கு அந்நூலைத் தம் கதைகளில் உத்திப் பொருளாகக் கையாள்வதற்கும், அதன்வழிச் சமுதாயத்தில் இழிந்த நிலை யிலுள்ளோர் உயர்வடைய நம்பிக்கை தருவதற்கும் உதவுகிறது.

காந்தியடிகளின் வாழ்க்கை வரலாறு உண்மையான மாற்றத்தை விளைவிக்கக் கூடியது என்பதை, அவருடன் பிற்கால வாழ்க்கை முழுவதும் உடனிருந்த மீராபென் என்பாரும் சுட்டி யுள்ளார். அவர் காந்தியடிகளிடம் வந்து சேர்வதற்குமுன், ரொமெய்ன் ரோலந்து எழுதிய காந்தியடிகளின் வாழ்க்கைச் சரிதத்தைப் படித்தபோது, சத்திய சூரியனின் கதிர்கள் தம்முள் முழுமையாகப் பரவின[6] என்று கூறியமை குறிப்பிடத்தக்கது.

கதையாசிரியர்களிடம் தாக்கம் விளைவித்த காந்திய வரலாற்றுப் பின்னணி

காந்திவழிக் கதைகள் படைத்த ஆசிரியருள் சிலர், காந்திய சக்தி தீவிரமாக இருந்த வரலாற்றுப் பின்னணியைச் சுட்டியும் இடம்பெறச் செய்தும் காந்தியுகக் கதைகள் என்று தம் படைப் பிற்கு ஒரு முத்திரை பதித்துள்ளனர். அவர்கள் குறிப்பிடும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

காந்தி வரலாற்றுக் காலத்தை 1919-21, 1930-32, 1934, 1940-42, 1947-48 என்று ஐந்து கால கட்டங்களில் அடக்கலாம்.

1919-இல் காந்தியடிகள் நடத்திய முதலாவது அகில இந்தியப் போராட்டம் ரௌலட் சட்ட எதிர்ப்புப் போராட்டமாகும். அரசு வெறுப்புக் குற்றம் போன்றவற்றிற்கு விசாரணை செய்யப்படும் அடிப்படை உரிமையைப் பறிக்கக் கூடிய சட்டத்தை எதிர்த்து இது நடத்தப்பட்டதாகும். 1920-இல் தொடங்கப்பட்ட ஒத்துழையாமை இயக்கம் இரண்டாவது அகில இந்தியப் போராட்டமாகும். ஜாலியன்வாலாபாக் படுகொலை, கிலாபத் நடவடிக்கை போன்றவற்றிற்காக அரசின் இரக்கமற்ற செயல்களைக் கண்டித்து இது தொடங்கப்பட்டது. பட்டம் பதவி துறத்தல், கல்விச்சாலை, நீதிமன்றம், சட்டசபை முதலியவற்றை ஒதுக்கல், அந்நியப் பொருள்களை மறுத்தல் போன்றவை இப் போராட்டத்தின் சிறப்பான அம்சங்களாகும். இதன் காரணமாக 1921-இல் 30,000 பேர் சிறைப்பட்டனர்.

1930-இல் நடந்த உப்புச் சத்தியாக்கிரகம் மூன்றாவது அகில இந்தியப் போராட்டமாகும். காந்தியடிகள் இச்சத்தியாக்கிரகத்திற்காகத் தண்டிக்குப் புறப்பட்டபோது இலட்சக்கணக்கானவர் சட்டத்தை மீறிச் சிறை சென்றார்கள். 1931-இல் 95,000 பேர் சட்டமறுப்புச் செய்து சிறைப்பட்டனர். 1931-இல் வரிகொடா இயக்கமும் நடந்தது. இந்த ஆண்டில் இலண்டன் இரண்டாவது வட்ட மேசை மகாநாட்டிலிருந்து காந்தியடிகள் இந்தியா திரும்பியபோது, நாடு கொந்தளிப்பில் இருந்தது. காந்தியடிகளுடன் வைசிராய் பேச மறுக்கவே, சட்டமறுப்பு இயக்கம் வீறு கொண்டது. பலதலைவர்களும் ஊழியர்களும் சிறைப்பட்டனர்.

1934-இல் அரிசன நிதி, பீகார் நில அதிர்வு நிதி ஆகியன திரட்டக் காந்தியடிகள் தமிழகம் வந்தார். 1940-இல் நடந்த தனி நபர் சத்தியாக்கிரகம், போரினைப்பற்றி ஒருவருக்குத் தம் கருத்தினைச் சொல்லவும், பிரசாரம் செய்யவும் உரிமை வேண்டும் என்ற நிலையில் ஏற்பட்டது. இதில் 30,000 பேர் பங்கெடுத்தனர். இச்சத்தியாக்கிரகம் ஓர் ஆண்டு நடந்தபின் 1941-இல் சத்தியாக்கிரகிகள் விடுதலை செய்யப்பட்டனர். 1942-இல் கிரிப்ஸ்-காந்தியடிகள் பேச்சு வார்த்தை முறிந்தபின், ஆங்கில அரசு இந்தியாவை விட்டு வெளியேற வேண்டும் என்ற

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இயக்கத்தைக் காந்தியடிகள் தொடங்கினார். காந்தியடிகளும் பிறரும் சிறைப்படுத்தப்பட்டனர். நாட்டில் கொந்தளிப்பு ஏற்பட அவசரச் சட்டங்கள் தாண்டவமாடின.

1947 ஆகஸ்ட் திங்களில் நாடு விடுதலை அடைந்தபின், இந்து முகமதியர் கலவரங்கள் கல்கத்தாவில் தோன்றக் காந்தியடிகள் உண்ணா நோன்பு மேற்கொண்டார். பீகாரில் கலகம் ஏற்பட அங்கே சென்றார். 1948-இல் டில்லியில் ஏற்பட்ட கலவரங்களுக்காகவும் உண்ணா நோன்பு மேற்கொண்டார்.

மேற்குறிப்பிட்ட ஐந்து வரலாற்றுக் கால கட்டங்களைக் குறிப்பிடும் கதைகளுள் 1919-21 காலப் பின்னணியைச் சுட்டுவன ஒன்பது கதைகள் ஆகும். 1930-32 காலப் போராட்டங்களைப் பதின்மூன்று கதைகள் குறிக்கின்றன. 1934-இல் காந்தியடிகள் அரிசனநிதி, பீகார் நில அதிர்வு நிதி ஆகியவை திரட்டத் தமிழகம் வந்தமை மூன்று கதைகளில் இடம்பெறுகிறது. சில ஆசிரியர்கள் 1940-42 போராட்ட நிகழ்ச்சிகளைச் சுட்டியும் இடம்பெறச்செய்தும் பதினைந்து கதைகளில் வரலாற்றுப் பின்னணியை உணர்த்துகின்றனர். 1947-48 காலத்துச் சூழல் ஐந்து கதைகளில் சுட்டப்படுகின்றன.

இவற்றினின்று சில உண்மைகள் அறியப்படுகின்றன. நாடு தழுவிய காந்தியப் போராட்டங்களில் 'ஒத்துழையாமை இயக்கம்', 'உப்புச் சத்தியாக்கிரக இயக்கம்', 'தனிநபர் சத்தியாக்கிரக இயக்கம்', 'வெள்ளையனே வெளியேறு இயக்கம்' ஆகியன சமுதாயத்தில் பெருந்தாக்கத்தை ஏற்படுத்தியதன் விளைவாகத் தமிழ் நாட்டுச் சிறுகதை எழுத்தாளர்தம் சிந்தனையிலும், தம் செல்வாக்கைச் செலுத்தின. அதன்வழிக் காந்திவழிக் கதைகள் எழுதிய ஆசிரியர்தம் கதைகளில் தம் முத்திரையைப் பதித்தன.

குறிப்பிடத்தக்க காந்திய வரலாற்றுப் பின்னணியை அமைத்துத் தம் கதைகளை உருவாக்கியவருள் கல்கி, சி.சு.செல்லப்பா ஆகிய இருவரும் எண்ணிக்கையில் அதிகமான கதைகளை அத்தகைய அமைப்பில் படைத்துள்ளனர்.' காந்திவழிக் கதைகள் படைத்த ஆசிரியர் பலர் காந்திய இயக்கங்களில் கலந்து கொண்டு இருப்பினும், அவ்வியக்கங்களில் பங்குகொண்ட கல்கி, சி.சு.செல்லப்பா இருவரும் தம் கதைகளில் விடுதலை இயக்கத்தின் சூழலை அமைக்க வேண்டும் என்ற எண்ணத்தில் மிகுதியான கதைகளில் இச்சூழலை அமைத்துள்ளனர்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சில ஆசிரியர்கள் காந்தியப் பின்னணியைக் காட்டும் விழைவில் காலத்தைத் தவறாகச் சுட்டியமையும் நினைக்கத்தக்கது. 'சத்திய தரிசனம்' என்ற கதையில் விடுதலைக்குப் பிறகு காந்தியடிகள் தமிழகத்திற்கு வந்ததாகக் [1946-க்குப் பிறகு அவர் தமிழகம் வரவில்லை][8] குறிப்பிடப்பட்டுள்ளது. 'குணம்' என்ற கதையில் 1944 அல்லது 1945-இல் காந்தியடிகள் சென்னைக்கு வந்ததாகச் [1946-இல் தான் வந்திருந்தார்][9] சுட்டப்பட்டுள்ளது.

(விளக்கம், பின்வரும் பக்கங்களில் உள்ள அட்டவணை எண் 13-இல் காணலாம்.)

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அட்டவணை-13

காந்தியப் பின்னணி

எண்	கதைகள்	1919-20,21	1930-31, 32,	1934	1940-41, 42	1947-48
1.	'மருத நாயகம்'	—	—	—	1941-இல் சத்தியாக்கிரகியின் சிறை வாழ்வு சுடப்பட்டல்.	—
2.	'சிறை ஸத் ஸங்கம்'	—	1931-32-இல் சத்தியாக்கிரகிகளின் சிறை வாழ்வு இடம் பெறல் - மீண்டும் சட்டமறுப்பில் கலக்க இருந்தமை சுட்டப் படல்.	—	—	—
3.	'எஜமான விசுவாசம்'	—	—	—	கிரிப்ஸ் வந்தமை (1942) இடம் பெறல்.	—
4.	'பதச் சோறு'	—	—	1934-இல் அரிசன நிதிதிரட்டக்காந்தியடிகள் தமிழகம் வருவது இடம் பெறல்	—	—
5.	'இராவணா காரம்'	—	1931-இல் பாரதம் முழுவதும் நடக்கும் மது, அந்நியத் துணி மறியல் சுட்டப்படல்- சென்னையில்மறியல் நடப்பது இடம்பெறல்	—	—	—

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

எண்	கதைகள்	1919-20, 21	1930-31, 32	1934	1940-41, 42	1947-48
6	'கங்கை இன்னும் வற்றி விடவில்லை'	—	—	—	1942-இல் வெள்ளையனே வெளியேறு இயக்கம் சுட்டப்படல்.	—
7	'கேள்விக்கு பதில்'	1920-இல் ஒத்துழை-யாமை ஆரம்பித்தமை சுட்டப்படல்.	1930-இல் சத்தியாக்கிரகி கொடி தூக்கிய நிகழ்ச்சி சுட்டப்படல்.	—	1941-இல் சத்தியாக்கிரகி யின் சிறை-வாழ்வு இடம் பெறல்.	—
8	'விதூஷகன் சின்னுமுதலி'	1921-இயக்கம் சுட்டப்படல்.	—	—	—	—
9	'அடிச்சுவடு'	ஒத்துழை-யாமை இயக்கத்தில் கலந்து அடிபட்டு உயிரிழந்தமை சுட்டப்படல்.	—	—	—	—

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

எண்	கதைகள்	1919—20,21	1930-31, 32	1934	1940—41,42	1947—48
10	'மடவார்ப் பொறை'	ஒத்துழை-யாமைஇயக்கத்திற்குத் தமிழ்நாட்டில் தொண்டரைச் சேர்த்தமை சுட்டப்படல்.	—	—	—	1947-இல் இந்தியாவில் அடிமைவிலங்கு அறுபட்டமை சுட்டப்படல்.
11	'விஷ மந்திரம்'	ஒத்துழையாமை இயக்கம் சுட்டப்படல்.	—	—	—	வங்காளப் பிரிவினை சுட்டப்படல்.
12	'புதிய நந்தன்'	—	1930-இயக்கத்தின் போது கோட்டாட்சியர் பதவியை விட்டு விட்டுத் தடியடி, சிறை வாழ்வு பெறல் சுட்டப்படல்.	அரிசன நிதி திரட்டக் காந்தியடிகள் தமிழகம் வருவது இடம் பெறல்.	—	—

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

எண்.	கதைகள்	1919-20, 21	1930-31,32	1934	1940-41,42	1947-48
13	'ஒரு துளி'	—	உப்புச் சத்தியாக்கிரகத்தின் போது அடிபட்டமை சுட்டப் படல்.	—	1942 ஆகஸ்ட் போராட்டத்தில் கலந்து கொள்ள இருப்பது சுட்டப் படல்-காந்தியடிகளைஆகாகான் மாளிகையில் சிறை வைத்தமை இடம் பெறல்.	—
14	'ஸ்ரீகாந்தன் புனர் ஜன்மம்'	—	1931-இல் தமிழ்நாட்டில் திருமாண வேலைகள் நடைபெறுவது இடம்பெறல்-2-வது வட்ட மேசை மகா நாட்டுக்குப் போய்வந்த பின் காந்தியடிகள் சிறையில் இருந்தமை இடம் பெறல்	—	—	—

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

எண்	கதைகள்	1919-20,21	1930-31,32	1934-	1940-41,42	1947-48
			சத்தியாக்கிரகி 1932—இல் தடியடி, சிறை வாழ்வு பெறுவன இடம் பெறல்.			
15	'யார் தியாகி?'	—	—	—	1942 ஆகஸ்ட் அறப்போரில் மாணவர்கள் ஈடுபட்டமை இடம் பெறல்.	—
16	'சுபத்திரையின் சகோதரன்'	ஒத்துழை- யாமை இயக்கத்தின் போது கல்விச் சாலைப் புறக் கணிப்புச் சுட்டப்படல்.	—	—	—	—
17	'அஞ்சலி'	—	—	—	—	பாகிஸ்தான் பிளவு சுட்டப் படல்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

எண்.	கதைகள்	1919-20, 21	1930-31,32	1934	1940-41, 42	1947-48
18.	'வந்தேமாதரம்'	—	—	—	—	1948-இல் நடந்த இனக் கலவரம் சுட்டப்படல்- காந்தியடி- கள் ஆறுதல் அளித்தமை சுட்டப்படல்
19.	'கிராமராஜ்ஜியம்'	—	—	1934இல்பீகார் நில அதிர்வு நிதி திரட்டக் காந்தியடிகள் வந்தமை சுட்டப்படல்.	1942-இல் சத்தியாக்கிரகி சிறை சென்றமை சுட்டப்படல்.	—
20.	'உண்டி கொடுத்தோர்'	—	—	—	1942-இல் சத்தியாக்கிரகி சிறை சென்றமை சுட்டப்படல்.	—
21.	'அப்பாவின் ராட்டை'	1919 ரௌலட் சட்டம், ஜாலியன் வாலாபாக் கொலை, 1920 ஒத்துழையாமை, 1920 கதர்க்கடை திறப்பு ஆகியன சுட்டப்படல்.	சட்ட மறுப்பு உப்புச் சத்தி யாக்கிரகம் சுட்டப்படல்.	—	1940 தனிநபர் சத்தியாக்கிரகம் சுட்டப்படல்.	—

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

எண்.	கதைகள்	1919-20,21	1930-31,32	1934	1940-41,42	1947-48
22.	'கனவு'	—	—	—	இரண்டாம்உலகப் போர் நடந்த போது இந்திய ஆதரவு மறுப்பு இடம்பெறல்.	—
23	'இன்பத்தீ'	—	—	—	1942-இல் காந்தியடிகளைச் சிறையில் அடைத்த போது ஏற்பட்ட வன்முறை அழிவு நிகழ்ச்சிகள் இடம்பெறல்.	—
24	'சத்யாக்ரகி'	1920 போராட்டம் சுட்டப்படல்	1930-இல் உப்புச் சத்தியாக் கிரகத்தில் எலும்பு முறிய அடி விழுந்தமை சுட்டப்படல்-1930-இல் விடுதலையே இலட்சியம் என்று நடந்த ஊர்வலம் சுட்டப்படல்.	—	1940 போராட்டம் சுட்டப்படல்.	—
25	'பவானி, பி. ஏ, பி.எல்.'	துணிக்கடை மறியலின் போது சிறைக்குச் சென்றமை சுட்டப்படல்.	உப்புச் சத்தியாக் கிரகத்தின் போது மறியலுக்குச் சென்று சிறைப்பட்டமை சுட்டப்படல்.	—	—	—

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

எண்.	கதைகள்	1919-20,21	1930-31, 32,	1934	1940-41, 42	1947-48
26	'சிரஞ்சீவிக் கதை'	—	சென்னையில் நடந்த உப்புச் சத்தியாக்கிரகம் இடம்பெறல்.	—	—	—
27	'மந்திரி சீதாராமய்யர்'	—	1930 விடுதலை இயக்கத்தின் போது சிறை செல்லல் இடம்பெறல்.	—	—	—
28	'அமிஞ்சிக்கரை சோமு'	—	உப்புச் சத்தியாக்கிரகத்தின் போது சிறைப்பட்டமை சுட்டப்படல்.	—	—	—

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

எண்.	கதைகள்	1919-20, 21	1930-31, 32	1934	1940-41, 42	1947-48
29	'உள்ளும் புறமும்'	—	—	—	வெள்ளையனே வெளியேறு இயக்கத்தில் மாணவர் குதித்தமை சுட்டப்படல்.	—
30	'கங்கை எரிகிறது'	—	—	—	1942-இல் காந்தி பக்தர் என்ற காரணத்தால் அடிவிழுந்தமை சுட்டப்படல்.	1948 ஜனவரி 30-இல் காந்தியடிகள் இறப்புச் சுட்டப்படல்.
31	'அநுதாபக் கூட்டம்'	—	உப்புச் சத்தியாக்கிரகம் சுட்டப்படல்.	—	தனிநபர் சத்தியாக்கிரகம், ஆகஸ்ட் போராட்டம் சுட்டப்படல்.	—

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கதைகளினின்றும் காந்தியக் கொள்கைகளுள் சில விடுபட்டமை

காந்தியத் தாக்கம் பெற்ற தமிழ்ச் சிறுகதைகளைப் படைக்க முயன்ற ஆசிரியர்கள் காந்தியக் கொள்கைகளுள் சத்தியம், அகிம்சை, மதுவிலக்கு, புலனடக்கம், வழிபாடு, தீண்டாமை விலக்கு, பெண்கள் நலன், ஒற்றுமை, கிராம முன்னேற்றம், கதர், சுதேசியம், உடலுழைப்பு, சத்தியாக்கிரகம் ஆகியவற்றைக் கருவாக அமைத்துத் தம் கற்பனைத் திறனால் விளக்க முற்பட்டுள்ளனர். காந்தியம் என்பது குறிப்பிட்ட கொள்கையை மட்டும் சுட்டுவதன்று. அது ஒரு வாழ்க்கை முறை. ஆதலால், மேற் குறிப்பிட்ட கொள்கைகளுள் சிலவற்றை விளக்கிச் செல்லும்போதே, மனிதனுக்குரிய பண்புகளாகக் காந்தியம் சுட்டும் அடிப்படையில் அஞ்சாமை, உண்மை, தன்னலமற்ற அன்பு, தூய்மை, தற்கட்டுப் பாடு, உடைமை விலக்கல், சமயங்களை மதித்தல் போன்ற பல்வேறு உயர் பண்புகளையும் தெளிவுறுத்துகின்றனர்.

காந்தியக் கடல் ஆழ்ந்து அகன்றது. தமிழ்ச் சிறுகதை இலக்கியத்தில் மேற்குறிப்பிட்ட காந்தியக் கொள்கைகளும் பண்புகளும் இடம் பெற்றிருப்பினும், காந்தியப் பொருளாதாரத் தின் உயிர் நாடிகளுள் ஒன்றான அறக்காவலர் கோட்பாடும், ஆதாரக் கல்வி, தொழுநோய் துடைப்பு, ஆதிவாசி நலன், மாணவர் நலன் போன்றவையும் கதைகளில் சிறப்பிடம் பெற வில்லை. இவற்றுள் அறக்காவலர் கோட்பாடு, 'காந்தி வந்தார்', 'உள்ளும் புறமும்' ஆகிய கதைகளின் நிகழ்ச்சிகளில் மட்டும் சுட்டப்பட்டுள்ளது. ஆதாரக் கல்விப் பயிற்சி 'அண்ணல் காட்டிய வழி', 'புத்துயிர்' ஆகிய கதைகளிலும், தொழு நோய் துடைப்பு 'அண்ணலே உன் வழி', 'கங்கை எரிகிறது' ஆகிய கதைகளிலும் குறிப்பளவில் சுட்டப்பட்டுள்ளன.

காந்தியத்தில் சிறப்பான இடம்பெறும் மேற்குறிப்பிடப்பட்ட அறக்காவலர் கோட்பாடு, ஆதாரக் கல்வி போன்றவையும் பிறவும் முத்திரையிட்டுத் தெளிவுறும் வண்ணம் கதைகள் இல்லை எனலாம். இந்நிலைக்குரிய காரணங்களை ஆராயுமிடத்துக் கீழ்க் காணும் உண்மைகள் புலனாகும்.

1. விடுதலை இயக்கம், விடுதலை இயக்கத்தோடு இணைந்த அம்சங்களாகிய மதுவிலக்கு, தீண்டாமை விலக்கு,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பெண்கள் நலன் போன்ற இயக்கங்களைப் போல் மேற்குறிப் பிட்ட கொள்கைகள் பெரும் இயக்கங்களாகச் சமுதாயத்தில் உருவாகவில்லை.

2. மேற்குறிப்பிட்ட பொருளாதாரக் கொள்கையை மது விலக்கு, தீண்டாமை விலக்கு ஆகியவற்றைப் போல் எளிய பிரசாரங்களால் மட்டும் ஏற்கச் செய்ய முடியாது.

3. காந்திய ஆதாரக் கல்வி உருவாகத் தொடங்கிய காலத்திருந்தே கல்வி நிறுவனங்களில் பெரிய அளவில் ஏட்டுக் கல்வித் திட்டம் நிலையாகக் கால்கொண்டமை தெளிவு. மக்களரசு ஏற்பட்ட பின்னர் ஏற்படுத்தப்பட்ட ஆதாரக்கல்வி நிலையங்களும் சரியான வழியில் செல்லாமல் அடிப்படைக் கல்வி முறையை நிலை நிறுத்த முடியாமற் போயின. காந்தியடிகள் காட்டிய கல்வி முறை இன்னதெனத் தெளிவாக உணர்ந்தவர் ஒரு சிலரே.

4. தொழுநோய் துடைப்பு, ஆதிவாசிகள் நலன், மாணவர் நலன், போன்றவையும் இன்று சமுதாயத்தில் பெற்றிருக்கும் மதிப்பீட்டைப்போல் காந்தியடிகள் காலத்தே பெறவில்லை. மேலும் இன்று இவைகளுக்கென்று தனி அமைப்புகள், இயக்கங் கள் இருப்பதைப்போல் அன்று பேரளவில் இல்லை என்பதும் தெளிவாகும்.

மேற்கூறிய உண்மைகளை மனத்தில் நிறுத்தி, ஒரு முடிவிற்கு வர இயலும். சமுதாயத்தின் நிலையைப் பிரதிபலிக்கும் கண்ணாடியே இலக்கியம். எந்த ஒரு சிறுகதைப் படைப்பாளியும் சமுதாயத்தில் வெளிப்படையாகத் தெரியக்கூடிய, சமூக மாறுதலுக் குரிய, வாழ்க்கைச் சிக்கல்களுள் மேலோங்கி இருக்கக்கூடிய உறுத்தல்களையே தம் கதைகளில் வடிக்க முன்வருவர். மேற் குறிப்பிட்ட கொள்கைகள் சமுதாயச் சிக்கல்களுள் மேலோங்கிய னவாகத் தோன்றாத காரணத்தால், காந்திவழிக் கதைகள் படைத்த ஆசிரியர்களிடம் தாக்கம் ஏற்படுத்தாத நிலையில் காந்திவழிக் கதைகளில் சிறப்பாக இடம் பெறாமலும், விடுபட்ட நிலையிலும் இருந்துவிட்டன.

காந்தியக் கதைகளில் அதிகமான அளவில் இடம்பெறும் கொள்கைகள்

காந்தியச் செல்வாக்கை உணர்த்தும் மொத்தக் கதைகளில் [126] காந்தியடிகளின் அடிப்படைக் கொள்கைகளுள் ஒன்றான

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'சத்தியம்' பற்றிய கதைகள் எண்ணிக்கையில் அதிகமாக [20] அமைகின்றன. பிற கொள்கைகளுள் 'தீண்டாமை விலக்கு'க் கதைகள் அதிகமான அளவில் [17] இடம் பெறுகின்றன.

வரைபடம்—2



CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

.Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வாழ்க்கையில் உயர்ந்தவை மற்றும் நல்லவை அனைத்தையும் காந்தியக் கொள்கைகளாகக் கொள்ளமுடியும்[10] என்ற கருத்து ஒருபுறம் இருப்பினும், காந்தியடிகள் தம் வாழ்க்கையைச் சத்திய சோதனையாக வைத்துத் தம் வாழ்க்கையின் குறிக்கோளாகச் சத்தியத்தையே கொண்டமையால் சத்தியமும் காந்தியும் ஒரு பொருள் குறிக்கும் இருசொற்கள் ஆகிவிட்டன. அதனால் காந்தியக் கதைகளுள் சத்தியம்பற்றிய கதைகள் எண்ணிக்கையில் அதிகமாக உள்ளன எனலாம்.

சமுதாயச் சீர்திருத்தத்தைப் பொறுத்தவரை, காந்தியடிகள் அதிகமாகக் கவலை கொண்டது தீண்டாமைக்காகவே. அவர் வாழ்க்கையிலும் தீண்டாமை விலக்கிற்கு அதிக இடம் கொடுத்தார். அரிசன நிதிக்காகத் தமிழ் நாட்டுக்கு வருகை தந்தார். அரிசனங்களுக்கு ஆலயங்களைத் திறக்க உதவினார். அவர்தம் இம்முயற்சிகள் தமிழ் நாட்டுச் சிறுகதை ஆசிரியர்களிடம் தாக்கம் ஏற்படுத்தியதன் விளைவாக, அக்கொள்கைபற்றிய கதைகள் அதிகம் உள்ளன எனலாம்.

காந்தியச் செல்வாக்கும் - சில கதைமாந்தரும்

இந்திய இலக்கியங்களில் காந்தியத் தாக்கம் பல்வேறு மட்டங்களில் பல்வேறு விளைவுகளைக் கொணர்ந்தது என்று கூறும் கே.ஆர். சீனிவாச அய்யங்கார், பாத்திரப் படைப்பினைப் பற்றிக் குறிப்பிடும்போது கதை மாந்தர் படைப்பிலும் காந்தியச் செல்வாக்கு, குறிப்பிடத்தக்க அளவு தாக்கத்தை ஏற்படுத்தியது என்கிறார்.[11]

காந்திவழிக் கதைகளில் படைக்கப்பட்ட கதை மாந்தர்கள் பெரும்பாலும் காந்திய நெறியில் நிற்போர், காந்திய நெறிக்குப் புறம்பானவர், காந்திய நெறிக்கு முரணாக இருந்து [இடையிலோ, இறுதியிலோ] மனம் மாறுபவர்கள், காந்தியக் கருத்துகளை மட்டும் குறிப்பிடுபவர் [காந்திய நெறியில் செயற்பட்டவராகவோ புறம்பாகச் செயற்பட்டவராகவோ அமையாதவர்], காந்தி என்ற பெயரில் போலித்தனம் புரிவோர் என்று பல்வேறு வகையினர் முந்தைய இயல்களில் குறிப்பிடப்பட்டுள்ளனர். சில கதைகளில் காந்தியடிகளே பாத்திரமாக வருவதும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவர்களுள் காந்திய நெறிக்கு முரணானவர்தம் செயல்களும் கருத்துகளும் குறிப்பிட்ட காந்தியக் கொள்கையை விளக்கமுறச் செய்வதற்குத் துணையாக விளங்குவதும் முன் இயல்களில்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சுட்டப்பட்டுள்ளது. இவர்கள் தவிர இக்கதைகளில் அமையும் சில மாந்தரிடம், காந்தியத் தாக்கம் எந்த அளவிற்குத் தன் செல்வாக்கை நிறுவியது என்றும், அதன் விளைவாக எந்த அளவிற்கு அவர்களால் எண்ணவும் செயற்படவும் முடிந்தது என்றும் ஒருசேரக் காட்டுவது இவண் நோக்கமாக அமைகிறது.

(1) காந்தியத் தாக்கம் பெற்றுக் காந்தியத்தைப் பின்பற்றுபவர் பலர் கதைகளில் சித்திரிக்கப்பட்டுள்ளனர். காந்தியத்தைப் பின்பற்றுவோருள் சிலர், நடைமுறையில் காந்தியக் கொள்கைகளில் தீண்டாமை விலக்கை ஏற்பவராக இல்லை என்பதைச் சில ஆசிரியர்கள் சுட்டவும் தவறவில்லை. காந்தியடிகளின் சுதேசி நோன்பை மேற்கொள்ளும் ஒருவருக்குத் தீண்டாமை விலக்கு மட்டும் உடன்பாடில்லை ('விஷ மந்திரம்'). அவரைப் போலவே மற்றொருவருக்கு மதுவிலக்கு, சுதேசியம் ஆகியவற்றில் நம்பிக்கை இருந்தும், தீண்டாமை விலக்கில் நம்பிக்கை இல்லை ('குணம்'). நடைமுறையில் காந்தியத்தை ஏற்பவராலும் கூடத் தீண்டாமையில் அழுந்தியிருந்த உணர்வை மாற்ற முடியாத அளவிற்கு, மரபுவழிப்பட்டதாக இக்கொடுமை அமைந்ததைப் புலப்படுத்த இத்தகைய பாத்திரங்களை ஆசிரியர்கள் படைத்துள்ளனர்.

(2) காந்தியப் போராட்டங்களில் கலந்தவர்கள் நடைமுறையில் தம் வாழ்க்கையில் காந்தியத்தைப் பின்பற்றுவதைப் பல கதைகள் சித்திரித்தாலும், ஒரு சிலர் முழுமையாகத் தம் வாழ்க்கையில் செயற்படுத்தாமையும் சுட்டப்பட்டுள்ளது. ஒரு காலத்தில் சமுகச் சீர்திருத்த இயக்கத்தில் கலந்தவர்கள் விதவை மணத்தைத் தம் மக்கட்கு ஏற்கத் தயாராக இல்லை ('கமலாவின் கல்யாணம்', 'சுபத்திரையின் சகோதரன்'). முன்னாளில் காந்தியக் கொள்கைகளைப் புகழ்ந்து பாராட்டியவர் தம் மகன் விதவை மணத்தை ஏற்பதைத் தொடக்கத்தில் எதிர்க்கிறார் ('சோதனை').

ஒத்துழையாமை இயக்கத்தில் கலந்து கொண்ட ஒருவர் தம் குடும்பத் துன்பச் சூழலில் வன்முறைக் கொலைச் செயலை மேற்கொள்கிறார் ('சுபத்திரையின் சகோதரன்'). நிருமாண வேலைத் திட்டத்திலும், மறியல்களிலும் தீவிரமாக இருந்த ஒருவர், காந்தியடிகளால் ஆதரவு நல்கப்பட்ட சாரதா சட்டத்தை ஏமாற்றிப் பதின்மூன்று வயதுள்ள பெண்ணை மணக்கிறார் ('ஸ்ரீகாந்தன் புனர் ஜன்மம்').

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சத்தியப்போர் முனையில் அன்பு விடுதலை கண்ட மகாத்மா என்று காந்தியடிகளைப் போற்றினாலும், தன் தங்கை பிற மதத்தவனை மணப்பதற்கு ஒரு சகோதரனால் உடன்பட முடியவில்லை ('வந்தேமாதரம்'). இத்தகையோர் தம் கொள்கைப் பிறழ்ச்சிக்கும், எண்ணங்களின் முரணுக்கும் ஏதுவாக இருப்பன சூழ்நிலைகள் என்பதும் புலனாகும்.

3) விடுதலை இயக்கத்தில் கலந்து சிறைத்துன்பத்தை ஏற்க வந்த சத்தியாக்கிரகிகளுள் சிலர், சிறை வகுப்பு உயர்வு கிடைத்தமைக்கு வருந்திப் புலம்பச் சிலர் முன்கூட்டியே வகுப்பு உயர்விற்கு ஏற்பாடுகள் செய்தமையும் புலனாகிறது ('மருத நாயகம்'). காந்தியடிகளின் ஆணையின்படி உயிரைத் தியாகம் செய்யப் பலர் சிறைக்கு வரினும், சிலர் சிறைக்குள்ளேயே அவரது அகிம்சையைப் பலவீனரின் ஆயுதம் என்று குறைபட்டுச் சிறைவிதிகளை மீறிக் காந்தியடிகளுக்கு அளித்த உறுதியினின்றும் தளர்ந்து, சிறை அதிகாரிகளிடம் அடிபட்டுச் சத்தியாக்கிரகிகளிடமிருந்து வரக்கூடாத 'ஐயோ' என்ற குரலையும் எழுப்பியுள்ளனர் ('கேள்விக்கு பதில்'). சிறைக்குள் வந்த சத்தியாக்கிரகிகள் மாறியதற்குக் காரணமாயிருந்தவர்கள் சிறையிலிருந்த முத்திரை போடப்படாத சத்தியாக்கிரகிகள் என்பதையும் கதை உணர்த்துகிறது.

4) இலட்சியத்திற்காகத் துன்பம் ஏற்கச் சிறைக்கு வந்திருக்கும் கைதிகளுள் பலர் கொள்கைப் பிடிப்பில் இருப்பதாகச் சித்திரிக்கப்பட்டிருப்பினும், சிலர் மனைவி மக்களை முழுமையாக ஒதுக்கிவிட்டு வாழ்க்கையைத் தியாகம் செய்யும் பக்குவம் பெறவில்லை என்பதும் தெளிவாகிறது ('கனவு').

5) காந்தியடிகளை ஒவ்வொரு முறையிலும் பின்பற்ற விரும்புவதாகக் கூறுபவரால், காந்தியடிகளைப் போல் சத்தியத்தை வெளிப்படையாகக் காட்ட முடியவில்லை. அதற்குக் காரணம் அத்தகையோர் தவறான வழியைப் பிடித்துக் கொண்டு தடுமாறுவதாகும் என்பதும் புலனாகிறது ('இதயகீதம்').

(6) விடுதலைப் போராட்டத்தின் போது அந்நிய அரசின் கெடுபிடி உச்ச நிலையிலிருந்தாலும், சத்தியாக்கிரகிகளின் மனந்தளரா உறுதியைக் கண்டு மனம் நெகிழ்ச்சியடைந்த அரசு அதிகாரிகளையும் ('இராவணாகாரம்', 'சிப்பாய் இதயம்'),

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சத்தியாக்கிரகியின்பால் அன்பு காட்டி அவர்தம் உறவினரைக் காண உதவிய அரசு அதிகாரியையும் ('கந்தசாமி') சில ஆசிரியர்கள் படைத்துள்ளனர்.

(7) காந்தியடிகள் நடத்திய சத்தியாக்கிரகத்தைப்போல் தாமும் நடத்துவதாக நினைத்து உரிமைகளைப் பெற வேலை நிறுத்தம் மேற்கொண்டு, சத்தியாக்கிரகத்திற்கு மாறான நிலையில் எதிர் தரப்பினரைத் தடுத்தும், காவல் அதிகாரியால் துன்புறுத்தப்பட்டபோது 'ஐயோ' என்று அலறியும் விழுகிறான் ஒரு கதைமாந்தன் ('இழி தொழில்'). சமுதாயத்தில் சத்தியாக்கிரகம் என்ற பெயரில் இத்தகையான போராட்டம் நடைபெறுவதைச் சுட்டிக் காட்ட ஆசிரியர் விரும்புவதாக இருப்பின், நடப்பியலில் சத்தியாக்கிரகத்தின் தகுதியை முழுமையாகப் பெறாதவர் பட்டியலில் இம்மாந்தரைச் சேர்க்கலாம்.

8) காந்தியத்தைப் பல தடைகளுக்கிடையில் நடைமுறைப் படுத்தும் கதை மாந்தர் ஒருபுறம் அமைய, அவரைப் போல் முழுமையாகக் காந்தியத்தில் தோய்ந்து விடாமல் மனதிற்குள் காந்தியடிகளின் கொள்கைகளை ஆதரிக்கின்ற மாந்தரும் உளர் ('ஒருதுளி').

9) முன்னாளில் சத்தியாக்கிரகப் போராட்டங்களில் கலந்து போராடிப் பின்னாளில் காந்தியடிகளின் பெயரில் பொருளீட்டிப் போலி வாழ்வு வாழ்வோருள்ளும், தம் தவறுகள் இதயத்தின் அடியைக் கிளறுவதால் கிளம்பும் குற்ற உணர்வில் சிலர் நிம்மதியற்று இருக்கின்றார்கள் ('உள்ளும் புறமும்'). இத்தகைய கதைமாந்தர் ஒவ்வொரு கோணத்திலும் காந்தியடிகளின் உயர்ந்த பண்பையும், தமது இழிந்த நிலையையும் ஒப்பிட்டு உள்முக ஆராய்ச்சி செய்து தவிப்பதற்குக் காரணம் முன்னாளில் காந்தியத் தாக்கத்தின் விளைவாக அவர்தம் உள்ளத்தின் அடிமனத்தில் சத்திய உணர்வு விதைக்கப்பட்டதே என்பது புலனாகும்.

10) குடி ஒழிப்பிற்கு முயற்சி செய்த காந்தியடிகளை வாழ்த்திக் கொண்டே தன்னால் குடிப்பேயை விட முடியாததற்கு நொந்து புலம்புகிறான் ஒரு குடியன் ('குப்பன்'). குடிகாரனிடம் அமையும் காந்தியத் தாக்கம், குடி நீக்கக்கூடிய ஒன்று என்பதை உணரச் செய்கிறது.

11) வாழ்க்கையில் எல்லா விருப்பங்களும், பலவீனங்களும் உள்ள மிகச் சாதாரண மனிதரையும் காந்தியம் ஒரு சில வழி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

களில் ஈர்த்தனம ('காந்தி வந்தார்') ஒரு பாத்திரத்தின் வழி உணர்த்தப்படுகிறது. அப்பாத்திரம், காந்திவழிப்படி நூற்றுக்குத் தொண்ணூற்றொன்பது சதவீதம் நடக்காவிடினும், உழைப்பால் பிறரைக் கெடுக்காமல் நேரிய வழியில் பொருளீட்டுவதில் காந்தியடிகளை நம்பியதும் சுட்டப்படுகிறது.

(12) வருடம் முழுவதும் பணம், சம்பாத்தியம், தொழில், ஆளைக் கவிழ்ப்பது என்ற வாழ்க்கை அமைப்பிற்கிடையே இரண்டொரு நாள் சர்வோதய தினவிழா போன்றவற்றில் வாழ்க்கையைத் திருப்பினால் அப்போது கிடைக்கும் மன அமைதியில் மற்ற நாட்களை ஓட்டலாமே என்று எண்ணுமாறு செல்வ வணிகரையும் ('சாந்தி பிறந்தநாள்') காந்தியச் செல்வாக்கு ஆட்கொள்கிறது.

(13) 1942-இல் காந்தியடிகளை முன்னறிவிப்பின்றிக் கைது செய்து சிறையில் வைத்தபோது, நாட்டில் ஏற்பட்ட கொந்தளிப்பில், விடுதலை இயக்கத்தில் காந்தியடிகளின் ஆணையின்படி செயற்பட்டோருள் சிலர், வன்முறையிலும் ஈடுபட்டனர் ('இன்பத்தீ').

(14) சிறுவயதில் காந்தி ஊர்வலத்தில் கலந்தவன் அரசுப் பணியாளனாக இருந்த சூழலிலும் காந்தியப் போராட்டத்திற்கு உள்ளூர ஆதரவு தருகின்றான் ('வந்தேமாதரம்' [சி.சு. செல்லப்பா]).

கிராமச்சூழற் பின்னணி

காந்தியடிகள் காண விழைந்த சர்வோதய சமுதாயத்தில் கிராமமே அடிப்படை அலகாகும். இந்தியாவின் இதயமே கிராமம் என்று குறிப்பிடும் அவர், கிராமங்கள் புத்துயிர் பெறின் மக்கட் சமுதாயம் வாழ்வாங்கு வாழ இயலும் என்று அறுதியிட்டுக் கூறுகிறார். காந்தியடிகளின் உயிர்நாடி கிராமம் என்பதை உணர்ந்த ஆசிரியர்கள் காந்திவழிக் கதைகளுள், சமுதாய முன்னேற்றத்திற்கு வழிகாண உதவும் மதுவிலக்கு, தீண்டாமை விலக்கு, பெண்டிர் நலன், ஒற்றுமை, கிராம முன்னேற்றம் ஆகிய காந்தியக் கொள்கைகளைக் கொண்டிருக்கும் பெரும்பாலான கதைகளில்[12] நகரச் சூழலினும் கிராமச் சூழலை நிலைக்களனாக அமைத்துள்ளனர்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

குறிப்புகள் :

1 வரதராசன், மு., **இலக்கிய மரபு**, ப. 111.

2 செல்லப்பா, சி.சு., **சத்யாக்ரகி**, முன்னுரை, ப. 8.

3 கதரினால் ஏற்படும் தாக்கம் 'சத்தியத்தின் சின்னம்' என்ற கதையிலும், நூலினால் ஏற்படும் தாக்கம் 'அண்ணலே உன் வழி', 'கங்கை எரிகிறது' ஆகிய கதைகளிலும் உணர்த்தப் படுகின்றன.

4 Quoted by Gandhi, Madan, G., *Gandhian Aesthetics*, P. 71

5 காந்தி மகாத்மா, **சத்திய சோதனை**, வேங்கடராஜுலு, ரா., (மொ.பெ.ஆ.), முன்னுரை, ப. VI.

6 Bhabani Bhattacharya, *Gandhi—The Writer*, P. 162.

7 குறிப்பிடத்தக்க காந்திய வரலாற்றுப் பின்னணியைக் கொண்டுள்ள கதைகளுள் கல்கியின் கதைகள் ஏழு. சி.சு. செல்லப்பாவின் கதைகள் ஐந்து.

8 இராமசாமி, அ., **தமிழ்நாட்டில் காந்தி**, ப. 954.

9 **மேலது**, ஆசிரியரின் தோற்றுவாய், ப. XI.

10 Sudarshan Sharma, *The Influence of Gandhian Ideology on Indo-Anglian Fiction*, Preface.

11 Srinivasa Iyengar, K.R., *Indian Writing in English*, P. 227.

12 மொத்தம் 54 கதைகளில் கிராமப்பின்னணி 24 கதைகளிலும் நகரப்பின்னணி 9 கதைகளிலும் சுட்டப்படுகின்றன.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பின்னிணைப்பு-1

பிற கதை நூல்களின் பட்டியல்

	ஆசிரியரும் நூல்களும்	வெளியீடு			கதைகளின் மொத்த எண்ணிக்கை
1.	அகிலன்				
	அமராவதிக் கரையில்	சென்னை, பாரி புத்தகப் பண்ணை (வி.உ.),		1966	7
	ஆண் — பெண்	,,	,,	,,	8
	எரிமலை	,,	,,	1970	9
	ஒரு வேளைச் சோறு	,,	,,	1977	12
	குழந்தை சிரித்தது	,,	,,	1965	13
	சகோதரர் அன்றோ	,,	,,	1977	13
	சக்திவேல்	,,	,,	1965	22
	செங்கரும்பு	,,	,,	1965	7
	நிலவினிலே	,,	,,	1966	14
	நெல்லூர் அரிசி	,,	,,	1978	15
	பசியும் ருசியும்	,,	,,	1982	11
	மின்னுவ தெல்லாம்	,,	,,	1966	8
	வழி பிறந்தது	,,	,,	1965	12

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஆசிரியரும் நூல்களும்	வெளியீடு		கதைகளின் மொத்த எண்ணிக்கை
சத்திய ஆவேசம்	சென்னை, பாரி புத்தகப்பண்ணை (வி.உ.),	1974	13
சாந்தி	புதுக்கோட்டை, பழனி பிரசுரம்,	1952	4
2. **ஆறுமுகம், பூவை. எஸ்.**			
அமிர்தம்	அழகு பதிப்பகம்	1951	10
அரண்மனைக் கோழி முட்டை	குறிப்பிடப்படவில்லை		12
ஆலமரத்துப் பைங்கிளி	சென்னை, பூம்புகார் பதிப்பகம்	1964	17
காதல் மாயை	பெண்ணாடம், புதுமைப் பிரசுரம்	1952	7
பூவையின் கதைகள்	காரைக்குடி, அழகு பதிப்பகம்	1962	14
திருமதி சிற்றம்பலம்	சென்னை, சேகர் பதிப்பகம்	1966	14
3. **உமா குருமூர்த்தி**			
வாழ்வுச் சுடர்	திருச்சி, பழனியப்பா பிரதர்ஸ்.	1964	11
4. **எல்லார்வி**			
அம்பாள் காலனி மர்மம்	சென்னை, காளி நிலையம்	1964	10
ஆசைமுகம்	சென்னை, அமுத நிலையம் லிட்.	1951	5
காஞ்சனையின் கண்கள்	,, ,,	1970	13
கோமதியின்ஆசை	சென்னை, வானதி பதிப்பகம்	1961	13
நாக சுந்தரி	சென்னை, குரு பப்ளிக்கேஷன்ஸ்	1964	7

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

	ஆசிரியரும் நூல்களும்	வெளியீடு		கதைகளின் மொத்த எண்ணிக்கை
	புதுமலர்	சென்னை, காளி நிலையம்	1964	4
	புதுவாழ்வு	சிதம்பரம், மணிவாசகர் நூலகம்	1966	10
	பொங்கிய பால்	சென்னை, அல்லையன்ஸ் கம்பெனி	1967	11
	மங்கல தீபம்	சென்னை, இளங்கோ பதிப்பகம்	1972	12
	மணி ஓசை	சென்னை, அல்லையன்ஸ் கம்பெனி	1956	12
5.	**கல்கி**			
	அமர வாழ்வு	சென்னை, பாரதி பதிப்பகம்	1963	5
	இழந்த கோட்டை	,, ,,	1954	6
	ஒற்றை ரோசா	,, ,,	1952	4
	சாரதையின் தந்திரம்	சென்னை, வானதி பதிப்பகம்	1978	10
	பாங்கர் விநாயக ராவ்,	சென்னை, பாரதி பதிப்பகம்	1980	7
	மயில்விழிமான்	சென்னை, மங்கள நூலகம்,	1962	3
	மாடத்தேவன் சுனை,	சென்னை, பாரதி பதிப்பகம்	1957	4
	வீணைபவானி	,, ,,	1965	9
	ஸ்வப்பன லோகம்	சென்னை, மங்கள நூலகம்	1968	4
	கணையாழியின் கனவு	சென்னை, ஐயம் கம்பெனியார்	1974	14
6.	**குமார ஸ்வாமி, த. நா.**			
	குழலோசை	குறிப்பிடப்படவில்லை	—	7

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஆசிரியரும் நூல்களும்	வெளியீடு		கதைகளின் மொத்த எண்ணிக்கை
7. **கோமகள்**			
இணையொன்று சேர்ந்தால்	சென்னை, பாரி புத்தக நிலையம்	1972	15
ஆறறிவின் திகைப்பு	,, ,,	1969	15
மனச் சந்நிதி	,, ,,	1969	13
8. **கோமதி சுப்பிரமணியம்**			
அறிவுக்கு அப்பால்	சென்னை, அல்லையன்ஸ் கம்பெனி	1963	12
9. **கோவி. மணிசேகரன்**			
இதயங்கள்	சேலம், பசவேஸ்வரா பிரசுரம்	1963	15
இரவின் இளநகை	சென்னை, கணேச நிலையம்,	1965	6
உயிரும் ஒளியும்	சென்னை, வள்ளுவர் பண்ணை	1964	15
கல்லுளி மங்கன்	சேலம், பசவேஸ்வரா பிரசுரம்	1963	8
கோவியின் கதைகள்	சென்னை, கோவியின் வெள்ளிவிழா வெளியீடு	1973	25
சிறுகதைச் செல்வம்	சென்னை, ஸ்டார் பிரசுரம்	1970	11
தாயும் சேயும்	சென்னை, முத்து நூலகம்	1956	8
பூந்தாது	சென்னை, வள்ளுவர் பண்ணை	1961	7

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஆசிரியரும் நூல்களும்	வெளியீடு		கதைகளின் மொத்த எண்ணிக்கை
மனிதன்	கோயமுத்தூர், பசவேஸ்வரா பிரசுரம்	1961	15
மேவார் ராணா	சென்னை, உமா பதிப்பகம்,	1966	14
ரிக்ஷா	வளவனூர், முத்து பதிப்பகம்,	1978	17
வாழ்வின் விளக்குகள்	சென்னை, மதுர நிலையம்,	1960	7
10. **சிதம்பர ரகுநாதன்**			
கதைக் கோவை, தொகுதி 4.	சென்னை, அல்லையன்ஸ் கம்பெனி	1945	1
11. **சுகி சுப்பிரமணியம்**			
பூச்சரம்	புதுக்கோட்டை, பழனி பிரசுரம்	1951	9
புது நிழல்	சென்னை, வாசு பிரசுரம்	1972	8
12. **சுப்பையா, வி.எஸ்.**			
பேரும் புகழும்	சென்னை, ஸ்டார் பிரசுரம்	1958	11
13. **சூடாமணி, ஆர்.**			
அந்த நேரம்	சென்னை, மல்லிகைப் பதிப்பகம்	1969	17
அவன் வடிவம்	சென்னை, அன்னை நிலையம்	1965	10
இழந்த மகுடம்	சென்னை, மல்லிகைப் பதிப்பகம்	1973	18
உயர்வு உள்ளத்திலே	நாகப்பட்டினம், இமயப் பதிப்பகம்	1967	6

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஆசிரியரும் நூல்களும்	வெளியீடு		கதைகளின் மொத்த எண்ணிக்கை
உலகத்தினிடம் என்ன பயம்?	நாகப்பட்டினம், இமயப் பதிப்பகம்	1978	14
ஒளியின் முன்	சென்னை, பாரி நிலையம்	1957	14
என்ன மாயமோ?	சென்னை, மல்லிகைப் பதிப்பகம்	1965	12
ஓர் இந்தியன் இறக்கிறான்,	நாகப்பட்டினம், இமயப் பதிப்பகம்	1975	13
படிகள்	சென்னை, ராதா பதிப்பகம்	1965	11
பணம் பறித்த செல்வம்,	சென்னை, அருணா பப்ளிகேஷன்ஸ்	1965	17
பிஞ்சு முகம்	சென்னை, கலைஞன் பதிப்பகம்	1964	9
14. செல்லப்பா, சி.சு.			
கைதியின் கர்வம்	சென்னை, எழுத்து பிரசுரம்	1977	5
சத்யாக்ரகி	,, ,,	1964	11
சரஸாவின் பொம்மை	சென்னை, கலைமகள் காரியாலயம்	1942	17
செல்லப்பா சிறுகதைகள்			
தொகுதி 1.	சென்னை, எழுத்து பிரசுரம்	1977	11
தொகுதி 2.	,, ,,	1977	9
தொகுதி 4.	,, ,,	1977	7
தொகுதி 5.	,, ,,	1977	8
தொகுதி 6.	,, ,,	1977	6
தொகுதி 7.	,, ,,	1977	5

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஆசிரியரும் நூல்களும்	வெளியீடு		கதைகளின் மொத்த எண்ணிக்கை
நீர்க்குமிழி	சென்னை, எழுத்து பிரசுரம்	1977	10
பந்தயம்	,, ,,	1977	6
பழக்க வாசனை	,, ,,	1977	6
15. **சேது அம்மாள், கு.ப.**			
உயிரின் அழைப்பு	சென்னை, சாரதி பதிப்பகம்	1966	11
தெய்வத்தின் பரிசு	சென்னை, வானதி பதிப்பகம்	1965	12
16. **தூரன், பெ.**			
காளிங்கராயன் கொடை,	சென்னை, அமுத நிலையம்	1956	9
தங்கச் சங்கிலி	சென்னை, இன்ப நிலையம்	1956	14
பிள்ளை வரம்	சென்னை, பாரி நிலையம்	1964	19
மாவிளக்கு	சென்னை, இன்ப நிலையம்	1963	13
17. **நாரணதுரைக்கண்ணன்**			
அழகாம்பிகை	சென்னை, ஜீவோதயப் பிரசுரம்	1949	7
பார்வதி	சென்னை, அருணோதய வெளியீடு	1950	8
மேனகா	,, ,,	1955	5
18. **பார்த்தசாரதி, நா.**			
கங்கை இன்னும் வற்றிவிட-வில்லை	சென்னை, தமிழ்ப் புத்தகாலயம்	1968	5

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஆசிரியரும் நூல்களும்	வெளியீடு		கதைகளின் மொத்த எண்ணிக்கை
புதிய பாலம்	சென்னை, தமிழ்ப் புத்தகாலயம்	1967	13
மங்கியதோர் நிலவினிலே	சென்னை, வள்ளுவர் பண்ணை	1963	13
தேவதைகளும் சொற்களும்	கோவை, நவ பாரதி பிரசுரம்	1969	9
பிரதிபிம்பம்	சென்னை, தமிழ்ப் புத்தகாலயம்	1978	14
வேனில் மலர்கள்	,, ,,	1976	11
வலம்புரிச்சங்கு	,, ,,	1969	11
19. **புதுமைப்பித்தன்**			
புதுமைப்பித்தன் சிறுகதைகள்	சென்னை, ஸ்டார் பிரசுரம்	1963	25
20. **மஹி**			
உயிர்ச்சிலை	சென்னை, அமுத நிலையம்	1971	10
ஜாலக்கடல்	,, ,,	1967	11
21. **மாயாவி**			
அகதி	பெண்ணாடம், புதுமைப் பிரசுரம்	1951	10
கடல் கன்னிகை	சென்னை, வானதி பதிப்பகம்	1961	10
சூறாவளி	சென்னை, அமுத நிலையம்	1952	8
தங்கம்	சென்னை, குயிலன் பதிப்பகம்	1967	7

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஆசிரியரும் நூல்களும்	வெளியீடு		கதைகளின் மொத்த எண்ணிக்கை
22. **ரங்கராஜன், ரா.கி.**			
பல்லக்கு	சென்னை, கலைமகள் காரியாலயம்	1959	20
23. **ராமமூர்த்தி, து.**			
கதைக்கோவை, தொகுதி 2.	சென்னை, அல்லையன்ஸ் கம்பெனி	1942	4
24. **ராமையா, பி.எஸ்.**			
குங்குமப்பொட்டு குமாரசாமிக் கதைகள்	சென்னை, மணிக்கொடி பண்ணை	1963	10
ஞானோதயம்	சென்னை, அமுத நிலையம்	1954	7
பாக்கியத்தின் பாக்யம்	சென்னை, அல்லையன்ஸ் கம்பெனி	1957	6
புதுமைக் கோயில்	சென்னை, மலர் நிலையம்	1954	11
பூவும் பொன்னும்	,, ,,	1955	7
மலரும் மணமும்	சென்னை, தமிழ்ச்சுடர் நிலையம்	1955	16
25. **ராஜாஜி**			
கற்பனைக் காடு	சென்னை, பாரதி பதிப்பகம்	1960	62
பாற்கடல்	,, ,,	1960	16
ராஜாஜி கதைகள்	,, ,,	1959	16

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஆசிரியரும் நூல்களும்	வெளியீடு		கதைகளின் மொத்த எண்ணிக்கை
26. **ராஜம், தி.சா.**			
ஒளி விளக்கு	சென்னை, கலைஞன் பதிப்பகம்	1971	10
காட்டு நிலா	,, ,,	1968	14
27. **ரெங்க நாயகி, எஸ்.**			
இதயகீதம்	சென்னை அருணோதயம்	1971	13
நேர்மை பேசுகிறது	,, ,,	1969	12
28. **விந்தன்**			
எங்கள் ஏகாம்பரம்	சென்னை, பாரதி பதிப்பகம்	1965	11
ஏமாந்துதான் கொடுப்பீர்களா?	சென்னை, புதுமைப் பிரசுரம்	1963	14
முல்லைக் கொடியாள்	சென்னை, பாரி நிலையம்	1960	25
விந்தன் சிறுகதைகள்	சென்னை, வெளியீடு குறிப்பிடப் படவில்லை	—	15
29. **ஜயலக்ஷ்மி, கே. (மகேசுவரி)**			
அருள்	சென்னை, லக்ஷ்மி பிரசுரம்	1968	15
சிந்தனைக் கதைகள்	,, ,,	1968	8
சான்றோர் சென்றவழி	,, ,,	1968	15
பாதம் கொப்பளித்தது	,, ,,	1968	11
30. **ஸரோஜா ராமமூர்த்தி**			
நவராத்திரிப் பரிசு	சென்னை, கலைமகள் காரியாலயம்	1947	22
நினைவிலே நடந்து	சேலம், பசவேஸ்வர பிரசுரம்	1964	6

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பின்னிணைப்பு-2
துணை நூற்பட்டியல்

அகிலன், **கதைக்கலை**, சென்னை: பாரி புத்தகப் பண்ணை, (வி.உ.), 1972.

அகிலன், & ராஜதுரை, ரா., (ப.ஆ.), **வளரும் தமிழ் இலக்கியம்**, சென்னை: கிறிஸ்தவ இலக்கிய சங்கம், 1970.

அப்துல் ரசாக், அ., **அகிம்சை**, மதுரை: தமிழ்நாடு காந்தி நினைவு நிதி, 1975.

அய்யாமுத்து, அ. கோவை, **எனது நினைவுகள்**, சென்னை: வானதி பதிப்பகம், 1973.

அருணாசலம், க., **காந்தி சிந்தனைகள்**, மதுரை: தமிழ் நாடு காந்தி நினைவு நிதி, 1981.

அருணாசலம். க., (ப.ஆ.), **வள்ளலார் வாழ்வும் தத்துவமும்**, மதுரை : சர்வோதய இலக்கியப் பண்ணை, 1980.

அருணாசலம், க., **காந்திக்கு முந்திய புரட்சிகள்**, மதுரை: தமிழ்நாடு காந்தி நினைவு நிதி, 1968.

அருணாசலம், க., & செயப்பிரகாசம், ச., (ப.ஆ.), **காந்தியப் பொருளாதாரம்**, மதுரை: சர்வோதய இலக்கியப் பண்ணை, 1981.

அகுலுவாலியா, பி.கே., **காந்தியடிகள் பல கோணங்களில்**, முத்தையா, நாக., & விசுவநாதன், தி.ரா., (மொ.பெ.ஆ.), சென்னை: இலக்கியப் பண்ணை, 1969.

அவினாசிலிங்கம், தி.சு., **நான் கண்ட மகாத்மா**, கோயமுத்தூர்: ஸ்ரீராம கிருஷ்ண மிஷன் வித்யாலயம், 1962.

ஆச்சார்யா ராமமூர்த்தி, **கிராமந்தோறும் சுயராஜ்யம்**, துரைராஜ், சி., (மொ.பெ.ஆ.), மதுரை: தமிழ்நாடு காந்தி நினைவு நிதி, 1970.

இராதாகிருஷ்ணன், வி.ஆர்., (தொ.ஆ.), **தமிழகத் தலைநகரில் காந்திஜி**, சென்னை: வானதி பதிப்பகம், 1969.

இராதாகிருஷ்ணன், வி.ஆர்., **காந்திஜியும் சர்தார்படேலும்**, சென்னை: மகாத்மா காந்தி நூற்றாண்டுவிழா வெளியீடு, 1969.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இராமச்சந்திரன், வெ., (தொ.ஆ.), **காந்தியப் பொருளாதாரம் என்பது**, திருப்பூர்: தமிழ்நாடு சர்வோதய சங்கம், 1981.

இராமசாமி அ., **தமிழ்நாட்டில் காந்தி**, சென்னை: காந்தி நூல் வெளியீட்டுக் கழகம், 1969.

இராமலிங்கம், மா., **அகிலனின் கலையும் கருத்தும்**, சென்னை: தமிழ்ப் புத்தகாலயம், 1974.

இராமலிங்கம், மா., **விடுதலைக்குமுன் புதிய தமிழ்ச் சிறுகதைகள்**, சென்னை: தமிழ்ப் புத்தகாலயம், 1977.

உதய சங்கர், த. அர., கந்தசாமி, க. ரா., (தொ.ஆ.), **மதுவிலக்கு**, மதுரை: தமிழ்நாடு காந்தி நினைவுநிதி, 1969.

கந்தசாமி, சோ.ந., **பௌத்தம்**, சென்னை: சென்னைப் பல்கலைக் கழகம், 1977.

கலியாணசுந்தரனார், திரு.வி., **பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கைத் துணை**, சென்னை: பூம்புகார் பிரசுரம், 1982.

கலியாணசுந்தரனார், திரு.வி., **மனித வாழ்க்கையும் காந்தியடிகளும்**, சென்னை: அரசி புக் டிப்போ, 1969.

கல்கி, **மாந்தருக்குள் ஒரு தெய்வம் — முதற்பாகம்**, சென்னை: மங்கள நூலகம், 1955.

கல்கி, **மாந்தருக்குள் ஒரு தெய்வம்—இரண்டாம் பாகம்**, சென்னை: மங்கள நூலகம், 1956.

கல்யாணராமன், கே.ஆர்., (தொ.ஆ.), **காந்திவழிக் கதைகள்**, மதுரை: தமிழ்நாடு காந்தி நினைவு நிதி, 1969.

காகா காலேல்கர், **காந்திக் காட்சிகள்**, மதுரை: தமிழ்நாடு காந்தி நினைவு நிதி, 1974.

குருசாமி, மா.பா., **காந்தியப் பொருளாதாரம்**, மதுரை: தமிழ்நாடு காந்தி நினைவு நிதி, 1976.

குருசாமி, மா.பா., **சர்வோதயம்**, மதுரை: தமிழ்நாடு காந்தி நினைவு நிதி, 1975.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சண்முகசுந்தரம், மு., **காந்தியின் வாழ்க்கையிலே**, சென்னை: வள்ளுவர் பண்ணை, 1969.

சம்பந்தம், **வாழ்விக்க வந்த காந்தி மகாத்மா**, சென்னை: வானதி பதிப்பகம், 1981.

சாலை இளந்திரையன், **சிறுகதைச் செல்வம்**, சென்னை: தமிழ்ப் புத்தகாலயம், 1966.

சிவஞானம், ம.பொ., **காந்தியம் என்றால் என்ன?**, சென்னை: பூங்கொடி பதிப்பகம், 1970.

சிவஞானம், ம.பொ., **வள்ளலாரும் காந்தியடிகளும்**, சென்னை: இன்ப நிலையம், 1977.

சிவத்தம்பி, கா., **தமிழில் சிறுகதையின் தோற்றமும் வளர்ச்சியும்**, சென்னை: பாரி நிலையம், (வி.உ.), 1967.

சுப்பிரமணியன், ச. வே., **காந்தி கண்ட மனிதன்**, திருவனந்தபுரம்: பார்வதி அம்மாள் வெளியீடு, 1970.

செல்லப்பா, சி. சு., **தமிழ்ச் சிறுகதை பிறக்கிறது**, சென்னை: எழுத்து பிரசுரம், 1974.

செல்வராஜ், வீ., **நேசத் தந்தை காந்தி**, மதுரை : தமிழ் நாடு காந்தி நினைவு நிதி, 1981.

சேஷாத்திரி, தி., **அஹிம்சை, அர்த்தமும் ஆற்றலும்**, மதுரை: தமிழ்நாடு காந்தி நினைவு நிதி, 1968.

தண்டாயுதம், இரா., **தமிழ்ச் சிறுகதை முன்னோடிகள்**, சென்னை: தமிழ்ப் புத்தகாலயம், 1975.

திரவியம், கா., **தேசியம் வளர்த்த தமிழ்**, சென்னை: பழநியப்பா பிரதர்ஸ், 1974.

திருகூடசுந்தரம், பொ., **பாபுஜி காட்டும் பாதை**, சென்னை: திரு பாபுஜி பதிப்பகம், 1966.

திருமலை, டி.டி., **காந்தி**, மதுரை: தமிழ்நாடு காந்தி நினைவு நிதி, 1973.

துரைசாமி, ஹெச்., **காந்தியுகம்**, மதுரை: தமிழ்நாடு காந்தி நினைவு நிதி, 1973.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தேபர், யு.என்., **காந்தியச் சொற்பொழிவுகள்**, அண்ணாமலை நகர்: அண்ணாமலை பல்கலைக்கழகம். (ஆண்டு குறிப்பிடப்படவில்லை.)

நாகலிங்கம், சா., **காந்தி ஒரு சமூக விஞ்ஞானி**, மதுரை: தமிழ்நாடு காந்தி நினைவு நிதி, 1968.

பாண்டியன், ச., **அறக்காவல் நெறி**, மதுரை: தமிழ்நாடு காந்தி நினைவு நிதி, 1969.

பிபின் சந்த்ரா, அமலேஷ் திரிபாதி & பாருன்டே, **சுதந்திரப் போராட்டம்**, திரவியம், கா., (மொ.பெ.ஆ.), புதுடில்லி: நேஷனல் புக் டிரஸ்ட், இந்தியா, 1973.

பிரான்ஸிஸ் வாட்சன் & மாலிஸ் பிரௌன், **காந்திஜி ஒரு சொற்சித்திரம்**, ஜானகி, பி.வி., (மொ.பெ.ஆ.), வேதாரண்யம்: கஸ்தூரிபா காந்தி கன்யா குருகுலம், 1983.

மகாத்மாகாந்தி, **அனாஸக்தி யோகம்**, சந்தானம். க., (மொ.பெ.ஆ.), தஞ்சை: சர்வோதயப்பிரசுராலயம், 1972.

மகாத்மா காந்தி, **இந்திய சுயராஜ்யம்**, நெல்லையப்பா, பரலி, சு., (மொ.பெ.ஆ.), சென்னை: சக்தி காரியாலயம், 1976.

மகாத்மா காந்தி, **இந்து-முஸ்லீம் பிரச்னை**, காரைக்குடி: தினமணி, 1947.

மகாத்மா காந்தி, **கர்ப்பத்தடையா? பிரமசரியமா?**, (மொ.பெ.ஆ. பெயர்தெரியவில்லை), தஞ்சாவூர்: சர்வோதயப் பிரசுராலயம், 1968.

மகாத்மா காந்தி, **சத்தியாக்கிரகம்**, இராமசாமி, அ., (மொ.பெ.ஆ.), மதுரை: தமிழ்நாடு காந்தி நினைவு நிதி, 1956.

மகாத்மா காந்தி, **சத்திய சோதனை**, வேங்கடராஜுலு, ரா., (மொ.பெ.ஆ.), மதுரை: தமிழ்நாடுகாந்தி நினைவுநிதி, 1975.

மகாத்மா காந்தி, **சத்தியமும் கடவுளும்**, பிரிஜ் கிருஷ்ண சாந்திவாலா, (தொ.ஆ.), இராமசாமி, அ., (மொ.பெ.ஆ.), மதுரை: தமிழ்நாடு காந்தி நினைவு நிதி, 1973.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மகாத்மா காந்தி, **சமூகத்தில் பெண்கள்**, மதுரை: தமிழ் நாடு காந்தி நினைவு நிதி, 1974.

மகாத்மா காந்தி, **தீண்டாமை ஒழிப்பு**, உதய சங்கர், த.அர., & கந்தசாமி, க.ரா.,(தொ.ஆ.), மதுரை: தமிழ்நாடு காந்தி நினைவு நிதி, 1969.

மகாத்மா காந்தி, **பதினொரு மகா விரதங்கள்**, மதுரை: தமிழ்நாடு காந்தி நினைவு நிதி, 1977.

மகாத்மா காந்தி, **புலனடக்கம்**, ராமரத்னம், என்., (மொ.பெ.ஆ.), மதுரை: தமிழ்நாடு காந்தி நினைவு நிதி, 1975.

மகாத்மா காந்தி, **பொருளாதார சமத்துவம்**, உதயசங்கர் த.அர., & கந்தசாமி, க.ரா., (தொ.ஆ.), மதுரை: தமிழ்நாடு காந்தி நினைவு நிதி, 1969.

மகாத்மா காந்தி, **ரகுபதி ராகவ (சத்தியமே கடவுள்)**, இராஜாஜி, (தொ.ஆ.), மதுரை: தமிழ்நாடு காந்தி நினைவு நிதி, 1970.

மகாத்மா காந்தி, **ராமநாமம்**, மதுரை: தமிழ்நாடு காந்தி நினைவு நிதி, 1975.

மணி, பெ.சு., **இந்திய தேசியத்தின் தோற்றமும் வளர்ச்சியும்**, சென்னை: பூங்கொடி பதிப்பகம், 1973.

மஷ்ருவாலா, கிஷோர்லால், **காந்தியும் மார்க்ஸும்**, (மொ.பெ.ஆ. பெயர் குறிப்பிடப்படவில்லை), சென்னை: சர்வோதயப் பிரசுராலயம், 1955.

முத்துச்சண்முகம் & பெரிய கருப்பன், இராம., (ப.ஆ.), **அகிலன்** கருத்தரங்க ஆய்வுரைகள், மதுரை: தமிழ்த்துறை, மதுரைப் பல்கலைக்கழகம், 1976.

மோகன், இரா., **கு.ப. இராஜகோபாலன் சிறுகதைகள்**, மதுரை: சர்வோதய இலக்கியப் பண்ணை, (வி.உ.), 1978.

ராவ், வி.கே.ஆர்.வி., **மேற்கத்திய சமதர்மத்திற்கு காந்திய மாற்றுமுறை**, குருசாமி, மா.பா., (மொ.பெ.ஆ.), மதுரை: தமிழ்நாடு காந்தி நினைவு நிதி 1980.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ரொமெய்ன் ரோலந்து, **வாழ்விக்க வந்த காந்தி**, ஜெய காந்தன், (மொ.பெ.ஆ.), சென்னை: கலைஞன் பதிப்பகம், 1973.

லூயிபிஷர், **மகாத்மா காந்தி வாழ்க்கை**, தி.ஜ.ர., (மொ. பெ.ஆ.), சென்னை: பழநியப்பா பிரதர்ஸ், 1962.

வரதராசன், மு., **அரசியல் அலைகள்**, சென்னை: தாயக வெளியீடு, 1962.

வரதராசன், மு., **அறமும் அரசியலும்**, சென்னை: தாயக வெளியீடு, 1964.

வரதராசன், மு., **இலக்கிய ஆராய்ச்சி**, சென்னை: தாயக வெளியீடு, 1967.

வரதராசன், மு., **இலக்கிய மரபு**, சென்னை: தாயக வெளியீடு, 1968.

வரதராசன், மு., **உலகம் உய்ய**, மதுரை: தமிழ்நாடு காந்தி நினைவு நிதி, 1971.

வரதராசன், மு., **காந்தி அண்ணல்**, சென்னை: தாயக வெளியீடு, 1967.

வினோபா, **கிராமந்தோறும் சுயராஜ்யம்**, தஞ்சாவூர்: சர்வோதயப் பிரசுராலயம், 1960.

வினோபா, மகளிர் மாண்பு, (மொ.பெ.ஆ. பெயர் குறிப் பிடப்படவில்லை), மதுரை: தமிழ்நாடு காந்தி நினைவு நிதி, 1973.

வினோபா, **வினோபா கண்ட காந்தி**, கோபிநாதன், இராம., (மொ.பெ.ஆ.), மதுரை: தமிழ்நாடு காந்தி நினைவு நிதி, 1974.

வீராசாமி, தா.வே., **தமிழ் நாவல் முன்னோட்டம்**, கோயம்புத்தூர்: மெர்க்குரி புத்தகக் கம்பெனி, 1973.

வெங்கடராமன், சு., **அகிலன் சிறுகதைகள் ஒரு திறனாய்வு**, சென்னை: தமிழ்ப் புத்தகாலயம், 1977.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வேங்கடராஜுலு, ரா., (பொ.ப.ஆ.), **மகாத்மா காந்தி நூல்கள்**, தொகுதிகள் 1-12, சென்னை: காந்தி நூல் வெளியீட்டுக் கழகம்.

ஜவகர்லால் நேரு, **அச்சம் தவிர்த்த அண்ணல்**, மகாதேவன், டி.கே., (தொ.ஆ.), இராமசாமி, அ., (மொ.பெ.ஆ.), மதுரை: தமிழ்நாடு காந்தி நினைவு நிதி, 1962.

ஜெயமணி சுப்பிரமணியம், (பொ.ப.ஆ.), **மகாத்மா காந்தி நூல்கள்**, தொகுதி 13-17, வேங்கடராஜுலு, ரா., ஜெயமணி சுப்பிரமணியம் (மொ.பெ.ஆ.), சென்னை: காந்தி நூல் வெளியீட்டுக் கழகம்

ஸ்ரீமந் நாராயணன் அகர்வால், **காந்திய அரசியல்**, நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை (மொ.பெ.ஆ.), சென்னை: தமிழ்ப் புத்தகப்பண்ணை, 1953.

பண்டைய இலக்கியங்கள்

கலியாண சுந்தரய்யர், எஸ்., (ப.ஆ.), சிலப்பதிகாரம், சென்னை, 1950.

பதிப்பாசிரியர் குழு, பதினெண்கீழ்க் கணக்கு, சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், 1981.

பதிப்பாசிரியர் குழு, புறநானூறு, சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், 1981.

புலியூர்கேசிகன், (ப.ஆ.), மணிமேகலை, சென்னை: பாரி நிலையம், 1967.

ஜெகதீசக்கோன், ஏ.எஸ்., (ப.ஆ.), நல்வழி, மதுரை. (வெளியிட்டவர் பெயரும் வெளியீட்டு ஆண்டும் குறிப்பிடப் படவில்லை.)

Acharya Vinoba Bhave, REVOLUTIONARY SARVODAYA, 'Vasant Nargolkar, (Tra.), Bombay: Bharatiya Vidya Bhavan, 1964.

Aram, M., APOSTLE OF PEACE, Kohima: Nagaland Peace Centre, 1974.

Arunachalam, K., GANDHI-THE PEACE MAKER, Madurai: Tamilnad Gandhi Smarak Nidhi, 1968.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

Arunachalam, K., GANDHI-THE SOCIAL WORKER, Madurai: Tamilnad Gandhi Smarak Nidhi, 1967.

Bandyopadhyaya, J., SOCIAL AND POLITICAL THOUGHT OF GANDHI, Bombay: Allied Publishers, 1969.

Bates, H.E., THE MODERN SHORT STORY, Massachussetts: The Writer, Inc., 1969.

Bhabani Bhattacharya, GANDHI THE WRITER, New Delhi: National Book Trust, 1969.

Dantwala, M.L., GANDHISM RECONSIDERED, Bombay: Padma Publications Limited, 1945.

Dietrich, R.F., & Roger, H. Sundell (ed.), THE ART OF FICTION, New York: Holt Rinchart and Winston, Inc., 1967.

Dilip Thakore, J., THE GANDHIAN ERA IN GUJARATI LITERATURE, Rajkot: Jyoti Prakashan Mandir, 1955.

Diwakar, R.R., IS NOT GANDHI THE ANSWER?, Bombay: Bharatiya Vidya Bhavan, 1966.

Douglas, A. Hugues, (ed.), STUDIES IN SHORT FICTION, New York: Holt Rinchart and Winston, Inc., 1971.

Elwood, M., CHARACTERS MAKE YOUR STORY, Boston: The Writer, Inc., 1971.

Fumento Rocco, INTRODUCTION OF THE SHORT STORY, New York: The Ronald Press Co., 1962.

Gandhi, M.K., ASHRAM OBSERVANCES IN ACTION, Ahmedabad: Navajivan Publishing House, 1955.

Gandhi, M.K., BREAD LABOUR, Ahmedabad: Navajivan Publishing House, 1960.

Gandhi, M.K., CASTE MUST GO AND THE SIN OF UNTOUCHABILITY, Ahmedabad: Navajivan Publishing House, 1964.

Gandhi, M.K., CONSTRUCTIVE PROGRAMME-ITS MEANING AND PLACE, Ahmedabad: Navajivan Publishing House, 1948.

Gandhi, M.K., ETHICAL RELIGION, Ahmedabad: Navajivan Publishing House, 1968.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

Gandhi, M.K., FROM YERAVADA MANDIR, Valji Govindji Desai, (Tra.), Ahmedabad: Navajivan Publishing House, 1980

Gandhi, M.K., HIND SWARAJ, Ahmedabad: Navajivan Publishing House, 1982.

Gandhi, M.K., KEY TO HEALTH, Ahmedabad: Navajivan Publishing House, 1980.

Gandhi, M.K., KHADI WHY AND HOW?, Ahmedabad: Navajivan Publishing House, 1959.

Gandhi, M.K., MY PICTURE OF FREE INDIA, Ahmedabad: Navajivan Publishing House, 1965.

Gandhi, M.K., MY RELIGION, Ahmedabad: Navajivan Publishing House, 1958.

Gandhi, M.K., MY THEORY OF TRUSTEESHIP, Anand. T., Hingorani (ed.), Bombay: Bharatiya Vidya Bhavan and New Delhi: Gandhi Peace Foundation, 1970.

Gandhi, M.K., ON MYSELF, Anand, T., Hongorani (ed.), Bombay: Bharatiya Vidya Bhavan.

Gandhi, M.K., SARVODAYA—ITS PRINCIPLES AND PROGRAMME, Ahmedabad: Navajivan Publishing House, 1962.

Gandhi, M.K., SARVODAYA THE WELFARE OF ALL, Ahmedabad: Navajivan Publishing House, 1958.

Gandhi, M.K., THE MESSAGE OF THE GITA, Ahmedabad: Navajivan Publishing House, 1959.

Gandhi, M.K., THE REMOVAL OF UNTOUCHABILITY, Bharatan Kumarappa (ed.), Ahmedabad: Navajivan Publishing House, 1959.

Gandhi, M.K., THE WAY TO COMMUNAL HARMONY, Ahmedabad: Navajivan Publishing House, 1963.

Gandhi, M.K., TOWARDS LASTING PEACE, Bombay: Bharatiya Vidya Bhavan, 1966.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

Gandhi, M.K., UNTOUCHABILITY, Ahmedabad: Navajivan Publishing House, 1954.

Gandhi, M.K., VILLAGE SWARAJ, Ahmedabad: Navajivan Publishing House, 1968.

Gandhi, Madan, G., GANDHIAN AESTHETICS, Chandigerh: Vikos Bharati. 1969.

Konigaberg Ira (ed.), THE CLASSIC SHORT STORY, New York: Harpers and Row Publishers, 1971.

Kopalan Charles, CRITICAL APPROACHERS TO THE SHORT STORY, New York: Rinchart and Winston, 1969.

Kripalani, J.B., GANDHIAN THOUGHT, New Delhi: Publications Division, Government of India, 1970.

Kumarappa, J.C., THE GANDHIAN WAY OF LIFE, Wardha: All India Village Industries Association, 1952.

Louis Fischer, THE ESSENTIAL GANDHI, London: George Allen & Unwin Limited, 1963.

Marni Tata Ranji, THE CONCEPT OF PERSONALITY IN THE EDUCATIONAL THOUGHT OF MAHATMA GANDHI, New Delhi: National Council of educational Research and Training, 1969.

Mashruwala, K.G., TOWARDS SARVODAYA ORDER: Ahmedabad: Navajivan Publishing House, 1971.

Meenakshi Sundaran, T.P., TAMIL-A BRID' S—EYE VIEW, Madurai: Makkal Nalvazhvu Manram, 1976.

Mira Behn, THE SPIRIT'S PILGRIMAGE, London: Longmans, 1960.

Nagendranat Gupta, GANDHI AND GANDHISM, Bombay: Hind Kitab Limited, 1948.

Nirmal Kumar Bose, LECTURES ON GANDHISM, Ahmedabad Navajivan Publishing House, 1971.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

Norman Cousins, PROFILES OF GANDHI, Delhi: Indian Book Company, 1970.

Pattabhi Sitaramayya, GANDHI & GANDHISM, A STUDY-VOL. I & II, Allahabad: Kitabistan.

Penderel Moon, GANDHI AND MODERN INDIA, London: The English Universities Press Limited, 1968.

Prabhu, R.K., THE MIND OF MAHATMA GANDAI, London: Oxford University Press, 1945.

Priyaranjan Sen, GANDHISM, Calcutta: A Mukherjee Company Private Limited, 1957.

Pyarelal, GANDHIAN TECHNIQUES IN THE MODERN WORLD, Ahmedabad: Navajivan Publishing House, 1959.

Radhakrishnan, S., (ed.), MAHATMA GANDHI 100 YEARS, New Delhi: Gandhi peace Foundation, 1968.

Rajagopalachari, C., GANDHIJI'S TEACHINGS AND PHILOSOPHY, Bombay: Bharatiya Vidya Bhavan, 1974.

Sen, N.B., WIT AND WISDOM OF MAHATMA GANDHI, New Delhi: Vikas Publishing House Private Limited, 1978.

Shaw, Harry and Donglas Berment, READING THE SHORT STORY, New York: Harper and Brothers Publishers, 1954

Shriman Narayan (ed.), THE SELECTED WORKS OF MAHATMA GANDHI VOL. 1-6, Ahmedabad: Navajivan Publishing House, 1960.

Spratt, P., GANDHISM-AN ANALYSIS, Madras: The Huxley Press, 1939.

Srinivasa Iyengar, K.R., (ed.), INDIAN LITERATURE SINCE INDEPENDENCE, New Delhi: Sahitya Academy. 1973.

Sudarshan Sharma, THE INFLUENCE OF GANDHIAN IDEOLOGY ON INDO ANGLICAN FICTION, New Delhi: Soni Book Agency, 1982.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

Summers Richard, CRAFT OF THE SHORT STORY, New York: Renehart and Company Inc., 1957.

Swaminathan, K. (ed.), THE COLLECTED WORKS, OF MAHATMA GANDHI-VOL. 32, New Delhi: The Publications Division, 1969.

Tendulkar, D.G., MAHATMA GANDHI-VOL. 1-8, New Delhi: Publications Division, Ministry of Information and Broadcasting, Government of India, 1963.

Tolstoy Leo, ON CIVIL DISOBEDIENCE AND NON-VIOLENCE, A Signet Book, The New American Library, 1968.

Varma, V.P., THE POLITICAL PHILOSOPHY OF MAHATMA GANDHI AND SARVODAYA, Agra: Lakshmi Narain Agarwal, 1972,

THESES

Meenakshi Bharathi, S., A CRITICAL ANALYSIS OF KALKI'S SHORT STORIES, Ph.D. Theses submitted, Madurai University, 1974.

Subramania Pillai, A., EVALUATION OF PUDUMAIPITTAN AS A SHORT STORY WRITER IN TAMIL, Ph.D. Theses Submitted, University of Kerala, 1973.

Chandrasekaran, R., A STUDY OF TAMIL FICTION IN THE POST INDEPENDENCE PERIOD, Ph.D. Theses Submitted, University of Madras, 1976.

ஆய்வுகளும் கட்டுரைகளும்

அரசு, வி., விந்தன் சிறு கதைகள் — ஒரு திறனாய்வு, சென்னைப் பல்கலைக்கழக எம்ஃபில் பட்டத்திற்காக அளிக்கப் பட்டது, 1979.

இராமையன், கே.பி., 'குடி கெடுத்த குடி', மது ஒழிப்புச் செயற்பாட்டு மாநாட்டு மலர், ஜுன் 1975, உரத்த நாடு.

குமரப்பதாசன், 'காந்தியடிகளின் இலக்கியக் கண்ணோட்டம்', சர்வோதயம் திங்களிதழ், கோவை: சர்வோதய சங்கம், அக். 77, பக். 10-15.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

Forwarded Free of cost, and
with the compliments of the
Department of Education,
Government of India, New Delhi.

சுப்பிரமணியம், க.நா., 'தமிழில் சிறந்த சிறுகதை', எழுத்து 40, ஏப்ரல் 1962, பக். 76-78.

பார்த்தசாரதி, நா., 'காந்தியம் என்னும் பாரம்பரியம்', உலக இதய ஒலி, ஜூலை 1981.

பாலசுப்பிரமணியன், இரா., 'சி.சு. செல்லப்பாவின் சிறுகதைகளில் கிராமப்புற வாழ்க்கைச் சித்திரிப்பு', மதுரைப் பல்கலைக்கழக எம்ஃபில் பட்டத்திற்காக அளிக்கப்பட்டது, 1978.

ராஜம் கிருஷ்ணன், 'காந்தி தரிசனம்: அஞ்சாமை', சுதேசமித்திரன் ஞாயிறு மலர், நவம்பர் 16, 1968, சென்னை.

ராஜம் கிருஷ்ணன், 'காந்தி தரிசனம்: காந்திஜியின் சத்திய வேட்கை', சுதேசமித்திரன், ஞாயிறு மலர், அக்டோபர் 5, 1968, சென்னை.

ரீத்தா கௌரி, வ.இல., 'ஆர் சூடாமணியின் சிறுகதைகள் ஓர் ஆய்வு', சென்னைப் பல்கலைக்கழக எம்ஃபில் பட்டத்திற்காக அளிக்கப்பட்டது, 1980.

வாணி, வை., 'கோவிமணிசேகரனின் உயிரும் ஒளியும்–திறனாய்வு', இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றம் பதினான்காவது கருத்தரங்கு ஆய்வுக்கோவை, தொகுதி 1, 1982.

வினோபா, 'சமுதாயப் புரட்சி', உலக இதய ஒலி, டிசம்பர், 1970.

6849

Andal, Tamil Literature after Gandhi, Gandhi Marg, October, 1958, pp. 306–315, New Delhi: Gandhi Peace Foundation.

Meenakshi Sundaram, T.P., 'Tamil', Indian Literature Since Independence, Srinivasa Iyengar, K.R., (ed.), New Delhi: Sahitya Akademi, 1973, P.P. 296-396.

Meenakshi Sundaram, T.P., 'Impact of Gandhi on Contemporary Tamil Literature', Tha Pageant of Tamil Literature, Madras: Sekar Pathippagam, 1966.

Romesh Diwari Sushila Gidwani, 'Elements in Gandhian Economics', Gandhi Marg, August 1979.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

GURUKUL KANGRI LIBRARY
Accos on 16.2.11
Class on
Cat on
Tag etc.
Checked
Any Other

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

''மனித குலத்திற்குக் கிடைத்துள்ளவற்றுள் அகிம்சையே சிறந்த சக்தியாகும். மனிதன் தனது அறிவு நுட்பத்தால் தோற்றுவித்திருக்கின்ற பெருந் திறன் படைத்த அழிவுக்கருவிகள் அனைத்தையும் விட அகிம்சை வலிமை மிக்கதாகும்''.

— காந்தியடிகள்

''அறநெறிக் கருத்துகளுடன் இணைந்தே வளர்ந்த தமிழிலக்கியப் பாரம்பரியத்தில், காந்தியத் தாக்க முள்ள இலக்கிய வகையும் தனிக்கிளையாக வளர்ந் தோங்கியுள்ளமை தமிழிலக்கியத்தின் சீர்மையையும் நீர்மையையும் புத்தம் புதுமையுடையதாக்குகிறது எனில் மிகையாகாது''.

— ஆசிரியர்

வைகை ○ மதுரை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar